R.R. No. 312/67

MADRAS RECORD OFFICE
16 NOV 67
EGMORE, MADRAS 8

1018

வளியீடு—19—10—1967]
sued—19—10—1967]

# மிழகச் சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

*வியாழக்கிழமை, 1967 மார்ச் 23*

**Thursday, 23rd March 1967**

தொகுதி I—எண் 6

**Volume I—No. 6**

6

©
தமிழக அரசு
1967
©
GOVERNMENT OF MADRAS
1967

*சட்டப் பேரவைத் துறை*
*சென்னை-9.*
*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை, 50 காசுகள்]
**Price, 50 Paise]**

V2l1L31 N67
N67.1.6–8
123198

## உள்ளடக்கம்

பக்கங்கள்

1. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—
(அ) கோவை பஞ்சாலைகளில் ஆள்குறைப்பு .. .. 397
(இ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி உட்கோட்டத்தில் கட்டாய நெல் கொள்முதல் .. .. .. 398
(உ) கோவை பஞ்சாலைகளில் கதவடைப்பும், தொழிலாளரின் வேலையின்மையும் .. .. .. 398–399

2. அவசர, முக்கியப் பிரச்சினை குறித்து கவன ஈர்ப்பு—
விலைவாசி ஏற்றம், கள்ளக்கடத்தல், பதுக்கல் ஆகியவற்றைத் தடுத்தல் .. .. .. .. .. 399–403

3. வாக்கெடுப்பு—நடைமுறை விளக்கம் .. .. .. 404

4. ஒழுங்குப் பிரச்சினை—
சட்டப் பேரவை உறுப்பினர் அல்லாத முதலமைச்சர் நிதி இலாகாப் பொறுப்பை வகித்தல் .. .. 405

5. 1967–68-ம் ஆண்டிற்கான முன் மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—

A. ரெவின்யூக் கணக்கில் செலவு.—
கோரிக்கை எண் I—நிலவரித் துறை .. .. 406–426
கோரிக்கை எண் II—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் .. .. .. 427–428
கோரிக்கை எண் XIII—கல்வி .. .. .. 429–455
கோரிக்கை எண் XVI—வேளாண்மை .. .. 455–471
கோரிக்கை எண் III—பொது விற்பனை வரிகளும், ஏனையத் தீர்வைகளும்—நிர்வாகம் .. .. ..
கோரிக்கை எண் IV—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் .. .. ..
கோரிக்கை எண் V—பத்திரப் பதிவுத்துறை .. ..
கோரிக்கை எண் VI—மாநிலச் சட்டப்பேரவை ..
கோரிக்கை எண் VII—தேர்தல்கள் .. .. ..
கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் .. ..
கோரிக்கை எண் IX—மாவட்ட நிர்வாகமும் பல் வகையும் .. .. ..
கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம் .. .. ..
கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் .. ..
கோரிக்கை எண் XII—போலீஸ் .. .. ..
கோரிக்கை எண் XIII—கல்வி .. .. ..
கோரிக்கை எண் XIV—மருத்துவம் .. .. ..
கோரிக்கை எண் XV—பொதுச் சுகாதாரம் .. ..
கோரிக்கை எண் XVI—வேளாண்மை .. ..
கோரிக்கை எண் XVII—மீனளம் .. .. ..
(III–XVII) 471–482

பக்கங்கள்.

5. 1967–68-ம் ஆண்டிற்கான முன் மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

A. ரெவின்யூக் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

- கோரிக்கை எண் XVIII—கால்நடை வளர்ப்பு
- கோரிக்கை எண் XIX—கூட்டுறவு
- கோரிக்கை எண் XX—தொழில்கள்
- கோரிக்கை எண் XXI—சின்கோனு
- கோரிக்கை எண் XXII—கதர்
- கோரிக்கை எண் XXIII—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன
- கோரிக்கை எண் XXIV—தொழிற்சாலைகளும், தொழிலாளர் நலனும்
- கோரிக்கை எண் XXV—ஆதிவாசிகள், அரிஜனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்
- கோரிக்கை எண் XXVI—பாசனம்
- கோரிக்கை எண் XXVII—பொதுப் பணிகள்—பணிகள்
- கோரிக்கை எண் XXVIII—பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும்
- கோரிக்கை எண் XXIX—பொதுப் பணிகள்—உதவி மானியங்கள்
- கோரிக்கை எண் XXX—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள்
- கோரிக்கை எண் XXXI—பஞ்சத் தணிப்பு
- கோரிக்கை எண் XXXII—ஓய்வூதியங்கள்
- கோரிக்கை எண் XXXIII—பல்வகை
- கோரிக்கை எண் XXXIV—எழுதுபொருள் - அச்சுத் துறை
- கோரிக்கை எண் XXXV—காட்டுவளத் துறை
- கோரிக்கை எண் XXXVI—ஏனைய இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்

B. ரெவின்யூக் கணக்குக்குப் புறம்பான மூலதனச்செலவு—

- கோரிக்கை எண் XXXVII—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு
- கோரிக்கை எண் XXXVIII—பொதுச் சுகாதார மூலதனச் செலவு
- கோரிக்கை எண் XXXIX—வேளாண்மை மூலதனச் செலவு
- கோரிக்கை எண் XL—தொழில்கள், பொருளாதார வளர்ச்சிக்கான மூலதனச் செலவு
- கோரிக்கை எண் XLI—பாசன மூலதனச் செலவு
- கோரிக்கை எண் XLII—பொதுப் பணிகள் மூலதனச் செலவுகள்
- கோரிக்கை எண் XLIII—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு

(மேற்கண்டவை அனைத்தும்) .. 471–482



பக்கங்கள்

5. 1967–68-ம் ஆண்டிற்கான முன் மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி

B. ரெவின்யூக் கணக்குக்குப் புறம்பான மூலதனச் செலவுக்கு—தொடர்ச்சி.

- கோரிக்கை எண் XLIV—காட்டுவள மூலதனச் செலவு
- கோரிக்கை எண் XLV—ஓய்வூதியங்களை மொத்தமாக்குதல்
- கோரிக்கை எண் XLVI—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

- கோரிக்கை எண் XLVII—மாநில அரசாங்கம் வழங்கும் கடன்களும், முன் பணங்களும்

(மேற்கண்டவை அனைத்தும்) .. 471–482

6. அரசாங்கத் தீர்மானங்கள்—
   - (அ) அவை அலுவல் வரிசையில் மாற்றம் .. .. 428–429
   - (இ) மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு .. 471
7. அறிவிப்பு—
   - தமிழ்நாடு 1967–ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) மசோதா .. .. 482
8. அரசாங்க மசோதாக்கள்—
   - (அ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) மசோதா .. 482
   - (இ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு மாவட்ட நகராட்சி (திருத்த) மசோதா .. .. .. .. 483
9. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. 483

# தமிழகச் சட்டப் பேரவை.

---

**வியாழக்கிழமை, மார்ச் 23, 1967.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் திரு. சி. ப. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

[குறிப்பு:—ஒரு உரையின் தொடக்கத்தில் நட்சத்திரக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 1. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) கோவைப் பஞ்சாலைகளில் ஆள் குறைப்பு.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்** : முதல் அலுவல், கேள்விகள்—பதில்கள். மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்வதற்குக் கேள்விகள் இல்லை. ஆகவே அடுத்து, ஒத்திவைப்புத் தீர்மானங்கள். என்னிடம் மூன்று ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஒன்று, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஏ. கே. சுப்பையா அவர்களின் ஒத்திவைப்புத் தீர்மானம்.

"கோவையில் பஞ்சாலைகளில் நிகழ்ந்து வரும் ஆள்குறைப்பு, வேலையின்மை, சம்பளக் குறைப்பு போன்ற முதலாளிகளின் நடவடிக்கைகளால் ஆயிரக்கணக்கான பஞ்சாலைத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பீளமேடு ஸ்ரீரெங்கவிலாஸ் மில்லில் 1—1—1967 முதல் வேலை செய்த நாட்களுக்கு சம்பளம் கொடுக்கத் தவறியதுமன்றி 1—4—1967 முதற்கொண்டு ஆள்குறைப்பு நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வளவு முக்கியமான பிரச்சினையில் அரசினர் தலையிட்டு தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்று வற்புறுத்துவதற்காக, இந்த ஒத்தி வைப்பு பிரேரணைக்கு அனுமதி கோருகிறேன்."

என்று அவர் கடிதம் எழுதியுள்ளார்.

இந்தத் தீர்மானம் அரசினரின் அன்றாட நடவடிக்கைகளுக்கு உட்பட்டது என்று இந்தத் தீர்மானத்தின் சொற்களே காட்டுகின்றன. இரண்டாவதாக, இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் என்ற தொழில் விவகாரச் சட்டம் இருக்கிறது. தொழில் விவகாரச் சட்டப்படி தீர்க்கக் கூடிய பிரச்சினைகள் ஒத்திவைப்புத் தீர்மானப்படி கொண்டுவரக் கூடாது என்பது நம் விதிகளில் காணப்படுகிறது. இந்தக் காரணத்தினாலும் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு பேரவைத்தலைவர் அனுமதி கொடுக்கவில்லை என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

### (இ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி உட்கோட்டத்தில் கட்டாய நெல் கொள்முதல்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : அடுத்து, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கரு. சீமைச்சாமி அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவர அனுமதி கோரி கடிதம் எழுதியுள்ளார். அந்தத் தீர்மானத்தின் வாசகம் பின்வருமாறு :—

"மதுரை மாவட்டம், உசிலம்பட்டி உட்கோட்டத்தில் கட்டாய நெல் கொள்முதல் செய்யும் பொதுவருவாய்த் துறை அதிகாரிகள் மக்களை மிரட்டி, மற்றும் பல துன்பங்களை இழைத்து சிறு விவசாயிகளிடம் அவர்கள் சொந்த உபயோகத்திற்கு வைத்திருக்கும் தானியங்களை பூராவும் எடுத்துச் செல்கிறார்கள். அதனால் மக்கள் பீதியுற்று, அதிகாரிகளின் அடக்குமுறைக்கும், பயமுறுத்தலுக்கும் பயந்து, தங்கள் ஊர்களை விட்டு ஓடும் நிலையில் உள்ளனர். ஆகவே மக்கள் அமைதியாக வாழும் நிலை அங்கு சீர்குலைந்துள்ளது" என்று ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கோரியுள்ளார்.

இந்தத் தீர்மானத்தில் கண்டுள்ள பிரச்சினை அரசினரின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்டது என்பதல்லாமல் இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பு வேறு இருக்கும் போது அனுமதி கொடுக்க முடியாது. இதுபற்றிப் பேசுவதற்கு, இன்னும் கவர்னர் உரையின் மீதுள்ள விவாதம் மூன்று நாட்கள் இருக்கின்றன. மேலும், இன்டரீம் பட்ஜட், இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தின் மீதுள்ள விவாதமும் இருக்கிறது. இந்தக் காரணங்களினால் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு நான் அனுமதி கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (உ) கோவைப் பஞ்சாலைகளில் கதவடைப்பும், தொழிலாளரின் வேலையின்மையும்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : அடுத்து, மற்றொரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. எம். பூபதி அவர்கள் கொண்டுவருவதற்கு பேரவைத்தலைவரின் அனுமதியைக் கோரியுள்ளார்கள். அதன் வாசகம் பின் வருமாறு :

"கோவையில் பல மாதங்களாக மூடிக்கிடக்கும் (1) கம்போடியா, (2) ஜனார்த்தனா, (3) காளீஸ்வரா, (4) சோமசுந்திரா, (5) வாசுதேவா, (6) ஸ்ரீரங்கவிலாஸ் ஆகிய பஞ்சாலைகளைக் கதவடைப்புச் செய்துள்ளதால் 7,000 தொழிலாளர்கள் வேலையில்லாமல் பாதிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பட்டினி கிடந்துவரும் விஷயத்தைப்பற்றி விவாதிக்கவும், 6,000-க்கு மேல் வேலை செய்யும் டெக்ஸ்டூல் தொழிற்சாலையில் மூன்று மாத காலமாக சம்பளம் கொடுக்காததால், தொழிலாளர் வேலை நிறுத்தம் நடந்து வருவதைப்பற்றி விவாதிக்கவும்" என்ற தீர்மானத்திற்கு அனுமதி கோரியுள்ளார்.

இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் என்று சொல்லக் கூடிய தொழில் விவகாரச் சட்டத்தால் தீர்க்கப்படக் கூடிய





காரியங்களுக்கு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரக் கூடாது என்பது 'மேஸ் பார்லிமென்டரி ப்ராக்டீஸ்' என்ற புத்தகத்தில் 368-வது பக்கத்தில் கூறியிருக்கிறது. இதை உறுப்பினர்கள் கவனத்தில் வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதோடு இதுபற்றிய விவாதத்திற்கு இன்னும் கவர்னர் உரை மீது மூன்று நாட்கள் விவாதம் நடக்க இருக்கிற காரணத்தினால் மதிப்பிற்குரிய உறுப்பினர் அதன் மீது பேசுவதற்கு அவகாசம் இருக்கும் என்று கருதி இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வர நான் அனுமதி கொடுக்கவில்லை என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 2. அவசர முக்கியப் பிரச்சினை குறித்து கவன ஈர்ப்பு—விலைவாசி ஏற்றம், கள்ளக் கடத்தல், பதுக்கல் ஆகியவற்றைத் தடுத்தல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : இந்தப் பேரவையின் 41-வது விதிக்கிணங்க அவசரமும், முக்கியமான பிரச்னை ஒன்றை மதிப்பிற்குரிய உறுப்பினர் மா. இராசாங்கம் அவர்கள் மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

**திரு. மா. இராசாங்கம் :** மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, உணவு நெருக்கடியை தீர்ப்பது, விலைவாசியைக் கட்டுப்படுத்துவது, உணவு, உரப் பொருள்களின் கள்ளக் கடத்தல், பதுக்கல் ஆகியவற்றைத் தடுப்பது குறித்து, அரசாங்கம் தமிழகம் முழுவதும் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, முந்திய அரசாங்கத்தின் உணவுக் கொள்கையைக் குறித்து இவ்வரசாங்கம் விழிப்புடன் மறு ஆய்வு செய்துள்ளது. 1964 முதல் உணவு தானியக் கொள்முதல், வழங்கல் முறை குறித்துப் பின்பற்றிய கொள்கையில் உற்பத்தியாளர்கள் மீது கருத்தளவிலேயே கொள்முதல் விதிக்கப்பட்டது. அவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட முடை இருப்புகளை Buffer stocks கொண்டு குறிப்பிட்ட சில பற்றாக்குறைப் பகுதிகளுக்கு உணவு வழங்கும் பொறுப்பு மேற்கொள்ளப்பட்டது. சட்டபூர்வமான பங்கீட்டுப் பகுதிகளிலும், உரிய முறையில் இல்லாத பங்கீட்டுப் பகுதிகளிலும் எளிதில் அல்லலுக்குட்படும் நிலையில் உள்ள பொது மக்கள் அனைவருடைய தேவைகளையும் நிறைவேற்றும்பொருட்டு நாளடைவில் மிக மும்முரமாகக் கொள்முதல் செய்யும் வகையில் இக்கொள்கை படிப்படியாக உருவாக்கப்பட்டது. இதனால் அரசாங்கக் கட்டுப்பாட்டுக் கடைகளின் வாயிலாக உணவு தானியங்களை வழங்க ஆண்டுதோறும் சுமார் 6½ லட்சம் முதல் 7 லட்சம் டன் அரிசி வரை தேவைப்படுகிறது. ஒரே மண்டல அமைப்பிற்குப் பின்னர், இத்தேவைகளை நிறைவேற்றுவதோடு, இந்திய அரசாங்கத்தோடு ஒப்புக்கொண்டதற்கிணங்க, அரிசி விளைச்சல் குறைந்த கேரளா, மைசூர் மாநிலங்களுக்கு ஒரு லட்சம் டன்

[திரு. கே. ஏ. மதியழகன்] [1967, மார்ச் 23

அரிசிக்கு மேல் வழங்கும் வகையில் கொள்முதல் பணிகள் மும்முரப்படுத்தப்பட்டன. துரதிருஷ்டவசமாக, கொள்முதல் முறையைச் செயல்படுத்துவதில் பற்பல மாவட்டங்களில் பற்பல வழிமுறைகள் பின்பற்றப்பட்டதன் காரணமாக, இம்முறையில் இடத்திற்கு இடம் வேறுபாடு இருப்பதாகப் புகார்கள் வந்தன. இதன் விளைவாக நிலக்கிழார்கள், குறிப்பாக சிறுநிலக்கிழார்கள், உற்பத்தியாளர்கள் மீது விதிக்கப்படும் எந்தவிதமான கட்டாயக் கொள்முதல் முறையையும் வரவேற்கவில்லை. அதே சமயத்தில், பொது மக்கள் அரசாங்கப் பங்கீட்டுக் கடைகளை நீடிக்கும் படியும் அவைகளில் நியாயமான அளவிற்கு அரிசி வழங்கவேண்டுமென்றும் கோருகிறார்கள். இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருந்தாலும் இன்றுள்ள நிலைமை இதுதான்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றவுடன், பெரு நிலக்கிழார்களிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டிய தேவையை வலியுறுத்தியது. பத்து ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களிடம் உள்ள விற்பனைக்குரிய உபரி நெல் முழுவதையும் கொள்முதல் செய்யவேண்டுமென்று சிவில் சப்ளைஸ் பணியாளர்களுக்கு அறிவித்துள்ளது. ஒரு ஏக்கருக்கும் அதற்குக் குறைந்தும் நிலம் வைத்திருப்பவர்களிடம் கொள்முதல் செய்வதை அறவே நிறுத்தவேண்டும் என்றும் கருதப்படுகிறது என்பதை இந்த மன்றத்திற்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் சுமார் 13 லட்சம் நில உரிமையாளர்கள் கொள்முதலிலிருந்து விதிவிலக்குப் பெறுவார்கள் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் இப்போது சம்பா நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருவதால் ஒரு ஏக்கர் முதல் பத்து ஏக்கர் வரை நிலம் வைத்திருப்போர் மீது கொள்முதல் செய்யும் வகையில் கலெக்டர்கள் தயாரித்துள்ள முறையைத் திடீரென்று மாற்றுவதோ அல்லது ஒரேபடித்தான கொள்முதல் முறையைச் செயல்படுத்துவதோ குறித்து ஆலோசிக்க முடியாத நிலையில் உள்ளோம். அவ்வாறு செய்தால், ஒரே மாவட்டத்தில் ஒரே மாதிரியான நிலைமைகளில் நிலங்கள் வைத்துள்ள இருதொகுதி மக்களுக்கிடையே வேறுபாடு செய்வதாகப் புகார்கள் வருவதற்கு இடமளிக்கும். எனவே தான், அடுத்த அறுவடைக் காலத்திலிருந்து சட்டபூர்வமான கொள்முதல் முறையைச் செயல்படுத்தி, ஒருபடித்தான முறையைக் கொண்டுவர முயற்சி செய்யலாமென்று கருதப்படுகிறது. அதே சமயத்தில் ஏழை மக்களின்பால் அரசாங்கத்திற்குள்ள பொறுப்பினின்றும் ஒதுங்கி, உணவுப் பங்கீட்டுத் துறையில் தனக்குள்ள பொறுப்புகளைக் குறைத்துக் கொள்ள இது ஏற்ற தருணமன்று. ஏனெனில், ஏற்கனவே சில பற்றாக்குறைப் பகுதிகள் குடும்பக் கார்டு ஏற்பாட்டின்கீழ் வருவதால் நகரப் பகுதிகளுக்கு மட்டுமின்றி, ஏனைய பற்றாக்குறைப் பகுதிகளுக்கும் உணவு வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகவுள்ளது. கொள்முதல் முறையை நீட்டிக்கும் அதே சமயத்தில் இப்பொறுப்புக்



1967, மார்ச் 23] [திரு. கே. ஏ. மதியழகன்]

களினின்றும் ஒதுங்கி நிற்பதற்கு இது ஏற்ற காலமன்று அவ்வாறு செய்தால் தங்கள் பொறுப்புக்களை ஏற்க மறுக்கிறார்கள் என்று கூறுவதற்கு இடமளிக்கும்.

கொள்முதல் விலக்கு வரையறையை உயர்த்தி அதிக நிலம் வைத்துள்ளவர்களிடமிருந்து கொள்முதல் செய்வதை மும்முரப் படுத்துவதுடன், இதுவரை பின்பற்றி வந்த கொள்முதல் கோட்பாடுகளைத் திறம்படச் செயல்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதற்படியாக, மாநில எல்லையோரங்கள் அனைத்தும் மூடப்பட்டுவிட்டன. இதனால் மாநிலத்திற்குள்ளேயே அதிக நெல் புழக்கத்துக்கு வரும். மொத்த விளைச்சலில் 20 சத விகிதம் மட்டுமே கொள்முதல் செய்வதென்று மதிப்பிட்டிருந்தாலும், அதிக நிலம் வைத்து இருக்கின்ற நிலக்கிழார்களிடம் குறிப்பாக இந்த மாநிலில், முக்கியமாய் தேர்தலுக்கு முந்திய மாதங்களில் அறிவிக்கப்படாத நெல் இருப்புகள் ஏராளமாய் முடக்கி வைக்கப்பட்டுள்ளனவென்று இடைவிடாமல் தகவல்கள் கிடைத்துள்ளதால், அவற்றை வெளிக் கொணர எதிர்பாராச் சோதனைகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. இவ்வரசாங்கம், அதிகாரத்தை ஏற்றது முதல் அவ்வாறு கைப்பற்றிய நெல்லின் விவரங்களின் மொத்தத் தொகுப்பை இந்த மன்றத்திற்குச் சமர்ப்பிக்கிறேன்—

23-ம் தேதி, இன்றைய தினம் விடியகாலை 3 மணி வரையிலே இப்படி, எதிர்பாராத சோதனைகள் மூலமாக இந்த அரசாங்கம் நெல், அரிசியை வெளிக்கொண்டு வருவதற்காக எடுத்த நடவடிக்கைகளின் விவரம் பின்வருமாறு :—

செங்கற்பட்டு மாவட்டத்தில் 4856 குவிண்டால் நெல்லும், 189 குவிண்டால் அரிசியும் கொண்டு வரப்பட்டுள்ளது.

வட ஆற்காடு மாவட்டத்தில் 81 குவிண்டால் நெல்லும், 48 குவிண்டால் அரிசியும் கொண்டுவரப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டத்தில் 49.36 குவிண்டால் நெல்லும், 41.53 குவிண்டால் அரிசியும் கொண்டு வரப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் 1333.25 குவிண்டால் நெல்லும், 117.29 குவிண்டால் அரிசியும் கொண்டுவரப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் இந்தச் சோதனைகளின் மூலம் நெல் கொண்டு வரப்படவில்லை. அரிசி மட்டும் 5.6 குவிண்டால் கொண்டு வரப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 101 குவிண்டால் நெல்லும், 15.46 குவிண்டால் அரிசியும் இந்தச் சோதனைகளின் மூலம் அகப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 1223.75 குவிண்டால் நெல்லும், 2.45 குவிண்டால் அரியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1967, மார்ச் 23

சேலம் மாவட்டத்தில் 290.75 குவிண்டால் நெல்லும், 111 குவிண்டால் அரிசியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் 4.56 குவிண்டால் நெல்லும், 17 குவிண்டால் அரியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் 21 குவிண்டால் நெல்லும், 156 குவிண்டால் அரியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இன்றைக்கு விடியற்காலை 3 மணி வரையில் தமிழ் நாட்டில் பல இடங்களில் நடைபெற்ற சோதனைகளின் முழு விவரத்தையும் இந்த மன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறேன். இதுவரையில் ரூ. 5,61,868 பெறுமான தானியங்கள் இந்த சோதனைகளின் மூலம் கைப்பற்றப் பட்டுள்ளன. அதோடு மொத்தத்தில் 8407.23 குவிண்டால் நெல் லும், 807.07 குவிண்டால் அரிசியும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மாவட்ட எல்லையோரங்களில் உள்ள சோதனைச் சாவடிகள், மாநில எல்லையோரங்களிலுள்ள சோதனைச் சாவடிகள் இவை அனைத்திலும் சோதனை முறைகள் இறுக்கமாக்கப்பட்டுள்ளன. சோதனை நிலையங்கள் மொத்தம் பின்வருமாறு: இன்டர் ஸ்டேட் செக் போஸ்ட்டுகள் 112 இடங்களிலும், இன்டர் டிஸ்டிரிக்ட் செக் போஸ்டுகள் 188 இடங்களிலும், இன்டர் டாலுக் செக் போஸ்டுகள் 74 இடங்களிலும், மொத்தம் 374 இடங்களில் நம்முடைய செக் போஸ்டுகள் நிறுவப்பட்டுள்ளன. மாநில எல்லையோரங்களில், மாவட்ட எல்லையோரங்களில் உள்ள சோதனைச் சாவடிகளின் விவரத்தை நான் இதன் மூலம் இந்த மன்றத்திற்கு அறிவித்துக் கொள்கிறேன். இதோடு நீரின் வழியாகப் போகும் போக்கு வரத்துக்களும் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கென தனியே நியமிக்கப்பட்டுள்ள சிவில் சப்ளைஸ் துணைக் கமிஷனர் ஒருவரின் கீழ் நிறைவேற்று ஆயம் (என்ஃபோர்ஸ் மெண்ட் செல்) ஒன்றும் அமைக்கப்பட்டு வருகிறது. வணிகர்கள், கள்ளச் சந்தைக்காரர்கள். பதுக்கல்காரர்கள் ஆகியோர்மீது கண்காணிப்பு செய்வதே இவ்வாயத்தின் முக்கிய பணியாகும். இது இயங்கத் தொடங்கிவிட்டால், கள்ளச் சந்தைக்கான இடங்கள் மறையுமென்றும், நெல், அரிசி இவற்றில் திட்டமிட்ட கடத்தல் முயற்சிகள் கட்டுப்படுத்தப்படுமென்றும் எதிர்பார்க்கிறோம். இத் திமையை முளையிலேயே கிள்ளியெறிய இவ்வரசாங்கம் விரும்பு கிறது. பங்கீட்டுக் கார்டுகளுக்கு மிக ஒழுங்காகவும், உறுதியாகவும் உணவு தானியங்கள் கிடைக்க வகை செய்யப்படும். அதே சமயத்தில் சட்டபூர்வமான பங்கீட்டு முறையின் கண்டிப்புகள் மேலும் சிறப்பட நிறைவேற்றப்படும். சட்ட பூர்வமான பங்கீட்டு முறையைத் திறம்பட நிறைவேற்று வதற்காக, சென்னை மாநகரை வட கோட்டம், தென் கோட்டம் என இரு கோட்டங்களாகப் பிரித்து. இவ்விரண்டினையும் நிர்வகிக்க தற்போதுள்ள ஒரு துணைக் கமிஷனருக்கு மாறாக இரு துணைக் கமிஷனர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.



1967, மார்ச் 23] [திரு. கே. ஏ. மதியழகன்]

புதியதோர் ஊக்கமும் சுறுசுறுப்பும் ஈந்து சிவில் சப்ளைஸ் துறை முழுவதும் ஒரு புத்துருவம் பெற்று பணியாற்றும் வகையில் நகரில் புதிய அதிகாரிகளின் அணி ஒன்று நியமிக்கப்பட்டு வருகின்றது. இது தொடக்கமேயாகும். நாளடைவில் உணவு நிர்வாகத்திற்குப் புத்துயிர் அளித்து, உணவுச் சிக்கல்களை உடனுக்குடன் திறம்பட கவனிக்கவேண்டும் என்ற உணர்வை ஊட்டும் வகையில் இது மேலும் பரிசீலிக்கப்படும்.

போலீஸ் கண்காணிப்பு ஆயம் (போலீஸ் விஜிலன்ஸ் செல்) இனிமேல் திறம்படப் பணியாற்றும். அதன் நோக்கத்தை நிறை வேற்றுவதில் அது முற்றிலும் பயன்படுத்தப்படும். இதைப் போலவே, எல்லையோரச் சோதனைச் சாவடிகளில் உள்ள பணியாளர்கள் திறம்படப் பணியாற்றும் முறையில் அவர்களைக் கண்காணிக்குமாறும், அரிசி, ஏனைய இன்றியமையாப் பொருள்கள் இவற்றின் விலைவாசிகளின் ஏற்றத்தை விழிப்புடன் பார்த்து வருமாறும், விலைவாசிகளின் ஏறுமுகத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கலெக்டர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

நெல், அரிசி (இருப்புக்களை அறிவித்தல், கேட்டுப் பெறல்) ஆணையின் விதித்துறைகள் ['The Madras Paddy and Rice (Declaration and Requisition of Stocks) Order] இன்னும் மும்முரமாகச் செயல்படுத்தப்படும். நாற்பது குவிண்டால் நெல் அல்லது 25 குவிண்டால் அரிசிக்கு மேல் வைத்துள்ளவர்கள், அவ்வாறு வைத் திருக்க நேர்ந்த தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் தங்களிடமுள்ள இருப்புக்களை அறிவிக்கக் கடமைப்பட்டவர்களாவர். சமூக விரோத சக்திகளுக்கும், இதுவரை சில சிறப்புரிமைகளையும் ஆதர வையும் பெற்று வந்துள்ள நிலக்கிழார் பிரிவினருக்கும் இந்த நடவடிக்கைகளால் தொல்லை சிறிது நேர்ந்தாலும், சமுதாயத்தில் ஏழை மக்களுக்கு நியாய விலைகளில் உணவு தானியங்களை வழங்க அரசாங்கத்திற்குள்ள பொறுப்பை நிறைவேற்றுவதையே நோக்க மாகக் கொண்டுள்ள இந்த நடவடிக்கைகளுக்குப் பொதுமக்கள் உளமாரத் தங்கள் ஒத்துழைப்பினைத் தருவார்கள் என்று நம்பு கிறோம்.

பொதுவாக விலைவாசி உயர்வைத் தடுப்பதற்காக, முன்னாள், அர சாங்கம் துவரம் பருப்பு, கடலை எண்ணெய் போன்ற பண்டங்களில் வாணிகம் செய்யும் வகையில் இத்துறையில் சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. இவ்விரு பண்டங்களின் வாணிகத்தில் அரசாங் கம் நுழைந்ததால், சிறிது காலத்திற்கு இப்பண்டங்களின் விலை வாசிகளையும் இறங்கும்படிச் செய்தது. ஆனால், இதன் விளைவு தற்காலிகமானதே. எனவே, அரசாங்கம் பெருமளவில் வாணிகத் தில் ஈடுபடுவதா அல்லது அரிசி நீங்கலாக ஏனைய எந்தப் பண்டத் திலும் வாணிகம் செய்வதை அறவே அகற்றுவதா—இந்த இரண்டில் எவ்வழியைப் பின்பற்றுவது என்கிற கேள்வி இப்போது அரசாங் கத்தின் நாட்டத்தில் உள்ளது. இது குறித்து விரைவில் முடிவு செய்யப்படும்.

## 3. வாக்கெடுப்பு—நடைமுறை விளக்கம்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் :** அடுத்தபடியாக, மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு என்ற அலுவலுக்குப் போகும் முன்பு, இப்போது வாக்கெடுப்பு எப்படி நடத்துவது என்பதைப் பற்றி என்னுடைய தீர்ப்பு ஒன்றை முதலிலே அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த அவையில் வாக்கெடுப்பு நடத்துகிறபோது என்னுடைய முடிவை மூன்று முறைகள் அறிவிக்க வேண்டுமென்று ஒரு ஒழுங்குப் பிரச்னையை மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் எழுப்பினார்கள். வாக்கெடுப்புக்கு என்ன நடைமுறை என்பது நமது சட்டப் பேரவை விதிகளில் 71-வது விதியில் கூறப்பட்டிருக்கிறது

The Speaker shall put the question to the vote of the House and shall decide it by voices. If the opinion of the Speaker is challenged, he shall take the votes of the House by division

என்று சுருக்கமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதை விரிவாகத் தெளிவுபடுத்தியிருக்கிறது : 17-ம் பதிப்பு, 408-ம் பக்கத்தில். அதில் என்ன கூறப்பட்டிருக்கிறது என்றால், முதலில்—

The Speaker, rising from the chair, states or reads the question to the House, beginning with "The question is . . .". The Speaker takes the sense of the House by desiring that "As many as are of that opinion say, 'Aye'" and "As many as are of the contrary opinion say, 'No.'". Then the Speaker expresses his opinion thus. "I think the 'ayes' have it" or "I think the 'noes' have it." If the House is silent, the question is said to be agreed to. If any party challenges the opinion, the Speaker clears the lobby and starts the process of counting which is termed a division.

முடிவை ஒரு முறை அறிவித்துவிட்ட பிறகு அதை மாற்றுவதற்குப் பேரவைத்தலைவருக்குக்கூட அதிகாரம் கிடையாது. எனவே, அதையே மறுமுறையும் கூறவேண்டும் என்பது பொருள் அற்றதாக இருக்கிறது. நமது நடைமுறைகளில், இங்கிலாந்தில் உள்ள பாராளுமன்ற நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும் என்பது அரசியல் சட்டப்படி அரசியல் சட்டத்தின் 194-வது விதியின்படி—என்னுடைய கடமையாக இருக்கிறது. இன்று தமிழ்நாட்டில் மேலவையிலும் நடந்து வருகிற நடைமுறை இப்போது நான் கூறியபடி தான் இருக்கிறது. ஒன்று மட்டும் உறுப்பினர்களுக்கு வாக்குறுதி சொல்கிறேன். உறுப்பினர்கள், வாக்குகளை எண்ணிப் பார்த்து முடிவு கூறவேண்டுமென்று விரும்பினால், அதற்கு முழுவாய்ப்பு கொடுக்கப்படும். இப்போது அடுத்த அலுவல்—மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

## 4. ஒழுங்குப் பிரச்சினை.

### சட்டப் பேரவை உறுப்பினர் அல்லாத நிதி இலாக்கா பொறுப்பை வகித்தல்.

* **திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். சபாநாயகர் அவர்களே, நான் கொண்டுவரும் ஒழுங்குப் பிரச்னை என்னவென்றால், இப்போது நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் திரு. அண்ணாதுரை அவர்கள் மந்திரிசபை அமைத்துள்ளார்கள். நிதி இலாகாவைப் பொறுத்தமட்டிலும் நம் மரபு என்னவென்றால், இந்தச் சபையைச் சேர்ந்த ஒரு உருப்பினர்தான் அந்தப் பொறுப்பை ஏற்கவேண்டும் என்பது. பாராளுமன்றத்திலும் சரி, இங்கேயும் சரி, அந்த மரபு காக்கப்பட்டு வருகிறது. ஆனால், கான்ஸ்டிட்யூஷன் பிரகாரம் யார் வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கப்படாமல் ஆறு மாதங்கள் வரையில் அமைச்சராக இருக்கலாம் என்ற மரபை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். நேற்று பத்திரிகைகள் வாயிலாக முதலமைச்சர் அவர்கள் மேல்சபை உறுப்பினராக ஆகின்றார் என்று அறிந்து சந்தோஷப்படுகிறேன். இந்த மரபு காக்கப்பட வேண்டும் என்று 1952ம் வருஷம் திரு. ராஜாஜி அவர்கள் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது—தேர்ந்தெடுக்கப்பட்டுக் கூட மேல்சபைக்கு வராமல் நியமனம் மூலம் மேல்சபையில் இருந்தார் என்று சொல்லலாம்—நிதிப் பொறுப்பு இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. சி. சுப்பிரமணியம் அவர்களிடம் கொடுக்கப்பட்டது. பாராளுமன்றத்தில்கூட, திருமதி இந்திரா காந்தி தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு மறுபடியும் பொதுத் தேர்தலுக்கு நிற்கவேண்டும் என்று நின்று வந்திருக்கிறார். இப்போது முதலமைச்சர் அவர்கள் தேர்தலுக்கு நின்றால் நிச்சயம் தேர்ந்தெடுக்கப்பட்டு விடுவார் என்பதில் சந்தேகம் கிடையாது. முதலமைச்சர் அவர்களுக்கு மக்கள் ஆதரவு இருக்கிறது என்பதில் ஆட்சேபம் கிடையாது. திரு. காமராஜ் அவர்கள் வந்தபோது . . .

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒழுங்குப் பிரச்னை இருந்தால் சொல்லவேண்டும். ஒழுங்குப் பிரச்னை என்பது ஒன்று அவையின் நடைமுறைபற்றி இருக்க வேண்டும்; இல்லையென்றால், அவையின் விதிகளைப் பற்றி இருக்க வேண்டும். இரண்டும் இல்லாதவற்றைப் பற்றிப்பேசுவதைத் தங்கள் உரையின் போது பேசவேண்டுமே தவிர, ஒழுங்குப் பிரச்னையைக் கொண்டு வந்து பேசுவது சரியல்ல. ஒழுங்குப் பிரச்சினை பற்றிய நமது விதிகள் மிக மிகத் தெளிவாக இருக்கின்றன. ஒன்று அவையின் அன்றாட நடவடிக்கைகள் பற்றி இருக்கவேண்டும் அல்லது அவையின் விதிகளைப் பற்றி இருக்கவேண்டும். இரண்டையும் பற்றி இல்லாத பிரச்னைகள் ஒழுங்குப் பிரச்னைகளாக ஆகமாட்டா. அவைகளைப்பற்றி கவர்னர் உரையின்மீது பேசும்போது தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

5. 1967–68-ம் ஆண்டிற்கான முன் மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

A. ரெவின்யூக் கணக்கில் செலவு.

கோரிக்கை எண் I—நிலவரித் துறை.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : அடுத்து, மானியக் கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு. முதலிலேயே உறுப்பினர்களுக்கு ஒன்று தெரிவித்துவிடக் கடமைப்பட்டிருக்கிறேன். நமது பேரவையின் 155-வது விதியின்படி, இன்று ஒரு மணி அளவில், சரியாக ஒரு மணிக்கு, ஒரு நிமிடம் முன்னும் இல்லாமல் ஒரு நிமிடம் பின்னும் இல்லாமல், அந்த நேரத்தில் விவாதம் முடிந்திருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, மானியக் கோரிக்கைகள் அத்தனையும் ஓட்டுக்கு விடப்படவேண்டும். ஆகவே, இந்த மானியக் கோரிக்கைகளைப் பற்றி விவாதிக்க ஒரு மணி வரையில் அவகாசம் இருக்கிறது. இதிலே 47 கோரிக்கைகள் இருக்கின்றன; அவைகளுக்கு வெட்டுத் தீர்மானங்களும் 47 இருக்கின்றன. ஆகவே குறிப்பிட்ட இரண்டொரு கோரிக்கைகளைப் பற்றி அதிக நேரம் விவாதித்து, மற்ற கோரிக்கைகள்மீது உள்ள வெட்டுத் தீர்மானங்களை விவாதம் இல்லாமலேயே ஓட்டுக்கு விடவேண்டும் என்ற நிலையில் இருக்கிறேன்; அப்படியே செய்வேன் என்று அறிவிக்கிறேன். முதலாவது கோரிக்கை, நிலவரித் துறை—இதைப் பற்றி விவாதம் அரை மணி நேரம் நடைபெறும். அடுத்து, பதின்மூன்றுவது கோரிக்கை, கல்வி—அதைப் பற்றி விவாதம் அரை மணி நடைபெறும். அடுத்தாற்போல் பதினைாவது கோரிக்கை, உணவு—வேளாண்மைத் துறை—அதைப் பற்றி அரை மணி நேரம் விவாதம் நடைபெறும். இதற்குத்தான் நேரம் இருக்கிறது என்று நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். இப்போது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் நிலவரித் துறை என்ற கோரிக்கையின் கீழ் 43,02,000 ரூபாய் அரசாங்கத்திற்கு வழங்கவேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வருவார்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை**: சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரைப்படி, கீழ்க் கண்ட கோரிக்கையை அவைமுன் வைக்கிறேன்.—

"கோரிக்கை எண் —நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் 43,02,000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்".

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் அவைமுன் வைக்கப்படுகிறது. இதற்கு வெட்டுத் தீர்மானங்கள் கொண்டுவர அனுமதிக்கிறேன்.

**Sri R. PONNAPPA NADAR** : Sir, I move—

"That the allotment of Rs. 43,02,000 under Demand No. I. Land Revenue Department, be reduced by Rs. 100'—to discuss about the failure of the Government to make provision for the total abolition of basic land revenue in our State.





**திரு. ஆ. கு. சுப்பையா**: ஐயா, நிலவரி அமைப்புகளை மாற்றியமைப்பது குறித்து வந்துள்ள தனி அதிகாரி அவர்களின் அறிக்கையைச் சபை முன்பு வைத்து விவாதிக்க, "கோரிக்கை எண் I நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற 43,02,000 ரூபாயில் 100 ரூபாய் குறைக்கவேண்டும்" என்ற என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. வி. எஸ். எஸ் மணி** : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் வெட்டுத் தீர்மானத்தை முன்மொழியும்போது அதை ஒருவர் ஆமோதிக்கவேண்டாமா என்று அறிய விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : வெட்டுத் தீர்மானங்களை ஆமோதிக்கவேண்டியதில்லை என்று நமது பேரவையின் விதிகளில் கூறப்பட்டுள்ளது. அடுத்து, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : சார், நிலவரியைத் தள்ளுபடி செய்வதுபற்றி விவாதிக்க "கோரிக்கை எண் I—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற 43,02,000 ரூபாயில் 100 ரூபாய் குறைக்கவேண்டும்" என்ற என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா** : ஐயா, நிலவரிமுறையை மாற்றியமைத்து சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு அறவே நிலவரியை ரத்து செய்வது குறித்து விவாதிக்க, "கோரிக்கை எண் I—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற 43,02,000 ரூபாயில் 100 ரூபாய் குறைக்கவேண்டும்" என்ற என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

கோவில்பட்டி தாலுகாவில், ஒத்திவைக்கப்பட்ட முன் பசலிகளுக்குரிய வரி பாக்கிகளை ரத்து செய்யவேண்டுமென்று கோர, மு.ப. 9-30
"கோரிக்கை எண் I—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற 43,02,000 ரூபாயில் 100 ரூபாய் குறைக்க வேண்டும்" என்ற என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : இப்பொழுது, முழு முதல் தீர்மானமும், வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்தில் இருக்கின்றன. வெட்டுத் தீர்மானங்களை வழிமொழிய வேண்டிய அவசியமில்லை என்பது நம்முடைய பேரவையின் விதிகளில் 69-வது விதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்பொழுது மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசுவார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : சார், இந்த அவையின்முன் வைக்கப்பட்டிருக்கும் இந்த வெட்டுத் தீர்மானத்தைப் பற்றி எங்கள் கட்சியின் சார்பில் கூறும்போது, கடந்த தின விவாதத்தின் போது, முதல் அமைச்சர் எடுத்துக் கூறினார்கள்—நில வரியை

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1967 மார்ச் 23

ரத்து செய்ய வேண்டும் என்று முன்னாள் அமைச்சரவை தீர்மானித்து, முன்னாள் முதலமைச்சர் அறிக்கை ஒன்றை வைத்ததாகவும், அதோடு ஸ்டேட் ட்ரேடிங்கை சர்க்கார் எடுக்க வேண்டும் என்று தொகுத்து வைத்திருப்பதாகவும் கூறினார்கள். இந்தத் தீர்மானம் மிக முக்கியமான தீர்மானம் என்பதை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பல்லாண்டு காலமாக விவசாயிகள் கடனிலேயே பிறந்து, கடனிலேயே வளர்ந்து, கடனிலேயே மாண்டுகொண்டிருக்கும் சூழ்நிலைதான் இந்திய நாட்டிலேயே இருந்து கொண்டிருககிறது. இந்த நிலைமை மாறுவதற்கு நில வரியை ரத்து செய்தாக வேண்டும். இது பற்றி காங்கிரஸ் மகாசபைக் கூட்டங்களில் விவாதிக்கப்பட்டு காந்திஜியின் காலந் தொட்டே தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்தியாவில், இந்த நில வரியை ரத்து செய்தால்தான் விவசாயிகளுக்கு நல்ல வழி பிறக்கும். இந்த நில வரி அநியாயமானது எனபதை முன்பிருந்த அரசாங்கம் கண்டு கொண்டிருந்தது. அந்தக் காரணத்தினால், அது சில நடவடிக்கைகளை எடுத்துக் கொணடது. சற்று காலம் தாழ்ந்து வந்தது என்கின்ற ஆட்சேபணையை பல உறுப்பினர்களும் எடுத்துக் காட்டினார்கள். நில வரியைப் பொருத்தவரையில், வருமான அடிப்படையில் இந்த வரியை மாற்றி அமைப்பது என்பது யோசிக்க வேண்டிய விஷயம். அக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸ் முறையிலா அல்லது வேறு முறையிலா என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்ப்பது சாலச் சிறந்ததாக இருக்கும். நில வரியை மாற்றுவது ஒன்று, நீக்கம் செய்வது வேறு ஒன்று என்று இருந்தாலும், இதை என்ன முறையில் அமல்படுத்த வேண்டும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சட்டபூர்வமாகச் செய்ய வேண்டும் என்றால், அதைப் பொறுத்தவரையில், உன்னத அதிகாரியின் அறிக்கை அரசாங்கத்திற்குக் கொடுத்திருப்பதாகவும், அதை அரசாங்கம் படித்துக்கொண்டிருப்பதாகவும், இறுதி முடிவு எடுக்கவில்லை என்றும் குறிப்பிடப்பட்டது. விரைவில் படித்து அதற்கு வேண்டிய சட்டத்தை அடுத்த சட்டசபைக் கூட்டத்தில் கொண்டு வருவார்கள் என்று பொதுமக்களும் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள், நாங்களும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நிலவரி நீக்கமானது, காலத்தில் செய்யப்பட்டால் பொது மக்களுக்கு செய்கின்ற பெரும் பேருதவியாக இருக்கும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்; சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கும். ஆகவே, அதற்கான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கிறேன். குறிப்பாக விவசாயிகளுக்கு, அவர்களுடைய உற்பத்தியைப் பெருக்குவதற்கு இந்த நில வரி ரத்து சிறந்த வழி முறையாக இருக்கும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். அதேபோலத்தான் விற்பனை வரியும். உணவுப் பண்டங்கள் மீது இருந்த வரியை, விற்பனை வரியை எப்படி ரத்து செய்தார்களோ அதேமாதிரி இந்த நில வரியையும் உடனடியாக ரத்து செய்ய வேண்டும், அதற்கான சட்டம் அடுத்த சட்டப் பேரவைக் கூட்டத்தில் கட்டாயம் கொண்டு வரப்படும் என்று எதிர்பார்த்து என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.



967, மார்ச் 23

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் :** இப்பொழுது பெருமதிப்பிற்தரிய உறுப்பினர் திரு. அரங்கண்ணல் அவர்கள் பேசுவார்கள்.

*** திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, இப்பொழுது ண்பர் பொன்னப்ப நாடார் அவர்கள் நிலவரி சம்பந்தப்பட்ட வெட்டுப் பிரேரணைமீது பேசும்போது, நேற்றையதினம் எந்தக் கருத்து ஆளும் தரப்பிலிருந்து சொல்லப்பட்டு, பதில் கொடுக்கப் பட்டதோ அதே கருத்தை வெட்டுப் பிரேரணையாகத் தந்து பேசியிருக்கிறார்கள். கொள்கையளவில் நில வரியை நீக்குவது சம்பந்தமாக ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் எந்தவிதமான கருத்து வேற்றுமையும் இல்லை. ஆனால், அவர்கள் தரப்பிலிருந்து வெட்டுப் பிரேரணை மீது பேசும்போது அது சம்பந்தமாக ஆக்க பூர்வமான யோசனைகளை எடுத்துச் சொல்வார்கள் அவர்கள் தேர்ந்த வழக்கறிஞர், ஆகவே, சட்டபூர்வமான யோசனைகளைக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால், அரைத்த மாவையே அரைப்பது போல, கவர்னர் உரை மீது நடந்த விவாதத்தின்போது சொன்னது போலவே, சர்க்கார் தவறி விட்டது என்று குற்றம் சாட்டும் மனப்பான்மையை வெளிப் படுத்திய கருத்து இருந்தது குறித்து வருத்தப்படுகிறேன். கொள்கையளவில் நிலவரி குறைப்பு பற்றி நாம் எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். முன்பு இருந்த அரசு என்னென்ன செய்திருக்கிறது என்பதைப் பற்றியும் அறிவோம். 1962-ல் காங்கிரஸ், ஆட்சிபீடத்தில் ஏறிய காலத்தில் சுமார் 7 கோடி ரூபாய் நில வருமானமாக இருந்தது. ஆனால், ஐந்தாண்டு காலத்தில் 1966வரை காங்கிரஸ் அரசு நிலவரித் துறையில் என்னென்ன வரிகள் போட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். சர்சார்ஜ் சர்சார்ஜ் என்று சொல்லி, 7 கோடியிலிருந்து இன்றைக்கு 12 கோடியாக உயர்த்தியிருக்கிறது என்பதை தமிழ் நாட்டிலுள்ள எந்த விவசாயியும் மறந்துவிடக்கூடாது என்று விவாதிக்கப்பட்டதும், காங்கிரஸ் ஆளும் கட்சிக் கூட்டத்திலேயே பிரச்சினைகள் கிளம்பி, சர்சார்ஜை வைக்கக் கூடாது என்று விவாதிக்கப்பட்டதும், காங்கிரஸ் ஆளும் கட்சித் தலைவர் அதற்கு வரிபோடுவது நியாயம்தான், ஏன் வரி போடுகிறோம் தெரியுமா, விவசாயிகளுக்கு பள்ளிக்கூடங்கள் கட்டிக் கொடுக்கிறோம், ஆஸ்பத்திரிகள் கட்டி வைக்கிறோம், இதற்கெல்லாம் பணம் வேண்டாமா, அதனால்தான் வரி போடுகிறோம் என்று சொன்னார்கள். இதே மன்றத்திலே ஆளும் கட்சித் தலைவர் விவசாயிகளுக்கு வரி போடுவது எப்படி நியாயமானது என்று சொன்னது கவனத்தில் இருக்கிறது. அது ஒருபுறம் இருந்த போதிலும், இன்றையதினம் நாங்கள் கொள்கை அளவில் நிலவரி குறைப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இப்போதுள்ள எதிர்க் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளுகின்றன என்பதைக் கண்டு மிக மிக மகிழ்ச்சி அடைகிறேன். நம்முடைய நிதி நிலை அறிக்கையிலேயே நம்முடைய முதல் அமைச்சரவர்கள் அதைப்பற்றி விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். "நில வரியின் எதிர்காலத்தைக் குறித்து அரசாங்கம் எடுக்கும் முடிவுகள் சட்டப் பேரவையின்

முன் வைக்கவிருக்கும் முறையான வரவு-செலவுத் திட்டத்தில் மட்டுமே காணப்படும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, நிலவரியை நீக்குவது சம்பந்தமாக பல பிரச்சினைகள் இருக்கின்றன. ஏதோ இரவிலே யோசித்து, காலையிலே உத்தரவு போடுவது என்பதான பிரச்சினை அல்ல அது. அது சம்பந்தமாக பலருடைய ஆலோசனைகளையும் பெறவேண்டியிருக்கிறது. ஆலோசனைகள் இருப்பவர்கள் அத்தகைய ஆலோசனைகளைக் கொடுக்கலாம். எதிர்க்கட்சியில் இருப்பவர்களும் இவைகளைப்பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனைகள் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அரசாங்கம் கவனமாக யோசித்து, பஞ்சாயத்து போர்டுகளோடு இணைக்கலாமா என்கின்ற பிரச்சினையும் இருக்கிறது. அரசாங்கம் ஒரு முடிவு எடுக்கிறது என்றால், அது ஒரு மாதத்திற்கு, இரண்டு அல்லது மூன்று மாதத்திற்கு பொருந்தக்கூடிய முடிவாக இல்லாமல் நீண்ட காலத்திற்கு மக்களுக்கு பயன்படும் முறையில் செய்ய வேண்டும். எந்தக் காரியத்தைச் செய்தாலும், ஆழ்ந்து சிந்தித்து நல்ல காரியங்களை பொது மக்களுக்குப் பயன்படும் வகையில் செய்வார்கள் என்று சொல்லி, வெட்டுப் பிரேரணையை நண்பர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் வலியுறுத்த மாட்டார்கள் என்று கருதி, கொள்கையளவில் அபிப்பிராயபேதம் இல்லை என்பதைக் குறிப்பிட்டு, என் உரையை முடிக்கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : அடுத்து, மதிப்பிற்குரிய திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் உரையாற்றுவார்கள்.

* திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : பெருமதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நிலவரியை எடுக்க வேண்டும் என்கிற பிரச்சினையைப் பொருத்தமட்டில் பலவிதமான கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. நீண்ட நாட்களாக காங்கிரஸ் ஆட்சியாளர்கள் நிலவரியை எடுக்கிறோம், அதோடு தானியக் கொள்முதலையும் அரசாங்கமே எடுக்கும் என்றும் சொன்னார்கள். அந்தத் துறையில் ஏற்படும் நஷ்டத்தை ஈடுசெய்வதற்கு தானிய வியாபாரத்தை எடுக்கப் போவதானால், நிலவரியை இரண்டு மூன்று முறை அதிகப்படுத்தினாலும் கூட பரவாயில்லை. அதைக் காட்டிலும் பல மடங்கு கஷ்டங்களும் நஷ்டங்களும் நிச்சயமாகக் குடியானவர்களுக்கு வரும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

சாதாரணமாக இப்பொழுது கொள்முதல் செய்கின்ற முறையிலே, ஒரு மூட்டைக்குப் பதினைந்து ரூபாயிலிருந்து இருபது, இருபத்தைந்து ரூபாய் வரை கொள்முதல் விலைக்கும் விற்பனை விலைக்கும் மத்தியிலே இருக்கிறது. விற்பனை செய்கின்ற அத்தனை தானியங்களையும் அரசாங்கமே எடுத்துக் கொள்ளுவது என்றால், இந்த நில வரியைப் போல் நூறு மடங்கு அவன் கொடுக்க வேண்டி வரும். ஆகையால், நிச்சயமாக நில வரியை எடுத்து விட்டு நம்முடைய அரசாங்கத்தினுடைய பொருளாதார நிலையை வேறு வகையிலே சரிக்கட்ட வகை இருந்தாலல்லது, இந்தத் துறையிலே நில வரியை எடுப்பது மிகவும் தவறு என்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.



மேலும், ஐந்து ஏக்கர் வரையுள்ள சிறு நிலச்சுவான்தார்களுக்கு மாத்திரம் விதி விலக்குக் கொடுக்கவேண்டும் என்ற பிரச்சினையும் வருகிறது. சிறு நிலச்சுவாந்தார்கள் என்று வைத்துக்கொண்டால் இன்று நம் நாட்டில் இருக்கின்ற நிலத்திலே சுமார் 80 சத விகித நிலங்களுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டியிருக்கிறது. பாக்கியுள்ள 20 சத விகித நிலத்திற்காக இவ்வளவு பெரிய அரசாங்க இலாக்காவை வைத்துக் கொண்டிருப்பதனால், நிலவரி வருவாயைக் காட்டிலும் பல மடங்கு அதிகச் செலவு ஏற்படும். ஆகையால், மிக மிகச் சிந்தித்து ஆலோசித்து, இந்தக் கருத்துக்களையெல்லாம் கவனத்தில் கொண்டு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். வணக்கம்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : அடுத்து, மதிப்பிற்குரிய உறுப்பினர் திருமதி ஜானகி அம்மாள் அவர்கள் பேசுவார்கள்.

* திருமதி கே. பி. ஜானகி அம்மாள் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த நிலவரி சம்பந்தமாக தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய சில விஷயங்களைப்பற்றிச் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம் என்ற நோக்கத்தில் சில வார்த்தைகள் கூறலாம் என்று நான் நினைக்கிறேன்.

பொதுவாக, நிலத்திற்கு வரி விதிப்பது என்பது அந்த நிலத்தினுடைய தரத்தைப் பொருத்த விஷயமாகும். பல ஆண்டுகளுக்கு முன்னால் நிலத்தினுடைய தரத்தைப் பிரிக்கும்போது, எம்மாதிரியான நிலம் என்று மண் வளத்தை எல்லாம் பரிசோதனை செய்து தரம் பிரிக்கப்பட்டிருப்பதைத் தவிர, சமீப காலத்தில் அதைப் பற்றி எந்தவிதமான முயற்சியும் கிடையாது. ஆகவே, முதலில் நிலத்தின் தரத்தைச் சரியாகக் கணித்து, மதிப்பீடு செய்து, அதன் பிறகு நிலத்திற்குத் தீர்வை விதிப்பது என்ற முறையை அரசாங்கம் கையாளுவது உதவியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அதற்கடுத்தபடியாக, நிலத்திற்குத் தீர்வை விதிப்பது என்பதில் கென்று சர்க்கார் நிலவரி முழுவதையும் ரத்து செய்வது என்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. ஆனால், அது சட்டபூர்வமாக அமலுக்கு வரவில்லை என்பது தெரியும். அம்மாதிரி விதிக்கக் கூடிய நேரத்தில், நிலத்தின் தரத்திற்குத் தக்கபடி நில வரி, அதை படுத்து தண்ணீர்த் தீர்வை, செஸ், சர்சார்ஜ், அபிவிருத்தி வரி இப்படியெல்லாம் ஒரே நிலத்தின்மீது பலவிதமான வரி விதிப்புகள் இருக்கின்றன. அதில் எந்த வரியை அந்த சர்க்கார் ரத்து செய்வது என்று முடிவு செய்தது என்பது தெரியாது. இந்த நிலைமையில் நான் என்ன அபிப்பிராயப்படுகிறேன் என்றால், இந்தத் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஏழை எளிய விவசாயிகளுடைய வாழ்வு வளம் பெறவேண்டும் என்ற முறையில், ஐந்து ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருக்கும் விவசாயிகளைப் பொருத்த சகல விதமான வரிகளையும் ரத்து செய்யவேண்டும். அப்பொழுதுதான் அவர்களுக்கு இந்த நாட்டின் உணவு உற்பத்தியில் அக்கறையும், அதிகப்படியான விசேஷப் பொறுப்பும் ஏற்பட முடியும். ஆகவே,

தண்ணீர்த் தீர்வை உட்பட எல்லாவிதமான வரிகளையும் ஐந்து ஏக்கருக்கு குறைவாக நிலம் வைத்திருப்பவர்களுக்கு வஜா செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஐந்து ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருக்கக்கூடிய விவசாயிகளுடைய நிலத்தைப் பொருத்த வரையில், அவர்களுடைய நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானத்திற்குத் தகுந்த அளவிற்கு உயர்வு வரி விதிப்பது என்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஐந்து ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருக்கிறவர்களுக்குச் சகலவிதமான வரிகளையும் ரத்து செய்வதன்காரணமாக துண்டு விழக்கூடிய நிலைமைகளைக்கூட ஐந்து ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களுக்கு, அவர்களுடைய வருமானத்திற்குத் தகுந்தமாதிரி உயர்வு வரி போடுவதன் மூலமாகச் சரிக்கட்டிக் கொள்ளலாம். அதனால், அரசாங்கத்தின் வருமானமும் பாதிக்கப்படமாட்டாது; வருமானத்திற்குத் தகுந்த உயர்வு வரி என்ற அடிப்படையில் பெரு நிலச்சுவாந்தார்களும் பாதிக்கப்படமாட்டார்கள். அம்மாதிரி எந்த மக்களையும் பாதிக்காதமுறையில் வரி விகிதம் இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

விவசாயிகளைப் பாதிக்கக்கூடிய சிறு விஷயம் ஒன்று இருக்கிறது. அதைச் சர்க்கார் இதுவரையில் கவனிக்காமலிருக்கிறது. நான் குறிப்பிடப்போவது ஒரு சிறிய விஷயமாக இருந்தாலும், அதனால் பெரிய பாதிப்பு விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதுதான் கூட்டுப் பட்டா முறை இன்னும் இருந்து கொண்டிருப்பது. ஒரு கிராமத்தில் 100 குடும்பங்கள் இருக்கின்றன என்றால் அந்த நூறு குடும்பங்களுக்கும் சேர்ந்து பதினைந்து பட்டாக்கள்தான் இருக்கும். ஒரு குடும்பத் தலைவர் இறந்து பதினைந்து, இருபது ஆண்டுகள் ஆகியிருந்தாலுங்கூட, அவனுடைய பெயரில் இருக்கக்கூடிய பட்டாவை மகனுடைய பெயரில் மாற்றுவது கிடையாது. அதன் காரணமாக, இன்றைக்குச் சர்க்காரால் கொடுக்கக்கூடிய கூட்டுறவு சொஸைட்டி கடனோ, மாடு வாங்குவதற்கான கடனோ அல்லது நில அபிவிருத்திக்காகக் கொடுக்கக்கூடிய கடனோ, மற்ற எந்தவிதமான சலுகையோ, கூட்டுப் பட்டாவில் இருக்கக்கூடிய விவசாயி அனுபவிக்க முடிவதே இல்லை. அப்படிப்பட்ட நிலைமைகாரணமாக, பல்லாண்டுகளாக கூட்டுப் பட்டாவாக இருக்கக்கூடிய முறையில், சிறு விவசாயிகள் மிகப் பெரிய அளவு பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, உடனடியாக சர்க்கார் மறு பரிசீலனை செய்து, ஆங்காங்கு இருக்கக்கூடிய ரெவினியூ அதிகாரிகளின் மூலம், எந்த எந்தக் கிராமங்களில் கூட்டுப் பட்டாக்கள் இருக்கின்றனவோ, எந்த எந்தக் கூட்டுப் பட்டாக்களைத் தனிப் பட்டாக்களாகப் பிரித்துக் கொடுக்கவேண்டும் என்று மனுச் செய்துகொள்ளுகிறார்களோ, அங்கெல்லாம் ரெவினியூ அதிகாரிகள் நியாயமான முறையில் கூட்டுப் பட்டாக்களைத் தனிப் பட்டாக்களாக மாற்றிக் கொடுப்பது என்ற நிலைமையை உடனடியாக ஏற்படுத்தினால், இதுவே விவசாயிகளுக்குப் பேருதவியாக





இருக்கும். இது சிறிய விஷயந்தான் என்றாலும், கிராம மக்களை அரித்துத் தின்று கொண்டு வந்திருக்கிற விஷயமாகும். கூட்டுப் பட்டா முறையை வைத்துத்தான் அங்கங்கே இருக்கக்கூடிய கிராம அதிகாரிகள் கூட்டுப் பட்டாவில் இருக்கக்கூடிய ஒவ்வொருவரிடமிருந்தும் தனித் தனியாக வரி வசூல் செய்யக்கூடிய நிலைமையும் இருந்துகொண்டிருக்கிறது. ஒரு கூட்டுப் பட்டாவில் நான்கு பெயர்கள் இருந்தால், அந்த நான்கு பேர்களிடமிருந்தும் தனித் தனியாக அந்த பட்டாவுக்கு உரிய வரி வசூல் செய்யக் கூடிய நிலைமையும் ஆங்காங்கு காணப்படுகிறது. அரசாங்கத்திற்குச் சேர வேண்டியது ஒரு வரிதான் என்றாலும், சாதாரண கிராம விவசாயிகளுடைய அறியாமையைப் பயன்படுத்தி இப்படிப்பட்ட தவறான காரியங்களெல்லாம் நடப்பதற்கு இந்தக் கூட்டுப் பட்டா முறை இடம் அளிக்கிறது. ஆகவே, கூட்டுப் பட்டாவைத் தனிப் பட்டாவாக மாற்றியமைக்கும் ஏற்பாட்டை உடனடியாகச் செய்யவேண்டியது அவசியம் என்று நான் வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது. இந்தச் சட்டம் வந்த பிறகு கூட நிலத்தில் குத்தகைதாரர்கள் விவசாயம் செய்கிறார்கள் என்றால், யார் விவசாயம் செய்கிறார்கள் என்று பதிவு செய்வதற்கு எந்தவிதமான பொறுப்பும் சர்க்கார் எடுத்துக் கொள்வதில்லை. ஏனென்றால், விவசாயி குத்தகை வாரத்திற்கு உழுகிறான் என்றால், அந்த விவசாயியின் பெயர் கிராம அடங்கலில் பதிவு செய்யப்படுவது என்பது கிடையாது. அடங்கலில் பதிவு செய்யாததால், அந்த விவசாயி விவசாயம் செய்கிறான் என்பது தெரியாது. நிலச்சுவாந்தாரும் பரம்பரையாக அந்த விவசாயிதான் உழுகிறான் என்பதைக் கணிக்க குத்தகைச் சீட்டு எழுதிக் கொடுப்பதும் கிடையாது. அப்படி எழுதிக் கொடுக்காத காரணத்தினால், எந்த விவசாயி ஒரு நிலத்தைச் சாகுபடி செய்கிறான் என்பதை அந்தக் கிராமக் கர்ணம் அடங்கலில் பதிவு செய்யவேண்டும் என்பது விதி. ஆனால், அதை எந்தக் கிராமக் கர்ணமும் செய்வது கிடையாது. அம்மாதிரி ஒரு நடவடிக்கையை கண்டிப்பாகச் செய்யவேண்டும் என்று நான் விரும்புகிறேன். இது சின்ன விஷயம் தான் என்றாலும், இது செய்யப்பட வேண்டியது அவசியம். கிராமத்தில் குத்தகை, வாரத்திற்குச் சாகுபடி செய்யக்கூடிய விவசாயியின் பெயர் அந்தந்தக் கிராம ரெவினியூக் கணக்கு எழுதக் கூடிய அடங்கலில் இருக்க வேண்டும். எந்த விவசாயி இன்னாருடைய நிலத்தைச் சாகுபடி செய்கிறான் என்பதைக் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு விவசாயியும் என்ன என்ன பயிர் சாகுபடி செய்கிறான் என்று கிராம அதிகாரிகள் கணக்கு எடுக்கின்ற தருணத்தில், அவர்களுடைய பெயர்களையும் அடங்கலில் பதிவு செய்து வைத்துக்கொள்ளுவது, கிராம அதிகாரிகளுடைய பொறுப்பு என்ற முறையிலே இதைச் செய்ய வேண்டும் என்ற கருத்தில் இதை இந்த நேரத்தில் சபையினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு கிராம அதிகாரி கர்ணம். இம்மாதிரி இருக்கக்கூடியவர்களை நாம் அரசாங்கத்தின் முழு நேர ஊழியர்களாக அங்கீகரித்திருந்த போதிலும் கூட அவர்களை முழு நேர அரசாங்க ஊழியர்களாக ஏற்றுக்கொண்டு அதற்குத் தக்க ஊதியத்தை அவர்களுக்கு நிச்சயம் செய்திருக்கிறோமா என்றால், இல்லை. அதன் காரணமாக, அந்தக் கிராம அதிகாரிகள் பெரு நிலச்சுவாந்தார்களின் செல்வாக்கிற்கு உட்பட்டு, பல காரியங்களில் தவறு செய்யக்கூடிய நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆகவே, அம்மாதிரி இருக்கக்கூடிய கிராமக் கர்ணம் அதிகாரிகள், போன்றவர்களை நம்முடைய அரசாங்கம் முழு நேர ஊழியர்களாக நியமித்து, அவர்களுக்குத் தகுந்த ஊதியம் கொடுக்க வகை செய்ய வேண்டும். இம்மாதிரி நிலையை ஏற்படுத்துவது, கிராம மக்களுக்கும் சரி, நமது அரசாங்கத்தின் எதிர்காலத்திற்கும் சரி, மிகவும் அவசியமாகும். இது ஒரு சிறிய விஷயமாக இருந்தாலும், இது அஸ்திவாரத்தைப் பலப்படுத்தக்கூடிய ஆதரவான நடவடிக்கையாக இருக்கும். இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்த சபாநாயகர் அவர்களுக்கு எனது வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு எனது உரையை முடிக்கிறேன். வணக்கம்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : அடுத்து, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சுரேந்திரன் அவர்கள் பேசுவார்கள்.

* **திரு. எம். சுரேந்திரன் :** கனம் சபாநாயகர் அவர்களே, நிலவரி சம்பந்தமாக மிகச் சூடான விவாதங்கள் எழுந்து கொண்டிருக்கின்றன. நில வரியை ரத்து செய்ய வேண்டுமென்ற கருத்து இன்றைக்கு, நேற்றைக்குத் தோன்றியது அல்ல. சுதந்திரப் போராட்டக் காலத்திலேயிருந்து தோன்றி வந்துள்ள கருத்து இது. ஆனால் சுதந்திரம் பெற்று ஆட்சிப் பீடத்திலே அமர்ந்தவர்கள் இந்தக் கருத்தைச் செயலாக்காமல் தயங்கிக் கொண்டே இருந்தார்கள். இந்தத் தேர்தல் கால சந்தர்ப்பத்திலே அவசரம் அவசரமாக காரைக்குடியிலே கூடி, நிலவரியை ரத்து செய்துவிடுவோம் என்று ஒரு தீர்மானம் போட்டு, கடந்த தேர்தல் பிரசாரத்திற்கு ஒரு வலுவை உண்டாக்கிக் கொள்வதற்காகப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. அப்படி நில வரியை ரத்து செய்துவிடுவது என்று ஒட்டு மொத்தமாகச் சொல்வதில் அர்த்தம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நிலம் அதிகமாக வைத்திருப்பவர்கள், தங்களுடைய அறுவடையை தங்களுடைய தேவை போக மற்றவற்றை மார்க்கெட்டிலே விற்று லாபம் சம்பாதிக்கிறவர்களுக்கு இந்த வரியை ரத்து செய்வது என்பது பரிசு வழங்குவது போலாகி விடுகிறது. ஆகவே, ஒட்டு மொத்தமாக வரியை ரத்து செய்வது என்பதைவிட சிறு நிலக்காரர்களுக்கு தங்களுடைய உழைப்பின் மூலமே உற்பத்தியைச் செய்கின்றவர்களுக்கு தங்களுடைய உழைப்பின் மூலமே குடும்பத்தை நடத்துகிறவர்களுக்கு எந்தவிதமான வரியும் இல்லாமல் இருப்பது என்ற ஓர் அடிப்படையான அம்சமாக வைத்துக்





கொள்ள வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால் சொந்த நிலத்திலே உழைக்கிறவர்களுக்கு எந்த விதமான ஒரு வரியும் இருக்கக் கூடாது. உழைக்கின்றவர்களுக்கு நிலவரி மட்டுமல்ல; நீர்வரி கூட கூடாது என்று தோன்றுகிறது. தாங்கள் கடுமையாக உழைப்பதன் மூலமே தாங்கள் சுதந்திரமாக வாழ முடியும் என்ற நம்பிக்கையை உழைக்கின்ற மக்களிடத்தில் உண்டாக்குவதே சோஷலிசத்தின் அடிப்படையானது. சோஷலிசத்தை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதன் அடிப்படையாக நாம் கொள்ள வேண்டியது என்னவென்றால், எந்த உழைப்பாளிக்கும் எந்த விதமான வரியும் இருக்கக்கூடாது என்ற அடிப்படையை மனதில் வைத்துக்கொண்டு, வரியை ரத்து செய்வது சம்பந்தமாக யோசனை செய்ய வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. உழைப்பாளிகளுக்கு மதிப்புக் கொடுக்கின்ற ஒரு சமுதாயத்தின் சோஷலிச சமுதாயம். இதனால் ஏற்றத்தாழ்வுகளும் மற்றக் கெடுதல்கள் போன்ற அம்சங்களும் மறைந்துவிடும். உழைப்பாளிகளுக்கு மதிப்புக் கொடுக்கும் இந்த அரசாங்கம் இந்தக் காரியங்களை உடனடியாகச் செய்ய வேண்டும்.

இன்னொரு பக்கத்தில் பார்த்தால், நிலத்திலே விளைகின்ற உணவுப் பொருள்கள் இப்போது அதிகமாகத் தேவைப்படுகின்ற நேரம் இது. உணவு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிற விவசாயிகளுக்கு நல்ல உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். எவ்வளவு அதிகமாக உணவு உற்பத்தியைப் பெருக்க முடியுமோ அவ்வளவு உணவு உற்பத்தியையும் பெருக்க வேண்டும். இப்போதிருக்கிற நிலைமையில் ; நிறைய உற்பத்தி செய்ய வேண்டுமென்று சட்டம் போட்டுச் செய்வது சரியானது அல்ல. உணவு உற்பத்தி அதிகம் செய்கின்றவர்களுக்கு வரியிலிருந்து ரத்து செய்வது நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. இந்தச் சர்க்கார் ஒட்டு மொத்தமாக எல்லோருக்குமே வரியை ரத்து செய்வது என்பது சரியானது, நியாயமானது, நீதியானது அல்ல. நீதியான காரியங்களைத்தான் இந்தச் சர்க்கார் செய்ய வேண்டும். குறிப்பாக உழைக்கின்ற எந்த மக்களுக்கும் எந்தவிதமான தடையும் இருக்கக்கூடாது, எந்தவிதமான இடைஞ்சலும் இருக்கக்கூடாது. உழைத்துச் சாகுபடி செய்யும் மக்கள் சுதந்திரமாக சாகுபடி செய்வதற்குத் தூண்டுகோலாக நம்முடைய வரி முறைகளை மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகும். இந்த ரெவின்யூ வருமானத்தைப் பார்த்தால் கிட்டத்தட்ட 13 கோடி ரூபாய் வரி வந்துகொண்டிருப்பதாகக் கணக்குச் சொன்னார்கள். இந்த வரி ஒழிப்பின் மூலம் கிட்டத்தட்ட 8 கோடி ரூபாய் தாண்டு விழும். இதை எப்படி ஈடு செய்வது என்று யோசிக்கும்போது அதிகமான வருமானம் வருகிறவர்களுக்கு அதிகமான வரியைப் போடுவதில் எவ்விதமான தயக்கமும் காட்டக் கூடாது. அதிகமாக லாபம் சம்பாதிப்பவர்கள்மீது இந்த வரியைப் போட்டு ஈடு செய்யும் முயற்சியிலே ஈடுபட வேண்டும். ஆகவே, இந்த அரசாங்கம் இந்த வகையிலே, இந்தப் பிரச்சினையைக் கவனித்து வ

[திரு. எம். சுரேந்திரன்] [1967 மார்ச் 23

காலத்தில் காரியங்களைச் செய்யும் என்ற நம்பிக்கையில், என்
நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக்
கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஆர். கனகசபை : கனம் சபாநாயகர் அவர்களே,
எனக்கு முன் பேசிய நண்பர் அவர்கள் பேசியதையொட்டி நான்
சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அவர் "சிறு விவசாயி
களுக்கு நிவாரணம் இருக்க வேண்டும், பெரிய விவசாயிகளுக்கு
வரி போடலாம்" என்று சொன்னார்கள். சுமார் 20, 25 ஆண்டு
களுக்கு முன்னால், சுதந்திரம் வருவதற்கு முன்னால் பிரிட்டிஷ்
அரசாங்கத்திலே நிலவரியை எடுத்துவிட்டு, விற்பனை வரி போடு
வது என்று தயாரிக்கப்பட்ட ஒரு அறிக்கை இருக்கிறது அரசாங்
கத்தில். அம்மாதிரி விளைபொருள்கள் மீது விற்பனை வரி விதித்
தால சற்று முன் பேசியவர் சொன்னபடி, யார் அதிகமாக நிலம்
வைத்திருந்து, விளைபொருள்களை விற்பனைசெய்கிறார்களோ அவர்
களுக்கு வரி இருக்கும். அதிகமாக விற்பதற்கு ஒன்றும் இல்லாத
வர்களுக்கு வரி செலுத்த வேண்டிய அவசியம் இருக்காது.
தானாகவே நிவாரணம் கிடைத்துவிடும். அதோடு, இப்போது
உணவுப்பொருளாகிய நெல் பயிரிடுவோர்கள் எல்லோருக்கும்
தெரியும்; விவசாயத்திலே வருமானம் அதிகக் குறைவாக வரு
கின்றது. மற்ற 'கமர்ஷியல் கிராப்ஸ்' (பணப் பயிர்) பயிரிடுவோர்
களுக்கு அதிகமாக வருமானம் கிடைக்கின்றது. விற்பனை வரி
விதித்தால் அதிகமான வருமானம் வருகிறவர்கள் அதிகமான வரி
செலுத்த வேண்டியிருக்கும். குறைந்த வருமானம் உள்ளவர்கள்
குறைவாக வரி செலுத்தலாம். அதோடு அரசாங்கம் இப்பொழுது
விவசாயப் பொருள்களை வியாபாரம் செய்வதென்று எடுத்துக்
கொள்வதனால் விற்பனை வரி விதிப்பு சுலபமாகவும் இருக்கும்.
ஆகவே, இந்த அரசாங்கம் அந்த அறிக்கையைப் பரிசீலனை
செய்து இந்த லேண்ட் ரெவின்யூவை எடுத்துவிட வேண்டுமென்று
சொல்கிறபோது, அதனால் குண்டு விழும் தொகைக்கு இது
ஈடு கட்டிக் கொள்ளும் என்று சொல்லிக்கொண்டு என் உரையை
முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

MR. SPEAKER : The hon. Member, Dr. H. V. Hande will now speak.

DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, at the very outset I wish to express very clearly that we fully endorse the views expressed by me hon. Friend Sri Rama Arangannal. In fact I know that the Dravida Munnetra Kazhagam is very, very clear about it and that they will make every effort to abolish the land revenue. If our memories are quite sharp, we will remember that in the last Legislature, it was the D.M.K. Party which was again and again stressing the necessity for the abolition of the land revenue both in this House and in the Upper House. There was such a heated discussion on the part of the Opposition that even the pleasure of a division was denied in the Upper House on this particular issue. Therefore, I want to make it clear that we fully



1967 மார்ச் 23] [Dr. H. V. Hande]

endorse the views expressed by the hon. Member, Sri Rama Arangannal and we fully sympathise with the difficulties expressed by him in bringing that into effect immediately.

Now, Sir, I want to express one or two points in this respect. Our Party, Swatantra Party has very clearly indicated that the land revenue must be abolished *in toto* and I fully subscribe to the view that we should as far as possible, try to bring very speedily the abolition of the land revenue. Unless this is brought about, the farmers will be put to great trouble and unless we give encouragement and incentive to the farmers, production will come down. So, in the interest of production and in the interest of the reduction of the cost of rice and other things, we want immediately the abolition of the land revenue. I am quite confident that the Hon. Ministers for Food and Agriculture will put their heads together and see that this is done immediately. Here again, I want to strike a note of caution. There is a linking of the abolition of the land revenue with the State Trading in foodgrains which we want to oppose very clearly. We will be very happy if State Trading in foodgrams will bring in extra revenue. But our contention is that the Government will not be able to get Rs. 11 or 12 crores that they expect to get. This policy of linking the abolition of the land revenue with the State Trading in foodgrains had been laid down by the previous Ministry. These two things do not go together. State trading in foodgrains will not bring even one additional rupee of revenue to the Government. That is my contention and the submission of my Party also. We firmly think that State trading in foodgrains will bring about a loss. If it is linked up with this additional loss, it will be a dangerous loss to the Government. That is my humble submission. 10-00 மு.ப.

THE HON. THIRU C. N. ANNADURAI : With your permission, Sir, I may inform the Member that I was explaining to the House the previous day the theory enunciated by the previous Government and not by this Government.

DR. H. V. HANDE : I am very happy and grateful to the Chief Minister for this clarification. I was only afraid because of the pressure put by the Members of the Congress Party. I will be very happy if land revenue is abolished and this State trading is not at all thought of even by the Food Ministry.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : It should not be taken that it is not under the consideration of the Government. What our Chief Minister said day before yesterday was only what the former Chief Minister said, viz., that the Government linked up State trading in foodgrains with the abolition of land tax.

DR. H. V. HANDE : I wish to conclude by saying that we fully endorse the policy laid down by the D.M.K., and at the same time we fully appreciate the difficulties with which they are faced. We only hope that the abolition of land tax will be brought about as early as possible, and in this effort the Government will have the full support of the Swatantra Party.

* **திரு. எஸ். அழகிரிசாமி:** மேன்மை மிக்க சபாநாயகர் அவர்களே, இப்போதுள்ள நிலவரி அமைப்பு முறையில் சிறு நிலச் சுவாந்தார்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆரம்பத்தில் இருந்து பார்த்து வந்தால் பலயிடங்களில் எத்தனை சிறிய நிலக்காரர்கள் நிலவரியைக் கட்ட முடியாமல் தங்கள் நிலங்களையே ஏலத்தில் போகவிட்டிருக்கிறார்கள் என்பது தெரியும். ஆகவே இன்றைய தினம் இந்த அமைச்சரவை வகுக்கின்ற கொள்கையில் 5 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்குக் குறைவாக நிலமுள்ளவர்களின் நிலத்தின் மீது விதிக்கப்படுகிற நிலவரி அமைப்பு முறை அறவே அகற்றப்பட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வறண்ட பகுதியாகிய எங்கள் கோயில்பட்டி தாலுகாவில் 1374-ஆம் பசலியில் மகசூலே இல்லாமல் போய் விட்டது. அந்தத் தாலுகாவில் இருந்த விவசாய மக்கள் அந்தப் பசலிக்கான வரியை வசூல் செய்யாது ஒத்தி வைக்கவேண்டுமென்ற கோரிக்கையை அரசாங்கத்திற்குச் செய்துகொண்டார்கள். அரசாங்கம் அந்தப் பசலிக்கான வரி வசூலை ஒத்தி வைத்தது. திரும்ப சென்ற பசலி வரியோடு சேர்த்து மிக கெடுபிடியான முறையில் அதிகாரிகள் வசூல் செய்ய இப்போது முற்பட்டார்கள். வண்டி மாடுகள், பண்டபாத்திரங்கள் கூட நிலவரிக்காக ஜப்தி செய்யப்பட்டது. அப்பொருள்களை அன்றைய அரசாங்கம் பல முறை ஏலத்திற்கு கொண்டு வந்தும் மக்கள் அதை பகிஷ்கரித்தபின் வசூலை நிறுத்தி ஜப்தி செய்த பொருள்களை அரசாங்கமே அந்த மக்களிடம் திரும்பக் கொண்டு வந்து சேர்த்தது. இந்த ஆண்டும் அந்தத் தாலுகாவில் அதிகமாக மழை பெய்ததன் காரணமாக விவசாயிகள் கஷ்டப்பட நேரிட்டிருக்கிறது. மகசூல் 25 சத விகிதத்திற்கும் குறைவாகப் போய் இருக்கிறது. ஆகவே, அந்தத் தாலுக்காவில் 1374, 76-ம் பசலிகளுக்கான நிலவரியை இந்த அமைச்சரவை வஜா செய்துவிட வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

* **திரு. எஸ். பாலசுப்பிரமணியம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்றபோது ஒரு குறிப்பிட்ட பிரச்னையை மட்டும் அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். புதிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் சாகுபடிக்கு வருகிற நிலங்களுக்கு நீர்ப்பாசன அபிவிருத்தி வரி என்ற அடிப்படையில் ஒரு வரியைப் போட காங்கிரஸ் அரசாங்கம் தீர்மானித்திருந்தது. அந்த அடிப்படையில் விதிக்கப்பட்டுள்ள வரி இவ்வாண்டு முதல்தான் எங்கள் பகுதியில் வசூலுக்கு, அமல் வர இருக்கிறது. நீர்ப்பாசன அபிவிருத்தி வரியைப் பற்றிய அடிப்படைப் பிரச்சினையை நான் இப்போது எழுப்ப விரும்பவில்லை. இதுபோன்ற வரி மற்ற மாநிலங்களிலும் விதிக்கப்படுகிறது. பிளானிங் கமிஷன் கூட புதிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் போடும்போது, இத்தகைய வரியை விதிக்கலாம் என்பதாக ஆலோசனை தெரிவித்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் சென்ற காலத்தில் பஞ்சாப் அரசாங்கம் இதுபோன்ற வரிவிதிப்பைப் பற்றி ஆராய்ந்து முடிவு



கட்டுவதற்கு தர்பார்சிங் கமிட்டியைப் போட்டது. அவர்கள் இதைப்பற்றி ஆராய்ந்து—நீர்ப்பாசன அபிவிருத்தி வரி என்று போடுவது தேவையே இல்லை, அதற்கு நியாயமும் இல்லை, என்று முடிவு செய்து அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கையை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அமைச்சரவையின் கவனத்தையும் கவரவேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். ஆனால் இப்போது நாங்கள் வேண்டிக்கொள்வது எல்லாம் உடனடியாக நீர்ப்பாசன அபிவிருத்தி வரியை நீக்கிவிடுங்கள் என்பது அல்ல. கீழ்பவானி பாசனப் பிரதேசங்களை எடுத்துக் கொண்டால் நீர்ப்பாசன அபிவிருத்தி வரியை இவ்வாண்டு முதல்தான் வசூல் செய்ய ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். கீழ்பவானி பாசனத் திட்டத்தின் கீழ் 2¼ லட்சம் ஏக்கரா பயன்படும் என்றாலும்—சென்ற இரண்டாண்டுகளாகத் தண்ணீர்விடவில்லை. இந்த வருடமும் அதுவும் இரண்டாம் போகத்திற்குத்தான் தண்ணீர்விடப்பட்டது. அதுவும் ஒற்றை மாறு முறைப்படி 1¼ லட்சம் ஏக்கராவுக்குத்தான் இரண்டாம் போகத்திற்கு மட்டும் தண்ணீர்விட்டார்கள், இன்னும் அறுவடை கூட ஆகவில்லை. சென்ற வருடமும் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் அந்த வரி வசூலுக்கு டிமாண்ட் நோட்டீஸ் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக எனது கட்சித் தலைவர் திரு. நல்லசிவம் அவர்களும், திராவிட முன்னேற்றக் கட்சி உறுப்பினர்களும், சுதந்திராக் கட்சி உறுப்பினர்களும் கனம் முதல் அமைச்சர், கனம் ரெவின்யூ அமைச்சர் ஆகியவர்களிடத்திலே ஒரு விண்ணப்பம் கொடுத்திருந்தோம். அதாவது இந்த நீர்ப்பாசன அபிவிருத்தி வரி என்பதை இந்த அமைச்சரவை பின்னால் நன்கு பரிசீலனை செய்து எந்த ரூபத்தில் வைத்துக்கொள்ளலாம் என்பதை முடிவு செய்து கொள்ளலாம் என்று. இவ்வாண்டு அந்த கீழ் பவானி பிரதேசத்தில் இந்த நீர்ப்பாசன அபிவிருத்தி வரியை வசூல் செய்யாது நிறுத்தி வைக்க உடனடியாக உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, நில வரி மானியத்தின் மீது பேசிய எல்லா உறுப்பினர்களும் இந்தச் சர்க்கார் நல்லமுறையில் சிந்திக்கத்தக்க நல்ல பல கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிற கருத்துக்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு துறையில் இருந்து பார்க்கிறபோது அவையாவும் மெத்த நியாயமானதாகப் படுகிறது. அதிலே ஒருவர் நியாயமாகவும், இன்னொருவர் அநியாயமாகவும் பேசினால் உடனடியாக நாம் எது நியாயம் என்பது பற்றித் தீர்ப்புச் சொல்லிவிடலாம். ஆனால் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நியாயத்தை வலியுறுத்தும்போது அவற்றில் எது தலைசிறந்த நியாயம் என்பதைத் தீர்மானித்துக்கொள்வதில் சர்க்காருக்குச் சற்றுக் காலதாமதம் ஆகும் என்பதை இந்தக் கருத்துக்களை வலியுறுத்தியவர்கள் உணர்வார்கள். அதனால்தான் சென்ற தடவையே நான் இங்கே வலியுறுத்தினேன். இவற்றை சட்டமன்றத்தில் விவாதிப்பது மட்டும் பயன் இல்லை. இந்தப்

பிரச்சினைகளைப் பற்றி நாம் கன்சல்டேடிவ் கமிட்டிகளிலேயே நல்லமுறையில் பரிசீலனை செய்து முடிவு செய்யவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள நீங்கள் எனக்கு அனுமதி அளிப்பீர்கள் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறேன். இந்த நிலவரி ரத்து பிரச்சினையைப் பொறுத்த வரையிலும் எல்லா உறுப்பினர்களும் விவசாயத்திற்கு நாம் ஊக்கம் அளிக்கவேண்டுமானால் நில வரியை ரத்து செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். விவசாயத்திற்கு ஊக்கம் அளிப்பது மட்டும் அல்ல; உணவுப் பொருள் சாகுபடி செய்துகொண்டிருக்கிறவர்களுக்கு விவசாயத் துறையில் போதிய வருமானம் இல்லாததால் வர்த்தகப் பயிர்கள் வைக்கப் போய்விடுகிறார்கள் என்பதைப் பற்றியும் வலியுறுத்தியிருக்கிறார்கள். சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு மட்டும் வரி விலக்கு அளிப்பதா, வரியிலிருந்து எல்லா பெருநிலக்காரர்களுக்கும் சேர்த்து ஒட்டு மொத்தமாக விலக்கு அளிப்பதா என்கிற பிரச்சினையில் மாறுபாடான கருத்து எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. பொதுவாக நிலவரி ரத்து என்கிறபோது நிலவரிக்கு உள்ளாக என்ன என்ன வரிகள் அடங்கிக் கிடக்கின்றன என்பதும் இங்கே விவாதிக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் தரப்பில் இருந்து தரப்பட்டிருக்கிற வெட்டுப்பிரேரணையில் அவர்கள் தெளிவாக பேசிக் லாண்டு டாக்ஸ் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், மற்ற உறுப்பினர்கள் சிறு நிலக்காரர்களுக்கு எல்லாவிதமான வரிகளையும் எடுத்துவிடவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பொதுவாக, இதிலே அதற்கென்று தயாரிக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையை நாங்கள் விரைவாகக் கவனித்து, நடவடிக்கையிலே ஈடுபடவேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். அந்த அறிக்கை இப்பொழுதுதான் சர்க்காருடைய பரிசீலனைக்கு வந்திருக்கிறது என்று முன்னாலே குறிப்பிட்டேன். ஆனால் இதற்கு ஏன் இவ்வளவு காலதாமதம், விரைவிலேயே முடிக்கலாமே என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். நான் கூட ஏன் நாம் இவ்வளவு காலம் தாமதிக்கிறோம் விரைவிலேயே நடவடிக்கை எடுக்கக்கூடாதா என்று யோசித்தேன், ஆனால், அடுத்த கணமே அவர் சொன்ன அடுத்த வார்த்தையை நினைத்துப்பார்த்தேன். அவர் அடுத்ததாகச் சொன்னார், காந்தியார் காலத்திலிருந்து இது சொல்லப்பட்டு வந்திருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி காந்தியார் காலத்திலிருந்து இருந்து வருகிற பிரச்சினையை இரண்டொரு நாட்களிலேயே தீர்த்துவிடவேண்டுமென்று அவர் சொல்வது அவர் என்னுடைய திறமையின் மேல் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்பதைக் காட்டுமென்று நினைக்கிறேன். காந்தியார் காலத்திலிருந்து இருந்துகொண்டு வருகிற இந்தப் பிரச்சினை, காந்தியார் காலத்திலிருந்து சொல்லிக்கொண்டு வரப்படுகின்ற இந்த நிலவரிப் பிரச்சினை கட்டத்திற்கும் கட்டம் அதிகரித்துக் கொண்டு வருகிறதே தவிர, கொஞ்சம்கூடக் குறையவில்லை. பேசிக் லேண்ட் ரெவின்யூ, இன்னும் மற்ற வரிகளையெல்லாம் உயர்த்தியது நிலவரியை ரத்து செய்யவேண்டுமென்ற ஒரு கருத்தைப் பக்கத்திலே வைத்துக்கொண்டுதான் செய்யப்பட்டிருக்கிறது. நிலவரியைப் பொறுத்தவரையில், நிலத்திற்கு வரி வேண்டாம் என்று



நீண்ட காலமாகச் சொல்லிக்கொண்டு வரப்பட்டது. நீர்வரியைப் பொறுத்தவரையில் சொல்லும்பொழுது, வானம் பொழியுது, பூமி விளையுது, எதற்காக வரிக் கட்டவேண்டுமென்று கட்டபொம்மனே சொன்னான் என்ற அளவிற்கு இன்னும் வரிக்குறைப்பிலே தீவிரமாக இருக்கலாம். அதிலே தப்பு ஒன்றுமில்லை. ஆனால் நீர்ப்பாசன வசதிகளுக்காகச் செய்யப்படுகின்ற பல முயற்சிகளையும் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதற்காக பல இடங்களில் நீர் நிலைகளைப் பழுது பார்த்து நல்ல முறையிலே வைத்துக்கொண்டிருப்பதற்கு ஏற்படக்கூடிய செலவினங்களையும் கருத்திலே வைத்துத் தான் நீர்வரிப் பிரச்சினையைப்பற்றி நாம் யோசிக்க முடியும். அறிக்கையைக் கொடுத்துவிட்டார்களே, உடனடியாக நடவடிக்கையெடுக்கக் கூடாதா என்று கூறுகின்றவர்கள் அறிக்கையிலே நிலவரி, அதையொட்டிய எல்லா வரிகளையும் எடுத்துவிடலாம் என்று சொல்லப்பட்டிருக்குமோ என்ற சந்தேகத்திலோ அல்லது அதிகாரிகளே எடுத்துவிடவேண்டுமென்று சொல்லிவிட்டார்களே, இன்னும் ஏன் காலதாமதம் என்ற கருத்திலேதான் அப்படிச் சொல்லியிருப்பார்களென்று நான் நினைக்கிறேன். ஆகவே, அந்த அறிக்கையைப் பற்றி முழுக்க இந்தச் சபையிலே எடுத்துச் சொல்வதற்கு முன்னதாக நான் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற ஒன்றை மட்டும் சொல்லிவிடலாம் என்று விரும்புகிறேன்.

'The Report of the Special Officer does not recommend the abolition of the entire land revenue.'

எனவே, எல்லா நிலவரிகளையும் உடனடியாக ரத்துசெய்ய வேண்டுமென்று அந்த அறிக்கையிலே சொல்லப்படவில்லை. அந்த அறிக்கைக்குள்ளாகவே என்ன செய்யமுடியுமோ அதை எப்படிச் செய்யலாம் என்பதைப்பற்றித்தான் நான் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். நம்முடைய மாநிலத்திலே மொத்த நிலவரி 13.21 கோடி ரூபாய்க்குக் கிடைக்கிறது. இதிலே டிரை அசெஸ்மெண்ட் மூலம் கிடைப்பது 2.32 கோடி ரூபாய்; வாட்டர் ரேட், அதாவது நீர்ப்பாசன வரியின் மூலம் கிடைப்பது 5.36 கோடி ரூபாய்; மிஸ்சலேனியஸ் அதாவது பல்வகையிலே கிடைக்கின்ற வரி 0.83 கோடி ரூபாய்; லோக்கல் செஸ் அன்ட் லோக்கல் சர்சார்ஜ், உள்ளாட்சி மன்றங்கள் மூலம் 4.70 கோடி ரூபாய்; ஆக மொத்தம் 13.21 கோடி ரூபாய் என்ற அளவுக்கு வந்துகொண்டிருக்கிறது. ஆனால், நாங்கள் எந்த முறையைக் கையாளவேண்டுமென்பதிலே கருத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறோம். ஒரேயடியாக 13 கோடி ரூபாய் அளவுக்கு வரிகளை எடுத்துவிட்டு, அதன் மூலம் துண்டுவிழத்தக்க விதத்தில் நடவடிக்கையிலே ஈடுபட்டுவிட்டால் அப்படித் துண்டு விழுகின்ற தொகையை இன்னொரு துறையிலே ஈட்டி அதைச் சரிக்கட்டுவதற்கு வழியிருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அப்படிச் செய்தால், 13 கோடி ரூபாய் வருமானத்தை அடியோடு நிறுத்திவிட்டு, ஒரு துண்டு விழுகின்ற பட்ஜெட்டாகவேதான் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள் என்று காங்கிரஸ் நண்பர் பொன்னப்ப நாடார் அவர்கள் கேட்பார்கள். 13 கோடி ரூபாய் வரையில் இழப்பு வருகிறதே, ஒரு புத்திசாலித்தனமான

சர்க்காராக இருந்தால் அதை எப்படி ஈடுகட்டுவது என்று யோசித்திருக்கக் கூடாதா என்று கேட்பார்கள். ஒரேயடியாக எடுத்துவிட்டு வேறு துறையிலிருந்து அந்த வருமானத்தைப் பெறுவதற்கு வழியிருக்கிறதா என்று ஆராய்கிறோம். அல்லது, ஒரு வருடத்திலே 2 கோடி ரூபாய்; அடுத்த வருடத்திலே 3 கோடி ரூபாய்; அதற்கடுத்த வருடத்திலே 5 கோடி ரூபாய் என்ற அளவிற்குப் படிப்படியாகக் குறைத்துக் கொண்டு வருவோமா என்றும் ஆராய்கிறோம். இந்த இரண்டிலே எது நடைமுறைக்கேற்றது என்று கருதுகிறோமோ அந்த முறையைக் கையாளலாம் என்று நினைக்கிறேன். இதைப்பற்றிய குறிப்பு அடுத்த ஜூன், ஜூலையிலே அறிவிக்க இருக்கின்ற வரவு-செலவுத் திட்டத்திலே இருக்கக்கூடும். ஆகவே, இதிலே அவசரப்பட வேண்டும் என்று நினைக்கிறவர்கள், இதிலே இருக்கின்ற சிக்கல்களை அறிந்திருப்பார்களென்றால் அதிகமாக இதை இந்த அளவுக்கு வலியுறுத்த மாட்டார்கள் என்றே கருதுகிறேன்.

நம்முடைய கம்யூனிஸ்ட் உறுப்பினர் திருமதி ஜானகி அம்மாள் அவர்கள் மிகவும் முக்கியமான ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். நீண்ட காலத்திற்கு முன்னாலே நிலத்திற்குத் தரத்தைப் பிரித்திருக்கிறார்கள்; அதே தரம் இன்னும் இருக்க வேண்டுமா? தரத்தைப் புதிதாக நிர்ணயம் செய்யவேண்டாமா என்பதை நல்ல முறையிலே ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதிலே சர்க்கார் கவனத்தைச் செலுத்தும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து, டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது அவர்கள் முழுக்க முழுக்க திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிலவரியைப் பற்றிய கருத்தை ஆதரிப்பதாகத் தெரிவித்தார்கள். நாங்களும் அவர்களும் ஒத்துப்போவதில் யாருக்கும் ஆச்சரியம் இருக்காது என்று நினைக்கிறேன். ஆனால் ஒரே ஒரு சுதந்திரா கட்சி உறுப்பினர் மட்டும் சற்று மாறுபட்ட கருத்தைச் சொன்னார்கள். நிலவரியை எடுத்துவிட வேண்டுமென்று முடிவுசெய்யும்பொழுது பெரிய நிலச்சுவான்தார்கள், சிறிய நிலச்சுவான்தார்கள் என்று பிரிப்பது எதற்காக, எல்லோருக்கும் சேர்த்துத்தானே எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதிலே சர்க்காருக்கு இருக்கின்ற நெருக்கடி என்னவென்றால், பெரிய நிலச்சுவான்தார் என்பவர் கண்ணுக்குத் தெரிகிறார். ஆனால் அவரிட்டே போய்ப் பார்த்தால் நிலத்திற்கு வேண்டிய, தஸ்தாவேஜுகள் இல்லை. உச்ச வரம்புச் சட்டத்தைக் கொண்டுவந்த நேரத்தில் பொதுவாக பெரிய நிலச்சுவான்தார்கள் போலியாகப் பல்வேறு ஏற்பாடுகளைச் செய்துகொண்டார்கள் என்பது ஊரறிந்த ரகசியம். டெல்லியிலே நிதியமைச்சராக இருந்த திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களே

'The big landowners have made other arrangements and have made the land Ceiling Act ineffective. என்று சொன்னார்கள். பெரிய நிலச்சுவான்தார்கள் இந்தச் சட்டத்தை வலிவற்றதாக்கிவிட்டார்கள் என்று பழைய நிதி மந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். பெரிய நிலச்சுவான்





தார்களைத் தேடிக் கொண்டு போனால் அவர்களைப் பார்க்கிறபொழுது தான் பெரிய நிலச்சுவான்தார் என்று தெரிகிறதே தவிர, இருக்கிற நிலத்தைக் கேட்டால்,—இந்த மன்றத்திலே ஒரு உறுப்பினர் முன்பு ஒன்று சொன்னார்கள், திரு. கருத்திருமன் அவர்களுக்கும் தெரியும், அவர் 30 ஏக்கர் ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றால் எனக்கு இன்னும் 5 ஏக்கர் வேண்டும் என்று கேட்டார். ஆனால் அவர்களுக்கு உண்மையிலேயே இன்னும் ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. இந்த மாதிரி நிலைமைதான் இருக்கிறது. ஆகவே, உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவந்த நேரத்திலேயே கட்சி மாச்சரியம் வைத்துக்கொள்ளாமல் நல்ல முறையில் நிறைவேற்றப்பட்டிருந்தால் இன்று பெரிய நிலச்சுவான்தார்களைத் தேடிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இருக்காது. ஒரு உறுப்பினர் பேசும்பொழுது இந்த நாட்டில் விவசாயிகள் 100-க்கு 80 பேர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். போன வாரத்தில் நான் என்னுடைய நண்பர் ஒருவருடைய மூன்று நிகழ்ச்சிகளில் ஒரே நாளில் கலந்து கொண்டேன். காலையிலே வியாபாரிகள் சங்கத்திலேதான் ஒரு வியாபாரி என்ற முறையிலே குறிப்பிடுவதாகச் சொன்னார். மாலையிலே நிலச்சுவான்தார்கள் கூட்டத்திலே பேசுகின்றபொழுது தான் ஒரு விவசாயி என்ற முறையிலே பேசுவதாகக் கூறினார்கள். மாலையிலே மற்றொரு இடத்திலே கூட்டுறவாளர்கள் கூட்டத்திலே பேசும்பொழுது தான் கூட்டுறவுக்குரிய இடத்தின் மூலம் பேசுகிறேன் என்றார்கள். விவசாயிகள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் எல்லாம் விவசாயிகளா? நண்பர் கருத்திருமன் அவர்கள் ஒரு விவசாயி, ஆட்சேபணையில்லை. ஆனால் உண்மையிலேயே விவசாயம் செய்கிறவர்கள் விவசாயிகளா, அல்லது விவசாயிகளை வேலைக்கு வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் விவசாயிகளா என்பதைப்பற்றித் தீவிரமாக யோசிக்க வேண்டும். விதைப்பாடு காலத்திற்குப் போவது இல்லை, ஆனால் அறுவடைக் காலத்திற்குப் போவார்கள். விதைப்பாடுக்கும் அறுவடைக்கும் போவதில்லை, இப்படிப்பட்டவர்களும் விவசாயிகள்தானா? குறைந்த அளவுக்கு விளைச்சல் பெறுகின்றவர்கள், மற்றவர்கள் எவ்வளவு விளைச்சல் என்று கேட்டால் எவ்வளவு என்று சொல்வதற்குக்கூட தயக்கப்படுகிற அளவுக்குக் குறைவாக விளையக்கூடிய நிலத்தையுடையவர்கள் இருக்கிறார்கள். விவசாயிகள் என்பதற்கு முதலில் விவசாயக் கூலிகள் என்றும், இரண்டாவதாக, சிறு நிலம் வைத்துக்கொண்டு விவசாயம் செய்கிறவர்கள் என்றும், மூன்றாவதாக, விவசாயத்தைத் தங்கள் வருவாயாகப் பயன்படுத்திக் கொள்கிறவர்கள் என்றும் மூன்று தரத்திலே நாம் பார்க்க வேண்டும்.

அம்மையார் அவர்கள் நிலத்திற்குத் தரம் பார்க்க வேண்டுமென்று சொன்னார்கள். 'விவசாயி' என்ற வார்த்தைக்கே தரம் பார்க்க வேண்டியிருக்கிறது. இவற்றையெல்லாம் பார்த்து எந்த வகையிலே நாம் அவர்களுக்குள்ள வருமானத்தைக் கணக்கெடுப்பது என்பதிலே மிகுந்த சிக்கல்கள் இருக்கின்றன. அந்தச் சிக்கல்களை எல்லாம் காட்டி இதை நாம் தள்ளிப் போட விரும்ப

வில்லை. அந்தச் சிக்கல்களை எல்லாம் உணர்ந்து என்னோடு ஒத்துழைத்து கருத்துக்களைத் தர வேண்டுமென்பதற்காகத்தான் நான் இந்த முறைகளைப்பற்றித் தெரிவித்திருக்கிறேன். அப்படியானால் இதைச் செய்யப் போவதில்லையா என்று யாராவது கேட்பார்களேயானால், படிப்படியாக, நிலவரிப் பிரச்சினையில் தீர்வு காணபதற்கு இந்தச் சர்க்கார் முயற்சி எடுத்துக் கொள்ளும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். படிப்படியாக என்று சொல்லும்போது சில பேருக்கு என்னவோ போல் இருக்கும் இவ்வளவுதானா! இவர்கள் படிப்படியாகத்தான் போகப் போகிறார்களா? ஒரேயடியாகப் போக மாட்டார்களா என்ற எண்ணம் தோன்றும். படிப்படியாகச் செல்ல வேண்டுமென்பதைப் போன்ற உறுதியான முறை உலகத்திலே வேறு எதுவும் இல்லை. படிப்படியாகச் செல்வதால்தான் நாம் எடுத்துக் கொள்ளுகின்ற காரியத்திற்கு நல்ல உறுதிப்பாடு ஏற்பட முடியும். படிப்படியான முறையில் 13 கோடி ரூபாயை இழந்து விடுவதாக இருந்தால், படிப்படியாக அந்த இழப்பைச் சரிக்கட்ட வழிவகைகள் என்ன என்று பார்த்துப் பார்த்துச் செய்ய வேண்டும். முன்பு மதுவிலக்கைக் கொண்டு வந்த நேரத்தில் அதனுடைய இழப்பைச் சரிக்கட்ட விற்பனை வரி கிடைத்தது. இந்த மன்றத்திலே முன்னாலே இருந்தவர்கள் அந்த விற்பனை வரியைக் காமதேனு என்று குறிப்பிட்டார்கள். அப்படி ஏதும் காமதேனு இல்லாது போனாலும் ஒரு சூர் பசு அளவுக்காவது கிடைக்கிறதா என்று பார்க்க வேண்டும். பார்த்துப் பார்த்து எவ்வளவு குறைப்பது என்று வழிவகை கண்டுபிடிக்க வேண்டும். இந்தத் தொடர்பிலேதான் ஸ்டேட் டிரேடிங்கைப் பற்றி முன்னாலே இருந்த அமைச்சரவை குறிப்பிட்டதை நான் எடுத்துச் சொன்னேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் நல்ல முறையில் அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். "நீங்கள் ஸ்டேட் டிரேடிங் மூலம் ஏராளமான பணம் வரும் என்று கருதுகிறீர்கள், வருவதாக இருந்தால் இப்படித்தான். 'வராது' எழுதி வைத்துக் கொள்ளுங்கள்" என்றார். ஏற்கனவே எழுதி வைத்திருப்பதைப் பார்க்கும்போது அவர்கள் சொன்னதுதான் தெரிகிறது. இந்த ஸ்டேட் டிரேடிங்கினால் முன்னாலே பணம் வரவில்லை என்ற காரணத்தால் எப்போதுமே வர முடியாது என்று இருக்கக் கூடாது. வருவதற்கு வழி செய்ய முடியுமா என்று நாம் பார்க்க வேண்டும். ஸ்டேட் டிரேடிங் இருக்க வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அதிலே முடிவு கட்டிவிடாது அதைப்பற்றிய சிந்தனையை நீடிக்க விரும்புகிறேன்.

ஸ்டேட் டிரேடிங் மூலமாக மட்டுமல்ல—நண்பர் கருத்திருமன் அவர்களுக்குத் தெரியும்—பாராளுமன்றத்தில் கிராப் இன்ஷூரன்ஸ் பற்றிய ஒரு திட்டம் விவாதத்தில் இருக்கிறது. அந்த கிராப் இன்ஷூரன்ஸ் திட்டத்தின் கீழ் நிலச் சொந்தக்காரர்கள் வருவார்களானால் நிலவரியைப் போல் பத்து மடங்கு பணம் வரும். ஆகவே, எந்தெந்த விதத்தில், நில வரியைக் குறைப்பதால், எடுத்துவிடுவ



தால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை ஈடுகட்ட முடியும் என்பதைப் பற்றி வெகு தீவிரமாக யோசித்து, அப்படி யோசிக்கிற நேரத்தில் கனம் உறுப்பினர்கள் எடுத்துச்சொன்ன எல்லாக் கருத்துக்களுக்கும் உரிய மரியாதை கொடுத்து அவற்றைப் பற்றியெல்லாம் ஆலோசித்து நாங்கள் முடிவு எடுக்க இருக்கிறோம் என்பதற்கு உறுதியளித்து, என்னுடைய இந்த விளக்கத்தோடும், வேண்டுகோளுக்கும் பிறகு வெட்டுப் பிரேரணைகளை வலியுறுத்த வேண்டாமென்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : அடுத்து, முழுமுதல் தீர்மானத்தின் மீதும், வெட்டுத் தீர்மானங்கள் மீதும் வாக்களிப்பு.

முதலில் வெட்டுத் தீர்மானங்கள் மீது மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டும். முதல் வெட்டுத் தீர்மானம் திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களுடைய தீர்மானம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை நான் வற்புறுத்தவில்லை.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : திரு. பொன்னப்ப நாடார் தம்முடைய வெட்டுத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு இந்த அவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களுடைய தீர்மானம், அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : திரு. சுப்பையா அவர்கள் அவருடைய இரண்டாவது வெட்டுப் தீர்மானத்தைத் வற்புறுத்துகிறார்களா?

திரு. ஆ. கு. சுப்பையா : நான் என்னுடைய வெட்டுப் பிரேரணையை வாபஸ் பெற்றுக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : திரு. சுப்பையா தம்முடைய தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுவதற்கு இந்த அவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : அவர்களுடைய தீர்மானம் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : திரு. கோதண்டராமன் அவருடைய வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்துகிறார்களா ?

திரு. வி. கே. கோதண்டராமன் : நான் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்தவில்லை.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : திரு. கோதண்டராமன் தம்முடைய வெட்டுத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ள இந்த அவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : திரு. சுப்பையா அவர்கள் அவரது நான்காவது வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்துகிறீர்களா?

திரு. ஆ. கு. சுப்பையா : நான் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்தவில்லை.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : திரு. சுப்பையா தம்முடைய வெட்டுத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு இந்த அவை அனுமதியளிக்கிறது என்று கருதுகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : திரு. சுப்பையா அவர்கள் அவரது ஐந்தாவது வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்துகிறீர்களா?

திரு. ஆ. கு. சுப்பையா : நான் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்தவில்லை.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : திரு. சுப்பையா தம்முடைய தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு இந்த அவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன்.

திரு. ஆ. கு: சுப்பையா : அவர்களின் வெட்டுத் தீர்மானம் அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : நிலவரித் துறை பற்றிய மானியக் கோரிக்கை தீர்மானம், முழு முதல் தீர்மானம்—

'கோரிக்கை எண் I நிலவரித் துறை, என்ற தலைப்பின்கீழ், ரூ. 43,02,000-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானம் இப்போது இந்த அவையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதா இல்லையா என்பது இந்த அவையின் முன் வைக்கப்பட்டுள்ள கேள்வி. இந்தத் தீர் மானத்திற்கு ஆதரவாக உள்ளவர்கள் 'ஆம்' என்று குரல் கொடுக்க வேண்டும்; எதிர்ப்பவர்கள் 'இல்லை' என்று சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

'ஆம்' என்பவர்கள் அதிகம் என்று கருதுகிறேன். ஆம் என்ப வர்கள் அதிகம்; ஆகவே, இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தாக அறிவிக்கிறேன்.

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.





**கோரிக்கை எண் II—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம்.**

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : இரண்டாவது, மோட்டார் வண்டிச் சட்டத்தின் நிர்வாகம் பற்றிய முழு முதல் தீர்மானம். ரூ. 10,03,600-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டுமென்ற தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர் கள் கொண்டு வருவார்கள்.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை : தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி கீழ்க்கண்ட கோரிக்கையை அவைமுன் வைக்கிறேன்—

"கோரிக்கை எண் II —'மோட்டார் வண்டிச் சட்டங்கள்— நிர்வாகம்' என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,03,600-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்கவேண்டும்."

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : இதற்கு சில வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆறாவது வெட்டுத் தீர்மானத்தை திரு. சுப்பையா அவர்கள் அவைமுன் வைக்க விரும்புகிறீர்களா?

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி : விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய தீர்மானங்கள் என்னென்ன என்று ஏற் கனவே முடிவு செய்யப்பட்டிருக்கிற காரணத்தால் ஒவ் வொன்றையும் தனித்தனியாக எடுத்துக் கொள்ளத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : வெட்டுப் பிரேரணை களைப்பற்றிக் கட்சித்தலைவர்களுடன் கலந்து முடிவு எடுக்கும் போது குறிப்பிட்ட வெட்டுப் பிரேரணைகளை மட்டும் வற்புறுத் துவது என்று முடிவு செய்யப்பட்ட நிலையில் மற்றவை திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகின்றன என்ற அடிப்படையில் எடுத்துக் கொள்ளவேண்டும். அந்த முறையில் மூன்று கோரிக்கைகளை மட்டும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வது என்று முடிவு செய்யப் பட்டிருப்பதால் மற்றக் கோரிக்கைகளின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகின்றன என்ற கருத்தின் அடிப்படையில் முடிவு எடுக்கலாம்.

திரு. பி: ஜி. கருத்திருமன் : நமது மதிப்பிற்குரிய அவை முதல்வர் அவர்கள் சொன்னது மாதிரி ஏற்கனவே தீர்மானம் செய்யப்பட்ட மூன்று மானியக் கோரிக்கைகளின் பேரில் மட்டும் தனித்தனியே கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு பாக்கி இருப்பதைப் பொருத்த வரை ஒரு மணிக்கு கில்லெட்டின் செய்யும்படியான முறையை அனுசரிக்க வேண்டுமென்று கனம் சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : இரண்டாவது மானியக் கோரிக்கை தீர்மானத்தின் மீதுள்ள வெட்டுத் தீர்மானங்கள் 6-ல் இருந்து 14 வரை உள்ள வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன. இந்த அவையின் முன் வைக்கப்பட்டுள்ள முழு முதல் தீர்மானம் :—

"கோரிக்கை எண் II—'மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம்' என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,03,600-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்" என்பது. இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதா இல்லையா என்பது இந்த அவைமுன் வைக்கப்பட்டுள்ள கேள்வி. இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக உள்ளவர்கள் 'ஆம்' என்ற குரல் கொடுக்க வேண்டும் என்றும், எதிர்ப்பவர்கள் 'இல்லை' என்று சொல்லுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

ஆம் என்று கூறியவர்கள் அதிகம் என்று கருதுகிறேன். ஆம் என்றவர்கள் அதிகம்; எனவே, இந்த முழு முதல் தீர்மானம் நிறைவேற்றுப்பட்டுவிட்டதாக அறிவிக்கிறேன். கோரிக்கை நிறைவேற்றப்பட்டு மானியத் தொகை வழங்கப்பட்டது.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : அடுத்து, பொது விற்பனை வரியும் ஏனைய தீர்வைகளும் என்ற மானியக் கோரிக்கை தீர்மானத்தை மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

முற்பகல் 10-30 **மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை** : சட்டமன்றத் தலைவர் அவர்களே, இதில் மூன்று முக்கியமான பிரச்னைகளைப் பற்றி மட்டும், நிலவரி, கல்வி, வேளாண்மை ஆகிய மூன்றைப் பற்றி மட்டுந்தான் இங்கு வெட்டுப் பிரேரணைகள் கொண்டுவர இருப்பதால் முதலிலே அந்த மூன்றையும் முடித்துவிட்டு இறுதியில் மற்ற எல்லாவற்றையும் மொத்தமாக எடுத்துக் கொள்ளலாமா என்று அறிய விரும்புகிறேன். பதின்மூன்றாவதாகவுள்ள கல்விபற்றி சபை முன் சொல்ல அனுமதி வேண்டுகிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : அவை முன் வைக்கப்பட்டுள்ள வரிசையை மாற்றி கோரிக்கை எண் பதின்மூன்றாக வுள்ள கல்வி பற்றிய கோரிக்கையை முதலில் எடுத்துக்கொள்ள அவை அனுமதிக்க வேண்டுமென்று அதுபற்றி ஒரு சிறு தீர்மானத்தை மன்ற முதல்வர் அவர்கள் கொண்டுவரும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

## 6. அரசாங்கத் தீர்மானங்கள்.

### (அ) அவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : "கோரிக்கை எண் 13-வதாக இருக்கிற கல்வி மானியக் கோரிக்கையை மற்ற மானியக் கோரிக்கைகளுக்கு முன்னால் எடுத்துக்கொள்ள வேண்டும்" என்ற தீர்மானத்தை அவையின் முன் வைக்கிறேன்.

தீர்மானம் அவை முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.



**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : 13-வது கோரிக்கை, கல்வி என்ற தீர்மானத்தை முதலில் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று இந்த அவை இப்போது தீர்மானித்திருக்கிறது. அதன்படி, கல்வி பற்றிய கோரிக்கை தீர்மானத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ரூ. 15,83,61,800-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டுமென்ற தீர்மானத்தை அவர்கள் கொண்டு வருவார்கள்.

## 5. 1967-68-ம் ஆண்டிற்கான முன் மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### கோரிக்கை எண் XIII — கல்வி.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை** : கவர்னர் அவர்களின் பரிவுரைப்படி கீழ்க்கண்ட தீர்மானத்தை அவை முன் வைக்கிறேன்:—

"கோரிக்கை எண் XIII—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,83,61,800-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்".

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : இதில், முதல் வெட்டுத் தீர்மானத்தை மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. கே. விநாயகம் அவர்கள் கொண்டுவருவார்கள்.

*SRI K. VINAYAKAM : Mr. Speaker, Sir, I move the following cut motion standing in my name :—

'That the allotment of Rs. 15,83,61,800 under Demand No. XIII—Education, be reduced by Rs. 100'

to discuss about the failure of Gavernment to announce that complete fee concession would be given to all students irrespective of incomes of their parents and irrespective of the communities to which they belong at the P.U.C. level of University education from the academic year 1967-68.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : என் பெயரில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை நான் முன்மொழிகிறேன்.

"பாடசாலைக் கட்டிடங்கள் விஷயமாக விவாதிக்க" கோரிக்கை எண் XIII—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 15,83,61,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : முழு முதல் தீர்மானம், வெட்டுத் தீர்மானங்கள் இவை மீது இப்போது விவாதம் நடைபெறும். முதலில் மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் பேசுவார்கள்.

* SRI K. VINAYAKAM : Mr. Speaker, Sir, I am fully conscious that this is only an Interim Budget and the Government want only a Vote on Account. But an important aspect has got to be emphasised even at this stage because usually the colleges in the State of Madras open in the month of June and the previous Ministry had committed itself to the policy, almost obtained the

consent of the public—that the P.U.C. tuition fees would not be collected from any studens irrespective of the community to which they belong or irrespective of their parential income.

Mr. Speaker, Sir, there were days when education was consiered to be a luxury, much more so the University education. Education makes a person perfect and gives ample oppotunity to realise the best in himself. The Congress Party which was in power for many years, had launched upon a laudable programme and almost achieved monumental and stupendous successs in this field. Then elementary education was denied to the poor people of the State but after assuming Office, the Congress Party brought forward almost a legislation to the effect that there should be a compulsory elementary education scheme. Now, what is the achievement? Not less than 80 or 90 per cent of the school-going children have been brought under the ambit of elementary education. There are not many villages which could not boast of an elementary school. So, it had achieved the first stage of spreading the education. Illiteracy has almost been liquidated in our State as far as the beginning of education is concerned. Later on to attract more children to the school, they have given facilities like mid-day meals, free uniforms and other concessions so that the weaker sections of the Nation could be benefited by the educational programme. Later on, they have opened innumerable high schools in different places, without even sticking to the principle that there should be at least a distance of three miles between the schools. That only shows that the previous Government were so keen that everybody should be brought under education. Education, in these days, Mr. Speaker, is almost of primary necessity as food, clothing, housing, etc., are. Such being the case, it was the endeavour of the previous Government that even persons who could not aford university education should be brought into that field and with that view, the previous Government announced that from the acedemic year, viz., 1967–68, they would throw open the university education free at the Pre-University level for all students. Now, especially, the students belonging to the backward classes, scheduled castes, etc., have already been enjoyin free education at the University level, if not entirely free but at least concessions they have been enjoying as far as fees are concerned But the students who have been denied free education at the University level are forward communities like Brahmins, Vellalas and others. Such people should not be discriminated against as far as university education is concerned. That was the intention of the previous Government and they had made it clear that when they came to power, they would throw open Pre-University education free to all students in this State.

Now, the Hon. Chief Minister has made an announcement that he is not giving any indication of the shape of things to come in the Interim Budget and he has cautioned us to be patient and wait till their laudable scheme is launched upon. But my fear is that it will be too late to announce whether they are going to throw it open for all communities at this level and also they





should not come forward to tell us that it is too late to consider this programme at this stage and this can possibly be considered at the next academic year. Such being the case, I am now requesting the Government to say, whether they are going to accept this proposal. When they come forward with the regular Budget, they can adumbrate this scheme but still they should give an indication with regard to it because the entire State is awaiting the announcement with regard to what is going to be their policy as far as this aspect is concerned.

Much more fear has been created in our minds with regard to the admissions to the technical colleges like Medical College and the Engineering College and various other technical institutions. Now, students belonging to the backward classes, scheduled castes and other weaker sections of the society are being given some concessions as far as admissions are concerned. But I seen to have read somewhere a statement made by our Hon. Chief Minister that admissions to these tehnical institutions would be cinsidered purely on merits only. I may be wrong. The Chief Minister nods his head to give the impression that he has not made that statement. If he has not made that statement, I congratulate him for sticking on to the old principle which is at any rate a good principle to be followed. But on the other hand if he falls a prey to the temptation to regulate admissions on merit, woe unto our nation. A lot of backward class students will be at a very great disadvantage and they will not think of going anywhere near the portals of the college.

As far as the quality of education is concerned, there are no two opinions. With the wide spread of education and the indiscriminate opening of high schools, primry schools and colleges, the quality has considerably gone down. The Education Minister, who is an educationist himself, would take particular care to see whether the quality could be considerably improved. Our State is known for its efficiency as far as education is concerned. That should not suffer at any cost.

* திரு. எம். எஸ். மணி : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. விநயகம் அவர்கள் கொண்டு வந்துள்ள வெட்டுப் பிரேரணை மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ளச் சந்தர்ப்பம் அளித்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

(மதிப்பிற்குரிய துணைப் பேரவைத்தலைவர் தலைமை)

இந்த வெட்டுப் பிரேரணையை கொள்கை அளவில் நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால், இப்போது இருக்கிற நிலைமையையும், முன்னே இருந்த நிலைமையையும் நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். பி.யு.சி. வரை இலவசக் கல்வி கொடுக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் எண்ணமாக இருக்கும் என்று கருதுகிறேன். இப்போது 1,500 ரூபாய்க்கு உட்பட்ட வருமானம் உள்ளவர்களுக்குத்தான் ஸ்காலர்ஷிப் கொடுப்பது என்பது நடை

முறையில் இருந்து வருகிறது. அதை 2,000 ரூபாயாக உயர்த்தலாமா என்பது இந்த அரசாங்கத்தின் எண்ணமாக இருக்கும் என்று நினைக்கிறேன். இதற்கு முன்னால் இருந்த அமைச்சரவை இங்கே இருந்தபோது. அந்தத் தொகையை 2,000 ரூபாய் அளவுக்கு உயர்த்த வேண்டும் என்று நாங்கள் கேட்டபோது அன்றைய தினம் மறுத்துவிட்டார்கள். நடைமுறையில் 2,000 ரூபாய் வரையில் ஸ்காலர்ஷிப் கொடுக்க வேண்டும் என்று வந்தால் இன்னும் பல பேர்கள் சலுகை பெற முடியும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் இப்போது இருக்கும் முறையில் இல்லாதவர்களுக்கு உதவி செய்வதும், இருப்பவர்களிடமிருந்து பணம் வசூலிப்பதும் ஆன நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையில் நாளடைவில் கல்வியில சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே, இந்தக் கல்வியின் நிலைமை பற்றிச் சொல்லும் போது, பகலுணவுத் திட்டம் என்று ஒரு திட்டம் இருக்கிறது. அது நடை முறையில் சரிவரச் செயல்படவில்லை என்று அன்றையதினம் குறிப்பிட்டோம். அதன் காரணமாக ஆசிரியர்கள் வெளியில் வசூல் செய்யும் வேலைக்குப் போய் விடுகிறார்கள், அதனால் கல்வியின் தரம் குறைகிறது என்று குறிப்பிட்டோம். இலவச உடை பற்றியும், சீருடை பற்றியும் நான் குறிப்பிடும்போது யார் யாரோ உடைகள் தைத்துக் கொடுப்பதை முதல் அமைச்சரோ மற்றவர்களோ வழங்கும் நேரத்தில், 4,000 குழந்தைகளுக்கு முதலமைச்சர் இலவச உடை கொடுத்தார் என்று செய்தி வரும். வெளிநாடுகளில் அதை ஆங்கிலத்தில் ட்ரான்ஸ்லேட் செய்து, அந்த நாட்டின் முதலமைச்சர் 4,000 பேர்களுக்கு இலவச உடை கொடுத்திருக்கிறார்கள் என்று செய்தி வரும். பெற்றோர்கள் பணத்தில் குழந்தைகளுக்குத் துணி தைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கல்வியின் தரம் உயர அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, தேர்தலுக்காகப் பயன்படுத்தி வந்த முன்பு இருந்த நிலைமை இருக்கக் கூடாது என்று எண்ணுகிறேன். தற்போது கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு ஸ்டேட்மெண்ட் கூட கொடுத்திருக்கிறார். இந்த வாக்குறுதிகள் எப்போது கொடுக்கப்பட்டன? தேர்தலுக்கு முன்னாலே, காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய தலைவர் சொன்னார், பி.யு.சி. வரை இலவசக் கல்வி கொடுக்கலாம் என்று இருக்கிறேன் என்று. அப்போது இருந்த முதலமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட எண்ணம் இருக்கிறது என்று சொன்னார். இந்த வாக்குறுதி தேர்தலையொட்டிக் கொடுக்கப்பட்டதே தவிர, உள்ளபடியே அது நடைமுறைக்கு வரவேண்டுமென்று எண்ணம் இருந்தால், அதைத் தேர்தலுக்கு முன்னேயே செய்திருக்க முடியும்.

இப்போது இருக்கிற நிலைமை என்ன? அவர்கள் ஆட்சி செய்த போது ஒரு குவிண்டாலுக்கு நெல்லுக்கு 4 ரூபாய் போனஸ் கொடுத்தார்கள். அதைப் போல ஒரு கிலோ அரிசிக்கு ஐந்து காசு குறைவாக அவர்கள் கொடுத்தார்கள். இதெல்லாம் தேர்தலையொட்டி. அதன் காரணமாக சர்க்கார் கஜானா கொஞ்சம் காலியாகி





இருக்கிறது. நாங்கள் சொல்லுவது, நிலச்சுவாந்தார்களுக்கும், மற்ற விவசாயிகளுக்கும், உற்பத்திச் செலவைக் குறைக்க நாம் நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, நான்கு ரூபாயைக் கூட்டிக் கொடுப்பதாலோ அல்லது ஒரு கிலோ அரிசிக்கு ஐந்து பைசா குறைப்பதாலோ பயன் தருமா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். ஆகவே, பொருளாதார நிலைமையை எண்ணிப் பார்க்கும்போது, பொருளாதாரச் சீரழிவு ஏற்பட்டிருக்கிறது. அதைச் சீர்செய்து கொண்டு இந்தச் சர்க்கார் மேலும் நல்ல காரியங்களைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிற காரணத்தினால் தான் நான் இந்த உதாரணத்தைச் சொன்னேன். ஆகவே, இந்தச் சர்க்காருக்கும் அந்த எண்ணம் இருக்கிறது. பி.யு.சி. வரையில் இலவசக் கல்வி கொடுக்க வேண்டுமென்பதிலே, எப்படிச் செய்யலாம் எப்படிச் சரிக் கட்டலாம் என்பதிலே கவனம் செலுத்துவார்கள் என்று சொல்லி இந்த அளவோடு முடித்துக்கொள்கிறேன்.

* DR. H. V. HANDE : Mr. Deputy Speaker, Sir, I wish to offer a few remarks on the cut motion moved by Sri K. Vinayakam. Many Members in this House remember the hardships that the previous Ministry had to face when they made education free up to the secondary stage level. A number of teachers were put to extraordinary hardships. Large amounts of money that the Government were getting had to be foregone, and the Government had to tax further to make good the loss of revenue. I request the Members to take this not as an academic discussion but as a practical proposition. Whenever we give a concession like this, the question that presents itself is : How are we going to make good the loss of revenue? Just as the Chief Minister stated a few minutes ago, with regard to the land revenue the same problem arises even in regard to education. My submission is : why should we not allow the rich man to pay the money that he is willing to pay? At least let there be no bar to payment by the rich man. Let poor people not pay the amount. Why should the rich man who is willing to pay be prevented from paying the amount? Let that money be transferred to the teachers. The pay of the teachers and lecturers should be borne in mind. The teachers and lecturers are the most ill-paid, especially when we take into consideration the extraordinary quality of education that they have to impart and the calibre that is demanded from the lecturers. Lecturers should have secured a high percentage of marks and possess high academic qualifications. They have to infuse enthusiasm, maintain discipline and see that good education is imparted. When secondary education was made free, teachers suffered many hardships. They were not getting enough money, and for one or two years many teachers had a cut in their pay. Therefore when we press the Govenment to make educatino free at the Pre-University level, we must be very carefull. The suggestion is allright as a vote catching device. But as practical administrators we should put our heads together and see whether it is a practical measure at all. I consider this is an impractical measure. Rich men should not be given the concession of free education. Why should they be given the concession

[Dr. H. V. Hande] [1967 மார்ச் 23

when they have got a lot of money? When secondary education was made free, convent schools were started and they collected fees. If only fees had been collected in the high schools from the rich people, probably we would have got a little more revenue from the Education Department and that money could have been transfered to the poor teachers.

That is why, I request this House to consider this aspect and see that the quality of education should not suffer. I am for giving free education to the poor people and I want to emphasize that point. But at the same time, I am not supporting the proposition that free education should be given to the rich people. What is the real problem in education? The real problem is the question of having a large number of colleges. The problem is that in June or July there is a terriffic rush and every Member of the Legislature knows the situation when their houses will be stormed with a large number of persons who will say. 'Please give us a chance'. How can we give a chance as we have nothing to do in this matter. Still the people have got hope that we will be able to arrange some admissions. Therefore, we must remember that the present problem is not a question of giving free education at the University level. The present problem is to have enough number of high schools and colleges. Now, there are not enough number of colleges. Each boy has to apply for half a dozen colleges. He has to pay an application fee of Rs. 5 for six colleges and that comes to Rs. 30 for application forms. There are so many colleges which make a fabulous profit because the supply is much less than the demand. So, we must consider all these aspects and understand that this is not a question of raising slogans. We can put more words into our slogans but whether they are capable of being implemented, is the question. It is all right to raise slogans on the platform and a party can take credit that they have suggested free education at the University level. But they must consider whether it can be implemented in actual practice. Also, why should the advantage of free education go to the rich men? I would rather suggest that a party of that money should be transferred for giving help to the poor persons. With these words of caution, I would request the hon. Member, Sri Vinayakam, to withdraw his cut motion.

* திரு. கே. இரா. ஞானசம்பந்தன் : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கல்வி என்று சொல்லும்பொழுது முதன் முதலில் ஆரம்பப்பள்ளிகளை நமது அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு சில விஷயங்களைச் செய்ய வேண்டும். இன்றைய தினம் ஆரம்பப்பள்ளிகள் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் இருப்பதினால் அந்தப் பள்ளிகள் சரிவர நடைபெறவில்லை என்பது மட்டுமல்ல. அந்தப் பள்ளி ஆசிரியர்கள் அங்கு இருக்கக்கூடிய லோகல் பாலிடிக்ஸ் புகுந்து பலவிதமான இன்னல்களுக்கு ஆளாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. எனவே, என்னைப் பொறுத்தவரையில் அரசுக்கு நான் என்ன சொல்வேன் என்றால், ஆரம்பப் பள்ளிகளை சர்க்காரே எடுத்து நடத்துவது மிக மிக அவசியம். அப்பொழுது



1967 மார்ச் 23] [திரு. கே. இரா. ஞானசம்பந்தன்]

தான் அவை திறமையாக நடைபெறுவது சாத்தியம் என்று நான் கருதுகிறேன். உதாரணமாக சமீபத்தில் தேர்தலின்பொழுது அன்று ஆளும் கட்சியாக அமர்ந்திருந்தவர்கள் தங்கள் செல்வாக்கை உபயோகப்படுத்தி ஆசிரியர்களை பல கஷ்டங்களுக்கு உள்ளாக்கினார்கள். அதைபபற்றி பேசுவதற்குச் சந்தாப்பம் இல்லாத காரணத்தினால், அதற்கு விளக்கம் அதிகம் தேவையில்லை. ஆரம்பப் பள்ளிகளை உடனே அரசு எடுத்து நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஹையர்கிரேடு ஆசிரியர்களைப்பற்றி நிச்சயம் கவனத்தில் எடுத்துக் கொள்வது அவசியம். அவர்கள் சர்வீஸ் முடிவதற்குள் அவர்களுக்கு ஊதிய உயர்வு மிகவும் குறைவு. ஹையர் கிரேடு ஆசிரியர்கள் 2, 3 ஆண்டுகள் பணி செய்துவிட்டால், அதற்குப் பிறகு ஒரு சாதாரண டெஸ்டு வைத்து, அவர்களை செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். அதே மாதிரி செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் இன்றையதினம் பல பேர்கள் ஹையர் கிரேடு ஆசிரியர்கள் போஸ்டில் வேலை செய்கிறார்கள். அதன் காரணமாக அவர்களுக்குப் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே, செகண்டரி கிரேடு ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், எந்த போஸ்டில் அவர்கள் வேலை செய்தாலும், அவர்கள் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகவே கருதப்படவேண்டும் என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிப்பது மிகவும் அவசியம் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றையதினம் எஸ்.ஈ.ஓ.-வாக ரெவின்யூ இலாகாவில் வேலை செய்கிறவர்களை நியமனம் செய்கிறார்கள். அவர்களில் அநேகம் பேர்களுக்கு கல்வியைப் பற்றி அதிகம் தெரியாது என்று நான் கருதுகிறேன். அந்த நிலையில் அவர்கள் பள்ளிகளில் குறுக்கிட்டு கல்வி சம்பந்தம் இல்லாத பொதுவான நிர்வாகக் காரியங்களில் தலையிட்டு தொந்தரவு கொடுக்கிறார்கள். ஆகவே, எஸ்.ஈ.ஓ.-க்களாக நியமனம் செய்யும்பொழுது ஆசிரியர்களுக்கு உயர்வு கொடுத்து அவர்களை நியமனம் செயயும் படியான ஒரு நடைமுறையை இந்த அரசு கையாள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதிய உணவு பற்றி ஏற்கனவே கனம் அங்கத்தினர் திரு. மணி அவர்கள் தெளிவாகப் பேசினார்கள். மதிய உணவு திட்டம் 'ஃபைபல்யூர்'. மத்திய உணவுக்காக சர்க்கார் கொடுப்பது, 6 பைசா, 2 பைசா பஞ்சாயத்து போர்டு கொடுப்பது, 2 பைசா பப்ளிக் கலெக்ஷன் மூலம் ஆக 10 பைசா செலவு செய்து மதிய உணவு கொடுக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு பப்ளிக் கலெக்ஷன் பண்ண முடியவில்லை. சில பஞ்சாயத்து போர்டுகள் 2 பைசா கொடுப்பதில்லை. ஆகவே, ஆசிரியர்கள் 6 பைசாவுக்கு உணவு கொடுத்து, கணக்கில் 10 பைசா என்று எழுதுகிறார்கள். டெப்யூடி இன்ஸ்பெக்டர் கணக்கை கிளியராக வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள், வாஸ்தவமாக மத்திய உணவுத் திட்டத்தை அமல் நடத்துவதில் ஆசிரியர்களுக்கு மிகவும் சிரமம்

[திரு. கே. இரா. ஞானசம்பந்தன்] [1967 மார்ச் 23

ஏற்படுகிறது. அதைப்பற்றி இந்த அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் சர்க்காரே மதிய உணவுக்காக 10 பைசா கொடுத்துவிட்டு, ஆசிரியர்களுக்குத் தொந்தரவு இல்லாமல் செய்தால், அவர்கள் பள்ளி வேலைகளை இன்னும் தெளிவாகச் செய்வதற்கு நலமாக இருக்கும். ஆகவே, அம்மாதிரி 10 பைசா சர்க்காரே கொடுக்க வேண்டும் என்ற ஒரு நிர்வாக உத்தரவை உடனே பிறப்பிப்பதோடு, அது சம்பந்தமாக என்ன செய்வது என்பது பற்றி அரசு நன்றாக யோசித்து, பின்பு தெளிவான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது தான் இந்த அரசுக்கு என்னுடைய ஆலோசனை.

அடுத்தபடியாக, ஹரிஜனங்களுக்கு ஸ்காலர்ஷிப். ஹரிஜன மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வராவிட்டால், மாணவர்கள் பரிட்சை எழுத முடியாது என்று பல இடங்களில் பிரன்சிபால்கள் கூறுவதாகத் தெரிகிறது. அதுபற்றி இந்த அரசு உடனே கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும், பாட புத்தகங்கள் ஜூன் மாதம் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டாலும் ஆகஸ்டு மாதம் வரையில் கிடைப்பதில்லை. அதனால் சிலபஸ்படி கோச்-அப் பண்ணமுடியாத நிலை ஏற்படுகிறது. உடனே பாட புத்தகங்கள் கிடைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பாட புத்தகங்களை அரசே அச்சிட்டு உடனே விநியோகம் செய்யும்படி ஏற்பாடு செய்யவேண்டும், அல்லது குறிப்பிட்ட காலத்திற்குள் பாட புத்தகங்கள் எல்லோருக்கும் கிடைக்கும்படியான நிலை ஏற்படுவதற்கு உடனே உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மானேஜ்மெண்டு பள்ளிக்கூடங்கள். அது நிச்சயம் ஒரு பிசினஸ். எனவே, என்னுடைய தாழ்ந்த அபிப்பிராயம் என்னவென்றால், மானேஜ்மெண்டு பள்ளிகளை சர்க்காரே ஏற்று நடத்த வேண்டும். அதுதான் சரியான முறையில் நிர்வாகம் நடத்துவதற்கும், கல்வி அபிவிருத்தி ஏற்படுவதற்கும் உத்திரவாதமாக இருக்கும் என்று கருதுகிறேன். எனவே, மானேஜ்மெண்டு பள்ளிகளைப் பொறுத்த வரையில், அவற்றை சர்க்காரே எடுத்து நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அட்மிஷன் பற்றிய நிலை சர்க்காரில் இருக்கக் கூடிய மதிப்பிற்குரிய அமைச்சர்களுக்கும், மற்றவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அதுவும் ஒரு மாணவர் மருத்துவக் கல்லூரியில் சேருவது அவ்வளவு சுலபம் அல்ல. மாணவர் திறமையாகப் படித்தாலும், அதிகமாக மார்க்குகள் வாங்கியிருந்தாலும், எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பிற்கு சேரவேண்டுமென்றால், சிபார்சு இல்லாவிட்டால் சேர்க்க முடியாது என்பது நேற்றையதினம் வரையில் காங்கிரஸ் சர்க்கார் ஆட்சியில் இருந்த நிலை. நம்முடைய சர்க்கார் இதில் கவனம் செலுத்தி, இந்த வருஷத்திலாவது நிச்சயம் மாணவர்களுக்கு உற்சாகம் ஊட்டவேண்டும். திறமையான மாணவர்களுக்கு எந்த சிபார்சும் இல்லாமல், நிச்சயம் மருத்துவக் கல்லூரியிலும் சரி, என்ஜினியரிங் கல்லூரியிலும் சரி, அட்மிஷன் கிடைக்க



1967 மார்ச் 23] [திரு. கே. இரா. ஞானசம்பந்தன்]

வேண்டும், நிச்சயமாக திறமையுள்ள மாணவர்களுக்கு இடம் உண்டு என்ற நம்பிக்கை மாணவர்கள் சமுதாயத்திற்கு ஏற்பட வேண்டும். எந்த விதமான சிபார்சும் இல்லாமல் திறமையின் அடிப்படையில் மாணவர்களுக்கு அட்மிஷன் கிடைக்கும் என்ற உத்திரவாதத்தை இந்த அரசு ஏற்படுத்திக் கொடுப்பது மிகவும் அவசியம்.

பாலிடெக்னிக் சம்பந்தப்பட்டவரை பிரைவேட் கன்சர்னும் இருக்கிறது, கவர்ன்மெண்டு நடத்துவதும் இருக்கிறது. கவர்ன்மெண்டு நடத்துகிற பாலிடெக்னிக்களில் நிர்வாகம் எப்படி நடக்கிறது என்பதை கனம் கல்வி அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். என்னுடைய தொகுதியில் நாகப்பட்டணத்தில் சர்க்கார் நடத்தும் பாலிடெக்னிக் ஒன்று இருக்கிறது. அங்கே பிரின்சிபால் மாணவர்களுடைய உறவு சம்பந்தமாக தேர்தல் சமயத்திலே பல தகராறு நடந்திருக்கிறது. எனக்கு அதுபற்றி மனுவும் வந்திருக்கிறது. நான் கல்வி அமைச்சர் அவர்களைத் தனியாக சந்தித்து அதுபற்றி தனியாகப் பேசுகிறேன். சர்க்கார் நடத்துகிற பாலிடெக்னிக்களுடைய நிர்வாகம் சம்பந்தமாக தெளிவாகப் பரிசீலனை செய்து, நிர்வாகத்தைச் சரிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பிரைவேட் பாலிடெக்னிக்களைப் பொறுத்த வரையில், கவர்னிங் அதாரிடியை வேண்டுமானால் அவர்களுக்குக் கொடுத்துவிடலாம். மற்றபடி செலக்ஷன் மற்ற விஷயங்கள் சம்பந்தமாக அவர்களிடம் அதிகாரங்கள் இருப்பதினால் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. அம்மாதிரி பிரைவேட் பாலிடெக்னிக்கள் சம்பந்தப்பட்டவரையிலும் கூட, செலக்ஷன் கமிட்டி அதிகாரத்தை சர்க்காரே எடுத்துக்கொண்டு, சர்க்கார் பிரதிநிதிகளையும் மற்றும் அங்கு இருக்கக்கூடிய பொது ஜனங்களின் பிரதிநிதிகளையும் கொண்ட செலக்ஷன் கமிட்டி அமைப்பது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். கவர்னிங் அதாரிடியை வேண்டுமென்றால் பிரைவேட் கன்சர்னுக்கு விட்டுவிடலாம். அம்மாதிரி நடைமுறையை வகுப்பதற்குச் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இம்மாதிரி விதத்தில் கல்வி சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பது மிக மிக அவசியமும் அவசரமுமான விஷயம் என்பதை மீண்டும் வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன்களிலிருந்து ஆரம்பப் பள்ளிகளை சர்க்காரே எடுத்துக்கொள்ள வேண்டும். ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு டிரான்ஸ்பர் மற்ற விஷயங்களில் பல சிரமங்கள் இருக்கின்றன. எந்த ஆசிரியர் எங்கே வேலை செய்யவேண்டும் என்பது நிச்சயம் கிடையாது. பஞ்சாயத்து யூனியன் தலைவருக்குப் பிடிக்கவில்லை என்றால், ஆசிரியர் வேறு இடத்திற்கு மாற்றப்படுகிறார். மேலும், கிராமப் புறங்களில் ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பது அவசியம். ஒன்றிரண்டு இடங்களில் ஹெட்மாஸ்டர்களுக்கு குவார்டர்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் கிராமங்

களில் வேலை செய்யும் பொழுது, அவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளைச் சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும். பணப் பிரச்னையாக இருந்தபோதிலும், அதற்குச் சர்க்கார் உத்திரவாதம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வது அவசியம். எனவே, இந்த விதத்தில் ஆரம்பத்திலிருந்தே சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்பது என்னுடைய கருத்து என்று கூறிக்கொண்டு, எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த உதவி சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

* திரு. கே. என். இராமச்சந்திரன் : மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, இங்கு கொண்டு வந்திருக்கும் வெட்டுப்பிரேரணைகளுக்கு அவசியம் இல்லை என்பதைக் குறிப்பிட்டு, சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு பொறுப்பு ஏற்றுள்ள நம்முடைய அரசாங்கம் கற்றறிந்த மேதையை முதல்வராகக் கொண்டு அமைந்திருக்கிறது. ஆகவே, படிப்பிற்கு மேலும் மேலும் சலுகைகள் ஓங்குவதற்கும், படித்தவர்களுக்கு உதவிகள் செய்வதற்கும் ஆவன செய்வார்கள் என்று நம்பலாம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். புகுமுக வகுப்பிற்கு கடந்த கால அரசு தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதியை எந்த அளவு நடைமுறையில் நிறைவேற்ற முடியுமோ அந்த அளவிற்கும், இன்னும் மற்ற வழிகளிலும் வசதிகளை நிச்சயம் செய்வார்கள். அதோடு கூட உயர்நிலைப் பள்ளிகளிலும் உள்ள குறைபாடுகளை நிவர்த்திக்க தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். கடந்த கால அரசு செய்த தவறுகளை நேரிடையாக அனுபவித்தவன் என்கிற முறையில் அவற்றைச் சொல்ல முற்படுகிறேன். லாங்வேஜ் டிபார்ட்மெண்டில், மொழித் துறையில் தான் அப்படிப் பட்ட குறைகள் இருக்கின்றன. கல்லூரிப் பேராசிரியர்களிலே கிரேட் 1, கிரேட் 2 என்று மொழித் துறையில் அமைத்திருக்கிறார்கள். கிரேட் 1 பேராசிரியர் எந்தப் பணியைச் செய்கிறார்களோ, ஒருவாரத்திற்கு 13 மணி நேர வேலை செய்கிறார்கள். அதே போலத்தான் கிரேட் 2 ஆசிரியரும் செய்கிறார்கள். வெள்ளைக்கார அரசாங்கம் நடந்த காலத்திலே வெறும் வித்துவான் பாஸ்செய்துவிட்டு ஆசிரியராக வந்து வேலை செய்கிறார்கள். அப்படிப் பட்டவர்கள் சென்னை மாநிலத்தில் உள்ள கல்லூரிகளில் மூன்று நான்குபேர்கள் தான் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் ட்யூடர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளத்தைவிட ரூ. 50 குறைவாகக் கொடுக்கப்படுகிறது. அந்தக் குறையைத் தவிர்க்க வேண்டும், நிவர்த்திக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். ட்யூடர் என்பவர் வாரத்திற்கு 6 மணிநேரம் தான் வேலை செய்கிறார். அவர் திருத்த வேண்டிய நோட்டுகளும் குறைவு. ஆனால், அந்தக் கல்லூரியில் இருக்கும் தமிழ் ஆசிரியருக்கு, தமிழ் ஆட்சிமொழியாக இருக்கும் இந்த நாளில், தமிழர்கள் ஆட்சிசெய்யும் இந்த நாளில், அந்த ட்யூடரையும் விடக் குறைவான சம்பளம் என்பது மிக்க வருந்தத்தக்க நிலை. அந்த நிலைமையைப் போக்க தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நம்முடைய சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிக்





தறைதீர்க்கபட வேண்டிய ஆசிரியர்கள் மாநிலத்திலேயே இரண்டு, மூன்று பேர்கள்தாம் இருப்பார்கள். அவர்களுடைய குறைகளை நிவர்த்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, அரசாங்கக் கல்லூரிகளில் தரம் குறைந்திருப்பதையும், தனியார் நடத்தும் கல்லூரிகளில் அதற்கு மாறுபட்ட நிலை இருப்பதையும் கடந்த கால ஆட்சியில் பார்த்தோம். தனியார் கல்லூரிகளில் சிறப்பிற்குக் காரணம் என்ன? அரசாங்கக் கல்லூரிகளில் தேவையில்லாமல், அடிக்கடி திடீர் திடீர் என்று மாற்றம் செய்வது தான் காரணம். கல்லூரிகளில் பார்த்திருக்கிறோம், மூன்று மாதங்கள் கூடத் தொடர்ந்து ஒரு ஆசிரியர் வகுப்புகளை நடத்த விடுவதில்லை. வகுப்புக்கள் கான்சல் செய்யப் பட்டு மாணவர்கள் ஆசிரியர்கள் இல்லாமல் போவார்கள். அப்படிப்பட்ட நிலை இருந்தால், தரம் எப்படி இருக்கும் என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். இனிமேல் வரும் நாட்களிலாவது, அப்படிப் பட்ட நிலைகள் வராமல், தேவையில்லாமல் ட்ரான்ஸ்பர்கள், அதாவது மாற்றங்கள் செய்வதைக் குறைக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இந்த மொழித்துறையில் உள்ளவர்களை கடந்த கால அரசு அவமானப்படுத்தும் வகையில் காரியங்கள் செய்திருக்கிறார்கள். தமிழ் ஆசிரியர் பொதுக்கல்லூரிக்கு முதல்வராக எல்லாத் தகுதிகளும் இருந்தும், திருச்சி போன்ற நகரங்களில், பெரியார் ஈ. வே. ரா. கல்லூரி போன்றவைகளில் முதலில் பிரின்சிபாலாகப் போட்டு, சிறிது காலம் கழித்து, அவர்களைக் கல்லூரி பேராசிரியராகவே போட்டிருக்கிறார்கள். அந்தக் குறை நிவர்த்திக்கப்பட வேண்டும்.

அடுத்து, கல்லூரிகளில் இருக்கும் எல்லா ஆசிரியர்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அந்த வகையில், அகில இந்தியாவிலும் இருக்கும் ஆசிரியர்களுக்கும் ஒரேவிதமான சம்பளம் கொடுக்கப் படவேண்டும் என்கின்ற வகையில், யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் செய்த ஏற்பாட்டின் அடிப்படையில் எல்லோருக்கும் சம்பள விகிதத்தை அமைக்க நம்முடைய அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

சில இடங்களில், தகுதி இல்லாதவர்களை கல்வித் துறைக்கு அதிகாரிகளாகப் போட்டிருக்கிறார்கள். அவற்றை மதிப்பிற்குரிய கல்வி அமைச்சரவர்களே நேரிடையாகப் பார்த்திருக்கிறார்கள். அந்தக் குறையையும் நிவர்த்திக்க வேண்டும்.

வெட்டுப் பிரேரணைகளுக்கு அவசியம் இல்லை என்று கூறி, அமைச்சர் கொண்டு வந்திருக்கும் பிரேரணையை ஆதரித்து, கருத்துக்கள் சொல்ல அனுமதி கொடுத்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

* திரு. டி. மார்ட்டின் : கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்த வெட்டுப் பிரேரணை மீது பேச சந்தர்ப்பம் கொடுத்த தங்களுக்கு முதற்கண் நன்றி தெரிவிக்கிறேன். தமிழகத்தின் முன்னாள் முதல

throw it open for all commun[illegible] this level and also they

[திரு. டி. மார்ட்டின்] [1967 மார்ச் 23

மைச்சராக யிருந்த தலைவர் காமராஜ் ஆட்சியில் ஆரம்பப் பள்ளி முதல் ஹைஸ்கூல் வரைக்கும் மாணவர்கள் பீஸ் சலுகை அடைந்து படிக்கும் வசதியைச் செய்திருந்தார்கள். அது மட்டும் போதாது என்று கருதி, கல்லூரி வரைக்கும் அந்த மாணவர்கள் பீஸ் இல்லாமல் படிக்க வேண்டும் என்று விரும்பி, அந்தச் சமயத்தில் சர்க்காரில் முதல்வராக இருந்த கனம் பக்தவத்சலம் அவர்களிடம் அதனைச் செய்யுமாறு கூறினார்கள். அவர்களும் அதை ஒத்துக்கொண்டார்கள். அந்த முறையை தலைவர் காமராஜ் அவர்கள் விரும்பிச் சொன்னார்கள், அன்று அரசில் இருந்த முதல்வரும் ஒத்துக் கொண்டார்கள். நடைமுறையில் கொண்டு வருவதற்கு ஒத்துக் கொண்டார்கள். எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர் அவர்களுக்கு ஒன்று தெரிவிக்க விரும்புகிறேன். தலைவர் காமராஜ் அவர்கள் சொல்லியவற்றை ஓரளவு செய்துதான் வந்திருக்கின்றார்கள். அவர்கள் அதிகம் கல்வி பயிலாதவர்கள். ஆனபோதிலும், கல்வியைப் பற்றி அதிகம் அக்கறை கொண்டவர்கள். கல்விக்காக எதுவேண்டுமானாலும் செய்ய வேண்டும் என்று பணியாற்றியிருக்கிறார்கள். தலைவர் காமராஜ் அவர்கள் கல்விக்குச் செய்திருக்கும் நன்மைகளைவிட, நாங்கள் ஆட்சிக்கு வந்தால், கல்வியைப் பற்றி அதிகம் தெரிந்த நாங்கள், அதிகமான கல்விச் சலுகைகளைக் கொடுப்போம் என்று சொன்னார்கள். அதே நேரத்தில் கல்லூரியில் பி.யு.சி. படிப்பிற்குக் கட்டணம் இல்லாமல் வசதியைச் செய்து கொடுக்க உடனடியாக எதையும் செய்ய முன்வரவில்லை. இதற்குச் சிந்தனை செய்ய அதிக நேரம் வேண்டுமா என்பதை எண்ணிப் பார்க்கும் போது, உண்மையிலேயே வருத்தப்படவேண்டியிருக்கிறது. காரணம் என்னவென்றால், நம்முடைய சமுதாயத்தில் இருப்பவர்கள் எல்லோரும் பணக்காரர்கள் இல்லை. ஏழைகள்தாம் அதிகமானவர்கள் என்பது நான் சொல்லி இன்றைக்கு ஆட்சி நடத்துகிறவர்களுக்குத் தெரியவேண்டியதில்லை. அடிக்கடி பொதுக்கூட்டங்களில் சொல்லுகிறார்கள், நாங்கள் மாளிகையை சுற்றிவருவதில்லை, மண் குடிசைகளைத்தான் அதிகமாகச் சுற்றி வருகிறோம் என்று. மண் குடிசைகளில் வாழ்பவர்கள் தாம் இன்றைக்கு ஏராளமானவர்கள் மேல் படிப்பிற்குப் போக முடியாமல் அவதிப்படும் நிலைமையைக் கண்கூடாகக் காண்கிறோம். கல்லூரிப் படிப்பிற்குப் போகமுடியாமல் இருக்கிறார்கள். மாணவர்களில் பலர் தாய் தந்தைகள் மிக்க வசதியுள்ளவர்களைக் கொண்டவர்கள் இல்லை. பலர் அநாதைகளாக இருக்கிறார்கள். அப்படிப் பட்ட அனாதை நிலையில் மேல் படிப்பிற்கு வசதிகள் கிடையாது. அனாதை இல்லங்களிலும் நன்றாகத் திறமையானவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மேல் படிப்புக்குப் போக வசதி கிடையாது. அல்லல் படுகிறார்கள். திறமை இருக்கிறது. இருந்தாலும், கல்லூரிக்குப் போகும் வசதி படைத்திருக்கவில்லை. பீஸ் கட்டமுடியாத நிர்ப்பந்தமான நிலை இருக்கிறது. ஆர்பனேஜில் படிக்கும் பிள்ளைகளுக்கு அதனை நடத்துவோர் அவர்களிடம் உள்ள அளவிற்குப் படிப்பைக் கொடுக்கிறார்கள். மேற்கொண்டு படிக்க வேண்டும் என்றால் மிக்கக் கஷ்டப்படுகிறார்கள். அப்படிப்பட்ட விடுதிகளில் இருக்கும் மாணவர்களுக்கு ஏராளமாக உதவியளிக்க வேண்டும் என்று



967 மார்ச் 23] [திரு. டி. மார்ட்டின்]

கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி ஒரு உத்தரவு போட்டால் கதியற்ற மாணவர்கள் கல்லூரிப் படிப்பு படிக்க முடியும். அப்படிப்பட்ட கல்வி ஸ்தாபனங்களுக்கு மானியமும், அதோடு கடனும் கொடுத்து உதவ வேண்டும். அதோடு சர்க்காரில் இருக்கும் புறம்போக்கு நிலங்களை அப்படிப்பட்ட கல்லூரிகளுக்குக் கொடுத்தால், அந்த நிலங்களை அவர்கள் நல்ல முறையில் பயன் படுத்தி, நல்ல வருமானம் வரக்கூடியதாக மாற்றிக் கொள்வார்கள். அப்படிப்பட்ட கல்லூரிகளுக்கு அரசாங்கம் உதவியளித்தால், கட்டணம் இல்லாமல் செய்தால் அந்த மாணவர்களாவது கட்டணம் இல்லாமல் படிக்க உதவியாக இருக்கும். இந்தக் கல்லூரிப் படிப்பிற்கு பீஸ் இல்லாமல் இருக்கும் நிலை கண்டிப்பாக வரும் என்று பொது மக்கள் எல்லோரும் எதிர் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள் ஆகவே, இன்றைக்கு ஆட்சி நடத்துகிறவர்கள், அரசில் உள்ளவர்கள் இந்தச் சலுகையைத் தரவில்லை என்றால் பொதுமக்கள் மிக்க ஏமாற்றம் அடைவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கல்லூரிகளைப் பற்றிக் குறிப்பிடும் போது,

"There are Principals without vision, libraries without books laboratories without equipments, students without discipline".

என்று முன்பு ஒருவர் குறிப்பிட்டார். அதுபோன்று, இன்று அநேக கல்லூரிகளில், லைப்ரரிகளில் தகுந்த புத்தகங்கள் இல்லை, லாபரட்டரிகளில் தகுந்த கருவிகள் இல்லை, ப்ரின்சிபால்களாக இருக்கக்கூடியவர்களுக்கு மாணவர்களை எந்த விதமாக நடத்திச் செல்ல வேண்டும் என்ற நிலைமை தெரியாமலிருக்கிறது. மாணவர்கள் தங்களுடைய கடமையையும் ஒழுக்கத்தையும் மறந்து சிற்சில சமயங்களில் வெளிவந்துவிடுகிறார்கள். இவற்றிலெல்லாம் கவனம் செலுத்தி, கல்வியில் ஒரு அடிப்படையான சீர்திருத்தம் தேவை என்பதை இந்தச் சபையில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கல்வியில் சீர்திருத்தம் தேவை என்று சொல்லுகிற போது, கல்வி நிபுணர்களைக் கொண்ட ஒரு கமிட்டி ஏற்பாடு செய்து, அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம் என்று ஆட்சியாளர்கள் சொல்லலாம். எடுத்ததற்கெல்லாம் கமிட்டி, கமிட்டி என்று நாம் சொல்லிக் கொண்டிருந்தால் உடனடியாக எந்தச் சீர்திருத்தமும் செய்ய முடியாமல் போய்விடும் என்று தெரிவித்துக்கொண்டு, கற்றறிந்த ஒரு முதல்வர் இன்று ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற நிலையில், அவர்கள் எதற்கும் உடனடியாக ஒரு தீர்மானத்தையும் ஒரு முடிவையும் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இறுதியாக, கல்வியைப் பொறுத்த மட்டில், புகு முக வகுப்பில் இலவசக் கல்வி அளிக்கும் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொண்டு, இந்த வெட்டுப் பிரேரணையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த கனம் துணைச் சபாநாயகர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, உரையை முடிக்கின்றேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது எனது சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

throw it open for all commun[illegible] this level and also they

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1967 மார்ச் 23

பொதுவாகக் கல்வியிலே தரம் குறைந்திருக்கிறது என்று எங்கும் பேசப்படுகிறது. இந்தத் தரக் குறைவு எப்படி ஏற்படுகிறது என்பதை நாம் கவனித்தால், ஆரம்பப்பள்ளியிலிருந்துதான் இது தொடங்குகிறது என்று நாம் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆரம்பப் பள்ளி நிலையிலே ஆசிரியர்களுக்கு இருக்கின்ற குறைகள் நிவர்த்திக்கப்பட வேண்டும். அவர்களுக்குத் தங்களுடைய குடும்பங்களைப் பற்றியோ, வேறு விஷயங்களைப் பற்றியோ உள்ள தொல்லைகளைச் சிந்திப்பதற்கான நிலை இல்லாமல், அவர்களுக்கு எல்லா விதச் சௌகரியங்களும் இருக்குமானால், பள்ளிகளிலே இளம் மாணவர்களுக்குப் பாடங்களை நல்ல முறையில் சொல்லிக் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே, ஆரம்ப ஆசிரியர்களுடைய குறைகள் நீக்கப்பட வேண்டும். அவர்களுடைய ஊதியம் அதிகரிக்கப்பட வேண்டும். அது மட்டுமல்லாமல், கிராமங்களில் இருக்கின்ற ஆசிரியர்கள் வீட்டு வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படும் நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும்போது, மிகவும் உள்நிலையில் இருக்கும் கிராமங்களில் ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கான காரியங்களைத் துரிதமாக அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆசிரியர்-மாணவர்கள் விகிதாசாரம் மிக அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த விகிதாசாரம் குறைக்கப்பட வேண்டும். ஒரு ஆசிரியருக்கு 25 மாணவர்களுக்கு மேல் இருக்கக் கூடாது என்ற முறையிலே விதிகளை மாற்றியமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மதிய உணவுத் திட்டத்தைப்பற்றிச் சபையில் எல்லோரும் குறிப்பிட்டார்கள். மதிய உணவு அளிப்பது மிக முக்கியமான காரியம். ஆனால், மதிய உணவு அளிக்கும் விஷயத்தில் ஆசிரியர்கள் அதிக நேரம் செலவிட வேண்டியிருக்கிறது. ஆகவே, மதிய உணவு அளிக்கும் திட்டத்திற்கு ஆகும் செலவுத் தொகை பூராவையும் சர்க்காரே மேற்கொள்ள வேண்டும். அல்லது, கிராமத்தில் புறம்போக்கு நிலங்கள் இருக்குமானால், அவற்றைப் பள்ளிகூடத்திற்கு மதிய உணவுத் திட்டத்திற்காக 'அஸைன்மெண்ட்' செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்னும் ஒரு படி மேலும் செல்லலாம். கிராமத்திலுள்ள பெரு நிலச் சுவாந்தார்களிடத்திலே தானமாகக் கூடக் கேட்டு வாங்கி, இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கலாம்.

உயர்நிலைப் பள்ளிகள் பல இடங்களில் பெருவாரியாக ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன என்றாலும், அவைகளுக்குப் போதுமான கட்டட வசதி இல்லை. லாபரட்டரி வசதிகளும் போதுமான அளவிற்கு இல்லை. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் நியமிப்பதற்கு வேண்டிய ஆசிரியர்கள் கிடைப்பதில்லை. உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் பயிற்சியும் தேவைக்கேற்ற விகிதாசாரத்தில் இல்லை. பயிற்சிக்கான வசதியையும் அதிகப்படுத்த வேண்டும். அத்துடன் உயர்நிலைப் பள்ளிகளில் லாபரட்டரி வசதிகளையும் அதிகப்படுத்த வேண்டும். பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் கிடைப்பதில் குறை இருக்கிறது. ஆகவே, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளையும் நாம் ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. இந்தக்



1967 மார்ச் 23] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

குறைகளையெல்லாம் நாம் கீழ் நிலையில் சரிசெய்யவில்லையென்றால், கல்வியின் தரம் மேலே குறையத்தான் செய்யும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். கல்வியில் தரக் குறைவு இருக்குமானால், அது தேசத்தின் நிலையைப் பாதிக்கும் என்பதில் கொஞ்சங்கூட சந்தேகம் இல்லை.

தமிழைப் போதனா மொழியாகக் கொண்டுவர முயற்சிக்கப்படுகிறது. இதைச் சற்றுவேகமாகச் செய்ய வேண்டும். ஏனென்றால், உயர்நிலைப்பள்ளி நிலையில் தமிழின் மூலம் பாடம் கற்றுக்கொண்ட மாணவர்கள் கல்லூரி நிலையில் ஆங்கிலத்தின் மூலம் உள்ள பாடங்களைப் புரிந்து கொள்ளுவதற்கு மிகவும் கஷ்டப்படக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே கல்லூரி நிலையிலும் தமிழைப் போதனா மொழியாகக் கொண்டுவருவதற்கு இன்னும் அதிக நேரம் எடுத்துக் கொள்ளாமல், விரைவிலேயே கொண்டுவருவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

(மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் தலைமை)

புதிதாகக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்படும்போது எங்கு பார்த்தாலும், கலைக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்படுவதற்குப் பதிலாகத் தொழிற் கல்லூரிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு அரசாங்கம் முன்னுரிமை தரவேண்டும். மேலும் மேலும் தொழிற் கல்வியை மாணவர்களுக்கு அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து அதிலே அதிக கவனம் செலுத்த வேண்டும். மேலும் மேலும் கலைக் கல்லூரிகளையே ஆரம்பிப்பதனால், எழுத்தர் வேலைக்குரியவர்களையே தயார் செய்வதைவிட, தொழிற் கல்விப் பயிற்சி அளிப்பதன் மூலமாக பயிற்சி பெற்ற மாணவர்கள் தாங்களாகவே சிறு சிறு தொழில்களை ஆரம்பித்து, வாழ்க்கை வசதியைப் பெருக்கிக் கொள்ளுவார்கள். ஆகவே, தொழிற் பயிற்சிக் கல்லூரிகளை அதிகம் ஏற்படுத்தி, கலைக் கல்லூரிகள் ஏற்படுத்துவதைக் குறைத்துக்கொள்ளலாம். இந்த வகையில் சர்க்கார் சிந்தித்து ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

படிக்க வேண்டும் என்ற எண்ணம் மக்களிடத்திலே பரவலாக ஏற்பட்டிருக்கிற காரணத்தால், ஆண்டுக்காண்டு மாணவர்கள் தொகையும் அதிகரித்துக் கொண்டு வருகிறது. மாணவர்கள் தொகை அதிகரிக்கும்போது, பிற்பட்ட நிலையில் இருக்கும் மாணவர்களுடைய தொகையும் அந்த விகிதாசாரத்தில் வேகமாகப் பெருகிக் கொண்டு வருகிறது. ஆனால், பிற்பட்ட மாணவர்களுக்கும் அரிசன மாணவர்களுக்கும் கல்லூரிப் படிப்புக்காக ஒதுக்கப்படும் உதவித் தொகை ஏற்கனவே இருந்த நிலையிலேயே இருந்து கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில் தொகை குறைந்திருக்கிறது. அந்தக் குறைவு ஏற்படாவண்ணம் ஆண்டுதோறும் மாணவர்களின் எண்ணிக்கை உயர்வுக்கேற்ற அளவிற்கு, உதவித் தொகையும் மானியத் தொகையும் அதிகமாக ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

that it will be too late to announce whether they are going to
throw it open for all communities at this level and also they

பட்டுக்கோட்டைப் பகுதியில் மகளிர் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று அப் பகுதி மக்கள் விரும்புகிறார்கள். அது மட்டுமல்லாமல், தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றையும் அங்கு ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது என்று நினைக்கிறேன். தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றை அங்கு ஏற்படுத்துவதோடு, பாலிடெக்னிக் ஒன்றையும் அங்கு ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். **வணக்கம்.**

*மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்* : கல்வி பற்றிய இந்த மானியக் கோரிக்கையின் மீது மாண்பு மிகு முதல் அமைச்சர் அவர்கள் இப்பொழுது இறுதி உரையாற்றுவார்கள்.

*மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை* : தலைவர் அவர்களே, கல்விக்கான மானியக் கோரிக்கையின் பேரில் இங்கே கனம் உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொன்ன கருத்துக்களைப் பார்க்கும் போது, இதிலே வெட்டுப் பிரேரணை என்ற பெயராலே சொல்லப் பட்டிருந்தாலும், இருப்பதைவிட அதிகமான அளவிற்குப் பணம் செலவழிக்க வேண்டும் என்ற கருத்தோடுதான் அந்த வெட்டுப் பிரேரணை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் மிக முக்கியமாக இதிலே குறிப்பிட்டது, "பி.யு.சி. வகுப்பிற்கு நீங்கள் உடனடியாக இலவசம் ஆக்குவதற்கு என்ன வழி செய்யப் போகிறீர்கள்? முன்னாலே இருந்த துரைத்தனம் அந்த வாக்களித்திருக்கிறதே?" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அதற்குப் பதில் சொல்லுகிற போது, அந்த பதிலைக் கொண்டு, பி.யு.சி. வகுப்புக்கு இலவசமாக இருக்கப் போவதில்லை என்ற முடிவிற்கு வர வேண்டாம்; அது தனிப் பிரச்சினை. ஆனால், முன்னாலே இருந்த சர்க்கார் அப்படி ஏதாகிலும் வாக்களித்திருக்கிறதா, சர்க்கார் துறையிலே, என்று பரிசீலனை செய்து பார்த்ததில், அந்த விதமாக எந்த விதமான உத்தரவும் இல்லை. வெளியிலே அந்தக் கட்சியைச் சார்ந்த தலைவர்கள், "பி.யு.சி. வகுப்புக்கு இலவசம் ஆக்கப் போகிறோம்" என்று பேசியிருப்பது தவிர. 'சர்க்கார்' என்ற துறையிலிருந்து அதற்கான உத்தரவோ, திட்டமோ, ஏற்பாடோ, நிதி ஒதுக்கலோ எதுவும் செய்யப்படவில்லை. இதை நான் சொல்வதாலேயே அவர்கள் அப்பொழுது வாக்களிக்கவில்லை, ஆகையால் இப்பொழுது இதை நான் செய்யப் போவதில்லை என்று அவசர முடிவிற்கு வரவேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். கனம் காமராஜர் அவர்கள் கல்வி விஷயத்திலே காட்டிவந்த ஆர்வத்தை அவர்கள் பாராட்டினார்கள். அதற்காகக் கனம் காமராஜரைப் பாராட்டுவதில் நான் எந்த அளவிற்கும் காங்கிரஸ் உறுப்பினருக்குப் பின்வாங்கியவன் அல்ல. அவர்கள் கல்வித் துறையில் ஆர்வத்தை காட்டி நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொன்ன நேரத்தில் காங்கிரஸ்காரர்களைவிட நான் அதிகம் பாராட்டியிருக்கிறேன். ஆனால் தேர்தல் கூட்டங்களிலே, "நீங்கள் அதிகமாகச் செய்வதாகச் சொன்னீர்களே?" என்று குறிப்பிட்டார்கள். தேர்தல் பேச்சுக்களை அவர்கள் இங்கே குறிப்பிட்ட காரணத்தினால் சொல்ல வேண்டியிருக்கிறது. இருக்கிற பள்ளிக்





கூடங்களை எல்லாம் நாங்கள் மூடிவிடுவோம் என்பதாக காங்கிரஸ் மேடையில் பேசப்பட்ட காரணத்தினால், 'நாங்கள் பதவிக்கு வந்தால் கல்வித் துறைக்கு அதிகமாகச் செலவழிப்போம். கல்வித் துறையை நல்ல முறையில வளர்ப்போம்' என்பதாகச் சொன்னேன். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அந்தப் பிரசாரத்தின் ஒரு பகுதியைச் சொல்லி இன்னொரு பகுதியை விட்டுவிட்டார்கள். ஒரு கதையில் 'ஒருவன் இடறி விழுந்தான்' என்கிற ஒரு வாக்கியம் இருக்கலாம். அந்த வாக்கியத்தை முன்னால் உள்ளவற்றோடு சேர்த்துப் பார்த்தால்தான் 'பிறவிக் குருடன் துணை இல்லாமல் சென்றான். இடறி விழுந்தான்' என்ற முழுக் கதை தெரியும். 'அவன் இடறி விழுந்தான்' என்கிற ஒரு வாக்கியத்தை மட்டும் வைத்துப் பார்த்தால், 'வேறு வழியில் இடறி விழுந்தானோ?' என்ற சந்தேகம் எழும். அதுபோல, பிரசாரத்தின் ஒரு பகுதியைத்தான் அவர்கள் சொன்னார்கள். அது முழுக் கதை அல்ல. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இருக்கிற பள்ளிக்கூடங்களை மூடி விடுவோம் என்று காங்கிரஸ் மேடையில் குறிப்பிடப்பட்ட காரணத்தினால்தான் காமராஜரை வரவேற்றுவிட்டு, கல்வித்துறையில் இந்த மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிற முன்னேற்றங்களைத் தெரிவித்து, "நாங்கள் பதவிக்கு வந்தால் எதுவும் கெட்டுவிடும் என்று கருதாதீர்கள். எந்த நாகரீக சர்க்கார் பதவிக்கு வந்தாலும் ஆண்டுக்கு ஆண்டு கல்வித்துறையில் ஏற்பட்டு வருகிற வளர்ச்சியைக் கெடுத்துவிட மாட்டார்கள். அதுவும் அத்தகைய சந்தேகத்தை என்னிடத்திலா காட்டுவது?" என்று குறிப்பிட்டேன். அதுவும் அதைப்பற்றிப் பேச்சு வந்ததால் இந்த அவையிலே சொல்கிறேன்.

இன்னொன்று இந்த விவாதத்தில் வந்தது. கல்வியின் தரமும், மாணவர்களின் தரமும் வெகுவாகக் குறைந்துவிட்டது என்று பல உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லிக் குறைபட்டுக் கொண்டார்கள். தரம் குறைந்து வந்தால் உண்மையிலேயே நான் வருத்தப்படுவேன். தரம் குறைந்து வருகிறது; தரம் குறைந்து வருகிறது என்று சொல்லும்போது, நாம் எதைத் 'தரம்' என்று நிர்மாணித்துக்கொண்டிருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்ப்போமானால், என்னைப் பொறுத்தவரையில், நான் மாணவனாக இருந்த போது பொது அறிவைக் கற்றுக்கொள்வதற்கு இருந்த வாய்ப்புகளைவிட, இன்றிருக்கிற மாணவர்களுக்குப் பொது அறிவைக் கற்றுக்கொள்கிற வாய்ப்பு அதிகம். பொது அறிவைப் பொறுத்த வரையில் மாணவர்களின் தரம் உயர்ந்தே இருக்கிறது என்று கருதுகிறேனே ஒழிய, தரம் குறைந்திருப்பதாக நான் கருதவில்லை. ஆங்கிலத்திலே ஒரு வித குறையும் இல்லாமல் எழுதினால் நல்ல தரம் என்று சிலர் சொல்வார்கள். பேசுகின்ற பொழுது தாராளமாக பேசினால் நல்ல தரமென்று சிலர் சொல்வது உண்டு. ஆசிரியர் பாடம் நடத்தும்போது எழுகின்ற சந்தேகங்களைக் குறுக்கே எழுந்து கேள்வி கேட்காமல் இருந்தால், அதுவும் ஒரு தரம் என்று கருதப்பட்டிருக்கிறது. நமது உறுப்பினர்கள் எந்தத் தரத்தை மனதில் வைத்துக் கொண்டு பேசினார்களோ எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்தவரையில், முந்திய நிலைமுறையைச்



that it will be too late to announce whether they are going to
throw it open for all communities at this level and also they

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 மார்ச் 23

சேர்ந்த மாணவர்களைவிட இந்தத் தலைமுறையில் இருக்கிற மாணவர்கள் உலகத்துப் பொது அறிவை யெல்லாம் பெற்றுக் கொண்டு, உரிமையுணர்ச்சியுடனும் கடமையுணர்ச்சியுடனும் எந்தெந்த நல்ல காரியங்களை யெல்லாம் செய்யலாம் என்ற முற்போக்கு உணர்ச்சியுடன் தரமாகவே இருக்கிறார்கள். நீங்கள் எல்லாம் இப்போது எண்ணிக் கொண்டிருப்பது நான் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை மனதில் வைத்துக்கொண்டு பேசுவதாக. ஆனால், சீன ஆக்கிரமிப்பு ஏற்பட்ட நேரத்தில் நமது மாணவர்கள் மிகத் தரமாக நடந்து கொண்டார்கள். பாகிஸ்தான் தரப்பிலிருந்து ஆக்கிரமிப்பு எழுந்த போது அதைவிடத் தரமாக நடந்துகொண்டிருக்கிறார்கள். என்.சி.சி-யில் சேர்ந்தும், ஹோம் கார்டுகளாகவும் பணியாற்றும் நல்ல தரத்தைப் பெற்றிருக்கிறார்கள். எல்லா தரத்தையும் விட்டு விடுங்கள். கல்லூரியில் தமிழில் பேசக் கூடாது என்பதாக எங்கள் காலத்திலிருந்தே—இன்னும் விட்ட குறை தொட்ட குறையாக திரு. விநாயகம் இருக்கிறார்களே அந்தமாதிரி இல்லாமல் இப்போது எந்தக் கல்லூரிக்கு வேண்டுமானாலும் போய்ப் பாருங்கள்—அந்த நிலை மாறி எவ்வளவு தரமான தமிழில் பேசுகிறார்கள். எவ்வளவு தரமான தமிழில் எழுதுகிறார்கள். எவ்வளவு தரமான தமிழ் நூல்களை யெல்லாம் படிக்கிறார்கள். எங்கள் காலத்தில் மாணவர்களுக்குத் தெரியாத சங்க இலக்கியங்கள் எல்லாம் எவ்வளவு ஐயந்திரிபறத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்வீர்கள். அப்படி தரம் உயர்ந்திருக்கிறது. மாணவர்கள் பேரில் நமக்குள்ள ஏதோ கோபத்தில் தரம் குறைந்து விட்டது தரம் குறைந்து விட்டது என்று எண்ணிக் கொண்டிருக்கிறோமே தவிர, அந்தத் தரம் குறைந்திருப்பதாக நான் கருதவில்லை.

அப்படியே தரம் குறைந்திருந்தாலும், மற்றொரு உறுப்பினர் தம் உரையில் சுட்டிக்காட்டினார்கள். "இப்படி ஆசிரியர்களை நீங்கள் அலைக்கழித்துக் கொண்டிருந்தால், அவர்கள் நிம்மதியாக இருந்து மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்க எங்கே முடியும்?" என்று சொன்னார்கள். ஆகையால், எந்தத் தரமும் நிர்வாகத்தில் இருக்கிறது. ஆசிரியர்களின் வாழ்க்கை நல்ல விதத்தில் செப்பனிடப்படுமானால் அவர்களுக்கு ஊதியம் மற்றொரு கனம் உறுப்பினர் சொன்னதைப்போல, ஆங்காங்கே குடியிருக்க வீட்டு வசதிகளும் செய்துவிட்டோமானால் கல்வியின் தரம் இன்று இருப்பதைவிட மிக நல்ல முறையில் வளரும். பொதுவாக, கல்வியின் தரம் நல்லபடியாக இன்று உயர்ந்திருப்பதற்குக் காரணம் சுற்றிச் சூழ்ந்து கொண்டிருக்கிற நிலைமைகள்தான். என்னை எடுத்துக் கொண்டாலும், எனது நண்பர் திரு. கருத்திருமனை எடுத்துக் கொண்டாலும், 'ரேடியோ' என்ற கருவியையோ, 'ரேடியோ' என்ற வார்த்தையையோ எங்களுடைய 25-வது அல்லது 30-வது வயதில் காதில் கூடகேட்டிருக்கமாட்டோம். காரணம் அப்போது இந்தக் கருவிகள் இல்லை. இப்போது கருத்திருமன் அவர்கள் வீட்டிற்குப் போனால், அவரது குழந்தை 'ரேடியோ வாங்கி வந்தாயா?' என்று கேட்கிறது. சென்னைக்கு எப்போது



1967 மார்ச் 23] [திரு. சி. என். அண்ணாதுரை]

டெலிவிஷன் வரும்? என்று கேட்கிறது. 'கம்பியில்லாத் தந்தி என்றால் என்ன? அது எவ்வாறு செயல்படுகிறது?' என்று கேட்கிறது. இந்த அளவுக்கு மாணவர்களிடையே பொது அறிவு வளர்ந்தே இருக்கிறது. மறந்தும் கூட குறைத்து மதிப்பிடக் கூடாது. இப்படிச் சொல்வதனால் கல்வியின் தரத்தை உயர்த்தக் கூடாது என்று நான் சொல்வதாக நினைக்காதீர்கள். இன்று நண்பர்கள் குறிப்பிட்டதைப்போல இன்னும் உயர்த்த வேண்டும் என்பதுதான். ஆகையால், அந்த விஷயத்தில் போதுமான கவனத்தை நாம் செலுத்த வேண்டும். செலுத்துவதற்கு இந்தச் சர்க்கார் உள்ளபடியே முயற்சி எடுத்துக் கொள்ளும்.

நான் கல்வி விஷயத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றால் இன்னும் அதிக அக்கறை காட்டும் என்று சொன்னது பாடத் திட்டங்களை மாற்றியமைப்பதன் மூலம் உலக அறிவையும் பொதுஅறிவையும் அதிகம் கொடுக்கக்கூடிய வகையில் இந்தக் கல்வி மாற்றப்படலாம் என்பதை மனதில் வைத்துத்தான். இப்போது பழைய ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் பழைய முறைப்படியே கற்றுக் கொடுத்து வருகிறோம். பாடங்களைக் கூட பார்க்கலாம் நீங்கள். மகாபாரதக் கதையிலிருந்து, 'கண்ணன் வெண்ணெய் திருடிய கதை' யை ஒருவர் முதுகின் மேல் ஒருவராக நான்கு பேர்கள் நிற்பதை, அவர்கள் மேல் கண்ணனை நிறுத்தி —உரி—உரியின் மேல் வெண்ணெய்த் தாழி—அந்தத் தாழியில் இருக்கிற வெண்ணெயை கண்ணன் எடுத்துத் தின்பதுபோல படத்தைப் போட்டு, அதன் கீழே 'கண்ணன் தின்னும் பண்டம் என்ன? வெண்ணெய்' என்றுதான் காட்டியிருப்பார்கள். புராணம் கூடாது என்பதற்காக நான் பேசுவதாக யாரும் நினைக்க வேண்டாம். மாலை நேரத்திலே மக்களிடத்திலே சொல்வது, இந்தப் பாடம் சின்ன வயதிலே மாணவர்களுக்கு எதைக் கற்றுக் கொடுக்கிறது? பள்ளிக் கூடத்திற்குப் பக்கத்துத் தோட்டத்திலே மாங்காய் இருக்குமானால், அதைப் பறிப்பதற்கு ஏமாளியாகிய பையன்களைக் குனிய வைத்து, அவர்கள்மீது ஏறி நின்று கொண்டும், மாங்காய் பறிப்பதற்குத்தான் நாம் கற்றுக் கொடுக்கிறோம். அப்படிப்பட்ட பாடத் திட்டங்களைத் திருத்தியமைக்கின்ற விஷயத்தில் இது பகுத்தறிவா—சுயமரியாதையா என்று பயப்படாமல் உலக அறிவு என்ற வகையில் கவனம் செலுத்தினால் நல்ல பயன் அதிகமாகக் கிடைக்கும். அந்த வகையில் நாங்கள் பணியாற்ற இருக்கிறோம் என்பதைத் தேர்தல் கூட்டங்களில் எடுத்துச் சொன்னோம்.

பி.யு.சி. வகுப்பைப் பொறுத்தவரையில், இலவசக் கல்வி கொடுக்க வேண்டுமென்ற கருத்தின்மீது டாக்டர் ஹாண்டே குறிப்பிட்டவற்றை மிகவும் பாராட்டி வரவேற்கிறேன். அவருடைய பேச்சைக் கேட்டால், சுதந்திரா கட்சியில் உள்ளவர்கள்மீது இருக்கக்கூடிய தப்பபிப்பிராயம்கூட நீங்கிவிடும். ஒருசமயம் இதைப் போல அவர் அதிகமாக பேசினால், அவரையே வேண்டாமென்று சொல்வார்களோ, அதுவும் தெரியாது. பணக்காரன் ஏன் பணம் கொடுக்கக்கூடாது என்று கேட்டார்கள். நியாயமான கேள்வி

நாம் இலவசக் கல்வி என்று தத்துவ ரீதியாக சொல்கிறபோது, பணம் இல்லையென்பதற்காக ஒரு மாணவன் மேலே படிப்பதற்குரிய வாய்ப்பை இழந்துவிடக் கூடாது, இலவசமாகவாவது கல்வியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். பணம் கொடுத்து படிக்க முடியாத ஏழைமை நிலைமை காரணமாக ஒருவன் கல்லூரிப் படிப்புக்கு வர முடியாதுபோய்விட்டால், அது நாட்டுக்கே நஷ்டம். அப்படிப்பட்ட ஏழை மாணவர்கள் விஷயத்தில் பி.யு.சி. யில் இலவசக் கல்வி தரவேண்டியதாகத்தான் இருக்கும். ஆகவே இந்த அடிப்படையை வைத்து ஏழை-பணக்காரன் என்ற வித்தியாசம் பார்க்க வேண்டாம். மொத்தமாக பி.யு.சி. கல்வியை இலவசமாகச் செய்துவிடலாம் என்று சொன்னார்கள். பாகுபாடே பார்க்காமல் இருப்பது நல்லதுதான். சில விஷயங்களில் பாகுபடுத்தத்தான் வேண்டியிருக்கிறது. நெல்லும் பதரும் ஒன்றாகத்தான் இருக்கும். நெல்லைப் பாகுபடுத்திப் பார்க்கத்தான் வேண்டும். கல்லும் அரிசியும் ஒன்றாகத்தான் இருக்கும். கல்லை அரிசியிலிருந்து விலக்கத்தான் வேண்டும். ஒரு திட்டத்தை மேற்கொள்கிறபோது நல்லதும் கெட்டதும் கலந்தே இருக்கும். கெட்டதை நீக்கத்தான் வேண்டும் என்பதை நிலவரியைப் பற்றிப் பேசுகின்றபோது சில உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். அதை வலியுறுத்துகின்ற வகையில்தான் டாக்டர் ஹாண்டே அவர்கள் நம்மைக் கேட்டார்கள். "பணம் படைத்தவர்கள் பணம் கொடுத்துப் படிக்க முன்வருகிறபோது ஏன் வேண்டாம் என்று கூறுகிறீர்கள்?" என்று கேட்டார்கள். ஆகையால்தான் அந்தக் கருத்தையும் இதற்கான முறையை வகுக்கின்ற நேரத்தில் நாம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இன்னொன்று, பல விஷயங்களைப்பற்றி கனம் உறுப்பினர்கள் வலியுறுத்துகின்றபோது, ஆசிரியர்களுடைய ஊதியத்தை உயர்த்திக் கொடுப்பது, குடியிருப்பதற்கு வேண்டிய வீடுகளைக் கட்டிக் கொடுப்பது, கல்லூரியில் இலவசப்படிப்பு, புதிய கல்லூரிகளைத் திறப்பது, கல்லூரிகளுக்கான கட்டடங்களை எழுப்பித் தருவது, ஆரம்பப் பள்ளியில் மதிய உணவு போடுவது, இலவசமாக உடை, இலவசமாக புத்தகங்கள் வழங்குவது ஆகிய பலவற்றைப் பற்றிச் சொன்னார்கள். நண்பர் மார்ட்டின் அவர்கள் சொன்னார்கள். 'There are libraries without books and laboratories without equipments.' என்று. இப்படிப்பட்டவைகளைத் திருத்துவதற்குத் தேவையான காரியங்களை நாம் செய்ய வேண்டியவர்கள். இவைகளில் ஒன்றையும் மறுக்கவில்லை. எல்லாவற்றையும் மொத்தமாக எடுத்துக்கொண்டு செய்வதா? ஒவ்வொன்றாக எடுத்துச் செய்வதா? எந்த வரிசையில் செய்வது? ஆகிய எல்லாவற்றையும் யோசித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

முற் பகல் 11-30

இதிலே கொஞ்சம் பிரச்சினையிலிருந்து விலகி ஒரு சிறிய கதையைச் சொன்னால் நீங்கள் பொறுத்துக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன். தெனாலிராமன் காலத்தில், மன்னன் பல ஓவியர்களைக் கூப்பிட்டு சிறந்த ஓவியங்களை வரையச் சொன்னாராம். பலர்



ஓவியம் வரைந்தார்கள். ஒரேயொரு ஓவியன் மட்டும் பல மாதங்கள் எடுத்துக்கொண்டு, ஒரு ஓவியத்தை வரைந்து வந்தார். அதைப் பார்த்துக் கொண்டிருந்த மன்னரிடம் தெனாலிராமன் இந்த ஓவியத்தை எழுதுவதற்கா இத்தனை நாட்கள்? இத்தனை நாட்களுக்குள் எத்தனையோ ஓவியங்களை எழுதியிருக்கலாமே என்று குறிப்பிட்டாராம். மன்னர் தெனாலிராமனிடமே ஓவியம் வரையச் சொன்னாராம். மன்னர் குறிப்பிட்டிருந்த நாட்களுக்குள் ஐம்பது ஓவியம் வரைந்து தருவதாக தெனாலிராமன் சொன்னான். குறித்த நாட்களும் கொடுக்கப்பட்டன. தெனாலிராமன் வரைந்த ஓவியங்களைப் பார்க்க மன்னர் வந்தார். ஒரு பெரிய திரையைப் போட்டு அதில் ஒரு கண்ணை மட்டும் போட்டிருந்தான். இன்னொரு திரையில் இன்னொரு கண் போட்டிருந்தான். இன்னொரு பக்கம் இருந்த திரையில் ஒரு காலைப் போட்டு இருந்தான். இப்படி ஒவ்வொரு உறுப்பை ஒவ்வொரு திரையில் எழுதி இருந்தான். முதல் ஓவியத்தைப் பார்த்த மன்னன், தெனாலிராமனைப் பார்த்து, "என்னப்பா" ஒரு கண் இருக்கிறது. இன்னொரு கண் எங்கே?" என்று கேட்டதற்கு, "இன்னொரு கண் அந்தத் திரையில் இருக்கிறது. ஒவ்வொரு திரையிலும் உள்ள உறுப்பை நீங்கள் ஒன்று சேர்த்து ஒரு உருவமாகப் பார்க்கலாம்" என்று சொன்னானாம். அதைப் போல ஒவ்வொரு திட்டத்தையும் தொட்டுத் தொட்டு என்னை விடச் சொல்லுகிறீர்களா? அல்லது எதையாவது ஒன்றை எடுத்து அதைச் செம்மையாகச் செய்யச் சொல்கிறீர்களா? சபை எனக்குக் கட்டளையிட வேண்டும். கல்லூரிகளை ஆரம்பியுங்கள், கட்டிடங்களை கட்டுங்கள். ஆசிரியர்களுக்கு ஊதியத்தை அதிகமாகக் கொடுங்கள். கல்வியை இலவசமாக ஆக்குங்கள் என்று எல்லாவற்றையும் சொல்லி ஒவ்வொன்றையும் கொஞ்சம் கொஞ்சம் தொட்டுவிடுவதனால் நிச்சயம் பயன் இருக்காது. ஆசிரியர்களில் 20 பேர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்துவிட்டு மற்றவர்களுக்கு கவனிப்போம் என்று சொல்ல முடியாது. ஆங்கிலத்தில் சொல்வதுபோல நமது கோரிக்கைகளை ஒழுங்குபடுத்திக்கொண்டு, எதெதற்கு ப்ரியாரிட்டி கொடுத்துச் செய்வது, எதைஎதை எவ்வெப்பொழுது எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை நாம் வரையறுத்துக் கொண்டாக வேண்டும். இதற்கு நீங்கள் ஆலோசனை கூற வேண்டுமென்பதாக நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் கோரிக்கைகளைச் சுலபமாகத் தீர்ப்பதற்கு வழி ஏற்படும். இப்போது நமக்கு இருக்கிற நிலைமையில் பி.யு.சி. கல்வியை இலவசமாக ஆக்குவதனால் நமக்கு அதிகச் செலவு ஒன்றும் ஆகாது. நடைமுறையில் அது நமக்கு தேவை என்றே எடுத்துக் கொள்ளலாம். அப்படி வைத்துக் கொண்டாலும் ஏற்படக் கூடிய செலவு 55 லட்சம்தான் ஆகும், அது ஒரு கோடி ரூபாய்க்கும் குறைவு. 200 கோடி ரூபாய்க்கு மேல் பட்ஜெட் போடுகின்ற நமக்கு இந்த 55 லட்சம் ரூபாய் ஒதுக்குவது கடினமான காரியம் அல்ல. ஆனால் இங்கே என்ன சிக்கல் வரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்போது கிட்டத்தட்ட 1 லட்சம் மாணவர்களுக்கு மேல் எஸ்.எஸ்.எல்.சி.

பரீட்சை எழுதி வருகிறார்கள். இப்படி தேர்ச்சிப் பெறுகிற பெரும்பாலானவர்கள் கல்லூரியில் சேர முன் வருவார்கள். நம்மிடத்தில் இருக்கிற பி.யு.சி வகுப்பிலுள்ள வசதிகளைப் பார்த்தால் 45 ஆயிரம் மாணவர்களுக்குத்தான் இடம் கொடுக்க முடிகிறது. இந்த இடத்தில் ப்ரயாரிடி கொடுக்கிறோம். 45 ஆயிரம் மாணவர்களுக்குக் கல்லூரியில் இலவசமாக படிக்கின்ற வாய்ப்பைக் கொடுத்துவிட்டு, பாக்கி 50 ஆயிரம் மாணவர்களுக்கு இடம் இல்லையென்று சொல்வது நியாயமா? 45 ஆயிரம் பேர்களுக்கு இடம் கொடுத்துவிட்டு, பாக்கியுள்ள 50 ஆயிரம் பேர்களுக்கு இடமில்லையென்று மறுத்து அனுப்புகிற நிலைமை இருந்தாலும் பி.யு.சி யை இலவசப் படிப்பாக ஆக்கத்தான் வேண்டுமென்று நீங்கள் கருதுகிறீர்களா? அது நாட்டுக்குத் தேவையா? சர்க்காருக்குத் தேவையா? நீங்கள் உங்கள் கருத்தை அருள்கூர்ந்து இந்த மன்றத்தில் குறிப்பிடாவிட்டாலும் தனிப்பட்ட முறையில் என்னிடம் வந்து சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். பி.யு.சி. படிப்பை இலவசமாக்குவதன் மூலம் நாம் 55 லட்சம் ரூபாயைச் செலவழிப்பதில் எந்தவிதமான கஷ்டமும் நமக்கு வந்து விடாது. ஒரு லட்சம் மாணவர்களுக்கு மேல் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சையில் தேறி வெளிவருகிறபோது அவர்கள் எல்லோருக்கும் கல்லூரி படிப்பு அளிக்க நாம் போதிய கல்லூரிகளை ஆரம்பித்தாக வேண்டும். புதிய கல்லூரிகளை ஆரம்பிப்பதில் கஷ்டம் இல்லை. ஆனால் அதிலும் ஒரு சிக்கல் இருக்கிறது. அதை இந்த அவையின்முன் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். எங்கள் பகுதியில் கல்லூரியை ஏற்படுத்துங்கள், நாங்கள் ஐந்து லட்சம் ரூபாய் தருகிறோம்; எங்கள் பகுதியில் ஆரம்பியுங்கள் நாங்கள் 3 லட்சம் தருகிறோம் என்று வாக்களித்து, கல்லூரி துவக்கின பிறகு, அவர்களில் பலர் வாக்களித்த பணத்தைக் கொடுக்காமல் இருக்கிறார்கள். எந்தெந்த ஊரில் இவ்வாறு வாக்களித்த பணத்தை வசூல் செய்து தரவில்லையோ, அந்தந்த இடங்களிலிருந்து வந்திருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சியை மறந்து, அந்தப் பணத்தை வசூல் செய்து கொடுப்பதற்கு உதவியாக இருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். மூன்று லட்சம் கொடுக்கிறோம் என்று சொன்னவர்கள் 60 ஆயிரம்தான் கொடுத்திருக்கிறார்கள். 1½ லட்சம் தான் கொடுத்திருக்கிறார்கள். முழுப் பணத்தைச் செலுத்தியவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் நமது நன்றிக்கும் வணக்கத்திற்கும் உரித்தானவர்கள். புதுக் கல்லூரியை ஆரம்பிப்பதில், அந்தப் பெருமக்கள் தருவதாக நம்மிடத்தில் வாக்களித்த தொகையை விரைவாகவும், முழு அளவிலும் வந்து சேருவதற்கு இந்த அவையிலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். புதிய கல்லூரி ஆரம்பிப்பது மட்டுமல்ல. அவற்றிற்குச் சரியான கட்டடங்கள் தேவை. இப்போதிருக்கிற கல்லூரிகள் எந்த நிலையில் இருக்கின்றன என்பதையும் குறிப்பிடுவது நல்லது என்று கருதுகிறேன். ஏனென்றால் மாணவர்களுடைய தரத்தைப்பற்றி நான் பேசுகின்றபொழுது, கல்லூரிக் கட்டிடங்கள் எந்த அளவில் இருக்கின்றன என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டும். இப்போது புதிதாகத் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிற 17 கல்லூரிகளின்





கட்டடங்களில் பொன்னேரி, அரியலூர், திருச்சி பெண்கள் கல்லூரி, மதுரை, ஆகிய இடங்களில் இருக்கிற கல்லூரிக் கட்டடங்களில் நிலையான கட்டடங்கள் இல்லை. (semi permanent nature) கொஞ்சகாலத்திற்கு மட்டுமே தாக்குப் பிடிக்கின்ற நிலையில் உள்ளவை. அடுத்து வட சென்னை, கடலூர், தஞ்சையிலுள்ள பெண்களுக்கான கல்லூரி, பெண்களுக்காக திண்டுகல்லில் இருப்பது ஆகியவை (unsatisfact public buildings) திருப்தியற்ற பொதுக் கட்டிடங்களில் இருக்கின்றன. மற்றும் 8 கல்லூரிகள் (unsuitable private buildings or high schools) இடங்களில் இருக்கின்றன. இதிலே, ஒரு கல்லூரியின் கட்டடத்தைக் கட்டுவதற்காக ஆகும் தொகை 11.40 லட்சம். இவைகளுக்கெல்லாம் கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று சொன்னால் கிட்டத்தட்ட 137 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. இந்த இடத்தில்தான் ப்ரயாரிடி பற்றி உங்களிடம் கேட்க விரும்புகிறேன். பி.யு.சி. கல்வியை இலவசமாக்குவதன் மூலம் 55 லட்சம் போனால் போகிறது என்று விட்டுவிடலாம். அப்படியின்றி அந்தத் தொகை வந்தால் இந்தக் கல்லூரிகளில் கட்டடங்களுக்குப் பயன்படுத்தக் கூடாதா என்பதை யோசித்து, எதை முதலில் செய்வது, எதை பிறகு செய்வது என்பதை எண்ணிப் பார்த்து நீங்கள் சொல்ல வேண்டும். கல்லூரிகளுக்குக் கட்டடங்கள் கட்டிவிட்டால் மட்டும் போதாது. ஓர் உறுப்பினர் சொன்னார், இன்னும் எத்தனையோ பள்ளிக்கூடங்களில் ஹாஸ்டல்கள் இல்லாமல் இருக்கின்றன. எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் ஹாஸ்டல்களை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதாக. மாணவர்களுக்கு என்று ஒரு விடுதியை அமைக்க 85 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. நாம் மாணவர்களுக்கு ஹாஸ்டல்களை ஏற்படுத்திக் கொடுப்பதா, ஹாஸ்டல் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, பி.யு.சி கல்வியை இலவசமாக்குவதன் மூலம் 55 லட்சம் ரூபாயை இழக்கலாமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். ஹாஸ்டல் தான் முக்கியம்; பி.யு.சி. கல்வியை இலவசமாக்குவதை 1969-ல் பார்த்துக்கொள்ளலாம், அல்லது 1970-ல் பார்த்துக் கொள்ளலாம் என்று நீங்கள் கருதினால் அதையும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரி ஆசிரியர்களுக்கு யூனிவர்சிடி கிராண்டு கமிஷன் சிபாரிசுப்படி ஊதியத்தைக் கொடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. அதன் காரணமாக, 15 லட்சம் ரூபாய் நாம் அதிகம் செலவழித்தாக வேண்டும். ஆசிரியர்களுக்கு முதலில் இப்படி சம்பளத்தை உயர்த்தித் தருவதா ? அல்லது அதைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லி முதலில் இலவசப் படிப்பை ஏற்படுத்துவதா ? இந்த இரண்டிலே எதற்குப் பிரயாரிடி கொடுப்பது என்பதை நீங்கள் யோசிக்க வேண்டும். அதிலே சில காங்கிரஸ் உறுப்பினர்கள் 'நாங்கள் என்ன சொல்வது? நீங்கள் என்ன செயலாக்குவது' என்று கூறினால் அவர்களை நான் அரசியல்வாதிகளாக மட்டும் கொள்வேனே தவிர, நாட்டுப் பற்று உள்ளவர்கள் என்று கூற மாட்டேன். அவர்கள் நாங்கள் அரசியல்வாதிகள்தான் என்று சொன்னால் அரசியல் முறையிலேயும் பதில் அளிக்கலாம், அது

எளிதாகவும் இருக்கும். ஆனால் நான் அந்தப் பதிலிலே என் மனதைச் செலுத்த விரும்பவில்லை. நாட்டுப் பற்றுள்ளவர்கள் என்ற முறையில் பிரையாரிடி அளிப்பதற்கு இதிலே நீங்கள் எங்களுக்கு உறுதுணையாக இருக்கவேண்டுமென்று நான் மெத்த விரும்புகிறேன். 55 லட்ச ரூபாய் பி.யு.சி.-யில் இலவசக் கல்வியை ஏற்படுத்துவதன் மூலம் குறைகிறது என்றால் உடனே அதை நான் செய்துவிடுகிறேன் என்றும் சொல்லப்போவதில்லை. அடுத்த வருஷத்திலே கவனிக்கப்போவதில்லை என்றும் சொல்லப்போவதில்லை. கூடுமான அளவில், எந்த அளவுக்குச் செய்யவேண்டுமோ அந்த அளவுக்குச் செய்யவேண்டுமென்று கருதுகிறேன். டாக்டர் ஹாண்டே அவர்களுடைய கருத்து கூடுமான வரையில் என்னுடைய கருத்துக்கு உறுதுணையாக இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

முன்னாலே பேசியவர்கள் தரத்தைப்பற்றியும், திரு. கருத்திருமன் அவர்கள் மெரிட்டைப்பற்றியும் சொன்னார்கள். தகுதியைப் பார்த்துத்தானா நீங்கள் சேர்த்துக்கொள்வீர்கள் என்று கேட்டார்கள். தகுதி என்பதற்குத் தவறான அர்த்தம் புகட்டப்படுகிறது. படிப்புக்குத் தகுதி என்று நான் குறிப்பிடுகின்ற நேரத்தில் எதைக் குறிப்பிடுகிறேன் என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். படிப்புக்குத் தகுதி என்றால் முன்பு குறிப்பிட்ட குலத்தில் பிறந்தால்தான் தகுதி என்று இருந்தது. அதற்குப் பிறகு தகுதி என்று சொன்னால் பண வசதி படைத்தவர்கள்தான் அதற்குத் தகுதிவாய்ந்தவர்கள் என்று இருந்தது. கிராமத்திலேகூட வேடிக்கையாகச் சொல்வார்கள், நீ படித்து என்ன செய்யப் போகிறாய், கலெக்டர் உத்தியோகமா பார்க்கப் போகிறாய்? என்று கேட்பார்கள், அந்த அடிப்படையிலேதான் தகுதி அமைந்திருந்தது. ஆனால் நான் சொல்கின்ற தகுதி, வகுப்பிலே மிக மிக சுறுசுறுப்பான மாணவனாக இருந்தால் எல்லாவற்றிலும் நல்ல தேர்ச்சிபெற்றவராக இருந்தால் அதுதான் தகுதி. அதைத்தான் நான் தகுதி என்கிறேன். நெடுநாளாகத் தகுதி என்று சொல்லிக் கொண்டிருக்கிறவர்கள் ஒருவேளை அதையே தகுதியென்று நினைத்துக் கொள்ளலாம். நான் கூட படிக்கும்பொழுது ஸ்காலர்ஷிப் பெற்றுத்தான் படித்தேன். நான் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன்தான். வீட்டிலே உள்ளவர்கள் என்னுடைய படிப்பிற்குப் பணம் கொடுத்து உதவ முடியாத நிலைதான். நான் எப்படி ஸ்காலர்ஷிப் பெற்றேன் என்றால், நான் ஆனர்ஸ் எடுக்கமாட்டேன். பி.எ -க்கே போகிறேன் என்று சொன்னபொழுது திரு. சின்னத்தம்பியா பிள்ளை அவர்கள் எத்தனையோ ஸ்காலர்ஷிப்கள் இருக்கின்றன, அதிலே நான் ஸ்காலர்ஷிப் கொடுக்கிறேன் என்று என்னை வற்புறுத்திச் சேர்த்தார்கள். ஏழை மக்கள் ஸ்காலர்ஷிப் இல்லாமல் படிக்கமுடியாது என்பதை நான் உணர்கிறேன். அதே நேரத்திலே தகுதியைப்பற்றியும் நான் மனத்திலே வைத்துக்கொள்ளவேண்டுமென்பதையும் சொல்லிக் கொள்கிறேன். இப்பொழுது இருக்கிற சேர்த்துக்கொள்கின்ற முறை எப்படியிருக்கிறதென்றால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 16 சதவிகிதம்; பிற்பட்ட மக்களுக்கு 25 சத விகிதம்; பொதுவாக இருப்பவர்களுக்கு 59 சத விகிதம் என்று இருக்கிறது. இந்த 59





தைச் சேர்ந்தவர்களின்மேல் அதிகம் அக்கறை கொண்டவர்கள்; திரு. விநாயகம் அவர்கள் என்னைப்போலவே பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களின்மேல் அதிகம் அக்கறை கொண்டவர்கள்; ஆகவே, அவருக்கும் எனக்கும் மகிழ்ச்சி தருகின்ற செய்தி என்னவென்றால், 100க்கு 25 பேர்கள் பிற்பட்ட வகுப்பினருக்கு என்று வைக்கப்பட்டு இருந்த அளவை மீறி அதிகமான அளவுக்கு 100-க்கு 47 பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் வருத்தப்படத்தக்க விதத்தில் 100-க்கு 16 பேர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வைத்திருந்தால் அதிலே 100-க்கு 9 பேர்கள் என்ற அளவுக்குத்தான் சேர்ந்திருக்கிறார்கள். சேர்த்துக்கொள்ளப்பட இருப்பது 16, ஆனால் 100-க்கு 9 என்ற அளவுக்குத்தான் சேர்ந்திருக்கிறார்கள். நான் இந்த பி.யு.சி. இலவசக் கல்வியை ஏற்படுத்த வேண்டுமென்பதைப்பற்றி யோசிக்கும்பொழுது, தாழ்த்தப்பட்டவர்களிலே 16 சத விகிதத்திற்கு 9 சத விகிதம் தானே வந்திருக்கிறார்கள், அவர்கள் அதிகமாக வராததற்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிந்து, அவர்களுக்கு இலவசப் படிப்பு கொடுப்பதோடல்லாமல், தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுடைய பிள்ளைகளை கல்லூரிக்கு அனுப்பாததற்குக் காரணமாக என்ன என்ன இக்கட்டுகள் இருக்கின்றன என்பதைப் பார்த்து, அந்த இக்கட்டுகளைப் போக்குகின்ற வண்ணம் அவர்கள் தங்கள் பிள்ளைகளை கல்லூரிகளுக்கு அனுப்பினால் அவர்களுக்கு ஏதாவது போனஸ் கொடுக்கலாமா என்பதைப்பற்றியும் நான் யோசிக்கிறேன். பதினாறு சத விகிதம் என்ற அளவுக்கு அவர்கள் வரவேண்டும். அந்தப் பதினாறைத் தூக்கி தூக்கி 16 போதாது, 26 வேண்டும், பிறகு 26 போதாது என்று இப்படியே தூக்கிக் கொண்டு செல்வதைவிட 16 பேர்களும் நல்லமுறையிலே வருவதற்கான வழிவகைகளைச் செய்தல் நல்லதென்று நினைக்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னபடி பணம் கொடுத்துப் படிக்க வைக்கிறேன் என்று சொல்லக்கூடிய, அல்லது வசதி படைத்திருக்கக் கூடிய கலெக்டர் பிள்ளைகள், மாஜி கவர்னர் பிள்ளைகள், எங்களைப்போன்று பண வசதியில்லாத மந்திரிகளாக இருந்தால் பரவாயில்லை, பணவசதியுடையவர்களாக இருந்தால் அவர்களுடைய பிள்ளைகள் இவர்களிடம் பணம் வாங்காமல் இருப்பது அவர்களை அவமானப்படுத்துவது ஆகும். பி.யு.சி. படிப்பு இலவசம் என்று நாம் அறிவித்தாலும், அவர்கள் தாங்கள் பணவசதி படைத்தவர்கள் என்பதை உலகத்திற்கு அறிவிக்கக் கூடிய வகையிலே நம்முடைய திட்டம் அமையும் என்று நினைக்கிறேன். எதைச் சொல்ல வேண்டுமோ அதைவிட அதிகமாகச் சொல்லிவிட்டேனா என்று நான் பயப்படுகிறேன். நாங்கள் எல்லாத் திட்டங்களையும் ஆராய்ந்து நல்ல காரியங்களைச் செய்வோம் என்று சொல்லி இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு, இது கல்வித் துறை என்பதாலே இதற்கு வெட்டுப் பிரேரணை கொண்டுவந்தார்கள் என்று தப்பாகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கல்விக்காகச் செலவழிக்க வேண்டுமென்று சொல்வதை காங்கிரஸ்காரர்கள் வேண்டாம் என்கிறார்கள் என்று தப்பாகவும் கருதுகின்ற அளவுக்கு வாய்ப்பு அளிக்காமல் நான் முன்மொழிந்துள்ள தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : திரு. கே. விநாயகம் அவர்க கொடுத்த வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்துகிறார்கள என்று கேட்கிறேன்.

* THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir I want the Hon Chief Minister to be particularly categorical on this point, viz whether he is going to throw open the P.U.C. education free all communities? If he wants, he can suggest an amendmen that those who can afford to pay the tuition fees should do so an those who cannot afford it, should not pay it.

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, I assure th hon. Member that the problem will be dealt with, subject to a the aspects of the problem.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்: இப்பொழுது திரு. விநாயக அவர்கள் வெட்டுத் தீர்மனத்தை வற்புறுத்த விரும்புகிறார்கள என்று கேட்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, in view of the moral commitment which the Hon. Chief Minister has made on the floor of this House, I now withdraw my cut motion.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : இந்த வெட்டுத் தீர்மானத்தை அதைக்கொண்டு வந்த உறுப்பினர் வற்புறுத்தவில்லை.

வெட்டுத் தீர்மானம் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : திரு. வி. கே. கோதண்ட ராமன் அவர்கள் கொண்டுவந்த வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்து கிறார்களா என்று கேட்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : நான் வற்புறுத்தவில்லை.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : முப்பத்தி இரண்டாவது வெட்டுத் தீர்மானத்தை கொண்டு வந்த உறுப்பினர் அதை வற்புறுத்தவில்லை.

வெட்டுத் தீர்மானம் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : அவைமுன் எஞ்சியுள்ள முழு முதல் தீர்மானம் " கோரிக்கை எண் XIII—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 15,83,61,800-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத் திற்கு வழங்கவேண்டும். "

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : அடுத்து, நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய கோரிக்கை எண் 16-வது ஆகும். இது வேளாண்மையைச் சேர்ந்ததது. அதை எடுத்துக்கொள்வதற்கு





சட்டசபை விதி 199-ன்படி

'No variation in the Order shall be made except on the request of the Leader of the House with the permission of the House.' . . என்று இருப்பதால் 16-வது கோரிக்கையை முதலில் எடுத்துக்கொள்வதற்கு மன்ற முதல்வர் அவர்கள் தீர்மானம் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

XIII—கல்வி

6. அரசாங்கத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

அ. அவை அலுவல் வரிசையில் மாற்றவும்—தொடர்ச்சி.

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, "கோரிக்கை எண் XVI— வேளாண்மை என்பதை மற்றக் கோரிக்கைகளுக்கு முன்னால் எடுத்துக்கொள்ள வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : இந்த 16-வது கோரிக்கையை முதலிலே எடுத்துக்கொள்ள அவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன்.

தீர்மானம் அவை முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

5. 1967-68-ம் ஆண்டிற்கான முன் மானியக் கோரிக்கைகள் மீது மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் XVI— வேளாண்மை

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : இப்போது வேளாண் மைத் துறைக்காக ரூ. 4,57,36,000-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டுமென்ற தீர்மானத்தைப் பெரு மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி கீழ் கண்ட தீர்மானத்தை அவை முன் வைக்கிறேன்:—

" கோரிக்கை எண் XVI— வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,57,36,000-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்கவேண்டும்.

* THIRU K. RAMAMURTHY : Mr. Speaker, Sir, I move the following cut motion standing in my name :—

'That the allotment of Rs. 4,57,36,000 under Demand No. XVI—Agriculture be reduced by Rs. 100'—

(to discuss about the failure of the Government to provide for augmentation of agricultural production by means of agricultural fertiliser, manure, seeds and agricultural implements).

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : இப்போது முழுமுதல் தீர்மானமும் வெட்டுத் தீர்மானமும் அவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மீது முதலில் உரையாற்று கின்றவர் மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கே. ராமமூர்த்தி.

[1967, மார்ச் 23

*திரு. கே. ராமமூர்த்தி : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்த வெட்டுத் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் நம்முடைய அமைச்சரவை, நம்முடைய அரசாங்கம் விவசாயத் துறைக்கு முக்கியத்துவத்தைக் கொடுத்திருக்கிற நேரத்திலே, தரப்படுகின்ற உதவிகள் எல்லாம் வேளாண்மைத் துறையிலே ஈடுபட்டிருக்கின்ற பெருங்குடி மக்களுக்கு, விவசாயிகளுக்கு நல்ல முறையில் கிடைப்பதற்கு வழி செய்யப்பட்டிருக்கின்றதா என்பதை இந்த அரசினரின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உதாரணமாக, உர விநியோகத்தை எடுத்துக் கொண்டால், அம்மோனியா, யூரியா போன்ற உரங்கள் விவசாயிகளுக்கு தேவையான காலத்தில், தேவையான அளவு கிடைக்கின்றதா என்றால் நிச்சயமாக இல்லை என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. எந்த காலத்திலே உரமிடவேண்டுமோ அந்தக் காலத்திலே விவசாயிகளுக்கு உரம் தரப்படுவதில்லை. இந்த உரத்தைப் பெறுவதற்காக நம்முடைய விவசாயிகள் முதலிலே செல்ல வேண்டிய இடம் தாலுகா அலுவலகங்கள் அல்லது பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்கள்தான். அங்கு சென்று அவர்கள் உரத்திற்கான பர்மிட்டுகளைத் தேடி அலைய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த பர்மிட்டுகளைப் பெறுவதற்காக விவசாயிகள் அதிகாரிகளால் பல முறை அலுவலகங்களுக்கு வரச் செய்து கடைசியில் காலா காலத்தில் பர்மிட்டுகள் கிடைக்க முடியாத நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. அதோடு இந்த பர்மிட்டுக்காக அலுவலகங்களை நாடிச் செல்லுகின்ற விவசாயிகள் கடனுதவியாக உரத்தைப் பெறுவதாக இருந்தால் பர்மிட்டுகள் மிகச் சுலபமாக, சீக்கிரமாகக் கிடைக்கின்றன. ஆனால் அதே நேரத்தில் கடன் வேண்டாம், பணம் கொடுத்து வாங்குகிறேன் என்று சொன்னால் அப்படிச் சொல்லுகின்ற விவசாயிகளுக்குப் பர்மிட்டுகள் கிடைப்பதில்லை. இந்தக் கடன் உதவிகளை விவசாயிகள் பெறுகின்றபோது எவ்வளவு பெரிய சிக்கல்களும், சங்கடங்களும் ஏற்படுகின்றன என்பதையும் பார்க்க வேண்டும். ஆகவே, இந்த அரசு உர விநியோக முறையை சீர்தூக்கிப் பார்த்து, கடனுக்காக வருகின்றவர்களுக்கு மட்டும் பர்மிட் கொடுப்பது என்ற முறையை மாற்றி, எல்லோருக்குமே, யார் யாருக்குத் தேவைப்படுகிறதோ அவர்களுக்கெல்லாம் உரம் கொடுக்கும் வகையில் உர விநியோக முறை மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதே நேரத்தில் இன்னொரு சிக்கல் என்னவென்றால் கண்ட்ரோல் விலைக்கு, அரசாங்கம் நிர்ணயித்துள்ள விலைக்கு கிடைக்க முடியாத நிலையில் ஊரிலே இருக்கின்ற கடைவீதிகளில் அரசாங்கம் நிர்ணயித்திருக்கின்ற விலைக்கு மேல் இரண்டு மடங்கு மூன்று மடங்கு அதிகமான விலைக்கு விற்கப்படுகின்ற நிலையும், அதை விவசாயிகள் வாங்க வேண்டிய நிலையும் இருக்கிறது. அந்த மாதிரி உரங்கள் விற்கப்படுவது பிடிக்கப்படுவதற்கும், அந்த



967, மார்ச் 23] [திரு. கே. ராமமூர்த்தி]

மாதிரி விற்கப்படுவதைத் தவிர்ப்பதற்கும் திட்டங்களைத் தீட்டி செயல் படுத்த வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமங்களில், நகரங்களில் இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களில் உர விநியோகம் நடைபெறுகிறது. மாதா மாதம் அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை ஆங்காங்கு இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இந்த உர விநியோகம் நடைபெறுகிறது. விவசாயிகளுக்கு வேண்டிய நேரத்திற்கு முன்னதாகவே, இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னதாகவே அங்கு உரம் வந்தாலும் அப்போது விவசாயிகள் வாங்கி வைத்துக் கொள்வதில்லை. எப்போது தங்களுக்குத் தேவையோ அப்போதுதான் வாங்க விரும்புகிறார்கள். அந்தக் காரணத்தால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்படுகிற உரங்கள் அந்தச் சங்கங்களின் நிர்வாகிகளால் கள்ளச் சந்தையில் விற்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலை ஏற்படாதவாறு செய்ய தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் தேவைப்படுகின்ற நேரத்தில் உரம் இல்லாத நிலையில் விவசாயிகள் தாலுகா ஆபீசுக்குப் பத்துப் பதினைந்து முறை உரம் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற நினைவுடன் நடந்து நடந்து கடைசியில் உரத்தைக் கள்ள மார்க்கட்டில் வாங்கலாம் என்ற முடிவுக்கு விவசாயிகள் வந்து விடுகிறார்கள். இல்லை என்றால் உரம் இல்லாமலே விவசாயம் செய்ய முற்பட்டு விடுகிறார்கள். இந்தப் பிரச்சினை நல்ல முறையில் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, பொறுக்குவிதை, இம்ப்ருவ்ட் ஸீட்ஸ் பற்றி இரண் நண் பகல்
டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் 12-00
ஏ.டி.டி. 27, ஸி.ஓ. 25 என்று மிகப் பெரிய அளவில், மிக நல்ல அளவில் விளைச்சல் கொடுக்கிற பலன் அளிக்கிற நல்ல விதைகளை மக்களிடம் சர்க்கார் பரப்பி வருகிறது. ஆனால் விநியோக முறை, விளம்பர முறை இவற்றை எடுத்துக் கொண்டால் விவசாயிகளிடம் இவை நல்ல முறையில் எட்டியிருக்கிறதா, கிராமப்புறங்களில் பரப்பப்பட்டிருக்கிறதா என்றால் அதற்கும் நான் இல்லை என்ற பதிலைத் தான் சொல்ல வேண்டிய நிலை இருக்கிறது. இவற்றின் பயன், இவற்றை பயிரிடவேண்டிய முறை இவற்றைப் பற்றி கிராமங்களிலுள்ள விவசாய மக்களுக்கு எடுத்துச் சொல்லப்படவில்லை. ஆங்காங்கே ஒன்றிரண்டு பெரிய நிலச்சுவாந்தார்கள் இந்த விதைகளின் முக்கியத்துவத்தைப் பற்றியும், இதன் அவசியம் பற்றியும் தெரிந்து கொண்டிருக்கலாமே தவிர ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர்கள் என்று வைத்துக் கொண்டிருக்கக் கூடிய சிறிய விவசாயிகளுக்கு இந்த விதைகளின் முக்கியத்துவம் எட்டவில்லை. அப்படி, இந்த பொறுக்குவிதைகள் நல்ல பலன் அளிக்கக் கூடியவை என்று தெரிந்துகொண்டு, விவசாயிகள் இந்த விதைகளை வாங்க முற்பட்டாலும் இந்த விதைகள் எளிதில் அவர்களுக்கு கிடைக்காத முறையில்தான் இன்றையதினம் இதன் விநியோக முறை

அமைந்திருக்கிறது. ஆகவே இந்த முறையை மாற்றியமைத்து, இந்த விதைகளை விவசாயிகள் தேடிக்கொண்டு அலைகிற நிலையை மாற்றியமைத்து விவசாயிகளைத் தேடிக் கொண்டு இந்த பொறுக்கு விதைகள் சென்றடையக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தினால் நிச்சயம் விவசாயம் முன்னேறும், அதனால் உணவுப் பிரச்னையும் தீரக்கூடிய வழிவகை ஏற்படும். அடுத்து, விவசாயக் கருவிகள் பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இன்றைய தினம் நவீன விவசாயக் கருவிகள் பெரும் அளவில் விவசாயத்திற்கு உபயோகப்படாத ஒரு நிலை இருப்பதற்குக் காரணம் நம் நாட்டிலுள்ள விவசாயிகளில் பெரும்பாலோரும் சிறு நிலச் சொந்தக்காரர்கள். சில தினங்களுக்கு முன்பு கூட நம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நம் நாட்டில் சிறுநிலப் பட்டாதாரர்கள் மிகமிக அதிகம் என்று. ஏறக்குறைய 90 லட்சத்திற்கும் அதிகமாகவே அவர்கள் இருக்கிறார்கள் என்று புள்ளிவிவரம் கூட கொடுத்தார்கள். ஒன்றிரண்டு ஏக்கர்கள் வைத்துக்கொண்டிருக்கும் சிறு நிலச் சொந்தக்காரர்கள் இந்த நவீன விவசாயக் கருவிகளை எப்படி எந்த அளவில் பயன்படுத்த முடியும் என்பதைப் பற்றி அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், சிறுநிலச் சொந்தக்காரர்கள் நவீனக் கருவிகளை உபயோகப்படுத்த முடியாது அல்லது உபயோகப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் அந்த விவசாயிகளுக்கு ஏற்படுமானால் அதற்கு வேண்டிய முதலீட்டைச் செய்கிற அளவிற்கு அந்த விவசாயிகளுக்கு அதரவோ அல்லது பணவசதியோ இல்லாத நிலையில் இன்றைய தினம் விவசாயிகள் கஷ்டப்படக் கூடிய நிலை இருக்கிறது. அந்த அளவில் இந்த அரசு, இந்த நவீனக் கருவிகள் நல்ல அளவில் விவசாயிகளுக்கு எட்டுகிற அளவிற்கு தங்களுடைய திட்டங்களை மாற்றியமைக்க வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் இந்த நவீன விவசாயக் கருவிகள் மிகக் குறைந்த விலையிலும், நியாயமான விலையிலும் அங்காங்கு விவசாய மக்களுக்கு கிடைக்கிற அளவிற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நியாயமான விலையில் கூட வாங்குவதற்கு முடியாத விவசாயிகளுக்கு கடனாகவோ அல்லது வாடகைக்கு விடுகிற அளவிலோ ஏற்பாடு செய்யவேண்டும். அப்படி ஆங்காங்குள்ள பஞ்சாயத்துக்களிடம் அவற்றை ஒப்படைத்து வாடகைக்கு விடுகிற ஏற்பாட்டைச் செய்தால் நவீன விவசாயக் கருவிகளின் உதவியைப் பெற்று விவசாயிகள் நல்ல பலனை அடைய முடியும். நவீன விவசாயக் கருவிகள் உதவியாகவோ அல்லது மான்யமாகவோ கிடைக்கக் கூடிய நிலையில் ஒரு கொள்கை வகுத்து அந்தந்த பஞ்சாயத்துகளுக்கு உட்பட்ட ஆயக்கட்டுகள் அல்லது அந்தந்த பஞ்சாயத்துக்களுக்கு உட்பட்ட மொத்த நிலத்தின் விஸ்தீரணத்திற்குத் தக்கபடி பஞ்சாயத்துகளுக்கு நவீன விவசாயக் கருவிகளை வாங்கிக் கொடுக்கிற ஒரு நிலையை ஏற்படுத்தவேண்டும். அடுத்து, என் தொகுதி பற்றி ஒரு வார்த்தைக் கூற விரும்புகிறேன். என் திண்டிவனம் தொகுதியிலும், மற்ற பக்கத்து தொகுதிகளிலும் சென்ற நவம்பர் வீசிய கடும் புயல் காரணமாக ஆங்காங்குள்ள பல



ஏரிகள் உடைப்பு எடுத்துக் கொண்டு சென்று இன்று அவை வெறும் வெட்ட வெளியாகவே காணப்படுகின்றன. ஏரிகள் ஏரிகளாக இல்லை, நிலம் நிலமாகயில்லை. ஏரிகள் உடைப்பு எடுத்து இன்று வெட்ட வெளியாக காட்சி அளிக்கின்றன. அங்கு தண்ணீர் நிற்க இன்னும் வழிவகை ஏற்படவில்லை. ஏரிகளுக்கு கீழ் உள்ள பாய்ச்சலுக்காக இருக்கிற நன்செய் நிலங்கள் இன்று மண் மேடிட்டு கல்லால் மூடப்பட்டு வரண்ட பூமியாக இருக்கின்றன. இவற்றை மறுபடியும் விவசாயத்திற்கு கொண்டு வருவதற்கான துரிதமான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன என்றாலும் அந்த ஏற்பாடுகள் இன்னும் மிகத் துரிதமாக நடக்கிற அளவிற்கு தக்க கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்குள்ள மிகப் பெரிய ஏரிகளான ஆவணியூர் ஏரி, நொளம்பூர் ஏரி, கீழ்பாளயம் ஏரி, சிங்கனூர் ஏரி இவற்றிற்கு இன்று கரைகளே காணோம். அவை மண்மேடிட்டு இருக்கின்றன. அவற்றை செப்பனிடுவதற்காக இருக்கும் அங்குள்ள அதிகாரிகள் அந்த மராமத்து வேலைகளை எர்த் வொர்க் என்று கூறி மனிதக் கூலி வைத்து மராமதது செய்ய திட்டமிட்டிருக்கிறார்கள். அத்துறையில் ஆட்கள் கிடைக்க கடினம் என்பதோடு அத்திட்டத்தை மனிதக் கூலிகள் வைத்துக்கொண்டு நிறைவேற்றமுடியாது என்ற நிலையை அதிகாரிகள் உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே மெஷினரிகளைக் கொண்டு வந்து, புல்டோஸர்கள், ட்ராக்டர்கள் போன்ற கருவிகளை வைத்துக் கொண்டு அந்த ஏரிகளின் கரைகளை செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் அந்த ஏரிகளின் கீழுள்ள நூற்றுக் கணக்கான ஏக்கர் நன்செய் நிலங்களை நல்லமுறையில் விளைச்சலுக்கும் கொண்டு வர முடியும் என்பதை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இதை நம் அமைச்சரவை மனதில்கொண்டு உடனடியாக தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்துறையில் அரசின் கவனத்தை ஈர்க்க என் வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன். வணக்கம்.

திரு. வி. கே. கோதண்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, ஃபுட் அன்ட் அக்ரிகல்ச்சர், உணவு, விவசாய மான்யம் மிக முக்கியமானதொரு மானியமாகும். ஜீவநாடி போன்ற இந்த உணவு, விவசாயம் விஷயத்தில் காங்கிரஸ் சர்க்கார் சரியான கவனம் செலுத்தாத காரணத்தினால்தான் அந்த சர்க்கார் மீது மிகப் பெரிய அளவிற்கு அதிருப்தி ஏற்படக் கூடிய ஒரு நிலை ஏற்பட்டது என்பதை கவனத்தில் வைத்து இந்த உணவு விவசாயம் எந்த அளவிற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணர்ந்து இதில் தீவிரமாகவும் உடனடியாகவும் கவனம் செலுத்தவேண்டும் என்பதுதான் என் கருத்தாகும். ஆகவே விவசாயத்தை நல்லமுறையில் அபிவிருத்தி செய்வதன் மூலமாகத் தான் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பது நமக்குத் தெரிந்த விஷயம். ஆகவே, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு விவசாய அபிவிருத்தியைச் செய்யக் கூடிய தன்மையிலே உடனடியாக அதற்காக எந்த அளவுக்குப் பணம் செலவு செய்ய வேண்டிய

நிலைமை ஏற்படுவதாக இருந்தாலும், கொஞ்சமும் சளைக்காமல், கண்டிப்பாக விவசாய அபிவிருத்தியில் தீவிர கவனம் செலுத்தியாக வேண்டும்.

மற்ற பிரச்னைகளை விட இந்தப் பிரச்னை துரிதமாக கவனிக்கப் படவேண்டிய பிரச்னை ஆகும். மற்ற பிரச்னைகளையாவது கொஞ்சம் அவகாசம் எடுத்து, சிந்தித்துச் செய்யலாம். ஆனால், உணவு-விவசாயம் சம்பந்தப்பட்ட பிரச்னை நிதானமாக கவனிக்கக் கூடிய பிரச்னை அல்ல. ஒரு வீடு தீப்பற்றிக் கொண்டு விட்டால், அதை அணைக்க எந்த அளவுக்குத் தீவிரமாக கவனம் செலுத்த வேண்டுமோ, அதைப் போல இது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை என்பதால், தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அப்படி விவசாயத்தை இன்றைக்கு அபிவிருத்தி செய்வதில், இன்றைக்கு இருக்கக் கூடிய விவசாயிகள், நிலம் இல்லாத ஏழை விவசாயிகள், பாடுபடக் கூடிய விவசாயிகள், சர்க்காருக்குச் சொந்தமான தரிசு நிலங்களை, காட்டு இலாகா சம்பந்தப்பட்ட நிலங்களோ அல்லது வேறு இலாகா சம்பந்தப்பட்ட நிலங்களோ, தரிசாக இருக்கக்கூடிய நிலங்களிலே, நீண்ட காலமாக, காட்டு இலாகாவிற்கு எந்த விதத்திலும் உபயோகமே இல்லாமல் இருக்கக் கூடிய ஆயிரக்கணக்கான, லட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களிலே கூட பல ஆண்டு காலமாக விவசாயம் செய்து வருகிறார்கள். அப்படி விவசாயம் செய்து வரக்கூடிய நிலங்களிலேயிருந்து கூட திடீர் திடீரென்று அவர்களை அப்புறப்படுத்துவதும், அந்த விவசாயத்தையே நாசப்படுத்துவதும் ஆன காரியங்களினாலே விவசாயிகள் பாதிக்கப்படுவது மாத்திரமல்லாமல், உணவு உற்பத்தியைக் கூட பாதிக்கும் அளவுக்கு இருந்து வருகிறது. உடனடியாகத் தரிசு நிலங்களை, எதெல்லாம் விவசாயத்திற்கு லாயக்கான நிலங்களோ அதையெல்லாம் விவசாயிகளுக்குச் சொந்தமாக்கும் நிலையில், குறிப்பிட்ட அளவுக்கு இத்தனை ஏக்கர் என்று பட்டா செய்துகொடுக்கக் கூடிய நிலையில் "இது நம் நிலம், நமக்குச் சொந்தமான நிலம்" என்று ஏற்படும் அளவுக்கு, பாடுபட்டு இரவு-பகலாக உழைத்து உணவு உற்பத்தியைப் பெருக்கும் அளவுக்கு அவர்களை உற்சாகப்படுத்த முடியும் என்பதைத் தான் நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே போன்று, இன்றைக்கு விவசாயத்தை துரிதப்படுத்தக் கூடிய முறையிலே இன்றைக்கு விவசாயிகள் எதிர்பார்ப்பதெல்லாம் நவீனக் கருவிகள், "அகல உழுவதை விட ஆழ உழு" என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு ஆழமாக உழுது விவசாயம் செய்யக் கூடிய நிலைமை ஏற்படுமேயானால், அதன் மூலமாகத்தான் இன்றைக்கு உணவு உற்பத்தியை அதிகப் படுத்த முடியும் என்பதைத் தான் இந்த நேரத்தில் குறிப்பிடு கிறேன். இன்றைக்கு நவீன யந்திரங்கள் என்று சொல்லக் கூடிய நேரத்தில், புல்டோசர்கள், ட்ராக்டர்கள், ட்ரில்லிங் மெஷின்கள், வெடி மருந்துகள் ஆகியவைகளில், குறிப்பாக வட ஆற்காடு



மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், சோழ வள நாடு சோறுடைத்து என்று சொல்லக்கூடிய தஞ்சை மாவட்டம் உணவு உற்பத்தியைச் செய்வதற்கு அடுத்தாற்போல வட ஆற்காடு மாவட்டம் அதிகமாக உணவு உற்பத்தியைச் செய்கிறது என்றால், அங்கு காவிரி நதி பாய்வதைப் போன்று இங்கு பாலாறு இருந்தாலும், மழை பெய்யக் கூடிய காலத்தில் தான் தண்ணீரே ஒழிய மற்ற காலத்தில் தண்ணீர் கிடையாது. அதைப் போன்று நீர்ப்பாசன வசதி இல்லாத மாவட்டம். நீர்ப்பாசன வசதிகளைக் கட்டுப்படுத்தும் நிலையில் இருக்கிற மாவட்டம். விவசாயத்திற்காகக் கிணறுகள் வெட்டுவது என்றால், எங்கு பார்த்தாலும் பாறையாக இருக்கக் கூடிய பிரதேசம். ஒவ்வொரு விவசாயியும் இரண்டு மூன்று கிணறுகள் வெட்ட பத்தாயிரக் கணக்கான ரூபாய் செலவு செய்யும் நிலைமை இருந்தும் பாடுபட்டு கஷ்டப்பட்டு தண்ணீர் இறைத்து விவசாயம் செய்யக் கூடிய மாவட்டத்தில், கிணறுகளை வெட்டும்போது பாறைகளை உடைக்க வெடி மருந்து இருக்கிறதா என்று பார்க்கும் நேரத்தில், பாறைகளை துளை போட ட்ரில்லிங் மெஷின்ஸ் இருக்கிறதா என்று பார்க்கும் நேரத்தில், அவைகளெல்லாம் கிடையாது. ஆட்களை வைத்து, கடப்பாறையை வைத்துத் துளை போடவேண்டும். வெடி மருந்து தேவை என்றால், மாவட்ட கலெக்டரிடமோ, போலீஸ் அதிகாரியிடமோ அனுமதி பெற்று மைசூர் ராஜ்யத்திற்குப் போய் வாங்கி வரவேண்டிய நிலைமை இருக்கிறது. அதன் காரணமாக வெடி மருந்தை கள்ள மார்க்கெட்டில் விற்கக் கூடிய நிலைமை இருக்கிறது. மாவட்டத்தில் ஒரு இடத்திலாவது அதை விற்பனை செய்யும் நிலைமையை உண்டாக்க வேண்டும்.

ட்ரில்லிங் மெஷின்கள் போதுமான அளவுக்கு இருக்கும்படியான முறையில் உதவி செய்யவேண்டும். ட்ராக்டர்கள் என்று சொல்லும்போது அதிகப்படியான நிலங்கள் வைத்திருக்கிறவர்களுக்குக் கடன் கொடுப்பதோ, வாங்க அனுமதி கொடுப்பதோ வேண்டாமென்று சொல்லவில்லை. இன்றைக்கு மெரிட்டைப் பார்த்து, எந்தப் பிரச்னையிலும், கல்வியானாலும், எப்படிச் சலுகை அளிக்கும் நிலைமை இருக்கிறதோ, அதே அடிப்படையில் யார் உணவு உற்பத்தி அதிகம் செய்கிறார்களோ அந்த மெரிட் அடிப்படையில் அவர்களுக்கு நவீனக் கருவிகள் கொடுக்க முன் வருவது உதவிகரமாக இருக்கும்.

இன்றைக்கு புல்டோசர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் போதுமான அளவு கிடையாது என்பது மாத்திரமல்ல, இருப்பதும் பழுது அடைந்த கருவிகளாக இருக்கின்றன. அதிகப்படியான ரேட்டைக் கொடுக்க வேண்டியிருப்பதால் ஏழை விவசாயிகள் அவைகளை உபயோகப்படுத்த முடியாமல் இருக்கிறது. ஆகவே, நவீனக் கருவிகளை எந்த அளவில் உபயோகப்படுத்த முயற்சி செய்ய முடியுமோ அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். விவசாயத்திற்கு இவைகளெல்லாம் மிக மிக முக்கியமானது.

இன்றைய தினம் ஆழப்படுத்துவதற்கு, தூர் எடுப்பதற்கு உபயோகப்படுத்தும் கருவிகள் இந்த ராஜ்யத்திலேயே நான்கு கருவிகள் தான் இருக்கின்றன என்று நினைக்கிறேன். அதற்கு புல்டோசர் அவசியம் இல்லை. டிராக்டர் அவசியம் இல்லை. ஏரியை ஆழப்படுத்த, தூர் எடுக்க தனியாகக் கருவிகள் இருக்கின்றன என்று நினைக்கிறேன். அந்தக் கருவிகள் குறிப்பிட்ட ஒன்றிரண்டு மாவட்டத்தில் தான் நீண்டகாலமாக இருந்துகொண்டிருக்கிறது என்பது என் அபிப்பிராயம். அது எல்லா மாவட்டங்களுக்கும் உதவி செய்வதற்காக இருக்கக் கூடியது என்று நான் நினைக்கிறேன். தூர் எடுக்கும் கருவிகளை எல்லா மாவட்டங்களிலும், குறிப்பாக எந்த மாவட்டம் உணவு உற்பத்தி அதிகமாகச் செய்யக் கூடிய நிலைமையில் இருக்கிறதோ அதற்கு முதல் சலுகையாகக் கொடுத்து உணவு உற்பத்தியில் கவனம் செலுத்த வேண்டுமென்பது மாத்திரமல்லாமல், மேலும் புதிய ஏரிகளை வெட்டுவதும், நீர்த்தேக்கங்களைக் கட்டுவதும் போன்ற காரியங்களில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, சிறு அணைகளைக் கட்டுவதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் வசதி இருக்கிறதா என்று பார்த்தாக வேண்டும். அந்த அடிப்படையில் இன்றைக்கு வட ஆற்காடு மாவட்டத்தில் மோர்தனா அணை என்று சொல்லக் கூடிய சிறு அணையைக் கட்டுவதினால், அதன் காரணமாக பல நன்மைகளைப் பெற முடியும். அந்த நீர்த்தேக்கத்தில் மீன் உற்பத்தி செய்யலாம்—அதுவும் ஒரு உணவுப் பொருள் தான். முடிந்தால் அந்த அணையைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். அதே போன்று விவசாயத்திற்குத் தண்ணீரைப் பயன்படுத்த முடியும். இப்படிப் பல காரியங்களுக்குப் பயன்படுத்தும் நிலைமை இருப்பதால், சிறு அணையாக இருந்தாலும், அதற்கும் மத்திய சர்க்காரிலிருந்து போதுமான அளவு பணம் கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன். அதையும் பெற்றுப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்தவேண்டுமென்பதையும் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகளுக்கான கடன் வசதி உடனுக்குடன் கிடைப்பதே கிடையாது. விவசாயிகள் கடனுக்காக எழுதிப்போட்டு மாதக் கணக்கில், ஒரு சிலர் வருஷக் கணக்கில் என்றும் சொல்லலாம், அதற்காகப் பல பேர்களைப் பிடித்து, லஞ்சம் கொடுத்து வாங்கும் நிலைமை இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு விவசாயிக்கு வேண்டிய பம்ப்செட்டுகளோ, அல்லது கிணறு வெட்ட வேண்டுமென்று வரும் நேரத்தில் கிணறு வெட்டுவதோ, இது போன்று பிரச்னைகளில் கடன் கொடுப்பதற்குப் பதிலாக, மழை பெய்து ஆற்றிலே வரும் தண்ணீருக்கும் கூட, அணை கட்டினோம், ஆகவே ஏற்பட்டிருக்கக் கூடிய செலவுத் தொகையை ஈடு கட்டும் முறையில் தண்ணீர்த் தீர்வை போடுகிறோம் என்று சொல்லக் கூடிய முறையில், அதே போன்று, கிணறுகள் வெட்டுவதற்கும், பம்ப்செட்டுகள் கொடுப்பதற்கும், கடனைக் கொடுப்பதற்குப் பதிலாக, 100 ஏக்கர், 200 ஏக்கர் போன்ற நிலங்களுக்குத் தண்ணீர் பாயக்கூடிய அளவிலே, மிகப் பெரிய, பிரம்மாண்ட கிணறு வெட்டி, மோட்டார் யந்திரங்களை வைத்து, அதன் மூலமாகத் தண்ணீர் பாய்ச்சி,



அந்தப் பணத்தை அந்த விவசாயிகளிடத்திலே இன்றைக்கு வசூல் செய்தால் அவர்கள் கொடுப்பதற்குத் தயாராக இருப்பார்கள். இந்த அடிப்படையிலே நாம் செயல்படுவதன் மூலமாகத் தான் விவசாய அபிவிருத்தியை மிகப் பெரிய அளவுக்குக் காண முடியும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று விதை விஷயமும் முக்கியமானது. ஏற்கனவே விதைகளைப் பெருக்கவேண்டுமானால், அதற்கு ஸீட் பார்ம்ஸ் என்று இருந்தன. மேலும் அதற்கான மார்க்கெடிங் சொஸைடிகள் கூட விதைகளை வாங்கி குறைந்த விலையில் கொடுக்கும்படியான நிலையும் இருந்தது. இன்றையதினம் மார்க்கெட்டிங் சொஸைடிகள் வாங்குவதற்குப் பதிலாக புட் கார்பரேஷன் வாங்கலாம் என்றோ, அல்லது வேறு எந்த இடத்திலும் வாங்கலாம் என்றோ, எந்த அடிப்படையிலோ நமக்குத் தெரியாது, மார்க்கெடிங் சொஸைடிகள் வாங்க முடியாத அளவுக்கு ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் 7 மார்க்கெடிங் சொஸைடி ஆபீஸ்கள் மூடப்பட்டு, நூற்றுக்கணக்கானவர்கள் வேலை இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. மேலும் பல ஆபீஸ்கள் மூடப்படும் என்று கேள்விப்படுகிறேன். தேர்தல் நேரத்தில் அன்று இருந்த முதல் அமைச்சர் அவர்கள் இம்மாதிரி உத்தரவு போட்டார்கள் என்று நான் கருதுகிறேன். இது என்ன என்பதையும் கவனத்தில் கொண்டு, நல்ல விதைகள் கொடுக்கும்படியான அளவுக்கு அதிக முக்கியத்துவத்துடன், கவனம் செலுத்தப்படவேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று உரம் என்று சொல்லக்கூடிய நேரத்தில், பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகள் உரத்தை விநியோகம் செய்ய வேண்டும் என்கின்ற அளவுக்கு இருந்தாலும், 1,000 மூட்டை உரம் வருகிறது என்றால், 2,000 மூட்டைகளுக்கு அனுமதிச் சீட்டு கொடுக்கிறார்கள். இதனால் விநியோகம் செய்யக்கூடிய மார்க்கெட்டிங் சொஸைடிகளோ அல்லது வேறு சொஸைடிகளோ மிகப் பெரிய அளவுக்கு பாதிக்கப்படுகின்றன. அது மாத்திரமல்ல. வேண்டுமென்றே பஞ்சாயத்து யூனியனில் இருக்கக்கூடிய அதிகாரிகள் இப்படிக் கொடுப்பதன் மூலமாக பல சிக்கல்களை உண்டாக்கக் கூடிய அளவுக்கும் நிலைமை இருக்கிறது. 1,000 மூட்டைகள் என்று சொன்னால், 1,000 மூட்டைகளுக்கு மட்டுமே அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படவேண்டும். அதே நேரத்தில் விவசாயம் செய்திருக்கிறார்களா இல்லையா என்பதைப் பார்க்காமல், குறிப்பிட்ட நபருக்கு நிலம் இருக்கிறதா இல்லையா என்பதையும் கவனிக்காமல் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, யார் பெயரில் நிலம் இருக்கிறதோ, நிலம் இருந்தால் மட்டும் போதாது அந்த நேரத்தில் நிலத்தில் விவசாயம் செய்யப்பட்டிருக்கிறதா என்பதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, முறையாக எத்தனை மூட்டைகள் வருகின்றனவோ அந்த அளவுக்கு விநியோகம் செய்யும்படியான நிலையில் அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படவேண்டும். உணவு சம்பந்தமான பிரச்னையில், விவசாயம் செய்யக்கூடிய பிரச்னையில் ஊழல்கள் ஏற்படுகின்றன என்றால், அது குறித்து

சம்பந்தப்பட்டவர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு தயங்கக்கூடாது என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

விவசாய உணவு உற்பத்தி அதிகரிக்கப்படவேண்டும். இன்றைக்குப் பணம் எதிலே அதிகமாகக் கிடைக்கிறதோ, அதாவது கரும்பு, வாழை, புகையிலை போன்ற பண விவசாயம் தான் அதிகமாக நடக்கிறது. இதை இப்படியே விட்டுவிட்டோம் என்றால், இதனுடைய விளைவு என்ன ஆகும்? உணவு உற்பத்தி அதிகரிக்காது, அதற்குப் பதிலாக உணவு நெருக்கடி ஏற்படும். யாரிடம் நிலம் இருந்தாலும் சரி, குறைந்தபட்சம் பாதி அளவுக்கு உணவு உற்பத்தி கண்டிப்பாகச் செய்ய வேண்டும் என்ற அளவுக்கு அரசாங்கம் உத்தரவு போட்டால் தான், விவசாய உற்பத்தி பெருகுவதற்கு உத்திரவாதமாக இருக்கும் என்பதையும் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உணவு சம்பந்தமாக இன்றைக்கு முழுக்க முழுக்க சர்க்கார் ஏற்று நடத்தினால் தான் ரொம்பவும் நலமாக இருக்கும். கொள்முதல் பிரச்னையிலே கூட தீவிரமான முறையிலே கண்ட்ரோலைச் செலுத்தவேண்டும். எந்த முறையை அனுஷ்டிப்பது மூலம் கொள்முதலை வெற்றிகரமாக நடத்த முடியும் என்பதை எல்லாக் கட்சியினரும் கொண்ட ஒரு கமிட்டி அமைத்து, நாம் ஒரு திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்னால், எது போன்ற திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்பதையும் அந்தக் கமிட்டியினரை கலந்து ஆலோசித்து செய்தால் மிகப் பெரிய அளவுக்கு உதவியாக இருக்கும் என்று சொல்லக்கூடிய அதே நேரத்திலே ஒரு பஞ்சாயத்துக்கு குறைந்த பட்சம் ஒரு நியாய விலைக் கடையாவது உடனடியாக நிறுவப்படவேண்டும். அதே மாதிரிதான் கலப்படமும் உணவு வகைகளில் எல்லாவற்றிலும் கலப்படம் இருக்கிறது. கலப்படம் இல்லாத உணவுப் பொருள் என்பதை சொல்லவே முடியாது. அதன் காரணமாக கண்ட வியாதி வருகிறது. அந்த வியாதி என்ன என்பதை பெரிய டாக்டராலும் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு இன்றைக்கு நிலைமை இருந்துகொண்டு வருகிறது. உணவுப் பொருள்கள் சம்பந்தப்பட்ட மட்டில், அதோடு கலந்திருப்பது கல்லாக இருந்தாலும் சரி, மண்ணாக இருந்தாலும் சரி, கடுமையான நடவடிக்கை எடுக்கக்கூடிய அளவுக்கு இந்தப் பிரச்னையில் கூட சர்க்கார் தீவிர கவனம் செலுத்தவேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

கடைசியாக ஒரு பிரச்னை. ஏ.டி.டி. 27 விதைகளைப் போடுவதன் மூலமும், உரத்தை அதிகமாகப் போடுவதன் மூலமாகவும் மட்டும் உணவு உற்பத்தியை அதிகமாகப் பெருக்கிவிட முடியாது. அதை எந்த நேரத்தில் எந்த அளவுக்கு கண்காணிக்கவேண்டும் என்ற முறையில் பக்குவமாகக் கண்காணித்து விவசாயம் செய்தால் தான், அந்த அடிப்படையில் தான் உண்மையிலேயே உற்பத்தியை அதிகரிக்கக்கூடிய நிலைமை ஏற்பட முடியும். விவசாயிகளை மேலும் ஊக்குவிக்கக்கூடிய நிலைமையில் அது சம்பந்தமாக விவசாய இலாகாவின் விவசாயிகளுக்கு எப்படிப் பயிர்செய்யவேண்டும் என்ற



முறையைச் சொல்லிக்கொடுக்க வேண்டும். விவசாயிகளுடைய ஆலோசனைகளையும் கேட்டு, யார் அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறார்களோ, எப்படி அவர்கள் உற்பத்தியை அதிகரித்தார்கள் என்பது பற்றியும் ஆலோசனை கேட்டு, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான முயற்சியில் ஈடுபடவேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : அடுத்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கையின் மீது உரையாற்றுவார்கள்.

* மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கோரிக்கையின் மீது திண்டிவனம் உறுப்பினர் கனம் திரு. ராமமூர்த்தி அவர்கள் விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்காக உர வகைகள், தரமான வித்துக்கள், விவசாயக் கருவிகள் ஆகிய இவைகளை இந்த அரசாங்கம் சரியாக அமுல்படுத்த ஏற்பாடு செய்யத் தவறியதாக இந்த வெட்டுத் தீர்மானத்தை அளித்திருக்கிறார்கள். இந்த வெட்டுத் தீர்மானத்தை அவர்கள் அளித்தார்களே தவிர, இந்த அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை ஏறக்குறைய ஒட்டியே அவர்கள் பேசினார்கள். இந்தத் தீர்மானம் வெட்டுத் தீர்மானமாக மட்டுமல்லாமல், தமிழகத்தினுடைய பொருளாதாரத் திட்டமாக மட்டுமல்லாமல், நம்முடைய எதிர்காலத்தில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மையமாக இருக்கிற ஒரு வெட்டுத் தீர்மானமாகும். அனைவரும் நாம் இன்றைக்கு தெரிந்துகொண்டிருப்பதெல்லாம் மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் விவசாய அபிவிருத்திக்கு சரியான கவனம் செலுத்தப்படவில்லை, நம்முடைய திட்டங்கள் விவசாயத் துறையிலே சரியாக அமையவில்லை, விவசாய உற்பத்தி பெருக்கமாகாத காரணத்தினால் இன்றைக்கு நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்பவைதான். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத் துறையில் நாம் சரியான கவனம் செலுத்தியிருந்தால் நலமாக இருந்திருக்கும். உரவகைகளை அதிகப்படுத்தல், தரமான விதைகளைக் கொடுத்தல், நவீன விவசாயக் கருவிகளை விநியோகத்தல் என்பது போன்றவைகள் நமது விவசாய உற்பத்திக்கு திறவுகோல் என்று இன்றைக்குப் புதியதாக ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கிற இந்த அரசாங்கம் கருதுகிறது. எல்லாத் தரப்பினர்களும் ஒத்துக்கொள்ளக் கூடிய உண்மை இது. இதற்கான நடவடிக்கைகள் மிகப் பிரதானம். விவசாய உற்பத்தியை அடித்தளமாகக் கொண்டு இந்த அரசாங்கம் அமையும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். தரமான விதைகளைப் பொறுத்தவரையில், இந்த மன்றமும் அறியும், மன்றத்திலுள்ள அனுபவசாலிகளும் அறிவார்கள், இன்றைக்கு விவசாய மந்திரியாக பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர் அவர்கள் எஸ்டிமேட் கமிட்டியில் அங்கத்தினராக இருந்து விதைப் பண்ணைகள் செயல்படுவது பற்றி நல்ல அனுபவம் பெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய தலைமையிலே இந்தத் துறை நிச்சயம் சரியான விதைகளை பெருக்குவதற்கும், அதை அபிவிருத்தி செய்வதற்கும் வழி கோலும்.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1967, மார்ச் 23

பிற்பகல் 12-20 அதற்கு அடுத்தபடியாக நீர்ப்பாசன வசதிகள் பற்றியும் குடியாத்தம் உறுப்பினர் கனம் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் குறிப்பிட்டார்கள், நமது மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் விவசாய உற்பத்தியைப் பொறுத்த மட்டில் தான் தீவிரமான ஆராய்ச்சி செய்துகொண்டு இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஒன்றை மட்டும் இந்த மன்றத்தின் கவனத்திற்கும், சபாநாயகர் அவர்களே, தங்களுடைய கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன். முன்னால் இருந்த அரசாங்கத்திற்கும் உர வகைகளை உரிய காலத்தில் கொடுக்கவில்லை என்கின்ற குறைபாடு இருந்தது. இன்றைக்குப் பார்த்தால் கூட, உணவைவிட மிக முக்கியமான பிரச்சினை உரவகைகள் தான். உரம் சம்பந்தப்பட்ட மட்டில், மிகத் தெளிவான பற்றாக்குறை இருக்கிறது. இந்தப் பற்றாக் குறைக்கு யாராவது பொறுப்பு என்றால், அது மத்திய சர்க்கார் தான் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருக்கிறது. தமிழ் நாட்டிலே விவசாய மக்களுக்கு உரம் கொடுக்கவில்லை, போதுமான நேரத்தில் போதுமான அளவு கொடுக்கவில்லை என்றால், அதில் மாநில சர்க்காரைவிட உண்மையிலேயே மத்திய சர்க்காருக்குத்தான் பொறுப்பு அதிகம். மத்திய சர்க்காருடைய கொள்கை சரியான முறையில் இதில் செயல் படவில்லை என்பது தான் காரணம். உதாரணமாக, நடப்பு ஆண்டில் நைட்ரஜன் உர வகைகளில் நாம் 135,000 டன் கேட்டு இருந்தோம், ஆனால் நமக்குக் கிடைத்தது 86,000 டன் தான். இதைத்தான் மத்திய சர்க்கார் நமக்கு வழங்கி இருக்கிறது. அதே மாதிரித்தான், பாஸ்பர உரம் சம்பந்தப்பட்டமட்டில் 60,700 டன் நம்முடைய குறிக்கோள் என்றால், அதில் மூன்றில் ஒரு பங்கு, கிட்டத்தட்ட 27,000 டன் தான் பெற்று இருக்கிறோம், உரம் வெகு முக்கியமான அம்சமாக இருந்தும், மத்திய சர்க்காருடைய கொள்கை காரணமாக, நாம் எவ்வளவு நீர்ப்பாசன வசதிகளைச் செய்தாலும் கூட, தரமான விதைகள் கொடுத்தாலும் கூட, நல்லமுறையில் இயங்கும் விதைப் பண்ணைகள் இருந்தாலும் கூட, இந்த உர வகைகள் நமக்கு வேண்டிய அளவு இல்லாததால், இவற்றை சரியாக அமுல் நடத்த முடியாத துரதிர்ஷ்ட நிலை இருக்கிறது. இந்த அரசாங்கம் மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கை இரண்டு அம்சங்கள் கொண்டது. நீண்ட கால திட்டம் ஒன்று: உர உற்பத்திக்கான தொழிற்சாலை அமைக்க வேண்டும். ஆனால், அது உடனடியாக நடக்காது. ஆகவே, மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள், இந்த மன்றத்திலும் சரி, இன்னும் தொடர்ந்தும் ரசாயன உரங்கள் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்பதற்காக, மத்திய சர்க்காருடைய கொள்கை மாற்றத்திற்கு வற்புறுத்தி வருவார்கள். இன்றைக்கு ரசாயன தொழிற்சாலைகள் நான்காவது திட்டத்தில் அமைகிற போது, நம்முடைய பிரச்சினை ஓரளவிற்குத் தீரும். ஆனால், இன்றைக்கு நமக்கு இருக்கும் ஒரே ஒரு பரிகாரம், தக்க அளவில் மிக மிக விரைவாக இறக்குமதி செய்யக் கடமைப் பட்டிருக்கிறோம். இறக்குமதி செய்ய மத்திய அரசாங்கம் பல்வேறு வகைகளையும் கையாள வேண்டியது அவசியம், அப்படிச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறது. இப்பொழுதுகூட, நான்கு நாட்களுக்கு



1967, மார்ச் 23] [திரு. கே. ஏ. மதியழகன்]

முன்பாகப் பத்திரிகையில் பார்த்தேன். சோவியத் நாடு 10 கோடி ரூபாய அளவுக்கு உர வகைகளை மத்திய சர்க்காருக்கு நன்கொடையாக, அன்பளிப்பாகக் கொடுக்கிறது என்று பார்த்தேன். 10 கோடி ரூபாய் அளவில் கெமிகல் பார்டிலைசர்கள், உர வகைகளைக் கொடுப்பதாகப் பார்த்தேன். இதிலிருந்து, வெட்டுப் பிரேரணை கொடுத்தவர்களும், மற்றும் எந்த வரிசையில் இருப்பவர்களும் சேர்ந்து—கனம் முதல் அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொன்னது போல எல்லோரும் சேர்ந்து ஏகோபித்த கருத்தாக எடுத்துக் காட்டி—தமிழ் நாட்டிற்கு உர வகைகளை இறக்குமதி செய்ய மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். உறுப்பினர்கள் பேரியத்தில் ஏகோபித்த கருத்து இருப்பதால், வெட்டுப் பிரேரணை கொடுத்த கனம் உறுப்பினர் ராமமூர்த்தி, தன்னுடைய வெட்டுப் பிரேரணையை வற்புறுத்தாமல், அவர்கள் திருப்பிப் பெறுமாறு கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : அடுத்து மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் பேசுவார்கள். ஆனால், அவர்களுக்கு ஐந்தே ஐந்து நிமிடங்கள்தான் இருக்கின்றன என்பதை வருத்தத்தோடு தெரிவிக்கிறேன்.

*திரு. பி. ஜி. கருத்திருமன் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, (குறுக்கீடு) இந்த விவசாய, உணவு மானியத்தின் மீது நான் கலந்து கொள்வதற்கு ஐந்து நிமிஷங்கள்தான் என்று சொன்னார்கள். (குறுக்கீடு) கனம் அமைச்சருடைய குறைபாடு என்னவென்றால், அமைச்சருக்குப் பிறகு நான் எப்படிப் பேசலாம் என்பது. ஆனால் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன், எனக்குப் பிறகு முதல் அமைச்சர் பேச இருப்பதால் - . ' .

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : ஐந்து நிமிடங்கள் தான் இருக்கின்றன. கருத்தைப் பற்றிப் பேசுங்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : உணவு அமைச்சர் அவர்கள் இடையில் குறுக்கிட்டார்கள், ஆதலால் அதைக் குறிப்பிட்டேன். விவசாய இலாகா சம்பந்தப்பட்ட வரையில், அவர்கள் நல்ல காரியங்களைச் செய்து கொண்டு வருகிறார்கள். எதிர்க் கட்சியில் இருந்தாலும், நல்ல காரியத்தைப் பாராட்டத்தானே வேண்டும். இரண்டு, மூன்று திட்டங்கள் போட்டு இருந்த போதிலும், உற்பத்தி அதிகமாக இல்லை என்றார்கள். திட்டங்கள் போட்டதில் குறைபாடு என்பதை ஓரளவுக்கு மறுக்கத்தான் வேண்டியிருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 55 மிலியன் டன் உற்பத்தி செய்தோம் என்றால், மூன்றாவது திட்டத்தின் போது 90 மிலியன் டன் உற்பத்தி செய்திருக்கிறோம். ஆகவே, ஏதோ சோர்வு ஏற்பட்டுவிட்டது, உற்பத்திக் குறைவு என்றெல்லாம் சொல்வது தவறு. வேறு வகைகளில் நமக்கு தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஜனத் தொகைப் பெருக்கம். 1965-ம் ஆண்டில் மழை இன்மை. அதன் காரணத்தால் பஞ்சம். ஆகவே,

உணவு உற்பத்தியைப் பொருத்த மட்டில் அது நல்ல முறையில் தான் நடந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

ஒரே ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். காலையிலே அறிவித்ததிலிருந்து, கொள்முதல் விஷயத்தில், 12 லட்சம் பேர்களுக்கு விலக்கு அளிக்கப்படும் என்றும், பாக்கி 8 லட்சம் பேர்களிடமிருந்துதான் கொள்முதல் செய்யப்படும் என்றும் குறிப்பிட்டார்கள். இப்படிப் பட்ட அதிகாரத்தை வைத்துக்கொண்டு,

"வேலொடு நின்றான் இடுவென்றது போலும்
கோலொடு நின்றான் இரவு"

என்று குறளாசிரியர் குறிப்பிட்டது போன்று, 12 லட்சம் பேர்களுக்கு விலக்கு அளித்துவிட்டு, எந்த அளவில் சர்க்கார் நடத்தப் போகிறார்கள், என்று உடனடியாக ஒரு தீர்மானம் எடுத்தாக வேண்டும். கொள்முதலில் உள்ள கஷ்டங்கள் என்னென்ன என்பதையெல்லாம் பற்றி கவர்னர் உரைமீது பேசும் போது சொல்லலாம் என்றிருக்கிறேன். விவசாயிகளின் தேவைக்குப் போக பாக்கியெல்லாவற்றையும் எடுக்க வேண்டும்; அல்லது ஓரளவு குத்து மதிப்பாக எடுத்து மக்களுக்கு வினியோகம் செய்ய வேண்டும். ஆகவே, இந்தக் கொள்முதலில், அமைச்சர் அவர்கள் சொன்னாலும், இப்படி 12 லட்சம் பேர்கள் தங்கள் இஷ்டம் போல் எங்கே வேண்டுமானாலும் விற்றுக்கொள்ளலாம் என்று விட்டுவிட்டு ஒரு பகுதிப் பேர்களை மட்டும் கொள்முதலுக்கு உட்படுத்தினால், குடியானவன் நிலை என்னவாகும் என்பதை அறிய விரும்புகிறேன். ஆகவே, ப்ரொக்யூர்மெண்ட் விஷயத்திலே, தயவு செய்து தீவிரமான, திட்டமான கொள்கையைப் பின்பற்ற வேண்டும். சொல்லப்போனால், ஒவ்வொருவருக்கும் எத்தனை இருக்கிறது, எத்தனை டிமாண்ட் என்று பிரசுரித்து, பஞ்சாயத்து மூலம் கொடுத்து, அதன் பிரகாரம் வசூல் செய்தால் கூட ஓரளவு நன்றாக இருக்கும். அதிகமாகப் பேசவேண்டியிருந்தாலும், அதிக நேரம் இல்லாததால் இந்த அளவோடு முடிக்கிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** இந்த மானியத்தைக் கோரி தீர்மானத்தை அவைக்குக் கொண்டு வந்த மாண்புமிகு முதல் அமைச்சர் இறுதி உரையாற்றுவீர்கள்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, உணவு அமைச்சர் தந்து விட்ட விளக்கத் திற்குப் பிறகு, நான் தருவதற்கான விளக்கங்கள் அதிகமாக இல்லை என்று கருதுகிறேன். இந்த விவாதத்தில் நம்முடைய மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் முதலிலே கலந்துக் கொள்ளாமல் இருந்தார்கள் என்பதைக் கண்டு வருத்தமாக இருந்தது. இவ்வளவு முக்கியமான பிரச்சினையில் அவர்கள் கருத்துத் தெரியாமல் போகிறதே என்று நினைத்தேன். ஆனால் இறுதியில் அவர்களும் தன் கருத்தைத் தெரிவித்தார்கள். அவை களெல்லாம் நாம் மேற்கொண்டிருக்கும் பணிகளை செம்மைப்





படுத்த வேண்டும் என்கிற நல்ல நோக்கத்தோடு தெரிவிக்கப் படுவதால், அதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

உணவுப் பிரச்சினை இன்று நேற்று சிக்கலாகி விட்ட பிரச்சினை அல்ல. அதைச் சுட்டிக்காட்டும் முறையில் உணவு அமைச்சர் ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அதிலே கொஞ்சம் வருத்தம் அடைந்தார்கள். வருத்தப்பட வேண்டியதில்லை என்றாலும், காங்கிரஸ் சர்க்காரையே குறைகூறுவதாக, திட்டத்தைப் பற்றிச் சொன்னால், காங்கிரஸ் சர்க்கார் என்று, வருத்தப் பட்டார்கள் என்று நினைக்கிறேன். காங்கிரஸ் சர்க்காரைக் குறை சொல்லுவதாகக் கொள்ளக் கூடாது என்று அவருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். திட்டம் என்பது, காங்கிரஸ் சர்க்கார் மட்டும் செய்வது அல்ல. அதனுடைய பெருமைகள், சிறுமைகளில் காங்கிரஸ் கட்சி மட்டும் பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதல்ல. அது மட்டுமல்ல, காங்கிரஸ் சர்க்காரே கூட திட்டக் கமிஷன் சரியாக நடக்கவில்லை என்று குறைபட்டிருக்கிறார்கள். ஆகையினால், திட்டங்கள் தீட்டப் பட்ட முறையில், முதல் இரண்டு மூன்று திட்டங்களில் விவசாயத் திற்கு போதுமான முதல் இடம் தரப்படவில்லை என்பதுதான் உணவு அமைச்சர் குறிப்பிட்டுக் காட்டியது என்று உணர்கிறேன். அதிலே உற்பத்தி அதிகரிக்கப்படவில்லையா என்பதற்கு அவர்கள் புள்ளி விவரங்களெல்லாம் கொடுத்தார்கள். அதிலே விவரம் தெரிவித்தவர்களாகையால் அதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஐந்தாண்டுத் திட்டங்களைப்பற்றி மதிப்பீடு போடுகிறபோது உணவுப் பிரச்சினையிலே போட்டாலும், நாம் எதிர்பார்த்தது என்ன? அடைந்தது என்ன? 'டார்ஜெட்' என்ன? 'ஆக்சுவல்' என்ன? அந்த டார்ஜெட்டிலேயே 'ஃபிஸிகல் டார்ஜெட்' என்ன 'ஃபினான்ஷியல் டார்ஜெட்' என்ன? 'ஆக்சுவல்' என்பதிலேயே 'ஃபிஸிகல் ஆக்சுவல்' என்ன, 'ஃபினான்ஷியல் ஆக்சுவல்' என்ன என்று இவைகளையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபோதுதான், விவசாயத் துறையிலே நாம் எதிர்பார்த்த அளவிற்குப் பலன் கிடைக்கவில்லை என்பதனால்தான் இந்த நிலைமைகளெல்லாம் வந்து விட்டன என்று உணவு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த வர்கள் மட்டுந்தான் சொல்லுகிறார்கள் என்று அர்த்தம் அல்ல. எல்லோருமே அதை இப்பொழுது ஒப்புக் கொள்ளுகிறார்கள். நிபுணர்களெல்லாம் கூட ஒப்புக்கொள்ளுகிறார்கள். நிபுணர்களே குறைபாடுகளை ஒப்புக்கொள்ளுவதினால், ஒன்றுமே நல்லது நடக்க வில்லை என்று நாமாக எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. நல்ல பல காரியங்கள் நடந்திருக்கின்றன. ஆனால், நாம் எதிர்பார்த்த அளவிற்கு நடக்கவில்லை என்பதுதான் அவர்கள் எடுத்துச் சொன்னது. அதைக் குற்றச்சாட்டு என்று கருதுவதைவிட மதிப்பீடு என்று கொள்ள வேண்டும். அந்த மதிப்பீட்டில் இன்றையதினம் யாருக்கும் திருப்தி இல்லை.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி முன்னறிவிப்பாக வருகிற அறிக்கையிலே கூட, நாம் போட்டிருக்கிற மதிப்பீடு,

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலே நாம் போட்ட மதிப்பீட்டின் அளவிற்குக் கிடைக்கவில்லை என்பதை எல்லோரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் உணவு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் எடுத்துக்கொள்ள இருக்கிற பல முயற்சிகளுக்கு எல்லோருடைய சிறந்த ஒத்துழைப்பும் கிடைக்கும் என்பதிலேயும், அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்பதிலேயும் நாம் அனைவரும் மிகுந்த நம்பிக்கை கொள்ள வேண்டும். இந்த நேரத்தில் உணவுத் துறையை எடுத்துக்கொண்ட என்னுடைய நண்பர் அவர்கள் இதிலே மிகுந்த ஆர்வத்தோடு இந்தத் துறையை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவிப்பது முறை என்று கருதுகிறேன். அவர்கள் உணவுத் துறையை எடுத்துக்கொண்டபோது எனக்கு மிகுந்த திருப்தி; மிகுந்த மகிழ்ச்சி. அவரைப்போல் உணவுத் துறை நல்லவனுவாக இருக்கவேண்டும். அதை எடுத்துக்காட்டுகிற வகையிலே அந்த உணவுத் துறை அவர்களிடத்தில் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். அவர்களுடைய சிறந்த முயற்சிகளுக்கெல்லாம் இந்த அவையிலே உள்ளவர்கள் எல்லோரும் ஒத்துழைப்பார்கள் என்ற கருத்தோடு, நான் அதிகமாகப் புதிதாக எதுவும் இதிலே சொல்வதற்கில்லை என்பதை எடுத்துச்சொல்லி, எடுத்துச்சொல்லப்பட்ட கருத்துக்களெல்லாம் எங்களுடைய கவனத்திலே இருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டு, அவர்கள் வேண்டிக் கேட்டுக்கொண்டதைப் போலவே, இந்த உணவு கொடுப்பதில்தான் வெட்டு கொண்டுவருகிறோம் என்றாலும், மானியத்திலாவது வெட்டாமலிருக்கலாம் என்று உங்களை நான் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானத்தை மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கே. ராமமூர்த்தி அவர்கள் வலியுறுத்துகிறார்களா, அல்லது திரும்பப் பெறுகிறார்களா என்று நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. ராமமூர்த்தி: ஐயா, அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியின் பேரில், என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்தவில்லை என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

வெட்டுத் தீர்மானம், அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பட்டது.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: அவையின் முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் XVI—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் 4,57,36,000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்".

கோரிக்கை நிறைவேற்றப்பட்ட மானியத் தொகை வழங்கப் பட்டது.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: இப்பொழுது பிற்பகல் மணி 1-00 அடிப்பதற்கு இன்னும் 15 நிமிடங்கள் இருக்கின்றன. விவாதிப்



பதற்கென்று எடுத்துக்கொண்ட மானியக் கோரிக்கைகளெல்லாம் நிறைவேற்றப்பட்டுவிட்டபடியால், மற்ற மானியக் கோரிக்கைகளையும் ஒவ்வொன்றாக அவையின் முடிவிற்கு விட்டு நிறைவேற்ற வேண்டும் என்று மன்ற முதல்வர் அவர்கள் தீர்மானம் கொண்டு வரலாம்.

6. அரசாங்கத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(இ) மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, "முதலில் விடப்பட்ட மானியக் கோரிக்கைகளை இப்பொழுது ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு, அவையின் முடிவிற்கு விட்டு, நிறைவேற்றலாம்" என்ற தீர்மானத்தை அவை முன் நான் வைக்கின்றேன்.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு. நிறைவேற்றப் பட்டது.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள் பற்றிய தீர்மானங்கள் பிற்பகல் 1.00 மணிக்கு வாக்கெடுப்புக்கு விடப்படும் என்று முன்னர் அறிவித்திருந்தேன். இப்பொழுது நேரம் 12-45 (பிற்பகல்) என்றாலும், இப்பொழுதே மற்ற மானியக் கோரிக்கைகள் பற்றிய தீர்மானங்களின் மீதும் வாக்கெடுப்பதற்கு இந்த அவை அனுமதிக்கிறது.

5. 1967-68-ம் ஆண்டிற்கான முன் மானியக் கோரிக்கைகள்மீது மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் III—பொது விற்பனை வரிகளும், ஏனையத் தீர்வைகளும்—நிர்வாகம்.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க் கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன்:—

"கோரிக்கை எண் III— பொது விற்பனை வரிகளும், ஏனையத் தீர்வைகளும்--நிர்வாகம்—என்ற தலைப்பின் கீழ் 41,65,500 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்"

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் IV -முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க் கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன்:

"கோரிக்கை எண் IV —முத்திரைத்தாள்கள்—நிர்வாகம்— என்ற தலைப்பின் கீழ் 8,15,900 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்கவேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் V—பத்திரப் பதிவுத் துறை.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் V—பத்திரப் பதிவுத் துறை என்ற தலைப்பின்கீழ், 23,66,200 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்கவேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் VI—மாநிலச் சட்டப் பேரவை.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் VI—மாநிலச் சட்டப் பேரவை என்ற தலைப்பின்கீழ் 6,37,700 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங் கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் VII—தேர்தல்கள்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் VII—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ், 6,87,700 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் 1,07,05,900 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.



கோரிக்கை எண் IX—மாவட்ட நிர்வாகமும் பல்வகையும்

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் IX—மாவட்ட நிர்வாகமும் பல்வகையும் என்ற தலைப்பின்கீழ் 3,56,85,700 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம்

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் 62,43,100 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ், 69,47,000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் XII—போலீஸ்

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XII—போலீஸ் என்ற தலைப்பின்கீழ், 3,57,19,900 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

(கோரிக்கை எண் XIII—கல்வி—ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு விட்டது.)

கோரிக்கை எண் XIV— மருத்துவம்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XIV—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ், 3,86,20,300 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் XV—பொதுச் சுகாதாரம்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XV— பொதுச் சுகாதாரம் என்ற தலைப் பின்கீழ், 1,71,78,000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

(கோரிக்கை எண் XVI —வேளாண்மை—ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுவிட்டது.)

கோரிக்கை எண் XVII—மீனளம்.

பிற்பகல் 1-00 **மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XVII— மீனளம் என்ற தலைப்பின்கீழ், 31,26,400 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் XVIII—கால்நடை வளர்ப்பு.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை என் XVIII— கால்நடை வளர்ப்பு என்ற தலைப் பின்கீழ், 1,10,58,900 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங் கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.



கோரிக்கை எண் XIX—கூட்டுறவு

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை என் XIX— கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ், 87,63,000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் XX—தொழில்கள்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை என் XX—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ், 66,74,100 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் XXI—சின்கோனா.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கின்றேன்.

"கோரிக்கை என் XXI—சின்கோனா என்ற தலைப்பின்கீழ், 10,05,100 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் XXII—கதர்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை என் XXII—கதர் என்ற தலைப்பின்கீழ், 6,66,700 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் XXIII—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை என் XXIII— சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ், 2,14,26,400 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை என் XXIV—தொழிற்சாலைகளும், தொழிலாளர் நலனும்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை என் XXIV— தொழிற்சாலைகளும், தொழிலாளர் நலனும் என்ற தலைப்பின்கீழ், 75,39,000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை என் XXV— ஆதிவாசிகள், ஹரிஜனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை என் XXV—ஆதிவாசிகள், ஹரிஜனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ், 2,14,19,000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் XXVI—பாசனம்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை என் XXVI—பாசனம் என்ற தலைப்பின்கீழ், 2,49,53,900 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப் பட்டது.



கோரிக்கை என் XXVII— பொதுப்பணிகள்—பணிகள்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை என் XXVII—பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின்கீழ், 2,45,93,400 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை என் XXVIII—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திர சாதனங்களும்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை என் XXVIII— பொதுப்பணிகள்—பணியாளரும் கருவிகளும்—இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ், 92,92,300 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை என் XXIX -பொதுப்பணிகள்—உதவி மானியங்கள்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை என் XXIX— பொதுப்பணிகள்—உதவி மானியங்கள் என்ற தலைப்பின்கீழ், 83,60,500 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை என் XXX —மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை என் XXX—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ், 3,17,79,400 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் XXXI— பஞ்சத் தணிப்பு.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XXXI— பஞ்சத் தணிப்பு என்ற தலைப்பின்கீழ், 3,71,400 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் XXXII— ஓய்வூதியங்கள்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XXXII— ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின் கீழ், 1,19,11,400 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் XXXIII— பல்வகை.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XXXIII— பல்வகை என்ற தலைப்பின்கீழ், 3,46,41,200 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் XXXIV— எழுதுபொருள் அச்சுத்துறை.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XXXIV- எழுதுபொருள் அச்சுத்துறை என்ற தலைப்பின்கீழ், 74,04,100 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப்பட்டது.



கோரிக்கை எண் XXXV—காட்டு வளத்துறை.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XXXV— காட்டு வளத்துறை என்ற தலைப்பின்கீழ், 53,31,700 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் XXXVI— ஏனைய இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XXXVI— ஏனைய இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ், 1,86,28,300 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப்பட்டது.

B ரெவின்யூ கணக்குக்குப் புறம்பான மூலதனச் செலவு.

கோரிக்கை எண் XXXVII— ஜமீன்தார்களுக்கு இழப்பீடு.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XXXVII—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின்கீழ், 3,66,700 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் XXXVIII— பொதுச் சுகாதார மூலதனச் செலவு.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XXXVIII— பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ், 4,39,700 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் XXXIX— வேளாண்மை மூலதனச் செலவு.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை என் XXXIX—வேளாண்மை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ், 17,58,700 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் XL—தொழில்கள், பொருளாதார வளர்ச்சிக்கான மூலதனச் செலவு.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை என் XL—தொழில்கள், பொருளாதார வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ், 2,59,98,700 ரூபாய்க்கு மேறபடாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் XLI— பாசன மூலதனச் செலவு.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை என் XLI— பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ், 2,60,97,100 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் XLII—பொதுப்பணிகள் மூலதனச் செலவுகள்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை என் XLII— பொதுப்பணிகள் மூலதனச் செலவுகள் என்ற தலைப்பின்கீழ், 1,28,67,600 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப்பட்டது.



**கோரிக்கை எண் XLIII— மோட்டார் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை என் XLIII— மோட்டார் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ்; 79,93,000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் XLIV—காட்டு வள மூலதனச் செலவு.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை என் XLIV— காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் 26,27,600 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் XLV— ஓய்வூதியங்களை மொத்தமாக்குதல்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை என் XLV—ஓய்வூதியங்களை மொத்தமாக்குதல் என்ற தலைப்பின்கீழ், 2,36,700 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் XLVI—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை என் XLVI— அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ், 25,92,35,400 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப்பட்டது.

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்—

**கோரிக்கை எண் XLVII—மாநில அரசாங்கம் வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன்:

"கோரிக்கை எண் XLVII—மாநில அரசாங்கம் வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ், 13,64,80,000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

7. அறிவிப்பு.

**தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதா.**

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதாவை இந்த அவைக்குக் கொண்டு வருவதற்கும், அதன் மீது விவாதிப்பதற்கும் மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் தமது இணக்கத்தைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை அறிவிக்கின்றேன்.

இந்த மசோதாவை மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் அவையின் முன் கொண்டு வருவார்கள்.

8. அரசாங்க மசோதாக்கள்.

**(அ) தமிழ்நாடு, 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதா.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதாவை அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நான் இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** இம்மசோதா அறிமுகம் செய்யப்படுகிறது.



**(இ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு மாவட்ட நகராட்சி (திருத்த) மசோதா.**

**மதிப்பிற்குரிய திரு. செ. மாதவன்:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சி (திருத்த) மசோதாவை இந்தச் சபையில் அறிமுகப்படுத்துவதற்கு அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மதிப்பிற்குரிய திரு. செ. மாதவன்:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நான் இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** இம் மசோதா அறிமுகம் செய்யப்படுகிறது.

இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைகின்றன. இந்த அவையின் அடுத்த கூட்டம் 25-3-1967 சனிக்கிழமை அன்று காலை 9 மணிக்கு நடைபெறும். வணக்கம். பிற் பகல் 1-28

பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

9. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

**A. Statutory Rules and Orders**

* 111. *Notification issued by the Collector of Coimbatore district, dated the 27th October 1966, relating to the removal of Sri A. N. Rasa Gounder from the office of the President, Anjanur Panchayat in Gobichettipalayam of Coimbatore district.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958)]. 1-28 p.m.

**B. Reports, Notifications and other papers.**

* 16. *Demands for Grants for Further Expenditure and Detailed Supplementary Estimates thereof for the year* 1966-67 (*English and Tamil*).

* 17. *Notice of Demands for Grants for Further Expenditure for the year* 1966-67 (*English and Tamil*).

* 18. *Final Supplementary Estimates*, 1966-67—*Speech of Hon. Thiru C. N. Annadurai, Chief Minister* (*English and Tamil*).

* Placed on the Table of the House on 21st March 1967.

LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

Messrs Account Test Institute, Egmore, Madras-8.
The City Book Co., Mylapore, Madras-4.
Messrs Higginbothams, Private, Limited, Madras-2.
Messrs New Century Book House (Private) Limited, Madras-2.
Messrs. P. Varadachari & Co., Madras-1.
Messrs. C. Subbiah Chetty & Sons, Madras-5.
Sri S. S. Srinivasaraghavan, Royapettah, Madras-14.
The Educational Agencies, Book-sellers, Madras-1.
The Universal Book House, Moore Market, Madras-3.
Messrs. Rukmani Corporation, Vepery, Madras-7.
Messrs. Mohan Pathipagam and Book Depot, Madras-5.
Messrs. Book Corner, Book-Sellers, No. 2/4. Mount Road, Madras-2.

IN MOFUSSIL OF MADRAS STATE.

Sri E. M. Gopalakrishna Kone, Madurai, Madurai district.
The Oriental Book House, Madurai.
Messrs. Vivekananda Press, Printers, Publishers and Book-sellers, Madurai.
Sri A. Venkatasubban, Vellore, North Arcot district.
Messrs. Bharatha Matha Book Depot, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. Nathan & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. Appar Book Stall, Thanjavur.
Messrs. P. N. Swaminathasivam & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. Krishnaswamy & Co., Tiruchirappalli.
Messrs. Palaniappa Brothers, Tiruchirappalli.
Sri S. R. Subramania Pillai, Tirunelveli, Tirunelveli district.
Messrs. Nellai Puthaga Nilayam, Book-sellers, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B. Aruldoss, Villupuram Town, South Arcot district.
Sri V. B. Ganesan, Villupuram, South Arcot district.
Messrs. Vasantham Stores, Book-sellers, Cross Cut Road, Coimbatore.
Messrs. Mercury Book Company, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. Jagannathan, Book-seller and Publisher, Nagercoil, Kanyakumari district.
Messrs. A. K. Chandriah Chettiar & Sons, Salem.
Messrs. Meenakshi Pathipagam, Pudukkottai.
Messrs. K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai district.
Messrs. Balaji Book House, Vellore, North Arcot district.
Messrs. Jayakumari Stores, Nagercoil, Kanyakumari district.
Messrs. Baby Stores, Book-sellers, Villupuram, South Arcot district.
Messrs. Dinamani Stores, Coimbatore-18.
Messrs. Bharathi Puthaga Nilayam, Publishers and Book-sellers, 1-B, Town Hall Road, Madurai-1.

IN OTHER STATES.

Messrs. Janatha Agencies, Book-sellers Gudur.
Messrs. Jain Book Agency, New Delhi-1.
Messrs. International Book House, Trivandrum.
Messrs. Firma K. L. Mukhopadhyay, Calcutta-12.
Messrs. Book Links Corporation, Narayanaguda, Hyderabad-29.
Messrs. The Books Syndicate, Hyderabad-1.
Messrs. Labour Law Publications, Hyderabad.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS ON THE AUTHORITY OF THE SPEAKER OF THE LEGISLATIVE ASSEMBLY.

R. R. No. 299/67 AS.O(B)

வெளியீடு—16—10—1967]
Issued—16—10—1967]

MADRAS RECORD OFFICE 26 OCT 1967 EGMORE, MADRAS 8

வாய்மையே வெல்லும்

# தமிழகச் சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

சனிக்கிழமை, 1967 மார்ச் 25
**Saturday, 25th March 1967**

தொகுதி I—எண் 7
**Volume I—No. 7**

©
தமிழக அரசு
1967
©
GOVERNMENT OF MADRAS
1967

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.
*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை, 50 காசுகள்]
**Price, 50 Paise]**

7

## உள்ளடக்கம்.


| | பக்கங்கள் |
|---|---|
| 1. அரசினர் மசோதாக்கள்— | |
| (அ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சட்டப் பேரவை (தகுதியின்மைகள் தடுப்பு) மசோதா .. .. .. | 485–487 |
| (இ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா .. | 575 |
| 2. 1966–67-ம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதித் தணிக்கை அறிக்கை—பொது விவாதம் .. .. .. .. | 487–539<br>540–567 |
| 3. ஒழுங்குப் பிரச்சினைகள்— | |
| (அ) பேரவையில் பேசும் முறை .. .. .. .. | 539 |
| (இ) பேரவையில் பயன்படுத்தக்கூடாத சொற்கள் .. .. | 540 |
| 4. 1966–67-ம் ஆண்டில் மேற்கொண்ட செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு— | 567–575 |

### A. ரெவின்யூக்கணக்கில் செலவு.

| | | பக்கங்கள் |
|---|---|---|
| கோரிக்கை எண் | I—நிலவரித் துறை .. .. | 567–568 |
| கோரிக்கை எண் | II—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் .. .. | |
| கோரிக்கை எண் | III—பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் .. | |
| கோரிக்கை எண் | V—பத்திரப் பதிவுத் துறை .. | |
| கோரிக்கை எண் | VII—தேர்தல்கள் .. .. | |
| கோரிக்கை எண் | VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் .. | |
| கோரிக்கை எண் | IX—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் .. .. | |
| கோரிக்கை எண் | X—நீதி நிர்வாகம் .. .. | |
| கோரிக்கை எண் | XI—சிறைச்சாலைகள் .. .. | |
| கோரிக்கை எண் | XII—போலீஸ் .. .. .. | |
| கோரிக்கை எண் | XIII—கல்வி .. .. .. | |
| கோரிக்கை எண் | XIV—மருத்துவம் ... .. | 569–570 |
| கோரிக்கை எண் | XV—பொதுச் சுகாதாரம் .. | 569 |
| கோரிக்கை எண் | XVI—வேளாண்மை .. .. | |
| கோரிக்கை எண் | XVII—மீனளம் .. .. .. | |
| கோரிக்கை எண் | XVIII—கால்நடை வளர்ப்பு .. | |
| கோரிக்கை எண் | XIX—கூட்டுறவு .. .. .. | 570 |
| கோரிக்கை எண் | XX—தொழில்கள் .. .. | 570 |
| கோரிக்கை எண் | XXI—சின்கோனா .. .. .. | 571 |
| கோரிக்கை எண் | XXIII—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன .. .. | |
| கோரிக்கை எண் | XXIV—தொழிற்சாலைகளும் தொழிலாளர் நலனும் .. | |
| கோரிக்கை எண் | XXV—ஆதிவாசிகள், ஹரிஜனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் .. .. | 571 |

பக்கங்கள்

4 1966-67-ம் ஆண்டில் மேற்கொண்ட செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

A. ரெவின்யூக்கணக்கில் செலவு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் XXVI—பாசனம் .. .. .. 571–572

கோரிக்கை எண் XXVII—பொதுப் பணிகள்—பணிகள்
கோரிக்கை எண் XXVIII—பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும் ..
கோரிக்கை எண் XXIX—பொதுப் பணிகள்—உதவி மானியங்கள் .. ..
கோரிக்கை எண் XXX—மோட்டார்ப் போக்குவரத்துத் திட்டங்கள் .. .. } 572–573
கோரிக்கை எண் XXXI—பஞ்சத் தணிப்பு .. ..
கோரிக்கை எண் XXXIII—பல்வகை .. .. ..
கோரிக்கை எண் XXXIV—எழுதுபொருள்—அச்சுத்துறை
கோரிக்கை எண் XXXV—காட்டுவளத் துறை .. ..
கோரிக்கை எண் XXXVI—ஏனைய இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் .. ..

B. ரெவின்யூக்கணக்குப் புறம்பான மூலதனச் செலவு.

கோரிக்கை எண் XXXVIII—பொதுச் சுகாதார மூலதனச் செலவு .. .. .. 573–574

கோரிக்கை எண் XLI—தொழில்கள் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு ..
கோரிக்கை எண் XLII—பாசன மூலதனச் செலவு ..
கோரிக்கை எண் XLIII—பொதுப் பணிகள் மூலதனச் செலவுகள் . ..
கோரிக்கை எண் XLVI—ஓய்வூதியங்களை மொத்தமாக்குதல் .. .. } 575
கோரிக்கை எண் XLVII—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு .. .. ..

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

கோரிக்கை எண் XLVIII—மாநில அரசாங்கம் வழங்கும் கடன்களும், முன்பணங்களும் .. .. ..

5 அறிவிப்புகள்—

(அ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்கு மசோதா .. 57

(இ) பேரவை அலுவல் ஆய்வுக்குழுவின் தீர்மானங்கள் .. 575–57

6 பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. . 57

## தமிழக சட்டப் பேரவை

*சனிக்கிழமை, 1967 மார்ச் 25.*

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் திரு. சி. ப. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவைக் கூடியது.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** இந்தச் சட்டப் பேரவையின் முதல் அலுவல், கேள்விகள் பதில்கள். மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்வதற்கு கேள்விகள் இல்லை. ஆகையால், அடுத்த அலுவல், மாண்புமிகு மன்ற முதல்வர், கல்வி அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சட்டப் பேரவை (தகுதியின்மைகள் தடுப்பு) மசோதாவைக் கொண்டு வர அனுமதி கோருவார்கள்.

### 1. அரசினர் மசோதாக்கள்

### (அ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சட்டப் பேரவை (தகுதியின்மைகள் தடுப்பு) மசோதா.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சட்டப் பேரவை (தகுதியின்மைகள் தடுப்பு) மசோதாவை முன்னுரைக்க அனுமதி கோருகிறேன்.

**திரு. ரா. கனகசபை :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். இந்த மசோதா சபை முன் வருவதற்குமுன் அங்கத்தினர்களுக்கு முதல் நாளே அதை அனுப்பிவிட வேண்டும்.

If a motion for leave to introduce a Bill is opposed, the Speaker, after permitting, if he thinks fit, a brief statement from the member who moves and from a member who opposes the motion, may put the question thereon.

என்றிருக்கிறது நமது பேரவை விதி. 'அப்போஸ்' செய்வது என்று சொன்னால் மசோதாவின் கருத்து தெரிந்தால்தான் மேலே பேச முடியும். லோக் சபையில் கூட மசோதா முதல் நாளே எல்லா அங்கத்தினர்களுக்கும் அனுப்பப்பட்டு விடுகிறது. ஆகவே, இனிமேல் ஒரு மசோதா மறுநாள் இங்கு சபை முன் வருகிறது என்றால் முன்பே அதை அங்கத்தினர்களுக்கு அனுப்பி விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1967 மார்ச் 25

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** இந்த ஒழுங்குப் பிரச்சினை மீது என்னுடைய தீர்ப்பு. இந்தச் சட்டப் பேரவையின் நடவடிக்கைகள் நம் 249 விதிகளுக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும். 249 விதிகளுக்கு உட்படவில்லை என்றால் அரசியல் சட்ட 194-வது பிரிவின்படி ஹவுஸ் ஆஃப் காமன்ஸ், இங்கிலாந்திலுள்ள பாராளுமன்றத்தில் என்ன நடைமுறையோ அந்த நடைமுறையை நான் கடைப்பிடித்தாகவேண்டும். அரசியல் சட்டபடி நான் நடப்பேன் என்று நான் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டிருக்கிறேன். ஆகவே, நம்முடைய 249 விதிகளுக்கு அப்பாற்பட்டு ஏதாவது ஒரு கருத்து இருக்குமானால், இங்கிலாந்து நாட்டிலுள்ள பாராளுமன்ற நடைமுறைப்படி நான் நடக்க கடமைப்பட்டிருக்கிறேன். அரசியல் சட்ட 194 பிரிவுப்படி லோக் சபாவில், டெல்லியில் என்ன நடக்கிறதோ அதன்படி நடக்க வேண்டும் என்பது அரசியல் சட்டமல்ல. ஆகவே, இந்த மசோதாக்கள் எல்லாம், நடைமுறை எப்படியென்றால் மூன்று முறை இந்தப் பேரவை முன்னால் வைக்கப்படும். முதல் முறை சட்டப் பேரவையின் அனுமதியோடு மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் அதைக் கொண்டுவருவார்கள். அதற்குப் பின்னால் அந்த மசோதாவானது கெஸட்டில் அறிவிக்கப்பட்டு எல்லோருக்கும் வழங்கப்படும். பிறகு இரண்டாவது முறை வாசிப்பு நடக்கும். அப்போது ஒவ்வொரு பிரிவும் தனித்தனியாகவே விவாதிக்கப்படும். மூன்றாவதாக நிறைவேற்றப்படும். இந்த நடைமுறைப்படி இப்போது மாண்புமிகு மன்ற முதல்வர் அவர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானம்—"தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சட்டப் பேரவை (தகுதியின்மைகள் தடுப்பு) மசோதாவைக் கொண்டுவர பேரவை அனுமதி அளிக்கிறது" என்பது தீர்மானம்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை முன்னுரைக்கிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** இந்த மசோதா முன்னுரைக்கப்படுகிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன கருத்து என்னவென்றால், முதலில் இன்ட்ரட்யூஸ் செய்த பிறகுதான் பப்ளிகேஷன் செய்யவேண்டுமென்று விதி சுத்தமாக இருக்கிறது. இருந்தபோதிலும் அங்கத்தினர்களின் தகவலுக்காக சர்குலேஷன் செய்யும் மற்ற பேப்பர்களுக்கு இணங்க இதையும் அப்படிச் செய்வதாயிருந்தால்



(திரு. பி. ஜி. கருத்திருமன்) [1967 மார்ச் 25

நல்லதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். விதிகளைத் திருத்தியாவது மசோதாவை முன்னால் கொடுக்கவேண்டும் என்பது கருத்து என்று நினைக்கிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** மாண்புமிகு நண்பர், எதிர்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பியுள்ளார். அதன் மீது என்னுடைய தீர்ப்பைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு மசோதாவை முதல் முறையாக இந்தச் சட்டப் பேரவையின் முன் கொண்டுவரும்போது எவருமே எதிர்ப்பது கிடையாது. ஆகவே, அதன்படி முதன் முறையாக இந்தச் சட்டப் பேரவையில் மசோதாவைக் கொண்டு வருவதை எதிர்த்துப் பேசுவதற்கு இடம் அளிக்கவேண்டுமென்று கேட்பது சரியல்ல. . . .

**திரு. ரா. கனகசபை :** விதி 92 (1)-ல் பேசலாம் என்று இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மறுத்துப் பேச என்று சொல்லவில்லை. அங்கத்தினர்களுக்கு முதலில் தகவல் கொடுக்கவேண்டுமென்ற நிலை இருக்கவேண்டும் என்கிறார்கள்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** இந்த அவையின் முன் கொண்டுவர அனுமதித்து அவைமுன் வைக்கப்பட்ட பிறகு கெஸட்டில் வெளியிடப்பட்டு மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் எல்லோருக்கும் ஒவ்வொரு பிரதி கொடுக்கப்படும். அதுதான் வழக்கம். அதுதான் பேரவையின் விதிமுறை.

**திரு. ரா. கனகசபை :** விதி 92 (1)-ல் இருக்கிறது.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** பேசுவதற்கு அனுமதி மறுக்கவில்லை. மாண்புமிகு மன்ற முதல்வர் அவர்கள் மசோதாவை கொண்டுவந்தபோது எதிர்ப்பதற்கு யாராவது இருந்தால் அவர்கள் பேசியிருக்கலாம். அப்போது பொதுவான விவாதம் வேண்டுமென்று கோரினால் கொடுத்தாகவேண்டும். அதற்காக முன் கூட்டியே அந்த மசோதாவின் பிரதி கொடுக்கவேண்டுமென்று விதிகளில் இல்லை.

## 2. 1966–67-ம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதித் துணை அறிக்கை—பொது விவாதம்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** அடுத்து, கடந்த 1966–67-ம் ஆண்டுக்கான செலவு குறித்த—கடந்த ஆண்டு என்று சொல்லும்போது இன்னும் ஒரு வாரத்தில் முடியப் போகும் ஆண்டுக்கு உண்டான செலவு—இறுதித் துணை அறிக்கைமீது இப்போது பொது விவாதமும், அதற்குப் பிறகு மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும் இன்று நடைபெற இருக்கின்றன. மாண்புமிகு அங்கத்தினர்கள் வெட்டுத் தீர்மானங்கள்

1967 மார்ச் 25] [பேரவைத் தலைவர்]

கொடுத்திருக்கிறார்கள். அவர்களின் கருத்துக்களை பொதுவிவாதத்தின்போது பேசி தெரிவித்துவிடும்படி கேட்டுக்கொள்கிறேன். ஒரு மணிக்கு வாக்கெடுப்பு நடைபெறும்போது அப்போது தங்கள் **கருத்துக்களைப் பற்றி பேசுவதற்கு நேரம் இருக்காது. ஆகவே,** வெட்டுத் தீர்மானம் கொடுத்திருப்பவர்களுக்கு எல்லாம் முன்பே பேச வாய்ப்பு கொடுப்பேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கனவே துணை மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது பொது விவாதம்.

* THIRU M. WILLIAM: Mr. Speaker, Sir, in supporting the Supplementary Demands, I wish to say a few words. The Supplementary Demands relate only to past performances and the works which have already been completed and executed. It may be observed by the Hon. Minister for Works that they may be completed in the course of this year. As a Member who belongs to the Congress Party, I am bound to support the several demands that have been made under the Supplementary Grants. But I wish to point out at the very outset that the present Ministry which has already observed strict economy will try to extend the same principle in works that are being done departmentally by the Government or under the contract system. We feel that there has been throughout wasteful expenditure in the several undertakings run by the Government. To avoid such wasteful expenditure, much vigilance is required and, I am sure, the Ministry which embarked on such a policy will do well to apply the same principle in all the works undertaken by them. In this connection, I also wish to point out, that several important items of work which ought to have been done are not being done especially in these days when there is a shortage of food supplies. Some important works which ought to have been completed before, have not been completed. For instance, the Neyyar Left Bank Channel works for which an initial provision of Rs. 42 lakhs was made, an expenditure of Rs. 1 crore has been incurred; yet, the work has not been completed. Some of the Branch Channels have not been opened. Sluices are not put in the proper places in the main channel. Even some of the sluices that are put, are so narrow that they are not sufficient. The result is that the target has not been achieved and I request that at least present Government will devote its formost attention to this important piece of work.

Another important piece of work which ought to be taken up is the opening of a Branch Channel in the Chittar Pattanamkal from Karingal to Palapallam. This is a Branch Channel which is to be opened under the Pattanamkal Scheme and this work has not been carried out. I hear that this important piece of work is to be dropped on the ground that there may be paucity of water in the dam. The Pattanamkal Scheme was started on the strict understanding that only if there was surplus water, it would be taken to Radhapuram. Sir, Karingal-palapallam branch will



25th March 1967] [Thiru M. William]

bring under cultivation 2,000 acres of paddy lands and it would cost the Government about half a lakh of rupees and if this is to be dropped for the sake of supplying water to dry lands in Radhapuram, I strongly object to this procedure. I earnestly request the Hon. Minister for Works to devote his personal attention to this matter and issue instructions to take up Karingal palapallam branch work.

With regard to procurement, I hear a lot of complaint from the people, especially from the people of the Kanyakumari district. Small landowners owning half an acre or one acre are being compelled to contribute their quota of foodgrains. If such small landowners are treated like this, I am afraid that they may not be encouraged to cultivate their lands and perhaps they may abandon their lands or they may turn to the cultivation of commercial crops. So, in the matter of procurement we ought to be careful and we should not in any way harass the poor ryots. At least a minimum extent of two acres must be exempted from procurement. Surplus paddy should be taken only from the agriculturists who own more than three acres and that may be done on a graded scale.

Also, the family card system is not working properly. My request is that this system must be worked properly or statutory rationing may be introduced. If statutory rationing is not possible, if full ration is not given allow the open market also to function. If the Government do not give full ration and also do not allow the open market to function, the poor people especially the labourers will be put to great hardship especially in the matter of getting food supplies, they may have to face starvation. So, I request the present Ministry to consider all these matters and follow a policy which will bring in prosperity to our land. With these words, I conclude my speech.

* திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, துணை மானியக் கோரிக்கைகளின் மீது பேசும் வாய்ப்புக் கிடைத்ததைப்பற்றி நான் மகிழ்ச்சி கொள்கிறேன்.

அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்துகொண்டிருக்கிறது. உதாரணமாக, இப்போது விவசாயத்தை எடுத்துக்கொண்டாலோ ஒரு கோடி ரூபாய்க்கு மேல் விவசாயத் துறையிலே செலவு செய்ய நிதி ஒதுக்கீடு கோருகிறது. அப்படிச் செய்வதிலே எதிர்பார்க்கும் அளவுக்குப் பலன் கிடைக்கிறதா என்பதைப் பற்றி நாம் பார்க்கவேண்டும்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னதாக ஒரு தாலுகா அலுவலகத்திற்குச் சென்றால் ஏதோ ஒரு தாசில்தார் இருப்பார்; அவருக்குத் துணையாக டெபுடி தாசில்தார் என்பவர் இரண்டொருவர் இருக்கக்கூடும். ஆனால், இன்றைக்கு அதே அலுவலகத்திற்குச் சென்று பார்த்தால், ஒன்றுக்கு பத்தாக, தாசில்தார்கள், டெபுடி தாசில்தார்கள், எழுத்தர்கள் எண்ணிக்கை அதிகப்பட்டுக் கொண்டே போகிறது. இவ்வளவு ஆட்களை வைத்துக்கொண்டு

[திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்] [1967 மார்ச் 25

இந்த நிர்வாகத்தை நடத்துவதிலே என்ன அதிக வேலைகள், அலுவல்கள் வந்துவிட்டன என்று பார்க்கும்போது எல்லாம் ஒரே மாதிரித்தான் இருக்கிறது. அந்தக் காலத்தைவிட இன்று ஒரு பேப்பர் ஒரு இடத்திலிருந்து ஒரு இடத்திற்கு மாறுவது என்றால், மாதக்கணக்கில், வருஷக்கணக்கில் ஆகிறது. சாதாரணமாக ஒரு நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்கென்று ஒருவர் வாட்டர் டிக்கெட்டிற்கு (Water ticket) விண்ணப்பம் போட்டால், வருஷக் கணக்கில் பைசல் செய்யப்படாமல் இருக்கிறது. எனக்குத் தெரிந்த ஒரு கேஸைச் சொல்ல முடியும். அதனுடைய நடைமுறை, ஃபார்மாலிட்டீஸ், சிவப்பு நாடா இவைகள் போகிற போக்கு, அதைத் தாசில்தாருக்கோ அல்லது கலெக்டருக்கோ அனுப்பினால் அங்கே சில மாதங்கள் தங்கி, பி.டபிள்யூ.டி-ல் பல மாதங்கள் தங்கி, அங்கே போய்ப் பார்த்து அனுப்பினாலும் கலெக்டரிடம் வந்து, அங்கே இரண்டு மாதம் இருந்து, பிறகு ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்குப் போய் இப்படிப் பல மாதங்கள் ஆகின்றன. அதிக உத்தியோகஸ்தர்களை ஏற்படுத்தி சம்பளமாக இவ்வளவு தொகையைச் செலவு செய்த பின்னும் ஏன் இவ்வளவு தாமதம்? அதே மாதிரிதான் ஒவ்வொரு துறையிலும் நடக்கிறது. சாதாரணமாக பஞ்சாயத்தை எடுத்துக்கொண்டால், 1958-ல் பஞ்சாயத்துச் சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்னதாக ஏதோ ஒரு சில பஞ்சாயத்துக்கள் இருந்துகொண்டிருக்கும். பஞ்சாயத்து வரியைக் கொண்டே அந்தப் பஞ்சாயத்து நிர்வாகம் நடந்துவிடும். ஆனால், இப்பொழுது அப்படிப்பட்ட நிலை எல்லாம் இல்லை. சாதாரணமாக பஞ்சாயத்து ஒன்றிப்பு அலுவலகங்களை எடுத்துக்கொண்டால், அதிலே இருக்கின்ற ஆட்கள், சேவகர்கள், உத்தியோகஸ்தர்கள் எண்ணிக்கை கொஞ்சம் நஞ்சம் அல்ல. அத்தனை பேர்களும் என்ன வேலை செய்துகொண்டிருக்கிறார்கள்? முன்பு ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் செய்துகொண்டிருந்த வேலையைத்தான் செய்துகொண்டிருக்கிறார்கள். சாதாரணமாக எதற்கு எடுத்தாலும் ஒரு கட்டுப்பாடு; எதற்கு எடுத்தாலும் ஒரு தடை. ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி ஒவ்வொரு பேப்பரும் தாமதப்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு காரியத்தையும் சீக்கிரம் நடத்தித்தரவேண்டும்; பொது மக்களுக்கு சௌகரியம் செய்து தரவேண்டும்; அவர்களுடைய கோரிக்கைகளை உடனே நிறைவேற்றித் தரவேண்டும். அப்படியில்லாமல் இப்படிப்பட்ட சிவப்பு நாடா காரணமாக பேப்பர்ஸ் தாமதப்படுத்தப்படுகின்றன. நாம் அதிகமாக ஆட்களை நியமித்தும், பணத்தை அதிகமாகச் செலவு செய்தும், பேப்பர்கள் சீக்கிரமாக பைசல் ஆகவில்லை என்றால் என்ன பிரயோசனம்? ஒரு குடிமகன் ஏதாவது ஒரு கோரிக்கை விடுத்தால், ஏறக்குறைய ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்களுக்குள்ளாக அந்த பேப்பர் பைசல் செய்யப்படவேண்டும். அதைவிட்டு விட்டு, ஒரு பேப்பர் பைசல் ஆவதற்கு ஒரு வருஷம் அல்லது இரண்டு வருஷம் ஆனால், நாம் ஏன் இவ்வளவு தொகை செலவு செய்யவேண்டும், இவ்வளவு உத்தியோகஸ்தர்களை நியமிக்க வேண்டும் என்பதை அரசாங்கம் யோசித்துப் பார்க்கவேண்டும்.



1967 மார்ச் 25] [திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்]

குடிதண்ணீர் வசதிகளைப் பற்றிய சில விண்ணப்பங்களை, மதிப்பிற்குரிய ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். ஒரு முனிசிபாலிடிக்கு—ஒரு பெரிய நகரத்திற்கு—தண்ணீர் எடுத்துக்கொண்டு போவது—பாதுகாப்புத் தண்ணீர் திட்டம் நிறைவேற்றுவது என்றால் அந்த ஸ்கீமின் மெயின் பைப்—பெரிய குழாய்—போகும் வழியில் உள்ள கிராமங்களுக்குக் குடிதண்ணீர் சப்ளை செய்யவேண்டும் என்பது சர்க்கார் பாலிஸியாக இருந்தும்கூட, நடைமுறையில் எத்தனையோ சிக்கல்கள். திருப்பூர் முனிசிபாலிடிக்குத் தண்ணீர் கொண்டு போகும் வழியில் இருக்கிற அவினாசி நகரப் பஞ்சாயத்து, திருமுருகன்பூண்டி கிராமப் பஞ்சாயத்து, கருவலூர் பஞ்சாயத்து ஆகிய இடங்களில் ஒரு குழாய், இரண்டு குழாய் என்று பெயரளவில் வைத்துவிட்டு அவர்களிடம் பெருந்தொகை கேட்கப் பட்டிருக்கிறது. கோபிசெட்டிப்பாளையம் முனிசிபாலிடிக்கு மெயின் குழாய்கள் போகும் வழியிலுள்ள லக்கம்பட்டி பஞ்சாயத்து, காட்டடிப்பாளையம், நல்லகவுண்டன்பாளையம் போன்ற கிராமங்களுக்குத் தண்ணீர் சப்ளை செய்யப்பட வில்லை. வருஷக் கணக்கில் தாமதம் ஆகிறது. கிராமங்களுக்குப் பாதுகாப்புக் குடி தண்ணீர் வசதி அவசியம். இடையிலே உள்ள கிராமங்களுக்குக் குடிதண்ணீர் கொடுக்கிறோம் என்று சொல்லப் பட்டிருந்தாலும், அதற்கு வேண்டிய இன்வெஸ்டிகேஷன்ஸ் பூர்த்தியாயிருந்தாலும் பஞ்சாயத்துக்கள் முன்பணமாகக் கட்டவேண்டிய தொகை கட்டியிருந்தாலும், ரூ. 10,000, 20,000 டெபாஸிட் கட்டவேண்டும், அல்லது கவர்ன்மெண்டிலிருந்து மான்யமாகவோ அல்லது கடனாகவோ பெற்றுத் தரவேண்டும் என்று சொல்லப்பட்டு அம்மாதிரி தொகை வாங்கித்தரப்பட்டும், அந்தக் கிராமங்களில் இன்னும் குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படவில்லை. குழாய்கள் வந்து இரண்டு வருஷங்களாக தூங்கிக்கொண்டிருக்கின்றன. கிராமங்களில் குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு இவ்வளவு தாமதம் ஆகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நேரில் பார்த்து கேட்டும் கூட இன்னும் பேப்பர்கள் நகரவில்லை. இதைத் துரிதமாகக் கவனிப்பதற்கு வழிவகைகள் செய்வது மிகவும் முக்கியம்.

மற்றொரு முக்கியமான காரியம். கொள்முதலை எடுத்துக் கொண்டால் அதற்குச் செலவழிக்கின்ற பணம் கொஞ்சம் நஞ்சம் இல்லை. அதற்காக இவ்வளவு பெரிய எஸ்டாபிளிஷ்மெண்டு, எவ்வளவோ ஆட்களையும், உத்தியோகஸ்தர்களையும் வைத்துக் கொண்டிருக்கிறோம். மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் ஏழை எளியவர்களைத் தட்டிக் கொடுத்துத்தான் கொள்முதல் செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள். அவர்களைக் கட்டாயப்படுத்தி கொள்முதல் செய்யச்சொல்லவில்லை என்று ஒரு முறை அல்ல பல முறை அவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம். அது மிகவும் வரவேற்கத்தக்கது. இருந்தாலும் கூட ஒரு ஏகரா, இரண்டு ஏகரா, மூன்று ஏகரா, நான்கு ஏகரா நிலம் வைத்துக்கொண்டிருக்கிற நிலச்சுவான்தார்கள் அதிகமாகத்

துன்புறுத்தப்படுகிறார்கள். 10 மூட்டைகள் வைத்துக்கொண்டிருப்பவர்கள் 5 மூட்டைகள் கொடுக்கவேண்டும், 5 மூட்டைகள் வைத்துக்கொண்டிருப்பவர்கள் 2 அல்லது 3 மூட்டைகள் கொடுத்துவிடவேண்டும். அதாவது ஒரு டார்ஜெட்டை வைத்துக்கொண்டு, கொள்முதலை அதிகப்படுத்துவதற்காக கட்டாயமாகக் கேட்கிறார்கள். இம்மாதிரி ஏழை எளிய விவசாயிகள் கஷ்டப்படுத்தப்படுகிறார்கள் என்று எனக்குக் கடிதம் மூலம் தகவல் வந்திருக்கிறது. அம்மாதிரி வந்த கடிதத்தை வேண்டுமானாலும் இந்த மன்றத்தில் படிக்கத் தயாராக இருக்கிறேன். ஏழை எளிய விவசாயிகள் உத்தியோகஸ்தர்களுடைய கண்டிப்புக்கு ஆளாகிறார்கள் என்பது நடைமுறையிலே பிரத்தியட்சமாகத் தெரிந்த விஷயம். மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள், கொள்முதலில் வித்தியாசம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை, எல்லோரையும் ஒரே மாதிரியாக பாவிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அது சாதாரணமாக கொள்கை அளவுக்கு சௌகரியமாக இருக்கலாம். பெரிய நிலச்சுவான்தார்களுக்கும் கட்டாயக் கொள்முதல் இல்லாமல் செய்துவிடுவது மிகவும் நல்லதுதான். 1952-ல் மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் முதல் அமைச்சராக வந்தபொழுது மத்திய சர்க்காருடைய யோசனை அல்லது எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், மத்திய சர்க்கார் உணவு மந்திரி திரு. கித்வாய் போன்றவர்கள் சொல்லியும் கேட்காமல், கொள்முதலை எடுத்துவிட்டார்கள். பிறகு கொஞ்ச நாட்களிலே ரேஷனையும் அமல் நடத்தவில்லை. அதனால் ஜனங்களுக்கு சௌகரியம் ஏற்பட்டது. அந்த முறையில் தாம் படிப்படியாகக் கொள்முதலைத் தளர்த்துவதாகச் சொல்லி, கனம் உணவு அமைச்சர் அவர்கள் ஒரு ஏக்கருக்கு இப்பொழுது கொள்முதல் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள் போலும். முன்பு ½ ஏக்கருக்கு இல்லை; இப்பொழுது ஒரு ஏக்கருக்கு இல்லை. சாதாரணமாக கைம்பெண்கள், 5 மூட்டைகள் வைத்துக்கொண்டிருந்தால் அதில் மூன்று மூட்டைகளைக் கொள்முதல் செய்துவிட்டால், அவர்கள் சாப்பிடுவதற்கே நெல் போதவில்லை, அரை வயிற்றுக் கஞ்சிக்குத்தான் வருகிறது என்று சொல்கிறார்கள். சாதாரணமாக நாம் இங்கே சொல்வது ஒன்று, உத்தியோகஸ்தர்கள் நடந்துகொள்ளும் முறை ஒன்று. காரியங்கள் நடைமுறையில் வேறு விதமாகத்தான் நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே ரெவின்யூ இலாகா உத்தியோகஸ்தர்களாக இருந்தாலும் சரி, ரெவின்யூ இலாகாவின் கீழ் ப்ரொக்யூர்மெண்டுக்கென்று நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் நடைமுறையில் மிகவும் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும் என்று அரசாங்கம் கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கவேண்டும். நடைமுறையில் கஷ்டங்கள் எத்தனையோ இருக்கின்றன. இப் புதிய சர்க்காரிடமிருந்து மக்கள் எவ்வளவோ நல்ல காரியங்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். உணவுப் பிரச்னைதான் மிகவும் முக்கியமான பிரச்னை என்பது நாம் எல்லோருக்கும் தெரியும்.





தரப்படவில்லை. கீழே உள்ள அதிகாரிகளைப் போய்க் கேட்கும்போது அரசாங்க உத்தரவு வரவேண்டுமென்று கூறி தட்டிக்கழித்துவிடுகிறார்கள். எனவே, இதை அவைத் தலைவர் அவர்கள் மூலமாக அமைச்சரவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், கடலோரப் பகுதியாகிய மணற்பாடு, பெரியதாழை கிராமங்களில் புயலால் பாதிக்கப்பட்டுள்ள வீடுகள் இருக்கின்றன. மக்கள் அந்த வீடுகளில் தங்க முடியாமல் வெளியே சென்று குடியேறியிருக்கிறார்கள். அவர்களுக்கும் வீடு கட்டிக் கொள்ள வசதியாகக் கடன் கொடுத்து உதவவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த உப மான்யக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறபோது குறுக்கிட வேண்டாமென்று நான் கருதினேன். ஏனென்றால் ரொம்ப விறுவிறுப்பாகப் பேசும்போது தடுக்கக் கூடாது என்பது ஒன்று. என்னதான் பேசுகிறார் என்பதை முழுதும் பேசுகிறவரை பார்க்கவேண்டும் என்று எனக்கு இருந்த ஆவல் மற்றொன்று. சென்ற தடவை நான் இங்கே சொன்னது, உறுப்பினர்கள் தங்கள் சம்பளத்தை 100 ரூபாயாகக் குறைத்துக் கொண்டால், நான் இதைக் கவனிக்கிறேன் என்று சொல்லவில்லை. ஆனால், நாங்கள் சம்பளமே இல்லாமல் வேலை செய்கிறபோது, அவர்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளாவிட்டால் மக்கள் தவறாகக் கருதுவார்கள் என்றுதான், அந்த விஷயத்தில் பொது மக்கள் எங்களைப்பற்றி அறிந்து வைத்திருப்பதைப்பற்றிப் பேசும்போது, அவர்களைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்பதையும் கவனிக்கவேண்டும் என்று கூறினேன்.

இன்னும் ஒன்று கனம் உறுப்பினர்களுக்குச் சொல்லுகிறேன். நாங்கள் இன்னமும் சம்பளம் வாங்கவில்லை. என்ன செய்ய இருக்கிறோம் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டுமே தவிர, உறுப்பினர் அவர்கள் அவ்வளவு அவசரப்பட வேண்டாம். நாங்கள் கொஞ்சம் விவரம் தெரிந்தவர்கள். (ஆரவாரம்.)

* திரு. மு. இராமன் : மன்றத் தலைவர் அவர்களே, 1966-67-ம் ஆண்டுக்கான இறுதி உபமானியக் கோரிக்கைகளின் விவாதத்தின் 12 00 ந.ப.
மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக சார்பில் அமைந்திருக்கும் மந்திரி சபையில் அறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக வீற்றிருக்கும் தமிழகத்தில் ஏழை எளிய மக்களுக்கு எதிர்காலத்தில் நல்ல பல காரியங்களை எடுத்து அமைதியாகவும் திறம்படவும் நடத்துவார்கள் என்பதை இந்த மன்றத்தின் முன்பு தெரிவித்துக்கொள்கிறேன்.

1957-ம் ஆண்டிலே இந்த மன்றத்திலே உறுப்பினராக இருந்த மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் என்னுடைய தொகுதியில் பல காலனி வாழ் மக்களுக்கு மனைக்கட்டு தேவை

[திரு. மு. இராமன்] [1967 மார்ச் 25

என்று இந்த சட்டமன்றத்தில் வினா எழுப்பினார்கள். இருபது ஆண்டு காலமாக இருந்த காங்கிரஸ் ஆட்சியில் என்னுடைய தொகுதியில் காலனி வாழ மக்களுக்கு மனைக்கட்டு வழங்கப்படவில்லை. வளவனூர் தொந்திரெட்டிப்பாளையம் பகுதியில் மனைக் கட்டு தேவை என்று சொல்லி நான்கில் ஒரு பங்குத் தொகை ரூ. 1,000 சர்க்காருக்கு முன் பணமாகக் கொடுத்தும், காலனி வாழ் மக்களுக்கு காங்கிரஸ் ஆட்சியில் மனைக்கட்டுகள் இன்னும் வழங்கப்படாமல் இருந்த காரணம் தெரியவில்லை. காங்கிரஸ் ஆட்சியில் ஏழை ஆதி திராவிட மக்களுக்கு மனைக்கட்டுகள் வழங்கினோம், குடி தண்ணீர் வசதி செய்து கொடுத்தோம் என்றெல்லாம் பிரமாதமாகப் பேசிக்கொள்கிறார்கள். இதுவரையில் என்னுடைய தொகுதியில் வழுதாவூர், வடவாம்பலம், பூசாரிப்பாளையம், சாலைபாம்பாளையம் ஆகிய கிராமங்களில் காலனிவாழ் மக்களுக்கு மனைக்கட்டுகள் கொடுக்கப்பட வேண்டும் என்று 1957-ம் ஆண்டில் இந்தச் சட்ட மன்றத்தில் உறுப்பினராக இருந்த மதிப்பிற்குரிய திரு. கோவிந்தசாமி அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், காங்கிரஸ் ஆட்சியில் அது கவனிக்கப்படவில்லை. இப்பொழுது வந்திருக்கும் நமது சர்க்கார் காலனிவாழ் மக்களுக்கு உடனடியாக மனைக்கட்டு வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழகத்தில் பஞ்சாயத்து ஒன்றிப்பு மன்றத்தின் கீழ் பணியாற்றும் ஆசிரியர்கள் பலவித அல்லல்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்களை அடிக்கடி ஒன்றிப்பு மன்றத் தலைவர்களும், சம்பந்தப்பட்ட ஆணையாளர்களும் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அவல நிலையை நீக்கி, ஒன்றிப்பு மன்றத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகள் அனைத்தையும் கல்வி இலாகாவே ஏற்று நடத்தினால் நலமாக இருக்கும், ஆசிரியர்களுக்கு இருக்கும் தொல்லைகள் நீங்கும் என்பதை இந்தச் சமயத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் விக்கரவாண்டி, கண்டமங்கலம் ஆகிய இடங்களில் மருத்துவ விடுதி இல்லாமல் ஏழை மக்கள், பின்தங்கிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். 1957-ம் ஆண்டில் இந்த சட்ட மன்றத்தில் பணியாற்றிய திரு. கோவிந்தசாமி அவர்கள் இந்த இடங்களில் மருத்துவ விடுதிகள் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். ஆனால் இன்றுவரையில் அந்த இடங்களில் மருத்துவ விடுதிகள் ஏற்படுத்தப்படவில்லை. இந்த அரசாங்கம் அதைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது வளவனூர் உயர்நிலைப் பள்ளியில் அரசினர் மாணவர் விடுதி ஒன்று இருக்கிறது. நாற்பத்தைந்து மாணவர்கள் பின்தங்கிய வகுப்பினர்கள், உயர்ஜாதி வகுப்பினர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் இலவசமாக உணவு அருந்துகிறார்கள். இருந்தாலும் ஏழை எளிய மாணவர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச்



1967 மார்ச் 25] [திரு. மு. இராமன்]

சேர்ந்த மாணவர்கள் சுமார் ஐந்து மைலுக்கு அப்பாற்பட்ட தூரம் வந்து படிக்கவேண்டியிருக்கிறது. ஆகையால் வளவனூர் அரசாங்க மாணவர் விடுதியில் 45 மாணவர்களாக இருப்பதை 75 மாணவர்களாக உயர்த்த சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன் வழுதாவூர், சித்தவம்பட்டு, கண்டமங்கலம் ஆகிய இடங்களில் உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. அங்கும் அரசினர் மாணவர்கள் உணவு விடுதிகளை ஏற்படுத்தித் தந்தால், ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் நல்ல முறையில் படித்து முன் வருவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வளவனூர் ஏரி தூர் வார வேண்டும். முன்னாள் சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றிய மதிப்பிற்குரிய திரு. கோவிந்தசாமி அவர்கள் தற்பொழுது ஆளும் கட்சி வரிசையில் விவசாயத் துறை அமைச்சராக இருக்கிறார்கள். அவர்கள் சட்ட மன்ற உறுப்பினராக இருந்த காலத்திலேயே வளவனூர் ஏரியில் தூர் வார வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தும், அந்த வேலையைச் செய்து முடிக்க முன்பிருந்த அரசு முன்வரவில்லை. வளவனூர் ஏரியில் 6 அடி, 7 அடி தூர் வாரி, நன்றாக கரையைப் பலப்படுத்தினால்தான் சுமார் 20, 25 கிராமங்களுக்கு நல்ல பலன் கிடைக்கும்.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வெள்ளம் அதிகமாக ஏற்பட்டு, பல கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. வடவாம்பலம், கொங்கம்பட்டு, பூவரசங்குப்பம், சின்னமடம், பெரிய மடம் ஆகிய கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பண்ணையாற்றுக்குப் பக்கத்தில் மலட்டார் என்ற ஆறு ஓடுகிறது. அந்த ஆற்றங்கரை ஓரத்திலுள்ள கிராமங்கள் இவை. ஆகவே, வெள்ளம் உள்ளே புகாமல் தடுப்பதற்கு மலட்டார் கரையோரமாக மதில் சுவர், தடுப்புச் சுவர் எழுப்பி, இந்தக் கிராமங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

* திரு. பி. எஸ். தனுஷ்கோடி : கனம் சபாநாயகர் அவர்களே, உபமான்யக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு எனக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தமைக்கு முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டம் அதிக உணவு உற்பத்தியாகக்கூடிய ஒரு மாவட்டம். அந்த மாவட்டத்தில் வெள்ளக் காலங்களில் விவசாயத்திற்கு அதிகமாக பாதிப்பு ஏற்படுகிறது என்பதை கனம் தலைவர் அவர்கள் மூலமாக அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். என்னுடைய தொகுதியாகிய திருவாரூர் தொகுதியில் ஓடம்போக்கியாறு, வெள்ளையாறு, பாண்டவையாறு, அடப்பாறு, வாளைவாய்க்கால்,

வெட்டாறு போன்ற ஆறுகள் ஓடுகின்றன. அந்த ஆறுகள் கடற்கரையை நோக்கிப் போகிற காலத்தில், கரைகள் ரொம்ப இடைக் குறுகலாக இருப்பதன் காரணமாக வெள்ளக் காலங்களிலே உடைப்பு ஏற்பட்டு, பல ஆயிரக்கணக்கான நிலங்கள் பாழாகி, விவசாயம் பாதிக்கப்படுகிறது. இந்தக் கரைகளை நல்ல முறையிலே செப்பனிடுவதற்கு, கரைகளைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை உடனடியாக எடுத்துக்கொண்டால்தான், அங்குள்ள விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க முடியும். வெள்ளத்தினால் பயிர்கள் பாதிக்கப்படாமல் மீட்கமுடியும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

வெள்ளத்தினால் பாதிக்கப்படுவது மட்டுமல்ல, வடிகால் வசதி இல்லாமல் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் நீர் தேங்கி பயிர்கள் நாசமாகின்றன என்பதை குறிப்பாக அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். முப்பத்திக் கோட்டகம், வல்லான் கோட்டகம், ஏறுவகாடு, வாழக்கரை, கீழையூர், ஈசனூர், சித்தாய்மூர் போன்ற கிராமங்கள் பள்ள கிராமங்களாக இருப்பதனால், சரியான வடிகால் வசதி இல்லாமல் கஷ்டமாக இருக்கிறது. பல வருஷங்களாக இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகள் சரியான பாசன வசதி இல்லை, வடிகால் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கோரிக்கைகள் விட்டிருந்தபோதிலும், பல அதிகாரிகள் வந்து பார்வையிட்டிருந்த போதிலும், இதுவரை ஒன்றும் வடிகால் வசதி செய்து கொடுக்கப்படவில்லை. நீர்த் தேக்கத்தினால் அந்த இடங்களில் நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன, வடிகால் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று குறைப்பட்டுக்கொண்டபொழுது, அங்கு இருக்கக்கூடிய ஒரு மிராசுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய நிலங்களைச் சர்க்கார் எடுத்துக்கொண்டு வடிகால் வசதி செய்யும்படியான நிலை இருக்கிறது. சர்க்காருக்கு அந்த நிலங்களை இனமாகக் கொடுத்தால் வடிகால் வசதி செய்து கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். இதுவரையிலும் எந்த நபரும் அதை எதிர்த்ததாகத் தெரியவில்லை. உடனடியாக புதிய அமைச்சர்கள் அதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, அம்மாதிரி வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய இடங்களில் வடிகால் வசதி செய்து கொடுத்தால், நிச்சயம் அந்தப் பகுதியில் கரையோரமாக இருக்கக்கூடிய நிலங்கள் பாதுகாக்கப்படும், அதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதையும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குத் தலைவர் அவர்கள் மூலமாகக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சர்க்கார் விவசாயப் பண்ணைகள் இருக்கின்றன. அந்தப் பண்ணைகளில் பொறுக்கு விதைகள் தயாரித்து விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்கிற நோக்கத்தோடு விநியோகிக்கும் முறை இருக்கிறது. ஆனால், அந்தப் பண்ணையில் விதை நெல் நல்ல முறையில், சரியான முறையில் காயவைத்து தயார் செய்வதில்லை. அப்படிச் செய்ய வேண்டிய அளவிற்கு அங்கே ஊழியர்கள் இருப்பதில்லை. உதாரணமாகச் சொல்லப்



போனால், விவசாயிகள் விதை வைப்பதென்றால், அறுவடையான உடனடியே, அதை தலையடி அடித்து, நன்றாகக் காயவைத்து, விவசாயிகள் விதை தயார் செய்கிறார்கள். ஆனால், இன்றையதினம் சர்க்கார் பண்ணையில் இருக்கும் விதைகள் காலத்தில் அறுவடை செய்யப்பட்டு, காய வைக்கப்படாமல், ஈரமான நெல்லை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் விதை தயாரிப்பது நல்ல முறையில் செய்வது கிடையாது. காலத்தில் அறுவடை செய்வது கிடையாது. நல்ல முறையில் தயார் செய்வதும் கிடையாது. இனிமேலாவது அப்படிப்பட்ட தவறுகள் ஏற்படக் கூடாது என்று அந்தக் குறைகள் நீங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு பஞ்சாயத்துக்களுக்குப் பல புறம்போக்கு நிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவை அந்தப் பஞ்சாயத்துக்களுக்குத் தேவையானவைகள்தானா என்பதை கவனத்தில் எடுத்துக் கொண்டு, பஞ்சாயத்துக்குத் தேவை, அப்படி அந்த பஞ்சாயத்திற்கு வேண்டிய, அவை செய்யக்கூடிய காரியங்கள், அபிவிருத்தி வேலைகள், விஸ்தரிப்புக்கள் இவற்றிற்குப் போனது போக, மீதம் உள்ள நிலத்தை நிலமற்ற விவசாயிகளுக்கு, விவசாயத்திற்கு லாயக்குள்ள நிலங்களை, சர்க்காரே நேரிடையாக எடுத்துக் கொண்டு, நிலமற்றவர்களுக்குக் கொடுக்க வகை செய்தால் நலமாக இருக்கும். ஆகவே, அப்படிச் செய்ய வேண்டும் என்று அமைச்சரைத் தலைவர் மூலமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். உதாரணமாக, நான் குடியிருக்கும் ஊரில்—நானும் ஒரு பஞ்சாயத்து போர்டு தலைவன்—13 ஏக்கரா நிலம் இருக்கிறது. அது பூராவும் சும்மாவே, தரிசாகவே கிடக்கிறது. நல்ல சாகுபடிக்கு லாயக்கான நிலம். அந்த நிலத்தை விவசாயத்திற்குக் கொண்டு வந்தால் உணவு உற்பத்திக்கு உதவியாக இருக்கும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். சட்டத்தின் மூலமாகச் செய்வதில் சில சிக்கல்கள் இருக்கின்றன என்று தெரிகிறது. அப்படிச் சட்ட சிக்கல்கள் இருந்தால் அவற்றை நீக்க தக்க ஏற்பாடுகள் செய்து, அந்த நிலத்தை உணவு உற்பத்திக்கு, உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் கொண்டு வந்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடி தண்ணீர் வசதி. எனக்கு முன் பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அரிசனங்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை என்பதைப்பற்றி. அரிசன மானியத்தின் கீழ் தொகைகள் வழங்கப்படுகின்றன, நீர்நிலைத் தொட்டிகள் கட்டுவதற்கென்று. உதாரணமாக, வேதாரணியம் தொகுதியில், கொத்தங்குடி என்கிற கிராமம் இருக்கிறது. அங்கே அரிசன மானியத்தின் கீழ் தொகை வழங்கப்பட்டு நீர்நிலைத் தொட்டி கட்டப்பட்டிருக்கிறது. ஆனால், அங்கிருந்த அரிசனங்கள் அந்தத் தண்ணீரை உபயோகிக்க முடியவில்லை. மானியம் வழங்கப்பட்டது அரிசன நலத்தின் கீழ். ஆனால், அந்தப் பயனை அந்த மக்கள் அடைய முடியவில்லை. குடியிருக்கும் இடங்கள் தனியாருக்குச் சொந்தமானதாக இருப்பதால்

[திரு. பி. எஸ். தனுஷ்கோடி] [1967 மார்ச் 25

அங்கு தண்ணீர்க் குழாய்களைக் கொண்டு செல்ல முடியவில்லை. ஆகவே, நீர்நிலைத் தொட்டி கட்டியும் அந்த அரிசன மக்களுக்கு தண்ணீர் உபயோகப்படவில்லை. இம்மாதிரியான குறைகள் இருக்கும் இடங்களை சர்க்கார் பரிசிலனை செய்து, அதில் கவனம் செலுத்தி, அப்படிப்பட்ட இடங்களைச் சர்க்காரே ஆர்ஜிதம் செய்தாவது, அரிசனங்களுக்குப் பயன்படும் நிலையில் செயல்பட வேண்டும் என்று அமைச்சரை, தலைவர் அவர்கள் மூலம் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் மாவட்டத்தில் தண்ணீர் ஊற்றுக் குழாய்க் கிணறுகள் அமைக்க திட்டங்கள் பலவிடங்களில் இருக்கின்றன. ஆனால், சில இடங்களில் அந்தத் திட்டம் நடைபெற வில்லை. அப்படி நடைபெறாமல் இருப்பதற்குக் காரணம், தண்ணீர் பூமியிலிருந்து கிடைக்கவில்லை என்று கூறுகிறார்கள். அந்த இடங்களில் பெரிய பெரிய குளங்கள் இருக்கின்றன. அவற்றை ஆழப்படுத்தி, அகலப்படுத்தி தண்ணீரைத் தேக்கி வைத்தால் பின்னால் பம்பு செட்டுகளை வைத்து இறைத்துக் கொள்ள ஏதுவாக இருக்கும். அதே நோக்கிலே அதன்மூலம், பஞ்சாயத்திற்கும் வருவாய் பெருகும். சில பஞ்சாயத்துக்கள் குறைவான வருவாயை உடையவைகளாக இருக்கின்றன. அப்படிப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு மீன் வளர்ப்பு மூலம் வருமானம் அதிகமாக வருவதற்கு வாய்ப்பும் ஏற்படும். ஆகவே, இவற்றைக் கவனத்தில் கொண்டு அதை நீர்ப்பாசன திட்டத்தின்கீழ் எடுத்து, குளங்களை ஆழப்படுத்தி, அகலப்படுத்தி, அந்த அளவில் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிச் செய்வதால் சின்னஞ்சிறு விவசாயிகளும் பயன் அடைவார்கள். அவர்களுக்கும் பஞ்சாயத்து யூனியன் மூலம் பம்பு செட்டுகள் இனமாக வழங்க, மானியம் கொடுத்து தக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, அரிசனத் தெருக்களுக்கு மின்சார விளக்குகள் கிடையாது. காரணம் என்னவென்றால், சொந்தத்திற்கு மின் சாரம் எடுத்துக் கொண்டால்தான் தெருவிற்கு விளக்கு போட முடியும் என்கிறார்கள். அந்தக் குறையைத் தீர்க்க, வருங்காலத்திலாவது, அரிசன மானியத்தின் மூலமாக, அரிசனத் தெருக்களுக்கு விளக்குகள் கொண்டு வருவதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று அமைச்சரை, தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, மருத்துவ மனைகள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். திருவாரூர் நகரிலே ஒரு மருத்துவ மனை இருக்கிறது. அங்குள்ள அதிகாரிகள் ஏழை மக்கள் பிரசவ வசதிக்காகச் சென்றால், தாய்மார்களைப் பார்த்து பலவிதமான வார்த்தைகளை உபயோகிக்கிறார்கள். "எதற்காக ஆஸ்பத்திரிக்கு வருகிறீர்கள்? வீட்டில் என் . . ." தவறான வார்த்தைகளை தாய்மார்களிடம் பேசி, அவர்களை அனுப்பி விடுகிறார்கள். அது போன்று நடக்கக்



1967 மார்ச் 25] [திரு. பி. எஸ். தனுஷ்கோடி]

கூடாது. ஆகவே, நிச்சயமாக மருத்துவத் துறை அமைச்சர் இதைக் கவனித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உடனடியாக அடக்க, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மருத்துவ மனைகள் இதற்கு முன்பு இருந்தது போல் இல்லாமல் நல்ல முறையில் பணி செய்ய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு சொஸைடிகள் மூலமாக கொடுக்கக் கூடிய உரங்கள், விவசாயிகளுக்குக் காலத்தில் கிடைப்பதில்லை. விவசாயம் ஆரம்பிப்பதற்கு முன்பே, இவ்வளவு விவசாயிகள் இவ்வளவு நிலம் குறுவை சாகுபடி செய்கிறார்கள், இவ்வளவு பேர்கள் சம்பா சாகுபடி செய்கிறார்கள் என்கிற கணக்கை எடுத்து, வேண்டிய உரத்தை விவசாயம் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே தேவையான அளவு உரத்தை பொதுவாக வாங்கி, இருப்புக் கட்டி, காலா காலத்தில் கொடுக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சரை, தலைவரவர்கள் மூலம் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடுகூட, விவசாயத்தைப் பாதுகாக்கும் அளவில், ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும், ஒரு பவர் ஸ்ப்ரே கொடுக்க வேண்டும். பஞ்சாயத்துக்களால் பவர் ஸ்ப்ரேகளை வாங்க முடியவில்லை. அப்படிப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு மானியம் வழங்கி, ஒரு பவர் ஸ்ப்ரே கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனென்றால், வசதி உள்ளவர்கள், சொந்தத்தில் வாங்கிக் கொள்ளுகிறார்கள், அல்லது யூனியன் மூலமாக பெரிய வசதி படைத்தவர்களுக்கு கிராம சேவக்குகள் பயந்துகொண்டு பவர் ஸ்ப்ரேக்களைக் கொடுக்கும் நிலைதான் இருக்கிறது. நான்கு ஏக்கர், ஐந்து ஏக்கர் நிலமுடையவர்களெல்லாம் இந்த வசதி கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு பவர் ஸ்ப்ரே உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அமைச்சரவையைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி மருந்து அடிக்கும் கருவி இருந்தால் ஏழை எளிய விவசாயிகளும் ஸ்ப்ரே செய்து கொள்ள வசதியாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொண்டு, பேச சந்தர்ப்பம் கொடுத்த தலைவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

*திரு. பி. ஜி. கருத்திருமன்: கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது சபைமுன் வைக்கப்பட்டிருக்கும் உப மானியக் கோரிக்கைகள் ஏற்கனவே இருந்த சர்க்காரால் செலவு செய்யப்பட்ட இனங்களுக்காக. ஆகையால், நான் எந்த விதமான திருத்தமோ அல்லது தவறுகளோ சொல்லத் தயாராக இல்லை. இருப்பினும், நான் இந்த விவாதத்தில் கலந்து கொள்ளுகிறேன் என்றால், இன்றைக்கு நம்முடைய நாட்டில் நடக்கும் பதுக்கல் வேட்டை அல்லது கொள்முதல் என்னும் நிலையைப்பற்றிச் சில கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான். அவற்றை உணவு, விவசாயம் என்கிற மானியங்களின்கீழ் பேச முற்படுகிறேன்.

நம் நாட்டில் இருக்கும் பற்றுக்குறை காரணமாக தானியங்கள் கொள்முதல் செய்து, சரியான விலையில் வேண்டிய மக்களுக்கு விநியோகம் செய்ய மேற்கொண்டு இருக்கிறோம். அதேசமயத்தில் ஒன்றை யோசிக்க வேண்டும். 'அவைலபில் சர்ப்ளஸை' வெளியிலே வரக்கூடிய அதிகப்படியான நெல்லை விவசாயிகளிடத்தில் வாங்கி, தேவைப்பட்ட இடங்களுக்கு, ஸ்டாசுடரி ரேஷன் ஏரியாவாக இருக்கும் சென்னை போன்ற பட்டணங்களில் விநியோகம் செய்ய வேண்டும் என்பதுதான் ஏற்பாடு. ஆனால், அந்த ஏற்பாடுகளிலே இப்பொழுது சர்க்கார் எடுத்துக்கொள்ளும்படியான நடவடிக்கைகளும் வருகின்றன. பல இடங்களில் பதுக்கல்காரர்களைப் பிடித்திருப்பதாகவும், எந்த எந்த ஜில்லாவில் எத்தனை எத்தனை க்விண்டால் நெல் அல்லது அரிசி பிடித்திருப்பதாகவும் பத்திரிகைகளிலே வரும் செய்திகளையெல்லாம் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். பதுக்கல்காரர்கள் என்று பிடித்திருப்பதைக் குறித்து பல இடங்களிலிருந்து எனக்குப் புகார்கள் வந்திருக்கின்றன. பல இடங்களில் மிகவும் துன்புறுத்தப்படுவதாகவும், போலீசார்கள் வீடுகளிலே புகுந்து தானியங்களை எடுத்துக்கொள்ளுவதாகவும் எனக்குப் புகார்கள் வந்திருக்கின்றன. கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையின் மீது பேசும்போதும் நான் திட்டவட்டமாகச் சொல்லுகிறேன். சர்க்காருக்கு நான் ஒரு ஆலோசனை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கொள்முதல் திட்டம் வெற்றிகரமாக நடக்க வேண்டுமானால், உற்பத்தி குறையாமல் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கவேண்டுமானால், அந்தத் திட்டத்தை நல்ல முறையில்—அவசியப்படும் வகையில் மட்டும்—செய்தாக வேண்டும். இப்பொழுது ஏன் விவசாயி, தான் உற்பத்தி செய்யும் நெல்லைக் கொடுக்கமாட்டேன் என சொல்லுகிறான் என்று ஆலோசிக்க வேண்டும். கொள்முதல் செய்யும்படியான நெல்லுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலை கொடுக்கப்படுகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். கொள்முதல் விஷயத்தில் விலையைப்பற்றிப் பல விதமான பேச்சுக்கள் இருக்கின்றன. அடிப்படை விலை குறைந்த விலை என்றுதான் சொல்லுகிறார்களே தவிர, அதிகபட்ச விலை என்பது கிடையாது. அதிகபட்ச விலை என்பது 'ப்ளாக் மார்க்கெட் விலை'. அதாவது, வெளியிலே பகிரங்கமாக விற்கக்கூடிய விலை. வெளியிலே அதிக விலைக்கு தானியங்களை விற்க விவசாயி ஏன் முற்படுகிறான் என்று பார்க்க வேண்டும். பற்றுக்குறை இருக்கும்படியான இடத்தில் தேவையான மக்கள், கையிலே பணம் உள்ளவர்கள், வாங்க சக்தி உள்ளவர்கள், அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள். இது விஷயத்தில் மறைத்து வைத்துப் பேசுவதில் பிரயோஜனம் இல்லை என்ற கருத்தில் நான் தெளிவாகவே கூறிவிட விரும்புகிறேன். அதாவது, சர்க்கார் நிர்ணயித்திருக்கும் விலையானது வெளி மார்க்கெட்டில் நிலவும் விலைக்குப் பாதிதான் இருக்கிறது என்பதை நான் இந்தச் சமயத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். சர்க்காரின் கொள்முதல் விலைக்கும் வெளியிலே நிலவும் விலைக்கும் பெரிய அளவிற்கு வித்தியாசம் இருக்கிறது. சர்க்கார் கொள்முதல் விலையானது



கொடுக்காததால், இப்படி நீரிலே மூழ்கிக் கிடக்கின்ற நிலையில் இருப்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதற்கு வேண்டிய திட்டத்தையும் அமைச்சரவை போட்டாக வேண்டும். இதைப் போலவே நம்முடைய சர்க்காரைப் பொறுத்த வரையில், நல்ல காரியங்கள் செய்ய வேண்டுமென்று எதைஎதைச் சொன்னாலும், எதை எதைச் செய்தாலும் அவற்றிற்கு நாங்கள் மனப்பூர்வமாக ஒத்துழைப்புத் தருகிறோம். சர்க்கார் செய்யும் நல்ல காரியங்களுக்கு எதிர்க்கட்சிக்காரர்கள் அவையிலும், வெளியிலும் ஒத்துழைப்பைத் தேடிக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சிக்காரர்கள், அவரது தலைவர் குறிப்பிட்டபடி திருக்குறளை மனதில் வைத்துக்கொண்டு, அந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவோடு நான் முடித்துக்கொள்கிறேன்.

* திரு. வ. ஜார்ஜ்: மதிப்புமிகு அவைத் தலைவர் அவர்களே, முதற்படியாக, தேர்தல் கழிந்த பின்னர் நம் நாட்டிலே அரசியல் சிக்கல் ஏற்பட்டுவிடாதபடி, பிடிவாதமாக இராமல், தங்கள் கொள்கைகளைச் சூழ்நிலைக்குத் தக்கவாறு விட்டுக் கொடுத்து, நாட்டிலே ஒரு நிலையான அரசாங்கத்தை நிறுவியுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்து கொள்கிறேன்.

இப்போது இந்தத் துணை மானியக் கோரிக்கை, புயல் நிவாரணத்திற்காகவும், பொதுத் தேர்தல் செலவிற்காகவும், மற்றும் அரசாங்க அலுவலர்களுக்கு அகவிலைப்படி கூட்டிக் கொடுத்ததன் காரணமாகவும் ஏற்பட்டுள்ள செலவு குறித்து, கொண்டு வந்துள்ளதாக நமது தலைமை அமைச்சர் தம் உரையில் கூறியிருக்கிறார். அதிலே யாரும் குறை சொல்வதற்கு இல்லை. ஆனால் ஒரு சில விஷயங்களை மட்டும் எடுத்துச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். நமது முதலமைச்சர் அவர்கள், விவசாயிகளுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டதற்கு, அவர் பதிலுரைத்தபோது, "விற்பனை வரி போன்று ஒரு காமதேனுவை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம்" என்று கூறினார்கள். ஒரு காமதேனுவைப் பார்த்து, அதற்குப் பின்னர் விவசாயிகளுக்கு வரி விலக்கு அளிப்பதுபற்றி முடிவு செய்வோம் என்ற முறையில் பதில் சொன்னார்கள். இதைக் கேட்ட மாத்திரத்தில் பொதுமக்கள் அனைவருமே அயர்ந்து இடிந்து போனார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் தனது தேர்தல் மானிபெஸ்டோவில் 49-க்கு மேற்பட்ட காரியங்களைச் செய்வதாகக் கூறிக்கொண்டு, மேலும் அதுபோல பல காரியங்களைச் செய்வோம் என்று கூறியிருக்கிறது. இவற்றையெல்லாம் காங்கிரஸ் ஆட்சியிலே செய்ய இயலாமல் இருப்பது பணக் குறைவினால் அல்லவென்று எடுத்துக்கூறி, அபரிமிதமாக மக்களது வாக்குகளைப் பெற்று வந்திருக்கிறார்கள். அந்தத் தலைவர்கள் இன்று பொதுமக்களைப் பார்த்து, நிலவரியை எடுப்பதற்கு ஒரு காமதேனுவைத் தேடிக்கொண்டிருக்கிறோம்

என்று சொல்வதைக்கேட்டு, மக்கள் பெரிதும் ஏமாற்றமும் அதிர்ச்சியும் அடைந்திருக்கிறார்கள் என்று கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அடுத்தபடியாக, புகுமுக வகுப்புகளை இலவசக் கல்வித் திட்டத்தின்கீழ் கொண்டுவர வேண்டும் என்கிறபோது, சுதந்திராக் கட்சித் தலைவர் தங்கள் பாணியிலேயே, 'எல்லோருக்கும் இலவசக் கல்வியை எதற்காக அளிக்க வேண்டும். பணக்காரர்களிடத்தில் ஃபீஸ் வாங்குவதில் தவறு இல்லை' என்று கூறினார்கள். இதைக் கேட்கும்போது எனக்குத் தோன்றியது என்னவென்றால், கல்லூரி படிப்பு படிக்கின்ற காளைப்பருவம்தான் ஒரு மனிதனின் 'கேரக்டர் ஃபாம்' ஆகக்கூடிய பருவம் எலோருக்கும் இலவசக் கல்வி என்ற நிலை ஏற்பட வேண்டும். பணக்காரர்கள் பணம் கொடுத்துப் படிக்கும்போது, 'இவன் பணக்காரன், இவன் ஏழை' போன்ற ஏற்றத்தாழ்வு உணர்ச்சிகள் மாணவர்களுடைய சமுதாயத்திலே ஏற்பட்டுவிடக் கூடாது. மாணவர்களுடைய நல்லுணர்ச்சியை அவர்கள் சமுதாயத்திலே சிருஷ்டிக்க வேண்டும். பணக்காரர் களிடத்திலே பணம் வசூலிப்பதனால் அதிலே பணம் லாபம் என்று நம்முடைய முதலமைச்சர் கருதினாலும், அதைப் புனராலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, நமது அரசாங்க நெல் கொள்முதல் கொள்கையை பற்றிச் சொல்வோமானால், நம் எல்லோருக்கும் ரேஷன் முறையில் உணவு விநியோகம் செய்தாக வேண்டும். எல்லா நெல்லையும் கொள்முதல் செய்ய வேண்டும். விவசாயிகளைக் கஷ்டப்படுத்தக் கூடாது. பெரிய விவசாயிகளைக் கட்டுப்பாடு செய்தும், சிறிய விவசாயிகளை நாம் தட்டிக் கொடுத்தும் கொள்முதல் செய்ய வேண்டும் என்றும் கூறும் அதே நேரத்தில் கொள்முதல் செய்யச் செல்லும் அலுவலர்களின் பணி அந்த முறையில் அமையவில்லை. அதை இந்த அரசாங்கம் மேலும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கொள்முதல் செய்யும் நேரத்தில் எங்கள் பகுதிகளில், தமிழ்நாட்டில் எல்லோருமே கொஞ்சம் கொஞ்சம் சைகிளில் அரிசி எடுத்துச் செல்கிறார்கள், சிலர் தலைச் சுமையாக தங்கள் சொந்த அவசியத்திற்காக எடுத்துக் கொண்டு போகிறார்கள். இதைக் கள்ள மார்க்கெட்டில் வியாபாரம் செய்வதற்காக அவர்கள் எடுத்துக்கொண்டு போவதில்லை. இன்றையதினம் நம் சமுதாயத்தைப் பொறுத்தவரையில், ஒரு குடும்பத்திலே ஒருவரை விருந்துக்கு அனுப்புவதாக இருந்தால், கொஞ்சம் அரிசியைக் கொடுத்து அனுப்புகிறார்கள். இம்மாதிரி கொஞ்சம் அரிசியைக் கொடுத்து அனுப்புவது நம்முடைய நாட்டினர் பல காலமாகப் பின்பற்றி வரும் ஒரு பழக்கமாக இருந்து வருகிறது. இதில், கெடுபிடி என்ற நிலையில் கொள்முதல் நிர்வாகத்தினர் தலையிட்டு பல இடையூறுகளை விளைவிக்கிறார்கள். தங்கள் குடும்பத்திற்கு எடுத்துச் செல்லும் கொஞ்சம் அரிசியைக் [illegible] கொள்கிறார்கள் என்பதை நான் மன வருத்தத்



தோடு கூறிக் கொள்கிறேன். இந்தக் குறையை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும். மேலும் கலெக்டர்களிடமிருந்தோ, தாசில்தாரிடமிருந்தோ லைசென்ஸ் பெற்று, அரிசியை எடுத்துச் செல்வது என்பது ஏழை பாமர மக்களுக்குத் தெரியாது. இதைச் சுட்டிக்காட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தங்களுடைய தேர்தல் மானிபெஸ்டோவில், லைசென்ஸ் முறை ஒழிக்கப்பட வேண்டும். சமுதாயத்தினர் தங்களுடைய சொந்தத் தேவைக்கு என தலைச் சுமையாக எடுத்துச் செல்லும் உணவுப் பொருள்களை வழிப்பறி செய்யாமல் இருத்தல், லைசென்ஸ் கட்டுப்பாடுகள் வேண்டாம் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, கெடுபிடிகளை நிறுத்த வேண்டுமென்று நான் இந்த அமைச்சரவையை கேட்டுக்கொள்கிறேன்.

பின்னர், எனது மாவட்டம் கன்னியாகுமரி, கேரளத்திற்குப் பக்கத்தில் அமைந்திருக்கிறது. அதனால் அந்தப் பகுதி வழியாக கேரளத்திற்கு அரிசியைக் கடத்திக் கொண்டு போவதாகச் சொல்லி, அங்குள்ள மக்கள் மிகவும் துன்புறுத்தப்படுகிறார்கள். கரை வழியாக மட்டும் அரிசியைக் கடத்தவில்லை, கடற்கரை வழியாக, 'ஸ்மால் போட்டில்' எடுத்துச் செல்லப்படுகிறது. அதையெல்லாம் விட்டுவிட்டு, தங்களுடைய சுயதேவைக்காக கொஞ்சம் அரிசியை எடுத்துச் செல்லுகின்ற மக்களைத் துரத்தித் துரத்திப் பிடித்து விரட்டுகிறார்கள் என்பதை இந்த அமைச்சரவைக்கு எடுத்துச்சொல்ல ஆசைப்படுகிறேன். ஆகவே, சுயதேவைக்கு அரிசியை எடுத்துச் செல்லும் மக்களை நிர்ப்பந்தப்படுத்த வேண்டா மென்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு அவர்களுடைய நிர்ப்பந்தத்தைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பத்மநாபபுரம் நகரமானது பழைய திருவிதாங்கூர் ராஜ்யத்தின் தலைநகராக விளங்கிய பட்டினமாகும். அந்த நகரம் இன்று வீழ்ச்சியுற்ற நிலையில் காணப்படுகிறது. அந்த நகரம் தனது பழைய சிறப்பை இழந்துவிடாதிருக்க எந்தவிதமான 10 00 மு.ப.
முன்னேற்றமும் செய்யப்படவில்லை. அந்தப் பட்டினம் தனது சரித்திரப் புகழ் பெற்ற சிறப்பை இழந்துவிடாதிருக்க இந்த அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நகரில் ஒரு அக்ரிகல்சரல் இன்கம்டாக்ஸ் ஆபீஸ் இருந்தது. அந்த அரசாங்க அலுவலகத்தைக் கூட கடந்த ½ ஆண்டுக்கு முன்பாக நாகர்கோயிலுக்கு மாற்றிவிட்டார்கள். மேலும் அந்த நகரில் ஒரு சப்-கோர்ட் இருந்தது. அதையும் நாகர்கோயிலுக்கு மாற்றிவிட்டார்கள். அதற்குக் காரணம் அந்த நகரில் அரசாங்க அதிகாரிகளுக்கு வசதிகள் இல்லை என்று கூறப்படுகிறது. குறிப்பாக, அந்த நகரில் ஓர் ஆஸ்பத்திரி இருக்கிறது. இருந்தும் சர்க்கார் ஆஸ்பத்திரி முதல் தரமாக இல்லை, அதன் காரணமாக அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு மருத்துவ சிகிச்சை பெற வசதி இல்லை என்று கூறப்படுகிறது. அதுபோல அந்தப் பகுதியில் கல்லூரி இல்லை, பத்து மைல்களுக்கு அப்பால் தான் இருக்கிறது.

அரசாங்க உத்தியோகஸ்தர்களின் குழந்தைகள் படிப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது—என்று இப்படிச் சில காரணங்களைச் சொல்லி அந்த நகரில் இருந்த சர்க்கார் அலுவலகங்களைக் கூட நாகர்கோயிலுக்கு மாற்றிவிட்டார்கள். மக்கள் ஆட்சியில் மக்களுடைய வசதிகள் தான் கவனிக்கப்படவேண்டுமே தவிர—சில சர்க்கார் உத்தியோகஸ்தர்களுடைய நலனுக்காக என்று இப்படிக் காரியங்களைச் செய்வது சரியல்ல. நியாயமும் அல்ல. மேலும் அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு தொழில் துறையில் யாதொருவிதமான முன்னேற்றமும் இல்லை. அங்கே தொழிற் சாலைகளே கிடையாது. இந்த நிலையில் அந்தப் பட்டினத்தைப் பல வகையிலும் புறக்கணிக்க முற்படுவது சரியாகாது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் ரீ-சர்வே நடந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாக செட்டில்மெண்டு கேஸ்கள் நிறைய வர இருக்கின்றன. இக்கேஸ்களைப் பரிசிலனை செய்ய இப்போது இன்னும் ஒரு சப்-கோர்ட் தேவைப்படுகிறது என்று அறிகிறேன். அதையாவது மீண்டும் நாகர்கோயிலில் நிறுவாமல், அங்குள்ள மக்களின் வசதியைக் குறித்து தக்கலையில்—பத்மநாப புரத்தில் நிறுவவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு கன்னியாகுமரி மாவட்டத்தில் அநேக பாடசாலைகள் ஓலைக் குடிசைகளிலேயே இன்றையதினம் நடைபெற்று வருகின்றன. மழை சமயத்தில் இந்தப் பள்ளிக்கூடங்களின் குடிசைகள் சேதம் அடைந்துவிடும். குறிப்பாக கொல்லங்கோடு, கருங்கல் ஆகிய இடங்களில் உள்ள பள்ளிக்கூடங்களுக்கு உறுதியான கட்டடங்கள் இல்லை. அந்த மாதிரியாக ஓலைக் குடிசைகளில் இருக்கும் பள்ளிக் கூடங்களுக்குக் கட்டிடம் கட்ட சாங்ஷன் செய்யப்பட்டது. ஆயினும் எமர்ஜன்சி காரணமாக அவை நிறுத்தி வைக்கப்பட்டு விட்டன. அதற்காக 5 லட்சத்திற்கு மேல் சாங்ஷன் செய்யப் பட்டும் அந்த வேலை நடைபெறவில்லை. இப்போது எமர்ஜன்சி நீக்கப்பட்டுவிட்டதால் ஓலைக் குடிசைகளில் இருக்கும் பள்ளிக் கூடங்களுக்குக் கட்டிடம் கட்டிக் கொடுக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்று சிற்றூர், பட்டணங்கால் திட்டம் நிறைவேறி வருகிறது. ஒரு வருட காலத்திற்குள் முடிவு அடைய வேண்டிய நிலையில் இருக்கிறது. ஆயினும் இன்றைக்கு அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு நிலத்தை செப்பனிட்டுக்கொள்ள கடன் வசதி அளிக்கப்படவில்லை. தண்ணீர் விடப்படுகிறபோது தான் கடன்வசதி அளிக்கப்படும் என்றால்—தண்ணீர் விட்ட பிறகு நிலத்தைச் செப்பனிட ஆரம்பித்தால் சாகுபடி செய்ய கால தாமதம் ஆகிவிடும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அங்குள்ள நிலங்கள் சமபரப்பானவை அல்ல. மேடுபள்ளங்களாக இருக்கின்றன. ஆகவே, அந்த நிலத்தை இப்போதிருந்தே ஒழுங்கு செய்துகொள்ள நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படவேண்டும்.



ஆகவே, தண்ணீர்விடும் வரை காத்திராமல் அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு கடன் உதவி வழங்க முன்வரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு குடிநீர் திட்டத்திற்காக மாம்பழத்துறைத் திட்டம் இருக்கிறது. இதன் மூலம் குளைச்சல் நகரசபை, பத்மநாபபுரம் நகரசபை, மற்றும் அதைச் சுற்றியுள்ள இடங்களுக்குக் குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்திக்கொடுப்பதற்காக இந்தத் திட்டம் போடப்பட்டன. ஆனால் அவை அரசாங்கத்தின் ஆலோசனையிலேயே இதுவரை இருந்து வந்திருப்பதைத் தவிர செயல்படுத்துவதாகக் காணோம். வருகிற பட்ஜெட்டிலாவது அந்தத் திட்டங்களை செயல் படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது அரசாங்கத்தின் போக்கைப் பார்த்தால் நம்பிக்கையூட்டுவதாக இல்லை. நமக்கு அதிகமான அளவில் வருமானம் இருக்கிறது. வரி வரி என்று மேலும் வருமானத்தை அதிகப்படுத்திக்கொண்டும், எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங் கத்தையே எதிர்நோக்கிக்கொண்டும் இருந்து வருவது சரியான பாதை அல்ல என்பதை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். சுதந்திரம் கிடைத்ததற்குப் பின்னால் நம் நாட்டு மக்கள் எதற் கெடுத்தாலும் அரசாங்கத்தையே எதிர்நோக்கியிருக்கிறார்கள். மாநில அரசாங்கமோ எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங்கத் தையே எதிர்நோக்கியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கமோ பல வெளிநாட்டு அரசாங்கங்களையே எதிர்நோக்கியிருக்கின்றன. இத் தகைய தன்னம்பிக்கையற்ற நிலையில் தான் நம் நாடு முழுவதுமே இயங்கிக்கொண்டிருக்கிறது. இந்தப் போக்கை—சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படையில் வளர்ந்து வந்துள்ள நமது திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆட்சியில் மாற்றியாக வேண்டும். தன்னம்பிக்கையுடன், சுயநம்பிக்கையுடன் செயலாற்றாது—மத்திய அரசாங்கத்தையே நம்பி செயல்பட்டு, அவர்கள் மீது பழியைப் போட்டு தங்கள் பொறுப்பைத் தட்டிக் கழிக்கக் கூடாது. தங்களால் பொதுமக்களிடம் நம்பிக்கையூட்டும் நிலைமையில் செய லாற்றவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. கே. வி. சுப்பையா: பெருமதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னால் கொண்டு வந்திருக் கிற பட்ஜெட்டை நான் வரவேற்று சில குறிப்புகளையும் தெரிவிக்க விரும்புகிறேன். நான் புதுக்கோட்டை பகுதியைச் சார்ந்தவன். புதுக்கோட்டை பகுதி மானம் பார்த்த சீமை. அங்கே மழை பெய்தால் தான் மக்களுக்கு வாழ்வு உண்டு. அந்தப் புதுக்கோட்டை பகுதியையும், அறந்தாங்கி பகுதியையும், கிழக்கு இராமநாதபுரம் பகுதியையும் சேர்த்து பின் தங்கிய பகுதியாக டிக்ளேர் பண்ணி, அதற்கு வேண்டிய தனிச் சலுகைகளை நாங்கள் பெறுமாறு செய்ய வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாக இந்த அரசாங் கத்தை கே[illegible]

[திரு. கே. வி. சுப்பையா] [1967 மார்ச் 25

அடுத்தபடியாக, எங்கள் புதுக்கோட்டை பகுதியில் உள்ள தண்ணீர்க் கஷ்டத்தைப் போக்குவதற்கு காவேரியில் இருந்து ஒரு கால்வாய் வெட்டும் திட்டம் கடந்த பல ஆண்டுகளாகப் பேசப்பட்டு வந்திருக்கிறது. அதையும் இந்த அமைச்சரவை நன்கு பரிசிலனை செய்து நிறைவேற்றித்தரவேண்டும் என்பதாகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, புதுக்கோட்டையை தனி மாவட்டமாக ஆக்க வேண்டுமென்று காங்கிரஸ் ஆட்சியில் இருந்தே சொல்லிக்கொண்டு வந்திருக்கிறோம். பல காங்கிரஸ்காரர்களும் சொல்லி வந்திருக்கிறார்கள். அதையும் இந்த அரசாங்கம் கவனித்து அதைத் தனி மாவட்டமாகவே ஆக்கித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைவிட சிறிய பகுதியாகிய கன்னியாகுமரி, தர்மபுரி ஆகிய மாவட்டங்கள் தனியாக இயங்கி வருகிறபோது இதைத் தனி மாவட்டமாக ஆக்குவதில் ஒன்றும் சிரமம் இருக்காது. நல்ல முறையில் தனியாக இயங்கும். ஆகவே, புதுக்கோட்டையைத் தனி மாவட்டமாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது கிராமங்களை எடுத்துக்கொண்டால் ஒரு கிராமம் ஒரு ரெவின்யூ வட்டமாகவும் இருக்கிறது. இரண்டு மூன்று கிராமங்கள் சேர்ந்து ஒரு ரெவின்யூ வட்டமாகவும் இருக்கிறது. அப்படியே பஞ்சாயத்துகளை எடுத்துக்கொண்டால் 15 உறுப்பினர்களைக் கொண்ட பஞ்சாயத்தும் இருக்கிறது. ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட பஞ்சாயத்தும் இருக்கிறது. இதை எல்லாம் ஒழுங்குபடுத்தி ஒரே சீரான முறையில் இவற்றை அமைத்துத் தரும்படியாக நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் நிர்வாக வசதிகளுக்கு ஏற்றதாக இருக்கும். பஞ்சாயத்து என்று எடுத்துக் கொண்டால், 50 ஆயிரம் ரூபாய் கிஸ்தி வசூல் செய்யக்கூடிய பஞ்சாயத்து இருக்கிறது; 15,000 ரூபாய் வசூல் செய்யக்கூடிய பஞ்சாயத்தும் இருக்கிறது. இதையெல்லாம் ரி-ஆர்கனைஸ் பண்ணவேண்டும். அப்படிப் பார்க்கின்றபோது பெரிய வட்டங்களில் இருக்கின்ற கிராம உத்தியோகஸ்தர்களுக்கும், சிறிய வட்டங்களில் உள்ள கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் ஒரே மாதிரியான ஊதியம் கொடுக்கப்படுவதை மாற்றியமைக்க வேண்டும். அதே போல் பஞ்சப்படி அளவு மூன்று பஞ்சாயத்துக்கள் இருக்கின்ற வட்டத்தில் இருக்கின்ற கிராம உத்தியோகஸ்தர்களுக்கும், ஒரு பஞ்சாயத்து கொண்ட வட்டத்தில் இருக்கின்ற கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் ஒரே மாதிரியாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த மாதிரி மூன்று பஞ்சாயத்துக்கள் உள்ள வட்டங்களில் இருக்கின்றவர்களுக்கு பஞ்சப்படி விகிதம் அதிகப்படுத்தப்பட்டு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உரம் சம்பந்தப்பட்டமட்டில் கிராமங்களில் விவசாயிகளுக்குக் கிடைக்காத நிலை இருக்கிறது. தமிழ் நாட்டில் இருக்கிற உரத்தின் அளவைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அதே சமயத்தில்



1967 மார்ச் 25] [திரு. கே. வி. சுப்பையா]

எவ்வளவு நஞ்சைகள் என்ற கணக்கையும் எடுத்துக்கொண்டு ஒரு ஏக்கர் நஞ்சைக்கு எவ்வளவு உரம் கொடுக்க வேண்டும் என்ற விகிதாசாரத்தில் பிரித்துக் கொடுக்க வேண்டும். தனிப்பட்ட மனிதர்கள் உரத்தை வியாபாரம் செய்யக்கூடாது என்ற உத்தரவையும் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை பகுதி வானம் பார்த்த பூமி. மழை பெய்தால் தான் விவசாயம் செய்ய முடியும். காஸ்ட் ஆப் கல்டிவேஷன் அதிகம். ஆகவே, சி.எம்.பி. கறுல் ஏரியாவில் கொள்முதல் செய்கின்ற அளவு எங்கள் பகுதியில் செய்யாமல் ஐந்து ஏக்கர் வரையில் கொள்முதலில் இருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டத்தின்கீழ் எமர்ஜன்சி பீரியட் என்ற வகையில் விவசாயத்திற்கு எல்லா விதமான முக்கியத்துவத்தையும் கொடுக்கவேண்டும், அந்த முறையில் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். அப்படிச் செய்யும்போது குளங்களை தூர் எடுக்கிறார்கள்; குளங்களை மட்டும் தூர் எடுக்காமல் சப்ளை சானல்களையும் தூர் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேசச் சந்தர்ப்பம் கொடுத்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

* DR. H. V. HANDE: Hon. Speaker, Sir, the Supplementary Demands now before the House exceed the previous estimates to the tune of Rs. 63 crores. These had already been envisaged before the new Ministry came into existence. In other words, what was previously planned, envisaged and accepted is being given legal authority now by bringing them before this House. What is practically *de facto* is going to be made *de jure* by way of sanction of this House. In this connection, I wish to say a few words especially in view of the fact that the principal increase in the Revenue Account is with regard to Police, General Administration, Agriculture, Public Works and Elections.

Sir, I had already expressed my views in this House with regard to certain matters. Now, I want to confine myself specifically to all the things that happened in Fort St. George between 15th February and till the time the new Ministry came into existence—those things are far from satisfactory. For instance, I had brought the missing of a number of files to the notice of this House a few days ago. Sir, it is a well-known fact that since 15th of February there has been a tumbling of a number of important leaders in the elections and that shows the public have bestowed their confidence on the D.M.K. Party and allied parties and not on the Congress Party. The result started pouring in from 22nd to 23rd February and it was obvious that several Congress Ministers in the old Ministry were not going to sit in this House. It was very, very clear on 24th February that that Ministry would not come back to power. Now, Sir, I have got a Government Order,

dated 24th February 1957 and I want the Hon. Minister for Industries to appreciate the point in this particular Government Order. I will read an extract of the Government Order, dated 24th February 1967.

'Establishment of the Director of Industries and Commerce reorganization and redistribution of work among Joint Directors—Proposals of the Director of Industries and Commerce—Orders passed. . . . .'

How can such a major order be passed by the Industries Ministry on 24th February 1967 when the Ministers concerned know clearly that they have lost the mandate of the public? When that was very clear, such a major order should not have been passed, and the matter should have been left to the future Ministry which enjoyed the confidence of the public in abundance.

Why was the announcement of the result of the election of the then Hon. Chief Minister Sri M. Bhaktavatsalam delayed ? I know how frantically we have been telephoning to No. 171 to find out what had happened. The announcement was delayed for two full days. In the meantime telegrams were issued to the Hon. Minister for Industries who was in Thanjavur and he was called to the Fort St. George. There was a rush and a number of Ministers of the then Ministry were brought here. They came to Fort St. George rushing on 23rd February and this order was passed on 24th February.

What happened to the files which were immediately despatched ? I shall tell the House the place where the files are secreted. Those files are secreted in the archives of the Home Ministry of the Union Government, Sri Chavan's Ministry. Files were transferred from the Fort St. George to the Union Ministry with speed. Why should such a thing have been done ? This budget relates to what has happened before and definitely does not relate to what is going to happen hereafter. So the particular subject that I am referring to is relevant to this budget. I take this opportunity to bring to the notice of this House that a proper scrutiny should be made and the Chief Minister Sri C. N. Annadurai should find out the truth. I have information—it may be irrelevant to refer to it in this House—that in some other States also files were secreted in rush manner. I request the Department and the Ministry concerned to take very serious action to find out the files relating to not only the Hindi agitation but also to other subjects, that were transferred. The orders passed and the major decisions taken by the Cabinet between the 15th March 1967, the date of election and the 6th April 1967, the date on which the new Ministry assumed office, must be re-examined in the present context and the Ministry must pass fresh orders, ifnecessary.

I wish to bring to the notice of the House only one important point. The present Ministry has good intentions. It wants to do some good to the public by increasing the efficiency of distribution



of food. That is its goal. I appreciate it. The Government have laid down a policy. But the method of implementation of it by the officials concerned is bringing innumerable hardships to untold number of persons. I think the Hon. Minister for Food has gone on toun in connection with this programme. I sympathise with him. But I will not be acting according to the dictates of my conscience if I do not bring to the notice of this House that I have received a number of complaints of harassment by means of telegrams and trunk telephone calls. I am not saying that all of them are well founded. I request the Ministry to go into such complaints. There has been a news item published in the 'Indian Express' under the heading "Police 'zoolum' in procurement raid". In it, statistics are given regarding the number of bags expected to be procured and the number of bags actually procured, and the quantity actually procured is one and a half times the expected procurement. Fortunately or unfortunately I have had to face British autocracy and also the Congress autocracy. I have had experience of police zoolum. I was a member of the Indian Students Congress in 1942 and I have had enough proof of Police zoolum. During the Congress regime also, I had to face the Police. I have to say that the Police will not obey the ministry. The moment a little laxity is given to the Police—I am not at all questioning the good intentions of the Ministry—they are likely to take advantage of this laxity and harass, manhandle and even physically beat the persons. I am not accusing any particular officer. The mind of the Police will work in a particular track, and some of my relatives are working in the Police Department. The moment extraordinary powers and discretionary powers are given to the Police, they are likely to act in a manner which the public will resent very much. I am very much concerned with the future of this ministry and my leader is very much concerned with the future of this ministry. I request the Chief Minister not to mistake me. I am not going into the policy at all. I want an assurance that action will be taken immediately to avoid undue harassment.

My friend talks of the Swatantra Party. I can tell the hon. Member that I have been considered as one of the experts in the principles of the Party. We are not for capitalists, we are not for blackmarketeers, we are not fon moneylenders. We are only interested in increased production. We are for any policy that will bring about increased production. We are not against socialism or social justice. But we are against socialism as practised by the previous Congress Ministry which amounted to State capitalism, protected capitalism. We are for a competitive capitalism. Let not Members talk about the principles of the Swatantra Party unless they know what those principles are. The moment there is more production, capitalists will suffer. Therefore a number of capitalists have supported the Congress Party and not the Swatantra Party. I shall not allow any criticism or allegation against the Swatantra Party to go unanswered. We are for the type of capitalism that prevails in Japan and West Germany. We are not for

[Dr. H.V. Hande] [25th March 1967

protected capitalists. I want to make this clear so that such misguided criticism will not be advanced against our party in future. Thank you, Sir.

THE HON. THIRU. C. N. ANNADURAI : With your permission, Sir, I wish to offer an explanation. The hon. Member said that his criticisms were not against the Ministry. I am grateful for that. But if he is so very favourably disposed towards the Ministry, he could have brought individual cases of harassment to my notice instead of making a policy-making speech here.

* திரு. என். வரதராஜன் : சட்டமன்றத் தலைவர் அவர்களே, பொதுவாக நாம் சென்ற கால வரவு செலவைப் பரிசிலிக்கிறோம் என்று சொல்லும்போது சென்ற காலக் கொள்கைகளையும் நாம் உன்னிப்பாக பரிசீலித்து கவலையோடு கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். பொதுவாக நீர்ப்பாசனம் என்று சொன்னால் லேவாதேவிக்காரன் வட்டிக் கணக்குப் பார்ப்பது போல்தான் சென்ற கால சர்க்கார் பார்த்திருக்கிறது என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்று நீர்ப்பாசனம் செய்வதன் மூலம் அணை அல்லது குளமராமத்து செய்வதன் மூலம் அதிகமாக உணவு உற்பத்தியைப் பெருக்க முடியுமா என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்வதைவிட இந்தப் பணத்திற்கு வட்டி கட்டுமா என்று பார்க்கிற அந்தக் கொள்கையை படிப்படியாக கைவிடவேண்டும். கடந்த பத்து பதினைந்து ஆண்டுகளாக மதுரை மாவட்டம் வேடசெந்தூர் தொகுதியில் கொடவனாறு திட்டம் பற்றி மராமத்து அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் அது நீண்ட நாட்களாக கொள்கை அளவில் நின்று கொண்டிருக்கிறது. திட்டம் தீட்டப்பட்டு நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. 10,000-க்கு மேற்பட்ட ஏக்கர் உணவு உற்பத்திக்கு உதவி செய்யும் என்று என்ஜினியர்கள் கூறியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். அதோடு குளமராமத்துக்கள் போன்றவைகளையும் உடனடியாக கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். கொள்முதல் சம்பந்தமாகவும், விநியோகம் சம்பந்தமாகவும் ஏற்கனவே நம் உணவு அமைச்சர் அவர்கள் தம்முடைய அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள் இந்த மன்றத்தில். அதில்கூட சிலவற்றை மாற்றவேண்டியிருக்கிறது. நம் சமூகத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளின் காரணமாக சர்க்கார் அதிகாரிகள் நம் உத்தரவுகளை எப்படி அமல் நடத்துகிறார்கள் என்பது தெரியும். அவர்கள் பெரும் நிலச்சுவாந்தர்களிடத்தில் கொள்முதல் செய்வதற்கு அச்சப்படுவார்கள், பயப்படுவார்கள். ஆகையால் நாம் உறுதியாக ஒரு கொள்கையை அமல்படுத்தியாகவேண்டும். குறைந்தபட்சம் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு, ஏழை எளிய விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் முறையில் மூன்று ஏக்கரா அல்லது அதற்குக் குறைவாக என்பதுபற்றி உறுதியாகச் சொல்லவேண்டும். ஏற்கனவே அறிவித்த ஒரு ஏக்கர் போதுமானதல்ல, சரியானதல்ல என்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அதிகபட்சமாக 20 சத விகிதம் நெல்தான் கொள்முதல்



1967 மார்ச் 25] [திரு. என். வரதராஜன்]

செய்வது என்று சொன்னால் பாக்கியுள்ள நெல்லை எவ்வாறு விநியோகத்திற்கு அனுமதிக்கிறோம் என்ற பிரச்னை வருகிறது. எந்த சாரார் எதைச் சொல்கிறார்கள் என்பதல்ல பிரச்னை. பத்திரிகைச் செய்திகளைப் பார்த்தால் திருச்சியிலுள்ள பெரும் மிராசுதார்கள் கூப்பாடு போட ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களைப் பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை. 3½ கோடி தமிழ் மக்களும் நம் பின்னால் நிச்சயமாக நிற்பார்கள். இன்று கால் படி அல்லது அரைப்படி என்பதல்ல பிரச்னை. உணவு கிடைக்கவில்லை, பட்டினி கிடக்கவேண்டும் என்று அமைச்சரவை கேட்டுக்கொண்டால் அதற்கு மக்கள் தயார். தமிழக மண்ணில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்கள் மக்களுக்கு நிச்சயமாக கிடைக்கும். அதற்கு அமைச்சரவை திட்டமிட்டிருக்கிறது என்று சொன்னால் அப்போது இருப்பார்கள். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை அரசு தீட்ட முன்வரவேண்டும். நிர்ப்பந்தப்படுத்துகிற முறையைக் கைவிடுவதற்கும், பெரிய மனிதர்கள் என்று சொல்லி லட்சக்கணக்கான மூட்டைகளை மறைத்து வைத்திருப்பவர்களிடம் இருந்து அவற்றை எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைக் கைக்கொள்ள வேண்டும். கிராமப்புறங்களிலுள்ள ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் கூட இன்று ஆண்டு ஒன்றுக்கு ஒன்பது மாதங்களுக்கு தானியங்களை மார்க்கெட்டில் வாங்கி சாப்பிடும்படியான நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கும் நியாயவிலைக் கடைகள் அல்லது குடும்பக் கார்ட் என்று ஒரு முறையை ஏற்படுத்தி அவர்களுக்கும் உணவு தான்யங்கள் கிடைப்பதற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும். அப்பேர்ப்பட்ட உணவுக் கொள்கையை அரசு மேற்கொள்ளவேண்டும்.

அதேபோன்று குடிநீர் பிரச்சினை கிராமப் புறங்களில் சக்கிலியர், பள்ளர், பறையர் என்ற பகுதியினருக்கு ஹரிஜனங்கள் என பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. அதுதான் இருபது வருடங்களில் அவர்களுக்குக் கிடைத்திருக்கும் வெகுமதி. இன்று சாதாரண குடிமகன் குடிநீர் கிடைக்காமல் கஷ்டப்படுகிறான். இன்று பஞ்சாயத்து யூனியன் என்ற பெரும் பூதம் அதற்கு குறுக்கே நிற்கிறது. இந்த ஹரிஜனங்களுக்கு ஏதாவது செய்ய முடியுமா என்று பரிசீலித்து அதை முதலில் கொண்டு வரவேண்டும்.

அதேபோல் இன்றையதினம் வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டில் பெருகி மக்கள் வறுமையால் வாடிக்கொண்டிருக்கிறார்கள். ரெயில்வே ஸ்டேஷன், பஸ் ஸ்டாண்ட் போன்ற இடங்களில் அவர்கள் படுத்துக் கிடக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்யமுடியவில்லை என்றாலும், போலீஸார் முக்காடு கேஸ், சந்தேகக் கேஸ் என்று கேஸ் எடுத்து ஆயிரக்கணக்கானவர்களை சிறையில் தள்ளும் கொடுமை இருக்கிறது. சென்ற காலத்தில் அமலிலிருந்த கொள்கையை இன்று கைவிடவேண்டும். போலீஸார் சந்தேக கேஸ், முக்காடு கேஸ் என்று போடுவதைத் தடுக்கவேண்டும். அதேபோல் சர்க்கார் சிப்பந்திகள், ஸ்தல

ஸ்தாபன சிப்பந்திகள், பஞ்சாயத்து யூனியன் சிப்பந்திகள் என்று மூன்று பிரிவுகள்; ஆசிரியர்களிடையே சர்க்கார் பள்ளி ஆசிரியர், தனியார் துறை பள்ளி ஆசிரியர் பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர், நகரசபை ஆசிரியர் என்று பல்வேறு பிரிவுகள். போலீஸாரிடம் போலீஸார், தீ அணைக்கும் படை, ஜெயில் வார்டன்கள் என்று பல்வேறு பிரிவுகள். இவர்களிடையே ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன, சம்பள விகிதத்தில்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** இப்போது மணி 10-30. 10-30 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தை நடத்த வேண்டியிருப்பதால், இந்தப் பேரவையின் விதிகளின் 6-வது விதிக்கிணங்க
மூற் பகல் 10-30 திரு. அரங்கண்ணல் அவர்களை சேர்மனாக நியமித்து, நான் திரும்ப வருகிற வரையில் அவர் இந்த அவைக்குத் தலைமை தாங்குவார் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது மதிப்பிற்குரிய உறுப்பினர் வரதராஜன் தொடர்ந்து உரையாற்றுவார்.

(திரு. இராம. அரங்கண்ணல் தலைமை)

**திரு. என். வரதராஜன்:** ஆகவே, ஆசிரியர்கள் பகுதியில் இப்படிப்பட்ட பிரிவுகள் இருப்பதை மாற்றி, அனைவருக்கும் ஒரே மாதிரியான சம்பளம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். இன்றைக்குத் தனியார் துறையில் மானேஜ்மெண்ட் ஸ்கூல்களில் இருக்கும் ஆசிரியர்களுக்குச் சரியாகச் சம்பளம் கிடைப்பதில்லை. சம்பளம் 100 ரூபாய் என்று சொன்னால் 70 ரூபாய், 80 ரூபாய் தான் அவர்களுக்குக் கிடைக்கும் நிலை இருக்கிறது. அவர்கள் தங்கள் சம்பளத்தை சர்க்கார் கஜானாவிலிருந்து பெறவோ, அல்லது நேராக மணியார்டர் மூலமாகப் பெறவோ ஏற்பாடுகள் செய்யப்படுமானால் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நகரப் புறத்தில் இருக்கும் நகர சுத்தித் தொழிலாளர்களை எடுத்துக்கொண்டால், அவர்களை டாக்டர்கள் என்றே சொல்லலாம். இன்றைக்கு நகரங்களிலே அசுத்தமான இடத்தில் இருந்துகொண்டு, அழுக்குப் படிந்தவனை இருப்பவன் சுத்தம் செய்யும்படியான தொழிலைச் செய்துகொண்டு இருக்கிறான். சென்ற காலத்தில் இந்த ஏழை மக்களின் வாழ்வைப் பற்றிப் பரிசீலிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு அது இன்று வரையில் மண்வெட்டியாக இருக்கிறது. அந்தக் கமிட்டியைப் புதுப்பிக்க முடியுமானால் புதுப்பிக்கவேண்டும். இல்லையென்றால் புதிதாக ஒரு கமிட்டி போட்டு நகர சுத்தித் தொழிலாளர்கள் பிரச்னையைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய சர்க்காருடன் உறவு பற்றிய பிரச்னைகளை உரையில் கொண்டு வந்திருக்கிறோம். உரத்திற்கு டில்லியை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. உரம் டில்லியிருந்து வர முடியாது என்று எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன். ஏனென்றால், அமெரிக்காவுக்கு எத்தனை சலாம் போடவேண்டுமோ போட்டாகி விட்டது. அமெரிக்கா சர்க்கார் உரத் தொழிற்சாலையை ஏற்படுத்தத் தயாராக



இல்லை. அன்னியச் செலாவணி மத்திய சர்க்கார் கையில் குறைந்து இருக்கிறது. மக்களுக்கு வேண்டிய அளவுக்கு உரம் அளிக்க முடியாத நிலையில் இருக்கிறோம். இன்றைக்குச் சாதாரணமாகக் கிடைக்கும் உரத்தை கோவாப்பரேட்டிவ்ஸ் மூலமாக நியாயமாகக் கொடுக்கவேண்டும் என்று சொன்னால், எத்தனை உத்தரவுகள் போட்டாலும் இன்றைக்கு இருக்கும் அமைப்பை வைத்துக் கொண்டு செயல்படுத்த முடியாது. அப்படிப்பட்ட பிரச்னைகளில் பொது ஜனக் கமிட்டிகள் இருந்தால் நலமாக இருக்கும். அந்தந்த வட்டாரத்தில் இருக்கிற, வளர்ச்சி அடைந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லோரையும் கொண்ட பொது ஜனக் கமிட்டி அமைத்து அவர்கள் வினியோகம் செய்யக் கூடிய அதிகாரிகளோடு உறவு வைத்துக்கொண்டு வினியோகிக்கும் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இல்லையென்றால் இந்த சிவப்பு நாடா முறை தொடர்ச்சியாக நீடிக்கும். இதைக் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, எனக்கு இன்றும் நேற்றும் வந்திருக்கிற கடிதங்களை இங்கே நான் படிக்க விரும்பவில்லை. சம்பவம் என்னவென்றால், ஒரு மூட்டை, அரை மூட்டை நெல்லைக்கொண்டு செல்லக் கூடியவர்களை நிர்ப்பந்தப்படுத்தி அரிசி மில்லுக்கு எடுத்துச் செல்லும்போதே பிடித்துக் கொண்டு போகிறார்கள் என்று புகார்கள் வருகின்றன. நமது அமைச்சரவையின் கொள்கை இது அல்ல என்பது தெரியும். அமல் நடத்தும் முறையில் இப்படி அமல் நடத்துகிறார்கள். இதைக் கவனிக்கவேண்டும்.

அதே மாதிரிதான் அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் பற்றியும். முன்பு அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்யும் போது தொகுதி எம். எல். ஏ.-க்களைக் கூட கணக்கில் எடுத்துக் கொள்ளமாட்டார்கள். தாமாக வருவார்கள். தாமாகப் போவார்கள். நியாயமான சம்பவத்தில் அமைச்சர்கள் கலந்து கொள்வதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் எந்த சம்பவமாக இருந்தாலும், அமைச்சர்கள் கலந்துகொள்ளவேண்டிய அவசியம் இருந்தாலும் இல்லையென்றாலும், அப்படிப்பட்ட சம்பவங்களில் கலந்துகொண்டார்கள். இதை நாம் ஒரு படிப்பினையாகக் கொள்ளவேண்டும். அந்த முறையில் அவர்கள் திறப்பு விழாக்களுக்குச் சென்று இன்று மூடு விழாவில் இருக்கிறார்கள். இது மிகவும் முக்கியமானது. அமைச்சர்கள் செல்ல வேண்டிய விழாக்களுக்குச் செல்லவேண்டும். கவனிக்க வேண்டியவைகளைக் கவனிக்கவேண்டும். அமைச்சர்கள் எப்போதும் சென்னையில் இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. அப்படிப்பட்ட விழாக்களில் பங்கெடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஒன்றை மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நம் திருப்திக்காக மது விலக்குக் கொள்கையைச் சொல்லிக்கொண்டு இருக்கலாமா? அல்லது அதைக் கைவிடு

வதா என்றால், இன்று மது விலக்குக்கொள்கை வெற்றி அடைந்து விட்டது என்று சொல்லவேண்டுமென்றால் என்ன எதிர்பார்க்கிறோம்? மனிதன் குடிக்காமல் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அப்படி நிலைமை இருக்கிறதா? இல்லை. ஊருக்கு 10 கள்ளுக் கடைகள் இருக்கின்றன. அரிஷ்டம் என்ற பெயரால் எல்லா இடங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன. எல்லா இடங்களிலும் சாராயம் காய்ச்சப்பட்டு வருகிறது. பல்லாயிரக் கணக்கான ஏழை மக்கள் மது விலக்குத் திட்டத்தின் பெயரால் சிறையில் இருக்கிறார்கள். இதற்காக பல லட்சக்கணக்கான ரூபாய் வீண் விரயம் செய்யப்படுகிறது. மறு பக்கத்தில் பணக்காரர்கள் தங்களுக்குச் சாதகமாக வேண்டிய பர்மிட்டுகளைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. அதோடு அரசுக்குப் பல கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. நேற்றைய தினம் ஊட்டியில் நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் பத்திரிகை நிருபர்களுக்குக் கொடுத்திருக்கும் பேட்டியில் மது விலக்கு பற்றி நல்ல முறையில் பதிலளித்திருக்கிறார்கள் என்று பார்த்தேன். நிதானமான அப்ஜெக்ட்டிவ் இருக்கிறது என்பதைப் பார்த்தேன். அப்படிப்பட்ட நிலையில் இதை மீண்டும் மறு பரிசீலனை செய்யவேண்டியது அவசியம். நமது மனத் திருப்திக்காக ஒரு கொள்கை வைத்துக்கொள்ளக்கூடாது. அகத்தில் என்ன இருக்கிறது என்பது அல்லாமல் புறத்தில் என்ன இருக்கிறது என்ற முறையில் பார்த்து அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று நமது மாநிலத்தில் தோல் பதனிடும் தொழில் முக்கியமான தொழில். இன்றைய தினம் அந்தத் தொழிலினால் அன்னிய நாட்டுச் செலாவணி சம்பாதிக்கப்படுகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இன்றைக்கு தோல் பொருள்கள் உற்பத்தி செய்வதில் பலபேர்களுக்கு, பல தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பையும் வருமானத்தையும் கொடுக்கும். தோல் பொருள் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லி, முன்னால் இருந்த மந்திரி சபையில் அதை ஏற்படுத்தாமல் விட்டுவைத்திருக்கிறார்கள். அதையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

ஹரிஜனங்கள் என்று சொல்லும்போது, நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் கல்வித் துறை மானியக் கோரிக்கையில் பேசும்போது எத்தனை முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்று பார்த்தோம். ஹரிஜனங்கள் பிரச்னை முக்கியமான பிரச்னை. அவர்கள் சாக்கடைக்குப் பக்கத்தில்கூட வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிற குடிசைகளைப் பிரிக்கும் முறையில் எல்லா நகரங்களிலும் கமிஷனர்கள் உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்று அறிகிறேன். வேறு ஒன்றும் செய்யாவிட்டாலும் அந்தக் குடிசைகளைப் பிரிக்கவேண்டாம் என்று சொல்லிவிட்டு, அவர்களுக்கு அவர்களுடைய குடிசைகள் இருக்கக்



கூடிய இடங்களை ஜாரி செய்வதா அல்லது அவர்களை வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்துவதா என்பதை மறு பரிசிலனை செய்யலாம் என்று கேட்டுக்கொள்ளப் பிரியப்படுகிறேன்.

சர்க்கார் சிப்பந்திகள் சம்பந்தமாக நம் கொள்கையை ஏற்கெனவே அமல் நடத்தியிருக்கிறோம், மீண்டும் அமல் நடத்துவோம் என்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையில் இன்று ஏற்பட்டிருக்கிற சிக்கலான பிரச்னைகளில் கூடுமான வரையில் அவர்களுக்கு உதவியாகப் பணம் ஒதுக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்தச் சந்தர்ப்பம் அளித்த மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எம். பன்னீர்செல்வம்: பெருமதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே . . .

திரு. ந. வீராசாமி: தற்காலிகத் தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் பேசுகிற நேரத்தில் அரசாங்கத்தால் . . .

மதிப்பிற்குரிய தலைவர் (திரு. இராம. அரங்கண்ணல்): மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம் உரையாற்றுவார்.

திரு. எம். பன்னீர்செல்வம்: பெருமதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில், ஆம்பூர் தொகுதியில் குடிதண்ணீர் பிரச்னைக்காக, ஆறு ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட சர்க்கார் திட்டத்தில் ரூ. 32,98,000 சேர்க்கப்பட்டிருந்தது. அந்தத் திட்டம் இன்றைய வரையில் செயல்படாமல் இருக்கிறது. ஆம்பூர் நகரத்திற்கு முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் வந்தபோது வரவேற்புப் பத்திரத்தில் இதைப் பற்றித் தெரியப்படுத்தியிருக்கிறோம். அகில இந்திய காங்கிரஸ் தலைவர் காமராஜ் அவர்கள் வந்தபோது அவர்களுக்கு அளித்த வரவேற்புப் பத்திரத்தில் தெரிவித்திருக்கிறோம். அதோடு தேர்தல் நடப்பதற்கு முன்பு முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் வந்தபோதுகூட இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறோம். ஆம்பூர் நகர சபையை திராவிட முன்னேற்றக் கழகம் கைப்பற்றியதாலோ என்னவோ இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. 40,000 ஜனத்தொகை கொண்டு, ஏழைத் தொழிலாளர்களும், தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களும், பீடித் தொழிலாளர்களும், அங்கே வாசம் செய்வதைப் பார்க்கும்போது, அவர்களெல்லாம் குடி தண்ணீர் பிரச்னையினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஆம்பூர், பேர்ணாம்பட்டு தொகுதிகளைச் சேர்க்கும் முறையில் ஒரு ஓவர்பிரிட்ஜ் கட்டவேண்டுமென்று தேர்தல் நடக்கும்போது அங்கு வந்த முன்னாள் தமிழக முதலமைச்சர் அவர்கள் பொது மேடையில் பேசினார்கள். அந்தப் பகுதி மக்கள் பாதிக்கப்பட்

டிருக்கிற காரணத்தினால், ஆம்பூர் தொகுதியைச் சேர்ந்தவர்கள் பேர்ணாம்பட்டு செல்ல வேண்டியிருப்பதாலும் பேர்ணாம்பட்டு தொகுதி மக்கள் ஆம்பூர் செல்லவேண்டியிருப்பதாலும், அகரம் பக்கத்தில் இருக்கிற ஆற்றில் ஒரு பாலம் கட்டவேண்டுமென்பதைச் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, அரசம்பட்டு பெரும்பாலும் ஏழைகள் வாழும் பகுதி. அந்த மலைப் பகுதியில் ஒரு அணை கட்டவேண்டுமென்பதைச் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு சார்பாக வினியோகம் செய்யப்படுகிற உரங்கள் விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கிடைக்காமல், பெரிய பெரிய மில் ஓனர்கள், மிட்டா மிராசுகளுக்குத்தான் கிடைக்கிறது. கூட்டுறவு முறையில் ஏழை விவசாயிகளுக்கு கிடைக்க அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். இப்பொழுது ரூ. 32,98,000 ஒதுக்கியும் செயல்படாததற்குக் காரணம் என்ன என்பதை இந்தச் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகிறேன். ஆம்பூர் நகராட்சியில் ஒரு மெம்பர் என்ற தோரணையில் கூறுகிறேன். அங்கு இன்னும் குடும்பக் கார்டு திட்டம் அமுல்படுத்தப்படவில்லை. 20,000 கார்டுகள் அச்சடித்து வைக்கப்பட்ட போதிலும், இன்றுவரையில் கொடுக்கப்படாத காரணம் தெரியவில்லை. எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்குத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, விடைபெறுகிறேன்.

*திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார்: அவைத் தலைவர் அவர்களே, முதற்கண் இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது நடக்கும் விவாதத்தில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நான் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு, ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த நாட்டிலுள்ள முக்கியமான பிரச்னை உணவுப் பிரச்னை. ஆளும் கட்சியைப் போலவேதான் மற்ற எல்லா மக்களும் உணவுத் துறையிலே முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். தஞ்சை மாவட்டம் நெற்களஞ்சியம் என்று கூறப்படுகிறது. அங்கு இருக்கும் சில பிரச்னைகளை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தஞ்சை மாவட்டம் இரண்டுவித நிலங்களைக் கொண்டது. வறண்ட பூமியாகிய தெற்கு பகுதி, அதிகத் தண்ணீரினால் தொந்தரவு ஏற்படுகிற வடக்குப் பகுதி ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டது. காவேரி பழைய டெல்டாவில் வரக்கூடிய வடக்குப் பகுதியிலே வடிகால் வசதிக்கு சோழர் காலத்தில் எந்த முறை கையாளப்பட்டதோ அந்த முறை தான் இப்பொழுதும் நீடித்து வருகிறது. அதற்காக உலக பாங்கு கூட ஏதோ தொகை ஒதுக்கியிருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். அவர்கள் கொடுக்கிற தொகையை நல்ல முறையில் செலவழித்து வடிகால் பிரச்னையைத் தீர்க்கவேண்டும். அத்துடன் தெற்குப்





பகுதியிலே காவேரி மேட்டூர் பிராஜெக்ட்டின் கீழ்வரும் சில பகுதிகளிலே சில இடங்களில் கடைமடை வரையில், அதாவது டெய் என்டு வரையில் நல்ல முறையிலே தண்ணீர் போவது இல்லை. ஆனால், அந்த மக்கள் அதற்காக தீர்வை கட்டிக்கொண்டிருக்கிறார்கள். நல்ல முறையில் அவர்களுக்கு எப்பொழுதும் கடைமடை வரையில் தண்ணீர் பாயும் என்ற அளவுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடிமராமத்து. இப்பொழுது குடிமராமத்து பஞ்சாயத்துக்கள் மூலமாகச் செய்வதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் 1961-ம் வருஷம் குடிமராமத்துத் திட்டத்தை ஒரு முன்னோடித் திட்டமாக எடுத்து நல்லமுறையில் செயல்படும் என்று எதிர்பார்த்தோம். அந்த மாதிரியான திட்டமானது இப்பொழுது நாளடைவிலே சில சந்தர்ப்பங்களினால் வெற்றிபெறாமல் இருக்கிறது. பஞ்சாயத்து நிர்வாகத்தை எடுத்து நடத்தும்பொழுது, நிர்வாகம் நல்ல முறையில் நடைபெற்றாலும், அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற ஊராட்சி மன்றமானது, அந்த மன்றத்திலுள்ள அங்கத்தினர்கள், தலைவர் ஆகியோர் மற்றவர்கள் குறை கூறுவார்களே என்ற காரணத்தினால் அதை நல்ல முறையிலே எடுத்துச் செய்வதற்கு தயங்குகிறார்கள். பின்பு அதற்காக ஒரு கமிட்டி போட்டு ஏற்பாடு செய்தோம். அந்தக் கமிட்டியாரும் ஊரில் கெட்ட பெயர் வாங்கக்கூடாது என்பதற்காக அந்தப் பொறுப்பை ஏற்று நடத்த தயங்கினார்கள். 1858-ம் ஆண்டு கட்டாய வேலை திட்ட சட்டத்தின் கீழ் (கம்பல்சரி லேபர் ஆக்ட்) குடிமராமத்து நல்ல முறையிலே செய்வதற்கு வழிவகை செய்வது மிகவும் அவசியம்.

அடுத்தபடியாக, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே ஒரே ஒரு குறை. உணவு உற்பத்தி அதிகமாக பண்ணக்கூடிய பகுதிகளிலே நெல் அதிகம் உற்பத்தி செய்யக்கூடிய பகுதியானது காவேரியினுடைய பழைய டெல்டா பிரதேசம். அந்த இடங்களிலிருந்து உற்பத்தி செய்த பொருள்களை சந்தைகளுக்கு எடுத்துச் செல்லவேண்டுமென்றால், தகுதியான சாலைகள் இல்லை என்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். இரண்டு மைல்களுக்கு நான்கு ஆறுகள், ஒரு மைலுக்கு 10 வாய்க்கால்கள் இம்மாதிரி இருப்பதின் காரணமாக சாலைகள் அமைப்பது என்றால் மிகவும் சிரமம் இருக்கிறது. குறுகிய காலப் பயிராகிய குறுவை நெல்லை சந்தைகளுக்கு உடனடியாக எடுத்துச் செல்லவேண்டுமென்றால், நல்ல சாலை வசதிகள் இல்லை. ஆகவே, பாலங்கள் கட்டவேண்டிய இடத்தில் பாலங்கள் கட்டி அல்லது ஆற்றங்கரைகள் மீது சாலைகள் அமைப்பதற்கு வேண்டிய வசதி செய்து கொடுத்தால்தான், உற்பத்தி செய்த பொருள்களை உடனடியாக சந்தைகளுக்கு எடுத்துச்செல்வதற்கு நல்ல வாய்ப்பு இருக்கும், விவசாயிகளுக்கு ஒரு உற்சாகமும் ஏற்படும்.

[திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனூர்] [1967 மார்ச் 25

அடுத்தபடியாக ஆறுகள் மேடிட்டுப் போயிருக்கிற காரணத்தினால், ஆறுகளில் தூர் எடுப்பதற்கு ஒரு மாஸ்டர் பிளான் தயாரித்து அமுல் படுத்துவது மிகவும் அவசியமாகும்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மின்சார பம்பு செட்டுகள் இருக்கின்றன. அதற்கான கட்டணத்தைக் குறைக்க வேண்டும். அங்கே ஒரு குதிரை வேகத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 60 குறைந்தபட்சமாக நிர்ணயித்திருக்கிறார்கள். எனக்குத் தெரிந்தவரையில் ஸ்டேட் எலக்டிரிசிடி போர்டு ஒரு ஹார்ஸ் பவருக்கு ரூ. 15 கட்டணம் நிர்ணயித்திருப்பதாக அறிகிறேன். ஸ்டேட் எலக்டிரிஸிடி போர்டு என்ன கட்டணம் வைத்திருக்கிறார்களோ, அதே கட்டண விகிதம் என்னுடைய மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கும் கிடைக்க வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் கிராப் இன்ஷூரன்ஸ் திட்டத்தை நல்ல முறையில் அமுல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக 1958-ம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டத்தின் பீடிகையில் உணவு உற்பத்தி பெருகுகின்ற நேரத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை நல்ல முறையில் அமுல்படுத்துவதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அதுவும் குறிப்பாக நமது நாட்டில் மதசார்பில்லா முகம்மதியர், கிறிஸ்துவர்கள் இந்தத் திட்டத்தை எதிர்த்து வருவதால், அவர்களுக்கு நல்ல முறையில், அவர்களுடைய மதக் கொள்கையிலே குறுக்கிடாத முறையில், எந்த முறையைக் கைப்பற்றவேண்டும் என்பதை அவர்களுக்கு அந்த வகையிலே நன்றாகப் புரியும்படி எடுத்துக்கூறி, அந்தத் திட்டத்தை நல்லதோர் திட்டமாக எடுத்து நடத்துவதற்கு அரசாங்கம் முற்படவேண்டும்.

அடுத்தபடியாக, உர விநியோகம் பற்றி கூறினார்கள். கூட்டுறவு முறை மூலம் உரம் விநியோகம் செய்யப்படுவதிலே சில இடங்களில் நிர்வாக சங்கடங்கள் ஏற்படுகின்றன. பஞ்சாயத்துக் கூட்டுறவு மன்றங்கள் கூட இந்த உர விநியோகத்தை எடுத்துச் செய்வதற்கு முன்வரலாம்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துக் கூட்டுறவு மன்றங்களில் இருக்கின்ற விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள், கூட்டுறவு விஸ்தரிப்பு அதிகாரிகள் இவர்கள் யாருடைய கட்டுப்பாட்டில் வேலை செய்கிறார்கள் என்பது நமக்குத் தெரியவில்லை. ஏனென்றால், இரண்டு அதிகாரிகளின் கீழ் அவர்கள் வேலை செய்வதினால், அவர்களுடைய பொறுப்பைத் தட்டிக்கழிக்க அது சாதகமாக இருக்கிறது. அவர்கள் மாவட்ட விவசாயி அதிகாரிகளின் கீழும், பஞ்சாயத்து கூட்டுறவு மன்ற ஆணையாளர்கள் கீழும் வேலை செய்வதால், அதாவது ஒரே ஆள் இரண்டு அதிகாரிகளின்கீழ் வேலை செய்வதால், யாராவது ஒருவர் கேட்டால், மற்றொருவருடைய வேலையை கவனிக்கிறேன் என்று மாற்றி மாற்றி சொல்லி, இம்மாதிரி அவர்களுடைய பொறுப்பை தட்டிக் கழிக்கிறார்கள். ஆகவே, எந்த அதிகாரியின் கீழ் அவர்கள் வேலை செய்யவேண்டும் என்பதை திட்டவட்டமாக நிர்ணயித்துக்கொள்ளவேண்டும்.



1967 மார்ச் 25] [திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனூர்]

அடுத்தபடியாக, குடிநீர் வசதியைப் பற்றி எனக்கு முன்பு பேசிய ஒரு அங்கத்தினர் அவர்கள் கூறினார்கள். இருபது ஆண்டு காலமாக ஹரிஜன மக்களுக்கு காங்கிரஸ் ஆட்சி குடிதண்ணீர் வசதி செய்துகொடுக்கவில்லை என்று கூறினர். அதிலும் குறிப்பாக 20 ஆண்டு காலமாக ஹரிஜன் என்ற பெயர் தான் வெகுமதியாக இருந்துவருகிறது என்று கூறினார்கள். இந்த நேரத்திலே மகிழ்ச்சியான செய்தி. இந்த 20 ஆண்டு காலத்தில் நான் ஹரிஜனாக பிறக்கவில்லையே ஹரிஜனுக்கு உள்ள சலுகை நமக்கு இல்லையே என்று வருத்தப்பட்டுக் கூறியவர்கள் கூறியது பொய் என்ற உண்மையை இது எடுத்துக்காட்டிவிட்டது.

எனவே, இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், உணவு உற்பத்திக்கு முதல் இடம் கொடுக்கவேண்டும், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே நல்ல சாலைகள் அமைத்துக்கொடுத்து உணவுப் பொருள்களை சந்தைகளுக்கு உடனடியாக எடுத்துப்போவதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும், குடி மராமத்து வேலையை நல்லமுறையில் கவனித்து, நல்ல திட்டங்கள் போட்டு நிறைவேற்றவேண்டும், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை நல்ல முறையில் அமல் நடத்துவதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, விடை பெறுகிறேன். வணக்கம்.

* திரு. எம். கண்ணப்பன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் மீது பேசும் வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்றையதினம், உணவுச் சிக்கலைத் தீர்க்கும் பணியில், அது சம்மந்தமான கொள்கைகளை கடைப்பிடிக்கும் நாம், உணவு உற்பத்தியைப் பெருக்கும் விவசாயிகள் எப்படிப் பட்ட வசதிகளைப் பெற்றிருக்கிறார்கள், எந்த எந்த வசதிகளை நாம் செய்து கொடுக்க வேண்டும் என்று எனக்கு முன்னால் பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அப்படிக் குறிப்பிடும்போது, விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் கடன் திட்டங்கள் இன்றைய தினம் நல்ல முறையில் செயல் படவில்லை. இன்றைய தினம் எடுத்துக்கொண்டால், கிணறு வெட்ட கடன் கொடுத்தாலும் உரம் வாங்க என்று கடன் கொடுத்தாலும், அவை விவசாயிகளுக்கு விரைவில் கிடைப்பதில்லை என்கின்ற குறைபாடு இருக்கின்றது. அப்படிப் பட்ட குறைபாடுகளைக் குறிப்பிடும் போது, கிணறு வெட்ட வேண்டும் என்று கடன் விண்ணப்பம் போட்டால், குறைந்தது ஆறு அல்லது எட்டு மாதங்களாவது காலம் தாழ்த்தப்

[திரு. எம். கண்ணப்பன்] [1967 மார்ச் 25

பட்டுத்தான் விண்ணப்பங்கள் எடுத்துக் கொள்ளப் படுகின்றன. சாதாரண விவசாயி கிராமத்திலிருந்து பல தடவை அது சம்மந்தப்பட்ட அலுவலகங்களுக்குப் போய் வர, நடந்தும், பணம் செலவு செய்தும் கடன்களைப் பெற வேண்டிய சூழ்நிலைதான் இருக்கிறது. அதை மாற்றி அமைத்தாக வேண்டும். சுலபமான முறையில் கடன்களை விவசாயிகள் பெறக்கூடிய நிலையை உண்டாக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன். அதே மாதிரித்தான் உரம் வாங்க வேண்டும் என்றால், விவசாயிகளுக்கு நியாயமான விலைக்கு எல்லாக் கடைகளிலும் கிடைப்பதில்லை. அப்படி அவர்களுக்குக் கொடுப்பதற்கு வேண்டிய உரங்களை மத்திய சர்க்காரிலிருந்து வற்புறுத்தி வாங்கி, விவசாயிகளுக்குக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நீர்ப்பாசனம் சம்மந்தப்பட்ட வரையில், கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பெரும்பாலும், கிணற்றிலிருந்துதான் பாசனம் செய்யவேண்டும். அப்படி பட்ட கிணற்றுப்பாசனம் தான் அதிகம். அங்கே கிணற்றிலிருந்து இறைக்கும் தண்ணீருக்கு, மின்சாரத்தை உபயோகித்து, மின்சார பம்பு செட்டுகள் வைத்து தண்ணீரை இறைத்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயத்திற்கு இறைத்துக்கொள்ளும் மின்சாரத்திற்கு கட்டணம் அதிகமாக இருக்கிறது. அந்தக் கட்டணத்தையும் குறைக்க வேண்டும். அதோடு டெபாசிட் தொகை என்று இரண்டு ஆண்டுகளாகக் கட்டிக் கொண்டிருக்கிறோம். அதை ரத்து செய்து விட்டு, ஓடும் மோட்டாருக்கு எடுத்துக் கொள்ளும் மின்சாரத்திற்கும் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு கட்டணத்தின் மீது அதிக வரியும் போடுகிறார்கள். அதையும் குறைக்க வழி வகை செய்ய வேண்டும். ஆகவே, இந்த டெபாசிட் தொகையை எடுத்து விடுவதோடு, வரியையும் குறைத்து விவசாயிகளுக்கு சலுகை கொடுக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளுகிறேன். அதோடு விவசாயத்திற்கு வழங்கும் மின்சாரம் 12 மணி நேரம் தான் கொடுக்கப்படுகிறது. பல்வேறு பகுதிகளிலும் இம்மாதிரித்தான் வழங்கப்படுகிறது. அதை மாற்றி விவசாயத்திற்கு என்றால், நாள் முழுவதும், 24 மணி நேரமும், மின்சாரம் வழங்கும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே வேண்டிக் கொள்ளுகிறேன்.

பொள்ளாச்சி, உடுமலை வட்டாரத்திலே, பரம்பிக்குளம்—ஆழியாறு கால்வாய்கள் பூராவும் பாய முடியவில்லை. வாய்க்கால்கள் வெட்டப்படவில்லை. சென்ற 4, 5 ஆண்டு காலமாக, அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் தலையீட்டின் பேரிலும், இன்னும் வேறு கட்சிக் கண்ணோட்டத்திலும், வெட்டப் பட்டிருக்கும் கால்வாய்கள் பெருவாரியாக அந்தப்பகுதி கிராம வாசிகளுக்கு பயன் படாத நிலையில் வெட்டப் பட்டிருக்கின்றன. அதை மாற்றி, அந்தப் பகுதி நிலங்களுக்கெல்லாம் பாயும் வகையில் அந்த வாய்க்



1967 மார்ச் 25] [திரு. எம். கண்ணப்பன்]

கால்களை சீர் செய்து கொடுக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளுகிறேன். அந்தப் பகுதியில் கிணத்துக்கிடவு தொகுதியின் மேற்குப் பகுதி கேரள மாநிலத்தின் எல்லையில் இருக்கிறது. அங்கே ஆயிரக்கணக்கான கிராம மக்கள் எந்த விதமான முன்னேற்றமும் இல்லாமல் இருக்கிறார்கள். தண்ணீர் வசதி மிக மிக மோசமான நிலையில் இருக்கிறது. அந்தப் பிராந்தியங்களைச் செம்மைப்படுத்தி, பரம்பிக்குளம் கால்வாய்களிலிருந்து பாசன வசதி செய்து கொடுத்தால் நல்ல முறையில் இருக்கும். கேரள மாநிலத்தில் இருக்கும் அத்தனை நிலங்களும் வளமாக செழித்துக் கொழிக்கும் அதே நேரத்தில், நம்முடைய மாநிலத்தில் இருக்கும் நிலங்கள் தரிசாகக் கிடைக்கின்றன. ஆகவே, அப்படிப் பட்ட பகுதிக்கு பரம்பிக்குளம் வாய்க்கால் பாசனத்தை விரிவு படுத்தி நீர்வளத்தைப் பயன் படுத்திக்கொண்டு விவசாய முன்னேற்றத்தைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் என்று குறிப்பிடும் போது, நம்முடைய அரசாங்கத்திலிருக்கின்ற அதிகாரங்களை கிராம மக்களுக்கு பயன் படும் அளவில் இன்றைய தினம் விரிவாக்க வேண்டும் என்று இந்த பஞ்சாயத்துக்களும், யூனியன்களும் அமைக்கப்பட்டன. ஆனால் அந்த நோக்கத்தை அந்த பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும், நிர்வகிக்கும் அதிகாரிகள் நிறைவேற்றவிடவில்லை. ஆரம்பத்திலே கொடுக்கப் பட்டிருந்த சில அதிகாரங்கள் கூட பஞ்சாயத்து யூனியன்களுடைய கைகளிலிருந்து பறிக்கப் பட்டு விட்டன. அரசாங்க அதிகாரிகளுடைய கையில்தான் இருக்கிறது. ஆகவே, அப்படிப் பட்ட நிலைகளை உள்ளபடியே மக்கள் ஆட்சி மலரவேண்டும் என்பதற்காக, பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும், அந்தப் பகுதியில் அமையும் யூனியன் தலைவருக்கும், மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட தலைவர்களுக்கு அதிகாரங்களை வழங்க வேண்டும் என்பது அவசியம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பஞ்சாயத்துத் தலைவர்கள், யூனியன் தலைவர் என்று குறிப்பிடும் போது, அந்தத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் பெரும் பொறுப்பு தனிப் பட்ட பஞ்சாயத்துத் தலைவர்களிடம் இருக்கிறது. அதை மாற்றி, பொது மக்களே நேரிடையாக தேர்ந்தெடுக்கும் முறையைச் செயல் படுத்த வேண்டும் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களை சிறையிலிருந்து, அந்தத் தியாகிகளை விடுவிக்க உத்தரவு போட்டு விட்டார்கள். அதற்காக இந்த அரசாங்கத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது பொள்ளாச்சியிலே 50-க்கும் மேற்பட்டவர்கள் சுட்டுத் தள்ளப் பட்டார்கள். அதே மாதிரி தமிழகத்திலே இன்னும் பலவிடங்களிலும் சுட்டுத் தள்ளினார்கள். அப்படிச் [illegible]பட்டவர்களுடைய எண்ணிக்கைபற்றி முன்பு குறிப்பிட்டுப்

பேசியிருக்கிறார்கள். அப்படித் துப்பாக்கிச் சூட்டினால் மாண்ட வர்களுக்கும், இன்னும், தமிழ் மொழியைக் காக்கவேண்டும் என்று தன் உடலிலே எண்ணெய் வார்த்துக்கொண்டு நெருப்பைக் கொளுத்தி விட்டுக் கொண்ட தியாகிகளை நினைவு கோரும் வகையிலும், யுத்தத்தில் மடிந்தவர்களுக்கு எப்படி நினைவுச் சின்னம் எழுப்பப் பட்டிருக்கிறதோ, அதே வகையில் இந்த தியாகிகளுடைய மறைவிற்காகவும் நினைவுச் சின்னம் சென்னை நகரிலே எழுப்ப வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளு கிறேன். அதே மாதிரி, இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்திலே, துப்பாக்கிச் சூட்டினாலும், இன்னும் மற்ற வகையிலும் எத்தனையோ பேர்கள் கைகால்கள் இழந்து அங்க ஹீனர்களாக ஆனவர்கள், அவர்களுடைய குடும்பங்கள், பாதிக்கப்பட்டிருக் கின்றன. அப்படிப் பட்டவர்களுக்கும் அரசாங்கத்திலிருந்து உதவித் தொகை வழங்க வேண்டும் என்றும், அவர்களுடைய குடும்பங்கள் இந்த நாட்டின் மொழியைக் காப்பாற்றும் பணியில் இழப்புக்களைத் தாங்கவேண்டியிருக்கிறது என்கின்ற காரணத் தால், அப்படிப் பட்ட இழப்புக்களுக்கு ஈடு செய்யும் அளவிற்கு அரசாங்க உதவி கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளு கிறேன்.

இறுதியாக, அரசாங்கச் சின்னம், எம்ப்ளம், அதில் இருக்கும் எழுத்துக்கள் இந்தி எழுத்துக்களிலும், ஆங்கிலத்திலும் தான் இருக்கின்றன. தமிழில் காணப்படவில்லை. அந்தக் குறை நம்முடைய உள்ளத்திலே இருக்கிறது. அப்படிப்பட்ட குறையை யும் போக்கும் அளவிற்கு, அந்த சின்னத்தில் இருக்கும், "Gevern- ment of Mad-as" என்பதையும், கீழே இருக்கும் இந்தி எழுத்துக்களையும் மாற்றி, அவற்றை தமிழிலே அமைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அவைத்தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

முற் பகல் 11-00 * திரு. கே. போஜன் : அவைத் தலைவர் அவர்களே, இறுதித் துணை அறிக்கையின் மீது சில கருத்துக்களை நான் கூற விரும்பு கிறேன்.

பொதுவாக, நம் புது அமைச்சரவை விவசாயத்திற்கு முக்கிய இடம் கொடுத்திருப்பதை நான் வரவேற்கிறேன். ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு விவசாயமானது முதுகெலும்பு போன்று அத்தியாவசியமானதாகும். விவசாயப் பெருக்கத்திற்கு ஊக்கம் கொடுக்கவேண்டியதன் அவசியத்தைப்பற்றி கனம் உறுப்பினர்கள் பலர் பேசிவிட்டார்கள். ஆகவே, நான் அதைப்பற்றி அதிகமாகப் பேச விரும்பவில்லை. விவசாயத்தைப் பொறுத்த வரையில், நீலகிரி ஜில்லாவில் பெருவாரியான மக்கள் கிழங்கு சாகுபடி செய்து வருகிறார்கள். நீலகிரி விவசாயிகளாகிய நாங்கள் மழையையே நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. கிழங்கு விவசாயச் சாகுபடி இப்பொழுது இரண்டுங்கெட்டான் நிலையில் இருக்கிறது. மழை



அதிகமாகப் பெய்துவிட்டால் மஞ்சப் பூசண நோயும், லேட் ப்ளைட் என்கிற நோயும் உண்டாகி கிழங்குச் சாகுபடி பாதிக்கப்பட்டு, விளைச்சல் குறைந்துவிடுகிறது. மழை இல்லாவிட்டாலும் விளைச்சல் நசித்துப் போய்விடும் நிலை இருக்கிறது. நீலகிரி விவசாய மக்கள் அதிகச் சிரமத்துடன் கிழங்கு விவசாயத்தை நடத்திக் கொண்டு வருகிறார்கள். கிழங்கு விவசாயத்திற்கு வேண்டிய உரங்களையும், பூச்சிக் கொல்லி மருந்துகளையும் சர்க்கார் காலா காலங்களில் குறைந்த விலையில் கொடுத்து, நீலகிரி விவசாய மக்களுக்கு உதவ முன்வரும்படியாக நான் பணிவன்புடன் அமைச் சரவையைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இரண்டு மூன்று ஆண்டுகளாக நீலகிரியில் மழை இல்லாத காரணமாக அங்கே வறட்சி ஏற்பட்டிருக்கிறது. அநேக சிறு விவசாயிகள் கிராமக் கூட்டுறவு சங்கங்களில் கடன்பட்டிருக் கிறார்கள். உரங்களுக்காகவும், பூச்சிக் கொல்லி மருந்துகளுக்காக வும் வாங்கின கடன் தொகையை அவர்கள் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஓரிரண்டு ஆண்டுகள் கழித்து அவர்கள் பட்ட கடனைத் திருப்பிக் கொடுக்க அவகாசம் கொடுப்ப துடன், மேலும் அவர்கள் விவசாயம் செய்ய, எரு வாங்க, பூச்சிக் கொல்லி மருந்து வாங்க ஆகிய இப்படிப்பட்டவற்றிற்குத் தேவை யான எல்லா வசதிகளையும் சர்க்கார் செய்துகொடுக்க வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, கல்வியை எடுத்துக்கொண்டால், நம்முடைய அரசாங்கம் கூடிய வரையில் எல்லா மக்களுக்கும் இலவசமாகக் கல்வியளிக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். எல்லோருக் கும் அளிக்க முடியாவிட்டால் ஏழைகளுக்கு மாத்திரமாவது இலவசக் கல்வியளிக்க சர்க்கார் ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். முடிந்தால் இந்த ஆண்டி லிருந்து புகு முக வகுப்பிற்கு இலவசமாக ஏழை மக்களுக்கு— கல்லூரிக் கட்டணம் கொடுக்க முடியாத ஏழை மக்களுக்கு— மாத்திரமாவது இலவசக் கல்வி அளிக்க சர்க்கார் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நீலகிரியைப் பொறுத்த வரையில், அங்குள்ள படுக சமுதாயத் தினர் கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். தொழிற் கல்வியிலே அவர்களுக்கு அதிகச்சலுகை கொடுத்து, அவர்களுக்கு அதிகமான இடங்களைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது தொழில் கல்லூரிகளில், நீலகிரியில் வசிக்கும் பின்தங்கிய வகுப்பினர்களுக்கு இரண்டு அல்லது மூன்று இடங்கள் தான் கொடுக்கிறார்கள். அது மிகவும் குறைவான எண்ணிக்கையாகும். இப்பொழுது அநேக மாணவர் கள் படிக்க முன்வருகிறார்கள். இப்பொழுது இருக்கும் கோட்டா மிகவும் குறைவாக இருக்கிறது. பொதுக் கோட்டாவில் மாணவர் கள் வருவதற்கும் கடினமாக இருக்கிறது. வேறு ஜில்லாக்களிலுள்ள மாணவர்கள், நீலகிரியில் தங்களுக்குச் சொந்தக்காரர்களோ

மற்றவர்களோ உத்தியோகத்தில் இருப்பதைக் கொண்டு, நேடிவிடி சர்டிபிகேட் வாங்கிக்கொண்டு, நீலகிரி கோட்டாவிற்கு மனுப் போட்டு விடுகிறார்கள். அதனால், எங்களுடைய சமூகத்தினர் மற்ற சமுதாயத்தினருடன் போட்டி போட இயலுவதில்லை. அந்த முறையை நீக்கி, படுக சமுதாயத்தினர் பின்தங்கிய நிலையில் இருப்பதால், அவர்களுக்கு அதிகமான இடங்களை அளிக்குமாறு அமைச்சரவையினரை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஆசிரியர்களுடைய வாழ்க்கை நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. விலைவாசி உயர்வினால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆசிரியர்களுக்கு ஜாகை வசதியும், ஊதிய உயர்வும் கொடுக்க அமைச்சரவை ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

உணவுப் பிரச்சினையைத் தீர்க்க நம்முடைய சர்க்கார் அரும் பாடுபட்டுக் கொண்டு வருகிறார்கள். வேண்டிய நடவடிக்கைகளையெல்லாம் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நீலகிரி ஜில்லாவைப் பொறுத்த வரையில் அது நெல் விளையாத ஒரு ஜில்லா. நெல் விளையும் பகுதி என்று சொன்னால், கூடலூர் பகுதியில், ஐந்தாறு ஏக்கரில் ஏதோ கொஞ்சம் நெல் விளையும். பொதுவாக, நீலகிரியில் நெல் விளைவதில்லை. அதனால், உணவு அமைச்சர் அவர்கள் நீலகிரி ஜில்லாவிற்கு ஒரு தனிச் சலுகை கொடுத்து, நீலகிரியில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படாமல் கவனித்துக்கொள்ள வேண்டும். முக்கியமாக, நீலகிரிக்கும் கோவைக்கும் இடையே உள்ள அரிசி நடமாட்டக் கட்டுப்பாட்டை எடுத்துவிடும்படியாகவும் நான் மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மேலும், இந்த அமைச்சரவை, அத்தியாவசியமான பொருள்களின் மீது உள்ள விற்பனை வரியை நீக்கவேண்டும். பொது மக்கள் மறைமுகமாகச் செலுத்தும் இந்த வரியிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கவேண்டியது அவசியமாகும்.

இந்த அவையிலே மானியக் கோரிக்கையின் மீது அன்று பேசிய அங்கத்தினர் ஒருவர் விற்பனை வரி விலக்கு வரம்பை அதிகமாக்க வேண்டும் என்று சொல்லி, 30,000 ரூபாய் வரை விலக்கு அளித்தால் நல்லது என்று சொன்னார்கள். இது ஒரு விஷயத்தில் நல்லதாக இருந்தாலும், மற்ற பல விஷயங்களில் எந்த வகையிலும் அவர்களுக்கு உதவியாக இருக்காது. ஏனென்றால், விற்பனை வரியை வியாபாரிகள் தங்கள் கையிலிருந்து கொடுப்பதில்லை. உபயோகிப்போரிடமிருந்து தான் வசூலித்துக் கொடுக்கிறார்கள். மொத்த வியாபாரிகளுக்கு அதிக வரி போட்டால், சில்லரை வியாபாரிகள் மீதுதான் அவர்கள் அதைப்போட்டு வசூலிக்கிறார்கள். சில்லரை வியாபாரிகளும் பொது மக்களிடத்திலிருந்து வசூலிக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. சிறு வியாபாரிகளுக்கு வரியிலிருந்து விலக்கு அளிப்பதனால் பொது மக்களுக்கு ஒரு விதமான நலனும் ஏற்படாது என்பது என்னுடைய கருத்தாகும்.





கடைசியாக, இந்தப் புது அரசாங்கத்திடமிருந்து பொது மக்கள் அநேக விதமான நலன்களையும் பலன்களையும் எதிர் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய நம்பிக்கை வீண் போகாமலிருக்க, நம்முடைய அரசாங்கம் மக்களுக்கு நல்ல பலன் தரக்கூடிய திட்டங்களையெல்லாம் தீட்டி, அதன்மூலம் மக்களுக்கு நல்ல பலன்களையும் நல்ல வாழ்க்கையையும் அளிக்க அமைச்சரவை எல்லா முயற்சிகளையும் எடுக்கவேண்டுமென்று அவர்களை மிகப் பணிவோடு கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை எனக்கு அளித்தமைக்காக மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன். வணக்கம்.

* திரு. கி. ஜயராமன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகின்ற துணை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக நான் தங்களுக்கு நன்றி செலுத்திக் கொள்ளுகின்றேன்.

நம்முடைய முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் மக்களுடைய சக்தியே மகேசுவரன் சக்தி என்பதை உணர்ந்து, அந்த அடிப்படையிலே பெரும்பான்மையான மக்களுக்கு அதிகமான அளவிலே நன்மை செய்யவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையிலே இந்தக் கோரிக்கைகளையெல்லாம் கொண்டுவந்திருக்கிறார்கள். கடந்தகால ஆட்சியிலே இருந்தவர்கள் பாரபட்சத்தோடு சில முக்கியமான, அவசியமான திட்டங்களையெல்லாம் விட்டுச் சென்றிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் ஆலோசித்து இந்தக் கோரிக்கையின் மீது எழுகிற விவாதத்தில் ஒரு சில கருத்துக்கள் சொல்ல நான் விரும்புகிறேன்.

குறிப்பாக, என்னுடைய தொகுதியாகிய சேலம் நகரம் நெசவாளர் பெருங்குடி மக்களை அதிகமாகக் கொண்டதாகும். இங்கே நாம் பல்வேறு காலங்களில் கைத்தறி நெசவாளர்கள் பெருங்குடி மக்களுக்கிருந்த பிரச்சினைகளையெல்லாம் எடுத்துப் பார்த்தோம். கடந்த காலத்தில் எதிர்க்கட்சியாக நாம் இருந்த நேரத்தில், கைத்தறி நெசவாளர் பெருங்குடி மக்களுக்கு, அவர்களுடைய தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்பதற்காக நல்ல தீர்மானத்தைக் கொண்டுவந்தோம். ஆனால், அது அமலுக்கு வராமற்போய்விட்டது. இந்த நேரத்திலே அதை அமலுக்குக் கொண்டுவருகிற ஒரு நிலைமையை நமது அரசாங்கம் மேற்கொள்ளும் என்று நான் நம்புகின்றேன்.

கைத்தறித் தொழிலைப் பொறுத்த வரையில், கலர் போட்ட சேலையும், கரை போட்ட வேஷ்டியும் கைத்தறிக்கு என்று ஒதுக்கப் பட்டுப் பாதுகாப்பு கொடுத்துவிடுவதால் மட்டும் கைத்தறி நெசவாளர் பெருங்குடி மக்களுடைய வாழ்வு நிரந்தரமாகத் தொடர்ந்து நல்லமுறையில் அமைந்துவிடும் என்று சொல்ல

முடியாது. கைத்தறியாளர்கள் உற்பத்தி செய்கிற அத்தனை சரக்குகளும் நிரந்தரமாகத் தொடர்ந்து வெளியே விற்கப்படுகிற ஒரு ஏற்பாட்டுக்கு வகை செய்யவேண்டும். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற நல்ல பல திட்டங்களை மத்திய அரசினருக்கு வற்புறுத்திச் சொல்ல வேண்டும். கடந்த காலங்களில் இங்கே இருந்தவர்கள் பெரிய பெரிய ஆலை முதலாளிகளை அல்லது மில் தொழிலை முழுவதுமாக ஆதரிக்கின்ற நிலையில் இருந்திருக்கலாம். ஆனால், இன்றைய நிலைமையில், கைத்தறி நெசவுத் தொழிலுக்கும், அதிலே ஈடுபட்டிருக்கக்கூடிய நெசவாளர் பெருங்குடி மக்களுக்கும் நல்லதொரு மார்க்கத்தைத் தேடித் தரவேண்டும் என்று நான் நம்முடைய அரசினருக்கு மிகவும் தெளிவாகவே வலியுறுத்தி சொல்லிக் கொள்ளுவேன். அதற்குரிய சூழ்நிலை இன்று உருவாகியிருப்பதையும் நாம் இப்பொழுது செய்தித்தாள்களிலிருந்து பார்க்கிறோம். குறிப்பாக, ஃப்ரெஞ்சு நாட்டிலே இம்மாதிரியான கைத்தறி ஆடைகளுக்கு நல்ல மார்க்கெட் நிரந்தரமாகக் கிடைக்கக்கூடும் என்பதற்காக அவர்கள் நம்மோடு ஆலோசித்து வருகிறார்கள் என்று அறிகிறேன். அந்த முறையில், மாநில அரசினர் தங்களுடைய தெளிவான கருத்துக்களைச் சொல்லிவிட வேண்டும்.

அடுத்து, சேலம் மாநகரத்தில் முக்கியமான பிரச்சினையான பாதாளச் சாக்கடைத் திட்டம் பற்றி கடந்த காலத்தில் இந்த மாமன்றத்தில் பலர் பேசினார்கள்; பேசிவிட்டுச் சென்றுவிட்டார்கள். ஆனால், சென்ற மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே பாதாள சாக்கடை திட்டத்திற்காக ஏறத்தாழ 25 லட்சம் ரூபாய் வரை மத்திய அரசினர் ஒதுக்கியிருந்தார்கள். சேலம் மாநகரத்தில் பாதாள சாக்கடைத் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவருவதற்காக அந்த தொகையை ஒதுக்கி இருந்தார்கள். ஆனால், பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட 25 லட்சம் ரூபாயையும் திடீரென்று திரும்பப் பெற்றுக்கொண்டார்கள், அதற்கு எந்தவிதமான காரணமும் கூறவில்லை. நான் சென்ற காலத்தில் நகர சபை உறுப்பினராக இருந்தபோது, அதற்கான விளக்கங்களைக் கேட்டேன். விளக்கத்திற்குப் பதில் கூட சொல்ல முன்வரவில்லை. ஆனால், "பொதுச் சுகாதாரம், மருத்துவம்" என்ற தலைப்பின்கீழ் இது இருக்கிறது. சேலம் மாநகரப் பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக வருகின்ற அந்த செலவீத்திலே ஆராய்ச்சி செய்வதற்கு அதிகமான அளவிலே தொகை ஒதுக்குவது அவசியமாகும் என்று நான் கருதுகிறேன்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இன்னும் அமலுக்கு வரவில்லை. காலம் தாழ்ந்து கொண்டே போகிறது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சென்னை நகரத்தைப் போன்று சேலம் மாநகருக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை உடனே அமல் படுத்த வேண்டும். ஆனால் சிறிய பகுதியான திருமங்கலம் பகுதிக்குக் இம்மாதிரி திட்டத்தை சேர்த்து இருக்கிறார்கள். கூடுமான விரைவிலே, இன்னும் அதிகமான





அளவிலே பணம் ஒதுக்கி, இம்மாதிரியான திட்டங்களை ஏற்று நடத்துவதற்கு இந்த மாநில சர்க்கார் முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி, சேலம் மாநகரிலே குடிதண்ணீர், மெயின் குழாய்கள் அமைப்பதுபற்றிய பிரச்சினைகளைப் பற்றி ஏற்கனவே பலமுறை அதன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும், இலாகாவினரையும் நேரில் சந்தித்து எடுத்துச் சொன்னோம். அங்கே முக்கியமாக நெசவாளர்ப் பெருங்குடி மக்கள் தொழிலாளர்கள் முதலியோர் அந்தப் பகுதிகளில் வாழ்கிறார்கள். குடிதண்ணீர், மெயின் குழாய்கள் பற்றியவைகளை நல்ல விளக்கங்களோடு எடுத்துச் சொல்லியுங்கூட அதை அமலுக்குக் கொண்டுவராமல், பாரபட்ச எண்ணத்தோடு நடந்துகொண்டார்கள் என்பதை இந்த அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். பெரிய பணக்காரர்கள் வசதி படைத்தவர்களுக்கு அல்லாமல், சாதாரண ஏழைத் தொழிலாளர்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ அங்கெல்லாம் இந்தக் குழாய்களை அமைத்தால் அந்த ஏழைகளுடைய குடிதண்ணீர் பிரச்சினை எளிதில் தீரும். அதன் மூலம் ஏழைகளுடைய துயரம் தீரும் என்பதை இந்த அமைச்சரவைக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, நம் மக்கள் தொகை அதிகமாக ஆகி, நெருக்கடி அதிகமாக இருக்கிற நேரத்திலே குறிப்பாக குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். குடும்பக் கட்டுப்பாடு திட்டம் நல்ல திட்டந்தான். அதை நடைமுறைக்குக் கொண்டு வருகின்றபோது, இடையிலே பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. பல்வேறு எண்ணங்களோடு அங்கே இருக்கும் அதிகாரிகள் இருக்கிறார்கள். குறிப்பாக, நான் நேரிடையாகச் சென்றிருந்தபோது, ஒரு டாக்டர் ஒரே நாளில் நூற்றுக்கு அதிகமான நபர்களுக்கு ஆபரேஷன் செய்திருக்கிறார்கள். குடும்பக் கட்டுப்பாடு திட்டம் நல்ல திட்டமாதலால் அதை நான் முழுக்க முழுக்க ஆதரிப்பவன். இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்து அமல்படுத்துகிறார்கள். திட்டம் நடைமுறையில் வரும்போது இங்குமங்கும் சில சிக்கல்கள் ஏற்படும். இந்தத் திட்டத்திலே எண்ணம் நல்லதாக இருப்பதால், நிச்சயமாக இந்தத் திட்டத்தை, நமது மாநில சர்க்கார் மீண்டும் புனரமைப்பு செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, கூட்டுறவு நாட்டு உயர்வு என்று சொல்கிறோம். இந்த கூட்டுறவு மூலமாகத்தான் ஏழை அல்லது எளிய மக்களுடைய வாழ்க்கைத்தரம் முன்னேற முடியும். கூட்டுறவு என்ற நாட்டு உயர்வு ஏழை மக்களுடைய பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் என்ற சித்தாந்தத்தை நாம் நடைமுறையில் கொண்டு வர வேண்டும். இது நாட்டுக்குத் தேவை என்று எடுத்துச் சொல்கின்ற நேரத்திலேதான், அந்தக் கூட்டுறவு நிலையங்களில், நிர்வாக ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன என்பது நமக்கு வருத்தத்தை

அளிக்கின்றது. அந்த முறையில் சேலம் நகரத்திலே ஒரு பெரிய கூட்டுறவுச் சாலை இருக்கின்றது. அதில் நடந்துள்ள பல ஊழல்களைப்பற்றி இந்த மாமன்றத்தில் அதிகார பூர்வமாக, ஆணித்தரமாக, பல நிகழ்ச்சிகளை எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கூட்டுறவுச் சாலையின் நிர்வாகம் சீர்கேடு அடைந்துவிட்டது அதனால் பல லட்சக்கணக்கான ரூபாய் பாழாக்கப்பட்டுவிட்டது என்று ஆதாரப்பூர்வமாக எடுத்துச் சொல்லியுங்கூட, அதை மறு பரிசீலனை செய்வதற்குக்கூட எந்தவிதமான நடவடிக்கையும் கடந்த காலத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இந்த மக்கள் ஆட்சி மூலமாகத்தான் நீதி ஏற்படும் என்ற அடிப்படையில் இந்த புதிய அமைச்சரவை இந்த கூட்டுறவுச்சாலைகளின், சொஸைடிகளின் நிலைமைகளை நிச்சயமாகப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவுச் சாலையில் சர்க்காருடைய உத்தரவுகளுக்கு மாறாக, விதிமுறைகளுக்கு எதிராக சஸ்பென்ஸ் அக்கவுண்ட் என்ற பெயரில் தற்காலிகமாக ஒரு கணக்கு மேற்கொண்டிருக்கிறார்கள். அதிகாரிகள் பெயரிலே, அமைச்சர்கள் பெயரிலே எடுத்துச்செல்கின்ற துணிகளை சஸ்பென்ஸ் அக்கவுண்டில் எழுதி வைத்துவிடுகிறார்கள். சஸ்பென்ஸ் அக்கவுண்ட் என்பது கூட்டுறவு எண்ணத்திற்கே விரோதமானது, மாறானது. சஸ்பென்ஸ் அக்கவுண்டை நடைமுறைக்குக் கொண்டுவராமல் தடுக்க சர்க்கார் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கலந்து செய்வார்கள் என்று நம்புகிறேன். அதேமாதிரி, கூட்டுறவு முறையில் ரிபேட் கொடுக்காத காலங்களில், சஸ்பென்ஸ் அக்கவுண்டில் உள்ள சாக்குகளை, ரிபேட் கொடுக்கின்ற நாட்களிலே கணக்குக் கொண்டு வந்து அதற்கும் சேர்த்து ரிபேட்டுகளை வாங்குகிறார்கள். இது விதிமுறைகளுக்கு முரணானது. இம்மாதிரி தனிப்பட்டவர்களின் எண்ணத்திற்கு ரிபேட்டுகளை கொடுப்பதை நிறுத்தி, நிச்சயமாக அதை மீண்டும் புனராலோசனை செய்து உடனடியாக அவைகளுக்குரிய எல்லாப் புத்தகங்களையும் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். கூட்டுறவு நாட்டுக்குச் சிறந்தது என்பதைச் சம்பந்தப்பட்ட இலாகாவினர் உணர்ந்து தக்கவிதமாக நடந்து கொள்ள வேண்டுமென்றும், தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நாம் பல்வேறு நிலைமைகளில் சொல்லி வந்திருக்கிறோம். மாநில அரசாங்கத்தில் வேலை செய்யும் சிப்பந்திகள், மத்திய அரசாங்க ஊழியர்களோடு ஒரே சம நிலையில் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில், மாநில அரசு ஊழியர்கள் சம்பள உயர்வு பற்றியும், அவர்களுக்கு 'சிட்டி காம்பன்ஸேட்டரி அலவன்ஸ்' கொடுப்பது பற்றியும் சொல்லி வந்திருக்கிறோம். சிட்டி காம்பன்ஸேட்டரி அலவன்ஸ் அவசியமாகக் கொடுக்க வேண்டிய ஒரு படியாகும். மத்திய அரசு சிப்பந்திகள் சம்பளத்திலும், பஞ்சப் படியிலும் உயர்ந்திருக்கிறார்கள். மேலும் முக்கியமாக இந்தத் தொகை தலைநகரத்திலே நாளுக்குநாள் விலைவாசிகள் அதிகமாக





ஏறிக்கொண்டு செல்லும் காலத்தில் சிட்டி காம்பன்ஸேட்டரி அலவன்ஸ் ஓர் அவசியமான படியாகும். மத்திய அரசினர் 'பேஸிக் பே'யில், அடிப்படைச் சம்பளத்தில் 12 சதவிகிதம் கொடுக்கிறார்கள். இம்மாதிரி, எல்லாவற்றிலும் நமக்கே பற்றாக்குறை வரவு செலவுத்திட்டத்தில் அதிகமாக இருக்கும் காரணமாக, மாநில அரசாங்கத்தார் ஓரளவு 6 அல்லது 8 சதவிகிதம் கொடுத்தால், அது மாநில அரசு ஊழியர்களுக்கு ஒரு பெரிய காமதேனுவாக அமையும்.

அதேமாதிரி, நம்முடைய சேலம் மாவட்டம் மிகவும் பிற்பட்ட ஒரு மாவட்டம். இந்த மாவட்டத்தில் பெரிய தொழிற்சாலைகள் அமைப்பதற்கு இயற்கை வளங்கள் இருந்தும் சரியான முறையில் சென்ற காலத்தில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை. நம்முடைய ஆட்சியின் ஆரம்பகாலத்திலிருந்தே சிறுவகைத் தொழில்கள் நிறுவுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் நம்முடைய அரசினர் மேற்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, உணவுப் பிரச்சினையைப்பற்றிப் பேசுகின்ற நேரத்தில் நம்முடைய அரசினர் பொதுமக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளையெல்லாம் மனதில் கொண்டு நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதை அறிஞர் அண்ணா அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். மொத்தமாக எல்லாக் காரியங்களையும் செய்யச் சொல்கிறீர்களா அல்லது பிழையின்றி ஒரு காரியத்தை முடித்துத் தரச்சொல்கிறீர்களா என்று கூறும் நமது அண்ணா அவர்கள் எப்போதும் மிக ஜாக்கிரதையாக, எதைச் செய்தாலும் அது நாட்டு மக்களுக்கு அதிகப் பலனைத் தரும் விதத்தில் செய்து தருவார்கள் என்று எண்ணுகிறேன். பற்றாக்குறை உணவுப் பிரச்சினையை படிப்படியாகத்தான் தடுக்க முடியும். மத்திய சர்க்காரிலே உணவு அமைச்சராக இருப்பவர், நாடு பூராவுக்கும், நேஷனல் ஃபுட் பட்ஜெட்டைப் போடுவதற்கு எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. அதற்குக் கூட தேசிய உணவு பட்ஜெட்டை எப்படி அமலுக்குக் கொண்டுவர வேண்டுமென்பதைச் சிந்தித்து ஒரு நல்ல முடிவை எடுக்க முடியாத ஒரு நிலைமையைத்தான் நாம் இன்று காண்கிறோம். இங்கே எற்கெனவே பற்றாக்குறை இருக்கிறது. இன்னும் கொள்முதல் தேவையாக இருக்கிறது. உணவு விஷயத்தில் மிகுந்த பற்றாக்குறை ஏற்படும். முக்கியமாக இந்தப் புதிய அமைச்சரவை மத்திய சர்க்காரோடு உறவு கொண்டு பல்வேறு உதவித் தொகைகளையும் கடன்களையும் பெற்றுத் தருகின்ற நிலவரத்திலே புதிய பட்ஜெட்டிலே வகை செய்ய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். மத்திய சர்க்காரின் நிதியமைச்சர் அவர்கள் உணவுக் கொள்முதல் திட்டத்திற்காக மிகக் குறைவாக தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். ஒதுக்கப்பட்ட தொகையில் சுமார் 10 லட்சம்தான் கிடைக்கும் என்று சாதாரண கணக்கு எடுத்துக்கொண்டு ஒதுக்கியிருக்கிறார்கள். அவைகளை மாற்றுகின்ற வகையிலே மாநில அரசு வழி காணவேண்டும். உணவுக் கொள்முதலிலே இன்னும் நெருக்கடி ஏற்படும். இந்த நெருக்கடி இருக்கின்ற நேரத்தில், நம்முடைய எதிர்க்கட்சிக்காரர்

களும் கட்சி பாகுபாடின்றி, மத்திய சர்க்காரிடத்திலே தங்களுடைய நேசக்கரங்களை நீட்டி, வருங்காலத்தில் நம்முடைய உணவுக் கொள்முதல் திட்டம் திருப்தியாக நடைபெற ஒத்துழைத்து, நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

* திரு. பி. ஐயராஜ் : மதிப்பிற்குரிய இடைக்காலத் தலைவர் அவர்களே, 1966-67 ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன். இன்றையத் தினம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிற அரசாங்கம் விவசாயத்திற்கு மிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று எண்ணுகின்றது : காரணம் இந்த நாட்டில் இருக்கிற ஏழை எளிய மக்கள் எல்லோருக்கும் உணவு தேவைப்படுகிறது. அதுவும் ராஜ்யத்தில் உள்ள மற்ற மாவட்டங்களுக்கு எல்லாம் உணவு அளிக்கின்ற மாவட்டமாக இருப்பது தஞ்சை. தஞ்சை மாவட்டத்தில் ஏ.டி.டி. 27 ரக விதை பயிரிடப்பட்டதன் காரணமாக அதிக அளவுக்கு உற்பத்திப்பெருக்கம் ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாகவும் அது மற்ற ஜில்லாக்களுக்கு உணவு அளிக்கின்ற ஜில்லாவாக இருக்கிற காரணத்தினால் எந்த அளவுக்கு நீர்ப்பாசன வசதி தங்கு தடையின்றி அங்கே கிடைக்கச் செய்ய முடியுமோ அதைச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் மேலும் உற்பத்தியை அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது.

அதோடு எங்கள் மாவட்டத்தில் பல தேவஸ்தான நிலங்கள், மடங்களுக்குச் சொந்தமான நிலங்கள் இருக்கின்றன. திருச்செட்டாங்குடி, திருப்பகலூர் போன்ற தேவஸ்தானம் போன்ற எங்கள் பகுதியில் உள்ள தேவஸ்தான நிலங்களை எடுத்துக் கொண்டால், தனியார் நிலத்தில் விளைவிப்பதை விடக் குறைவாகத்தான் இன்று விளைவிக்கப்பட்டு வருகிறது. காரணம் அந்த தேவஸ்தானங்கள், மடங்களில் உள்ளவர்களுக்கு போதுமான அக்கறை இல்லை. எப்படி கோயில் கட்டடங்களைக் கட்டுவதற்காக நாம் தனியாக எஞ்ஜினியர் போட்டிருக்கிறோமோ அதுபோல தேவஸ்தானங்கள், மடங்கள் இவற்றுக்குச் சொந்தமான நிலங்களிலும் கூட அதிகமாக விளைவிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள நாம் தனியாக ஒரு பெரிய ஆபிசரைக் கூடப் போடலாம். அதிலும், இந்தக் கோயில் நிலங்கள், மடங்களுக்குச் சொந்தமான நிலங்கள் இவற்றை ஃபார்மிங் சொஸைட்டியின் கீழ்க் கொண்டுவந்தார்கள். தனிப்பட்டவர்களின் நிர்வாகத்தில் விடப்பட்டதால், அந்தத் திட்டம் தோல்வியுற்றிருக்கிறது. ஃபார்மிங் சொஸைட்டியில் 250 ரூபாய் கொடுப்பது அதில் 125 மானியம். 125 கடனாகக் கொடுப்பது. இதை ஐந்து வருடம், பத்து வருடத்தில் தருவது என்றெல்லாம் ஏற்படுத்தியும்—இதன் தோல்விக்கான காரணத்தைச் சீர்தூக்கிப் பார்த்து—இந்த நிலங்களில் எல்லாம் எப்படி அதிகச் சாகுபடியை ஏற்படுத்தலாம் என்று கவனிக்க வேண்டும். அப்பொழுது இன்னும் நல்ல பலன் கிடைக்கும்.



இப்போது எங்கள் மாவட்டத்தில் பம்பு செட்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவை நல்லமுறையில் வேலை செய்கின்றன. மேலும் பம்பு செட்டுகள் வைக்க முன் வருகிறவர்களுக்குக் கால தாமதம் இன்றி பம்பு செட்டுகள் வழங்கவேண்டும். வடிமுனைக் குழாய்க் கிணறுகளை ஏற்படுத்துவது என்றால் செலவு அதிகம் ஆகிறது. ஆகவே, தண்ணீர் எடுத்துக் கொடுக்கின்ற வரையில் ஆகும் செலவை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும் இன்றையதினம் எங்கள் மாவட்டத்தில் தனியாரிடம் மின்சார விநியோகம் விடப்பட்டிருப்பதனால் மின்சார விஸ்தரிப்பு வேலை நல்லமுறையில் நடைபெறவில்லை. மற்ற இடங்களில் மின்சார போர்டார் எப்படி தனியாரிடம் இருந்து மின்சார விநியோகக் கம்பெனிகளை எடுத்துக்கொண்டார்களோ அதுபோல எங்கள் தஞ்சை மாவட்டத்தில் தனியாரிடம் இருக்கும் மின்சார விநியோக கம்பெனிகளை—மின்சார போர்டாரே மேற்கொண்டாக வேண்டும். அப்போதுதான் விவசாய உற்பத்திக்கு மிக உதவியாக இருக்கும். பொதுவாக, இன்றையதினம் விவசாய உற்பத்தி நல்ல முறையில் பெருகவேண்டும் என்று சொன்னால் விவசாயத்துறை, மின்சாரத் துறை, கூட்டுறவுத்துறை ஆகிய மூன்றும் இன்னும் நல்ல நெருங்கிய முறையில் இணைந்து செயலாற்றவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஜுலை மாதத்தில் விவசாய வேலை ஆரம்பிக்கிறது என்றால் அப்போதே கூட்டுறவு சங்கங்களின் மூலமாக, மார்க்கெட்டிங் சொஸைட்டி மூலம் உரம் விநியோகிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். காலாகாலத்தில் விவசாயிகளுக்குத் தேவையான உரத்தை விநியோகம் செய்தாலே உணவு பற்றாக் குறை நாட்டில் குறையும். புள்ளிவிவர கணக்கில் கூட இப்போது இருக்கிற புள்ளி விவரங்களை நம்பலாமா என்கிற கேள்வி எழுகிறது. என்னைக் கேட்டால் நன்றாக சாகுபடி செய்துள்ள நிலத்தின் ஒரு பகுதியை ஒரு செண்டு நிலப்பகுதி அறுவடை செய்து அந்த அளவில் கணக்கைப் பார்ப்பதைவிட ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று அறுவடை செய்து விளைவைப் பார்த்து கணக்கெடுப்பது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன். உணவு உற்பத்தித் துறையில் உண்மையிலேயே நல்ல வளர்ச்சி ஏற்படவேண்டுமென்றால் விவசாய அமைச்சர், கூட்டுறவு அமைச்சர் நீர்ப்பாசன அமைச்சர் ஆகியோர்கள் ஒருங்கிணைந்து செயல்படவேண்டும். நேற்று முதல் அமைச்சர் அவர்கள் கூறியதுபோல 'கன்னன் தின்னும் பண்டம் வெண்ணை' என்கிற கதையைப்போல தெனாலிராமன் கதையைப் போல எதையாவது சொல்லி திசை திருப்பிவிடாமல்—தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் உர விநியோகத்திற்கு சீரான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். பம்பு செட்டுகளை இன்னும் அதிகம் ஏற்படுத்தவேண்டும். அந்தப் பகுதியில் உள்ள மின்சார விநியோகக் கம்பெனிகளை மின்சார போர்டாரே எடுத்துக்கொள்ளவேண்டும் என்பன போன்றவற்றை வற்புறுத்தி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[1967 மார்ச் 25

* திரு. சொ. கோவிந்தராசன்: கனம் மன்றத் தலைவர் அவர்களே, 1966–67-க்கான இறுதி துணை மானியக் கோரிக்கையின் மீது எனது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு தாங்கள் அனுமதி தந்ததற்காக நன்றி மன்றத்திலிருக்கும் என் வணக்கம். எனக்கு முன் பல உறுப்பினர்கள் பேசினார்கள். உணவுத் துறையில் விவசாயிகளுக்கு உரம் வழங்குவது சில நேரங்களில் சரியாக செயல்படவில்லை என்றும், அதனால் விவசாயம் செம்மையாக நடைபெறவில்லை என்றும் கூறினார்கள். விவசாயிகளுக்குக் கூட்டுறவு சங்கங்களின் மூலம் கடன் கொடுக்கப்படுகிறது. அப்போது அதில் கால் பகுதி உரமாகக் கொடுக்கவேண்டுமென்ற உத்தரவு இருக்கிறது. உரமாகக் கொடுக்கப்படும் கால்பகுதி பிண்ணாக்கும், உரப்பொடியும் கலந்து கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் பின்னால் பிண்ணாக்கை விவசாயத்திற்கு உபயோகப்படுத்தக் கூடாது என்று தடை வந்ததின் காரணமாக உரப்பொடியாகக் கொடுக்கப்படுகிறது. அப்படி கொடுக்கப்படும் உரமானது உருப்படியாக காலா காலத்தில் கொடுக்கப்படாமல் அறுவடை சமயத்தில் கொடுக்கப படுவதால் அதை வாங்குகிற விவசாயிகள் வெளியில் கொடுத்து விடுகிறார்கள். அதனால் தான் உரம் ப்ளாக் மார்க்கெட்டிற்கு வந்து விடுகிறது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டும் அல்ல. ரிசர்வ் பாங்கில் இருந்து, சென்னை மாவட்ட கூட்டுறவு பாங்குகளுக்கு பணம் கொடுப்பது, அதில் இருந்து மாவட்ட கூட்டுறவு பாங்குக்கு பணம் கொடுப்பது, அதில் சங்கங்களுக்கு கடன் கொடுப்பது, அவர்கள் விவசாயிகளுக்குக் கொடுப்பது என்கிறபோது ஒவ்வொரு பர்சென்டாக வட்டி விகிதம் கூடி விடுகிறது. மாவட்ட கூட்டுறவு பாங்குகளை (சங்கங்களை) சென்னை மாவட்ட பாங்குகளின் ப்ராஞ்சாக வைத்துக் கொடுத்தால் ஒரு பர்சென்டாவது குறைந்த வட்டியில் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

முற்பகல் 11-30 இந்த அமைச்சரவை ஏழை எளியவர்களுக்கு ஒத்தாசை செய்வதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கும் காரணத்தால் ஒரு சில கோரிக்கைகளை நான் இந்தச் சபையின் முன்னால் வைக்க விரும்புகிறேன். மதுரை மத்திய தொகுதியில் மாப்பாளையம், திடீர்நகர், மேலவாசல், சுப்பிரமணியபுரம், செல்லூர், ஆத்தோரப் பகுதிபோன்ற பகுதிகளில் இருக்கும் புறம்போக்கு நிலங்களை அந்தப் பகுதியில் இருக்கும் மக்களுக்கு, தகுந்தபடி பிரித்துக் கொடுத்து உதவி செய்யவேண்டும். மதுரை திருப்பரங்குன்றம் செல்லும் சாலையில் ரயில்வே பாதைக்கு மேல் ஒரு பாலம் அமைப்பதை நான்காவது திட்ட காலத்தில் எப்படியாவது செயல்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று அலங்காநல்லூர் சமீபத்தில் அமைக்கப்பட்டது. அது செயல்பட்டு வந்திருப்பதில் பல ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன. பல ஊழல்களுக்குக் காரணமான அந்த போர்டை மாற்ற வேண்டுமென்று காங்கிரஸ்காரர்களே



1967 மார்ச் 25] [திரு. சொ. கோவிந்தராசன்]

முயற்சி எடுத்தும் கூட நடைபெறவில்லை. இன்னும் அந்த போர்டு தான் இருந்து வருகிறது. 31–3–1967-ம் தேதியுடன் அந்த போர்டின் பதவிக்காலம் முடிகிறது; அவர்கள் அந்த ஆலையை மூடு விழா நிலைக்குக் கொண்டு வந்து விட்டார்கள். அவர்கள் மறுபடியும் அதிலே இடம் பெற முடியாதபடி செய்யவேண்டும்.

கூட்டுறவு முனைகளில் உதவி செய்வதில் லாரி உரிமையாளர் சங்கங்களுக்கு இதுவரை சலுகை காட்டப்படவில்லை. இரண்டு ஆண்டுகளாக அதைப் பற்றி சிந்தனை செலுத்தப்பட்டிருக்கிறது. மேட்டுப்பாளையத்திலே நீலகிரி கோவாப்பரேடிவ் ஆட்டமோபைல் ஸ்பேர் பார்ட்ஸ் கம்பெனி என்ற ஸ்தாபனம் 25 மெம்பர்களைக் கொண்டு அமைக்கப்பட்டு இன்று 1,100 பேர்கள் அளவுக்கு உயர்த்தப்பட்டு 20 லட்சம் ரூபாய் டர்ன் ஓவரில் . நடந்து வருகிறது. நான்கு பகுதிகளில், கோயம்புத்தூர், மேட்டுப்பாளையம், ஊட்டி, பொள்ளாச்சி ஆகிய பகுதிகளில் நல்ல லாபத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது. கூட்டுறவு முறையில் இதுமாதிரியான ஸ்தாபனங்களை உண்டாக்கிக் கொடுப்பதால் லாரி உரிமையாளர்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். இவை லாபத்தில் ஓடுகின்றன என்ற நிலை ஏற்பட்டவுடன் திருச்சி மாவட்டம், திருச்செங்கோடு, சேலம் போன்ற இடங்களில் கோவாப்பரேடிவ் ஸ்பேர் பார்ட்ஸ் கம்பெனிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். திருச்சியிலே நல்ல லாபம் கிடைத்திருக்கிறது.

லாரி என்றாலே அவர்கள் ரோட்டிலே போகும்போது ஏற்படுகின்ற இன்னல்கள் ஞாபகம் வருவதாக போக்குவரத்து அமைச்சர் அவர்கள் சொன்னதாக ஞாபகம். லாரி வருகிறது என்று சொன்னாலே பயங்கரமாக இருக்கிறது என்று சொன்னார்கள். இந்த லாரிகளை நடுவழியிலே நிறுத்தி சோதனை போடுவதற்குரிய அதிகாரம் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும் அவர்களுக்கு மேற்பட்ட அதிகாரிகளுக்கு மட்டுமே இருக்கக்கூடிய நிலையில் போலீஸ்காரர்கள் ஆங்காங்கு லாரிகளை நிறுத்தி தொந்தரவு கொடுக்கின்ற காரணத்தால் லாரிகளை அவர்கள் மிகவும் வேகமாக ஓட்டிச் சென்று அந்தக் காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதோடு மொபைல் கோர்ட் என்று சொல்லி லாரிகள் அங்கே வெகு நேரம் காத்திருக்கக்கூடிய காரணத்தாலும் அவர்கள் அந்த நேரத்தைச் சரிக்கட்ட வேகமாகச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்த மாதிரி நிர்ப்பந்தங்கள் இல்லையெனில் லாரிகளை நிதானமாக, ஒரே சீராக ஓட்டிச் செல்ல முடியும். இன்று லாரி உரிமையாளர்களை எடுத்துக்கொண்டால், ஒரு லாரிக்கு பல உரிமையாளர்கள், அது வாங்கியதிலிருந்து கணக்குப் பார்த்தால் 20 உரிமையாளர்கள் வரை கூட செல்லும். அந்த அளவுக்கு அது கைமாறியிருக்கும். அதற்குக் காரணம் அந்த உரிமையாளர்களிடம் முதல் அதிகம் இல்லாததும், நஷ்டம் வருவது, விபத்துக்கள் ஏற்படுவது போன்றவைதான். அப்படிப்பட்ட லாரி உரிமையாளர்கள் போலீசாரின் இடையூறுக்கும், மொபைல் கோர்ட்டு இடையூறுக்கும் ஆளாகாத வண்ணம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க

[திரு. சொ. கோவிந்தராசன்] [1967 மார்ச் 25

வேண்டும். சாதாரணக் குற்றங்களுக்குக் கூட லாரி உரிமை யாளர்களுக்கு, டிரைவர்களுக்கு பிடி வாரண்டு கொண்டு வரப்பட்டு பயமுறுத்தப்படுகிறார்கள். அந்த மாதிரி சந்தர்ப்பங்கள் எல்லாம் ஏற்படாதவாறு அரசாங்கம் உத்தரவாதம் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்ததற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. கே. என். குமாரசாமி:** கனம் தலைவர் அவர்களே, இந்தச் சபையின் முன்பாக விவசாயிகளுடைய பிரச்சினைகளைப் பற்றிப் பல மெம்பர்கள் பல கருத்துக்களைக் கூறினார்கள். நானும் சில கருத்துக்களைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். தேசம் முழுவதும் உணவுப் பிரச்சினைதான் பல வருஷங்களாக இருந்து வந்து கொண்டிருக்கிறது. கடந்த பல ஆண்டுகளாக பல நட வடிக்கைகளை எடுத்தும் கூட இன்னும் அந்தப் பிரச்சினை வெற்றிகர மாகத் தீர்க்கப்படவில்லை. இந்த நேரத்திலே புதிய அமைச்சரவை தமிழகத்திலே பதவி ஏற்றிருக்கிறது. புதிய அமைச்சரவை இந்தப் பிரச்சினைக்குச் சரியான முறையில் தீர்வு காண்பார்கள் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். கிராமப்புற மக்கள், இந்த அமைச்சரவை உணவுப் பிரச்சினையைத் தீர்க்கும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையில் இருக்கிறார்கள்.

விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிற உதவிகள், சலுகைகள் தற்போது விவசாயிகளுக்கு நேரடியாகக் கிடைக்கும் நிலைமை இல்லை. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவோ, அரசாங்கத்தின் மூலமாகவோ கொடுக்கப்படுகின்ற உதவிகள் காலாகாலத்தில் விவ சாயிகளுக்குக் கிடைப்பதில்லை. முன்பு விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன்கள் கொடுக்கப்பட்டு வந்தது. தற்போது குறுகிய காலக் கடன்கள் என்ற பெயரில் கொடுக்கப்பட்டு மூன்று மாதத்தில் வசூலிக்கிற நிலை இருக்கிறது.

(மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் தலைமை)

உரத்தை வாங்குவதற்கு விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங் களுக்குப் பத்து நடை நடக்க வேண்டியிருக்கிறது, விவசாயிகள் குறுகிய காலக் கடனைப் பெற்று உரங்களையோ அல்லது பூச்சி மருந்துகளையோ வாங்குவதற்குள் காலதாமதமாகி விடுகிறது. இந்தக் கடனை வாங்காவிட்டால் என்ன என்று விவசாயிகள் நினைக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு நீண்ட காலக் கடனைக் கொடுப்பதற்கான ஒரு வாய்ப்பைக் கொடுக்க, ஒரு வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் தங்களுடைய புதிய கிணறுகளுக்கோ, பழைய கிணறுகளுக்கோ மின்சாரம் வேண்டுமென்று கோருகிறார்கள். மின் சார இலாகாவில் டிரான்ஸ்பார்மர்கள் இல்லாமல் இரண்டு மூன்று வருஷங்களாக இழுத்தடிக்கப்படுகிறது. கோவை ஜில்லாவில் பல்ல டம் தாலுகா போன்ற இடங்களில் மின்சாரம் கொடுக்க வேண்டு மென்று கோரி இரண்டு மூன்று வருஷங்கள் ஆகியும் இன்னும் கொடுக்கக் கூடிய நிலைமை ஏற்படவில்லை.



1967 மார்ச் 25] [திரு. கே. என். குமாரசாமி]

காரணம் எலக்ட்ரிசிடி டிப்பார்ட்மெண்டார் டிரான்ஸ்பார்மரில் லோட் இல்லை, கரன்ட் இல்லை என்று காலதாமதம் செய்வதால் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அதை நீக்குவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். மின்சார இலாகா மினிமம் டெபாசிட் என்று வசூலிக்கிறார்கள். ஏற்கனவே விவசாயிகள் தாங்கள் ஓட்டிக் கொண்டிருப்பதற்கு மினிமம் சார்ஜ் கொடுக்கிறார்கள். 10 ஹார்ஸ் பவர் வைத்திருந்தால் ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 1,000 ரூபாய் வசூல் செய்யும் அளவிற்கு மின்சார இலாகா டெபாசிட் வசூல் செய்கிறார்கள். இது மிகவும் அநியாயமானது. இதை ரத்து செய்வதற்கு அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடி தண்ணீர் வசதி, பல கிராமங்களில் கிடையாது. இப்போது தேர்தல் முடிந்த நேரம். குடிநீர் பிரச்சினை ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் கிளப்பப்பட்டு வருகிறது. 19 ஆண்டுகளாக காங்கிரஸ் அரசு சிலவிடங்களில் குடிநீர் பிரச்சினை க்கு வழி செய்திருக்கிறார்களே தவிர பலவிடங்களில் குடி தண்ணீர் வசதி ஹரிஜனங்கள் வசிக்கும் பகுதிகளுக்கும், மற்றப் பகுதி களுக்கும் செய்து கொடுக்கப்படவில்லை. ஆகவே, குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கான எல்லாவித நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ள முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவு உற்பத்தி கொள்முதல் தீவிரத் திட்டத்தின் அடிப்படை யில் இப்போது கொள்முதல் திட்டத்தை கொண்டு வந்திருக் கிறோம். மீண்டும் லெவி முறையைக் கொண்டுவந்து, மீண்டும் ரேஷன் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவருவது என்று சொல்லப் படுகிறது. கிராமப்புறங்களில் மக்களுக்கு ரேஷன் கிடைப்பதில்லை. அவர்களுக்கு குடும்பக் கார்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றின்மேல் தானியங்கள் வழங்குவது கிடையாது. ஏதோ கொடுத்து வைத்திருக்கிறார்கள். ஐந்தாறு மாதங்களாக அவர்களுக்கு தான்யம் கிடைப்பதில்லை. முக்கிய நகரங்களில் ரேஷன் திட்டம் அமுலாக்கப்பட்டிருக்கிறது. முக்கிய நகரங்களில் உள்ளவர்களுக்கு அமுலாக்கி பாக்கியுள்ளவர்களுக்கும் குடும்பக் கார்டுகள் கொடுத்து ரேஷன் சரியாக கிடைக்காமல் செய்வது பாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தும். ஒன்று, திட்டத்தை அமுலாக்க வேண்டுமென்றால், கிராம மக்கள் எல்லோருக்கும் அமுலாக்கும் திட்டம் இருக்கவேண்டும். இல்லையென்றால், பூர்ண மாக அமுலாக்குவதில் சிரமம் இருக்குமானால், தானிய விநியோக முறையைத் தளர்த்தி எல்லையோரப் பகுதிகளில் மட்டும் வைத்துக் கொண்டு, பிற பகுதிகளில் ஓப்பன் மார்க்கெட்டில் விட்டு விடுவது நல்லது. குடும்பக் கார்டு முறையில் கிராமங்களில் சிலவிடங்களில் அரிசி கிடைக்காமல், சிலவிடங்களில் வாங்கிக்கொண்டும் மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பது சரியல்ல. ஒன்று, பூர்ணமாக ரேஷனை அமுலாக்க வேண்டுமென்று சொன்னால் சகல மக்களுக்கும் உணவு தான்யம் கிடைக்கும்படி அதை அமுல் செய்யவேண்டும்.

[திரு. கே. என். குமாரசாமி] [1967 மார்ச் 25

இல்லையென்றால், ரேஷன் திட்டத்தை எல்லையோரப் பகுதிகளில் மட்டும் வைத்துக்கொண்டு மற்றவிடங்களில் ஜில்லாவிற்கு ஜில்லா போகிறதில் உள்ள கட்டுப்பாட்டை தளர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுவிலக்குப் பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அண்டை மாநிலமாகிய கேரளாவில் அதை எடுத்து விடப் போவதாகக் கூறுகிறார்கள். அதுபற்றி ஒன்றை விளக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். சாராயம் போன்றவற்றை விட்டு விட்டு, கள் குடிக்க அனுமதிப்பதில் தவறில்லை என்று மக்கள் சொல்லுகிறார்கள். கள் குளிர்ச்சியான ஒரு பானம். உஷ்ணத்தைப் போக்கக் கூடியது அது. இப்போது பதநீர் விற்கிறார்கள். ஆகவே கள் குடிப்பதில் தப்பு இல்லை. அதைக் குடிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கிராம மக்கள் கூறுகிறார்கள். மில் பிரதேசங்களில் க்ஷய நோய் பரவி வருகிறது. கிட்டத்தட்ட 45 சதவிகித மக்களை அந்த நோய் பிடித்திருக்கிறது. அதைப் போக்குவதற்கு சரியான ஆஸ்பத்திரிகள் இல்லை. அதற்குரிய வசதிகளும் இல்லை. கள் குடித்தால் குணம் ஏற்படுகிறது என்று தொழிலாளர்கள் மறைமுகமாக குடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தொழிலாளர்களைக் கேட்கிறபோது அவர்கள் சொல்கிறார்கள். திருட்டுத்தனமாக கள்ளை வாங்கிக் குடிக்கிறோம். அதனால் குணம் ஏற்படுகிறது என்று கூடச் சொல்கிறார்கள். பண்டைக் காலத்தில் இருந்தே இந்தப் பழக்கம் இருந்துகொண்டு வந்திருக்கிறது என்று புராணங்கள், சாஸ்திரங்கள் இவற்றில் எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, குளிர்ச்சியான பானம் இது. இது உடம்பிற்கு நல்லது என்பதால் கள் குடிப்பதற்கு அனுமதிப்பதில் தவறில்லை என்று மக்கள் நினைக்கிறார்கள். சாராயம் போன்றவற்றை அனுமதிக்கக் கூடாது. அதனால் கேடு விளைகிறது. ஆகவே, இந்தப் பிரச்சினையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்லடம் தொகுதியில் பிரசவ ஆஸ்பத்திரி இல்லை என்று மக்கள் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கிருந்து 25 மைல்களுக்கு அப்பாலுள்ள கோவை நகரத்திற்குத்தான் பிரசவத்திற்குச் செல்ல வேண்டும். இல்லையென்றால் 15 மைல்களுக்கு அப்பாலுள்ள திருப்பூருக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. பல்லடம் நகரம் பெரிய நகரமாகும். ஆகவே, அங்கு ஒரு பிரசவ ஆஸ்பத்திரி அமைத்துக் கொடுப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நெசவாளர் பிரச்சினை. இது தேசத்தில் ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. எவ்வளவு உழைத்தாலும் ஒரு குடும்பத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 100 கூட வருமானம் கிடைப்பதில்லை. அவர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கான முயற்சியை இந்த அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னின்ன ரகத் துணிகளைத்தான் நெய்ய வேண்டும் என்று



1967 மார்ச் 25] [திரு. கே. என். குமாரசாமி]

வைத்து, அதற்கான மார்க்கெட்டைப் பிடித்து அந்தத் தொழிலுக்கு ஊக்கம் கொடுக்கக் கூடிய முறையில் குறிப்பிட்ட ரகத் துணிகளை அவர்களுக்கு ஒதுக்குவதால் அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். அதற்கு வேண்டிய நிலையை அரசு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக தொழிலாளர்கள் பிரச்சினை பற்றி சில விஷயங்கள் குறிப்பிட விரும்புகிறேன். ஆலை முதலாளிகள் லாபம் இல்லை. நஷ்டம் வருகிறது என்று காரணம் காட்டி சில ஆலைகளை மூடி விடுகிறார்கள். தொழிற்சாலைகளை மூடுவதினால் நாட்டின் பொருளாதாரமும் பாதிக்கப்படுகிறது. உற்பத்தியும் பாதிக்கப்படுகிறது. உற்பத்தி பாதிக்கப்படாமல் இருக்க தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கூறுகிறபோது, அதன் பேரில் சமாதானம் செய்து வைப்பதற்குத்தான் சட்டத்தில் இடம் இருக்கிறதே தவிர, அதை திரும்ப எடுத்து நடத்தச் சொல்ல சட்டப்படி அதிகாரம் இல்லை என்று சென்ற அரசு சொல்லிவிட்டது. அதன் காரணமாக சென்ற ஒன்றரை ஆண்டு காலத்தில் பத்தாயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்விழந்திருக்கிறார்கள். ஆலைகளை மூடினால் அதை எடுத்து நடத்துங்கள் என்று சொல்ல சட்டப்படி அதிகாரம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்டதொரு நிலை இருக்குமானால், ஏன் அரசுக்கு அந்த அதிகாரத்தை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தொழிற்சாலைகளை மூடி விடுவது என்பதை தனி நபர்களின் இஷ்டத்திற்கு விடுவதால் இந்த நாட்டிலுள்ள பெருவாரியான மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, சட்டத்தைத் திருத்துவதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். எப்படியோ ஆலையை ஓட்ட முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். லாபம் இல்லை என்று கண்டவுடன் அதை மூடுவதற்கு யத்தனிக்கிறார்கள். நஷ்டம் வருகிறது எனக் கண்டால் ஒன்றில் அரசே அந்த ஆலையை ஏற்றெடுத்து நடத்த வேண்டும். இல்லையெனில் அரசு, முதலாளிகள், தொழிலாளர் பிரதிநிதிகள் மூன்று பேர்களும் சேர்ந்து எடுத்து நடத்த முயற்சித்தால், பல பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும்.

இன்று பெரும் பிரச்சினையாகவுள்ளது, உணவுப் பிரச்சினை. உணவுப் பிரச்சினையைத் தீர்க்கும் இந்த அரசு என்று மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஏதாவது ஒரு துறையில் அவர்கள் கேட்கிற பிரச்சினையைத் தீர்த்துக் கொடுக்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. டி. மார்ட்டின்: மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. டி. மார்ட்டின்] [1967 மார்ச் 25

இந்தச் சபையில், இந்தக் கூட்டத் தொடரில் பல அங்கத்தினர்கள் தற்போது ஆட்சியிலிருக்கும் அமைச்சரவை தன்னுடைய செலவைக் குறைத்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதுவும் பெரிய கார் இல்லாது, சின்ன கார் உபயோகப்படுத்துகிறார்கள். சம்பளத்திலிருந்தும் 500 ரூபாய் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதைப்பற்றி நான் ஒரு சில கருத்துக்களைக் கூற வேண்டுமென்று விரும்புகிறேன்.

தேர்தலுக்கு முன்பு 12–2–1967-ல் முழுப் பக்க விளம்பரத்துடன் ஒரு பத்திரிகை தமிழ்நாட்டில் வந்தது. முழுப் பக்க விளம்பரத்துடன் வந்த பத்திரிகையை, அது சினிமா விளம்பரமோ என்று எண்ணிப் பார்த்தேன். அப்படிப் பார்த்தபோது அங்கே "அண்ணாவின் உறுதிமொழிகள்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ரூபாய்க்கு ஒரு படி அரிசி உடனே கொடுப்போம் விவசாயத்திற்கு தொல்லை இல்லாதபடி மற்ற பண்டங்களின் விலைகளைக் குறைப்போம் ; விலைவாசிகளைக் குறைக்கும் வரையில் சம்பளம் வாங்காமல் மந்திரி வேலை பார்ப்போம்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. மற்ற இரண்டு உறுதிமொழிகளை விட்டுவிட்டு, மூன்றாவது உறுதிமொழியைப் பற்றி மட்டும் இந்தச் சபையில் குறிப்பிட விரும்புகிறேன். இந்தப் பத்திரிகையானது அரசியலையும், அதோடு ஒரு பக்கத்தில் அணங்குகளின் கவர்ச்சிகரமான படங்களையும் ஏந்தி உலவி வரும் பத்திரிகை. நாட்டில் அரசியலில் மாறுதலை ஏற்படுத்திய பத்திரிகை என்று அதைப் பலர் கூறுகிறார்கள்—இருக்கவும் செய்யலாம். அந்தப் பத்திரிகை உண்மையைத் தவிர பொய் ஒரு நாளும் வராது என்று சிற்சில சந்தர்ப்பங்களில் செய்திகளைக் கொடுக்கும்போது கீழே எழுதும். அந்தப் பத்திரிகையின் பெயர் என்ன என்றால், அதுதான் 'தினத்தந்தி'. இந்த அறிக்கை வந்தது அயல் நாட்டுப் பத்திரிகையில் அல்ல ; நம் தமிழ் நாட்டில் வருகிற பத்திரிகையில்தான். மறுபடியும், எட்டுத் தலைவர்களின் படங்களோடு, திரும்பவும் உறுதிமொழிகளைக் கூறி முழுப் பக்க விளம்பரம் ஒன்று வந்தது. அதிலும் இந்த மூன்றாவது உறுதிமொழியாகிய, விலைவாசிகளைக் குறைக்கும் வரையில் சம்பளம் இல்லாமல் மந்திரி வேலை பார்ப்போம் என்பதும் வந்திருந்தது. ஆக, அவைத் தலைவர் அவர்களே, பொது மக்கள் முன்பு இன்றைய முதலமைச்சர் அன்று கொடுத்த வாக்குறுதி, விலைவாசிகளைக் குறைக்கும் வரையில் மந்திரி வேலை சம்பளம் வாங்காமல் பார்ப்போம் என்பது. இந்த ஒரு வேலையைச் செய்வதற்கு, சம்பளம் இல்லாமல் அமைச்சராகப் பணியாற்றுவதற்கு, ஒரு வல்லுனர்கள் கமிட்டி அமைக்கவோ, அல்லது அதற்கென நிபுணர்கள் கொண்ட குழு அமைக்கவோ ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று எண்ண வேண்டியதில்லை. இந்த முடிவைக் காலதாமதம் இல்லாமல் எடுத்திருக்கலாம். காரணம் என்ன என்றால், அது அமைச்சரவைப் பொறுத்த முடிவு. ஆனால், அவர்கள் வந்ததும் தங்கள் சம்பளத்தைப் பாதியாகக் குறைத்துக் கொண்டார்கள். மீதமுள்ள



1967 மார்ச் 25] [திரு. டி. மார்ட்டின்]

பாதியைப் பற்றி எண்ணும்போது, அங்கத்தினர்கள் தங்கள் சம்பளத்தை 100 ரூபாயாகக் குறைத்துக்கொண்டால், 250 ரூபாயாக எங்கள் சம்பளத்தைக் குறைத்துக்கொள்வோம் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். அப்படிக் கூறினால், நான் இந்தச் சபையில் கூறிக்கொள்ளுவது என்னவென்றால், அன்று நீங்கள் கொடுத்த உறுதி மொழியில் எந்தவிதமான நிபந்தனையோ, ப்ரொவைசோவோ, ரைடர் க்ளாசோ இல்லாத நிலையில் நேரடியாக விலைவாசியைக் குறைக்கும் வரையில் சம்பளம் இல்லாமல் மந்திரிப் பதவி வகிப்போம் என்று நீங்கள் கூறியிருக்கிறீர்கள். அப்படிக் கூறிவிட்டு இப்போது . . .

### 3. ஒழுங்குப் பிரச்சினைகள்.

### (அ) பேரவையில் பேசும் முறை.

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், ஏற்கெனவே சபாநாயகராகிய தாங்கள் தெரிவித்திருக்கிறீர்கள், உறுப்பினர்கள் பேசுகிற நேரத்தில் "நீங்கள்", "நீங்கள்" என்று கூறினால் அது உங்களைக் குறிப்பிட்டுப் பேசுவதாக ஆகும் என்று சொல்லியிருக்கிறீர்கள். கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில் "நீங்கள்" என்று உங்களைப் பார்த்துச் சொல்லுகிறார்கள். அதை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கக் கூடிய ஒழுங்குப் பிரச்சினை சரியானது. மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பேசும்போது "நீங்கள்" என்று குறிப்பிட்டால் அது இந்த அவைத் தலைவரைத்தான் குறிக்கும். உறுப்பினர்கள் பேசும்போது அவைத் தலைவரிடமே பேசவேண்டும். முதலமைச்சரையோ, மற்ற அமைச்சர்களைப்பற்றியோ பேசும்போது, முதலமைச்சர் என்றோ, இன்ன அமைச்சர் என்றோ குறிப்பிட்டுப் பேசவேண்டும்.

### 2. 1966–67-ம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதித் துணை அறிக்கை—பொது விவாதம்—(தொடர்ச்சி).

**திரு. டி. மார்ட்டின் :** அவைத் தலைவர் அவர்களே, ஆகவே, இந்தச் சம்பளக் குறைப்பு முடிவை அவர்களே உடனே எடுத்திருக்க முடியும். அமைச்சரவையிலிருந்து அந்த விதமான முடிவு வரும் என்று எதிர்பார்த்திருந்தேன். ஆனால், அந்த விதமான முடிவு வரவில்லை. அதற்குப் பதிலாக அங்கத்தினர்கள் தங்கள் சம்பளத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று கூறியிருப்பது, அதை ஒரு ** நேர்மையான பதிலாகக் கருத முடியாது என்று சபையில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன் . . .

---

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.

### 3. ஒழுங்குப் பிரச்சினைகள்—(தொடர்ச்சி).

#### (இ) பேரவையில் பயன்படுத்தக்கூடாத சொற்கள்.

*திரு. இராம. அரங்கண்ணல் :* ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், கனம் உறுப்பினர் அவர்கள் ** ஒரு வார்த்தையை உபயோகித்தார்கள். ஏற்கெனவே, சட்ட மன்றத்தில் அந்த வார்த்தையைச் சொல்லக் கூடாது என்று தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. தங்களுடைய தீர்ப்பு என்ன என்று அறிய விரும்புகிறேன்.

*மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :* மதிப்பிற்குரிய உறுப்பினர் அரங்கண்ணல் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி இருக்கிறார்கள். நமது சட்டப் பேரவையின் 235-வது விதியின்படி, இந்த அவையிலே பேசுகிற பேச்சுக்கள் சட்ட மன்றத்தில் பயன்படுத்தக் கூடாத சொற்களாக இருக்கக் கூடாது. அது மட்டுமல்ல, 235-வது விதியின்படி பார்த்தால், அவதூறான சொற்களையும் பயன்படுத்தக் கூடாது. அதோடு, ஆபாசமான சொற்களையும் பயன்படுத்தக் கூடாது. அது மட்டுமல்லாமல் கண்ணியமற்ற சொற்களையும் பயன்படுத்தக் கூடாது. அதுதான் விதி. மதிப்பிற்குரிய உறுப்பினர் கூறிய சொல் கண்ணியமற்றதாக இருப்பதால் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### 2. 1966–67-ம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதித் துணை அறிக்கை—பொது விவாதம்—(தொடர்ச்சி).

*திரு. டி. மார்ட்டின் :* நேர்மையான பதிலாகக் கருத முடியாது என்று கூறிக்கொண்டு, அது ஊமையர் கையில் சொல்லும் பதில் போலக் காட்சி அளிக்கிறது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு சாத்தான்குளம் பகுதியைப் பொறுத்தமட்டில், அது மணற்பாங்கான பாலைவனப் பிரதேசம் போன்று காட்சியளிக்கிறது. அங்கே விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டு பயிர் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அங்கே உள்ளவர்களிடத்தில் கொள்முதல் செய்யும்போது ஐந்து ஏக்கர்கள் உள்ளவர்களிடம் கொள்முதல் செய்யாமலிருந்தால் மிகவும் நன்மையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு டவுன் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கும் ரேஷனைப் போன்று மைனர் பஞ்சாயத்துக்களுக்கும் கொடுக்கவேண்டும். அவைகளுக்குள் பாகுபாடு காட்டாமல் ரேஷன் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சாத்தான்குளம் தொகுதியில் உடன்குடி பகுதியில் பார்த்தால், சிமெண்ட் கான்க்ரீட் பேஸ்மென்ட் போட்டு வயலுக்குத் தண்ணீர் பாயக்கூடிய அளவில் பயிர் செய்து வருகிறார்கள். ஏராளப் பணம் செலவு செய்து பம்ப் செட்டுகள் அமைத்து வைத்திருக்கிறார்கள். இன்னும் அவைகளுக்கு மின்சார வசதி செய்து

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.



தரப்படவில்லை. கீழே உள்ள அதிகாரிகளைப் போய்க் கேட்கும்போது அரசாங்க உத்தரவு வரவேண்டுமென்று கூறி தட்டிக்கழித்து விடுகிறார்கள். எனவே, இதை அவைத் தலைவர் அவர்கள் மூலமாக அமைச்சரவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், கடலோரப் பகுதியாகிய மணற்பாடு, பெரியதாழை கிராமங்களில் புயலால் பாதிக்கப்பட்டுள்ள வீடுகள் இருக்கின்றன. மக்கள் அந்த வீடுகளில் தங்க முடியாமல் வெளியே சென்று குடியேறியிருக்கிறார்கள். அவர்களுக்கும் வீடு கட்டிக் கொள்ள வசதியாகக் கடன் கொடுத்து உதவவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த உப மான்யக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :* சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறபோது குறுக்கிட வேண்டாமென்று நான் கருதினேன். ஏனென்றால் ரொம்ப விறுவிறுப்பாகப் பேசும்போது தடுக்கக் கூடாது என்பது ஒன்று. என்னதான் பேசுகிறார் என்பதை முழுதும் பேசுகிறவரை பார்க்கவேண்டும் என்று எனக்கு இருந்த ஆவல் மற்றொன்று. சென்ற தடவை நான் இங்கே சொன்னது, உறுப்பினர்கள் தங்கள் சம்பளத்தை 100 ரூபாயாகக் குறைத்துக் கொண்டால், நான் இதைக் கவனிக்கிறேன் என்று சொல்லவில்லை. ஆனால், நாங்கள் சம்பளமே இல்லாமல் வேலை செய்கிறபோது, அவர்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளாவிட்டால் மக்கள் கவலைக் கருதுவார்கள் என்றுதான், அந்த விஷயத்தில் பொது மக்கள் எங்களைப்பற்றி அறிந்து வைத்திருப்பதைப்பற்றிப் பேசும்போது, அவர்களைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்பதையும் கவனிக்கவேண்டும் என்று கூறினேன்.

இன்னும் ஒன்று கனம் உறுப்பினர்களுக்குச் சொல்லுகிறேன். நாங்கள் இன்னமும் சம்பளம் வாங்கவில்லை. என்ன செய்ய இருக்கிறோம் என்பதைப் பொருத்திருந்து பார்க்கவேண்டுமே தவிர, உறுப்பினர் அவர்கள் அவ்வளவு அவசரப்பட வேண்டாம். நாங்கள் கொஞ்சம் விவரம் தெரிந்தவர்கள். (ஆரவாரம்.)

* *திரு. மு. இராமன் :* மன்றத் தலைவர் அவர்களே, 1966-67-ம் ஆண்டுக்கான இறுதி உபமானியக் கோரிக்கைகளின் விவாதத்தின் 12 00 ந.ப.
மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக சார்பில் அமைந்திருக்கும் மந்திரி சபையில் அறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக வீற்றிருக்கும் தமிழகத்தில் ஏழை எளிய மக்களுக்கு எதிர்காலத்தில் நல்ல பல காரியங்களை எடுத்து அமைதியாகவும் திறம்படவும் நடத்துவார்கள் என்பதை இந்த மன்றத்தின் முன்பு தெரிவித்துக்கொள்கிறேன்.

1957-ம் ஆண்டிலே இந்த மன்றத்திலே உறுப்பினராக இருந்த மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் என்னுடைய தொகுதியில் பல காலனி வாழ் மக்களுக்கு மனைக்கட்டு தேவை

என்று இந்த சட்டமன்றத்தில் வினு எழுப்பினுர்கள். இருபது ஆண்டு காலமாக இருந்த காங்கிரஸ் ஆட்சியில் என்னுடைய தொகுதியில் காலனி வாழ் மக்களுக்கு மனைக்கட்டு வழங்கப்பட வில்லை. வளவனூர் தொந்திரெட்டிப்பாளையம் பகுதியில் மனைக் கட்டு தேவை என்று சொல்லி நான்கில் ஒரு பங்குத் தொகை ரூ. 1,000 சர்க்காருக்கு முன் பணமாகக் கொடுத்தும், காலனி வாழ் மக்களுக்கு காங்கிரஸ் ஆட்சியில் மனைக்கட்டுகள் இன்னும் வழங் கப்படாமல் இருந்த காரணம் தெரியவில்லை. காங்கிரஸ் ஆட்சியில் ஏழை ஆதி திராவிட மக்களுக்கு மனைக்கட்டுகள் வழங்கிஞேம், குடி தண்ணீர் வசதி செய்து கொடுத்தோம் என்றெல்லாம் பிரமாதமாகப பேசிக்கொள்கிறுர்கள். இதுவரையில் என்னுடைய தொகுதியில் வழுதாவூர், வடவாம்பலம், பூசாரிப்பாளையம், சாலையாம்பாளையம் ஆகிய கிராமங்களில் காலனிவாழ் மக்களுக்கு மனைக்கட்டுகள் கொடுக்கப்பட வேண்டும் என்று 1957-ம் ஆண்டில் இந்தச் சட்ட மன்றத்தில் உறுப்பினராக இருந்த மதிப்பிற்குரிய திரு. கோவிந்த சாமி அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறுர்கள். ஆனுல், காங்கிரஸ் ஆட்சியில் அது கவனிக்கப்படவில்லை. இப்பொழுது வந்திருக்கும் நமது சர்க்கார் காலனிவாழ் மக்களுக்கு உடனடியாக மனைக்கட்டு வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழகத்தில் பஞ்சாயத்து ஒன்றிப்பு மன்றத் தின் கீழ் பணியாற்றும் ஆசிரியர்கள் பலவித அல்லல்களை அனுப வித்துக் கொண்டிருக்கிறுர்கள். ஆசிரியர்களை அடிக்கடி ஒன்றிப்பு மன்றத் தலைவர்களும், சம்பந்தப்பட்ட ஆணையாளர்களும் மாற்றிக் கொண்டிருக்கிறுர்கள். அப்படிப்பட்ட அவல நிலையை நீக்கி, ஒன்றிப்பு மன்றத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகள் அனைத்தையும் கல்வி இலாகாவே ஏற்று நடத்திஞல் நலமாக இருக்கும், ஆசிரியர் களுக்கு இருக்கும் தொல்லைகள் நீங்கும் என்பதை இந்தச் சமயத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் விக்கரவாண்டி, கண்டமங்கலம் ஆகிய இடங்களில் மருத்துவ விடுதி இல்லாமல் ஏழை மக்கள், பின்தங்கிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் மிகவும் அவதிப்படுகிறுர்கள். 1957-ம் ஆண்டில் இந்த சட்ட மன்றத்தில் பணியாற்றிய திரு. கோவிந்தசாமி அவர்கள் இந்த இடங்களில் மருத்துவ விடுதிகள் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண் டார்கள். ஆனுல் இன்றுவரையில் அந்த இடங்களில் மருத்துவ விடுதிகள் ஏற்படுத்தப்படவில்லை. இந்த அரசாங்கம் அதைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது வளவனூர் உயர்நிலைப் பள்ளியில் அரசினர் மாணவர் விடுதி ஒன்று இருக்கிறது. நாற்பத்தைந்து மாணவர்கள் பின்தங்கிய வகுப்பினர்கள், உயர்ஜாதி வகுப்பினர்கள், தாழ்த்தப் பட்ட மக்கள் இலவசமாக உணவு அருந்துகிறுர்கள். இருந்தாலும் ஏழை எளிய மாணவர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச்





சேர்ந்த மாணவர்கள் சுமார் ஐந்து மைலுக்கு அப்பாற்பட்ட தூரம் வந்து படிக்கவேண்டியிருக்கிறது. ஆகையால் வளவனூர் அரசாங்க மாணவர் விடுதியில் 45 மாணவர்களாக இருப்பதை 75 மாணவர்களாக உயர்த்த சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன் வழுதாவூர், சித்தவம்பட்டு, கண்டமங்கலம் ஆகிய இடங்களில் உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. அங்கும் அரசினர் மாணவர்கள் உணவு விடுதிகளை ஏற்படுத்தித் தந்தால், ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் நல்ல முறையில் படித்து முன் வருவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வளவனூர் ஏரி தூர் வார வேண்டும். முன்னுள் சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றிய மதிப்பிற்குரிய திரு. கோவிந்தசாமி அவர்கள் தற்பொழுது ஆளும் கட்சி வரிசையில் விவசாயத் துறை அமைச்சராக இருக்கிறுர்கள். அவர்கள் சட்ட மன்ற உறுப்பினராக இருந்த காலத்திலேயே வளவனூர் ஏரியில் தூர் வார வேண்டும் என்று சொல்லியிருக்கிறுர்கள். இருந்தும், அந்த வேலையைச் செய்து முடிக்க முன்பிருந்த அரசு முன்வர வில்லை. வளவனூர் ஏரியில் 6 அடி, 7 அடி தூர் வாரி, நன்ருகக் கரையைப் பலப்படுத்திஞல்தான் சுமார் 20, 25 கிராமங்களுக்கு நல்ல பலன் கிடைக்கும்.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வெள்ளம் அதிகமாக ஏற் பட்டு, பல கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. வடவாம்பலம், கொங்கம்பட்டு, பூவரசங்குப்பம், சின்னமடம், பெரிய மடம் ஆகிய கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பண்ணை யாற்றுக்குப் பக்கத்தில் மலட்டார் என்ற ஆறு ஓடுகிறது. அந்த ஆற்றங்கரை ஓரத்திலுள்ள கிராமங்கள் இவை. ஆகவே, வெள்ளம் உள்ளே புகாமல் தடுப்பதற்கு மலட்டார் கரையோரமாக மதில் சுவர், தடுப்புச் சுவர் எழுப்பி, இந்தக் கிராமங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு தலைவர் அவர் களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, முடித்துக்கொள் கிறேன்.

* திரு. பி. எஸ். தனுஷ்கோடி : கனம் சபாநாயகர் அவர்களே, உப மான்யக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு எனக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தமைக்கு முதற்கண் வணக்கத்தைத் தெரி வித்துக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டம் அதிக உணவு உற்பத்தி யாகக்கூடிய ஒரு மாவட்டம். அந்த மாவட்டத்தில் வெள்ளக் காலங்களில் விவசாயத்திற்கு அதிகமாக பாதிப்பு ஏற்படுகிறது என்பதை கனம் தலைவர் அவர்கள் மூலமாக அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். என்னுடைய தொகுதியாகிய திருவாரூர் தொகுதியில் ஓடம்போக்கியாறு, வெள்ளையாறு, பாண்டவையாறு, அடப்பாறு, வாளைவாய்க்கால்,

வெட்டாறு போன்ற ஆறுகள் ஓடுகின்றன. அந்த ஆறுகள் கடற்கரையை நோக்கிப் போகிற காலத்தில், கரைகள் ரொம்ப இடைக் குறைவாக இருப்பதன் காரணமாக வெள்ளக் காலங்களிலே உடைப்பு ஏற்பட்டு, பல ஆயிரக்கணக்கான நிலங்கள் பாழாகி, விவசாயம் பாதிக்கப்படுகிறது. இந்தக் கரைகளை நல்ல முறையிலே செப்பனிடுவதற்கு, கரைகளைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை உடனடியாக எடுத்துக்கொண்டால்தான், அங்குள்ள விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க முடியும். வெள்ளத்தினால் பயிர்கள் பாதிக்கப்படாமல் மீட்கமுடியும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

வெள்ளத்தினால் பாதிக்கப்படுவது மட்டுமல்ல. வடிகால் வசதி இல்லாமல் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் நீர் தேங்கி பயிர்கள் நாசமாகின்றன என்பதை குறிப்பாக அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மூப்பத்திக் கோட்டகம், வல்லான் கோட்டகம், எடவநாடு, வாழக்கரை, கீழையூர், ஈசனூர், சித்தாய்மூர் போன்ற கிராமங்கள் பள்ள கிராமங்களாக இருப்பதனால், சரியான வடிகால் வசதி இல்லாமல் கஷ்டமாக இருக்கிறது. பல வருஷங்களாக இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகள் சரியான பாசன வசதி இல்லை, வடிகால் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கோரிக்கைகள் விட்டு வந்தபோதிலும், பல அதிகாரிகள் வந்து பார்வையிட்டு வந்த போதிலும், இதுவரை ஒன்றும் வடிகால் வசதி செய்து கொடுக்கப்படவில்லை. நீர்த் தேக்கத்தினால் அந்த இடங்களில் நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன, வடிகால் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று குறைபட்டுக்கொண்டபோது, அங்கு இருக்கக்கூடிய ஒரு பிரிவுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய நிலங்களைச் சர்க்கார் எடுத்துக்கொண்டு வடிகால் வசதி செய்யும்படியான நிலை இருக்கிறது. சர்க்காருக்கு அந்த நிலங்களை இனமாகக் கொடுத்தால் வடிகால் வசதி செய்து கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். இதுவரையிலும் எந்த நபரும் அதை எதிர்த்ததாகத் தெரியவில்லை. உடனடியாக புதிய அமைச்சர்கள் அதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, அம்மாதிரி வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய இடங்களில் வடிகால் வசதி செய்து கொடுத்தால், நிச்சயம் அந்தப் பகுதியில் கரையோரமாக இருக்கக்கூடிய நிலங்கள் பாதுகாக்கப்படும், அதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதையும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குத் தலைவர் அவர்கள் மூலமாகக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சர்க்கார் விவசாயப் பண்ணைகள் இருக்கின்றன. அந்தப் பண்ணைகளில் பொறுக்கு விதைகள் தயாரித்து விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்கிற நோக்கத்தோடு வினியோகிக்கும் முறை இருக்கிறது. ஆனால், அந்தப் பண்ணையில் விதை நெல் நல்ல முறையில், சரியான முறையில் காயவைத்து தயார் செய்வதில்லை. அப்படிச் செய்ய வேண்டிய அளவிற்கு அங்கே ஊழியர்கள் இருப்பதில்லை. உதாரணமாகச் சொல்லப்





போனால், விவசாயிகள் விதை வைப்பதென்றால், அறுவடையான உடனடியே, அதை தலையடி அடித்து, நன்றாகக் காயவைத்து, விவசாயிகள் விதை தயார் செய்கிறார்கள். ஆனால், இன்றையதினம் சர்க்கார் பண்ணையில் இருக்கும் விதைகள் காலத்தில் அறுவடை செய்யப்பட்டு, காய வைக்கப்படாமல், ஈரமான நெல்லை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் விதை தயாரிப்பது நல்ல முறையில் செய்வது கிடையாது. காலத்தில் அறுவடை செய்வது கிடையாது. நல்ல முறையில் தயார் செய்வதும் கிடையாது. இனிமேலாவது அப்படிப்பட்ட தவறுகள் ஏற்படக் கூடாது என்று அந்தக் குறைகள் நீங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு பஞ்சாயத்துக்களுக்குப் பல புறம்போக்கு நிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவை அந்தப் பஞ்சாயத்துக்களுக்குத் தேவையானவைகள்தானா என்பதை கவனத்தில் எடுத்துக் கொண்டு, பஞ்சாயத்துக்குத் தேவை, அப்படி அந்த பஞ்சாயத்திற்கு வேண்டிய, அவை செய்யக்கூடிய காரியங்கள், அபிவிருத்தி வேலைகள், விஸ்தரிப்புக்கள் இவற்றிற்குப் போனது போக, மீதம் உள்ள நிலத்தை நிலமற்ற விவசாயிகளுக்கு, விவசாயத்திற்கு லாயக்குள்ள நிலங்களை, சர்க்காரே நேரிடையாக எடுத்துக் கொண்டு, நிலமற்றவர்களுக்குக் கொடுக்க வகை செய்தால் நலமாக இருக்கும். ஆகவே, அப்படிச் செய்ய வேண்டும் என்று அமைச்சரைத் தலைவர் மூலமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். உதாரணமாக, நான் குடியிருக்கும் ஊரில்—நானும் ஒரு பஞ்சாயத்து போர்டு தலைவன்—13 ஏக்கரா நிலம் இருக்கிறது. அது பூராவும் சும்மாவே, தரிசாகவே கிடக்கிறது. நல்ல சாகுபடிக்கு லாயக்கான நிலம். அந்த நிலத்தை விவசாயத்திற்குக் கொண்டு வந்தால் உணவு உற்பத்திக்கு உதவியாக இருக்கும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். சட்டத்தின் மூலமாகச் செய்வதில் சில சிக்கல்கள் இருக்கின்றன என்று தெரிகிறது. அப்படிச் சட்ட சிக்கல்கள் இருந்தால் அவற்றை நீக்க தக்க ஏற்பாடுகள் செய்து, அந்த நிலத்தை உணவு உற்பத்திக்கு, உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் கொண்டு வந்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடி தண்ணீர் வசதி. எனக்கு முன் பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அரிசனங்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை என்பதைப்பற்றி. அரிசன மானியத்தின் கீழ் தொகைகள் வழங்கப்படுகின்றன, நீர்நிலைத் தொட்டிகள் கட்டுகிறார்கள். உதாரணமாக, வேதாரணியம் தொகுதியில், கோத்தங்குடி என்கிற கிராமம் இருக்கிறது. அங்கே அரிசன மானியத்தின் கீழ் தொகை வழங்கப்பட்டு நீர்நிலைத் தொட்டி கட்டப்பட்டிருக்கிறது. ஆனால், அங்கிருக்கிற அரிசனங்கள் அந்தத் தண்ணீரை உபயோகிக்க முடியவில்லை. மானியம் வழங்கப்பட்டது அரிசன நலத்தின் கீழ். ஆனால், அந்தப் பயனை அந்த மக்கள் அடைய முடியவில்லை. குடியிருக்கும் இடங்கள் தனியாருக்குச் சொந்தமானதாக இருப்பதால்

[திரு. பி. எஸ். தனுஷ்கோடி] [1967 மார்ச் 25

அங்கு தண்ணீர்க் குழாய்களைக் கொண்டு செல்ல முடியவில்லை. ஆகவே, நீர்நிலைத் தொட்டி கட்டியும் அந்த அரிசன மக்களுக்கு தண்ணீர் உபயோகப்படவில்லை. இம்மாதிரியான குறைகள் இருக்கும் இடங்களை சர்க்கார் பரிசீலனை செய்து, அதில் கவனம் செலுத்தி, அப்படிப்பட்ட இடங்களைச் சர்க்காரே ஆர்ஜிதம் செய்தாவது, அரிசனங்களுக்குப் பயன்படும் நிலையில் செயல்பட வேண்டும் என்று அமைச்சரை, தலைவர் அவர்கள் மூலம் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் மாவட்டத்தில் தண்ணீர் ஊற்றுக் குழாய்க் கிணறுகள் அமைக்க திட்டங்கள் பலவிடங்களில் இருக்கின்றன. ஆனால், சில இடங்களில் அந்தத் திட்டம் நடைபெறவில்லை. அப்படி நடைபெறாமல் இருப்பதற்குக் காரணம், தண்ணீர் பூமியிலிருந்து கிடைக்கவில்லை என்று கூறுகிறார்கள். அந்த இடங்களில் பெரிய பெரிய குளங்கள் இருக்கின்றன. அவற்றை ஆழப்படுத்தி, அகலப்படுத்தி தண்ணீரைத் தேக்கி வைத்தால் பின்னால் பம்பு செட்டுகளை வைத்து இறைத்துக் கொள்ள ஏதுவாக இருக்கும். அதே நேரத்திலே அதன்மூலம், பஞ்சாயத்திற்கும் வருவாய் பெருகும். சில பஞ்சாயத்துக்கள் குறைவான வருவாயை உடையவைகளாக இருக்கின்றன. அப்படிப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு மீன் வளர்ப்பு மூலம் வருமானம் அதிகமாக வருவதற்கு வாய்ப்பும் ஏற்படும். ஆகவே, இவற்றைக் கவனத்தில் கொண்டு அதை நீர்ப்பாசன திட்டத்தின்கீழ் எடுத்து, குளங்களை ஆழப்படுத்தி, அகலப்படுத்தி, அந்த அளவில் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிச் செய்வதால் சின்னஞ்சிறு விவசாயிகளும் பயன் அடைவார்கள். அவர்களுக்கும் பஞ்சாயத்து யூனியன் மூலம் பம்பு செட்டுகள் இனமாக வழங்க, மானியம் கொடுத்து தக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, அரிசனத் தெருக்களுக்கு மின்சார விளக்குகள் கிடையாது. காரணம் என்னவென்றால், சொந்தத்திற்கு மின்சாரம் எடுத்துக் கொண்டால்தான் தெருவிற்கு விளக்கு போட முடியும் என்கிறார்கள். அந்தக் குறையைத் தீர்க்க, வருங்காலத்திலாவது, அரிசன மானியத்தின் மூலமாக, அரிசனத் தெருக்களுக்கு விளக்குகள் கொண்டு வருவதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று அமைச்சரை, தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, மருததுவ மனைகள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். திருவாரூர் நகரிலே ஒரு மருத்துவ மனை இருக்கிறது. அங்குள்ள அதிகாரிகள் ஏழை மக்கள் பிரசவ வசதிக்காகச் சென்றால், தாய்மார்களைப் பார்த்து பலவிதமான வார்த்தைகளை உபயோகிக்கிறார்கள். "எதற்காக ஆஸ்பத்திரிக்கு வருகிறீர்கள்? வீட்டில் ஏன் . . ." தவறான வார்த்தைகளை தாய்மார்களிடம் பேசி, அவர்களை அனுப்பி விடுகிறார்கள். அது போன்று நடக்கக்



1967 மார்ச் 25] [திரு. பி. எஸ். தனுஷ்கோடி]

கூடாது. ஆகவே, நிச்சயமாக மருத்துவத் துறை அமைச்சர் இதைக் கவனித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உடனடியாக அடக்க, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மருத்துவ மனைகள் இதற்கு முன்பு இருந்தது போல் இல்லாமல் நல்ல முறையில் பணி செய்ய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு சொஸைடிகள் மூலமாக கொடுக்கக் கூடிய உரங்கள், விவசாயிகளுக்குக் காலத்தில் கிடைப்பதில்லை. விவசாயம் ஆரம்பிப்பதற்கு முன்பே, இவ்வளவு விவசாயிகள் இவ்வளவு நிலம் குறுவை சாகுபடி செய்கிறார்கள், இவ்வளவு பேர்கள் சம்பா சாகுபடி செய்கிறார்கள் என்கிற கணக்கை எடுத்து, வேண்டிய உரத்தை விவசாயம் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே தேவையான அளவு உரத்தை பொதுவாக வாங்கி, இருப்புக் கட்டி, காலா காலத்தில் கொடுக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சரை, தலைவரவர்கள் மூலம் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடுகூட, விவசாயத்தைப் பாதுகாக்கும் அளவில், ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும், ஒரு பவர் ஸ்ப்ரே கொடுக்க வேண்டும். பஞ்சாயத்துக்களால் பவர் ஸ்ப்ரேகளை வாங்க முடியவில்லை. அப்படிப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு மானியம் வழங்கி, ஒரு பவர் ஸ்ப்ரே கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனென்றால், வசதி உள்ளவர்கள், சொந்தத்தில் வாங்கிக் கொள்ளுகிறார்கள், அல்லது யூனியன் மூலமாக பெரிய வசதி படைத்தவர்களுக்கு கிராம சேவக்குகள் பயந்துகொண்டு பவர் ஸ்ப்ரேக்களைக் கொடுக்கும் நிலைதான் இருக்கிறது. நான்கு ஏக்கர், ஐந்து ஏக்கர் நிலமுடையவர்களெல்லாம் இந்த வசதி கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு பவர் ஸ்ப்ரே உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அமைச்சரவையைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி மருந்து அடிக்கும் கருவி இருந்தால் ஏழை எளிய விவசாயிகளும் ஸ்ப்ரே செய்து கொள்ள வசதியாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொண்டு, பேச சந்தர்ப்பம் கொடுத்த தலைவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

* திரு. பி. ஜி. கருத்திருமன்: கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது சபைமுன் வைக்கப்பட்டிருக்கும், உப மானியக் கோரிக்கைகள் ஏற்கனவே இருந்த சர்க்காரால் செலவு செய்யப்பட்ட இனங்களுக்காக. ஆகையால், நான் எந்த விதமான திருத்தமோ அல்லது தவறுகளோ சொல்லத் தயாராக இல்லை. இருப்பினும், நான் இந்த விவாதத்தில் கலந்து கொள்ளுகிறேன் என்றால், இன்றைக்கு நம்முடைய நாட்டில் நடக்கும் பதுக்கல் வேட்டை அல்லது கொள்முதல் என்னும் நிலையைப்பற்றிச் சில கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான். அவற்றை உணவு, விவசாயம் என்கிற மானியங்களின்கீழ் பேச முற்படுகிறேன்.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 மார்ச் 25

நம் நாட்டில் இருக்கும் பற்றாக்குறை காரணமாக தானியங்கள் கொள்முதல் செய்து, சரியான விலையில் வேண்டிய மக்களுக்கு விநியோகம் செய்ய மேற்கொண்டு இருக்கிறோம். அதே சமயத்தில் ஒன்றை யோசிக்க வேண்டும். 'அவையில் சர்ப்ளஸை' வெளியிலே வரக்கூடிய அதிகப்படியான நெல்லை விவசாயிகளிடத்தில் வாங்கி, தேவைப்பட்ட இடங்களுக்கு, ஸ்டாச்சுடரி ரேஷன் ஏரியாவாக இருக்கும் சென்னை போன்ற பட்டணங்களில் விநியோகம் செய்ய வேண்டும் என்பதுதான் ஏற்பாடு. ஆனால், அந்த ஏற்பாடுகளிலே இப்பொழுது சர்க்கார் எடுத்துக்கொள்ளும்படியான நடவடிக்கைகளும் வருகின்றன. பல இடங்களில் பதுக்கல்காரர்களைப் பிடித்திருப்பதாகவும், எந்த எந்த ஜில்லாவில் எத்தனை எத்தனை க்விண்டால் நெல் அல்லது அரிசி பிடித்திருப்பதாகவும் பத்திரிகைகளிலே வரும் செய்திகளையெல்லாம் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். பதுக்கல்காரர்கள் என்று பிடித்திருப்பதைக் குறித்து பல இடங்களிலிருந்து எனக்குப் புகார்கள் வந்திருக்கின்றன. பல இடங்களில் மிகவும் துன்புறுத்தப்படுவதாகவும், போலீசார்கள் வீடுகளிலே புகுந்து தானியங்களை எடுத்துக்கொள்ளுவதாகவும் எனக்குப் புகார்கள் வந்திருக்கின்றன. கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையின் மீது பேசும்போதும் நான் திட்டவட்டமாகச் சொல்லுகிறேன். சர்க்காருக்கு நான் ஒரு ஆலோசனை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கொள்முதல் திட்டம் வெற்றிகரமாக நடக்க வேண்டுமானால், உற்பத்தி குறையாமல் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கவேண்டுமானால், அந்தத் திட்டத்தை நல்ல முறையில்—அவசியப்படும் வகையில் மட்டும்—செய்தாக வேண்டும். இப்பொழுது ஏன் விவசாயி, தான் உற்பத்தி செய்யும் நெல்லைக் கொடுக்கமாட்டேன் என சொல்லுகிறான் என்று ஆலோசிக்க வேண்டும். கொள்முதல் செய்யும்படியான நெல்லுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலை கொடுக்கப்படுகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். கொள்முதல் விஷயத்தில் விலையைப்பற்றிப் பல விதமான பேச்சுக்கள் இருக்கின்றன. அடிப்படை விலை குறைந்த விலை என்றுதான் சொல்லுகிறார்களே தவிர, அதிகபட்ச விலை என்பது கிடையாது. அதிகபட்ச விலை என்பது 'ப்ளாக் மார்க்கெட் விலை'. அதாவது, வெளியிலே பகிரங்கமாக விற்கக்கூடிய விலை. வெளியிலே அதிக விலைக்கு தானியங்களை விற்க விவசாயி ஏன் முற்படுகிறான் என்று பார்க்க வேண்டும். பற்றாக்குறை இருக்கும்படியான இடத்தில் தேவையான மக்கள், கையிலே பணம் உள்ளவர்கள், வாங்க சக்தி உள்ளவர்கள், அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள். இது விஷயத்தில் மறைத்து வைத்துப் பேசுவதில் பிரயோஜனம் இல்லை என்ற கருத்தில் நான் தெளிவாகவே கூறிவிட விரும்புகிறேன். அதாவது, சர்க்கார் நிர்ணயித்திருக்கும் விலையானது வெளி மார்க்கெட்டில் நிலவும் விலைக்குப் பாதிதான் இருக்கிறது என்பதை நான் இந்தச் சமயத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். சர்க்காரின் கொள்முதல் விலைக்கும் வெளியிலே நிலவும் விலைக்கும் பெரிய அளவிற்கு வித்தியாசம் இருக்கிறது. சர்க்கார் கொள்முதல் விலையானது



1967 மார்ச் 25] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

வெளி விலையில் (மார்க்கெட் ப்ரைஸ்) பாதிதான் இருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த முறையில் விலை இருப்பதன் காரணமாகத்தான் ஓரளவு தானிய உற்பத்தி ஏற்பட்டிருக்கிறது என்றால், அது மிகையாகாது.

பாராளுமன்றத்தில் பேசும்போது, 'The increase in production in food grains is partly due to the plan partly due to the advanced methods of farming and chiefly due to increased price for the food grains.' என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதாவது, உணவுத் தானிய உற்பத்தி அதிகரித்திருப்பதற்கு ஒரு காரணம் திட்டங்கள்; இரண்டாவது காரணம், தீவிர சாகுபடி; மூன்றாவது, நல்ல விலை இருக்கும்படியான காரணமாகத்தான் உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. நான் ஏதோ பணக்காரர்களுக்காக வக்காலத்து வாங்கிப் பேசுகிறேன் என்ற நிலையில் இதைச் சொல்வதாக யாரும் கருத வேண்டாம். 'விவசாயி' என்ற முறையில் நான் சொல்லுகிறேன். கொள்முதல் சீராக நடைபெறுவதற்கும், விவசாயிகளுக்குத் தொந்தரவு இல்லாமலிருப்பதற்கும், சர்க்காருக்கும் தொந்தரவு இல்லாமலிருப்பதற்கும் ஒரே ஒரு வழிதான் உண்டு. உணவுத் தானிய வியாபாரத்தை எந்தவிதமான வியாபாரிகளிடமும் ஒப்படைக்காமல், சர்க்கார்தான் எடுத்து நடத்தியாக வேண்டும். ஸ்டேட் ட்ரேடிங் என்ற ஒரே அமைப்பின் கீழ் கொண்டு வந்து, அந்த அமைப்பின்கீழ் இல்லாது வேறு எந்த விதத்திலும் எந்தத் தானியமும் யாருக்கும் போகவில்லையென்ற நிலையை ஏற்படுத்தினால் தான், ஓரளவு கட்டுப்படுத்த முடியும். உணவு தானியத்தின் மொத்த வியாபாரத்தைச் சர்க்காரே ஏற்றுக்கொள்ளுவதன் மூலமாகத்தான் இதிலே ஒரு தீர்வு காண முடியும். அப்படிச் செய்யாமல், வியாபாரிகளிடம் கொஞ்சம் விட்டு, சர்க்காரும் கொஞ்சம் செய்வது என்ற முறையில் செய்தால் எல்லோரும் சேர்ந்து கொடுக்கும்படியான நிலை ஏற்படும்.

கொள்முதல் விஷயத்திலே என்ன நடக்கிறது என்பதைக் குறித்து நான் ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இங்கே பேசும்போது பலரும் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறார்கள். கிராமத்திலே கிராம அதிகாரிகளிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைக்கிறார்கள். அவர்கள் டிமாண்டு போட்டு, ஒவ்வொருவரும் இவ்வளவு தரவேண்டும் என்று நிர்ணயிக்கிறார்கள். ஒரு கிராமத்தில் இராமன், கிருஷ்ணன், கோபாலன் என்று மூன்று பேர்கள் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். அவர்கள் ஒவ்வொருவருக்கும் பத்து ஏக்கர் நிலம் இருக்கிறது என்றும் வைத்துக் கொள்ளுவோம். இந்த நிலையில் கிராம அதிகாரி என்ன செய்கிறார் என்றால், 100 க்விண்டால் நெல் கொடுக்க வேண்டும் என்று இராமன் என்பவருக்கு டிமாண்டு அனுப்பிவிடுகிறார். கிருஷ்ணன் என்பவருக்கு 50 க்விண்டால்தான் இருக்கிறது என்று கணக்குக் காட்டுகிறார். கோபாலன் என்பவரிடம் 150 க்விண்டால் இருக்க வேண்டும் என்று சொல்கிறார். இது எந்தவிதமான நியாயத்திற்கும் கட்டுப்படுவதாக இல்லை. இப்படிக் கிராமத்தில் ஒரே

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 மார்ச் 25

அளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளில் ஒருவர் 50 க்விண்டால் கொடுக்கவேண்டும் என்றும், இன்னொருவர் 100 க்விண்டால் கொடுக்க வேண்டும் என்றும், இன்னும் ஒருவர் 150 க்விண்டால் கொடுக்கவேண்டும் என்றும், கிராம அதிகாரி தம்முடைய விருப்பு வெறுப்புக்கேற்றபடி டிமாண்டுகள் கொடுப்பதுதான் அதிருப்தி வருவதற்குக் காரணமாக இருக்கிறது.

கட்டாயக் கொள்முதல், இன்டென்சிவ் ப்ரொக்யூர்மெண்ட் என்று சொல்லி, 'அவெய்லபிள் ஸர்ப்ளஸ்'-ஐ எல்லாம் எடுப்பது என்று சொன்னால், எந்த விதத்திலும் விவசாயத்தைச் சீராகச் செய்யவே முடியாது. ஒரு விவசாயி பத்து ஏக்கர் நிலம் வைத்திருக்கிறார் என்றால், அவரிடம் முப்பது ஆட்கள் வேலை செய்வார்கள். அந்தப் பத்து ஏக்கர் நிலத்தில் விளைவதைப் பூராவும் கொண்டுபோய் வெளி மார்க்கெட்டில் விற்றால்தான் தவறுகுமே தவிர தன்னிடம் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு அந்த நெல்லைக் கூலியாகக் கொடுக்கும்போது அதைத் தடுக்க சட்டத்தில் இடம் இல்லை. விவசாயிகளுடைய சொந்த உபயோகத்திற்குக் கூட வைக்காமல் பூரணமாகக் கொடுக்கவேண்டும் என்ற நிலை ஏற்படுமானால், அவர்கள் பணப் பயிர்கள் (காஷ் க்ராப்ஸ்) வைத்துக் கொள்வதற்கும் வகை இருக்கிறது. விவசாயிகள் உற்பத்தி செய்வது முழுவதையும் கொள்முதல் செய்யக்கூடாது என்பதற்காக 'லெவி' முறையில், குத்துமதிப்பாக ஒரு குறிப்பிட்ட அளவிற்குக் கொள்முதலுக்காகக் கொடுத்துவிடவேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. உற்பத்தி செய்தாலும் சரி, உற்பத்தி செய்யாவிட்டாலும் சரி, ஏக்கருக்கு இவ்வளவு என்று குத்துமதிப்பாக நிர்ணயித்து, அதன்படி கொள்முதல் நடந்து கொண்டு வந்திருக்கிறது. இப்பொழுது மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்—சிறு விவசாயிகளுக்கு விலக்கு அளிக்கிறோம் என்று, 12½ லட்சம் பட்டாதார்களுக்கு விலக்கு அளித்துவிட்டார்கள். இந்த 12½ லட்சம் பட்டாதார்களும், தங்களுடைய நிலத்தில் விளைகிற தானியம் பூராவையும் தங்களுக்கே வைத்துக் கொள்ளுகிறார்கள் என்றால் ஆட்சேபனை இல்லை. ஆனால், இவர்களுக்கும், விவசாயம் செய்வதற்கும், மற்ற காரியங்களுக்கும் பணம் வேண்டுமே. ஒரு விவசாயினுடைய நிலத்தில் 15 மூட்டைகள் விளைந்தது என்று வைத்துக்கொள்வோம். அவனுடைய குடும்பத்தில் இரண்டு பேர் மூன்று பேர் இருந்தால், சில மூட்டைகளைத் தங்களுடைய சொந்த உபயோகத்திற்கு வைத்துக்கொண்டு, பாக்கி மூட்டைகளை விற்றுத்தான் ஆகவேண்டும், மார்க்கெட்டுக்குக் கொண்டுபோய்தான் ஆக வேண்டும். இந்த 12½ லட்சம் பட்டாதார்களிடமிருந்து கொள்முதல் செய்வதில்லை என்று அவர்களுக்குச் செப்பேட்டுப் பட்டயம் கொடுத்துவிடுவதாக இருக்கிறது. இதை நான் சொல்லும்போது, நான் ஏதோ ஏழை விவசாயிகளிடமிருந்தும் வற்புறுத்திக் கொள்முதல் செய்யவேண்டும் என்று சொல்லுவதாகக் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினரோ அல்லது வேறு யாரோ சொல்லக்கூடும். ஏழைகளை வற்புறுத்தவேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஒன்று



1967 மார்ச் 25] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். நாட்டு மக்கள் உணவுக்காகக் கஷ்டப்படும்படியான நிலையில், எந்த விவசாயியாக இருந்தாலும் ஓரளவுக்குத் தியாகம் செய்யவேண்டும் என்ற நிலையில், ஒரு ஏக்கர் நிலம் உள்ள விவசாயி ஒரு மூட்டை நெல் தரவேண்டும்; இரண்டு ஏக்கர் நிலம் உள்ள விவசாயி இரண்டு மூட்டைகளோடு இரண்டு மூட்டைகள் சேர்த்து நான்கு மூட்டைகள் தரவேண்டும், மூன்று ஏக்கர் நிலமுள்ள விவசாயி, ஏக்கருக்கு மூன்று மூட்டைகள் விதம் ஒன்பது மூட்டைகள் தரவேண்டும் என்ற முறையில் 'கிரேடெட் லெவி' வைத்துக் கொள்முதல் செய்தால், சர்க்கார் போட்டிருக்கும் திட்டம் நிறைவேறும்; விவசாய மக்களிடம் எந்த விதமான அதிருப்தியும் இருக்காது.

கிராமப்புறத்தில் ரேஷன் கார்டு முறை கிடையாது. கிராமப்புற மக்களைப் பொறுத்த வரையில் தானிய விஷயமாக அரசாங்கம் எந்தவிதப் பொறுப்பையும் எடுத்துக்கொள்ளவில்லை. கிராமங்களில் உள்ள குடியானவர்களுக்கும் ஓரளவு கட்டுபடியாகக்கூடிய அளவிற்கு கொடுத்து, கிராமத்திலேயே இஷ்டப்படி வாங்குவதற்கான நிலைமையையும் உண்டாக்க வேண்டும். எல்லாம் விவசாயத்திலே ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள். கட்டாயக் கொள்முதல் என்று சொல்லி, பத்து லட்சம் டன், 12 லட்சம் டன் என்று வாங்கி சர்க்கார் வைத்துக்கொண்டால், பெரிய பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியதாக இருக்கும், கிராமத்தில் உள்ளவர்கள் தங்களுக்கும் ரேஷன் கார்டுகள் கொடுக்க வேண்டும் என்று கேட்டு, கிராம மக்களுக்கும் ரேஷன் கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்ற நிலை ஏற்படும். இதெல்லாம் பெரிய பொறுப்பிலே போய்ச் சிக்கிக் கொள்ள வேண்டிய நிலை இருக்கும் என்பதை நான் ஞாபகப்படுத்துகின்றேன். கொள்முதல் சீராக நடைபெற வேண்டுமானால், 'லெவி' முறையில் ப்ரொக்யூர்மென்ட் செய்ய வேண்டும். அதாவது, குத்துமதிப்பு முறையில் ப்ரொக்யூர்மென்ட் செய்ய வேண்டும். அதை விட்டு ஸ்டாச்சுடரியாக, கண்டிப்பாகக் கொடுத்துத்தான் ஆக வேண்டுமென்ற முறையைக் கொண்டுவந்தால் சிரமங்கள் ஏற்படக் கூடும். உதாரணமாக, என் பகுதியில் ஏ.டி.டி. 27 ரக நெல்லைப் போட்டார்கள். அது முதல் போகத்திற்கு ஏற்ற நெல். இரண்டாவது போகத்தில் இரண்டு மூட்டை கூட விளையவில்லை. லெவி திட்டத்தில் 10 மூட்டை கொடு, எண்பது மூட்டை கொடு என்றால், பூமியில் விளைந்தால்தான் கொடுக்க முடியும். விளையாவிட்டால் கொடுக்க முடியாது. விளைந்தால் கொடுத்துவிடுவார்கள். சில இடங்களில் விளைச்சல் இல்லாவிட்டால், அங்கும் குத்துமதிப்பு முறையில் இவ்வளவு மூட்டை கொடுத்துத்தான் தீரவேண்டும் என்ற நிலையில் விவசாயிகளை அதிகாரிகள் சிரமப்படுத்துகிறார்கள் என்றால் விவசாயி என்ன செய்வான் ? ஒரு விவசாயி தன்னுடைய தொழிலாளர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பதற்காக பத்து, இருபது மூட்டைகள் வைத்திருந்தால் அதையும் அதிகாரிகள் எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள் என்றால், அப்பொழுது அந்த விவசாயி என்ன செய்வான்? இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 மார்ச் 25

விவசாய மக்கள் உணவுத் தானிய உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற நிலையை உண்டாக்க வேண்டுமானால், உற்பத்தி செய்கிறவர்களுக்குக் கட்டுபடியாகக்கூடிய லாபகரமான விலையை நிர்ணயம் செய்தாகவேண்டும். விவசாய இலாக்காவைச் சேர்ந்த அதிகாரிகள் மட்டும் இதை நிர்ணயம் செய்தால் போதாது; விவசாயத்திலே நல்ல அனுபவம் உள்ளவர்களும் சேர்ந்து, எந்த விலை கட்டுபடியாகக் கூடிய விலை, எந்த விலை இருந்தால் உற்பத்தி பாதிக்கப்படாமலிருக்கும் என்பதையெல்லாம் கணித்து விலை நிர்ணயம் செய்யவேண்டும். ஆகவே, நல்ல விலை, விவசாயிகளுக்கு லாபகரமான விலையைக் கொடுத்தாக வேண்டும். இப்பொழுது இருக்கும்படியான கொள்முதல் விலையிலேயே தானியங்கள் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படுவதனால் உற்பத்தி குறையுமே தவிர, அதிகம் ஆவதற்கான எந்தவிதமான ஆதாரவோ, ஊக்கமோ நிச்சயமாக இல்லை.

ஜில்லாவிற்கு ஜில்லா வித்தியாசம் இருக்கிறது. தஞ்சை ஜில்லாவிலுள்ளவர்கள் நிறைய நெல் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். கோயமுத்தூர் ஜில்லா பற்றாக்குறை ஜில்லாவாகும். அங்கு அந்த ஜில்லாவின் தேவைக்கே உற்பத்தி போதுமானதாக இல்லை. அந்த இடத்தில் 'ரெசிஸ்டென்ஸ்' இருக்கத்தான் இருக்கும். அந்த இடத்தில் உள்ளவர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டு தான் கொடுக்க வேண்டியிருக்கும். மனக் கஷ்டத்துடன்தான் கொடுக்க வேண்டியிருக்கும். எந்த எந்த இடங்களில் அதிகமாகக் கிடைக்கிறதோ அந்த இடங்களில் வாங்க சர்க்கார் முயல வேண்டும். எந்த எந்த இடங்களில் பற்றாக்குறையாக இருக்கிறதோ அங்கெல்லாம் தானியங்களை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு போகத் தடங்கல் இல்லாமல் அனுமதிக்க வேண்டும். எனக்கு வந்த புகார்கள் எப்படி இருக்கின்றன என்றால், எல்லா நெல்லையும் கொடுத்துவிட்டு, வீட்டிலே வைத்திருக்கும் நெல்லையெல்லாம் கொடுக்கவேண்டும் என்று பல இடங்களில் அதிகாரிகள் வற்புறுத்துவதாகச் சொல்லப்படுகிறது. சட்டப்படி 'ரெக்விசிட் நோட்டீஸ்' கொடுக்கவேண்டும். உங்களிடத்திலே எத்தனை மூட்டை நெல் இருக்கிறதென்று கணக்குக் கேட்டு, அவர்கள் கொடுத்த கணக்கிற்கு

பி.ப 12–30 மேல் அதிகமாக இருந்து, அதை நிரூபணம் செய்தால், அது பதுக்கலாகும். பதுக்கல் என்றால் ஒரு வியாபாரி மூட்டை அரிசியை வாங்கி ரேஷன் விலையைவிட அதிக விலைக்கு விற்றால் அது பதுக்கல். இன்றையதினம் நம் நாட்டில் 12 லட்சம் பட்டாதார்கள் இருக்கிறார்கள். அவர்கள் மூலமாகத்தான் கொள்முதல் செய்ய வேண்டும். இந்த 12 லட்சம் பட்டாதார்களுடைய வீட்டிற்கும் சென்று அவர்கள் நெல்லை பதுக்கி வைக்கிறார்களா என்று சோதனை போட முடியுமா? இவர்களில் சிறிய விவசாயிகளும் இருக்கிறார்கள். சிறிய விவசாயிகளிடத்தில் கொள்முதல் இல்லையென்று சொல்லும்போது, பிறருடைய விளைச்சல் மேல் இந்த சிறு விவசாயிகளின் வீட்டிற்குச் சென்றுவிடும். நம்முடைய முதல அமைச்சர் அவர்கள் நன்றாகச் சொன்னார்கள், கொள்முதல் செய்



1967 மார்ச் 25] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

வதற்கு விவசாயிகளின் ஒத்துழைப்பு தேவை, கொள்முதலுக்கு நெல் தருவது விவசாயிகளுடைய கடமை என்பதை அவர் நன்றாக விளக்கிச் சொல்லியிருக்க வேண்டும். இதற்கு விவசாயிகளுக்கு நல்ல ஊக்கத்தையும், ஒத்துழைப்பையும் அளித்திருந்தால் அவர்கள் அதிகமான உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழி ஏற்பட்டிருக்கும். அவர்கள் உற்பத்தி செய்கிற தானியத்திற்கு நல்ல விலை கொடுத்து சமுதாயத்திற்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தை விவசாயிகளிடத்தில் பரப்பியிருக்க வேண்டும். அவர்களுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலையை நாம் நிர்ணயிக்கவில்லை. நியாயமான விலையை நிர்ணயித்தாலே, அவர்கள் முழு உற்சாகத்துடன் சாகுபடி செய்து, நமக்குத் தேவைப்படுகின்ற நெல்லைக் கொடுப்பார்கள். பாசன வசதிகளையும் நாம் சரியான முறையில் அமைத்துக் கொடுக்கவில்லை. இந்த வருஷம் மேட்டூர் அணையிலும் போதுமான தண்ணீர் இல்லை. பருவமழை தவறியிருப்பதன் காரணமாக வெள்ளாமை எல்லாவிடங்களிலும் குறைவாகத்தான் இருக்கிறது. நன்றாக விளையக்கூடிய என்னுடைய பூமியிலேயே இவ்வாண்டு, ஒன்றுக்கு முக்கால்தான் விளைந்திருக்கிறது. விவசாயிகளிடம் வாங்கும் விலையை சர்க்கார் நியாயமாக நிர்ணயித்திருந்தால், எந்த விவசாயியும் கொள்முதலுக்கு நெல் கொடுக்க மறுக்க மாட்டான். இன்றையதினம் ஒரு மூட்டை அரைப்பதற்கு 5 ரூபாய், 6 ரூபாய் என்று ரைஸ் மில்களுக்கே கூலி கொடுக்கிறார்கள். நான் ஒரு ஆலோசனையைக் கூடக் கூறுவேன். தனியார்களுக்கு ரைஸ்மில்லுக்கு அனுமதியே கொடுக்கக்கூடாது. நாம் கொள்முதல் செய்கிற நெல்லை அரைப்பதற்கு ரைஸ்மில்களிடம் கொடுப்பது என்றாலும், டெண்டர் கோரி அதைக் கொடுக்க வேண்டும். காரணம், இன்றையதினம் பத்தாயிரம் மூட்டை அரைத்துக் கொடுப்பதாக ஒரு ரைஸ் மில் முதலாளி சொல்கிறார் என்றால், அதில் அவருக்கு 40 ஆயிரம் ரூபாய் லாபம் இருக்கிறதென்று சொல்லியே செய்கிறார். தன்னுடைய லாபத்திற்கு எந்த வகையில் அவர் வேறு பல காரியங்களையும் செய்துவிடுகிறார். அதனால் அரிசியின் தரம் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. அரிசியின் தரத்தைப் பரிசோதனை செய்வதற்கு ஆந்திர மாநிலத்தில் பெரிய இன்ஸ்பெக்டர்களைப் போட்டிருக்கிறார்கள். ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் தரப் பரிசோதகர்களை நியமித்திருக்கிறார்கள். அது போல ரைஸ் மில்களிலிருந்து வெளிவருகிற தானியத்தின் தரத்தை அங்கங்கேயே பரிசோதனை செய்து, நல்ல தரமான அரிசிதானா என்பதை சர்ட்டிபை செய்து அனுப்புவதற்கு நாம் ஏற்பாடு செய்தால் அரிசியின் தரத்தைப்பற்றி எந்தவிதமான புகாருக்கும் இடம் இருக்காது.

இன்றையதினம் திருவாரூரில் மத்திய சர்க்காரின் உதவியுடன் அரிசி மில் ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அங்கே 100-க்கு 72 வீதம் அரிசி கொடுக்கப்படுகிறது. ஆனால் இங்கு தனியார் ரைஸ் மில்களில் 65 சதவிகிதம் கூட கிடைப்பதில்லை. பிளாக் மார்க்கெட்டிற்கு விவசாயிகளிடமிருந்து அரிசி போவதைவிட இப்படி இடையில் உள்ளவர்களிடமிருந்துதான் போகிறது. நாம்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 மார்ச் 25

வீணாக விவசாயிகளின்மேல் குற்றம் சாட்டிக்கொண்டிருக்கிறோம். நம்முடைய ராஜ்யத்தில் 7 ஆயிரம் ரைஸ் மில்கள் இருக்கிறதென்று சொன்னால், அவை எல்லாவற்றையும் சர்க்காரே குத்தகைக்கு எடுத்து விடலாம். அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்பது கூட இல்லை. அரைக்கின்ற நெல்லுக்குக் கூலி கொடுத்து விடலாம். அப்படியின்றி 10 ஆயிரம் மூட்டை நெல் அரைத்துக் கொடுப்பதற்கு 40 ஆயிரம் ரூபாய் அந்த ரைஸ் மில் சொந்தக்காரர் சம்பாதிக்கிற ஒரு நிலைமையை நாம் விட்டிருக்கிறோம். விவசாயிகளுக்கும் கட்டுபடியாகும் நிலையில் நாம் கொடுப்பதில்லை. வாங்கி உண்பவர்களுக்கும் அவர்களுடைய சக்திக்கேற்ற வகையில் வழி செய்யவில்லை. உற்பத்தி செய்கிறவனுக்கும் இல்லாமல், உண்பவனுக்கும் இல்லாமல் இடையில் உள்ளவர்கள் சாப்பிட்டுப் போகத்தான் நாம் அனுமதிக்கிறோம். ஆகவே, இன்றைக்கு நாட்டிலுள்ள மக்களின் சக்திக்கேற்ற வகையில் உணவுப் பொருள்களின் விலை நிர்ணயிக்கப்படுவது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலையை நாம் நிர்ணயிப்பது. எல்லாக் கட்சிகளிலும் விவசாயிகள் இருக்கிறார்கள் இப்பொழுது விவசாயம் ஓரளவு நடக்கிறது என்றால், வெளி மார்க்கெட்டில் கொஞ்சம் நியாயமான விலை கிடைக்கிறது என்கிற காரணத்தினால்தான். ஆனால் இன்றைக்கு கொள்முதலைத் தீவிரப் படுத்தி, வெளி மார்க்கெட்டிற்கு வருகிற நெல்லை எல்லாம் பிடித்துக் கொள்வதனால் விலை ஏறிக்கொண்டிருக்கிறது. வெளியில் கிடைப்பதில்லை. கொள்முதலுக்கு நெல் போட்டது போக, சாகுபடிச் செலவுக்கு வாரா வாரம் தேவைப்படுகின்ற பணத்திற்கு ஒரு விவசாயி தன்னிடமுள்ள கையிருப்பை வாரச் சந்தையில்தான் கொண்டுபோய் விற்றாக வேண்டிய நிலை இருக்கிறது. வாரச் சந்தையில் ஒரு மூட்டை, இரண்டு மூட்டை என்று விற்காமல் அவனால் குடும்ப நிர்வாகத்தையும் சாகுபடியையும் செய்ய முடியாது. ஆனால் இன்றையதினம் அவன் வெளியேவர முடியவில்லை. போலீசாரைக் கண்டு பயம், போலீசார் வேவும் போடுகிறவர்களைப் பார்த்து பயம், அதிகாரிகளைத் தாஜா பண்ணிக்கொண்டு நடமாட வேண்டிய சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கொள்முதல் செய்யத்தான் வேண்டும். ஆனால் இந்த முறையில் அல்ல. கொள்முதல் சீராக சிறப்பாக நடப்பதற்கு விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலையைக் கொடுத்தாக வேண்டும். இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது சர்ச்சில் அவர்கள் சொன்னார்கள்: லண்டன் மாநகரில் குண்டுகள் விழுந்துக் கொண்டிருந்தபொழுது "Give us the tools and we will finish the

போதுமான ஆயுதங்களைக் கொடுங்கள், நான் படையெடுப்பை முறியடிக்கிறேன் என்றார். அதுபோல இன்றைக்கு தமிழகத்திலுள்ள விவசாயப் பெருமக்களின் சார்பாகச் சொல்கிறேன். எங்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய விலையை, லாபகர விலையை நீங்கள் கொடுப்பதற்கு முன்வாருங்கள், உங்களுக்கு தேவைப்படுகிற நெல் அவ்வளவையும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.



1967 மார்ச் 25]

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** நியாயமான விலை என்ன என்பதைச் சொல்லுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நியாயமான விலை கட்டுபடியாகக் கூடிய விலை என்று சொன்னால் இப்போதுள்ள விலையைவிட இரண்டு மடங்கு கொடுப்பதுதான் நியாயமாக இருக்கும். மற்றப் பொருள்களின் விலைகள் எல்லாம் அவ்வளவு உயர்ந்துவிட்டன. சாகுபடி கூலி உயர்ந்துவிட்டது. இப்போதுள்ள விலையை விட ஒரு 25 சதவிகிதம் அல்லது 50 சதவிகிதமாவது உடனடியாக விலையைக் கூட்டிக் கொடுத்தால், உங்கள் கொள்முதல் திறம்பட நடைபெறும். முதலமைச்சர் அவர்கள் கூறியதைப் போல 'ஸ்டேட் டிரேடிங்' உணவு தானியத்தைப் பொறுத்தவரையில் முழு அளவுக்கு எடுத்துக்கொண்டு விடுங்கள். வெளி மார்க்கெட்டே வேண்டாம். விவசாயிகளுக்கு நீங்களே நியாயவிலை கொடுக்க முன்வந்தால், உற்பத்தி செய்யும் எல்லா தானியத்தையும் உங்களிடத்தில் கொடுத்து விடுவார்கள். வெளியில் தவறாகக் கூடச் சொன்னார்கள். நண்பர் கருத்திருமன் அவர்கள் 'ப்ரொக்யூர்மெண்டுக்கு எவ்வளவு நெல் கொடுக்க வேண்டுமோ அவ்வளவு நெல் கொடுத்துவிட்டால் ஜில்லாவிலுள்ள மற்றவர்கள் எல்லாம் கொடுத்து விடுவார்கள்' என்று சொன்னார்கள். ப்ரொக்யூர்மெண்டுக்கு நான் கொடுப்பதில்லை போல யாரும் நினைக்கவேண்டாம். என்னிடம் நன்செய் பூமி கிடையாது. கடந்த 45 வருடங்களாக நீங்கள் கணக்கெடுத்துப் பார்க்கலாம். களத்திலிருந்து நெல்லை வீட்டிற்கு கொண்டு போவதற்கு முன் ப்ரக்யூர்மெண்டுக்கு எவ்வளவு தானியம் கொடுக்கவேண்டுமோ அதை முதலில் அளந்து விட்டு மீதியை வீட்டிற்கு கொண்டுபோவேன். குறிப்பிடுகின்ற நெல்லை இவர் என்னடா அளந்துவிடுகிறார்கள் என்று மற்ற விவசாயிகளுக்குக் கூட என்னிடத்தில் கோபம் இருக்கும். ஆனால் ப்ரக்யூர்மெண்டுக்கு அளந்து விட்டுத்தான் என் சொந்த உபயோகத்திற்கு மீதியை எடுத்துக்கொள்வேன். இன்றைக்கு நாம் பாரபட்சம் இல்லாமல், ஒருவருக்கு லாபம் என்றால் எல்லோருக்கும் லாபம் வரும்படியாக, ஒருவருக்கு நஷ்டம் என்றால் எல்லோருக்கும் நஷ்டம் வரும்படியாக கட்சி வேறுபாடு இல்லாமல் செல்வ வேறுபாடு இல்லாமல், விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய நியாயமான விலையைக் கொடுத்து அவர்களுடைய தேவைக்குப் போக மிச்சமுள்ள உபரி தானியம் எல்லாவற்றையும் கொள்முதல் செய்வதற்கு முன்வந்தால் நம்முடைய கொள்முதல் திட்டமானது வெற்றிகரமாக நடக்கும் என்று சொல்லிக்கொண்டு நான் என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் பேரில் பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன எல்லாக் கருத்துக்களும்; ஒரு கருத்துத் தவறாமல் தீவிரமாகச் சிந்திப்பதற்கேற்ற கருத்துக்கள் என்பதில் எந்த விதமான ஐயப்பாடும் இல்லை. எனக்கு முன் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் "விவசாயிகளுக்கு கட்டு

படியாகக் கூடிய அளவுக்கு விலையைக் கொடுப்பார்களேயானால், இந்தக் கொள்முதலிலே எந்தவிதமான குந்தகமும் ஏற்படாது; நீங்கள் எதிர்பார்க்கின்ற அளவுக்குக் கிடைக்கும் என்று சொன்னார்கள். விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை என்ன என்பதைப் பற்றியும்; மற்ற விவசாயிகளிடத்தில் கலந்து பேசி அறிவிப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அறிவித்த பிறகு அதைப்பற்றி நிச்சயமாக யோசிக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

நானும் அவருமாகச் சேர்ந்து பத்துப் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னாலே கோபிச்செட்டிப்பாளையத்திலே ஒரு விவசாயிகள் மாநாட்டில் கலந்து கொண்டோம். அந்த மாநாட்டின் தீர்மானங்கள் என்னிடத்தில் இருக்கின்றன. அவர்கள் இப்போது அந்தத் தீர்மானங்களிலிருந்து வெகு தூரம் மாறி இருக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். ஒன்றை உடனடியாக ஒத்துக் கொள்கிறேன். விவசாயிகள் உற்சாகத்தை இழந்து விடுவார்களேயானால் அதற்குப் பிறகு நாட்டிலே எந்தவிதமான திட்டங்களைப் போட்டாலும் அவை நிறைவேறா என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. ஆனால் அந்த உற்சாகம் என்பது பணத்தின் மூலமாகத்தான் வரவேண்டுமா, நாட்டுப்பற்று மூலமாக வரக்கூடாதா என்பதுபற்றி மாண்புமிகு கருத்திருமன் அவர்கள்தான் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். விவசாயிகள் இன்றைய தினம் அதிகம் கேட்கிறார்கள் என்று சொல்லும்போது அதிகப் பணத்தைக் கேட்பதாக நான் கருதவில்லை. அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற செலவினங்கள் அதிகரித்துக்கொண்டு வருவதால் அவர்கள் அதிகப் பணம் கேட்கிறார்கள். இந்த இடத்திலேதான் நான் குறிப்பிட்டுச் சொல்வதை விவசாயப் பெருங்குடி மக்கள் சிறிது அக்கறையோடு கவனிக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

ஒன்றைத்தொடர்ந்து மற்றொன்று விலை ஏறிக் கொண்டிருப்பது ஒரு விஷச் சக்கரமாக நம்முடைய நாட்டிலே இருந்து கொண்டு வருகிறது. இதை எந்த இடத்திலே நாம் வெட்ட வேண்டும்? எந்த இடத்திலே வெட்டுவது என்று பார்க்கிறபோது, நம்முடைய நாட்டில் தொழில்துறை ஓரளவு வளர்ந்திருந்தாலும், பொருளாதார அடிப்படை இன்னமும் விவசாயத்திலேதான் அமைந்திருக்கிறது. ஆகையினால் உணவுப் பொருள் விஷயத்தில் நாம் கொஞ்சம் விலையைக் கட்டுப்படுத்திக் குறைப்போமானால் அதைத் தொடர்ந்து மற்ற விலைகள் குறையும். அந்த வகையில் பார்க்கும்போது இன்றையதினம் ஏர் விலையில் இருந்து எருதுகள் விலை வரை ஏறியிருக்கிறது. விவசாயக் கூலி ஏறியிருக்கிறது. இந்த நிலையில்தான் விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலை நிர்ணயிக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலை கொடுக்கவேண்டுமென்பதைப் பற்றி முன்னாலே இருந்த சர்க்கார் வெகு தீவிரமாக ஆலோசித்தார்கள். அந்தச் சர்க்காரும் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் கருத்திருமன் அவர்களுக்கு வேண்டிய சர்க்கார்தான். அவர்கள் அவ்வளவு அநியாய



மாகத் தீர்ப்பளித்திருப்பார்கள் என்று நான் கருதவில்லை. அது அநியாயமான தீர்ப்புதான் என்று அவர்கள் என்னிடத்தில் விளக்குவார்களேயானால் நான் மறுபரிசிலனை செய்வதில் எந்த விதமான தவறும் இல்லை.

இது அடிப்படையாக இருக்கின்ற பிரச்சினையாகும். நம் முன்னாலே இருக்கின்ற பிரச்சினை—கடந்த டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் இந்தக் கொள்முதல் விஷயத்தில் அப்போது இருந்த சர்க்கார் போதுமான அளவு தேவை இல்லையென்றோ, அல்லது வேறு ஏதாகிலும் கொள்கையிலே மாற்றம் செய்யலாமென்றோ; எந்தக் காரணத்தாலோ கொள்முதலைத் தீவிரப்படுத்தாமல் விட்டு விட்டார்கள். முன்னாலே இருந்தவர்கள் அவசர அவசரமாக வேறு பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டார்கள் என்று திரு. ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். அதிலே காட்டிய அக்கறையை இந்த விஷயத்திலே, மக்களுக்குத் தேவையான விஷயத்திலே முன்பு இருந்த சர்க்கார் காட்டியிருந்தால் நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற நேரத்தில் இருந்த நிலைமை இருந்திருக்க வேண்டியதில்லை. அந்த நிலைமையைப் பற்றி நீங்கள் யூகித்து அறிந்து கொள்ளலாம். ஆனால் மூன்று மாதங்களாக கொள்முதல் விஷயத்தில் எந்தவிதமான திட்டவட்டமான அறிவிப்பும் இல்லாமல் நெல் விளைந்திருந்த நேரத்தில், கொள்முதல் எளிதாகக் கிடைக்கின்ற நேரத்தில், அதை வாங்குகின்ற காரியங்களிலே முன்னாலே இருந்த சர்க்கார் தயக்கம் காட்டிவிட்டு விட்ட காரணத்தால், நாங்கள் வந்தபோது அந்தக் கொள்முதலைத் தீவிரப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதிலே பல உறுப்பினர்கள், அதிகாரிகள் தவறாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்று கூறினார்கள். எந்தெந்த இடத்தில் எந்தெந்த அதிகாரி தவறாக நடந்து கொண்டார் என்று என்னிடத்தில் மெய்ப்பிக்கலாம். அப்படித் தவறாக நடந்து கொண்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள இந்தச் சர்க்கார் தயங்காது என்பதை உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். நேற்று கூட திருச்சியில் போலீசார் தவறாக நடந்து கொண்டார்கள் என்று பத்திரிகையில் செய்தி வந்தது. போலீஸ் உயர்தர அதிகாரி அப்படிப் போலீசார் நடந்து கொள்ளவில்லை என்று மறுப்புக் கொடுத்திருக்கிறார்கள். வேறு யாராவது அப்படி நடந்து கொண்டார்களா என்று விசாரிக்கப்பட்டதில், வேறு இலாகாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கொஞ்சம் காரமாக நடந்து கொண்டார் என்ற அளவுக்குத் தகவல் கிடைத்து மேற்கொண்டு விசாரிக்கும்படி நாங்கள் செய்தி அனுப்பியிருக்கிறோம் என்று சொன்னேன்; உத்தரவு அனுப்பினோம் என்று சொல்லவில்லை. அதற்குக் காரணம் முறைப்படி எங்களிடத்தில் எந்தச் சட்டமன்ற உறுப்பினராவது கையொப்பமிட்டுக் கொடுப்பார்களேயானால் முறைப்படி விசாரிக்க வசதியாக இருக்கும். நம்முடைய திருவாரூர் அங்கத்தினர் சொன்னது போல் யாராவது அதிகாரிகள் மரியாதை மறந்து தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தினார்கள் என்றால், அப்படிப் பட்டவர்கள் உடனடியாகக் கண்டிக்கப்பட வேண்டியவர்கள்தான்.

அந்த அதிகாரியைப்பற்றிய முழு விவரத்தையும், யாரிடத்தில் எப்போது தவறாக நடந்து கொண்டார் என்று விவரமாக எழுதி எங்களிடத்தில் மனுக் கொடுத்தால் தக்க நடவடிக்கை எடுக்கப் படும் என்பதற்கு உறுதியளிக்க விரும்புகிறேன். நாங்கள் சமூக விரோத சக்திகள் வெளியிலே மட்டும் இருக்கிறார்கள் என்று கருத வில்லை, அதிகாரிகளுக்கு உள்ளாகக் கூட சிலர் இருக்கலாம். சமூக விரோதிகள் எங்கே இருந்தாலும் அவர்களைத் தயவு தாட்சண்யம் இல்லாமல் கண்டிப்பதிலே இந்தச் சபையில் அரசியல் கட்சி பாகு பாடு இல்லாமல் நாம் அனைவரும் ஒன்றுபட்டு சமூக விரோதச் சக்தியை அடக்கி ஆகவேண்டும்.

இந்தத் தொடர்பில் நண்பர் கருத்திருமன் அவர்கள் பதுக்கல் காரர்கள் விஷயத்தில் நாங்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளைப் பற்றி மனக் குறையோடு பேசினார்கள். ஒன்றை நான் இந்தச் சபையில் எடுத்துக் கூற விரும்புகிறேன். பதுக்கல் சமூக விரோத காரியம். பதுக்குகிறவர்கள் யாராக இருந்தாலும், உணவுப் பொருள்களைப் பதுக்குகிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை விட சமூகத்திற்கு ஆபத்தானவர்கள், கேட்டை உண்டாக்கக்கூடிய வர்கள் வேறு யாருமே இருக்க முடியாது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஒரு லாரியில் பதுக்கல் நெல் மூட்டைகள், அரிசி மூட்டைகள் ஏற்றிச் செல்லப்படுகின்றன என்றால், ஏற்றிச் செல்லப்படுவது அரிசி மூட்டைகள் மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான உயிர்கள் அதிலே ஏற்றிச் செல்லப்படுகின்றன, இலட்சக்கணக்கான பேரைப் பட்டினி போடுவதற்கான சதித் திட்டங்கள் அதிலே ஏற்றிச் செல்லப்படுகின்றன என்பதை நாம் அறிவோமானால், அப்படிப்பட்ட பதுக்கலை அடக்குவதற்கு நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிற முறை போதாது என்று என்னுடைய மதிப்பிற் குரிய கம்யூனிஸ்ட் மெம்பர்கள் சொல்வதை வரவேற்க வேண்டிய வனாகத்தான் இருக்கிறேன். அவர்களுக்கும் சொல்லிக் கொள் வேன்—இதை நாங்கள் ஆரம்பிக்கின்றபோதே எவ்வளவு புகார் கள் வருகின்றன என்பதை அவர்கள் எண்ணிப் பார்த்தால், ஆங்கிலத்திலே சொல்வார்களே "hasten slowly" என்று; அதைப் போல் 'வேகம் இருக்க வேண்டும்' அதே நேரத்திலே நிதானம் இருக்க வேண்டும்' என்று சொல்வார்கள். இந்தச் சர்க் காருடைய கொள்கை "hasten slowly" என்பதுதான். விரைவாகத்தான் செல்வோம், ஆனால் இடறி விழத்தக்க விரைவில் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய கருத்திருமன் அவர்கள் சொன்னதுபோல் பதுக்கல்காரர்களைக் கண்டு பிடிக்கும்போது அக்கிரமங்கள் நடக்குமானால், விவசாயிகள் தொல்லைக்கு ஆளாக்கப்படுவார்களேயானால், அவர்கள் அதைப் பற்றி என்னிடத்திலே அறிவிப்பது மட்டுமல்லாமல், கருத்திருமன் அவர்களே நேரடியாக விசாரணை செய்து அதைப் பற்றித் தெரி விப்பார்களானால், அத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுகின்றவர் களைப் பலமான முறையில் தண்டிக்க இந்தச் சர்க்கார் தயங்காது.

ஆகையினால், மூன்று விஷயங்களை நாம் இந்தச் சபையிலே ஒத்துக் கொண்டிருக்கிறோம். உணவு நிலைமை நெருக்கடியாக



இருக்கிறது என்பதை எல்லாக் கட்சிக்காரர்களும் ஒத்துக் கொண் டிருக்கிறோம். இதுவரை போதுமான அளவுக்குக் கொள்முதல் செய்யப்படவில்லை; போதுமான அளவுக்குக் கொள்முதல் செய் தால்தான் பொறுப்புகளை நிறைவேற்ற முடியும் என்பதையும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். பதுக்கல் இந்த நாட்டிலே இருக் கிறது என்பதையும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இந்த மூன்றை யும் ஏற்றுக் கொண்டான பிறகு பதுக்கலை அடக்குவதற்கான முறைகளில் குறைபாடுகள் இருக்குமானால் தாராளமாக சுட்டிக் காட்டவேண்டும்; குறைபாடுகள் நிச்சயம் நீக்கப்பட வேண்டும். கொள்முதலை வெற்றிகரமாக நடத்துவதற்கு ப்ரொக்யூர்மெண்டு நல்லதா; லெவி முறை நல்லதா என்பதைப்பற்றி நண்பர் கருத் திருமன் அவர்கள் இங்கே பேசினார்கள். இங்கே சொன்னது மட்டும் அல்ல, நானும் அவரும் கூட தனியாக அதுபற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். லெவி முறையை முதலில் கையாண்டு பார்த் ததில் அதில் பல குறைபாடுகள் ஏற்பட்ட காரணத்தினால் ப்ரொக் யூர்மெண்டு முறைக்கு வந்ததாக எனக்கு அறிவிக்கப்பட்டு இருக் கிறது. ஆனால் அதைப்பற்றியும் பரிசீலனை செய்து பார்க்கலாம். அந்த முறை, இந்த முறை என்பதாக பெயர் எப்படி இருந்தாலும் அது பெரிய பிரச்சினை அல்ல. நாம் சென்னை நகரம், கோவை நகரம் ஆகிய இடங்களில் ரேஷன் பொறுப்பை ஏற்றுக்கொண் டிருக்கிறோம். அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு அரிசி வேண்டும். மற்ற இடங்களுக்கு குடும்பக் கார்டு என்ற முறையில் அரிசி விநியோகம் செய்யவும் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பதால் அவற்றுக்கும் தேவையான அரிசி வேண்டும். இன்னும் குடும்பக் கார்டு என்ற முறையில் அரிசி விநியோகம் செய்வதை வேறு பல இடங்களுக்கும் விரிவான முறையில் ஏற்படுத்தியாக வேண்டும் என்று சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அதுவும் புறக் கணிக்கப்பட முடியாத கோரிக்கை.

இந்தப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான அரிசியை நாம் கொள்முதல் மூலமே பெற்றாக வேண்டும். சர்க்காரிடத்தில் பண்ணைகள் இல்லை. சர்க்கார் கொள்முதல் முழுவதையும் எடுத்துக்கொண்டு புட் க்ரெய்ன் சம்பந்தப்பட்ட வியாபாரத்தையே மேற்கொள்ளலாம் என்பது கொள்கை அளவில் ஒப்புக்கொள்ளப்பட்டதாயினும், அத்திட்டம் எண்ணிப் பார்ப் பதற்கே வசீகரமானது என்று கருதினாலும்—இன்றையதினம் நாம் உற்பத்தியில் 20 சதவிகிதம்தான் கொள்முதல் செய்கிறோம், இதற்கே மத்திய சர்க்காரிடம் இருந்து பணம் கேட்டு அவர்களும் அதை உரிய நேரத்தில் கொடுக்காத காரணத்தினால் ரிசர்வ் பாங்கில் இருந்து ஓவர் டிராப்ட் வாங்குகிறோம் என்கிற குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருக்கிறோம் என்பதை மன்ற அங்கத் தினர்கள் உணர்வார்கள். எல்லா நெல்லையும் நீங்கள் கொள்முதல் செய்து விடுங்கள் என்று நண்பர் கருத்திருமன் அவர்கள் சொல்லும் போது 'எல்லா நெல்லையும் கொள்முதல் செய்வதால் இவர்களிடம் எங்கே பணம் இருக்கிறது? இப்படிச் சொல்லி ஒரு மிரட்டு மிரட்டிப்

பார்ப்போம் என்கிற எண்ணத்தில் சொன்னார்கள் என்று நான் கருதவில்லை. உண்மை நிலை 20 சதவிகிதம் கொள்முதல் செய்வதற்கே சர்க்காரிடம் பணம் இல்லை என்பதுதான். சட்டியில் மாவு இருந்தால்தான் பணியாரம் கிடைக்கும். அவர்கள் கொடுத்த சட்டியை சுரண்டிச் சுரண்டி எடுத்தாலும் மாவு வரவில்லை. ஆகையால்தான் இன்று இந்தக் கொள்முதல் நூற்றுக்கு 20 சதவிகிதம் என்ற அளவில் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். நம்முடைய நடவடிக்கைகளின் மூலம் பதுக்கலைத் தடுப்பதில் எவ்விதப் பலனும் இல்லை என்று யாரும் கருதத் தேவை இல்லை. ஒரு சில இடங்களில் குறைபாடுகள் ஏற்பட்டிருக்கலாம். ஒருவர், இருவர் கூட உயர் நீதி மன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள், சட்டத்தின் துணையை நாடித் தடைசெய்வதற்கு. சட்டத்திற்குப் புறம்பாகப் போய் இந்தக் கொள்முதலை செய்யவேண்டுமென்று நான் விரும்பமாட்டேன். சட்ட மன்றத்திலே மாறுபட்ட கருத்து தெரிவிக்கப்பட்டது என்ற காரணத்தினாலே நாங்கள் செய்தது சட்ட விரோதமான காரியம் என்றும் எண்ணத் தேவையில்லை. சட்டத்திற்கு உட்பட்டு செய்கிற காரியத்தில் கூட சில அதிகாரிகள் அவசரமான முறையில் நடந்து இருக்கலாம். நண்பர் கருத்திருமன் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. சிலர் நிதானமாகப் பேசுகின்றார்கள். சிலர் அதிகமாகப் பேசுகின்றார்கள். விட்டுவிட்டுப் பேசுகின்றவர்கள்கூட இருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு பாணி இருக்கிறது. அதிகாரிகளில் கூட இந்தப் பாணி இருக்கலாம். "ஐயா, சமூகத்திற்குத் தேவையான காரியம் இது. உங்களிடம் இருக்கும் உபரி தானியத்தைக் கொடுப்பது நீர் சமூகத்திற்குச் செய்கிற சிறந்த தொண்டாகும்" என்று மனதில் படுகிற படி நயமாகச் சொல்லி கொள்முதல் செய்கிற அதிகாரியும் இருக்கலாம். இத்தகையவர்கள்தாம் உண்மையான அதிகாரிகள்—தங்கள் கடமைகளை பொறுப்புணர்ச்சியுடன் ஆற்றக் கூடியவர்கள். அதே நேரம் விட்டு வாசற்படியிலேயே நின்று கொண்டு "யார் ஐயா, மாணிக்கம் செட்டியாரா, வெளியில் வா" என்று சொல்லக் கூடிய அதிகாரியும் இருக்கலாம். அப்படிப்பட்ட அதிகாரிகளை நீங்கள் என்னிடம் சுட்டிக் காட்டினால் முதலில் நானே தனிப்பட்ட முறையில் அவர்களுக்கு மரியாதை என்ன என்பதைக் கற்றுக்கொடுக்கிறேன். அதற்குப் பிறகு சட்டப்படி செய்யவேண்டியதையும் செய்யலாம். நண்பர் விநயகம் அவர்கள் குறிப்பிடுவது போல வாரண்டு இல்லாமல் போய் எடுத்தார்கள் என்று சொல்லலாம். அது கோர்ட்டுக்குப் போய் இருக்கிற விவகாரம். நண்பர் விநாயகம் சட்டமன்ற உறுப்பினர் மட்டும் அல்ல, வழக்கறிஞர். இந்தச் சட்டத்தின்படி நீங்கள் தவறு செய்தீர்கள் என்று வாதாடினால், அந்தச் சட்டத்தின்படி அது நியாயம் என்று சொல்வார்கள். அது அவர்களுக்கே உரிய பிரத்தியேக சாமர்த்தியம். கோர்ட்டில் உள்ள வழக்கு முடிந்த பிறகு அதைப் பார்க்கலாம்.

சட்டத்திற்கு உட்பட்டு கொள்முதல் செய்கிறபோது ஒன்றிரண்டு இடங்களில் இப்படி நடந்தது என்று நண்பர் சொன்னபோது நான் வருத்தப்பட்டேன். அதைக் கவனித்து கண்டிப்பாக



நடவடிக்கை எடுப்பேன். ஆனால் கொள்முதல் செய்வதில் நாம் தீவிரமாகக் கவனம் செலுத்தத்தான் வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்த அளவுக்கு சென்ற வருடங்களில் இதே நாளில் நம்மிடம் கையிருப்பு இருந்ததோ அந்த அளவுக்கு இன்று இல்லை. அதுதான் மறைக்க முடியாத உண்மை, வேதனை தருகின்ற உண்மையும் ஆகும். சாப்பிட்டு வெற்றிலை போட்டுக் கொண்டு வெளியே வரும்போதுதான் நமக்கு வெளியில் உள்ளவர்களுடன் பேசவே தோன்றுகிறது. "என்ன ஐயா எப்போது பிள்ளைக்குக் கல்யாணம்? தேதி வைக்கவில்லையா" என்பதாக விசாரிக்கவே ஆரம்பிக்கிறோம். பசி எடுக்கிறபோது வருகிறவர்கள் கூடக் கண்ணில் தெரியாது. சோறு எங்கே என்றுதான் கேட்பார்கள். இந்தச் சர்க்கார் இன்று பசியோடு இருக்கிறார்கள். முதலில் அந்தப் பசி அடங்கியவுடன் நண்பர் கருத்திருமன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல விவசாயிகள் மகாநாடு. வர்த்தகர்கள் மகாநாடு எல்லாவற்றையும் கூட்டி இதுபற்றி நன்கு ஆலோசிப்போம். எல்லோரும் உட்கார்ந்து பேசலாம். விவசாய மக்களிடம் பரிவு காட்டாதவர்கள் எந்தக் கட்சியிலும், யாரும் இல்லை. ஆனால் இன்றையதினம் கொள்முதலை வெற்றிகரமாக நடத்த வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறேன். அது நியாயம் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். யாரும் கொள்முதல் கூடாது என்று சொல்லவில்லை. முறைத் தவறு கூடாது. கண்டிப்பு கூடாது. வியாபாரிகளும். விவசாயிகளும் இழிவாக நடத்தப்படக் கூடாது என்கிறார்கள். இந்த நியாயத்தை நானும் ஒத்துக்கொள்கிறேன். இவைகள் எல்லாம் அதைச் செயல்படுத்துகிற முறையில் இடையே ஏற்பட்டுவிடுகிற குறைகளே தவிர—கொள்முதல் திட்டத்தில் இருக்கிற குறைபாடு அல்ல. சரியான முறையில் நாம் காரியங்களைச் செய்துகொண்டு போனால் வருகிற அறுவடை நோக்கில் நாம் எதிர்பார்ப்பதையும்விட மிக அளவு உணவுப் பொருள்கள் மிகுதியாக இருக்கும் என்று கணக்குக் காட்டப்படுகிறது.

எ.டி.டி. 27-ஐப் பற்றியும் சொன்னார்கள். நண்பர் கருத்திருமன் அவர்கள், அதை என்னமோ என்று எண்ணிவிடாதீர்கள், சிலவிடங்களில் அந்த விதைகளின் மகசூல் குறைவாகவே இருக்கிறது என்று சொன்னார்கள். ஏ.டி.டி. 27-ஐப் புகுத்தியபோதே எனக்கு அந்தச் சந்தேகம் இருந்தது. ஏ.டி.டி. 27-க்கு கொடுத்து, அந்தப் பகுதிக்கு அதிகமான உரத்தையும் கொடுக்கிறபோது அங்கே அதிக அளவு விளைகிறது என்றாலும், அந்த அளவுக்கு மற்ற இடங்களில் உரம் கிடைத்தபோது விளைவு குறையத்தானே செய்யும். ஓரிடத்தில் அதிகம், ஓரிடத்தில் குறைவு என்கிறபோது இரண்டும் மொத்தத்தில் சமமாகத்தான் இருக்கும் என்று சொன்னேன். அதுபற்றிய சந்தேகங்கள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. எ.டி.டி. 27-க்கு ரசாயன உரங்கள் அதிகம் தேவைப்படுகிறது. மற்ற விதைகளுக்கு பசுந்தாள் உரம் அதிகம் தேவைப்படுகிறது. அது

நாம் இந்த இரண்டு வகை உரங்களையும் அலட்சியம் செய்வதற்கில்லை. இந்த இரண்டு வகை உரங்களிலும் கவனம் செலுத்தி நல்ல முறையில் சாகுபடி வேலைகள் நடைபெறுவதற்கு உதவியாக இருந்தால் நான்கைந்து வருடங்களிலேயே உணவுத்துறையில் இந்தியாவில் உள்ள மற்றப் பகுதியினர் இந்த உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்னாலேயே நாம் தீர்த்து விட முடியும் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அந்த அளவுக்கு கருத்தோடு உழைக்கின்ற விவசாயிகள் நம்மிடம் இருக்கிறார்கள். அவர்கள் பேரில் இனியும் குறை சொல்லிக்கொண்டிருப்பது மோசமான காரியமாகும். புதிய முறையை இன்று கற்றுக் கொடுத்தால் நாளையே அதைக் கையாண்டு செயலாற்றுவார்கள். அந்த அளவுக்குத் திறமை இருக்கிறது.

நெல் விலை கட்டுபடியாகவில்லை என்பதற்காக அவர்கள் கரும்புக்குப் போய்விடுவார்கள், பருத்திக்குப் போய்விடுவார்கள், புகையிலைக்குப் போய்விடுவார்கள் என்று நண்பர் சொன்னபோது நான் வருத்தப்படவில்லை. பயப்பட்டேன். நீங்களே இப்படிச் சொல்வது—தெரியாதவர்களைப் பார்த்து, "நெல் பயிரிடாதீர்கள். லாபம் இல்லை. கரும்பு போடுங்கள், பருத்தி போடுங்கள், புகையிலை போடுங்கள், லாபம் அதிகம் வரும்" என்று தூண்டுவதுபோல இருக்கிறது. அந்த எண்ணத்தோடு அவர்கள் சொன்னார்கள் என்று சொல்லவில்லை. அவர்கள் எனக்கு எச்சரிக்கையாகச் சொன்னார்கள். ஆனால் அது வெளியில் தவறானதாகத் தோன்றும். யார் என்ன சொன்னாலும் விவசாயிகளுக்கு உண்மை தெரியும். அவர்கள் கரும்புக்குப் போய்விடுவார்கள், பருத்திக்குப் போய்விடுவார்கள் என்று நாம் எண்ணிவிடக் கூடாது, அப்படியே போகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். இன்றைக்கு கரும்பு பயிரிடுபவர்கள் குறைவு. அதனால் லாபம் வருகிறது. நாளை எல்லோரும் கரும்பு பயிரிட்டார்கள் என்றால் கரும்பு விலை விழுந்துவிடுகிறது. சப்ளை அண்டு டிமாண்டு நியாயம் தானே இது. எல்லோரும் கரும்புக்கு போனார்கள் என்றால், பருத்திக்குப் போனார்கள் என்றால் அவற்றின் விலை விழுந்து, நெல்லில் கிடைக்கிற லாபம் கூட இல்லாது போய்விடுகிறது. ஆக, நிலம் என்று இருந்தால் அதைப் பயிரிடத்தான் வேண்டும். நிலம் கரம்பாகக் கிடந்தால் ஒரு விவசாயி கண்ணீர் விடுவானே தவிர—மாற்றி மாற்றி எதையாவது பயிரிடத்தான் செய்வான்.

சில மிராசுதார்கள் விட்டு விடலாம். விவசாயக் கூலிகளிடத்தில் போடுகிற சண்டையை எண்ணிக் கொண்டு இந்தத் தடவை ஐம்பது ஏக்கர் அப்படியே காயப்போட்டு விட்டேன், முப்பது வேலியை அப்படியே உலரப் போட்டு விட்டேன் என்று சொல்லலாம். அப்படி உலரப் போட்டு விடுவதால் விவசாயி வயிறு மட்டுமல்ல, அந்த நிலத்தின் சொந்தக்கார் கூட அப்படி ஒன்றிரண்டு ஆண்டுகள் உலரப் போடலாம். அதற்குப் பிறகு அவர் மார்பில் போடுகிற சந்தனம்கூட உலரலாம்—மறுபடியும் அவர் நிலத்திற்கு வருவார். கரும்பிற்கு மாறி விடுவார்கள், பருத்திக்கு மாறிவிடுவார்கள் என்று



சொல்வது மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் அது பயம் காட்டுவது போல் இருக்குமே தவிர அங்கு போனால் இக்கரைக்கு அக்கரைப் பச்சை என்பதுபோல் திரும்ப நிலத்திற்கு வருவார்கள் என்பது மற்றவர்களுக்கும் தெரியும். மதுராந்தகத்தில் சர்க்கரை ஆலை ஒன்று ஆரம்பித்தார்கள். அப்போது எங்கள் ஊரிலுள்ள நெல் பயிரிடுகிற விவசாயிகள் கரும்பு போட்டால் லாபம் இருக்கும், போனஸ் இருக்கும் என்று கரும்பு சாகுபடிக்கு மாற்றினார்கள். அந்த வருடம் கொண்டு போய் கொடுத்தார்கள், ஒழுங்காக போனஸ் வந்தது. அடுத்த ஆண்டு அந்த ஆலையில் இருந்த நெருக்கடி காரணமாக போனஸ் கடன் என்று சொன்னார்கள், பணம் இல்லை. பின்னர் அவர்கள் கரும்பு வேண்டாம் என்று திரும்பவும் நெல் சாகுபடிக்கு வந்து விட்டார்கள். நம் நாட்டு விவசாயிகள் நல்ல யூகசாலிகள். கரும்பு சாகுபடிக்கு போய்விடுவார்கள் என்று சொன்னால் அதற்கு கொஞ்சமாவது பலன் கிடைக்காதா என்று பார்க்கிறார்கள். ஆகவே, அது மிகப் பெரிய பிரச்சினை அல்ல. கரும்பு அல்லது பருத்தி அல்லது புகையிலை இவற்றிற்காக நிலம் போய்விட்டிருந்தாலும் புதிதாக வருகிற நிலத்தின் எண்ணிக்கையும் இருக்கிறது. நிகரத்தில் பார்த்தால் நிலத்தின் அளவும் குறையவில்லை, உற்பத்தியாகிற தன்மையும் குறையவில்லை.

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு நல்ல பொறுக்கு விதைகள், தரமான எரு இவை காலாகாலத்தில் விவசாயிகளிடம் சேருவதில் கவனம் செலுத்தவேண்டும். இதைத்தான் நாங்கள் செய்துகொண்டிருந்தோம். இதைச் செய்ய நீங்கள் வரவேண்டுமா என்று கொஞ்சம் பொறுப்புள்ள காங்கிரஸ்காரர்கள் கேட்கமாட்டார்கள். இதைச் செய்யத்தான் நாங்கள் வந்திருக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். வரக்கூடாதா? நாங்களேதான் செய்வோம் என்று சொல்வது? இராம நாடகத்தில்தான் அது வரும். "கார் உள்ளளவும், கடல் நீர் உள்ளளவும் இந்தா விபூஷணா இலங்கா ராஜ்யம் " என்று இராம நாடகத்தில்தான் பாடலாமே தவிர "நாங்கள் உள்ள வரையிலும், இந்த நாடு உள்ள வரையிலும் இந்த முறைதான், இதைச் செய்ய நாங்கள் இல்லையா?" என்று சொல்வது சரியல்ல. இவ்வளவு ஆண்டுகளில் உங்களுக்கு சலித்திருக்க வேண்டுமே, பத்து நாட்களில் எனக்கே சலிப்பாக இருக்கிறது. எப்படித்தான் சலிக்காமல் ஒரு இருபது ஆண்டுகள் இருந்தீர்கள் என்பதுதான் எனக்குள்ள ஆச்சரியமே தவிர நாங்கள் செய்ததைச் செய்ய நீங்கள் வரவேண்டுமா என்று பொறுப்புள்ள காங்கிரஸ் உறுப்பினர்கள் யாரும் சொல்ல மாட்டார்கள். கொஞ்சம் ஐந்து ஆண்டு காலம் இருந்தால் நமக்கெல்லாம் கூட இடம் கிடைத்திருக்காதா என்ற ஆசை உள்ளவர்கள் வேண்டுமானால் அப்படிக் கூறலாமே தவிர பொறுப்புள்ள, நாட்டுப்பற்றுள்ள காங்கிரஸ்காரர்கள் நாங்கள் செய்ததைத்தான் இவர்கள் செய்கிறார்கள் என்றால் அதில் பெருமைப்பட வேண்டும். இதற்காகத்தான் நீங்களா என்று சொல்வது கொஞ்சம் குத்திவிட்டால் நாங்கள் வேறு செய்கிறோம் என்று சொல்வோம் என்று எண்ணக் கூடாது.

ஜூன், ஜூலை மாதத்தில் வர இருக்கிற பட்ஜெட் வரை இப்போது நாங்கள் செய்து கொண்டிருக்கிற காரியம் நீங்கள் செய்து விட்டுப் போனதை முடித்து வைக்கிற காரியம். அதில்கூட டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்கிற காரியத்தைக் கூட என்றால் செய்ய முடியாது. எல்லாம் வல்லவர்க்குள்ளே போய்விட்டது என்று சொல்கிறார்கள். என் மனதில் சரி என்று படுவதை தொடர்ந்து செய்ய எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் எங்கள் திட்டங்கள், கொள்கைகள் இவைபற்றியெல்லாம் சொல்கிறபோது—நண்பர் அவர்கள் பேசினார்கள், அவர்கள் இப்போது இங்கில்லை, சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டு போவோம் என்ற திருப்தியோடு போயிருப்பார்கள் என்று கருதுகிறேன். சம்பளமே வாங்கவே மாட்டேன் என்று சொன்னீர்களே என்று சொன்னார்கள். விலையைக் குறைக்கிற வரையில் சம்பளம் வாங்கமாட்டோம் என்று சொன்னதை படித்துக் காட்டினார்கள். வாதத்திற்காக, வேடிக்கைக்காக அவர்கள் பேசுவதற்கு பதில் சொல்லலாம் என்றால், நாங்கள் வந்த பதினைந்து நாட்களில் அரிசி விலை குறைந்தது, ஆகவே சம்பளம் வாங்க லாயக்குள்ளவர்கள் நாங்கள். மேலும் ஏறிவிட்டது என்றால் அதை அடக்கவேண்டும். நாங்கள் வந்தவுடன் விலை குறைந்தது என்பதை எடுத்துக்கொண்டு பார்த்தால், விலை குறைந்தது சம்பளம் வாங்குவேன் என்று கூடச் சொல்லலாம். இப்படிப்பட்ட வேடிக்கைப் பேச்சுக்களில் நாம் கவனம் செலுத்தக்கூடாது. அன்றையதினம் கூட நான் சொன்னது போல், நாங்கள் சம்பளமே இல்லாமல் வேலை செய்கிறோம் என்றால் “நீங்கள் எப்போதும் வாங்குகிற 250 ரூபாய் சம்பளம் வாங்குகிறீர்களோ என்று மக்கள் உங்களைத் தப்பாக நினைப்பார்களே! ஆகவே 100 ரூபாயாக குறைத்துக் கொள்ளுங்களேன்” என்று கேட்டனே தவிர 100 ரூபாயாகக் குறைத்தால்தான் எங்கள் திட்டம் என்று இரண்டையும் இணைத்துச் சொல்லவில்லை. அதைப்பற்றி பேசுவதற்கு மேடைகள் இருக்கின்றன. ஆறு மணி முதல் எட்டு மணி வரை இதைவிட வேகமாகப் பேசலாம். சம்பளம் வாங்குகிற அண்ணாதுரை ஒழிக என்று சொல்லலாம். இங்கு வந்து அதைச் சொல்லிக்கொண்டிருக்கலாமா என்பதுதான் வேடிக்கையாகப் பட்டது. நான் வெளியிட்டிருப்பது எங்களுடைய லட்சியத்தின் அளவு. விலைகள் குறைக்கப்படவேண்டும், விலையைக் குறைக்காமல் ஒரு சர்க்கார் அல்லது அதை நடத்துகிறவர்கள் சம்பளம் வாங்குவதில் பொருள் இல்லை என்பதை விளக்குவதற்காகத்தான் சொல்லப்பட்டதே தவிர ஒரு தேதி போட்டு இந்தத் தேதியிலிருந்து என்று அர்த்தம் அல்ல. ஒருவருக்கொருவர் பேசிக் கொள்கிறபோது, வெளியே போகிறபோது, இந்தக் காரியத்தை வியாழக்கிழமைக்குள் செய்து முடிக்காவிட்டால் ஒரு பக்கத்து மீசையை எடுத்து விடுகிறேன் என்று சொல்லிவிடுகிறோம். கனம் உறுப்பினர் விநாயகம் அவர்களைப் போன்றவர்களுக்கு அந்தக் கவலையில்லை. திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்குக் கூட அந்தக் கவலையில்லை. எனக்கும், திரு. கருத்திருமனுக்கும்தான்



என்ன கதியாவது; வியாழக்கிழமை வந்து விட்டதே, எடு ஒரு பக்கத்து மீசையை என்று கேட்பது? நாங்கள் எடுத்துச் சொல்வது, இந்தச் சர்க்காருடைய மூலாதாரமான நோக்கம் விலைகளைக் குறைப்பது. அப்படி விலைகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளாமல் சம்பளம் வாங்கமாட்டோம் என்றால் இப்போது நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறோம்.

எந்தவிதத்தில் விலை குறையும்? ஒன்று, உற்பத்தி பெருக வேண்டும். இன்னொன்று, உற்பத்தியாகியிருப்பது சீரான முறையில் பங்கிட்டுத் தரப்படவேண்டும். மூன்றாவதாக, பதுக்கல் இருக்கக் கூடாது. இந்த மூன்று முறைகளால் விலை குறையும். உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டம் என்பது நீண்ட காலத் திட்டம். பதுக்கலை அடக்குவது என்பதில் அதை உடனடியாகச் செய்யவேண்டும். பதுக்கலை அடக்குவது மட்டும்போதாது, பகிர்ந்தளிப்பதிலும் ஒரு முறை இருக்க வேண்டுமென்பதால் உணவு இலாகாவை நாங்கள் திருத்தியமைத்திருக்கிறோம். சென்னை நகரை எடுத்துக்கொண்டால் சென்னை நகரம் முழுவதற்கும் ஒரே அதிகாரி இருந்து பார்த்தால் வேலையில் சிறிது தாமதம் ஏற்படுகிறது என்று இரண்டாகப் பிரித்து இருக்கிறோம். உணவு அமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார்கள் வடக்கு சென்னை, தெற்கு சென்னை என்று பிரிப்போம் என்று. பழைய வடக்கு, தெற்கு என்று கருதாதீர்கள். இது புது வடக்கு, தெற்கு வடக்கு, தெற்கு என்று பிரித்து இதி லிருந்து இதுவரை ஒரு அதிகாரி பார்த்துக் கொள்ளவேண்டும் என்று பிரித்து வைத்திருக்கிறோம். அடுத்தபடியாகப் பகிர்ந்தளிப்பது ஒழுங்குபடுத்துகிற காரியம். அடுத்தபடியாக, உற்பத்தியைப் பெருக்குவது. அதை இப்போது துவக்கினால் அடுத்த அறுவடைக்குத் தான் அதன் பலன் தெரியும். ஆகவே விலையைக் குறைக்காமல் சம்பளம் வாங்குகிறீர்களே என்ற நண்பர்கள் அதற்காக வருத்தப்படவேண்டாம். விலையைக் குறைப்பதற்குள்ள மூன்று திட்டங்களில் முதல் திட்டமான பதுக்கலை ஒடுக்கிற திட்டத்தை இந்த அரசு ஆரம்பித்துவிட்டது. அதில் தீவிரமான நடவடிக்கைகளும் மேற்கொண்டிருக்கிறது. அதில் கொஞ்சம் முறை தவறிப் போகக் கூடாது என்று சொல்லத்தக்க அளவிற்கு நடவடிக்கைகள் இருக்கின்றனவே தவிர பதுக்கலை கண்டு பிடியுங்கள் என்று உத்தரவு இட்டு பதினைந்து நாட்கள் ஆன பிறகும் ஒரு மூட்டை கூட பதுக்கல் இல்லை என்று சொல்லத் தக்க நிலை இருக்கிறதா என்றால் இல்லை. பேசிய அங்கத்தினர்களுக்கெல்லாம் தெரியும், பதுக்கல் இருக்கிறது என்பது. எங்குபோய் விட்டிருக்கமுடியும் விளைந்தது? ‘மறைவாய் புதைத்த ஓடு மறைந்தமாயம் என்னவோ’ என்று திருநீலகண்டர் புராணத்தில் வருவது போன்று இதை மண்ணில் போட்டு புதைத்து வைக்கமுடியாது. எங்கேயோ இருக்கிறது. சில திரு. கருத்திருமனுக்குத் தெரிந்திருக்கலாம், சில எனக்குத் தெரிந்திருக்கலாம், சில திரு. விநாயகத்திற்கு தெரிந்திருக்கலாம். “பயப்படாதே கோர்ட்டுக்கு நான் வருகிறேன்” என்று கூடச் சொல்லலாம். ஆக, எங்கேயோ இருக்கத்தான் செய்கிறது. அதைக் கண்டறிந்து எடுப்பது விலைக் குறைப்பு காரியத்தில் மிக முக்கியமான கட்டம்,

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 மார்ச் 25

ஆக, பதுக்கலைக் கண்டு பிடிக்க ஈடுபட்டுள்ளதால், நீங்களே பார்த்து சம்பளம் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லவேண்டுமே தவிர இன்னும் ஒரு மாதச் சம்பளம் கூட வாங்குவதற்கு முன்னால் சம்பளம் வாங்காதே என்றால், அப்படி சம்பளம் வாங்காமல் இருந்தால் என்ன நடக்கும் என்று கருதுகிறீர்கள்? நான் இன்னும் கூட சொல்ல முடியும். எங்களுக்கு சர்க்கார் சம்பளம் வேண்டாம், பொதுமக்களே, நீங்கள்தான் சம்பளம் தர வேண்டும் என்று கேட்டு வாங்கும் சக்தி எனக்கு இருக்கிறது. (ஆரவாரம்) குத்திவிட்டு விட்டால் என்ன என்று கருதாதீர்கள், சர்க்கார் சம்பளம் வாங்கப் போவதில்லை, என் செலவிற்கு பணம் கொடுங்கள் என்று கேட்டால் பொது மக்கள் இந்த ஆட்சிக்கும், இந்த ஆட்சிக்கு மட்டும் அல்ல நியாயமாக நடக்கிற யாருக்கும் பணம் தர தயாராக இருக்கிறார்கள். ஆகையால் சம்பளம் விஷயத்தைப் பற்றி பேசிவிட்டோம், அதில் ஒரு பெரிய சாமர்த்தியம் வந்து விட்டது என்று மட்டும் கருத வேண்டாம். இன்றும் இப்போதும் சொல்கிறேன், பதுக்கலை அடக்குகிறோம், பகிர்ந்தளிப்பதில் ஒழுங்குமுறையை ஏற்படுத்துகிறோம். அதற்குப் பிறகு உற்பத்திப் பெருக்கத்திற்கான வழி முறைகளைக் காண்கிறோம். இதில் நிச்சயமாக விலை குறையும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. இந்த மூன்றையும் நான் செய்து பார்த்து விலை குறையவில்லை என்றால், நிச்சயமாக அப்போது நான் உங்களிடத்திலேயும், மக்களிடத்திலேயும் 'நாங்கள் செய்யக் கூடியதைச் செய்தாகி விட்டது; விலை குறையக் காணோம்; விலையைக் குறைக்கக் கூடியவர்கள் யாராவது இருப்பார்களானால் அவர்களை அழைத்துக் கொண்டு வாருங்கள். சந்தன, தாம்பூலம் கொடுத்து அழைத்து வரவேண்டும் என்றால், சந்தனக் கிண்ணத்தை என் கையில் கொடுங்கள், நான் கொடுத்து அழைத்து வருகிறேன்' என்று சொல்லுவேனே தவிர. இந்தஇடத்தில் உட்கார்ந்து விட்டதைப் பற்றி, திரும்பத் திரும்பப் பார்த்து இதை விட்டு விடலாமா என்ற எண்ணம் எனக்கு இருக்காது. அந்த விஷயத்தை விட்டுவிட்டு, நண்பர்களெல்லாம் சொன்னது போல, உற்பத்தி பெருக என்னென்ன வழிகள்? விவசாயிக்குக் கட்டுபடியாகக் கூடியது எந்த விலை? பதுக்கலைத் தடுப்பதில் குற்றம் குறைகள் இல்லாது எப்படிப் பார்த்துக்கொள்ளுவது?—இவற்றிற்கு மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த விவாதத்திற்கு பதிலளிக்கும்போது, நான் முன்னால் சொன்னதையே மறுபடியும் சொல்ல ஆசைப்படுகிறேன். கன்சல்ட்டேட்டிவ் கமிட்டி அமைக்கும் பணியை இரண்டொரு நாளில் நான் மேற்கொள்ள இருக்கிறேன். அதிலே எல்லாக் கட்சி உறுப்பினர்களும், கட்சியில்லாத சுயேச்சை உறுப்பினர்களாக இருந்தால் விவசாயத்தில் அக்கறை உள்ளவர்கள், இந்த கன்சல்ட்டேட்டிவ் கமிட்டியில் இடம் பெறவேண்டும். மொத்தத்தில் 20-25 பேர்களுக்குள் இந்த கன்சல்ட்டேட்டிவ் கமிட்டி அமையுமானால் இன்னும் சிறப்பாக இருக்கும்; பிரச்சினைகளை ஆராய்ந்து புள்ளி விவரங்களைத் துணைக்கு பக்கத்தில் வைத்துக்கொண்டு பிரச்சினை



1967 மார்ச் 25] [திரு. சி. என். அண்ணாத்துரை]

களைத் தீர்க்க முடியும். அந்த கன்சல்ட்டேட்டிவ் கமிட்டியை அமைக்கிறேன் என்பதுதான் இந்த விவாதத்திற்கு நான் சொல்லக் கூடிய பதில் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கட்டுபடியாகக் கூடிய அளவில் விவசாயிக்கு உடனடியாக விலையைக் கொடு, கொடு என்றால், கிட்டத்தட்ட ஏழு கோடி ரூபாய் துண்டுவிழும் பட்ஜெட்டைக் கொடுத்துவிட்டு, விவசாயிக்குப் பணத்தைக் கொடு, கொடு என்று சொல்லும் அளவுக்கு மதிப்பிற்குரிய நண்பர் கருத்திருமன் அவர்களுக்குக் கல் மனம் இல்லை என்று கருதுகிறேன். அந்த விஷயத்தைப் பின்னால் யோசிக்கலாம். கன்சல்டேட்டிவ் கமிட்டி அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த விவாதத்தில் எடுத்துச் சொல்லிய எல்லாவற்றுக்கும் பதில் அளிக்கவில்லை என்றால், அவைகளையெல்லாம் விட்டு விட்டேன் என்பதல்ல; அவைகளை உரிய காலத்தில் தக்க விதத்தில் கவனிக்கிறேன் என்று வாக்களித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

### 4. 1966–67-ம் ஆண்டில் மேற்கண்ட செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** இப்போது 1-00 மணிக்கு எடுக்க வேண்டிய வாக்கெடுப்பை 1-15 மணிக்கு எடுக்க அவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன்.

ஏறத்தாழ 40 மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. எல்லாவற்றையும் ஒருங்கே சேர்த்து வாக்களிப்பது என்பதற்கு இந்த சட்டப் பேரவை விதிகளில் இடம் இல்லை. ஆனால் வெட்டுத் தீர்மானங்களே இல்லாத மான்யங்களை, ஒரே தீர்மானமாக, இன்ன துறைக்கு இவ்வளவு தொகை என்று ஒவ்வொரு மானியமாகக் குறிப்பிட்டு ஒரே வாக்களிப்பில் நிறைவேற்ற விதிகளில் இடம் இருக்கிறது. அதன்படி இன்று வாக்களிப்பு நடைபெறும் என்று பேரவையின் அனுமதியுடன் அறிவிக்கிறேன்.

முதலில், ஒன்று முதல் 13 வரையில் இலக்கமிட்ட மானியக் கோரிக்கைகளுக்கு வெட்டுத் தீர்மானங்கள் இல்லாத காரணத்தினால் மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் இந்த இந்தத் துறைக்கு இந்த இந்தத் தொகைகளை வழங்கவேண்டுமென்ற தீர்மானத்தை இப்போது கொண்டு வருவார்கள்.

#### A. ரெவின்யூக் கணக்கில் செலவு

கோரிக்கை எண் I—நிலவரித் துறை.

கோரிக்கை எண் II—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம்.

கோரிக்கை எண் III—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம்.

[1967 மார்ச் 25

கோரிக்கை எண் V— பத்திரப்பதிவுத் துறை.

கோரிக்கை எண் VII - தேர்தல்கள்.

கோரிக்கை எண் VIII —மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

கோரிக்கை எண் IX—மாவட்ட நிர்வாகமும். பல்வகையும்.

கோரிக்கை X— நீதி நிர்வாகம்.

கோரிக்கை எண் XI— சிறைச்சாலைகள்.

கோரிக்கை எண் XII— போலீஸ்.

கோரிக்கை எண் XIII —கல்வி.

**மதிப்பிற்குரிய திரு சி. என். அண்ணாதுரை:** அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட கோரிக்கைகளை அவை முன் வைக்கிறேன் :—

"கோரிக்கை எண் I— நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 17,57,100-க்கு மேற்படாத தொகையையும் ;

கோரிக்கை எண் II — மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,00,900-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் III— பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 21,24,600-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் V— பத்திரப் பதிவுத் துறை என்ற தலைப் பின்கீழ் ரூ. 1,52,000-க்கு மேற்படாத தொகையையும் ;

கோரிக்கை எண் VII -தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 23,26,100-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் VIII — மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 17,56,700-க்கு மேற்படாத தொகையையும் ;

கோரிக்கை எண் IX—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 41,84,200-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் X— நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 19,57,700-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 17,62,600-க்கு மேற்படாத தொகையையும் ;

கோரிக்கை என் XII— போலீஸ் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,40,68,600-க்கு மேற்படாத தொகையையும் ;



1967 மார்ச் 25]

கோரிக்கை எண் XIII— கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 500-க்கு மேற்படாத தொகையையும் ;

அரசிற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகைகள் வழங்கப்பட்டன.

**கோரிக்கை எண் XIV—மருத்துவம்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட கோரிக்கையை அவைமுன் வைக்கிறேன் :—

கோரிக்கை எண் XIV—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,30,600-க்கு மேற்படாத தொகையை அரசிற்கு வழங்க வேண்டும்."

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தைக் கொண்டுவர விரும்பவில்லை என்று கருதுகிறேன். எனவே மதிப்பிற்குரிய முதலமைச்சரின் முழு முதல் தீர்மானத்தை அவையின் முடிவுக்கு விடுகிறேன்.

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** இப்போது கோரிக்கை 15 முதல், கோரிக்கை 18 வரையில் உள்ள தீர்மானங்களை மாண்பு மிக்க முதலமைச்சர் அவர்கள் கொண்டுவருவார்கள்.

கோரிக்கை எண் XV— வேளாண்மை.

கோரிக்கை எண் XVI—வேளாண்மை.

கோரிக்கை எண் XVII—மீனளம்.

கோரிக்கை எண் XVIII— கால்நடை வளர்ப்பு.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட கோரிக்கைகளை அவைமுன் வைக்கிறேன் :—

"கோரிக்கை எண் XV— பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 400-க்கு மேற்படாத தொகையையும் ;

கோரிக்கை எண் XVI—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,20,58,100-க்கு மேற்படாத தொகையையும் ;

கோரிக்கை எண் XVII—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 33,60,300-க்கு மேற்படாத தொகையையும் ;

கோரிக்கை எண் XVIII— கால் நடை வளர்ப்பு எறை தலைப்பின் கீழ் ரூ. 3,71,100-க்கு மேற்படாத தொகையையும்;
அரசிற்கு வழங்க வேண்டும்."

**கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகைகள் வழங்கப்பட்டன.**

**கோரிக்கை எண் XIX—கூட்டுறவு.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட கோரிக்கையை அவைமுன் வைக்கிறேன் :—

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 400-க்கு மேற்படாத தொகையை அரசிற்கு வழங்க வேண்டும்."

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** இதற்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ள உறுப்பினர் திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் அந்தத் தீர்மானத்தை அவைமுன் கொண்டுவர விரும்பவில்லை என்று கருதுகிறேன். ஆகவே, இப்போது முழு முதல் தீர்மானத்தை அவையின் முடிவுக்கு விடுகிறேன்.

**கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப்பட்டது.**

**கோரிக்கை எண் XX—தொழில்கள்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட கோரிக்கையை அவைமுன் வைக்கிறேன் :—

"கோரிக்கை எண் XX—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 12,32,600-க்கு, மேற்படாத தொகையை அரசிற்கு வழங்க வேண்டும்."

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** இதற்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ள திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் அந்தத் தீர்மானத்தை அவைமுன் கொண்டுவர விரும்பவில்லை என்று கருதுகிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** அவைத்தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் மின்சார விஸ்தரிப்புத் திட்டத்திற்கு முதலிடம் கொடுக்கும் அவசியம் குறித்து விவாதிக்க, கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை அவைமுன் வைக்கிறேன் :—

"கோரிக்கை எண் XX—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் வழங்கப்படுகிற ரூ. 12,32,600-ல் ஒரு ரூபாய் குறைக்கவேண்டும்."

வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

**கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப்பட்டது.**





**கோரிக்கை எண் XXI—சின்கோனா.**

கோரிக்கை எண் XXIII—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

கோரிக்கை எண் XXIV—தொழிற்சாலைகளும் தொழிலாளர் நலனும்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட கோரிக்கைகளை அவைமுன் வைக்கிறேன் :—

"கோரிக்கை எண் XXI—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,63,700-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XXIII—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ், ரூ. 400-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XXIV—தொழிற்சாலைகளும் தொழிலாளர் நலனும் என்ற தலைப்பின்கீழ், ரூ. 400-க்கு மேற்படாத தொகையையும் அரசிற்கு வழங்கவேண்டும்."

**கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகைகள் வழங்கப்பட்டன.**

**கோரிக்கை எண் XXV—ஆதிவாசிகள், ஹரிஜனங்கள், ஏனைய பின் தங்கிய வகுப்பினர் நலன்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட கோரிக்கையை அவைமுன் வைக்கிறேன் :—

"கோரிக்கை எண் XXV—ஆதிவாசிகள், ஹரிஜனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ், ரூ. 61,64,100-க்கு மேற்படாத தொகையை அரசிற்கு வழங்க வேண்டும்."

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** இந்தத் தீர்மானத்திற்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ள உறுப்பினர் திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் வெட்டுத் தீர்மானத்தைக் கொண்டுவரவில்லை என்று கருதுகிறேன்.

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் XXVI—பாசனம்.**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட கோரிக்கையை அவைமுன் வைக்கிறேன் :—

"கோரிக்கை எண் XXVI--பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 61,91,800-க்கு மேற்படாத தொகையை அரசிற்கு வழங்க வேண்டும்."

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** இந்தத் தீர்மானத்திற்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ள திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்கள் அவற்றை அவைமுன் கொண்டுவரவில்லை என்று கருதுகிறேன். உறுப்பினர் திரு. ஆ. கு. சுப்பையா அவர்களும் தம்முடைய வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டுவரவில்லை என்று கருதுகிறேன்.

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் XXVII—பொதுப்பணிகள்—பணிகள்.

கோரிக்கை எண் XXVIII—பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும்.

கோரிக்கை எண் XXIX—பொதுப் பணிகள்—உதவி மானியங்கள்.

கோரிக்கை எண் XXX—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள்.

கோரிக்கை எண் XXXI--பல்வகை.

கோரிக்கை எண் XXXIII –பலவகை.

கோரிக்கை எண் XXXIV —எழுதுபொருள்—அச்சுத்துறை.

கோரிக்கை எண் XXXV—காட்டுவளத் துறை.

கோரிக்கை எண் XXXVI—ஏனைய இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட கோரிக்கையை அவைமுன் வைக்கிறேன்:—

"கோரிக்கை எண் XXVII—பொதுப் பணிகள்—பணிகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 47,53,400-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XXVIII- பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 16,75,500-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XXIX—பொதுப்பணிகள்—உதவி மானியங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 24,94,700-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XXX—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 72,65,000-க்கு மேற்படாத தொகையையும்;



கோரிக்கை எண் XXXI—பஞ்சத் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,07,34,200-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XXXIII—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,000-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XXXIV—எழுதுபொருள்–அச்சுத்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 26,17,100-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XXXV—காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,39,400-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை எண் XXXVI—ஏனைய இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,15,13,700-க்கு மேற்படாத தொகையையும்;

அரசிற்கு வழங்கவேண்டும்."

கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகைகள் வழங்கப்பட்டன.

**3. ரெவின்யூக் கணக்கிற்கு புறம்பான மூலதனச் செலவு.**

**கோரிக்கை எண் XXXVIII—பொதுச் சுகாதார மூலதனச் செலவு**

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட கோரிக்கையை அவைமுன் வைக்கிறேன்:—

"கோரிக்கை எண் —பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,97,400-க்கு மேற்படாத தொகையை அரசிற்கு வழங்க வேண்டும்."

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** இந்தத் தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தை உறுப்பினர் திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் கொண்டு வரவில்லை என்று கருதுகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் எழுந்திருந்தார்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்:** விவாதம் கிடையாது.

**திரு. ஆ. கு. சுப்பையா:** நான் விவாதிக்கவில்லை. கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தைப் பிரேரேபணை செய்கிறேன்.

"தஞ்சை மாவட்டம், கோட்டூர் தொகுதியைச் சேர்ந்த கூத்தாநல்லூர் லெட்சுமாங்குடி நகரத்திற்கு குடி தண்ணீர்த் திட்டத்தை துரிதமாக நிறைவேற்ற வேண்டியதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XXXVIII—பொது சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் வழங்கப்பட இருக்கிற ரூ. 2,97,400-ல் ஒரு ரூபாய் குறைக்க வேண்டும்."

வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

[1967 மார்ச் 25

**திரு. ஆ. கு. சுப்பையா :** கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தைப் பிரேரேபிக்கிறேன். "நெல்லை மாவட்டத்தில் கோவில்பட்டி நகரத்திற்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தைத் துரிதப்படுத்துவது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை என் XXXVIII பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் வழங்கப்பட இருக்கிற ரூ. 2,97,400-ல் ஒரு ரூபாய் குறைக்க வேண்டும்."

வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தைப் பிரேரேபிக்கிறேன். "கிராமப்புறங்களில், குடிதண்ணீர்த் திட்டத்தை அமல்படுத்துவது குறித்து விவாதிக்க—

"கோரிக்கை என் XXXVIII—மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் வழங்கப்பட இருக்கிற ரூ. 297,400-ல் ஒரு ரூபாய் குறைக்க வேண்டும்."

வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத்தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை என் XLI—தொழில்கள் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு.

கோரிக்கை என் XLII—பாசன மூலதனச் செலவு.

கோரிக்கை என் XLIII—பொதுப் பணிகள் மூலதனச் செலவுகள்.

கோரிக்கை என் XLVI—ஓய்வூதியங்களை மொத்தமாக்குதல்.

கோரிக்கை என் XLVII—அரசாங்க வாணிக திட்டங்களுக்கான மூலதனச் செலவு.

**C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.**

கோரிக்கை என் XLVIII—மாநில அரசாங்கம் வழங்கும் கடன்களும், முன்பணங்களும்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட கோரிக்கைகளை அவைமுன் வைக்கிறேன் :—

"கோரிக்கை என் XLI—தொழில்கள் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,000-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை என் XLII—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 400-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை என் XLIII—பொதுப் பணிகள் மூலதனச் செலவுகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 14,40,000-க்கு மேற்படாத தொகையையும்;



1967 மார்ச் 25] [திரு. சி. என். அண்ணாதுரை]

கோரிக்கை என் XLVI—ஓய்வூதியங்களை மொத்தமாக்குதல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,02,600-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை என் XLVII—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,55,82,900-க்கு மேற்படாத தொகையையும்;

கோரிக்கை என் XLVIII—மாநில அரசாங்கம் வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 600-க்கு மேற்படாத தொகையையும்;
அரசிற்கு வழங்கவேண்டும்."

**கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகைகள் வழங்கப்பட்டன.**

## 5. அறிவிப்புகள்.

### (அ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்கு மசோதா.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் :** தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்கு மசோதாவை இந்த அவைக்குக் கொண்டு வருவதற்கும் அதன் மீது விவாதிப்பதற்கும், மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் தமது இணக்கத்தை தெரிவித்திருக்கிறார்கள் என்பதை அறிவிக்கிறேன்.

அதையொட்டி, இப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை, இந்த அவைக்குக் கொண்டுவர அனுமதி கோருவார்கள்.

## 1. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

### (இ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை முன்னுரைக்க அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, நான் இம்மசோதாவை முன்னுரைக்கிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் :** இம்மசோதா முன்னுரைக்கப்படுகிறது.

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (இ) பேரவை அலுவல் ஆய்வுக் குழுவின் தீர்மானங்கள்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் :** இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தில், ஒரு மனதாக நிறைவேறிய தீர்மானத்திற்கு இணங்க, இம்மன்றத்தின் அலுவல்கள் 27-3-1967 முதல் 30-3-1967 வரை இப்போது நான் அறிவிக்கின்ற நிகழ்ச்சி வரிசையின்படி நடைபெறும்.

1967 மார்ச் 25]

27-3-1967 திங்கட்கிழமை.

1. இரண்டு மசோதாக்கள் மீது விவாதமும், அவைகளை நிறைவேற்றுதலும்.

(அ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதா. (சட்டப் பேரவை மசோதா எண் 1/1967).

(இ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 4/1967).

2. கவர்னர் பேருரை மீது விவாதம் தொடர்ந்து நடைபெறும்.

28-3-1967 செவ்வாய்க்கிழமை.

1. இரண்டு மசோதாக்கள் மீது விவாதமும், அவைகளை நிறைவேற்றுதலும்—

(அ) 1967-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 2/1967).

(இ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவை (தகுதியின்மைகள் நீக்கல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 3/1967).

2. கவர்னர் பேருரை மீது விவாதம் தொடர்ந்து நடைபெறும்.

29-3-1967 புதன்கிழமை.

கவர்னர் பேருரை மீது விவாதம்—தொடர்ச்சி.

30-3-1967 வியாழக்கிழமை.

கவர்னர் பேருரை மீது விவாதம்—கடைசி நாள்.

இந்த நிகழ்ச்சி நிரல் அச்சிடப்பட்டு உறுப்பினர்கள் எல்லோருக்கும் அனுப்பி வைக்கப்படும்.

இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைகின்றன. இந்தப் பேரவையின் கூட்டம் அடுத்து 27-3-1967 திங்கட்கிழமை அன்று காலை 9 மணிக்கு மீண்டும் நடைபெறும்.

பி. ப. 1-34 பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

6. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

112. Notification issued with G.O. Ms. No. 4898, Industries, Labour and Housing (Industries), dated the 21st December 1966 relaxing certain rules of the Madras Molasses Control and Regulation Rules, 1958, in favour of A.V.R. and Company, Madras, for molasses import and export out of India, published with the Home Department Notification S.R.O. No. A-6743 of 1958, dated the 4th October 1958, at pages 450–456 of the Rules Supplement to the Part I of the *Fort St. George Gazette*, dated the 15th October 1958. [Laid on the Table of the House under section 54(3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937).

B. Report Notification and other Papers.

*Nil.*

29/11/79 24.11.78
29.4.80

## LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

Messrs ACCOUNT TEST INSTITUTE, Egmore, Madras-8.
THE CITY BOOK Co., Mylapore, Madras-4.
Messrs. HIGGINBOTHAMS, PRIVATE, LIMITED, Madras-2.
Messrs NEW CENTURY BOOK HOUSE (PRIVATE) LIMITED, Madras-2.
Messrs. P. VARADACHARI & Co., Madras-1.
Messrs. C. SUBBIAH CHETTY & SONS, Madras-5.
Sri S. S. SRINIVASARAGHAVAN, Royapettah, Madras-14.
THE EDUCATIONAL AGENCIES, BOOK-SELLERS, Madras-1.
THE UNIVERSAL BOOK HOUSE, MOORE MARKET, Madras-3.
Messrs. RUKMANI CORPORATION, Vepery, Madras-7.
Messrs. MOHAN PATHIPAGAM AND BOOK DEPOT, Madras-5.
Messrs. BOOK CORNER, BOOK-SELLERS, No, 2/4. Mount Road, Madras-2.

### IN MOFUSSIL OF MADRAS STATE.

Sri E. M. GOPALAKRISHNA KONE, Madurai, Madurai district.
THE ORIENTAL BOOK HOUSE, Madurai.
Messrs. VIVEKANANDA PRESS, PRINTERS, PUBLISHERS AND BOOK-SELLERS, Madurai.
Sri A. VENKATASUBBAN, Vellore, North Arcot district.
Messrs. BHARATHA MATHA BOOK DEPOT, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. NATHAN & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. APPAR BOOK STALL, Thanjavur.
Messrs. P. N. SWAMINATHASIVAM & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. KRISHNASWAMY & Co., Tiruchirappalli.
Messrs. PALANIAPPA BROTHERS, Tiruchirappalli.
Sri S. R. SUBRAMANIA PILLAI, Tirunelveli, Tirunelveli district.
Messrs. NELLAI PUTHAGA NILAYAM, BOOK-SELLERS, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B. ARULDOSS, Villupuram Town, South Arcot district.
Sri V. B. GANESAN, Villupuram, South Arcot district.
Messrs. VASANTHAM STORES, BOOK-SELLERS, Cross Cut Road, Coimbatore.
Messrs. MERCURY BOOK COMPANY, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. JAGANNATHAN, BOOK-SELLER AND PUBLISHER, Nagercoil, Kanyakumari district.
Messrs. A. K. CHANDRIAH CHETTIAR & SONS, Salem.
Messrs. MEENAKSHI PATHIPAGAM, Pudukkottai.
Messrs. K. V. NARAYANA IYER & SONS, Dindigul, Madurai district.
Messrs. BALAJI BOOK HOUSE, Vellore, North Arcot district.
Messrs. JAYAKUMARI STORES, Nagercoil, Kanyakumari district.
Messrs. BABY STORES, BOOK-SELLERS, Villupuram, South Arco tdistrict.
Messrs. DINAMANI STORES, Coimbatore-18.
Messrs. BHARATHI PUTHAGA NILAYAM, PUBLISHERS AND BOOK-SELLERS, 1-B, Town Hall Road, Madurai-1.

### IN OTHER STATES.

Messrs. JANATHA AGENCIES, BOOK-SELLERS. Gudur.
Messrs. JAIN BOOK AGENCY, New Delhi-1.
Messrs. INTERNATIONAL BOOK HOUSE, Trivandrum.
Messrs. FIRMA K. L. MUKHOPADHYAY, Calcutta-12.
Messrs. BOOK LINKS CORPORATION, Narayanaguda, Hyderabad-29.
Messrs. THE BOOKS SYNDICATE, Hyderabad-1.
Messrs. LABOUR LAW PUBLICATIONS, Hyderabad.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS ON THE AUTHORITY OF THE SPEAKER OF THE LEGISLATIVE ASSEMBLY.

R. R. No. 313/67 ASO (R)
1018

வெளியீடு—20—10—1967]
Issued—20—10—1967]

தமிழகச் சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, 1967 மார்ச் 27

**Monday, 27th March 1967**

தொகுதி I—எண் 8

**Volume I—No. 8**

©
தமிழக அரசு
1967
©
GOVERNMENT OF MADRAS
1967

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.
*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை, 50 காசுகள்]
Price, 50 Paise]

237
21

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1 கவன ஈர்ப்பு—கோவை பஞ்சாலைகளில் கதவடைப்பு .. | 577–579 |
| 2 அறிவிப்புகள்— | |
| (அ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல் .. .. .. | 579–580 |
| (இ) பொதுக் கணக்கு ஆய்வுக் குழுவிற்கான தேர்தல் .. | 580 |
| (உ) கவர்னர் பேருரைக்கான நன்றி அறிவிப்புத் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் .. .. .. .. | 581 |
| 3 ஒழுங்குப் பிரச்சினைகள்— | |
| (அ) சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடக்கும்பொழுது முக்கியமான கொள்கைகள்பற்றி அமைச்சர்கள் வெளியில் அறிக்கைகள் விடுத்தல் .. .. | 581–584 |
| (இ) கவர்னரைப்பற்றி விவாதத்தில் குறிப்பிடுதல் .. | 596–597 |
| 4 முதல் அமைச்சரின் அறிக்கை—சட்ட அதிகாரிகள் நியமனம். | 585 |
| 5 அரசினர் தீர்மானம்—சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களைச் சேர்த்தல் .. .. .. | 585 |
| 6 அரசினர் மசோதாக்கள்— | |
| (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) மசோதா, 1967 (சட்டப்பேரவை மசோதா 1/1967) .. .. .. .. .. | 586–590 |
| (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்க மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா 4/1967) .. .. .. .. .. | 590 |
| 7 கவர்னர் பேருரையின்மீது விவாதம் .. .. .. | 590–596 |
| | 597–661 |
| 8 பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. | 661–662 |

247

# தமிழகச் சட்டப் பேரவை

திங்கட்கிழமை, மார்ச் 27, 1967.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் திரு. சி. ப. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் நட்சத்திரக் குறி * இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்** : முதல் அலுவல் "கேள்விகள் பதில்கள்". மாண்புமிகு அமைச்சர்கள் பதில் கூறுவதற்குக் கேள்விகள் இன்றைக்கு இல்லை. நாளைக்கு இருக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

### 1. கவன ஈர்ப்பு—கோவை பஞ்சாலைகளில் கதவடைப்பு.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்** : அடுத்து, சட்டமன்றப் பேரவை 41-வது விதிக்கிணங்க அவசரப் பொது முக்கியமான காரியம் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் ஹெச். வி. ஹாண்டே அவர்களும், திரு. சு. துரைசாமி அவர்களும் மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே** : சபாநாயகர் அவர்களே, சட்டசபை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்கண்ட விஷயத்தை மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன் :—

"தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும், குறிப்பாகக் கோவை மாவட்டத்திலும், பஞ்சாலைகள் மூடிக்கிடக்கின்ற நிலை காரணமாக சுமார் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதால், அவைகளை உடனடியாகத் திறப்பது பற்றியும் அதன் மூலம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது பற்றியும்."

**திரு. சு. துரைசாமி** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, "தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும், குறிப்பாகக் கோவை மாவட்டத்திலும், பஞ்சாலைகள் மூடிக் கிடக்கின்ற நிலை காரணமாக சுமார் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதால், அவைகளை உடனடியாகத் திறப்பது பற்றியும் அதன் மூலம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது பற்றியும்" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

* THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN: Mr. Speaker, I wish to make the following statement:—

Since the middle of last year, the textile industry in the State has been passing through a difficult time on account of the following factors:—

(i) Accumulation of cloth and yarn due to the unprecedented glut in the market;

(ii) Non-availability of cotton at reasonable prices;

(iii) Financial difficulties arising out of credit squeeze;

(iv) Unprecedented and prolonged power cut in the State for a greater part of last year.

This state of affairs affected the working of a number of mills, particularly the financially weak and uneconomic units. The ways and means position of these mills became very difficult and they found it hard even to pay the wages of the workers. When the mills complained of this position, the Government in Septembe 1965 ordered the postponement of collection of electricity charges from them, by a month. But as the situation worsened, more than a dozen mills, most of them in the Coimbatore district were closed down. Naturally, the closure of these mills caused anxiety to the Government. Though this was an industry-wise malaise, and the State Government could not take up any responsibility for opening these mills or taking them over, the Government are trying to hel the industry and the workers and are taking all possible steps i this direction. A series of discussions with the representatives o the mill-owners and the trade unions were held at ministerial leve and this was followed up by the Commissioner of Labour who als held discussions with the management and the labour of variou mills. These problems were also reviewed at the meeting of th State Labour Advisory Board. As a result of these efforts, mos of the mills which had been under closure due to labour difficultie or temporary financial difficulties reopened. In respect of othe mills which had serious financial difficulties, the Governmen constituted an *ad hoc* technical committee consisting of the Directo of Handlooms, Madras and the representatives of South Indi Textile Research Association and Southern India Millowner Association to make a close study of the technical and financi position of the mills. The Committee went into the affairs of fiv mills and submitted its report. Based on the recommendations c the Committee, the Government have offered to extend guarante assistance to the tune of Rs. 25.85 lakhs to Messrs. Cambodi Mills, Janardhana Mills Limited and the Githanjali Mills, Limite The mills are negotiating the terms and conditions of the loans wit their bankers. The Committee has not recommended an assistance to Sri Palamalai Ranganathar Mills and Kaleswar Mills Limited, as their liabilities are twice as much as their asset



The Southern India Millowners' Association have also represented that as a measure of relief to the managements of the mills, they may be permitted to pay in instalments commencing from the middle of 1968, the dues towards Employees' Provident Fund, Employees' State Insurance, Electricity dues, etc. I propose to discuss these requests with the representatives of the Southern India Millowners' Association and the officials concerned on 31st March 1967. A conference with the representatives of the trade unions and the managements of the textile industry is also to be held on 3rd April 1967 to discuss the situation.

Thus, it will be seen that all practicable steps have been and are being taken by the Government to mitigate the hardships of the labour affected by the closure of the mills.

## 2. அறிவிப்புகள்.

### (அ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: 1967-68-வது ஆண்டுக்குரிய மதிப்பீட்டுக் குழுவிற்கு (எஸ்டிமேட்ஸ் கமிட்டி) இப்பேரவையின் பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு பதினான்கு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பட்டுள்ளனர். அவர்களின் பெயர்களாவன:—

(1) திரு. எம். சுரேந்திரன்
(2) திரு. செ. பாலசுப்பிரமணியன்
(3) டாக்டர் எச். வி. ஹாண்டே
(4) திரு. ஆ. கு. சுப்பையா
(5) திரு. ஏ. சிதம்பரநாத நாடார்
(6) திரு. எஸ். ராமலிங்கம்
(7) திரு. கே. விநாயகம்
(8) திரு. எஸ். ராமச்சந்திரன்
(9) திரு. மு. வேதாசலம்
(10) திரு. சி. வி. எம். அண்ணாமலை
(11) திரு. எஸ். முத்துலிங்கம்
(12) திரு. வி. மலைக்கண்ணன்
(13) திரு. மு. சின்னசாமி
(14) திரு. மு.ச. சிவசாமி

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1967–68-வது ஆண்டு மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டதாக நான் அறிவிக்கிறேன்.

அவர்களோடு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், பொதுக் கணக்குக் குழுவின் (பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி) தலைவர் அவர்களும் அவர்களுடைய அலுவல் காரணமாக (எக்ஸ்-அஃபி ஷியோ) இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

**மேலும், சட்டப் பேரவையின் 165-வது விதிக்கிணங்க திரு. எஸ்.** ராமச்சந்திரன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக் **கிறேன்.**

(இ) பொதுக் கணக்கு ஆய்வுக் குழுவிற்கான தேர்தல்

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: 1967-68-வது ஆண்டுக்குரிய பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு (பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி) இச் சட்டப் பேரவையின் பதினைந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு பதினைந்து உறுப்பினர்கள் முறைப் படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர் களாவன :—

(1) திரு. எம். பூபதி
(2) திரு. பி. ஜி. கருத்திருமன்
(3) திரு. ஆர். பொன்னப்ப நாடார்
(4) திரு. பி. எம். முனுசாமி கௌண்டர்
(5) திரு. பி. எஸ். மணியன்
(6) திரு. மா. பா. சாரதி
(7) திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்
(8) திரு. எம். சி. பாலன்
(9) திரு. பெ. மலைச்சாமி
(10) திரு. சி. கிருஷ்ணமூர்த்தி
(11) திரு. பெ. சௌந்தரபாண்டியன்
(12) டாக்டர் ஹபிபுல்லா பெய்க்
(13) திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்
(14) திரு. பி. கே. மூக்கையா தேவர்

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந் தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1967-68-வது ஆண்டு பொதுக் கணக்கு ஆய்வுக் குழு விற்கு இவர்கள் முறைப்படித் தேர்தெடுக்கப்பட்டுவிட்டதாக நான் அறிவிக்கிறேன். அவர்களோடு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர் களும், மதிப்பீட்டுக் குழுவின் (எஸ்டிமேட்ஸ் கமிட்டி தலைவர்) திரு. எஸ். ராமச்சந்திரன் அவர்களும், அவர்களுடைய அலுவல் காரணமாக (எக்ஸ் அஃபிஷியோ) இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

மேலும், இச் சட்டப் பேரவையின் 174-வது விதிக்கிணங்க திரு. பி. ஜி. கருத்திருமன் அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.



(உ) கவர்னர் பேருரைக்கான நன்றி அறிவிப்புத் தீர்மானத்திற்குத் திருத்தங்கள்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** கவர்னர் அவர்களின் பேரு ரைக்கான நன்றி அறிவிப்புத் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் கொடுத்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் அத் திருத்தங்களை, நாளை 28—3—1967, செவ்வாய்க்கிழமை விவாதம் தொடங்கு வதற்கு முன்பு முன்மொழியலாம் என்று நான் அறிவிக்கிறேன்.

இச் சட்டமன்றப் பேரவையின் 82-வது விதிக்கிணங்க, ஒரு முக்கியமான காரியத்தைக் குறித்து, அறிக்கை ஒன்றை இப் பேரவையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் வெளியிடுவதற்கு நான் அனுமதி அளித்திருக்கிறேன். அதன்படி அவ்வறிக்கையை இப்போது அவர்கள் வெளியிடுவார்கள்.

3. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடக்கும்பொழுது முக்கிய மான கொள்கைகள்பற்றி அமைச்சர்கள் வெளியில் அறிக்கைகள் விடுத்தல்.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir, with your permission I wish to raise a point of order. Whenever this House is in session of sitting, important statements affecting the general policy of this Government or the administration of this State will have to be generally made by the Hon. Chief Minister as well as his colleagues on the floor of this House which amounts to taking this House into their confidence. We have been sitting here from the 15th of this month and we are going to sit till the end of this month. But I find that the Hon. Ministers are going about the State, making statements at their will and pleasure which affect our administration as well as policies. That is not the usual practice and that is derogatory to the well-established traditional practices and precedents which we have the honour of establishing in this House. For instance, statements have been made by the Hon. Ministers. I am not sure which Hon. Minister has made the statement regarding the release of the prisoners imprisoned in connection with the Anti-Hindi agitation. Hon. Ministers could have been kind enough to make a statement on the floor of this House, that they were going to grant a general amnesty and that all prisoners convicted during that agitation would be released. The second statement related to the prohibition policy. I believe when the Hon. Chief Minister had paid a visit to Ootacamund, he seemed to have stated that he was going to reconsider—I do not say that he is going to scrap prohibition—the Prohibition policy. Another statement made by the Hon. Minister for Food Sri Mathialagan, related to the procurement of paddy. He could have made that statement on the floor of this House, a day before it appeared in the Press that the procurement policy was going to be intensified. Then again, after that statement I saw another Press note issued

by the Hon. Minister for Food stating that after the target of 8-lakh tonnes of paddy was Procured, procurement woud be stopped. That statement could have been made on the floor of this House. Another important statement was made I believe by the Hon. Minister for Co-operation. He said . . .

THIRU RAMA ARANGANAL : Sir, on a point of order.

THIRU K. VINAYAKAM : Sir, I have not finished my speech and I am not going to yield.

He said that a High Power Commission consisting of men who have experience in the co-operative movement, would soon be appointed. That statement could have been made on the floor of this House. Yet another statement made by the Hon. Minister for Education was that a Commission consisting of experts, professors and politicians who had some experience would be constituted to go into the reorganisation of the present educational system.

The appointment of the Advocate-General is also a thorny problem and I anticipate that the Hon. Chief Minister is going to make a statement about it on the floor of this House. Then, yesterday the Hon. Minister for Transport had made a statement that he was considering the possibility of reducing the bus fares in the City of Madras. All these statements could have been made here and not on a public platform. If was all right when they were not in power and when they used the meetings in the evening to ventilate their grievances or make charges against the then Ministry. Now, they are in power and they must have taken this House into their confidence and made all those statements here. But they have not done so. I am sorry, Mr. Speaker, that this should not be the practice. ** **

Sir, evidently they do not have any confidence in this House. That is why they make statements outside the floor of this House. Now, the point of order is, how is it that the Ministry should make statements outside the House, when the House is sitting?

THE HON. THIRU C. N. ANNADURAI : Mr. Speaker, Sir, I am really thankful to the hon. Member for reminding us of certain conventions to be followed, but we never lack confidence in the House. If only my hon. Friend had stated the exact dates of those statements, I would prove to him that no statement was made outside the House, before the House itself was taken into confidence. What he means by statements is, certain views expressed in the public meetings. But are these to be construed as statements? My hon. Friend has asked, 'Have you not got confidence in this House ?' I would repeat the question, 'Have you not got confidence in us?" As a friend, he could have told us that

**Expunged as ordered by the Chair,



whenever we issue such statements, those statements should first be made in this House instead of making a dramatic gesture in this way.

As regards the statement alleged to have been made by me about Prohibition, since it could affect the mental make-up of the public itself, I want to present a clarification. In a public meeting or at a public reception at Ootacamund, I was presented with various memoranda and one such memorandum was about prohibition, to be exact, about repealing Prohibition. While replying to the various Memoranda, I said that the Government could not take any policy decision at the moment of receiving a memorandum. I said in a lighter vein at that public meeting, 'Here is a memorandum for lifting prohibition. If the Government are to be stable in their views, they cannot come to a decision immediately on receiving a memorandum. Now, I have received a memorandum that prohibition should be lifted. Suppose I go to Coonoor and there another memorandum may be presented asking the Government to reintroduce Prohibition and I pass orders on that. Then I go to Mettupalayam where another memorandum may be presented that the prohibition should be lifted. If the Government are to act upon every memorandum presented, they could not be a Government'. Unfortunately the Press did not put it in such a cogent manner and did not state that I made those observations in a lighter vein. They stated that I would consider the lifting of prohibition after taking the public into confidence. I am very sorry that the Press should have done so, leaving out the rest of my speech. Possibly, some of the people in the Press are also interested in lifting prohibition and therefore, they stated that I stated that I would consult the public before prohibition was lifted So, my hon. Friend need not think that we lack confidence in the House. We have got implicit confidence and faith in this House. My hon. Friend now says that we do not give respect to this House. It is far from our thought and we have got the greatest respect for this House and for every individual Member of this House, especially for Members like Sri Vinayakam who is so sensitive to all these things. Therefore, I would only repeat that hereafter we will see to it that no statement as statement will be made. But as public men we have to air certain views. My hon. Friend ought to distinguish between the views, conditional statements and statements. If we make a definite statement outside this House that we are going to lift this thing or that thing from the 28th of this month, then perhaps we will be making a statement without taking this House into confidence. But he should expect any public speaker to stick eventually to some of his thoughts in as civilised a manner as possible. Therefore, it is far from our thought to disregard this House. We have the greatest respect for this House. ** **

** Expunged as ordered by the Chair.

* * It is the duty of the elder politicians, elder parliamentarians like Mr. Vinayakam to guide us outside the House rather than chastise us inside the House. He is very anxious to know about the release of anti-Hindi prisoners. The same question was raised in the other House. I made a statement there and I repeat it here. Hereafter such statements will emanate from the House rather than from outside.

MR. SPEAKER : Has the Hon. Minister for Law anything to say?

***மதிப்பிற்குரிய திரு. செ. மாதவன் :** கனம் தலைவர் அவர்களே, திரு. விநாயகம் அவர்கள் கூட்டுறவு சங்கங்களைப் பற்றி விசாரிப்பதற்கு ஒரு குழு அமைப்பது பற்றியும், இந்தி எதிர்ப்புக் கைதிகளைப் பற்றியும் வெளியில் சொல்லப்பட்ட கருத்துக்களைப் பற்றிச் சொன்னார்கள். கூட்டுறவு சங்கங்களைப் பற்றி ஆராய்வதற்கு ஒரு குழு போடுவதுபற்றிய கருத்து இந்த மன்றம் கூடுவதற்கு முன்னாலேயே தெரிவிக்கப்பட்டதாகும். அப்படி இருக்கும்போது சட்ட மன்றம் நடந்துகொண்டிருக்கும்போது சட்டமன்றத்தில் வெளியிடாமல் வெளியில் சொன்னேன் என்று சொல்வது தவறாகும். அத்தகைய தவறான கருத்தை அவர் இங்கே சொல்வது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : I will give my ruling on the point raised by the hon. Member Thiru K. Vinayakam. First I would draw the hon. Member's attention to Rule 83 (1) that while raising a point of order, the hon. Member should confine himself to stating the point—I am repeating the words from memory and the hon. Member may check up. He should not indulge in arguments. I observed that he used a particular word ** ** and later on he was good enough to withdraw the word. Under Rule 235 of the Assembly Rules, I direct that the word be expunged from the proceedings so that it will not appear either in the official report or in the newspapers.

THIRU K. VINAYAKAM : Is it an unparliamentary word?

MR. SPEAKER : It was withdrawn and expunged. On the point that statements on policies should be made only in this House, the Rules state on what matters statements should be made in the House. For instance, budget must be presented to the House and not to the public. There are no rules prohibiting the Hon. Ministers from making any statement outside the House in a public meeting or anywhere else. They can freely air and express their views. But I would personally request the Hon. Ministers that announcements on important matters of policy be made in this House, while the House is sitting. This is merely a request. It is left to the discretion of the Hon. Ministers and there is no rule binding on them. If circumstances demand, they are free to announce policies even outside the House.

**** Expunged as ordered by the Chair.**



### 4. முதலமைச்சரின் அறிக்கை சட்ட அதிகாரிகள் நியமனம்

THE HON. THIRU. C. N. ANNADURAI : Under Rule 82(1) of the Assembly Rules, I wish to make a statement with regard to the recent appointment of the Advocate-General and Pubilc Prosecutor.

The Government announced that the appointments of the Advocate-General and the Public Prosecutor were made on the advice of the High Court. Though, under the Constitution, there is no obligation to consult the High Court in regard to these appointments, the Government did consult the Senior-most Judge of the High Court when the Chief Justice happened to be away at Delhi. A communication was also received from the Judge that the Chief Justice had concurred with the proposed appointments by the Government. After hearing about the denial issued under the authority of the Chief Justice, His Lordship the Chief Justice has been informed of the communication received from the senior-most Judge. The Chief Justice has stated that, in this case, the communication was issued by the Judge without his knowledge or approval.

His Lordship the Chief Justice is thoroughly convinced that the Government acted *bona fide* on the communication received from the Judge. It has to be stated that the Government on prior occasions also had acted on similar communications treating them as authorised communications having the concurrence of the Chief Justice. This is the position under which the Government announced that the appointments of the Advocate-General and the Public Prosecutor had been made on the advice of the High Court. Thus it will be seen that the Government had acted *bona fide* on the communication received from the High Court.

The matter may be allowed to rest here in the interest of maintaining the usual cordial relationship between the Government and the High Court.

### 5. அரசினர் தீர்மானம்:

### சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களைச் சேர்த்தல்.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, "1967-68-ம் ஆண்டிற்குரிய சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் சேர்த்துக் கொள்ளுவதற்கென ஐந்து உறுப்பினர்களை நியமனம் செய்து, அவ்வாறு நியமனம் செய்த உறுப்பினர்களின் பெயர்களை சபைக்கு அறிவிக்குமாறு இச்சபை சட்ட மன்றத்திற்கு பரிந்துரை செய்கின்றது" என்கிற தீர்மானத்தை நான் முன் உரைக்கிறேன்.

**தீர்மானம் அவை முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.**

## 6. அரசினர் மசோதாக்கள்.

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா 1/1967)

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு, 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதாவை (சட்டப் பேரவை மசோதா *1/1967) இந்த அவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்" என நான் முன் உரைக்கிறேன்.

தீர்மானம் அவை முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இரண்டாவது பிரிவும், மூன்றாவது பிரிவும் பேரவை முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

அட்டவணை (Schedule) பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு
பி.ப. 9-30 நிறைவேற்றப்பட்டது.

நெடுந்தலைப்பு (Long Title) முன்னுரை (Preamble) பிரிவு 1 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டன.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே; "இந்த மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்னுரைக்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir, this Madras Appropriation Bill, 1967, is a Financial Bill. It is the well-established custom in this House as well as in any Legislature, that all Financial Bills will have to be tabled or introduced by an hon. Member duly elected to this House by the people.

MR. SPEAKER : Is this a point of order?

இந்த மசோதா, எவ்வளவு பணம் ஒதுக்க வேண்டுமென்பதற்காக இந்த அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது அதைப் பற்றிப் பேசாது வேறு ஏதாவது பேசவேண்டுமென்றால் கவர்னர் உரை விவாதத்தின்போது பேசிக்கொள்ளலாம். இப்போது இவ்வளவு பணம் இந்தத் துறைக்கு ஒதுக்க வேண்டுமென்பதுபற்றிப் பேசுங்கள். மற்றவைகளைப்பற்றிப் பேசுவதற்கு பின்னர் தங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும். உங்களுக்கே இது நன்றாகத் தெரிந்து இருந்தும் இவ்வாறு பேசுவது என்பது எனக்கு விதிமுறைகள் தெரியும் என்று சோதனை செய்கிற மாதிரியாக இருக்கிறது.

**திரு. கே. விநாயகம்:** உங்களுக்கு முழு அதிகாரம் இருக்கிறது என்பது தெரியும். எப்போது வேண்டுமானாலும் பேசுகிற அங்கத்தினரை நிறுத்துங்கள் என்று சொல்லலாம், பேசக்கூடாது என்று

* 23-3-1967-ம் தேதிய அரசிதழ் தனி வெளியீட்டில் வெளியிடப்பட்டுள்ளது.



சொல்லலாம், பேசியது தவறு 'நீக்கலாம்' என்று சொல்லலாம். ஆயினும் நான் பேசுவது இந்த மசோதாவைக் குறித்துத்தான் பூராவும் சார்ந்திருக்கிறது என்று நான் நம்புகிறேன்.

MR. SPEAKER : Is the hon. Member speaking on the Bill?

THIRU K. VINAYAKAM : Yes, Sir, I am speaking on the Bill.

MR. SPEAKER : Let the hon. Member speak on the merits of the Bill.

THIRU K. VINAYAKAM : Sir, if I have given an impression that I am raising a point of order, I am very sorry about it. That is not my intention. I am expressing my views on the Appropriation Bill. Mr. Speaker, Sir, on a former occassion in 1952. I believe, when the Congress Ministry was not in a position to form the Ministry and when it failed to get a majority by 10 members, they brought in the erstwhile retired Governor-General of India, Sri C. Rajagopalachari to head this Government. Then he was kind enough to bear that onerous duty and carried on the Government. But he knew that he did not get himself elected directly by the people. He was elected or nominated to the Upper House by the Governor. He knew that it was not political propriety to handle the Finance portfolio. So, he trained his junior and lieutenant, Sri C. Subramaniam and made him Finance Minister. Now, the point is, how is it politically proper that a Member not elected to this House by the people . . .

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மூன்றாவது வாசிப்பின்போது இந்த மசோதாவினுடைய நன்மை, தீமை இவைகளைப்பற்றிப் பேசலாம். இதைக் கொண்டு வந்த அமைச்சரைப்பற்றி, கொண்டு வருவதற்குத் தகுதி இருக்கிறதா, இல்லையா என்பது பற்றிப் பேசவேண்டுமென்றால் கவர்னர் உரையின்போது பேச உரிமையுண்டு. நீங்கள் இதைக் குறித்து மேற்கொண்டும் பேசினால் நான் அமைதிக்க முடியாது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir, on a point of personal explanation. Sir, let me know clearly whether the Chair is not in favour of continuing my speech or he is ruling my point as out of order. I am at a loss to understand how a Member can be denied this kind of right in the third reading stage.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** ஒரு மசோதாவைப் பற்றிப் பேசும்போது அந்த மசோதாவின் மெரிட்ஸ், சரியானதுதானா, அப்ரிதமானதா என்பதைப்பற்றிப் பேசவேண்டும். வேறு ஏதாவது நடைமுறையைப் பற்றிப் பேசுவதாக இருந்தால், அது

பாயிண்ட் ஆப் ஆர்டராக இருக்க வேண்டும். உறுப்பினர் அவர்களுக்கு இதைப்பற்றி நன்ருகத் தெரிந்திருந்து வேண்டுமென்றே வேறு காரியத்தைப்பற்றி பேசுகிருர்கள் என்பது நன்ருகத் தெரிகிறது. அவர்கள் வருந்த வேண்டாமென்று கூறி, என்னுடைய கடமையைச் செய்ய முற்படுகிறேன்.

THE HON. THIRU C. N. ANNADURAI: Mr. Speaker, Sir, if the Chair would permit me, I would like to intervene in this matter because the matter is so important in the sense that the Press would like to take all these aspects into consideration. I would like to present to this House many factors which may clarify the confusion created in the mind of my hon. Friend. Now, my hon. Friend says that people are confused. He has stated that because I am not a Member of this House, I should not or need not—I do not know whether he has used the word 'should' or 'need'—present the Budget or the Financial Bill before this House. Now, there is a definition for the word 'Member'. 'Minister' means 'any Minister'. There is no distinction between the Ministers as far as portfolios are concerned. Therefore, I would place before the House the following information.

The question arises whether the Finance Minister must be a Member of the Legislative Assembly and not a Member of the Legislative Council.

Article 164(1) of the Constitution provides that the Chief Minister shall be appointed by the Governor and the other Ministers shall be appointed by the Governor on the advice of the Chief Minister.

Article 164 (2) states that the Council of Ministers shall be collectively responsible to the Legislative Assembly of the State.

Article 177 provides that every Minister . . . shall have the right to speak in, and otherwise to take part in the proceedings of, the Legislative Assembly of the State or in the Legislative Council.

There is no provision in the Constitution which requires that the Ministers shall be Members of the Legislative Assembly only, much less is there any constitutional provision which requires that the Finance Minister or any other Minister or even the Chief Minister shall be a Member of the Legislative Assembly. It therefore, follows that constitutionally there is no bar or prohibition for a Member of the Legislative Council being appointed as Chief Minister or Finance Minister or any other Minister.

Rule 2 (e) of the Madras Legislative Assembly Rules defines 'Finance Minister' thus:

'"Finance Minister" means the Minister in charge of Finance or any other Minister to whom he may delegate his functions for the purpose of the rules.'



Rule 2 (k) of the Legislative Assembly Rules provides that a Minister who is not a Member of the Assembly shall be deemed to be a Member for the purposes mentioned in Article 177 of the Constitution. Though he is not technically a member of this House, he shall be deemed to be a member for the purposes mentioned in Article 177 of the Constitution.

The relevant Lok Sabha Rule defines 'Finance Minister' as to include any Minister.

It may also be mentioned that in October 1964 on account of the unavoidable absence of the then Chief Minister, the then Minister for Industries Thiru. R. Venkataraman, Member of the Legislative Council, moved the Demands for Grants for Excess Expenditure for the year 1961–62 and also the Appropriation (No. 7) Bill, 1964. Therefore there is a precedent also. (Thiru K. Vinayakam: Permanent.) My friend is banking upon the words 'permanent' and 'temporary'. What right has he to presume that I will be a Member of the Council for all time to come? I may become a Member of the Assembly later on. It is not a question of impossibility; it is only a question of convenience.

It is clear from the above that a Member of the Council can be a Chief Minister as also a Finance Minister and the fact that he is a Member of the Council does not and cannot inhabit or impede him in the performance of his functions and duties as such but makes it imperative that he should present the budget.

The question still remains whether it is a parliamentary convention that Finance Minister must be a member of the Legislative Assembly.

We were discussing the other day about what the source of the Parliamentary practice is. In England in 1963, Lord Earl Home was appointed as Prime Minister while he was a member of the House of Lords. Nearer home in India recently the Prime Minister Srimathi Indira Gandhi was a Member of the Rajya Sabha. It is not established that in 1952 the Finance portfolio was entrusted to Thiru. C. Subramaniam, a Member of the Assembly, only because it was accepted that it was a parliamentary convention that the Finance Minister must be a Member of the Assembly. It might well be that the Finance portfolio was assigned to him on grounds of convenience and expediency. It may be as my friend put it that Thiru. Rajaji wanted to bring him up and therefore it is that he entrusted the portfolio to Thiru. C. Subramaniam. Therefore, it does not mean that it ought to be followed as a precedent. At any rate, it is not universally acknwledged or established for ever that the Finance Minister must necessarily be a Member of the Assembly. I may add that when once a Minister takes charge as Minister, he has got every right to discharge his duty in *toto* including the presentation of the budget.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : அடுத்து, இந்த மசோதா மீது வாக்கெடுப்பு நடத்தவேண்டும். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவைச் சட்டமாக நிறைவேற்ற வேண்டுமென்ற தீர்மானத்தை அவைமுன் வைத்துள்ளார்கள்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

### (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்க மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா 4/1967)

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை (சட்டப் பேரவை மசோதா 4/1967) ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று முன் உரைப்பார்கள்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** அவைத் தலைவரவர்களே, "1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் முன் உரைக்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவு 2 நிறைவேற்றப்பட்டது.

அட்டவணை நிறைவேற்றப்பட்டது.

நெடுந்தலைப்பு, முன்னுரை, பிரிவு 1-இவை நிறைவேற்றப் பட்டன.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை : தலைவரவர்களே, "இந்த மசோதா நிறைவேற்றப்படவேண்டும்" என்ற தீர்மானத்தை அவை முன் வைக்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

### 7. கவர்னர் பேருரையின்மீது விவாதம்:

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : அடுத்த அலுவல், கவர்னர் உரை மீதான விவாதம் தொடர்ந்து நடைபெறும். அன்று இடையிலாகப் பேசிய உறுப்பினர் திரு. ஆர். ராமச்சந்திர துரை அவர்கள் உரையை தொடர்ந்து ஆற்றி முடிப்பார்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, 20-ம் தேதி அன்று மேன்மைதங்கிய கவர்னர் அவர்கள் உரை மீது பேசிய பேச்சின் தொடர்ச்சியாக இன்று பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்

* 25-3-1967 தேதிய அரசிதழ் தனி வெளியீட்டில் வெளியிடப்பட்டுள்ளது.



கிறேன். இதுவரை கவர்னர் அவர்களின் உரை மீதான விவாதம் பட்ஜெட் விவாதம் என வைத்துக் கொண்டு ஆளும் கட்சியில் இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள். இதை அரசியல் மேடையாகப் பயன்படுத்திக் கொண்டு இதுவரை பேசி யிருக்கிறார்கள். அவர்கள் அப்படி பேசிய காரணத்தினால் எதிர் கட்சியினராகிய நாங்களும், அதற்கு பதில் கூறுவதற்கு கடமைப் பட்டவர்களான நாங்களும் அரசியல் மேடையாக, அரசியல் கருத்துக்களை இங்கு கூறவேண்டியிருக்கிறது. தேர்தலுக்கு முன் பாக மக்கள் மத்தியில் பேசுகிற நேரத்தில், அவர்களிடம் வாக்கு களைக் கேட்கிற நேரத்தில், "20 ஆண்டு காலத்தில் நாங்கள் இன்னின்ன சாதனைகளை இந்த ஆட்சியில் செய்திருக்கிறோம், நாங் கள் ஆட்சிக்கு வந்தால் இன்னின்ன காரியங்களைச் செய்கிறோம்" என்று மக்கள் மத்தியில் நாங்கள் பேசி அவர்களை அணுகியிருக் கிறோம். அதே நேரத்திலே, இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக் கிற திராவிட முன்னேற்றக் கழக சட்ட மன்ற உறுப்பினர்கள் மக்கள் மத்தியிலே பல விதமான கருத்துக்களைப் பேசி வாக்கு களைக் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் பேசிய பேச்சிலே, பேப்பர் கள் வாயிலாகப் பார்த்ததும், நேரடியாக நாங்கள் கேட்டதும், இந்த அரிசிப் பிரச்னை இன்னும் நிலவரி ரத்து ஆகிய பல விஷயங் களை அவர்கள் பேசியிருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் நாங் களும் இங்கு இந்த அரிசிப் பிரச்னையையும், மற்றும் இந்த நிலவரி ரத்து போன்ற பிரச்னைகளையும் பற்றிப் பேசுகிறோம். அதற்குக் காரணம் என்னவென்றால், நாங்கள் சட்டசபைக் கூட்டங்கள் முடிவுற்று திரும்பிச் செல்லுகிற நேரத்தில் எங்களுக்கு வாக்க ளித்த வாக்காளர்கள் எங்களைக் கேட்கிற நேரத்தில், நாங்கள் சட்ட சபையில் இன்னின்ன விஷயங்களை அவர்களிடத்தில் கேட் டோம் என்று கூறுவதற்கு ஒரு சந்தர்ப்பமாக இருக்கும் என்ப தால் இம்மாதிரியான அரசியல் கருத்துக்களை இங்கே பேச வேண்டியிருக்கிறது.

அன்று பேசிய மதிப்பிற்குரிய சட்ட மன்ற உறுப்பினர் ஆசைத் தம்பி என்று எண்ணுகிறேன், அவர்கள் இங்கு எங்களுடைய ஆட்சியை 25 ஆண்டு காலத்திற்கு அசைக்க முடியாது என்று ஆணவமான தொனியில் பேசினார்கள். அதற்கு இன்றைக்கு எதிர்க் கட்சியாக இருக்கிற சட்ட மன்ற உறுப்பினர்கள் கூட தகுந்த பதில் அளித்திருக்கிறார்கள்.

இன்னொரு உறுப்பினர், தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த உறுப் பினர் தனுஷ்கோடி என்று எண்ணுகிறேன், அவர்கள் இந்த 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியிலே ஹரிஜன மக்களுக்காக இந்த ஆட்சி என்ன செய்திருக்கிறது என்று பேசினார்கள். இந்தப் பேச்சைக் கேட்கிற நேரத்தில் நாங்கள் வேதனை அடைவதுடன். அழுவதா, சிரிப்பதா என்று கூடத் தோன்றவில்லை. மதிப்பிற்குரிய சட்ட மன்ற உறுப்பினர் தனுஷ்கோடி அவர்களுக்கு ஒன்று கூற ஆசைப்படுகிறேன். அதாவது, இந்தச் சட்ட மன்றத்திலே சுமார் 40 ஹரிஜன உறுப்பினர்கள் இருப்பார்கள் என்று எண்ணு கிறேன். இந்த 40 உறுப்பினர்கள் இங்கு வந்து அமர்ந்து இம்

மாதிரியான கேள்விகளைக் கேட்பதற்குச் சந்தர்ப்பம் கொடுத்ததே இந்த காங்கிரஸ் கட்சி தான் என்பதை ஆளும் கட்சியிலுள்ள சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை: தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் இதே முறையில் பேசிக்கொண்டு போவதைக் கொஞ்சம் மட்டுப்படுத்த ஒன்று கேட்பதற்கு ஆசைப் படுகிறேன். இருபது வருஷ காங்கிரஸ் ஆட்சியின் சாதனைகளைப் பற்றி 1962-ல் காங்கிரஸை எதிர்த்த உறுப்பினர் பாத்தியதை கொண்டாடுவது எப்படி என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. கெ. இர. ஞானசம்பந்தம்: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், இந்தச் சபைக்கு உறுப்பினராக வந்தது எலெக்ஷன் மூலமாக வந்ததா? அல்லது காங்கிரஸ் கட்சியின் மூலமாக வந்ததா? என்று கேட்க விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: இது ஒழுங்குப் பிரச்னையே இல்லை. மதிப்பிற்குரிய உறுப்பினர் ராமச்சந்திர துரை அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

திரு. ரா. ராமச்சந்திர துரை: கனம் முதல் அமைச்சர் அவர்கள் 1962-ல் காங்கிரஸை எதிர்த்தவன் என்று கூறினார்கள். 1962-ம் வருஷத்திலே, 1957-ம் வருஷத்திலே கூட நான் காங்கிரஸை எதிர்த்தவன்தான். ஆனால் வேறு கட்சியிலிருந்து எதிர்த்தவன் அல்ல; ஒரு சுயேச்சையாக நின்று எதிர்த்தேனே தவிர, காங்கிரஸை எதிர்க்கவேண்டுமென்று எதிர்க்கவில்லை என்று கனம் முதல் அமைச்சர் அவர்களுக்குக் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அதே நேரத்திலே மதிப்பிற்குரிய சட்ட மன்ற உறுப்பினர் தனுஷ்கோடி அவர்களுக்கு மற்றொன்று கூறுவதற்கு ஆசைப்படுகிறேன். 19-20 ஆண்டுகளுக்கு முன்பு, ஹரிஜன மக்கள் இந்து கோவில்களிலே நுழைவதற்கு முடியாது இருந்த நிலைமையும் இருந்தது. ஹோட்டல்களில் சமமாக அமர்ந்து உணவு அருந்த முடியாத நிலைமையும் இருந்தது. அவர்கள் இன்று தேவஸ்தானம் என்று சொல்லுகிறார்களே, ஹிண்டு ரிலிஜியஸ் எண்டோமெண்ட்ஸ் அதிலே போர்ட் ஆஃப் ட்ரஸ்டீஸிலே கூட ஹரிஜன மெம்பர்கள் இருக்கிறார்கள் என்பதை அவர்களுக்குக் கூறுவதற்கு ஆசைப்படுகிறேன். இன்றைக்கு இதர வகுப்பினர்கள் என்று சொல்லக் கூடியவர்களுக்கும் உயர்ந்த ஜாதி என்று சொல்லக் கூடியவர்களுக்கும் தேவஸ்தானங்களில் எந்த அளவுக்கு மரியாதை செய்கிறார்களோ அந்த மரியாதைகள் ஹரிஜன மக்களுக்கும் இன்று நடைபெறுகிறது என்றால், அது காங்கிரஸ் ஆட்சியின் சாதனை என்று அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதிபற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நான் நின்று வெற்றி அடைந்த தொகுதி கந்தர்வக்கோட்டை தொகுதி. அந்தத் தொகுதியிலே ஒரு பகுதி நீர்ப்பாசன வசதி உள்ள பகுதியாகவும், இன்னொரு பகுதி





ஆற்றுப் பாசனம் இல்லாத பகுதியாகவும் இருக்கிறது. அந்தத் தொகுதியிலே உளவயல் சானல், கட்டளை சானல் என்று இரண்டு வாய்க்கால்களை வெட்டி அது வல்லம் பகுதி வரை வந்து நின்றிருக்கிறது. உளவயல் சானலும் அரைகுறையாக நின்றிருக்கிறது. இவைகளை இந்தப் பகுதியில் வெட்டுவதற்கு ஏற்பாடு செய்து வாய்க்கால்களை நல்ல முறையில் ஏற்பாடு செய்தால் பல ஆயிரக் கணக்கான நிலங்கள் பயன்படும் என்பதை இந்த அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதற்கு ஆவன செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கந்தர்வக்கோட்டையிலிருந்து பட்டுக்கோட்டை போகும் வழியில், கந்தர்வக்கோட்டையிலிருந்து ஐந்தாவது மைலில புதுப்பட்டி என்ற கிராமம் இருக்கிறது. அங்கே 1962-ம் வருஷத்தில் ஒரு போர்வெல் வைத்து, அது நல்ல முறையில் வேலை செய்து 100 ஏக்கர் நிலங்களுக்கு நல்ல முறையில் நீர்ப்பாசனம் நடந்து வந்தது. இப்போது எட்டு மாத காலமாக அது சீர்கேடு அடைந்திருக்கிறது. அதைச் சீர்ப்படுத்தினால் 100 ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்க வசதியாக இருக்கும். அதே மாதிரி பக்கத்து கிராமங்களிலும் போர்வெல் போட ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கோனேர்நாடு என்று ஒரு இடம் இருக்கிறது. 10,000 ஜனத்தொகை இருக்கும் அந்த இடத்தில் ஆஸ்பத்திரி வசதி இல்லை. அதற்கும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினராக இருந்தாலும், புதுக்கோட்டையில் பிறந்து, புதுக்கோட்டையில் அதிக மக்களோடு பழகிய காரணத்தினால், புதுக்கோட்டை பகுதியைப் பற்றியும் ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன்.

புதுக்கோட்டையை வெகு நாட்களாக ஒரு ஜில்லாவாக ஆக்க வேண்டுமென்று முன் இருந்த காங்கிரஸ் அரசாங்கம் அதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருந்தது. ஒரு ஜில்லாவாக ஆவதற்கு எல்லாவித வசதிகளும் இருக்கின்றன. பெரிய ஆஸ்பத்திரிகள், பெரிய கோர்ட்டுகள் போன்ற எல்லா வசதிகளும் உள்ள இடமாக இருக்கிறது. இந்த புதுக்கோட்டை பகுதியை ஒரு ஜில்லாவாக ஆக்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று இந்த அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

புதுக்கோட்டையிலே ஆற்றுப் பாசனம் இல்லாத காரணத்தினால் அங்கு காவிரி ஆற்றைக் கொண்டுவரவேண்டுமென்று பல காலமாக ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தையும் நல்லமுறையிலே இந்த அமைச்சரவை கவனித்து ஆற்றுப் பாசனத்தைக் மு. ப. 10-00
கொண்டுவர ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்றும் எங்கள் பகுதியிலிருந்து ஒரு சில கடிதங்கள் எனக்கு வந்திருக்கின்றன நெல் கொள்முதல் விஷயமாக. அதாவது சென்ற வருடத்தில் ஒரு நபரிடம் 100 மூட்டை கொள்முதல் செய்திருக்கிறார்கள் என்றால், இந்த வருஷம் அதற்கு மேலாகவும் இன்று

விளைச்சல் குறைவாக இருந்தாலும், அதிகமாக கொள்முதல் செய்திருப்பதாக பல கடிதங்கள் வந்திருக்கின்றன. உதாரணமாக எனக்கு 30 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று வைத்துக்கொண்டால், 5 ஏக்கர் நிலம் விவசாயம் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் 25 ஏக்கர் நிலம் விவசாயம் செய்யப்பட்டு அறுவடை ஆகவேண்டியிருக்கிறது. இந்த 5 ஏக்கர் நிலத்தில் அறுவடை ஆகின்ற நெல்லை முதல் லெவிக்கு கொடுத்து விட்டு வீட்டிற்கு கொண்டு வந்திருந்தும் பாக்கி நெல்லையும் 25 ஏக்கர் நிலத்தில் அறுவடை ஆவதற்கு முன்னாலேயே அந்த நெல்லையும் பறிமுதல் செய்கிறார்கள் என்று எனக்கு பல கடிதங்கள் வந்திருக்கின்றன. ஆகவே, இந்த நெல் கொள்முதலை நல்ல முறையில் செய்யவேண்டும் என்று இந்த அமைச்சர் அவையைக் கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த அவைத் தலைவர் அவர்களுக்கும், சபைக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ம. பொ. சிவஞானம்: மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு முதன்முதலாக என்னுடைய சில கருத்துக்களை வெளியிடுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கவர்னர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அவை முன்பு வைக்கப்பட்டுள்ள தீர்மானத்தை நான் மனநிறைவோடு ஆதரிக்கிறேன். அதே நேரத்தில், இந்த உரையை வழங்குகின்ற முறையையும் உரையை வழங்குகின்றவர் வைக்கப்பட்டுள்ள நிலையையும், அதன் விளைவாக இந்த மன்றத்தில் பிரதிநிதித்துவம் ஏற்பட்டுள்ள நிலையையும் நினைப்பூட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

கவர்னர் உரை, இந்த மாநிலத்தில் மட்டுமல்ல, எந்த மாநிலத்திலானாலும் புதுமையாக எதுவும் இல்லாவிட்டாலும் அதைப்பற்றி 6 நாட்களுக்கு மேல் விவாதம் நடத்தி, அதற்குத் திருத்தங்களையும் கொடுத்து, அதில் ஏதோ இருப்பதாக நினைத்து அதற்கு நன்றி தெரிவித்து ஒரு தீர்மானமும் நிறைவேற்றுகிறோம். இவ்வளவும் நாம் செய்வதற்குக் காரணம், அந்தப் பதவிக்கு நாம் மரியாதை செலுத்தவேண்டும் என்பதுதான். அதற்காக ஒரு சடங்கை இவ்வளவு பெரிய சடங்கை நடத்துகிறோம். இந்தப் பதவிக்கு மக்களுடைய பிரதிநிதித்துவம் மூலம் நியமனம் செய்யப்படவில்லை. நான் தனியாக கவர்னர் அவர்களைப்பற்றிப் பேசவில்லை. கவர்னர் நியமனத்தைப் பற்றியே பேசுகிறேன்.

கவர்னர் நியமனம் பற்றி அரசியல் சட்டத்தில் இருக்கிற குறையை எடுத்துக்காட்டி நினைவூட்ட விரும்புகிறேன். அரசியல் சட்டம் தயாரித்த பெரியோர்கள் அச் சட்ட நகலில் கவர்னரைப் பற்றிக் குறிப்பிடும்போது, பொதுத் தேர்தலில் சட்ட மன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதுபோல, கவர்னரும் வயது வந்தோர்களின் வாக்குகளினால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்ற விதியை வகுத்தார்கள். அதற்கு மாற்று விதியாக, எந்த மாநிலத்துக்குக் கவர்னர் தேர்ந்தெடுக்கப்படுகிறாரோ, அந்த மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் நான்கு பேர்கள் கொண்ட ஒரு பட்டி





யலைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பட்டியலை குடியரசுத் தலைவருக்கு அனுப்பினால் குடியரசுத் தலைவர் அந்தப் பட்டியலிலுள்ள ஒரு நபரை நியமிக்கவேண்டும் என்ற குறிப்பும் கொடுக்கப்பட்டது. வயது வந்த வாக்காளர்களால் கவர்னர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற ஒரு திட்டமும், அதற்கு ஒரு மாற்றுக் குறிப்பும் இருந்தபோதிலும் அதாவது சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு பேர்கள் கொண்ட பட்டியலில் ஒரு நபரை குடியரசுத் தலைவர் நியமனம் செய்யவேண்டும் என்ற மாற்றுத் திட்டமும் அரசியல் சட்டங்களில் இருந்தபோதிலும், தற்பொழுது அரசியல் சட்டத்திலுள்ள நிலை கவர்னர் அவர்களை குடியரசுத் தலைவர் நியமனம் செய்யவேண்டும் என்பதுதான். அந்த நிலையில் அரசியல் சட்டத்தைத் தயாரித்தவர்களிடையே ஏன் இந்த மன மாற்றம் ஏற்பட்டது என்பதை நாம் நினைவூட்டிப் பார்க்க வேண்டியது ஒரு முக்கியமான விஷயம்.

அரசியல் சட்டம் தயாரித்து ஆண்டுகள் 15 ஆகிவிட்டன. இது ஒரு பழைய விஷயம். கவர்னர் பெருமான் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவித்து நான் பேசுவது இது இரண்டாம் முறை ஆயினும், எனது புதுமைக் குணம் போகவில்லை. ஆகையால் அரசியல் சட்டத்திலுள்ள குறையை நான் எடுத்துக்காட்டி நினைவூட்ட விரும்புகிறேன். 'ஏன் நாம் இதற்கு இவ்வளவு காலம் செலவழிக்க வேண்டும், இவ்வளவு பணம் செலவழிக்க வேண்டும்' என்று பார்க்கும்பொழுது இதனுடைய பலன் இன்னும் கூடுதலாக இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம். நான் கவர்னர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தனிப்பட்ட கவர்னரைப்பற்றி நான் பேசவில்லை. கவர்னர் நியமனம்பற்றி அரசியல் சட்டத்திலுள்ள விதியைப்பற்றித்தான் நான் சொல்கிறேன். கவர்னர் அவர்கள் சட்ட மன்றத்திலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாக பிரதிநிதித்துவம் வாய்ந்தவராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற முறையில் அரசியல் சட்டம் மாற்றி அமைக்கப்படுவதற்கு மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரங்களும் பொறுப்புகளும் வேண்டும் என்ற கருத்துக்கு இப்பொழுது பொறுப்பேற்றிருக்கும் புதிய மந்திரி சபை முயற்சிக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, குடியரசுத் தலைவர் கவர்னரை நியமிக்க வேண்டும் என்ற விதி இருந்தாலும் வேற்று மாநிலத்தைச் சேர்ந்தவர்தான் ஒரு மாநிலத்திற்கு கவர்னராக அனுப்பப்படவேண்டும் என்று சொல்லப்படவில்லை. கவர்னராக நியமிக்கப்படுபவர் அந்த மாநில மக்களுடைய பழக்க வழக்கங்களையும் புரிந்துகொண்டிருப்பவராகவும், மாநில மக்களுடன் தொடர்பு கொண்டு அவர்களுடைய கோரிக்கைகளைத் தெரிந்துகொள்வதற்கு வாய்ப்பு உடையவராகவும் இருந்தால்தான் ஜனநாயக வளர்ச்சிக்குப் பயன்படக் கூடியதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

இந்த ராஜ்ய நிர்வாகம் தமிழிலேயே நடைபெற வேண்டும்; ஆட்சி நிர்வாகம் தமிழிலேயே இருக்க வேண்டும்; நீதிமன்றங்கள் தமிழிலேயே நடைபெறவேண்டும்; இந்தச் சட்டமன்ற நடவடிக்

கைகளும் தமிழிலேயே நடைபெறவேண்டும். மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. விநயகம் போன்றவர்களுக்கு வேண்டுமானால் தமிழில் பேச இன்னும் கொஞ்சம் அவகாசம் தேவையாக இருக்கும். தமிழை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆட்சி தமிழிலே நடைபெறுகிறது. தமிழ் மொழியை அறியாமல் இருக்கிற ஒருவர் கவர்னராக இருக்கிற நிலையில் நிர்வாகத்தில் எவ்வளவு சிக்கல் ஏற்படுகிறது என்பதையும் நினைவுபடுத்தி, திருப்பவும் என்னுடைய கருத்தை சொல்கிறேன் . . .

### 3. ஒழுங்குப் பிரச்சினைகள் (தொடர்ச்சி).

### (இ) கவர்னரைப்பற்றி விவாதத்தில் குறிப்பிடுதல்.

THIRU K. VINAYAKAM : Sir, with your permission, I wish to raise a point of order. Regarding the appointment of the Governor or the Office of the Governor, no hon. Member has got a right to speak on it. This may be stated outside this House but on the floor of the House no hon. Member has a right to question his appointment or salary. So, all these things are quite irrelevant to the matter before the House.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் ஆங்கிலத்தில் சொன்னது என்னவென்றால் கவர்னர் அவர்களைப் பற்றி இந்த அவையிலே பேசக்கூடாது என்ற ஒழுங்குப் பிரச்னை ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் திரு. விநயகம் அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். அதற்குரிய விதிமுறை என்னவென்று விளக்க வேண்டும். விதிமுறை என்னவென்றால் கவர்னர் பெருமானைப் பற்றி தனிப்பட்ட முறையில் அவர்களுடைய நடத்தைப்பற்றி பேசக்கூடாது. அதாவது 67-வது விதி 'A member, while speaking must not reflect upon the conduct of the Governor. . .' என்பது. அதாவது கவர்னர் அவர்களுடைய நடத்தையைப்பற்றி பேசக் கூடாதே ஒழிய, அவர்களுடைய நியமனத்தைப்பற்றியோ அவர்களுடைய ஊதியத்தைப் பற்றியோ அல்லது நியமன முறையைப்பற்றியோ பேசலாம். எதைப்பற்றி பேசக்கூடாது என்றால், அவர்களுடைய காண்டக்ட் அவர்களுடைய நடத்தையைப்பற்றி பேசக்கூடாது. மற்றபடி பேசலாம் என்பது என்னுடைய தீர்ப்பு.

திரு. கே. விநயகம்: 'அன் எ பாயிண்டு ஆப் ஆர்டர்' மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் சொன்னது கவர்னர் பெருமான் தங்களுடைய உரையை தமிழிலே ஆற்றியிருந்தால் நல்லது என்று சொன்னது அவருடைய காண்டக்டைக் குறிக்கும். ஆதலால் பாயிண்டு ஆப் ஆர்டர் எழுப்புகிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: நான் தீர்ப்பு வழங்குவதற்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் இந்த ஒழுங்குப் பிரச்னையின் மீது ஏதாவது கூறிக்கொள்ள விரும்பினால் கூறிக்கொள்ளலாம்.





திரு. ம. பொ. சிவஞானம்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நான் இங்கு பேசிக்கொண்டிருப்பது கவர்னர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்துத்தான். இதை நான் முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். இரண்டாவதாக, ஆதரித்துப் பேசுவது மட்டுமல்ல; ஆதரிக்கின்றபொழுது கவர்னரைபபற்றி அரசியல் சட்டத்திலுள்ள விதிகளில் உள்ள குறைகளை நினைப்பூட்டுகிறேனே தவிர, கவர்னரைப் பற்றி அல்ல. மூன்றாவதாக, கவர்னர் உரை தமிழிலே இல்லை என்று நான் சொல்லவில்லை. தமிழிலே இருக்கிற வாய்ப்பு எதிர்காலத்தில் ஏற்படவேண்டும் என்ற முறையில்தான் நான் கூறினேன். (ஆரவாரம்).

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: எனவே இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. விநயகம் அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்னை உண்மையாக எழும்பவில்லை. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சிவஞானம் தொடர்ந்து பேசுவார்கள்.

### 7. கவர்னர் பேருரையின்மீது விவாதம் (தொடர்ச்சி).

திரு. ம. பொ. சிவஞானம்: ஆகவே இந்த நினைப்புகூட வரக்கூடாது என்றால், இந்த உரையைப் பற்றி இத்தனை நாட்கள் நாம் நன்றி தெரிவித்துப் பேசுவதற்கு விஷயமே கிடைக்காது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

இரண்டாவதாக, நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால், இந்த நியமன முறைப்படி முன்பு வங்காளத்தில் மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்களைக் கவர்னராக நியமித்தார்கள். வங்காளத்திற்கு ராஜாஜி அவர்கள் கவர்னராகப் போகும்போது அவருடைய நியமனத்திற்கு அங்கே எதிர்ப்பு இருந்தது. தங்களைப் புரிந்து கொள்ளாத ஒருவர் அங்கே கவர்னராக வருவதற்கு எதிர்ப்பு இருந்தது. அதற்குப் பிறகு கவர்னராக நியமிக்கப்பட்ட இரண்டு பேர்களும் வங்காளிகள்—வங்காளத்தைச் சேர்ந்தவர்களைத்தான் மத்திய அரசு நியமித்திருக்கிறது. அந்த நீதியை எல்லா மாநிலங்களுக்கும் வழங்குவதில் எது தடங்கலாக இருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. அதே நேரத்தில் கவர்னர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும் அஞ்சலியையும் கூட தெரிவித்துக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், கவர்னர் அவர்களுடைய உரையிலே ஒரு வாசகம் இருக்கிறது. "மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரங்களைக் கேட்கவேண்டிய நேரம் வந்துவிட்டது" என்று கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார். குறிப்பாக எடுத்துக்கொண்டால், கூடுதலான அதிகாரங்கள் மாநிலங்களுக்கு வேண்டும் என்ற கோரிக்கை அரசியல் சட்டம் இயற்றப்பட்ட வட்டாரத்திலிருந்து அது நடைமுறைக்கு வந்த நாளிலிருந்தே—இருந்துகொண்டு வருகிறது என்பதை நினைப்பூட்ட விரும்புகிறேன். இரண்டாவது முக்கியமான அம்சம், அரசியல் சட்ட நிபுணர்கள் எல்லாம் அடிக்கடி-

கருத்து சொல்கிறபோது, கூடுதலான அதிகாரங்கள் மாநிலங்களுக்கு கொடுத்தாக வேண்டும் என்று சொல்கிறார்கள். இது எல்லாவற்றையும்விட நமக்கு கடந்த 15 ஆண்டு கால அனுபவம் இருக்கிறது. இன்று காங்கிரஸ் அல்லாத ஆட்சி 6 ராஜ்யங்களில் அமைந்திருக்கிற சூழ்நிலையில், உணவுப் பிரச்னையைத் தீர்க்க முடியாமல் துன்பப்படுகின்ற சூழ்நிலையில், அரிசிக்கு அகிலத்திடம் கையேந்தி நிற்கிறது டெல்லி; டெல்லியிடம் கையேந்தி நிற்கிறது சென்னை, சென்னையிடம் கையேந்தி நிற்கிறது சேரி. நாட்டிலுள்ள உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதற்குக் கூட ஒரு மாநிலத்திற்கு அதிகாரம் இல்லை. பதினைந்து ஆண்டு காலமாக அரசியல் சட்டத்தில் திருத்தம் வேண்டும் என்று சொல்லப்படுகிறது. மாறுதல் வேண்டியது அரசியல் சட்டத்தின் விதியை ஒட்டித்தான். அரசியல் சட்டத்திலே ஒரு மாநிலத்திற்கும் மத்தியத்திற்குமோ அல்லது எல்லா மாநிலங்களுக்கும் மத்தியத்திற்குமோ ஏதேனும் சிக்கல் ஏற்பட்டு, அது தீர்க்கப்பட வேண்டும் என்றால், அதற்கென்று தனியாக ஒரு கவுன்சிலை அமைக்க ஜனாதிபதிக்கு உரிமை உண்டு என்று அரசியல் சட்டத்தில் 263-வது பிரிவு கூறுகிறது. அரசியல் சட்டத்தை திருத்துவதற்கு 368-வது பிரிவில் வழி இருக்கிறது. அப்படி ஒரு கவுன்சில் நியமிக்கப்பட வேண்டும் என்றால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

நம்முடைய ராச்சியத்தின் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் மாநில சர்க்காருக்கு கூடுதலாக அதிகாரங்கள் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு வருவதைப் பார்க்கிறோம். அப்படி பிரசாரத்திற்காகச் சொல்லிக் கொண்டு இருப்பதைவிட, 263-வது பிரிவைப் பயன்படுத்தி ஒரு கவுன்சிலை அமைக்க வேண்டும், அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்ற கோரிக்கையை மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர்கள் உள்பட எல்லோரும் ஒரு மனதுடன் தீர்மானமாக நிறைவேற்றிச் செயல்பட வேண்டிய நேரம் வந்து விட்டதாகவே உணருகிறேன். அப்படிக் கூடுதலான அதிகாரம் வேண்டும் என்று கேட்பது புதிதல்ல. உலகத்திலுள்ள சமஷ்டி நாடுகளில், பல ராச்சியங்களைக் கொண்டு சமஷ்டி ஏற்பட்டிருக்கும் உலக நாடுகளிலெல்லாம் மத்தியில் அதிகாரங்களைக் குவித்துவிட்டிருக்கும் நிலை இருப்பதாக நான் உணரவில்லை. மத்திய அரசு யூனிடரியா அல்லது பெடரலா என்று புரியாத நிலையை மாற்றியாக வேண்டும். மாநில ஆட்சிக்குக் கூடுதலான அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்கிறபோது; அயல் நாட்டு உறவு, தேசப் பாதுகாப்பு, போக்குவரத்து என்கிற மூன்று அதிகாரங்களை மட்டும் மத்திய அரசிற்கு விட்டுவிட்டு மற்றவற்றை மாநிலங்களுக்கே கொடுக்கக்கூடிய அளவில் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும். கவர்னர் உரையிலே சொல்லப்பட்ட கருத்தை விரிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன். அப்படி அரசியல் சட்டம் திருத்தப்படும்போது, மாநிலங்களுடைய பட்டியல்-மத்திய அரசின் பட்டியல் என்கிற இரண்டையும் அப்படியே விட்டு பொதுப் பட்டியல் உடனடியாக மாநிலங்களுக்கே உரிமையாக்கப்படும் என்று உறுதியாக நம்புகிறேன்.



அடுத்தபடியாக, நம்முடைய உணவுப் பிரச்சினை. அதைப் பற்றி எண்ணுகிற போது 20 ஆண்டு காலம் ஆண்டு விட்டு வெளியேறிய கட்சி தேடிக் கொண்ட பழி இப்பொழுது வந்திருக்கின்ற அமைச்சரவை மீதும் இருக்கிறது. ரூபாய்க்கு மூன்று படி அரிசி கிடைக்க வேண்டும் என்று ஆசைதான். அது இன்றே கிடைக்க வேண்டும் என்கிற அவசரமும் கூட. ஆனாலும் ஆசையும் அவசரமும் அறிவோடு கலக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். அதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று ஆட்சியைக் கேட்க உரிமை உண்டு. ஆனால் அதை நிறைவேற்றுவதற்கான சூழ்நிலை இருக்கிறதா என்றும் பார்க்க வேண்டும். அப்படி இல்லையென்றால், அப்படிப்பட்ட சூழ்நிலையை உண்டாக்குவதற்கு அரசோடு ஒத்துழைக்க எதிர்க்கட்சிகள் கடமைப்பட்டிருக்கின்றன என்பதை நாம் மறக்கக் கூடாது. அதோடு கூட வேறு பிரச்சினைகளில் நாம் எப்படி நடந்துகொண்டாலும் இந்த உணவுப் பிரச்சினையில் கட்சிப் போர் இருக்கக் கூடாது. ஏனென்றால் இது மக்களுடைய சோற்றுப் பிரச்சினை. இந்த சோற்றுப் பிரச்சினையில் கட்சிச் சண்டைகளை ஒதுக்கி வைத்து விட்டு ஏதேனும் உடனடியாக செய்ய வேண்டியதைச் செய்யத் தலைப்படவேண்டும். 41 சதவிகிதம் காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டுப் போட்டவர்களுக்கும் உள்ள பிரச்சினை இது. காங்கிரசுக்கு வாக்களித்தவர்கள் இந்த உணவுப் பிரச்சினை இந்த நிலையில் இருப்பது நியாயம் என்று ஏற்றுக் கொண்டு வாக்களித்தார்கள் என்று பொருள் ஆகாது. ஆகவே எல்லோருடைய பிரச்சினைதான் இந்தப் பிரச்சினை. இதில் யாவரும் ஒத்துழைக்க வேண்டும் என்பது தெளிவு. ஆகவே, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதில் ஆளும் கட்சியின் கரத்தை நாமெல்லோரும் வலுப்படுத்த வேண்டும். நான் அப்படிச் சொல்லும்போது, மத்திய ஆட்சியினர் நேற்று வரை குறிப்பிட்டிருக்கிற வாக்கியங்கள் என் நினைவிற்கு வருகின்றது. அவர்கள் "உணவுப் பிரச்சினையைக் கட்சிப் பிரச்சினையாக்க வேண்டாம்" என்று கேட்டிருக்கிறார்கள். 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்ற மொழிக்கு இணங்க, இது உயிர்ப் பிரச்சினை ஆனதால், இதை கட்சிப் பிரச்சினையாக்காமல் இருக்கவேண்டும்.

அடுத்து பதுக்கல் பற்றியும், யார் யார் பதுக்கல் செய்திருக்கிறார்கள் என்பதுபற்றியும் தகவல் கிடைத்து, பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் தானியங்களை வெளிக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கும் போது, பல்விதமான புகார்கள் வருகின்றன. ஆனால், பதுக்கல் இருப்பதால்தான் கிட்டத்தட்ட பல லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள தானியங்கள் வெளிக்கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அப்படி அவ்வளவு தானியம் பதுங்கியதற்குக் காரணம், கடந்த கால ஆட்சி கொள்முதலைச் சரிவரச் செய்யாமல் விட்டு விட்டதுதான். கண்டிப்பாக அரசாங்கம் கொள்முதல் நடத்தி ரேஷன் பொருள்களை பங்கீடு செய்ய வேண்டியது அவசியமாகிறது. இந்த மாதிரியான சிக்கலான நிலையில்—உணவுப் பங்கீடு கடைகளுக்கே அரிசி இல்லாத நிலையில்—பதுக்கலை பார்த்துக் கொண்டிருந்தால், அந்த நாட்டில் ஆட்சி இல்லை, 'அனார்க்கி' என்றுதான் பொருள். அப்படி தானியங்களைக் கொள்முதல் செய்ய முயற்சி எடுக்கும்போது, பதுக்கியவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்

[திரு. ம. பொ. சிவஞானம்] [1967 மார்ச் 27

என்கிற பிரச்சினைக்கே இடம் இல்லை. பாரபட்சம் காட்ட முடியாது. ஆனாலும், அப்படிப் பதுக்கல் வெளிக்கொண்டு வரும் போது, ஒரு விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். பத்திரிகையில் பார்த்தோம், புத்தூரில் ஏற்பட்ட நிகழ்ச்சி சம்பந்தமாக. நல்ல வேளையாக, அமைச்சரவர்கள் அதன்பேரில் உடனடியாக நடவடிக்கை எடுத்ததால் போலீசார் விசாரிக்கிறார்கள் என்று அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். அதுமட்டுமல்லாமல், அவரவர்களுடைய பணிகள்பற்றித் தெளிவாக்குவதற்காக ஒரு மாநாடு போட்டு போலீஸ் அதிகாரிகளுக்கு அவர்கள் எந்த எந்த முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்று அறிவிப்பது சிறந்ததாக இருக்கும் என்று நினைக்கிறேன். சாதாரணமாக, எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், பெரிய பெரிய மிராசுதார் களுக்கு அதிகாரிகள் சலுகை காட்டுகிறார்கள் என்ற புகார் இருந்துகொண்டே இருக்கிறது. அது மெய்யோ பொய்யோ தெரியாது. ஆனால் எனக்கும் புகார்கள் வந்திருக்கின்றன "பெரிய புள்ளிகள் இருக்கும் இடங்களுக்கு அதிகாரிகள் போகவே இல்லை, சின்னச் சின்ன சொந்தக்காரர்களிடம்தான் அரிசி மூட்டைகளை எடுத்திருக்கிறார்கள்" என்று அதுபற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உணவுப் பிரச்சினை என்று பார்க்கும்போது, இன்னொன்றையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இப்பொழுது இருக்கும் ஆட்சிக்கு ஐந்தாண்டு முழுசாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. குறைகளைத் தீர்க்க வேலைகள் செய்ய அவர்களுக்கு முழுதாக ஐந்தாண்டுகள் வேண்டும் என்று சொல்லும்போது, ஐந்தாண்டின் இறுதியில் செய்வது என்று நான் குறிப்பிடவில்லை. அப்படி அவர்கள் முயற்சிகள் எடுக்கும் போது ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அகில இந்தியாவிலும் செல்வாக்கு பெற்று, கிட்டத்தட்ட எல்லா மாநிலங்களிலும் மத்தியிலும் ஆட்சி செய்தது காங்கிரஸ். அவ்வளவு வாய்ப்புக்களும், வசதிகளும் இருந்தும் நிர்வாகத்தில் நல்ல அனுபவம் இருந்தும், இந்த உணவுப் பிரச்னையைத் தீர்க்க முடியவில்லை. அப்படி இந்தப் பிரச்சினையைத் தீர்க்காமலே வெளியேறியிருக்கிறது. ஒரு பயங்கரமான நிலையை விட்டு விட்டுச் சென்றிருக்கிறது. வெளியேறுவதற்கே அதுதான் காரணம் என்றால், இப்பொழுது வந்திருக்கும் ஆட்சிக்கு அது ஒரு பாடமாக எடுத்துக் கொள்ளக் கூடியது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, கட்சி பலத்தை மட்டுமே பயன்படுத்திக் கொண்டால் போதாது. அதற்கும் மேலாக எல்லாக் கட்சிகளின் உறுப்பினர்களையும் கொண்ட ஒரு குழுவை அமைத்து—குறிப்பிட்ட காலத்தில் வேலையை முடிக்க வேண்டும் என்று கட்டளை கொடுத்து அதற்காக முயல வேண்டும். இது புகார்களுக்கு இடம் கொடுக்காததாக இருக்கும் என்று எண்ணுகிறேன். அப்படிப்பட்ட பணியில் இந்த அமைச்சரவைக்கு எனது தமிழரசுக் கழகத்தின் பரிபூர்வமான ஆதரவு இருக்கிறது என்பதைத் தெரிவிக்கிறேன்.

மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அந்தக் கோடியிலும், நான் இந்தக் கோடியிலும் இருக்கிறோம். இரு வேறு திசைகளைப் பார்த்துக் கொண்டும் இருக்கிறோம். ஆனாலும், இந்த உணவுப்



1967 மார்ச் 27] [திரு. ம. பொ. சிவஞானம்]

பிரச்னையில், மொழிப் பிரச்சினையில், மாநிலங்களுக்கு அதிகப்படியான அதிகாரங்கள் கொடுக்க வேண்டும் என்பதில் நாங்கள் ஒரே இடத்தில்தான் இருக்கிறோம்; ஒரே இதயத்தினராக, ஒரே கொள்கையினராக இருக்கிறோம். தேர்தலில் கைகோர்த்து நின்றிருந்தோம். தமிழரசு கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஏற்பட்ட அந்தத் தோழமை இன்னமும் நீடிக்கிறது. அந்தத் தோழமை பயன்படும் என்று நினைக்கிறேன்.

சேலம் இரும்பாலை பற்றி கவர்னர் உரையில் குறிப்பிடப்படவில்லை என்றாலும்; சர்வகட்சி சேலம் உருக்காலை குழுவின் தலைவன் என்ற முறையில் அதுபற்றி நினைவூட்ட விரும்புகிறேன். அது என்ன வயதிலே பிறக்க வேண்டுமோ, அந்த வயதில் பிறக்கவில்லை. பத்து மாதத்தில் பிறக்க வேண்டியது இன்னும் பிறக்கவில்லை. 'எப்படியும் பிறக்கும்' என்றால், உயிரோடு பிறக்கவேண்டுமே என்றுதான் கவலை. "எப்படியும் பிறக்கும்" என்று முன்பு இருந்தவர்கள் சொன்னார்கள். அதில் எனக்குச் சந்தேகமே இல்லை. 'எப்படி பிறக்கும்', என்பதுதான் இப்போது பிரச்சினை. கவர்னர் உரையில் இல்லாவிட்டாலும் கூட, மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களும, மற்றும் தொழில் அமைச்சர் அவர்களும் இதில் பொறுப்பு எடுத்துக்கொண்டு, இரண்டில் ஒன்றைத் தெரிவித்தாக வேண்டும். மாநில அரசாங்கமே எடுத்துக்கொண்டு நிறைவேற்றுவதானால், அதில் எனக்குத் தடை இல்லை. தமிழகத்திற்கு நீதி வழங்கப்பட இல்லை. மூன்றாவது திட்டத்திலேயே சேர்த்து, பல லட்சத்தைச் செலவழித்து இடம் வாங்க ஆரம்ப ஏற்பாடுகளெல்லாம் செய்து முடித்து, அதற்குப் பிறகும் இன்னும் இது தீர்க்கப்படவில்லையென்றால் நான்காவது திட்டத்திலாவது சேரும்கள். முதல் பந்தியில் குந்த வைத்துவிட்டு, மீண்டும் அவனை இழுத்து எழுப்பிவிட்டு 'கடைசிப் பந்தியிலாவது இடம் கிடைக்குமா? என்று கேட்டால், விருந்தாளிக்கு மதிப்பு இல்லை என்றுதான் பொருள். பதினேழு மாநிலங்களைக் கொண்ட இந்தப் பாரதத் திருநாட்டில், முதல் பந்தியில் சேலத்தை குந்த வைத்துவிட்டு பின் மூன்றாவது திட்டத்தில் இல்லை என்று எழுப்பிவிட்டு, கடைசிப் பந்தியில் இடம் கிடைக்குமா என்பது சந்தேகம். ஏற்கனவே ஏற்பட்ட அவமானத்திற்கு என்ன பரிகாரம் என்று எனக்குத் தெரியவே இல்லை. இது மத்திய திட்டத்திலேயே சேர்க்கப்பட்டு, மத்தியத்தினுடைய பணத்திலேயே மீண்டும் இதைத் தோண்டிவர முடியுமானால் நல்லது என்று நான் நினைக்கிறேன். இல்லையானால், மத்தியத்தோடு மோதச் சொல்லுவது என்னுடைய கொள்கை அல்ல. ஏற்கனவே அங்கு எல்லாம் பலவீனப்பட்டிருக்கக்கூடிய நிலையில், அந்தப் போராட்டத்தைத் துவக்கும்படி நான்—தேச பக்தியுடைய இந்தியன் என்ற முறையில் சொல்ல மாட்டேன்.

இந்த மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்ற பெயர் இருக்க வேண்டும். கவர்னர் உரையில் அத்தகைய குறிப்பு இல்லை என்ற குறையை நான் பார்க்கிறேன். ஏற்கனவே இருந்த ஆட்சி எடுத்த முடிவு, மொழி அளவில், 'தமிழ்நாடு' என்று பெயர் வைத்து

[திரு. ம. பொ. சிவஞானம்] [1967 மார்ச் 27

அழைப்பதோடு வைத்துக்கொண்டுவிட்டது. அரசியல் சட்டத்தில் 'தமிழ்நாடு' என்ற பெயர் ஏறவேண்டும் என்று நான் ஏற்கனவே தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அந்தத் தீர்மானத்தை இந்த மன்றத்தில் கொண்டுவர அனுமதித்து, இந்த ஆட்சி ஏற்ருல் ஏக மனதாக அனுப்பி வைக்கலாம். இல்லையானுல், ஆட்சியின் சார்பி லேயே அந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டால் நான் அங்கீகரித் துக் கொள்ளுகிறேன். இங்கு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி ஜனுதிபதிக்கு அனுப்புவது, பாராளுமன்றத்தில் ஒரு மசோதா கொண்டுவரப்படுவதற்கு அனுகூலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஏற்கனவே ஆட்சியில் இருந்தவர்கள் ஏன் அதைத் தள்ளிப்போட்டார்கள் என்று புரியவில்லை. இனியும் தாமதம் இருக்கக்கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள்.

கடைசியாக, கல்வி விஷயத்தில் பயிற்சி மொழி எதுவாக இருக்க வேண்டும் என்பதைக் குறித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்பு கிறேன். "தமிழைப் போதனு மொழியாகக் கொண்டு பயின்றவர் களுக்கு உத்தியோகத்தில் சலுகை தரப்படும்" என்று கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்காக நன்றி தெரி வித்துக் கொள்ளுகிறேன். நானும் ஒரு தமிழன், கல்வி அமைச்சர் அவர்களும் ஒரு தமிழர். எனினும், தமிழில் ஆர்வம் உடையவன் என்ற முறையில் அவருக்குத் தனியாக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். இனி என்ன நிலைமை என்று தெளிவாக வேண்டும். கல்வி ஆண்டு நெருங்கிவிட்டது. ஒரு கல்லூரியில் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டுவர வேண்டுமானுல், முன் கூட்டியே அது மனுச் செய்திருக்க வேண்டும் பல்கலைக் கழகத்திற்கு அப்படி மனுச் செய்ய வேண்டிய காலம்கூடக் கடந்து விட்டதாக நான் கருதுகிறேன். அடுத்து வரும் கல்வி ஆண்டிலாவது தமிழ் பயிற்சி மொழி ஆகுமா, இல்லையா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே ஆட்சியில் இருந்தவர்கள், "விரும்பினுல் மாணவர்கள் தமிழிலேயே பயிலலாம்" என்று அனுமதி கொடுத்தார்கள். அது சலுகை.

மிக வேதனையோடு கேட்டுக்கொள்ளுகிறேன். நான் தமிழ் நாட்டில் வாழ்கிறேன். இங்கு தமிழர்கள்தான் ஆளுகிருர்கள். கட்சி மாறிக் கட்சி வந்தாலும், நாம் அத்தனை பேரும் தமிழர்கள் தான். என்பதில் ஐயப்பாடு இல்லை. அந்த நிலையில், தமிழுக்குத் தான் உரிமை இருக்க வேண்டும். அன்னிய மொழிக்குச் சலுகை இருக்க வேண்டும். ஆனுல் நிலைமை என்ன? போதனுமொழி ஆங்கிலம்தான் என்ற விதி நீக்கப்படவில்லை. அதற்கு விலக்காக "விரும்புவோர் தமிழில் படிக்கலாம்" என்ற சலுகை இருக்கிறது. உரிமை ஆங்கிலத்திற்கு; சலுகை தாய் மொழிக்கு! இது உலகத்தி லேயே எங்கும் இல்லாத கொடுமை! இந்த நிலை நீடிக்காமல், தமிழ் அறிந்த ஒருவர்—தமிழில் பட்டம் பெற்ற ஒருவர்— தமிழகத்தில் முதன் முதலாகக் கல்வி அமைச்சராக வந்திருக்கிற இந்தப் பொன்னுன நேரத்தில், தமிழ்த் தாய்க்கு ஏற்பட்ட இழுக்கை அகற்றிவிட வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.



1967 மார்ச் 27] [திரு. ம. பொ. சிவஞானம்]

இரண்டாவது ஒன்று சொல்லுகிறேன்; படிக்கும் மாணவருக்கு எது போதனு மொழி என்ருல், ஒருவர் சரித்திரப் பாடத்தைப் படிக்கிருர். விஞ்ஞானப் பாடத்தைப் படிக்கிருர், மருத்துவப் பாடத்தைப் படிக்கிருர். படிக்கிற மாணவருடைய மொழி எது என்று பார்க்க வேண்டும். படிப்பு சொல்லிக்கொடுக்கும் ஆசிரிய ருக்கும், படிக்கும் மாணவருக்கும் எது பொது மொழியோ, அது தான் போதனு மொழியாக இருக்க வேண்டும் என்பது உலக நியதி. போதிப்பவன் தமிழன். போதிக்கப்படுபவன் தமிழன். கல்லூரி இருப்பது தமிழ்நாட்டில். ஆனுல், போதிக்கப்படும் பயிற்சி மொழி ஆங்கிலம். இது எப்படி வந்தது என்பதுதான் வேடிக்கை. ஆனுல், அதனை ஆராய்வதும் காலம் கடந்த ஆராய்ச்சியாகும். ஆராயவும் தேவை இல்லை. ஆங்கிலம் எப்போது போகும் என்பதுதான் பிரச்சினை. அதைத்தான் கல்வி அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன். ஏற்கனவே இருந்த கல்வி அமைச்சர் 1960-ம் ஆண்டில் ஒரு திட்டம் கொடுத்தார். வெள்ளையறிக்கை சமர்ப்பித் தார். அதில் "1963-ஆம் ஆண்டில் அனைத்துக் கல்லூரிகளிலும் பி. ஏ., பட்டப் படிப்புக்குத் தமிழ்தான் பயிற்சி மொழி, இதை ஏற்காத கல்லூரிக்கு அரசாங்க மானியம் கிடையாது" என்ருர்கள். கட்சி மாருத நிலை இருந்தபோதே—1962-ம் ஆண்டில் அமைச்சர் மாறிய நிலையில்—"இதை நான் ஏற்கமாட்டேன், விரும்புவோர்க்கு விட்டுவிடுங்கள்" என்று கல்வி அமைச்சர் சொன்னுர்கள். திரும்ப வும் கேட்கிறேன்—1960-ம் ஆண்டு நிலைக்குப் போக வேண்டும். பி.யு.சி. ஐச் சேர்த்து, கலைப் பாடங்களைத் தமிழில் கொண்டு வாருங்கள். எனக்கு ஆசை எவ்வளவோ இருந்தாலும், அனுபவத்தைத் தாண்டிப் போக விரும்பவில்லை. பி.யு.சி.-யிலும், பி.ஏ.-யிலும் கலைப்பாடங்களைத் தமிழில்தான் போதிக்க வேண்டும். இதற்கு விதி விலக்கு விரும்பினுல், தமிழர் அல்லாதார்க்கு அளிக்க வேண்டும். பம்பாயிலோ, கல்கத்தாவிலோ இருக்கும் தமிழர் களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை தமிழகத்தில் பிற மொழியினருக்கு நாம் வழங்குவதன் மூலமாகத்தான், அவர் களுக்குக் கிடைக்கச் செய்ய முடியும்.

பயிற்சி மொழி விஷயத்தில் கனம் கல்வி அமைச்சர் அவர்கள், விரைவில் "தமிழ்தான் பயிற்சி மொழி தமிழகத்தில்" என்ற நிலையை ஏற்படுத்தவேண்டும். அடுத்த கல்வி ஆண்டில் அதற்கான வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். தமிழர் அல்லாதாருக்கு ஆங்கில மொழி மூலம் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பும் வசதியும் செய்து தரப்படலாம்; செய்துதரப்பட வேண்டும். தமிழ் மொழி வளர்ச் சிக்காக மட்டும் நான் இப்படிச் சொல்லவில்லை; படிக்கின்ற மாண வர்களுடைய வசதிக்காகவும் சொல்லுகிறேன். அதோடு மட்டு மல்லாமல், தமிழில் கலைச் சொற்கள் வந்து குவிய வேண்டும் என்ற விருப்பத்தோடும் சொல்லுகிறேன். ஒருவர் தாய்மொழியாம் தமிழ் மொழியில் புலமை பெற்ருல், அவர் அனைத்துக் கலையிலும் சிறந்து விளங்க வசதி இருக்க வேண்டும். பொது அறிவையும் பெற இது ஒன்றுதான் வழி, ஆதலால், தமிழைப் பயிற்சி மொழி யாக்க வகை செய்ய வேண்டும் என்று திரும்பவும் கேட்டுக்கொள்ளுகிறேன்—தமிழைப் பயிற்சி மொழியாக்கித்

தமிழுக்கு வாழ்வு அளிக்க கல்வி அமைச்சர் முன்வரவேண்டுப்
திராவிட முன்னேற்றக் கழக மந்திரி சபை ஒரு மகத்தான புரட்சி
க்குப் பிறகு அமைந்திருக்கிறது. நேற்று எதிர்க்கட்சியினரா
இருந்தவர்கள் இன்று ஆளுங்கட்சியாக வந்திருக்கின்றனர். முன்
ஆளும் கட்சியினராக இருந்தவர்கள் இன்று எதிர்க்கட்சியினரா
இருக்கின்றனர். எதிர்க்கட்சி என்னும்போது, காங்கிரஸ் கட்சி
யானது இந்நாட்டில் அப்பட்டமான எதிர்க்கட்சியாகவும் இல்லை
மத்தியிலே அது ஆளுகிறது. மத்தியில் ஆட்சி நடத்தும் கட்சி
இங்கே எதிர்க்கட்சியாக இருக்கிறது. வேறு எங்கும் ஆளுங்கட்சி
யாக இல்லாத ஒரு கட்சி இங்கே மட்டும் ஆளும் கட்சியாக இரு
கிறது. ஆம், இங்கு எதிர்க்கட்சியாக இருப்பது, மத்தியிலே ஆ
கிறது; இங்கு ஆளுங்கட்சியாக இருப்பது, மத்தியிலே எதிர்
கட்சியாக இருக்கிறது. இந்த உறவை வைத்துக்கொண்(
காங்கிரசாரும் திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் கொஞ்ச
நெருங்குவார்களானால், மக்களை நெருக்கும் பிரச்சினைகளைத் தீர்க்
முடியும். அவர்கள் நெருங்கிச் செயல்பட விரும்புவார்களானால்
நாங்கள் கைகொடுக்கக் காத்துக் கொண்டிருக்கிறோம். இவர்
களுடைய ஒற்றுமையால், மாநிலத்திற்குக் கூடுதலான அதிகார
கிடைப்பதோடு, உணவுப் பிரச்சினைக்கும் பரிகாரம் காண முடியு
என்ற நம்பிக்கையோடு நல்ல எண்ணத்தோடு, சகோதரக் கட்சி
களுக்கு வேண்டுகோள் விட்டு, விடைபெறுகிறேன்.

* திரு. இர. இளம்வழுதி : மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவ
அவர்களே, கவர்னர் பெருமானுடைய உரையின் மீது நடைபெறு
நன்றி தெரிவிக்கிற இந்தத் தீர்மானத்தில், நான் என்னுடைய முழு
ஆதரவைத் தெரிவித்து என்னுடைய கருத்துக்களை இங்கே சொல்
முன்வருகிறேன்.

அவர்களுடைய உரையில், கடந்து முடிந்த பொதுத் தேர்தல்
விரும்பத்தகாத சூழ்நிலையின்றி, அமைதியான முறையில் நடை
பெற்றதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் கருத்து ஒரு பெரிய
நல்ல கருத்தாக இருக்கிறது. பெருந்தன்மையாகவும் இருக்கிறது
கடந்த தேர்தலில் என்னுடைய தொகுதியாகிய கடலூர் தொகுதி
யில் காங்கிரசுக்காரர்கள் தேர்தலுக்கு முன்பு செய்த சில காரியா
களை இங்கே சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட
முன்னேற்றக் கழகத்தினுடைய பொருளாளரும், இன்றைய
பொதுப் பணி அமைச்சருமான கலைஞர் கருணாநிதி அவர்கள்
தேர்தலுக்கு முன்பு கடலூருக்கு வந்திருந்தார்கள். கட்சி வேலை
யாகவும், தேர்தல் வேலையாகவும் அவர்கள் வந்திருக்கும்போது
காங்கிரசுக்காரர்கள் ஜீப்களிலும் கார்களிலும் ஏறிக்கொண்டு
கலைஞர் கருணாநிதி அவர்களைத் துரத்தினார்கள். துரத்தும்போது
பல ஆபாசமான வார்த்தைகளைச் சொல்லியும், கலைஞர் கருண
நிதியை அடிப்பேன், வெட்டுவேன், குத்துவேன், கொலை செய்வேன்
என்று பயங்கரமான முறையில் வார்த்தைகளை உதிர்த்ததோடல்
லாமல், அங்கே பயங்கரமான ஆயுதங்களை வைத்துக்கொண்டுப்
மிரட்டினார்கள். ஆனால், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்
நல்ல தத்துவங்களை நாட்டுக்குக் கொடுத்துள்ள எங்களுடைய
தலைவர் அறிஞர் அண்ணா அவர்களுடைய வழிவந்த கழகத்தின்





தொண்டர்கள் அங்கே அமைதி காத்தார்கள். தாய்மார்கள் கண்ணீர் உகுத்தார்கள். அந்த பயங்கரமான காரியம் அங்கே நடைபெற்றிருக்குமானால், அல்லது நீடிக்க விடப்பட்டிருக்குமானால், நிச்சயமாக அங்கு பயங்கரமான படுகொலைகள் நிகழ்ந்திருக்கும்; தேர்தலும் அங்கே நடைபெற்றிருக்காது. இங்கே—உறுப்பினர் கனம் காசிநாத துரை என்று கருதுகிறேன்—அவர்கள் பேசும்போது காங்கிரஸ் கட்சி தங்களுடைய சாதனைகளைச் சொல்லி மக்களிடம் வோட்டுக் கேட்டதாகச் சொன்னார்கள். சாதனைகளை மட்டும் சொல்லியிருந்தால் பாராட்டியிருப்போம். ஆனால், வேதனை தரத்தக்க காரியங்களைச் செய்து, பயங்கரமான சூழ்நிலைகளை உருவாக்கி, அடியாட்களைக் கொண்டு பயமுறுத்தி, காங்கிரசுக் கட்சிக்காரர்கள் கடலூரில் ஓட்டு வேட்டையாடினார்கள். ஆனால், நல்ல காலமாக, கடலூரில் இருந்த பொதுமக்கள் அமைதி காத்து, அராஜகமான வேலையைத் தடுத்து நிறுத்தி, திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களுக்கு வெற்றி தேடித் தந்தார்கள்.

கவர்னர் உரையில் இன்னொரு கருத்தும் சொல்லப்பட்டிருக்கிறது. சிற்சில அரசாங்க ஊழியர்கள், பற்றில்லாமலும், பொது மு.ப. 10-30
வான முறையிலும், தேர்தல் காலங்களில் பணியாற்றியிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்தும் மிகவும் பெருந்தன்மையான கருத்தாகும். ஆனால், தென்னாற்காடு மாவட்ட விளம்பர அதிகாரி என்கிற உத்தியோகத்தில் ஒருவர் இருக்கிறார். அந்த மாவட்ட விளம்பர அதிகாரியை எங்களுக்கு நன்றாகத் தெரியும். காங்கிரசில் இருந்து தேர்தலில் தோற்றவர்கள், இளைஞர் காங்கிரசில் இருந்தவர்கள், வேலை இல்லாமல் இருந்தவர்கள், அவர்களுக்கெல்லாம் காங்கிரஸ் சர்க்கார் சர்விஸ் கமிஷன் மூலமாக வேலை கொடுக்காமல், தாங்களே நேரடியாக வேலை கொடுத்து, அவர்களை நாட்டிலே விளம்பர அதிகாரிகளாகப் போட்டிருக்கிறார்கள். அந்த விளம்பர அதிகாரிகள் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி செய்யக்கூடிய காரியங்களைச் செய்து வந்தார்கள். தேர்தலிலே காங்கிரஸ் வேட்பாளர்கள் என்ன என்ன காரியங்களைச் செய்வார்களோ, அவைகளையெல்லாம் செய்து வந்தார்கள். காங்கிரஸ் பிரசாரத்திற்காக நடத்தப்பட்ட நாடகங்களுக்கே தலைமை தாங்கினார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டிய மகாநாட்டில் இந் நாடகத்தைப்பற்றி நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். தாம் அதுபற்றி நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார். ஆனால் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தேர்தலுக்கு முன்பாக 20-2-1967-ல் நாங்கள் சட்டப்படி ஏற்படுத்தப்பட்டுள்ள நல்ல மரபைக் காத்தோம். காங்கிரஸ் வேட்பாளர்களும் சரி, நாங்களும் சரி எந்தவிதமான ஓட்டு வேட்டையிலும் ஈடுபடாமல் பேசாமல் இருந்தோம். ஆனால், இந்த விளம்பர அதிகாரி இந்த 20—2—1967-லும் தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வசதிகளை வைத்துக் கொண்டு கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் சென்று, காங்கிரஸ் சாதனைகள் இவை என்ற முறையில் சினிமாப் படங்களை போட்டுக் காட்டி, நீங்கள் காங்கிரசுக்கே ஓட்டுப்போட வேண்டுமென்று பிரசாரம் செய்தார்கள். அதுபற்றியும் எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொன்னோம். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்திருந்

தாலும் கவர்னர், தம் உரையில் மிகப் பெருந்தன்மையாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அலுவலர்கள் பொதுவாக இருந்து பணியாற்றியிருக்கிறார்கள் என்று.

அதுமட்டுமல்ல. காங்கிரஸ்காரர்கள் கடந்த பத்தாண்டுக் காலமாக ஏகோபித்துச் சொல்லி வந்தார்கள். நாட்டில் தரமான எதிர்க்கட்சி இல்லை. மாற்றுக் கட்சி இந்த நாட்டில் உருவாகவில்லை என்பதாக காங்கிரஸ் தலைவர் காமராஜரிலிருந்து அன்றையதினம் வரை முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம் வரை வெளியிலும் சொல்லி வந்தார்கள் சட்ட மன்றத்திலும் சொல்லி வந்தார்கள். ஆனால் தமிழ்நாட்டு மக்கள் நல்லதொரு மாற்றுக் கட்சி இருக்கிறது, என்பதை நிரூபித்து, காங்கிரஸ் கட்சியினரை நல்லதொரு எதிர்க்கட்சியாக இருந்து செயல்பட ஒரு வாய்ப்பினை அளித்திருக்கிறார்கள். எதிர்க்கட்சிகள் எந்தெந்த முறையில் பணியாற்ற வேண்டும் என்பதை நிரூபித்துக் காட்டுவதற்கு தமிழ்நாட்டு மக்கள் அரியதொரு சந்தர்ப்பத்தைக் கொடுத்திருந்தும், இன்றைய தினம் இந்த மாமன்றத்தில் பேசும் உறுப்பினர்கள் அரிசி விலையைப்பற்றியும், மந்திரிகள் சம்பளத்தைப் பற்றியும் அடிக்கடி பேசுகிறார்களே தவிர, கொள்முதல் திட்டத்தைப்பற்றியோ நெல் பதுக்கல் பற்றியோ பேசுவதில்லை. அதுமட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளிலே பதுக்கி வைக்கப்பட்டிருக்கிற நெல்பற்றி குறிப்பு கொடுக்கிறார்கள். அதுபோல எந்தக் காங்கிரஸ் எம்.எல்.ஏ.யும் சமூக விரோதச் செயல்களாகிய பதுக்கல் கொள்ளையில் ஈடுபடுகிறவர்களைப்பற்றித் தங்கள் தொகுதியில் ஏதாவது குறிப்புக் கொடுத்திருக்கிறார்களா என்றால் இல்லை. நாட்டில் இருக்கிற உணவு நெருக்கடி நிலைமையைத் தீர்ப்பதற்கு உதவி செய்தார்களா என்றால் இல்லை. அவர்களுக்கு இன்னொரு விஷயத்தையும் நான் சொல்லிக் கொள்வேன்.

நம்முடைய தேசிய கொடி இருக்கிறதே, அந்தக் கொடிக்கும் காங்கிரஸ் கட்சிக் கொடிக்கும் நமக்கு அதிகம் வித்தியாசம் தெரிவதில்லை. படித்தவர்களாகிய நமக்கே அதிக வித்தியாசம் தெரியாதிருக்கும்போது, நமது நாட்டில் இருக்கிற பாமர மக்களுக்குத் தெரிவதில்லை என்று குற்றம் சாட்டிப் பயனில்லை. தேசியக் கொடியில் மூன்று வர்ணங்கள் இருக்கின்றன. மத்தியில் சக்கரம் இருக்கிறது. காங்கிரஸ் கட்சியின் கொடியிலும் அதே மூன்று வர்ணங்கள் இருக்கின்றன. மத்தியில் ராட்டை இருக்கிறது. அதிக தூரத்தில் இருந்து பார்த்தால், ராட்டையிலும் சக்கரம் இருப்பதால், சக்கரமுள்ள தேசியக் கொடியை காங்கிரஸ் கட்சியின் கொடிபோலவே நினைத்துவிடுகிறார்கள். அதன் காரணமாக. தேசியக் கொடிக்கு கொடுக்க வேண்டிய மரியாதையும், அது காங்கிரஸ் கட்சியின் கொடி என்று மக்கள் நினைத்து மதிப்புக் கொடுக்கத் தவறிவிடுகிறார்கள். சினிமாக் கொட்டகையில் பார்க்கலாம். முடிவிலே தேசியக் கொடி காட்டப்படும்போது. பொதுமக்கள் பெரும்பாலும் அந்தக் கொடிக்கு வணக்கம் செலுத்துகின்ற முறையில் இல்லாமல் வேகமாக வெளியேறி விடுகிறார்கள். இதற்குக் காரணமே அது காங்கிரஸ் கட்சியின்





கொடிபோல இருக்கிறது என்பதுதான். காங்கிரஸ் கட்சியின் கொடிக்கு நாம் ஏன் வணக்கம் செலுத்த வேண்டும் என்ற முறையில் பொதுமக்கள் வெளியேறி விடுகிறார்கள். அதுமட்டும் அல்ல. பொது நிகழ்ச்சிகளில் தேசியக் கொடியை ஏற்றும்போது, அதற்கும் மரியாதை செய்யத் தவறிவிடுகிறார்கள். இன்றையதினம் இதன் காரணமாக காங்கிரஸ் கட்சியைப் பார்த்து, உங்கள் கொடியை மாற்றிக்கொள்ளுங்கள் என்று சொல்ல உரிமையில்லை. ஜனநாயக நாட்டில் எந்தக் கட்சியும் தங்களுக்குரிய கொடியை வைத்துக்கொள்ளலாம். ஆனால், எந்தக் கட்சிக் கொடியையும் ஒட்டியிராமல், தேசியக் கொடி என்பது எல்லோராலும் சுலபத்தில் தெரிந்துகொண்டு மரியாதை செய்வதற்குரிய வகையில் அதை மாற்றியமைப்பதற்கு நாம் எல்லோரும் முனைந்து செயலாற்ற வேண்டும். நீங்களும் மத்திய சர்க்காரிடம் எங்களோடு சேர்ந்து எடுத்துரைக்க வேண்டும். அத்தகைய ஒரு கொடி அமைந்தால், நாட்டு மக்கள் அத்தனை பேரும் அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், தேசியக் கொடிக்கு உரிய மரியாதையைச் செலுத்த முன்வருவார்கள். சென்ற வாரம் பஞ்சாபில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. மந்திரியின் காரிலிருந்த தேசியக் கொடியை காங்கிரஸ் கொடி என்று அகற்றிவிட்டு, ஜன சங்கத்தின் கொடியை மாற்றியமைத்ததற்காக சட்ட மன்றத்தில் கூட புகார் எழுப்பப்பட்டது. இந்தச் சூழ்நிலை பஞ்சாபில் மட்டுமல்ல. ராஜஸ்தானிலும் இருக்கிறது, ஒரிஸாவிலும் இருக்கிறது, கேரளத்திலும் இருக்கிறது. மேற்கு வங்கத்திலும் இருக்கிறது, தமிழ்நாட்டிலும் இருக்கிறது. தமிழ் நாட்டில் இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் தங்கள் கார்களில் தேசியக் கொடியை பறக்கவிட்டுக் கொண்டு போனால் பொது மக்கள் அதை வரவேற்பதில்லை. யாரோ காங்கிரஸ்காரர் வருகிறார்கள் என்று நினைத்துக்கொள்கிறார்கள். எனவே, தேசியக் கொடியை தேச மக்கள் அனைவரின் விருப்பத்திற்கும் ஏற்ற வகையில் மாற்றியாக வேண்டும். அதற்கு அரசியல் சட்டத்தை திருத்தியாக வேண்டும். இதற்கு எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து இணைந்து பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, காங்கிரஸ் கட்சியில் இருக்கிற நண்பர்கள் இதை மத்திய சர்க்காரிலிருக்கிற நண்பர்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும். காங்கிரஸ் கட்சித் தலைவருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும். தேச மக்கள் அனைவரும் மதிப்பளிக்கக்கூடிய வகையில் தேசியக் கொடியின் அமைப்பை மாற்றியமைக்க வேண்டுமென்று அருள்கூர்ந்து கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. நாங்கள் ஆட்சியாளர்களுடன் இணைந்து செயலாற்றுவோம், பணியாற்றுவோம் என்று சொன்னார்களே தவிர, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர் பேசுகிறார். 'காங்கிரஸ் கட்சி சட்ட மன்றத்தில் சிறுபான்மையாக இருக்கலாம். ஆனால் மேல் சபையில் பெரும்பான்மையாக இருக்கிறோம். ஆகவே கீழ்ச் சபையில் இவர்கள் எதை வேண்டுமானாலும் நிறைவேற்றிக் கொள்ளட்டும். நாங்கள் மேல்சபையில் பார்த்துக்கொள்கிறோம், தடுத்து நிறுத்துவோம் என்ற முறையில் பேசினார்கள். அதைக் கேட்டபோது நாங்கள் மிகவும் வருத்தப்பட்டோம். நம் சபையில்

எந்த ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும் அது மேல் சபையின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்படுகிறது. மேல் சபையினர் அதை ஏற்றுக்கொண்டால் சரி, ஏற்றுக்கொள்ளாது அதை அங்கீகரிக்க மறுத்தால், மறுபடியும் நம்முடைய சபைக்கே அந்தத் தீர்மானம் வந்து, நம்முடைய சபையினுல் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விடலாம். இப்படியிருக்க வீணுக எதை எதையோ பேசி, காங்கிரஸ்காரர்கள் நாட்டில் ஒற்றுமையைக் குலைப்பதற்காகத்தான் உதவி செய்கிருர்கள். அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன் தயவுசெய்து அவர்கள் ஆட்சியாளருடன் ஒத்துழைக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, இன்னொரு காங்கிரஸ் கட்சி அங்கத்தினர், காங்கிரஸ் சர்க்கார்தான் ஹரிஜனங்களை சட்ட மன்றத்திற்குக் கொண்டு வந்தது என்று குறிப்பிட்டார்கள். காங்கிரஸ் கட்சியின் சார்பிலும் ஹரிஜன சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வேட்பாளராக நிறுத்தப்பட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் ஹரிஜனங்கள் வேட்பாளராக நிறுத்தப்பட்டார்கள். காங்கிரஸ் கட்சியின் சார்பாக நிறுத்தப்பட்ட ஹரிஜன வேட்பாளர்கள் தோற்கடிக்கப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நின்ற வேட்பாளர்கள் வெற்றி பெற்றிருக்கிருர்கள். இதிலிருந்தே அவர்கள் கூறும் வாதம் ஒத்துவரவில்லை. உண்மையில் காங்கிரஸ் கட்சிதான் ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டதா? ஹரிஜன முன்னேற்றத்திற்காக டாக்டர் அம்பேத்கார், பெரியார் ராமசாமி, அறிஞர் அண்ணு ஆகியவர்கள் எந்த அளவிற்குப் பாடுபட்டிருக்கிருர்கள் என்பதை மக்கள் உணர்ந்திருக்கிருர்கள். ஹரிஜனங்களுக்குத் தாங்கள் பாடுபடுவதுபோல காங்கிரஸ் கட்சி சொல்லிக்கொண்டு, அந்த சமூகத்திலுள்ள ஓட்டை லம்ப்பாக' ஓட்டு மொத்தமாகப் பெற்று வந்திருக்கிருர்களே தவிர உண்மையிலே அவர்களுடைய முன்னேற்றத்தில் அக்கறை காட்டவில்லை. ஹரிஜன சமூகத்தின் முன்னேற்றத்திற்கு காங்கிரஸ் கட்சிதான் பாடுபட்டது என்பதை மக்கள் ஏற்றுகொள்ளவில்லை. ஆகவே, இது போன்ற பல கருத்துக்களைச்சொல்லி காங்கிரஸ் கட்சியினர், நல்லதொரு எதிர்க்கட்சியாக இல்லாமல், எதிரிக் கட்சியாக இருப்பது பயனில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் அரசியலில் ஈடு பட்டு ஆட்சியில் நெடுங்காலமாக இருந்து வந்திருக்கிருர்கள். நல்ல காரியங்களைச் செயலாற்றக்கூடிய திறன் படைத்தவர்கள். ஆகவே, இனிமேலாவது நல்ல உருப்படியான கருத்துக்களை நல்கி, நாட்டை எதிர் நோக்கியுள்ள உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எங்களோடு தோளோடு தோளாக இணைந்து நின்று பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கரு. சீமைச்சாமி:** பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் உரையை வரவேற்று எனது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடனேயே, உணவுக்



கொள்கையில் ஒரு பெரிய மாற்றம் இருக்கும் என்பதை விவசாயப் பெருங்குடி மக்களாகிய நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனல், உணவுக் கொள்கையைப் பொறுத்தவரையில், காங்கிரஸ் கட்சியினர் எந்தக் கொள்கையை கடைப்பிடித்து வந்திருக்கிருர்களோ அதே கொள்கையையே திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் பின்பற்றி வருவது விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் கொடுக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னுல், புதிய கொள்கை உருவாக்கப்படும் என்று சொல்லப்பட்டது. ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட முடியும் என்று சொல்லப்பட்டது. தேர்தல் முடிந்த பிறகு விலை கொஞ்சம் இறங்கியது என்ருலும், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் காங்கிரஸ் கட்சியினரின் பழைய கொள்கையையே பின்பற்றிச் செயல்பட்டு வந்ததன் காரணமாக விலைவாசி மீண்டும் ஏற ஆரம்பித்துவிட்டது. சென்னையில் முதலமைச்சர் அவர்கள் பெரிய நிலச்சுவாந்தார்களிடம் கெடுபிடி செய்து கொள்முதல் செய்தாலும், சிறு மிராசுதார்களிடம் அன்புடனும் அரவணைப்புடனும் கொள்முதலைச் செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். இப்படிச் செய்வதன் மூலமாக உணவுப் பிரச்சினை தீர்ந்துவிடப் போவதில்லை. போலீஸ் அதிகாரிகளையும், ரெவின்யூ அதிகாரிகளையும் கொண்டு விவசாயிகளின் வீட்டிற்குச் சென்று நெல்லைச் சூறையாடுவது தவறான கொள்கை என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கட்டாயக் கொள்முதல் ஒன்றினுல் தான் விலைவாசி இறங்கும் என்கிற கருத்தும் தவருனதாகும். உதாரணமாக, சிமெண்டுக்குக் கண்ட்ரோல் இருந்ததை, எடுத்தவுடன், இரும்புக்குக் கண்ட்ரோல் இருந்ததை எடுத்தவுடன், இன்று கட்டிட வேலைக்குத் தேவையான இரும்பு, சிமெண்டு அதிகமாகக் கிடைக்கிறது. வீடு கட்டுகிறவர்களைத் தேடிக்கொண்டு வந்து கொடுக்கிருர்கள். எதற்கும் கட்டுப்பாடு என்று வந்தவுடன் தான் அதற்குப் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. பதுக்கலும் கள்ளச் சந்தையும் ஏற்படுகிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, கட்டாயக் கொள்முதல் திட்டத்தை கைவிட வேண்டும். கட்டாய கொள்முதல் திட்டத்தை எடுத்துவிட்டாலேயே ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று இல்லாவிட்டாலும் ஒரு ரூபாய் 35 காசுக்கு அதிகம் போகாமல் நல்ல அரிசி—நல்ல தரமான அரிசி நிச்சயம் கிடைக்கும் என்பதைச் சொல்லுகிறேன், நெல், சம்பந்தமாக இருக்கிற கண்ட்ரோலை எடுத்துவிட்டாலேயே நல்ல தரமான அரிசி கிடைக்குமென்று சொல்லிக் கொள்கிறேன். பணம் கொடுத்தால் அரிசி கிடைக்கிறது என்று சொல்லும்போது, நிச்சயமாக தமிழ் நாட்டில் உணவுப் பற்ருக்குறை இல்லை என்ருகிறது. நாட்டில் உணவுப் பஞ்சம் இருக்கிறது. கஷ்டம் இருக்கிறது என்று சொன்னுல் பணம் கொடுத்தாலும் அரிசி கிடைக்கக்கூடாது. அப்படியிருக்கும்போது, உணவுப்பற்ருக்குறை நம் ராஜ்யத்தில் இல்லாதபோது விளைகின்ற அத்தனை தானியத்தையும் கொள்முதல் செய்ய அரசாங்கத்திடம் பணமே இல்லாதபோது வீணுக கொள்முதலைத் தீவிரப்படுத்தி, விவசாயிகளை பலவிதமான தொந்தரவு

[திரு. கரு. சீமைச்சாமி] [1967 மார்ச் 27

களுக்கு ஆளாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். கடந்த பத்து நாட்களாக நடந்து வரும் சம்பவங்கள் உண்மையிலேயே வேதனை தருகின்றது. கலப்பை பிடித்து உழுவதைத் தவிர வேறொரு தொழில் தெரியாது. ஆனால் இன்றையத் தினம் பதுக்கல் பதுக்கல் என்று விவசாயிகளின் மனம் புண்படும்படியாகச் செய்யாதீர்கள். 'ஹோர்டிங்' என்ற சொல்லுக்கு அவர் கொண்டிருக்கிற கருத்து என்ன என்பதை முதலமைச்சர் திட்டவட்டமாக விளக்க வேண்டும். நெல்லை உற்பத்தி செய்கிறவர்கள், நெல்லை வீட்டில் வைத்துக்கொள்வது, நெல்லைப் பதுக்குகிறார்கள் என்று கருதப்படுமானால் அதைவிட அநியாயம் வேறு ஒன்றும் இல்லை. கடந்த பத்து நாட்களாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளைப்பற்றி நான் ஒரு ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொண்டுவந்தபோதுகூட கனம் சபாநாயகர் அவர்கள் கவர்னர் உரையின்மீது பேசும்போது அதைப்பற்றிச் சொல்லலாம் என்று குறிப்பிட்டுவிட்டார்கள். முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, போலீஸ் அதிகாரிகளோ, ரெவின்யூ அதிகாரிகளோ, கொள்முதல் செய்கிறபோது தவறாக நடந்து கொண்டார்கள் என்றால், அதை என் கவனத்திற்குக் கொண்டு வரலாம், நான் அதைப் பரிசீலனை செய்வேன். தவறாக நடந்து கொண்டவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வேன் என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு நடந்து வருவது என்ன? பல இடங்களிலே துப்பாக்கி முனையைக் காட்டி போலீசார் அத்துமீறி ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் நுழைந்திருக்கிறார்கள். சாப்பாட்டிற்கு இருக்கிற நெல்லைக்கூட எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள். குறிப்பிட்ட சமூகத்தினரை மிகக் கேவலமாகக்கூட பேசியிருக்கிறார்கள். அரசாங்கம் இதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக உசிலம்பட்டியில் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியும். பூட்டுக்களை உடைத்துக்கொண்டு வீடுகளில் நுழைந்து நெல்லை அள்ளியிருக்கிறார்கள். வீட்டுக்காரர் வீட்டில் இல்லையென்று தாய்மார்கள் சொல்லியும், அவர்களை வீட்டைவிட்டே வெளியேற்றிவிட்டு வீட்டை சீல் வைத்திருக்கிறார்கள். இந்த முறையில் அரசாங்கத்தின் கொள்முதல் முறை நடைபெறுமானால் நிச்சயமாக அடுத்து வருகிற உணவுச் சாகுபடி வெகுவாகப் பாதிக்கப்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, சென்னையிலும், கோவையிலும் கட்டாய ரேஷன் முறை இருப்பதால் எங்களுக்கு அரிசி தேவை என்று சொன்னார்கள். அதற்கு எந்த அளவு தானியம் வேண்டுமோ, அந்த அளவுக்கு விவசாயிகளிடத்தில் அவர்களுடைய சம்மதத்தின்பேரில் அவர்களிடம் கேட்டே பெற முடியும். அப்படியிருக்க வீடுகளிலே புகுந்து பதுக்கல் என்றும் கள்ள மார்க்கெட் என்றும், விவசாயிகளை அடையத்தக்க விதத்தில் துன்புறுத்துவது கொஞ்சங்கூட



1967 மார்ச் 27] [திரு. கரு. சீமைச்சாமி]

சரியல்ல. இன்றைக்கு நம்மிடத்திலே போதுமான பணம் இல்லை. அதற்காக பணக்காரர்கள் வீடுகளிலே புகுந்து அவர்கள் பெட்டியிலே வைத்திருக்கிற பணத்தையெல்லாம் நீங்கள் சூறையாடிக் கொள்ள முடியுமா? பல்லாயிரக்கணக்கான பேர்களுக்குச் சென்னையிலே குடியிருக்க வீடு இல்லை. அதற்காக ஒன்றுக்கும் மேற்பட்ட பணக்காரர்களுடைய வீடுகளையெல்லாம் போலீஸ் துணைகொண்டு ஆக்கிரமித்துக்கொண்டுவிட முடியுமா? அப்படியிருக்க, அநியாயமாக ஏழை விவசாய மக்களை அவர்கள் உற்பத்தி செய்கின்ற தானியத்தை வீட்டில் வைத்திருக்கிறார்கள் என்பதற்காக அவர்கள் வீடுகளிலே புகுந்து அவர்களை இழிவுபடுத்துவது, துன்புறுத்துவது மிகமிகத் தவறான காரியமாகும். உசிலம்பட்டியில் துரைசாமி நாடார் என்பவர் சாப்பாட்டுக்காக நெல்லை வைத்திருந்தார், ஆர்.டி.ஓ. அவர்கள் அவருடைய வீட்டை உடைத்து, அவரை அடித்து அவமானப்படுத்திவிட்டு, அந்த நெல்லை எடுத்துச் சென்றிருக்கிறார்கள். நிச்சயமாக அதை என்னால் ப்ரூவ் பண்ண முடியும். செங்கல்பட்டு மாவட்டத்தில் மஞ்சங்காரணை என்ற கிராமத்திலிருந்து எனக்கு இதோ எழுதி அனுப்பியிருக்கிறார்கள். 16-3-1967 காலை பத்து மணிக்கு 5 லாரிகள் நிறைய இரும்புத் தொப்பியணிந்த எஸ்.ஏ.பி. போலீசார்கள் கொண்டுவரப்பட்டு அந்தக் கிராமத்தில் உள்ள வீடுகள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு இரண்டு போலீஸ்காரர்களை காவல் போட்டு வைத்திருக்கிறார்கள். வீடுகளிலே நெல் இல்லை. பதுக்கல் என்ற பெயரைச் சொல்லி களத்துமேட்டிலேயே அன்று அறுவடை செய்யப்பட்ட நெல்லை அடித்து அதை பறிமுதல் செய்துகொண்டு போயிருக்கிறார்கள். அவர்களுக்கு இதுவரை பணம் கொடுக்கப்படவில்லை. நானும் மதிப்பிற்குரிய மூக்கையா தேவர் அவர்களும் கும்மிடிபூண்டிக்கு அழைத்துச் செல்லப்பட்டோம், அங்கு எட்டு நாட்களாக ஒவ்வொரு வீட்டின் முன்னும் போலீஸ் இருந்தது. நேற்றுத்தான் போலீஸ் வாபஸ் வாங்கப்பட்டது. 16-3-1967 முதல் 23-3-1967 வரை போலீஸ் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால் கிராமங்களில் உள்ள பெண்கள் எல்லாம் தங்கள் வீட்டிலிருந்து வெளியே வர முடியாமல் பீதி அடைந்திருந்தார்கள். ஒருவரிடமிருந்து 100 மூட்டை நெல் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு கொடுத்திருப்பது இந்த ரசீது (ஒரு ரசீதைக் காட்டினார்). அவருக்கு இதுவரை பணம் கொடுக்கப்படவில்லை. 1967-ம் வருஷம் மார்ச் மாதம் 14-ம் தேதி பகல் 3 மணிக்கு களத்து மேட்டில் அம்பாரமாகக் குவிந்திருந்த நெல்லைப் பறிமுதல் செய்தார்கள். ராமக்கண்ணு என்பவர் சாப்பாட்டுக்காக வைத்திருந்த 30 மூட்டை நெல்லையும், விதைக்காக வைத்திருந்த 12 மூட்டை நெல்லையும் பறிமுதல் செய்தார்கள். களத்து மேட்டிலிருந்து நெல்லைப் பறிமுதல் செய்திருக்கிறார்கள். களத்துமேட்டிலே எப்படி கணக்குக் கொடுக்க முடியும். கதிர் அறுத்து முடிந்த பிறகு வேண்டுமென்றால் இத்தனை குவிண்டால் என்று கணக்குக் கொடுக்க முடியுமே தவிர, களத்து மேட்டிலேயே எப்படிக் கணக்குக் கொடுக்க முடியும். பத்திரிகையில் வரும் செய்திகள் விவசாயிகளுக்குத் தெரியாது. தண்டோரா மூலமாக இத்தனை மூட்டை நெல் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்து சிவில் சப்ளைஸ் அதிகாரிகள் மூலம் வசூலிக்க வேண்டுமே தவிர,

போலீசை வைத்து மிரட்டக்கூடாது. போலீசை வைத்து மிரட்டு கிறபோது விவசாயிகள் பயப்படுகிறார்கள். விவசாயிகள் செய்த குற்றம் என்ன? அவர்கள் செய்த ஒரே குற்றம், பெரிய குற்றம் நெல்லை உற்பத்தி செய்ததுதான். இதனால் விவசாய மக்களிடையே பெரிய சலசலப்பு ஏற்படுகிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். கடன்காரர்கள் களத்து மேட்டில் வந்து நின்று கொண்டு கடனைத் திருப்பிக் கேட்பது போல், போலீசார் களத்து மேட்டிற்குச் சென்று விவசாயிகளைத் துன்புறுத்துகிறார்கள். துரைசாமி நாயுடுவிடம் இருந்து நெல் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது, ராஜ கோபால் நாயுடு என்பவரிடமிருந்து 250 மூட்டை நெல் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்டிருக் கிறதே தவிர, இதுவரை பணம் கொடுக்கப்படவில்லை. விவசாயி ஒரு மூட்டை உரத்தை வாங்கவேண்டுமென்றால், பணத்தைக் கையிலே வைத்துக்கொண்டு காத்துக் கொண்டிருக்க வேண்டியிருக் கிறது. ஆனால் அவர்களிடமிருந்து நெல் பறிமுதல் செய்யப்பட்டு 10 நாட்களாகியும் கூட, இதுவரை அவர்கள் பணம் பெற முடியாத கேவலமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமை நீடித்தால் விவசாய உற்பத்தி பாதிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உடனடியாக அந்த விவசாயிகளுக்குப் பணத்தைக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மிகவும் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன் உணவு உற்பத்தியைப் பெருக்கிக் கொடுக்கின்ற அந்த விவசாயிகளை அவர்கள் நல்ல முறையில் உற்பத்தி செய்து காட்டிய பிறகு, அவர்களிடமிருந்து துப்பாக்கி முனையில்; கத்தி முனையில் கொள் முதல் செய்வது பரிதாபப்படக்கூடிய விஷயமாகும். நெல் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிக்குத் திருட்டுப் பட்டம், பதுக்கல் பட்டம். இந்த நிலை நீடித்தால் அவர்கள் இதிலிருந்து தப்பித்துக் கொள்ள அவர்கள் வேறு தொழிலை நாடி ஓடக்கூடிய நிலையில் இருக் கிறார்கள். அந்த விவசாய பெருங்குடி மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் வைகைக் கால்வாய்த் திட்டத்தை நவீனமாக்கும் திட்டம் இருக்கிறது. அதைப்பற்றி முன்பு சட்டசபையில் பேசியபோது, 'டெக்னிகல் அப்ரூவலுக்குச் சென்றிருக்கிறது; வந்தவுடனே நிறைவேற்று வோம்' என்று அப்போதைய பொதுப்பணித் துறை அமைச்சர் ராமையா அவர்கள் கூறினார்கள். இப்போதுள்ள பொதுப்பணித் துறை அமைச்சர் கருணாநிதி அவர்கள் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லுக்கு விலையை ஏற்ற முடியாது என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது நெல்லுக்குக் கொடுக்கப்படு கிற விலை போதாது. மற்றப் பொருள்களை உற்பத்தி பண்ணுகிற வர்கள் அதற்கு இன்ன விலை என்று கேட்கிற நிலையில்; ஒரு





பெட்ரோமாக்ஸ் லைட்டுக்கு இன்ன விலை வேண்டுமென்று கேட்கும் போது, ஒரு கெடிகாரம் விற்கும்போது இன்ன விலை வேண்டு மென்று கேட்கும்போது; நெல்லை உற்பத்தி செய்பவர்கள் மட்டும் அதற்குரிய விலையைக் கேட்கமுடியாத நிலை இருக்கிறது. நெல்லுக் கான விலையை டெல்லி அரசாங்கம் சொல்லி அதைக் கேட்டு மாகாண அரசாங்கம் சொல்லுகிறது. பாடுபட்டு உற்பத்தியைப் பெருக்கிக் கொடுக்கின்ற விவசாய மக்களுக்கு நெல் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, கவர்னர் அவர்கள் உரையை வரவேற்று என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஆர். என். அரங்கநாதன்:** அவைத்தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஒரு சில கருத்துக்களை தெரிவிக்கும் வகையில் முதலில் கவர்னர் பெரு மான் உரையை பாராட்டி வரவேற்கிறேன்.

கவர்னர் உரை என்பது சம்பிரதாயமாக ஏற்பட்ட உரையானா லும்கூட, அது ஆளும் பொறுப்பில் உள்ளவர்கள் தங்களுடைய கொள்கையை எந்த நடைமுறையில் கொண்டு வரப் போகிறார்கள் என்பதைக் கோடிட்டுக் காட்டும் வகையில் நான் கவர்னர் உரை என்ற சம்பிரதாயம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கவர்னர் உரை யிலே காணப்படுகின்ற கொள்கைகள் உண்மையிலேயே பாராட்டுக் குரியனவாக இருக்கின்றன என்பதைக் காரண காரியங்களோடு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கடந்த போன தேர்தலைப் பற்றி கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கும் கருத்து வரவேற்கத்தக்கது. தேர்தல் சமயத்தில் எல்லா அதிகாரிகளும் பாரபட்சமில்லாமல் நடந்து கொண்டார்கள் என்று கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பிட் டிருக்கிறார்கள். தேர்தல் நேரத்தில் பலவிதமான அசம்பாவிதங் கள் நடந்திருந்தாலும்கூட; பாரபட்சமில்லாமல் நடந்தது என்று கவர்னர் அவர்கள் உரையில் கூறப்பட்டிருக்கிறது என்றால், இன்று ஆளும் பொறுப்பில் வந்திருக்கின்ற நாங்கள் எந்தவிதமான பழியையும் யார் மேலும் சுமத்த வேண்டுமென்று வரவில்லை; பண் புடன் வந்திருக்கிறோம்; பக்குவப்படுத்தப்பட்டு இந்தச் சபைக்கு வந்திருக்கிறோம் என்பதைக் காட்டுகிறது. முக்கியமாக பாரதத் திலே இன்று இருக்கிற கூட்டாட்சி முறையிலே மத்திய சர்க்கார் மாகாண சர்க்கார் தொடர்பு பற்றி கவர்னர் அவர்களுடைய உரை யில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கம் கூட்டு ஆட்சி முறையில் இருக்கின்ற காரணத்தால்; மூன்று லிஸ்டின் கீழே— யூனியன் லிஸ்ட், ஸ்டேட் லிஸ்ட், கன்கரண்ட் லிஸ்ட்—அரசாங்கத் திற்கு இருக்கின்ற வரைமுறைகள் அரசியல் சட்டத்திலே வரை யறுக்கப்பட்டிருக்கிறது என்று சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி மெம் பர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஸ்டேட் லிஸ்டில் இருக்கும் விஷயங்களைப் பற்றி மாநில அரசாங்கம் சுலபமாகச் சட்டங்களை இயற்றலாம். ஆனால் மத்திய அரசாங்கம் அவைகளிலும் சில

சந்தர்ப்பங்களில் தலையிடலாம் என்று விதிமுறைகள் இருக்கின்றன. கன்கரண்ட் லிஸ்டை எடுத்துக் கொண்டாலும் வலுவான கரம் மத்திய அரசாங்கத்திற்கு இருக்கிறதே தவிர; மாநில அரசாங்கத்திற்கு இல்லை. இந்திய அரசியல் சட்டம் சிறுகச் சிறுகத் திருத்தப்பட்டு மாநில அரசாங்கத்திற்கு ஒருவிதமான பலமும் இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மாநில அரசாங்கம் சாதாரண பஞ்சாயத்து நிலைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. பிளானிங் கமிஷனுக்கு அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் ஃபுட் கார்ப்பரேஷன் என்று ஒரு நிறுவனம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் என்ற அமைப்பை ஏற்படுத்தி அந்தக் கவுன்சிலுக்கும் அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கும் அதிகாரம் அதனிடமும் கொடுக்கப்பட்டிருக்கிறது பொதுத் தேர்தலுக்குப் பிறகு காங்கிரஸ் அல்லாத சர்க்கார் ஏற்பட்டிருக்கிற அநேக மாநிலங்கள் மத்திய சர்க்காரோடு போராடி அதிகமான அதிகாரங்களைப் பெறமுடியுமா என்ற பிரச்சினையில் ஈடுபட்டிருக்கிறார்கள். கேரள மாநிலத்திற்கு உணவுப் பொருள் கொடுக்க வேண்டுமென்று கேட்டபோது; நேற்று ஆந்திர முதலமைச்சர் அவர்கள் " Centre will decide what Kerala will get " என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்திற்குப் பரிபூரணமான அதிகாரத்தைக் கொடுக்கும் வகையில் பேசியிருக்கிறார்கள். " We want a strong centre." பலமான மத்திய அரசாங்கம் வேண்டுமென்றும் அத்தனை உரிமைகளையும் காங்கிரஸ் அல்லாத சர்க்கார் இருக்கின்ற மாநிலங்களுக்குக் கொடுக்கக் கூடாது என்ற கருத்தைத் தெளிவுபடுத்துகின்ற முறையில் சொல்லியிருக்கிறார்கள். திரு. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் இவ்வாறு சொல்லியிருப்பது மற்ற மாநில மக்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது.

காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசும்போது பொதுவாக ஒன்றை எதிர்பார்த்தேன். ஒத்துழைப்பு தருகிறோம், ஒத்துழைப்பு தருகிறோம் என்று பேசிவந்தார்களே தவிர அவர்கள் சொல்ல மறந்தது, அவர்கள் சொல்லக் கடமைப்பட்டது மத்திய சர்க்கார் எங்கள் கட்சி சர்க்காராக இருந்தாலும் உங்களோடு சேர்ந்து கொண்டு மத்திய சர்க்காரிடம் போராடி மத்திய அரசாங்கத்திலிருந்து வரவேண்டிய நிதிச் சலுகைகள் எல்லாவற்றையும் ஏற்படுத்தித் தருவோம் என்று ஒருவர் கூடச் சொல்லவில்லை. மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது குறிப்பிடுவார்கள் என்று நினைத்தேன். ஒத்துழைப்பு தருவோம் என்று சொன்னார்களே தவிர எந்த வகையில் தருவார்கள் என்பதை தெளிவாகக் காட்டவில்லை. அவர்கள் தரக் கூடிய அல்லது சொல்லக் கூடிய ஒத்துழைப்பு அரசியல் ரீதியில் அரசியல் அகராதியில் அரசியல் வாதிகள் பேசுகிற ஒத்துழைப்பாக இல்லாமல் மன சுத்தியுடன் ஒத்துழைப்பு தந்து மத்திய சர்க்கார் அமைச்சரவையிடம் திருமதி இந்திரா காந்தி அவர்களிடம் நேரிடையாகச்

மு. பகல் 11-00 சென்று பேசும்போதோ அல்லது மற்றவர்களுடன் கலந்து பேசும்போது எங்களை தமிழ் நாட்டு மக்கள் வரவேற்க வில்லை என்றால் அதற்குக் காரணம் நீங்கள் எவ்வளவோ அதிகாரங்களை எங்களிடம்



இருந்து பிடுங்கிக் கொண்டபோது எங்கள் அமைச்சரவை மௌனமாக இருந்து விட்டது. அதனால்தான் இன்று மாநில அரசு நிர்வாகம் திராவிட முன்னேற்றக கழகத்தினிடம் போய் விட்டது என்று கூறி நமக்கு எல்லாச் சலுகைகளையும் பெற்றுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாநில சர்க்கார்களுக்கு கொடுக்கக் கூடிய மானியங்கள் இரண்டு வகையானவை. ஒன்று ஸ்டாச்சுட்டரி கிரான்ட்ஸ். இன்னொன்று டிஸ்க்ரிஷனரி கிரான்ட்ஸ். டிஸ்க்ரிஷனரி கிரான்ட்ஸ் என்றால் சாதாரணமாக பிளானிங் கமிஷன் மாநிலங்களுக்கு ஒதுக்குகிற நிதியைப் பொறுத்திருக்கிறது. மத்திய அரசு அதிகப்படியான அதிகாரங்களை வைத்திருப்பதனால்தான் பிளானிங் கமிஷன் உறுப்பினர்கள் சென்னை மாநிலத்திற்கு இவ்வளவுதான் முடியும் என்று ஏற்கனவே நான்காவது திட்டத்தில் இவ்வளவு டார்ஜெட் என்று ஏற்படுத்தப்பட்டிருந்தாலும்கூட வர வர ஆண்டொன்றுக்கு டார்ஜெட்டைக் குறைத்துக் கொண்டு போய் அது பாதி அளவிற்கு வருகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்திய அரசியல் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள பைனான்ஸ் கமிஷன் மூலம் கொடுக்கப்படுகின்ற ஸ்டாச்சுட்டரி கிரான்ட்ஸ் டிஸ்க்ரிஷனரி கிரான்டை விட மூன்று மடங்கு குறைவாக இருப்பதால்தான் இன்றையதினம் மாநில சர்க்காருக்கு இந்திய அரசியல் சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள அளவிற்கு பைனான்ஸ் கமிஷன் கொடுக்க முடியாத ஒரு பரிதாபகரமான நிலை ஏற்பட்டிருக்கிறது. பைனான்ஸ் கமிஷன் பிளானிங் கமிஷன் இவற்றிடையே எந்தச் சிக்கல் இருந்தாலும் சரி இந்த இரண்டு கிரான்ட்கள் சமநிலைப்படுத்தப்பட்டு மாநில அரசுகளுக்கு கிரான்ட்ஸ் கொடுப்பதில் எந்தவிதமான பாரபட்சமும் இருக்கக் கூடாது. 1967-ம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு ஏற்பட்டிருக்கும் அரசியல் சூழ்நிலையில் மாநில அரசுகளை உதாசீனப்படுத்தினால் அப்படி உதாசீனப்படுத்தி நியாயமாகச் சேர வேண்டிய நிதி வகைகள் கிடைக்காது மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்தால் நிச்சயமாக வேறு விதமான போக்குக்கு இந்த மாநில மக்களை அவர்கள் அழைத்துக் கொண்டு போவதாக இருக்கும். கூட்டாட்சியில் இருக்கிற இந்த நடைமுறையை சிறிது மாற்றியமைக்க தவறிவிட்டால் நிச்சயமாக மாநில அரசுகளும் அதன் உணவுக் கொள்கைகளும் நல்லமுறையில் நன்மைகள் ஏற்படாது பயங்கரமான நிலையை ஏற்படுத்தியவர்களாவார்கள்.

(மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் தலைமை)

உணவுக் கட்டுப்பாடாக இருந்தாலும் சரி கொள்முதல் கொள்கையாக இருந்தாலும் சரி உற்பத்திப் பெருக்கக் கொள்கையாக இருந்தாலும் சரி எந்தக் கொள்கையையும் நடைமுறைக்கு கொண்டு வர வேண்டுமென்றாலும் சமஷ்டி அரசாங்கம் என்று உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்ட பின்னர் மத்திய சர்க்காரைத்தான் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் சொல்லலாம், எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங்கத்தின் மீது குற்றம் சொல்வது என்றால் பொறுப்பை தட்டிக் கழிக்கிறீர்கள் என்று சொல்லலாம். பொறுப்பை எந்த அளவிற்கு ஏற்றுக்கொள்ள வேண்டுமோ அந்தப் பொறுப்பை திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் ஏற்றுக் கொள்ளத் தயார். ஆனால் பெரிய பெரிய திட்டங்களை எடுத்து வைத்துக்கொண்டு நான்காவது திட்டத்தில் திட்டக் கமிஷன் இந்த

[திரு. ஆர். என். அரங்கநாதன்] [1967 மார்ச் 27]

மாநில அரசுக்கு இவ்வளவு என்று டார்ஜெட் போட்டு வைத்துக் கொண்டு அதை நிறைவேற்றுவதற்கு நிதி கேட்கும்போது உதாசீனப்படுத்துவார்களேயானால் பொறுப்பை மத்திய சர்க்காரிடம் போடாமல் வேறு யாரிடம் போட முடியும்? ஏற்கனவே அரசியல் சட்டத்தில் மத்திய அரசுக்கு இன்னின்ன அதிகாரங்கள் இருக்கின்றன என்று சொன்னாலும் மத்திய அரசு டயரக்டிவ் ப்ரின்சிப்பிள்ஸ் என்ற அதிகாரத்தின் கீழ் அநேகவிதமான டயரக்டிவ்ஸை இந்த மாநில அரசுக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்தவிதமான போக்கு இன்னும் நீடித்துக் கடைபிடிக்கப்படுமானால் நிச்சயமாக இந்த டயரக்டிவ் பிரின்சிப்பிள்ஸ் கீழ் அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்தவர்களாவார்கள். சாதாரண செகரட்டரிகள் மட்டுமல்ல மத்திய சர்க்காரில் அந்த அந்த டிப்பார்ட்மெண்டிலுள்ள அதிகாரிகள் மாநில அரசுக்கு டயரக்டிவ்ஸ் என்ற முறையில் அனுப்பிவைக்கிறார்கள். ஒரு பிரச்னை எழுகிறது. இந்தமாதிரியான டயரக்டிவ்விற்கு மாநில அரசு கீழ்படியாமல் உதாசீனப்படுத்தினால் அல்லது அதற்கு மாறாக நடந்து கொள்ள முடியுமா என்ற சட்டச் சிக்கல் ஏற்படுமானால் இந்திய அரசியல் சட்டத்தில் கீழ் படிய வேண்டுமென்று சட்டம் கிடையாது. டயரக்டிவ்ஸை ஒப்புக்கொள்ளாமல் போனால் நிதிப் பிரச்னை ஏற்படும்போது மத்திய அரசு எங்கள் டயரக்டிவ்ஸை ஏற்றுக் கொள்ளவில்லை, உதாசீனப் படுத்தினீர்கள், கீழ்படியாமல் இருந்து விட்டீர்கள், ஆகவே நிதி வசதி செய்ய முடியாது என்று சொல்லும் நிலை ஏற்படும். ஆகவே சமஷ்டி முறையில் நிச்சயமாக நிதி பகிர்ந்தளிப்பதில் சில மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும். அதற்கு கான்ஸ்டிட்யூஷன் அமெண்ட்மெண்ட் இல்லாமலேயே மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர்கள் ஒத்துழைத்தால் நிச்சயமாக மாநில அரசுகளுக்கு கொடுக்கக் கூடிய டயரக்டிவ்ஸை கொஞ்சம் குறைத்துக் கொண்டால் போதும், நம் திட்டங்களை சரிவர நடத்தமுடியும் என்று கூறிக்கொள்கிறேன். நமக்கு நிதி ஒதுக்கும்போது நீங்கள் இந்த அமைச்சரவைக்கு வேண்டிய ஒத்துழைப்பைத் தரவேண்டும்.

உணவுக் கொள்கை பற்றி பேசியவர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். சுதந்திரா கட்சி உறுப்பினர் திரு. சீமைச்சாமி அவர்கள் மனம் நொந்து வேகமாகப் பேசினார்கள். கட்டாயக் கொள்முதல் மூலம் போலீஸ் கெடுபிடி நடக்கிறது. அராஜகம் நடக்கிறது என்று உதாரணங்கள் காட்டினார்கள். அவர்களின் தகவல் எந்த அளவிற்கு உண்மையோ அல்லது இல்லையோ என்பது ஒரு விசாரணைக்குப் பின்னால்தான் தெளிவுபடுத்திக் கொள்ள முடியும். அதிகாரிகள் மனோபாவம் இன்னும் மாறாமல் இருக்கலாம். அவர்கள் எந்த முறையில் நடந்து கொள்கிறார்கள் என்பதை சரியாகக் கவனித்து நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள சிறிது அவகாசம் தேவை. ஆங்காங்கு சிலயிடங்களில் மாறுபட்டிருந்தாலும் அதிகாரிகளின் எந்தவிதமான நடவடிக்கைகளும் சட்டத்திற்கு உட்பட்டதாகத்தான் இருக்கும். 'Madras Paddy and requisitioning Rules' 1964-1966 படியுள்ள இந்த இரண்டு சட்டத்தையும் எடுத்துப் பார்த்தால் 'Not below the rank of Deputy Tahsildar and Sub-Inspector' என்றுதான் இருக்கிறது.



1967 மார்ச் 27] [திரு. ஆர். என். அரங்கநாதன்]

'Not below the rank of Deputy Collector'. என்று ஒரு டெப்டி கலெக்டர் தான் இந்த மாதிரியான கட்டாயக் கொள்முதல் பதுக்கலைப் போய் பிடிக்கலாம் என்று ஏற்படுத்தினால் கொஞ்சம் பொறுப்புள்ள அதிகாரிகளிடம் பொறுப்புக்களை ஒப்படைத்து விட்டு அவர்களை அமைச்சரவை நேரடியாகக் கூப்பிட்டுக் கேட்கவோ அல்லது நடவடிக்கை எடுக்கவோ முடியும். 7-வது ரூலில் Sub-Inspector or any other person authorised by them என்றிருப்பதால் கான்ஸ்டேபில் கூட நேரடியாகப் போய் எந்த வேளையிலும் நடவடிக்கைகள் எடுக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட குற்றச் சாட்டுக்கள் எந்தச் சட்டம் ஏற்படுத்தப்பட்டபோதும் வரும். மதராஸ் ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் ஆக்ட் 41-வது விதியின்கீழ் சேல்ஸ் டாக்ஸ் ஆபீசர்கள் கடைகளில் நுழைகிறார்கள், வீடுகளில் நுழைகிறார்கள், கணக்குப் புத்தகங்களைப் பறிமுதல் செய்கிறார்கள் என்றெல்லாம் குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டன. அதற்குப் பிறகு ஏற்படுத்திய சில திருத்தங்களின் மூலம் அது சமன்படுத்தப்பட்டு எந்தவிதமான சிக்கலும் பிரச்சினையும் ஏற்படாமல் செய்து கொண்டோம். அதேபோன்று நமது உணவுக் கொள்கையிலும் உடனடியாக சில சின்ன திருத்தங்களை செய்து கொண்டால் நிச்சயமாக நல்ல பலனை அடைய முடியும். எஸென்ஷியல் கமாடிட்டீஸ் ஆக்ட் 55 படி மத்திய அரசு ஏற்படுத்திய அந்தச் சட்டத்தின்கீழ் அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கரம்பு நிலங்களைக்கூட சீர்திருத்தி பயிராக்கும் நிலை அதன்கீழ் இருக்கிறது. அந்த ஆக்டை நல்ல முறையில் பிரயோகித்தால், ஃபுட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா, நாஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் இவ்விரண்டிலிருந்தும் நியாயமாக கிடைக்கவேண்டியது கிடைத்தால் தமிழகத்திலுள்ள கரம்பு நிலங்களை எடுத்து பயிர் செய்யக் கூடிய நிலங்களாக மாற்றியமைத்துக்கொள்ள முடியும். உணவுக் கொள்கைபற்றி பேசும்போது மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் சிறிது ஆத்திரத்தோடு கூட கேட்டார்கள். பதுக்கல் என்பது காங்கிரஸ்காரர்கள் மட்டுந்தான் பதுக்கல்காரர்களா, தி.மு.க.வினரிடம் இல்லையா என்று கேட்டார்கள். அவர்கள் கூறியதிலிருந்து இரண்டு உண்மைகள் தெளிவாகின்றன. காங்கிரசில் பதுக்கல்காரர்கள் இருக்கிறார்கள் என்பது முதல் உண்மை. பிறகு தி.மு.க.வில் பதுக்கல்காரர்கள் இருக்கமாட்டார்களா என்று ஏங்குவதுபோலவும் இருந்தது. பதுக்கல்காரர்கள் சமூக விரோதிகள் என்று எல்லாக் கட்சிக்காரர்களும் ஒப்புக் கொள்கிறார்கள். எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி கறை படியாத கரங்களோடு நடவடிக்கை எடுக்க வந்திருக்கிறோம், எங்கள் கட்சியில் இருந்தாலும் தகவல் கொடுத்து பிடிக்கிற நிகழ்ச்சி தெரிந்திருக்கலாம், இல்லாவிடில் சொல்கிறேன், எங்கள் கழகத்தில் ஆதரவாளர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் பதுக்கல்காரர்களாக இருந்தால் அப்படி சந்தேகப்பட்டால் தகவல் கொடுத்து பாகுபாடு இன்றி ஜனநாயக முறையில் நடந்துகொள்ள எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு உங்கள் ஆதரவு நிச்சயமாக இருக்கும் என்றும் நான் நம்புகிறேன்.

மதிப்பிற்குரிய நண்பர் மார்ட்டின் அவர்கள் பேசும்போது—அவர் ஒரு வழக்கறிஞர்—அவரிடம் நான் நிறைய எதிர்பார்த்தேன். ஆனால் அவர் திரும்பத் திரும்ப இந்த சம்பளப் பிரச்னையைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறாரே தவிர, முக்கியமான பிரச்னைகளாக இருக்கிற உணவுப் பிரச்னை போன்ற பிரச்னைகளைப் பற்றிப் பேசவில்லை. இந்தப் பிரச்னைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து காங்கிரஸ் உறுப்பினர்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். ஒத்துழைப்பு என்றால் மற்ற மாநில சர்க்கார்களில், காங்கிரஸ் சர்க்கார்களும் இருக்கின்றன. நமது மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் அவர்கள் ஆந்திர மாநிலத்திற்கு வருகிற 30-ம் தேதி போகும்போது மதிப்பிற்குரிய கருத்திருமன் அவர்களோ, மதிப்பிற்குரிய விநாயகம் அவர்களோ, மதிப்பிற்குரிய பொன்னப்ப நாடார் அவர்களோ அமைச்சர் அவர்களின் கூடவேயோ அல்லது தாங்களாகவோ போய் மதிப்பிற்குரிய ஆந்திர முதலமைச்சரான திரு. பிரம்மானந்த ரெட்டியைச் சந்தித்து நமது மாநிலத்திற்கு உணவு தரவேண்டியதன் அவசியத்தை எடுத்துச் சொல்லலாம். மதிப்பிற்குரிய பிரம்மானந்த ரெட்டி அவர்கள் பலம் வாய்ந்த மத்திய சர்க்காரை ஏற்படுத்தவேண்டுமென்று சொன்னாலும் தமிழகத்தின் உணவுப் பிரச்னை எவ்வளவு முக்கியமானது என்பதைப் பற்றி எடுத்துச் சொல்லலாம். அப்படி நேரடியாகப் போகாவிட்டாலும்கூட எல்லாவிதத்திலும் ஒத்துழைப்பைத் தரலாம் என்று கூறிக் கொள்கிறேன்.

இந்த மூவ்மெண்ட் கண்ட்ரோல் இருக்கிறதே அதாவது ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவிற்கோ அல்லது ஒரே ஜில்லாவில் ஒரு நோட்டிஃபைட் ஏரியாவிலிருந்து இன்னொரு நோட்டிஃபைட் ஏரியாவிற்கோ போவதைத் தடுக்கக்கூடிய முறையில் இருப்பதிலே ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவிற்குப் போவதிலே கட்டுப்பாடு ஏற்படுத்தலாமா, ஒரு நோட்டிஃபைட் ஏரியாவிலிருந்து இன்னொரு நோட்டிஃபைட் ஏரியாவுக்குப் போவதிலுள்ள கட்டுப்பாட்டை எடுத்து விடலாமா என்பதைப் பற்றி யோசிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** கனம் உறுப்பினர் அவர்களிடத்திலே ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். பறிமுதல் செய்வதைப் பற்றி கனம் உறுப்பினர் அவர்கள் தங்கள் கருத்தைக் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பறிமுதல் செய்வதிலே கோர்ட்டில் பறிமுதல் செய்யவேண்டுமா அல்லது அதிகாரிகளுக்குப் பறிமுதல் செய்ய அதிகாரம் வழங்க வேண்டுமா என்ற கருத்தைச் சொன்னால் சிறப்பாக இருக்கும்.

**திரு. ஆர். என். அரங்கநாதன் :** மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் ஆளும் கட்சியின் கருத்தைத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதிகாரிகளுக்குக் கொடுக்கும் அதிகாரங்களைக் கடைசி நிலையில் இருக்கிற அதிகாரிகளுக்குக் கொடுத்து விட்டால் அவர்கள் எடுக்கிற எந்தவிதமான சட்டவிரோத





நடவடிக்கையும் போக்க முடியாது என்ற காரணத்தினால் டெபுடி கலெக்டர் டெபுடி சூப்பரின்டென்டென்ட் ஆப் போலீஸ் அளவில் உள்ள அதிகாரிகளுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுக்கலாம் என்று என்னுடைய யோசனையாகத் தெரிவித்தேன். பறிமுதல் செய்வது நல்லதா, கெட்டதா என்பதைப் பொறுத்தவரையில் மதிப்பிற்குரிய மந்திரி சபை எல்லாவற்றையும் யோசித்துத் தீர்மானித்திருக்கிறது, நடைமுறை நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வந்திருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த கூட்டுறவு இயக்கத்தில் நடந்து வருகிற ஊழல்களை எடுத்துக் கோடிட்டுக் காட்டி, கூட்டுறவு சங்கக் கடன்கள் ஏழை மக்களுக்குப் போய் சேரவில்லை என்று கவர்னர் உரையில் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இது குறித்து ஒரு குழு அமைப்பது பற்றியும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். கூட்டுறவு நிறுவனங்களில் உள்ள அந்தந்த போர்டையும் தலைவர்களையும் 6 மாத காலத்திற்காவது நீக்கி வைக்க, அதாவது குழு தீர்மானிக்கிற வரையில் அவர்களை நீக்கி வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏனென்றால் அநேகக் கூட்டுறவுச் சங்கங்களில் போர்ஜரிகளை விளையாட்டாக எடுத்துக்கொண்டு, நாமினல் லோன்ஸ் என்று சொல்லி, பினாமி லோன்ஸ் என்று சொல்லி, லட்சக் கணக்காக ரூபாய் கையாடப் பட்டிருக்கிறது. அமைச்சரவை நல்ல நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதை நிச்சயமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த நடவடிக்கைகளில், குழு அமைக்கப்பட்டு, உடனடியாக எல்லாவிதக் கூட்டுறவுச் சங்கங்களிலும் வெளியே போயிருக்கிற கடன்கள் எவ்வளவு, அந்தக் கடன்களை உண்மையாக வாங்கியவர்கள் யார், ஃபோர்ஜரி நடந்திருக்கிறதா பினாமி நடந்திருக்கிறதா என்று ஆராய்ந்து முடிக்கிற வரையில், குழு தன்னுடைய அறிக்கையை சமர்ப்பிக்கும் வரையில் கூட்டுறவு சொசைட்டிகள் நடைமுறைக்கு வராமலிருக்க அவைகளை சூபர்வீட் செய்து அரசாங்க செக்கரட்டரி போட்டு வைத்தால் குழுவின் பணிக்கு உதவியாக இருக்கும். ஏனென்றால் அவர்கள் பாட்டுக்கு கூட்டுறவுச் சங்கங்களை நடத்திக்கொண்டிருந்தால், அந்த நேரத்தில் குழுவும் தன்னுடைய ஆலோசனையை நடத்திக்கொண்டிருந்தால் அவர்கள் நல்ல முடிவுக்கு வர முடியாத நிலைமை ஏற்படும்.

ஆகவே, இந்த கவர்னர் உரையைப் பாராட்டி, இந்தப் பேரவையில் கவர்னர் அவர்கள் உரை நிகழ்த்தியதற்காக நன்றி செலுத்தி இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் :** இன்னும் 25 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். இனி பேசுகிற உறுப்பினர்கள் பதினைந்து நிமிடங்களுக்கு மேல் போகாமல் பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*** திரு. சி. கோவிந்தராஜன் :** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரையின்மீது நடந்து

கொண்டிருக்கிற இந்த விவாதத்திலே என்னுடைய சில கருத்துக்களை இந்த அவையின் முன்னும், நமது அமைச்சரவையின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன்.

ஒரு நாடு முன்னேற்றம் அடைவதற்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுவது விவசாயத் துறையும் தொழில் துறையும். நம்முடைய கவர்னர் அவர்களுடைய உரையில் அதிகமான அழுத்தம் கொடுத்திருப்பது விவசாயத் துறையைப் பற்றி மட்டும்தான் என்பது குறிப்பிடத்தக்கது. ஒருக்கால் இன்றைக்கு நாட்டில் நிலவும் உணவுத் தட்டுப்பாட்டின் காரணமாக அவர் விவசாயத் துறையில் மட்டும் அதிக கவனம் செலுத்தியிருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன்.

அடிப்படையாக இருக்கக்கூடிய முக்கியமான அரங்கு தொழில் அரங்கு. இது பற்றியும், தொழிலாளர் நலன்கள் ஆகியவைகளைப் பற்றியும் நமது அமைச்சரவையின் கொள்கை என்ன, நிலை என்ன என்பதைப் பற்றித் தெளிவாக விளக்கிவிட வேண்டும் என்று கருதுகிறேன்.

புதிய அமைச்சரவை வந்திருக்கிற இந்தக் காலக்கட்டத்தில், இதற்கு முன்னால் இருந்த காங்கிரஸ் அமைச்சர்கள் இருந்த காலத்தில், தொழிலாளர்கள் குறித்து அவர்கள் நிலை என்ன, அவர்கள் கொள்கை என்ன, எப்படி இருந்தது என்பது பூராவும் யாவரும் அறிந்த விஷயம். பொதுவாக தொழில் சட்டங்கள், ஸ்டான்டிங் ஆர்டர்கள், இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் என்று இப்படிப்பட்ட சட்டங்கள் இருந்தபோதிலும், அவர்களின் நிர்வாகத்தில் அநேகமாக பாரபட்சம் காட்டும் முறையும், முதலாளிகளைச் சார்ந்திருக்கிற முறையும் இருந்தது. குறிப்பாக தொழில் துறையில், பொதுத் துறையாக இருந்தாலும், தனியார் துறையாக இருந்தாலும், பல்லாண்டு காலமாக வேலை செய்யும் தொழிலாளர்கள் நிரந்தரமாக ஆக்கப்படாமல் வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆறு மாதங்களுக்கு வேலை செய்தால் எந்தத் தொழிலாளியாக இருந்தாலும் நிரந்தரமாக ஆக்கப்படவேண்டுமென்று ஸ்டாண்டிங் ஆர்டர் இருந்தாலும் காஷுவல் லேபாகத் தனியார் துறையிலும், ஏன்? அரசாங்கத் துறையாக இருக்கிற மின்சாரத் துறையிலும், பொதுப் பணித் துறையிலும் பல தொழிலாளர்கள் நிரந்தரமாக ஆக்கப்படாமல் வைக்கப்பட்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், பொதுப் பணித் துறையில் குறிப்பாக ரெவின்யூ டிபார்ட்மென்டை எடுத்துக்கொண்டாலும் சர்வேயர்கள் 1948-ம் ஆண்டில் வேலைக்கு வந்தவர்கள், 19 ஆண்டுகளாக வேலை செய்து வருகிறவர்கள், இன்று வரையில் நிரந்தரமாக ஆக்கப்படாமல் வைக்கப்பட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 3,200 சர்வேயர்கள் இருக்கிற இடத்தில், கடந்த பிப்ரவரி மாதம், தேர்தல் முடிந்தவுடனே—21-ம் தேதி தேர்தல் முடிகிறது—அப்போது முதலமைச்சராக இருந்தவர் அரசாங்கத்தை விட்டுச் செல்லும் காலத்தில், 22-ம் தேதி ஒரு ஆர்டரை பாஸ் செய்கிறார். அதில் 1,700 சர்வே டிபார்ட்மென்டைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கு வேலை இல்லை; ஆட் குறைப்பு செய்யலாம் என்று போகும் தருவாயில் ஒரு ஆர்டரை நிறைவேற்றிவிட்டு போகிறார். இது வருந்தத்தக்க விஷயம். கிட்டத்தட்ட 19 ஆண்டுகளுக்குப் பிறகு, 1,500 பேர்களை நிரந்தரமாக ஆக்கச் சொல்லி, அதுவும் டெம்பரரி ரெகுலரைசேஷன் என்று சொல்லி, 1,700 பேர்களை ஆட் குறைப்பு செய்யலாம் என்று உத்தரவை அவர்கள் போட்டு விட்டுச் செல்லுகிறார்கள். இது சரியல்ல. இதைத் தாற்காலிகமாகவாவது நிறுத்தி வைக்க வேண்டும்; 19 ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் எங்கு செல்லுவார்கள்? குறைந்த பட்சம் ரெவின்யூ டிபார்ட்மென்டில் இல்லாவிட்டாலும் வேறு அரசாங்க இலாக்காக்களில் அவர்களை நியமிக்கவேண்டுமென்று கோரி ஒரு விண்ணப்பத்தை ரெவின்யூ அமைச்சரிடம் கொடுத்து ஒரு முறையீட்டைச் செய்திருக்கிறோம். அவர்களும் ஆவன செய்வதாக சொல்லியிருக்கிறார்கள்.





தனியார் துறையை எடுத்துக்கொண்டால், கணக்கு வழக்கு இல்லாமல், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைப் பாதுகாப்பு இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஃபாக்டரி சட்டம் இருக்கிறது, ஃபாக்டரி இன்ஸ்பெக்டர் இருக்கிறார், லேபர் இன்ஸ்பெக்டர் இருக்கிறார். இதில் வேடிக்கை என்ன என்றால் அந்த அதிகாரிகள் இதிலே முழு கவனம் செலுத்த முடியாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வெயிட்ஸ் அண்ட் மெஷர்ஸ் என்ற பொறுப்புகளும் கொடுத்திருப்பதால் அவர்கள் அதில் அதிக கவனம் செலுத்துகிறார்களே தவிர, சட்டங்கள் சரியாக நிறைவேற்றப் படுகிறதா, ஷாப் சட்டங்கள் சரியான முறையில் நிறைவேற்றப் படுகிறதா எங்க எந்த முதலாளிகள் என்னென்ன செய்கிறார்கள் என்று விசாரிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இவைகளைப் பற்றியெல்லாம் நம்முடைய அமைச்சரவை சரியான முறையில் பரிசீலித்து, தொழில் அபிவிருத்தி ஏற்பட்டு வரும் இக் காலத்தில் ஏராளமான தொழிற்சாலைகள் பல்வேறு இடங்களில் தோன்றிக் கொண்டு வருகின்ற இக் காலகட்டத்தில் தொழிற்சட்டங்களை சரியான முறையில் அமல்படுத்தவேண்டிய அளவுக்குச் செய்ய வேண்டும். இந்த வெயிட்ஸ் அண்டு மெஷர்ஸ் பொறுப்புகள் சம்பந்தப்பட்ட வரையில், அந்த அதிகாரிகளுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கிற பொறுப்புகளுக்கு மேலாக உள்ள அதிகப்படியான இப் பொறுப்புக்களை நீக்கி, தொழில் சட்டங்களை அமலாக்குவதில் அதிக கவனம் செலுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி பொதுப் பணித் துறையை எடுத்துக்கொண்டால், டி.வி.ஆர். என்ற ஒரு பகுதி இருக்கிறது. இந்தத் தொழிலாளர்கள் 10, 12 ஆண்டுகளுக்கு மேல் எந்தெந்த இடத்தில் தூர் வார வேண்டுமோ அந்த இடங்களிலெல்லாம் தூர் வாரிக்கொண்டிருந்தாலும், அவர்களுடைய வேலை இன்னும் நிரந்தரமாக்கப்படவில்லை. அரசாங்கத் துறையாக இருந்தாலும் சரி, தனியார் துறையாக இருந்தாலும் சரி வேலைக்கு பாதுகாப்பு என்பது கிடையாது. இவ்வளவு ஆண்டுகள் வேலை செய்தபிறகு அவர்கள் நிரந்தரமாக்கப் படவேண்டும். பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்து, அவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டியதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

அடுத்து, தொழில் அரங்கில் சமரச இயந்திரம் செயல்படுவது பற்றி அதாவது கன்ஸிலியேஷன் மெஷினரி சரிவர இயங்க வேண்டும். தொழிலாளர்கள் தரப்பிலும் சரி, முதலாளிகள் தரப்பிலும் சரி சமரச அதிகாரிகளுக்கு எழுதியனுப்பினால், அவர்கள் வந்து உடனே தொழில் தகராறு முற்றாமல் இருக்கக்கூடிய முறையில் சமரசம் செய்துவைக்க வேண்டும். எந்த நோக்கத்திற்காக இண்டஸ்டிரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட், கன்ஸிலியேஷன் மெஷினரி இவைகளெல்லாம் அமைக்கப்பட்டன என்றால், தொழில் தகராறுகளை முற்றவிடாமல் தொழில் அமைதியைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காகத்தான். ஆனால் இந்த சமரச அதிகாரிகள் தொழில் தகராறுகள் நீடிக்கக்கூடிய முறையில் காலம் கடத்தக்கூடிய முறையில் இந்த இயந்திரம் செயல்படுகிறது. இண்டஸ்டிரியல் ட்ரிப்யூனல், லேபர் கோர்ட்டு, கன்ஸிலியேஷன் ஆபீஸர், யாராக இருந்தாலும் சரி, முதலாளிகள் வேண்டும் என்றே அட்ஜார்ன்மெண்டு கேட்கிறார்கள். காலம் கடத்தப்படுகிறது. 15 நாட்களில் அல்லது ஒன்றிரண்டு மாதங்களில் தீரவேண்டிய விஷயம், ஒரு ஆண்டு அல்லது 1½ ஆண்டு வரை காலம் கடத்தப்பட்டு, தகராறு நீடிக்க வைக்கப்பட்டு, இறுதியில் தீர்ப்பு வழங்கினால், அப்பொழுது அந்தத் தொழிலாளி இருக்கக்கூடிய இடமே தெரியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. கன்சிலியேஷன் இயந்திரம் துரிதமான நடவடிக்கை எடுக்கிறதா என்றால், இல்லை, எந்த நோக்கத்திற்காக இண்டஸ்டிரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் இருக்கிறதோ, கன்ஸிலியேஷன் மெஷினரி இருக்கிறதோ, அந்த நோக்கமே சீர்குலையக் கூடிய ஆபத்தான நிலைமை தான் இருக்கிறது. தொழில் அமைதி ஏற்பட வேண்டும், தொழில் தகராறுகள் முற்றாமல் தீர்க்கப்பட வேண்டும். அதன் மூலம் உற்பத்தி பெருகவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் இந்த இயந்திரம் இயங்காமல், காலம் கடத்தும் போக்குதான். அதாவது 1 அல்லது 1½ ஆண்டுகள் கழித்து தீர்ப்புக் கொடுக்கும் நிலைமை தான் இருந்துவருகிறது. அதனால் அதிருப்தி அடைந்த தொழிளாளர்களுக்கெல்லாம் தங்களுடைய கோரிக்கைகளை தகராறு முற்றாமல் கன்ஸிலியேஷன் மெஷினரி மூலம் நியாயமான முறையில் தீர்த்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை போய்விடக்கூடிய ஒரு அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. முதலாளிகள் தொழில் தகராறு விதிகளை வேண்டுமென்றே மீறுவதற்கான சூழ்நிலையும் இருக்கிறது. உதாரணத்திற்கு வேண்டுமென்றால், மவண்டு ரோட்டில் மை காபி பார் என்று சொல்லக்கூடிய ஒரு ஹோட்டலில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் பல கோரிக்கைகளை வைத்து, இன்று தொழில் கோர்ட்டுக்கு முன்னால் விவகாரம் நடந்துகொண்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு எந்த விதத்திலும் நஷ்டஈடு கொடுக்காமல் இருப்பதற்காக, அந்தக் கட்டடத்துச் சொந்தக் காரரும், ஹோட்டல் முதலாளிகளும் இணைந்துகொண்டு, மை காபி பார் என்ற ஹோட்டலை மூடிவிட்டார்கள். தொழில் கோர்ட்டுக்கு முன்னால் பிரச்னை இருக்கும்பொழுது, க்ளோஷர் கூடாது என்று சட்டத்தில் விதிக்கப்பட்டிருந்தாலும், அங்குள்ள முதலாளியும், கட்டட சொந்தக்காரரும் சேர்ந்து இணைந்து, சதி செய்துகொண்டு, கட்டட சொந்தக்காரருக்கு





பாக்கி என்ற முறையில் ஹோட்டலை மூடியிருக்கிறார்கள். இதனால் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வெளியே தள்ளப்பட்டிருக்கிறார்கள். தொழில் தகராறு சட்டத்தை மீறக்கூடிய விதத்தில் முதலாளிகள் நடந்துகொள்கிறார்கள். அம்பத்தூர் எஸ்டேட் போன்ற இடங்களில் உள்ள காண்டீன்களை அந்தத் தொழிலாளர்கள் எடுத்து நடத்துவதற்காக தயாராக இருக்கிறார்கள். அவர்களுக்குப் போதுமான நஷ்டஈடு கொடுக்கப்பட்டால், அந்த நஷ்டஈட்டுத் தொகையை முதலீடாக வைத்து அந்த மாதிரி எஸ்டேட்களில் காண்டீன்களை எடுத்து நடத்த அந்தத் தொழிலாளர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதை இந்த சமயத்தில் தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தொழில் தகராறுகள் ஏற்படும்பொழுது சமரச அதிகாரிகள் மூலமாகவோ அல்லது லேபர் கமிஷனர் மூலமாகவோ அல்லது லேபர் கோர்ட்டு மூலமாகவோ தகராறுகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக, எங்கெங்கு தொழில் தகராறு ஏற்படுகிறதோ அங்கெல்லாம் முதன் முதலில் போலீஸ் காணப்படுகிறது. போலீஸ் வருவது பாதுகாப்பிற்கு, லா அண்டு ஆர்டர் மெயின்டெயின் பண்ணுவதற்காக என்று சொல்லலாம். ஆனால், இதுவரையில் நடந்த விஷயம் என்னவென்றால் தனியார் துறையாக இருந்தாலும் சரி, பொதுத் துறையாக இருந்தாலும் சரி, அங்கு வரக்கூடிய போலீஸ் முதலாளிகளுக்கு ஆதரவாகத் தான் இயங்குகிறதே தவிர, லா அண்டு ஆர்டர் மெயின்டெயின் பண்ணுவதற்காக அங்கு வருவதில்லை. இது கடந்த கால சரித்திரம். ஜனவரி 29-ம் தேதி நெய்வேலியில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள், மூன்று சங்கங்களைச் சேர்ந்தவர்கள், ஏ.ஐ.டி.யு.சி.யைச் சேர்ந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழக சங்கத்தைச் சேர்ந்தவர்கள், அங்கு வேலை பார்க்கின்ற சிப்பந்திகளின் ஸ்டாப் யூனியனைச் சேர்ந்தவர்கள், தங்களுடைய கோரிக்கைகளை வைத்து, ஊர்வலம் நடத்துவதற்காக அனுமதியும் பெற்று, ஊர்வலம் நடத்தக்கூடிய சமயத்தில் திடீரென்று போலீஸ் தலையிட்டு ஊர்வலத்தை நடத்தக்கூடாது என்று தடியடிப் பிரயோகம் செய்து, கண்ணீர் புகை உள்பட பிரயோகிக்கப்பட்டது. தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை நியாயமான முறையில் எடுத்துச் சொல்லி, தங்களுடைய கோரிக்கைகள் சம்பந்தமாக ஊர்வலத்தை நடத்தக்கூடிய ஒரு காலகட்டத்தில் போலீஸ் தலையிடுவது சரியல்ல. அதை எந்த இலாகாவிற்கு விட்டுவிட வேண்டுமோ, அந்த இலாகாவிற்கு விடவேண்டும், அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் வடலூர் தொழிற்சாலையில் தொழில் தகராறு ஏற்பட்டு, போலீஸ் தலையிட்டு, செகரட்டரியின் பெயரை குறிஞ்சிப்பாடி போலீஸ் ஸ்டேஷனில் குறித்துவைத்து, எதாவது தகராறு நடந்தால், கே.டி. லிஸ்டில் பெயரை சேர்த்துவிடுவதாக ஒரு சப்-இன்ஸ்பெக்டர் மிரட்டியதாகத் தெரிகிறது. தொழில் தகராறை சமரசமான முறையில் தீர்ப்பதற்கு என்றே அரசாங்க தொழிலாளர் இலாகா இருக்கும்பொழுது, இப்படிப்பட்ட பிரச்னைகளில்

[திரு. சி. கோவிந்தராஜன்] [1967 மார்ச் 27

போலீஸார் தலையிடுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டியது அவசியம். மேலும் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும்படியான திட்டமும் முக்கியமாக கவனிக்கவேண்டியது.

அடுத்தபடியாக போனஸ் சட்டத்தைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். போனஸ் சட்டத்தில் பல ஓட்டைகள் இருந்தன. அதிலே அரசாங்கம் பல மாற்றங்களைச் செய்தது. இருப்பினும், முதலாளிகள் தங்களுக்கு ஆதரவாக இருக்கக்கூடிய மாக்ஸிமம் போனஸ் என்று சொல்லக்கூடிய ஒரு விதியை மட்டும் வைத்துக்கொண்டு அதிக லாபம் அடையக்கூடிய முதலாளிகளும், போனஸைக் குறைத்துக் கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. போனஸ் பிரச்னையில் அதிகப்படியாக தொழில் தகராறுகள் ஏற்பட்ட காரணத்தினால், அதை நிறுத்தவேண்டும், தொழில் அமைதி நிலவ வேண்டும், போனஸ் பிரச்னையினால் தொழில் தகராறு ஏற்படக் கூடாது என்ற நோக்கத்தோடு தான் போனஸ் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், போனஸ் சட்டம் ஏற்பட்ட பிறகுதான் அதிகப்படியான தொழில் தகராறுகள் ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இப்போது போனஸ் சட்டம் என்று ஒன்று முழுமையாக இல்லாத காரணத்தினால் கூடுமானவரையில் முதலாளிகளும், தொழிற் சங்க பிரதிநிதிகளும் பேச்சு வார்த்தை நடத்தி, ஒப்பந்தம் காணும்படியான வழிமுறைகளைக் கையாண்டால் தான், சமீபத்தில் நடந்துகொண்டிருக்கிற அல்லது இனிவரக்கூடிய போனஸ் தகராறுகளுக்கு ஒரு சுமுகமான முடிவு காணமுடியும், அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் . . . (மணி அடிக்கப்பட்டது).

* திரு. கா. வேழவேந்தன் : மதிப்பிற்குரிய மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது நன்றி அறிவிக்கின்ற தீர்மானத்தின் பேரில் நானும் கலந்து கொள்ள வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கவர்னர் அவர்கள் உரையைப்பற்றி கனம் உறுப்பினர்களெல்லாம் தங்களுடைய கருத்துக்களை நவின்ற நேரத்தில் பல்வேறு முறைகளில், பல்வேறு கோணங்களில் பேசினார்கள். என்னைப் பொறுத்த வரையில் கவர்னர் உரையை மூன்றுவித காரணங்களுக்காக வரவேற்று நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். முதல் காரணம் அன்று தேம்ஸ் நதிக்கரையிலே இருந்தவர்கள் இந்த நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்தினார்கள். அது தொலைக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டது. அப்பொழுது அந்த கவர்னர் அவர்கள் தேம்ஸ் நதிக்கரையிலுள்ளவர்களுக்காக வாதாடினார்கள். ஆனால், இன்றைக்கு நம்முடைய கவர்னர் பெருமான் ஆற்றியிருக்கிற உரையில் கங்கை நதிக் கரையிலுள்ளவர்களின் அதிகாரம் குறைக்கப்படவேண்டும். மாநில அரசாங்கங்களுக்கு அதிகமான அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார். இந்த முதல் காரணத்திற்காக நான் அந்த உரையைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1967 மார்ச் 27] [திரு. கா. வேழவேந்தன்]

இரண்டாவது காரணம், இந்த நாட்டினுடைய முதுகெலும்பு போன்று இருக்கும் விவசாயிகளுடைய பிரச்னைக்கு, வேளாண்மைத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்கள். பகல் 1-30

மூன்றாவது காரணம் போட்ட 3 திட்டங்களிலே ஏற்பட்ட பயன்கள், நலன்கள் குறைவாக இருக்கின்றன என்பதை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு, போடப்பட இருக்கிற நான்காவது திட்டத்திலே சேர்க்கப்பட வேண்டிய திட்டங்களைக் கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம், இந்த மாநில அரசின் கொள்கைகளையெல்லாம் இணைத்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இந்த உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற எங்களுக்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், எதிர்தரப்பைச் சேர்ந்தவர்கள், ஒரு காலத்தில் இவர்கள் கவர்னரை எதிர்த்தார்கள், புறக்கணித்தார்கள், இப்பொழுது கவர்னர் உரைக்கு நன்றி கூறி, அதைப் பாராட்டிப் பேசுகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் சட்டத்தையும், அதன் விதிகளையும் ஒப்புக்கொண்டு, உள்ளே அமர்ந்திருக்கின்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் ஒரு பெரிய உண்மையை மறந்து விட்டார்கள் என்று எண்ணுகிறேன். இந்திய அரசியல் சட்டத்திற்கு விசுவாசம் தெரிவித்து, பிரமாணம் எடுத்துக் கொண்டு, இந்திய அரசியல் சட்டத்தின் அமைப்புக்கு உட்பட்டுத்தான் அமர்ந்திருக்கிறோம். அந்த அமைப்புப்படி கவர்னர் மாநில அரசின் பெரிய, முதன்மைத் தலைவரானவர் என்று ஏற்றுக் கொண்டு இருக்கிறோம். ஆகவே, தமிழகத்தின், இந்த மாநில அரசின் கொள்கையை மத்திய அரசுக்கு நினைவூட்டுவதை அவர்கள் வாயிலாக சொன்னதற்கு மகிழ்ச்சியோடு போற்ற வேண்டுமே தவிர, வேறொன்றும் இல்லை. இன்றைய நிலையிலே, பேசும் காங்கிரஸ் உறுப்பினர்கள் எடுத்த எடுப்பிலேயே கவர்னர் உரை மீது பேசும்போது குறிப்பிட்டார்கள். புதிய ஆட்சி மலர்ந்தும் ஏன் இன்னும் விலைவாசியைக் கட்டுப்படுத்தவில்லை? ஏன் அரிசியை அதிகமாகக் கொடுக்க வில்லை? ஏன் பல்வேறு பிரச்சினைகளைத் தொடவில்லை? ஏன் இலங்கைப் பிரச்சினையைப் பற்றித் தொடவில்லை என்று பேசினார்கள். எங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு என்ற வகையில் பேசவில்லை. இன்றைய தினம் நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் பொறுப்பு என்ன? 20 ஆண்டு காலமாக நிர்வாக இயந்திரத்தை காங்கிரசார் நடத்தி வந்திருக்கிறார்கள், அவர்கள் இயக்கியது சரியில்லை என்று மக்கள் மன்றம் ஒதுக்கி, அவர்களிடம் இருந்து பறித்து திராவிட முன்னேற்றக் கழகத்திடம் அறிஞர் அண்ணாவின் தலைமையில் இருக்கும் எங்கள் கட்சியின் கையில் கொடுத்திருக்கிறது. இப்பொழுது தான் இந்த அரசின் கையில் கொடுக்கப்பட்டிருக்கிற இந்த இயந்திரத்தைப் பழுது பார்க்கத் தொடங்கியிருக்கிறோம். எந்த எந்த இடங்களில் எண்ணெய் போடவேண்டும், எங்கே சிக்கல்கள் இருக்கின்றன, இது ஓடுமா அல்லது ஓடாதா, எங்கு எங்கு சரிப்படுத்த வேண்டும் என்றெல்லாம் பார்ப்பதற்கே

நீண்ட நாட்களாகும். அதற்கு மேல் இந்த இயந்திரத்தை வைத்துக் கொண்டு இயங்கச் செய்ய வேண்டும். அதற்குள் நண்பர்கள் பொறுக்காமல், இப்படிப் பேசுவது வியப்பாகத்தான் இருக்கிறது.

நம்முடைய மாமன்றத்தைப் பொருத்தவரையில், நாம் வலியுறுத்திப் பேசவேண்டியது ஒன்றுதான். சீர்திருத்தம் தேவை என்று எல்லோரும் சொல்கிறார்கள். ஆளும் கட்சியும், எங்களுடைய கருத்துக்களைச் சொல்கிறோம். முக்கியமாக மத்திய சர்க்காருக்கும், மாநில அரசுக்கும் இருக்கும் இடைவெளி குறைக்கப் படவேண்டும். அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். அதிலே அனைவரும் ஒரு முறையாக இருக்க வேண்டும். இது பற்றி மதிப்பிற்குரிய கனம் ம. பொ. சி. அவர்களும் வரவேற்றிருக்கிறார்கள். சமஷ்டி முறையில் பகிர்ந்து அளிக்கப் படவேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்திய அரசியல் சட்டத்தின் இறுதிப் பகுதியாக, 7 ஆம் செடியூல் இருக்கிறது. அந்தப் பகுதியில் மாற்றம் செய்தாலொழிய அதறகுத் திருத்தம் கண்டாலொழிய, உண்மையான பரிகாரத்தைக் காணமுடியாது. ஏழாவது செடியூலில், யூனியன் பட்டியல் என்றும், ஸ்டேட் லிஸ்ட் என்றும் சொல்லப்படுகிற, மாநில பட்டியலும், இன்னும் இரண்டுக்கும் பொதுவான பட்டியல் என்றும் இருக்கிறது. அதைப் பார்த்தால் முக்கியமான துறைகளெல்லாம்; மத்திய சர்க்காருக்கே கொடுக்கப் பட்டிருக்கின்றன. கடல் வளமாக இருந்தாலும், கனி வளமாக இருந்தாலும், வருமானவரித் துறையாக இருந்தாலும் இவைகளிலெல்லாம் முதல் பந்தியில் முதல் இலையை மத்திய அரசு முதலிலே தனக்குப் போட்டுக் கொண்டு விடும் நிலைமைதான் இருக்கிறது. அதே போல அதிகமான வருவாய் வரக்கூடிய வருமான வரியும், சுங்க வரியும், இன்னும் மற்ற வரிகளும் மத்திய சர்க்காருக்கே போய், ஒரு பகுதிமட்டும் நமக்கு வருகிறது. மண்மாதா கொடுக்கும் கனிவளங்கள் எதுவானாலும், நிலக்கரி, இரும்பு போன்ற எதுவானாலும், அதை ஆராய்ச்சி செய்வது, தோண்டி எடுப்பது, ஆலைகள் அமைப்பது இவையெல்லாம் மத்திய சர்க்காரிடம் ஏற்கனவேயே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

கடலை எடுத்துக் கொண்டாலும், டெரிடோரியல் வாடர்ஸ் என்று எல்லையைக் கணித்து ஒரு அளவு வரைதான் நாம் மீன்களைப் பிடிக்கலாமே தவிர, தள்ளிப் போய், ஆழத்தில் போய், நம்முடைய வங்காளக் குடாக்கடல் தானே என்று, மீன் பிடிக்க முடியாது. அப்படிச் செய்ய வேண்டும் என்றால், அதற்கு மத்திய சர்க்காருடைய அனுமதி வேண்டும். இன்றைய தினம் உணவு பற்றாக்குறையைப் பற்றி இவ்வளவு காரசாரமாகப் பேசும் நாம், மீன் உணவைப் பெருக்க வேண்டும் என்பதை மட்டும் ஒப்புக் கொள்கிறோம். மீன் உணவைச் சாப்பிட மாட்டோம் என்று மக்கள் சொல்லவில்லை. ஆகவே, மீன் உணவுபற்றி சினிமாவில் சிலைடு மூலம் பிரசாரம் செய்தால் மட்டும் போதாது, என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து. ஆகவே மீன் உணவை பரவலான அளவில் அடைந்து, விலை குறைவாக மக்களுக்கு வினியோகம் செய்ய தக்க ஏற்பாடுகள் செய்யப் படவேண்டும். அந்தந்தத் தொழிலை உரிய முறையில் அபிவிருத்தி செய்தால்தான் பலன் கிடைக்கும்.





அறிஞர் அண்ணா சென்ற முறை, 1957-லே வெற்றி பெற்று இந்த மாமன்றத்திலே அமர்ந்திருந்த காலத்திலே, ஒரு அழகான யோசனையைத் தெரிவித்தார்கள். வங்காள விரி குடாவில் ஆழமான பகுதியில் நிறைய 'ஷார்க்' என்று சொல்லப்படும் சுறா மீன்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் பனை மரம், தென்னை மரம் போல இருக்கின்றன. அதிக ஆழத்தில் சென்று அவற்றைப் பிடிப்பதன் மூலம் 'டெரிடோரியல் வாட்டர்' எல்லை என்று சொல்லி மத்திய சர்க்காரிடம் இருக்கும் உரிமையை மாநில சர்க்கார் பெற்று, ஆழ் கடல் மீன் பிடிப்பு, எனப்படும் 'டீப் ஸீ பிஷிங்' திட்டத்தை எடுத்துக் கொண்டால், இயந்திரப் படகுகளையும் மற்ற வசதிகளையும் வைத்துக்கொண்டு நல்ல பலன் அடையலாம்; அதிலிருந்து மீன் உணவு மட்டுமின்றி, ஷார்க் லிவர் ஆயில் என்கிற மருந்துப் பண்டமும் கிடைக்க வசதியாக இருக்கும் என்கிற அழகான யோசனையை அண்ணா சொன்னார்கள். அதைப் பற்றி ஏன் இப்போது குறிப்பிடுகிறேன் என்றால், அன்று ஆளும் கட்சியிலிருந்த காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு நினைவு படுத்துவதற்காகவேயாகும். எந்த வகையில் எடுத்துக்கொண்டாலும், இன்றைய தினம் இவற்றையெல்லாம் தீர்மானித்துத்தான் நாம் நம் எதிர்காலத்தைப்பற்றிக் கணக்கிட முடிகிறது.

உணவுக் கொள்கையைப் பொறுத்த வரையில், எனக்கு முன்னால் பேசிய மதிப்பிற்குரிய திரு. சீமைச்சாமி அவர்கள் மிகவும் காரசாரமாகப் பேசினார்கள். குறிப்பாக, என்னுடைய தொகுதியைப்பற்றி, அதாவது கும்முடிப்பூண்டி தொகுதியிலே நடந்த நிகழ்ச்சியைப் பற்றி அவர்கள் இங்கே குறிப்பிட்டுப் பேசினார்கள். இங்கே அவர்கள் சொல்லிய குற்றச்சாட்டுகள், அவர்கள் சொல்லிய பெயர்கள் எனக்கு அறிவிக்கப்படவில்லை. நேற்றுகூட நான் கும்முடிபூண்டித் தொகுதிக்குப் போய்விட்டு வந்தேன். அவர்கள் இங்கே கூறியதற்கு முன்னால் அச்செய்திகள் எனக்கு அறிவிக்கப்படவில்லை. அவர்கள் சொல்லுகிற பட்டியலும், அவர்கள் கையில் வைத்திருக்கிற புகார் மனுக்களும் அவர்களிடம் தரப்பட்டிருக்கின்றனவே தவிர, தொகுதி உறுப்பினராகிய எனக்குத் தரப்படவில்லை; என்னுடைய கவனத்திற்கும் கொண்டுவரப்படவில்லை. நான் மேல் அதிகாரிகளையும் சந்தித்துவிட்டு வந்திருக்கிறேன். அவர்களுடைய கவனத்திற்கும் விவரம் கொண்டுபோகப்படவில்லை. பொதுக்கூட்ட மேடையில் பேசுவதைப்போல், இங்கே காங்கிரஸ் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் நேற்று காலையிலிருந்து இரவு வரை நான் சுற்றிவிட்டு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டபின் வந்திருக்கிறேன். நானும் விவசாயக் குடும்பத்திலே பிறந்தவன் தான். அவர் சொன்ன அதே மஞ்சங்காரணிக்குப் பக்கத்தில்தான் என்னுடைய கிராமமும் இருக்கிறது. ஆனால் நான் சொன்ன ஊர்களில் இருதரப்பட்ட விவசாயிகளைப் பார்க்க முடிந்தது. ஒரு தரப்பு விவசாயிகள் எங்களிடம் வந்து அணுகிச் சொன்னார்கள். "அதோ பாருங்கள், அவர் நெடுங்காலமாக நெல்லை வைத்திருக்கிறார், அந்த வைக்கோல் போருக்கு உள்ளே தான் 300 மூட்டை நெல் 200 மூட்டை நெல் வைத்திருக்கிறார், எடுத்துப்

பார்த்தால்கூட, அந்தப் பூச்சி பறக்கும்; அந்த அளவு நீண்ட நாளாக வைத்திருக்கிறார், இதை ஏன் அதிகாரிகளின் கவனத்திற்கு நீங்கள் கொண்டு போகவில்லை?" என்று ஒரு தரப்பு விவசாயிகள் சொன்னார்கள். இன்னொரு தரப்பு விவசாயிகள்; போகின்ற போக்கிலே குறிப்பிட்டார்கள். "இப்படியெல்லாம் கெடுபிடி செய்கிறார்கள்; கெடுபிடியைக் கொஞ்சம் குறைக்கச் சொல்லுங்கள்; கொள்முதல் செய்த தானியங்களுக்குப் பணம் கொடுக்கவில்லை; பறிமுதல் செய்கிறார்கள், இந்த நிலையை நீடிக்க விடாதீர்கள்" என்று இன்னொரு தரப்பு விவசாயிகள் சொன்னார்கள். அந்த விவசாயப் பெருங்குடி மக்களிடம் நானும், "இருக்கின்ற விதிகளுக்கு இணங்க, இருக்கின்ற சட்ட திட்டங்களுக்கு இணங்க, காலஞ்சென்ற காங்கிரஸ் ஆட்சியாளர் போட்ட சட்ட திட்டங்களுக்கு இணங்கத்தான் நம்முடைய அதிகாரிகள் நடந்துகொள்ளுகிறார்கள்" என்று சொன்னேன். ஆனால் அன்றைக்கிருந்த காங்கிரஸ் எம். எல். ஏ.க்களுக்கும் இன்றைக்கிருக்கும் கழக சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் வேற்றுமை என்னவென்றால், அவர்கள், பெரிய பணக்காரர்கள், பெரிய நிலச்சுவான்தார்கள் ஆகியோர் நெல் பிடிக்கப்பட்டால், அது ஏன் பிடிக்கப்பட்டது என்று கேட்பார்கள். ஏனென்றால், அவர்கள் முதலாளிகளை முழுக்க ஆதரித்தவர்கள். ஆனால், இன்றைக்கிருக்கும் கழக உறுப்பினர்கள், "ஏன், அந்த நெல்லை இன்னும் கொள்முதல் செய்யவில்லை? அந்த ஊரில் மட்டும் அவ்வளவு நெல் பிடிபடாமல் இருப்பானேன்?" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் அவர்களுக்கும் எங்களுக்கும் உள்ள வித்தியாசம் என்று சொல்வேன்.

குறிப்பாக, மஞ்சகாரணி, வண்டிக்காவனூர் ஆகிய இந்த இரண்டு இடங்களைப்பற்றி குறிப்பிட்டார்கள். ஓரிரண்டு புகார்கள் வந்தவுடனே, மேலதிகாரிகளை நானே சந்தித்து, "அதிகமான கெடுபிடி காட்டாதீர்கள், உங்களுக்குரிய அதிகாரத்தை உங்களுக்குரிய வகையிலே நீங்கள் செலுத்துங்கள்" என்று கூறியிருக்கிறேன். இதை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கலாம்; அல்லது போலீஸ் அதிகாரிகளினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கலாம்; அல்லது விஜிலென்ஸ் அதிகாரியினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கலாம். ஆனால், இப்போது பேசுகிற வரையில் அவர்கள் சொல்லவில்லை. இம்மாமன்றத்தில் இருக்கும் கனம் உறுப்பினர் திரு. ஹாண்டே அவர்கள் கூட, நேற்று முன்தினம் என்னுடைய தொகுதிக்குப் போய், உணவுக் கொள்கையைப்பற்றி ஒரு பொதுக் கூட்டம் போட்டுப் பேசியிருக்கிறார்கள். குறிப்பாக ஒரு கட்சியைச் சார்ந்தவர் அவர்கள். அவர்கள் தங்களுக்கிருக்கும் கட்சிக் கொள்கையைப் பொதுக் கூட்டத்தில் விவசாய மக்களைக் கூட்டி வைத்துக்கொண்டு, கொஞ்சம் ஆத்திரப்படும் வகையிலே பேசியிருக்கிறார்கள். ஆனால், பேசுவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது என்றாலும், பொதுவான திட்டங்களை நாம் வகுத்துக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது கொள்முதல் செய்யப்பட்டாலொழிய, இப்படியெல்லாம் ஓரளவுக்காவது வற்புறுத்திக் கொள்முதல் செய்யப்பட்டாலொழிய, நகர்ப் புறங்களில் நாம் கொண்டு வந்திருக்கிற 'ஸ்டாச்சுடரி" ரேஷனிங் முறையை உண்மையிலேயே நிறைவேற்ற முடியுமா என்பதை நாம் கவனிக்க வேண்டும். எனக்கே அதிகமாக உடம்பில் இரத்த ஓட்டம் இருக்குமானால், ஏற்கனவே அடிபட்டு விழுந்திருக்கிறவருக்கு நான் கொஞ்சம் ரத்த தானம் செய்யவேண்டுமேயொழிய, நான் நானாகவே இருக்க வேண்டும் என்று, இன்னும் அதிகமாக இரத்த புஷ்டி உடையவனாக ஆகவேண்டும், இரத்தம் இல்லாதவன் மேலும் கீழே போகவேண்டும் என்று நினைத்தால், உரிய பலன் ஏற்படாது. ஆகவே, இதையெல்லாம் கவனித்து, அந்த விதிகளிலே இருக்கும் கெடுபிடிகளை வேண்டுமானால் ஓரளவு தளர்த்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளலாமேயொழிய, விவசாயப் பொதுமக்களுடைய ஆத்திரத்தைக் கிளப்பி விடக்கூடாது என்று தலைவர் அவர்கள் மூலமாக நான் கனம் உறுப்பினருக்குக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், மூன்று முக்கியமான செய்திகள் இருக்கின்றன. அவற்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். முதலாவதாக, பரிதாபத்திற்குரிய என்னுடைய கும்மிடிப்பூண்டி தொகுதியானது ஆந்திர மாநில எல்லையிலே இருக்கிறது. அங்கிருக்கும் நாங்கள் ஆரணியாற்றின் பலனைப் பூராவும் பெறுவோம் என்று முன்னால் சொல்லப்பட்டு வந்தது. ஆந்திரம் பிரிந்த பின்னர், ஆரணியாற்றின் குறுக்கே உள்ள பிச்சாட்டூர் அணையின் பலன் எல்லாம் ஆந்திரத்திற்குப் போய்விட்டது. ஆகவே, என்னுடைய தொகுதி மக்களுக்கு எந்த விதமான ஆற்றுத் தண்ணீர் வசதியோ, மற்றப் பாசன வசதியோ இல்லை. இதை குறித்து ஆந்திரத்தைச் சேர்ந்த அரசியல் அங்கத்திலே இருக்கிறவர்களிடம் நாம் பேசி, ஓரளவு பலன் பெற்றுத்தரவேண்டும் என்று மதிப்பிற்குரிய அமைச்சரவையினரை நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இரண்டாவதாக முக்கியமான பிரச்சினை என்னவென்றால், என்னுடைய தொகுதியில் நெசவாளர் அதிகமாக இருக்கிறார்கள். மாதர்பாக்கம், மாநல்லூர், பாதிரிவேடு, ஆரணி, குயவன்பேட்டை ஆகிய பகுதிகளில் நெசவாளர்கள் இருக்கிறார்கள். வேதனையோடு சொல்ல வேண்டுமானால், முன்பு இருந்த அரசாங்கம் வகுத்துக் கொண்ட கைத்தறிக் கொள்கைக்கு அவர்கள் பலியாகியிருக்கிறார்கள். வண்ணம் மாறும் கைத்தறித் துணி (ப்ளீடிங் மெட்ராஸ்)-க்கு அகில உலக மார்க்கெட்டில் கிராக்கி குறைந்துவிட்டதால், அந்த நெசவாளிகள் வயிற்றின்மேல் ஈரத் துணியைப் போட்டுக்கொண்டு வாழ்கிறார்கள். சொந்த ஊரில் பிச்சை எடுக்க முடியாத காரணத்தால், அவர்கள் வெளியூர்களுக்குப் போய் ஏதோ பிழைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று தான் சொல்லவேண்டும். அவர்கள் மறுபடியும் நல்ல முறையில் வாழ்க்கை நடத்த வழிவகை செய்து கொடுக்க இந்த அரசு முற்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர்: 25 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். எல்லோரும் பேசவேண்டும் என்ற நிலையிலே, கனம் உறுப்பினர் ஒவ்வொருவரும் பத்து நிமிடங்களுக்கு மேல் பேசவேண்டாம். இந்தக் கட்டளையை கனம் உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி: கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, ஒரு சொந்த விளக்கம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மதிப்பிற்குரிய உறுப்பினர் பேசுகிறபோது, தான் அந்தத் தொகுதியைச் சார்ந்தவராக இருந்தும், தனக்கு எந்தவிதமான தகவலும் வரவில்லை என்றும், எனக்கு மட்டும் அந்தத் தகவல் எப்படிக் கிடைத்தது என்றும் கேட்டார்கள். களத்து மேட்டில் அளந்த நெல்லுக்கு இதுவரை பணம் கொடுக்கப்படவில்லை, அவர்கள் கொடுத்த ரசீது இங்கே இருக்கிறது என்று கனம் உறுப்பினருக்கு நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

*திரு. ஏ. சிதம்பரநாத நாடார்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சாதாரணமாக சட்டசபை சம்பிரதாயப்படி ஆளுங் கட்சியில் இருப்பவர்களுக்குப் பேச அதிக வாய்ப்பு வசதி கிடையாது என்பதும், எதிர்க்கட்சியில் வந்தால்தான் அதிக சமயம் கிடைக்கும் என்று சொல்வார்கள். ஆனால், இந்த சபையில் எதிர்க் கட்சியில் வந்திருந்தும்கூட, எனக்கு அதிகச் சமயம் கிடைக்கவில்லை என்பதைக் குறித்து உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். கனம் உதவி சபாநாயகருக்கு என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், ஒவ்வொரு அங்கத்தினரும் பத்து நிமிஷம் பேச வேண்டும் என்று தாங்கள் வகுத்திருக்கும் வரையறையைத் தளர்த்தி எனக்குப் பத்து நிமிஷத்தோடு மேலும் ஐந்து நிமிஷம் பேச அவகாசம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, நான் பேச ஆரம்பிக்கிறேன்.

கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையைப்பற்றி எதிர்த்து ஒரு சில வார்த்தைகள் சொல்லாமல் என்னால் இருக்க முடியவில்லை என்ற நிலையைக் கண்டு உண்மையாகவே வருந்துகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, இந்த நாட்டிலே வந்தவுடனே தேனும் பாலும் ஓடும் என்று நான் உண்மையாகவே நினைத்தேன். (குறுக்கீடு) அதைப்பற்றிப் பிறகு பேசிக் கொள்ளலாம். ஆத்திரப்பட வேண்டாம். மற்ற உறுப்பினர்கள் பேசுவதற்கும் அவகாசம் இருக்கிறது. அப்பொழுது பேசிக்கொள்ளலாம். நான் பேசும்போது குறுக்கிடாமல் இருக்கும்படியாக நான் மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன். பொறுமைதான் பிரதானம். மோஸஸ் பிறந்த கானும் தேசத்தில் தேனும் பாலும் ஓடிக் கொண்டிருந்தது என்று சொல்லுவார்கள். அதைப் போல, நமது நாட்டிலும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தேனும் பாலும் ஓடும் என்று அறிந்தவுடனே உண்மையிலேயே சந்தோஷப்பட்டேன். ஆனால் கவர்னர் உரையைக் கேட்டவுடனேயே என் மனம் சற்றுத் திடுக்கிட்டது. எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில், திருநெல்வேலியிலிருந்து நாகர்கோவிலுக்கும், நாகர்கோயிலிருந்து திருவனந்தபுரத்திற்கும் இரயில்



பாதை இழுக்கப்பட வேண்டும் என்பதைக் குறித்து எந்தவிதமான திட்டமும் இதில் குறிப்பிடாததைப்பற்றி நான் உண்மையிலேயே வருந்துகிறேன். இதைப்பற்றி ஏதாவதொரு குறிப்பு கவர்னர் உரையில் இருந்திருக்குமானால், அதைவிடச் சந்தோஷமான செய்தி எங்கள் நாட்டில் வேறு இருக்க முடியாது என்பது என்னுடைய அபிப்பிராயம் ஆகும்.

அதேபோன்று, எங்களுடைய மாவட்டத்தில் நிறையத் தண்ணீர் இருந்தாலும், தக்கலை நகரசபைப் பகுதியிலும், கொளச்சல் நகரசபைப் பகுதியிலும், இரணியல் கண்ஸர்வென்ஸியிலும் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் பல ஆண்டுகளாக மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் இந்தச் சர்க்காரிடம் பலரும் பல தடவை எடுத்துச் சொல்லிய பிறகும் அதைப்பற்றி ஒருவித உருப்படியான பரிகாரமும் காணாததைப்பற்றி நான் வருந்துகிறேன்.

இந்தச் சபையில் சபாநாயகரைத் தேர்ந்தெடுத்தபோது என்ன நடந்தது என்பதை இச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன். பொதுத் தேர்தலில் கூட்டாக நின்று, "நாம் எல்லோரும் செத்தால் ஒன்றாக செத்து மடிவோம், வாழ்ந்தால் ஒன்றாக வாழ்வோம்" என்று அறைகூவல் விட்டு, வெற்றி பெற்றார்கள். ஆனால் அத்தனை பேரும் சேர்ந்து ஒரு சபாநாயகரை ஏகமனதாகத் தேர்ந்தெடுக்க முடியாத காரணத்தால், அதே சபாநாயகரை எதிர்த்து, இன்னொரு நபர் இந்தச் சபையிலே நின்றதை நாம் கண்ணாரக் கண்டோம். உண்மையிலேயே வெற்றி பெற்றவர் இன்று சபாநாயகராக காட்சியளிக்கிறார். என்றாலும், இது முதல் கோணல் என்பதை நாம் மறக்கக் கூடாது. விசேஷமாக மதிப்பிற்குரிய திரு. கருணாநிதி அவர்களிடம் நான் திட்டவட்டமாகச் சொல்லுவேன்; "அது முதல் கோணல்; அது முற்றிலும் கோணலாக மாறிவிடாமல் நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று எச்சரிக்கிறேன்.

திரு. செ. பாலசுப்பிரமணியன்: துணைச் சபாநாயகர் அவர்களே சபாநாயகர் தேர்தலைப்பற்றி சபையில் பேசலாமா என்று கேட்க விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர்: சபாநாயகர் தேர்தல் என்பது நடந்து முடிந்துவிட்ட ஒரு நிகழ்ச்சி. அதைப் பற்றிக் குறிப்பிடாமல் இருப்பது நல்லது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. சிதம்பரநாத நாடார்: தலைவர் அவர்களே, எனக்குக் கொடுத்தது பத்து நிமிஷம். இன்னும் ஒரு ஐந்து நிமிடம் எனக்குக் கொடுக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொண்டேன். இருந்தும் இப்படி என்னைக் குறுக்கிட்டுக் கொண்டிருந்தால், சிதம்பரநாதனைப் பேசவிடக் கூடாது என்ற கெட்ட எண்ணம் இருக்குமானால் நான் நிறுத்திக்கொள்கிறேன். அப்படியில்லாதபோது தயவுசெய்து யாரும் குறிக்கிடாதிருக்க வேண்டிக் கொள்கிறேன்.

உணவுக் கொள்முதல் சம்பந்தமாக நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நாட்டில் எத்தனையோ மாவட்டங்கள் இருக்கின்றன. சென்னை மாநிலத்தில் 14 மாவட்டங்கள் இருக்கின்றன என்று நினைக்கிறேன். பதுக்கல் வேட்டையாடுவதும், கள்ள மார்க்கெட் வேட்டையாடுவதும் மற்ற எந்த மாவட்டங்களிலும் இல்லாத வகையில் குறிப்பாக, செங்கற்பட்டு மாவட்டத்தில் மட்டும், நீங்கள் மிகத் தீவிரமாக அதுவும் குறிப்பாக, ஸ்ரீபெரும்பூதூர் தொகுதியில் வேட்டையாடி வருவதன், ரகசியம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன். இந்த ஒரு காரியமே, நீங்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று செய்கிறீர்கள் என்பதை எடுத்துக்காட்டப் போதும்.

மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன் : சார், ஆர் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று செய்வதாகப் பேசுவது இன்சினுவேஷன் ஆகும். அதைக் கனம் அங்கத்தினர் வாபஸ் வாங்க வேண்டும்.

திரு. ஏ. சிதம்பரநாத நாடார் : துணைச் சபாநாயகர் அவர்களே, நீங்கள் எதை வாபஸ் வாங்கச் சொன்னாலும் வாங்கத் தயாராக இருக்கிறேன். நான் சொல்வது என்ன என்பதைக் கேட்டுவிட்டு, நீங்கள், நான் குறிப்பிட்டது இன்சினுவேன்ஷனா என்பதை விளக்க, வேண்டும்.

மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று செய்வதாக என்று குறிப்பிட்டது உள்நோக்கம் கொண்டு ஒரு காரியம் செய்வதாக கற்பிக்கின்றது. நிகழ்ச்சிகள் எங்கேயும் நடைபெறுகின்றன. மந்திரி சபையினர் கொள்கை அடிப்படையில் காரியங்களை நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆக தனிப்பட்ட யார் மீதோ வெறுப்பு கொண்டு செய்வதாக பேசுவது முறையல்ல. அதை வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. சிதம்பரநாத நாடார் : Sir, I withdraw it. நான் சொல்ல வந்த கருத்தைக் கேட்டபிறகு நீங்கள் ரூலிங் கொடுத்தால் அது முறையாகும். பதுக்கல் வேட்டையாடுவது நல்லதுதான். பதுக்கல் வேட்டையாடினால் நாட்டிலுள்ள மக்கள் சுபிட்சமாக வாழ்வார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். நம் மாநிலத்தில் வேறு எத்தனையோ மாவட்டங்கள் இருக்க, செங்கல்பட்டு மாவட்டத்தில் மட்டும் பதுக்கல் வேட்டை தீவிரமாக நடத்துகிறார்கள் என்பது உள்ளொன்று வைத்து . . .

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, the Hon. Member is harping on the same point. It is better that the Chair instructs him not to harp on the same point.

மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் : கனம் அங்கத்தினர் சொல்ல வந்த கருத்தைச் சொல்லி முடிக்கட்டும். முழுவதும் தெரிந்தபின் நான் என்னுடைய உத்தரவை அளிக்கிறேன்.

திரு. ஏ. சிதம்பரநாத நாடார் : நமது மாநிலத்தில் எத்தனையோ மாவட்டங்கள் இருக்கின்றன. கன்னியாகுமரி இருக்கிறது, தஞ்சாவூர் மாவட்டம் இருக்கிறது. கன்னியாகுமரி ஏன் பதுக்கல் வேட்டையாடப்படவில்லை? தஞ்சை மாவட்டத்தில் ஏன் பதுக்கல் வேட்டையாடப்படவில்லை? எங்கள் மாவட்டதில், நாகர்கோவிலில், வடிவீஸ்வரம் தளவாய் தெருவில் கூ. சுப்பிரமணிய அய்யருக்கு எத்தனையோ ஏக்கர் நஞ்சை நிலங்கள் இருக்கின்றன. அதுபோன்று கோட்டாற்றிலுள்ள திரு. S.S.D.A. சரவணப் பணிக்கர் பேரிலும் அவர் உற்றார் உறவினர் பேரிலும் எத்தனையோ ஏக்கர் நஞ்சை நிலங்கள் இருக்கின்றன. அது போன்று நாகர் கோவிலில் Dr. மத்தியாஸ் பேரிலும் எத்தனையோ ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. இவர்களை சரியான முறையில் பதுக்கல் வேட்டையாடினால் எங்கள் மாவட்டத்திலுள்ள பற்றாக்குறையைப் போக்க வழி செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





திரு. எம். எஸ். மணி : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். இந்த மன்றத்தில் இல்லாத தனிப்பட்ட மனிதர்களைப் பற்றி பேசலாமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் : இந்த இடங்களில் எல்லாம் நெல் இருக்கிறது என்கிற தகவலைத்தான் அவர் தெரிவிக்கிறார்.

திரு. ஏ. சிதம்பரநாத நாடார் : இச்சர்க்கார், மேலே நான் சொன்ன காரியத்தைச் செய்ய முன்வருமானால், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. ராஜாரத்தினம், எம்.எல்.ஏ., போன்று நாங்களும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் குறிப்பாக இன்றையதினம் எடுக்கப்படுகிற நடவடிக்கைகள் அதுவும் எங்கள் மாவட்டத்தில் ஒன்றாயிருக்கட்டும்.

மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் : கனம் அங்கத்தினர் நாகர்கோவில் தொகுதியில் எந்தெந்த இடத்தில் நெல் பதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை வைத்திருந்தால் அதை முதலமைச்சர் அவர்களிடம் தெரிவிப்பது நல்லதாக இருக்கும். அதன்றி எடுக்கப்படுகிற நடவடிக்கைகளுக்கு உள் நோக்கம் கற்பிப்பது சரியாகாது.

திரு. ஏ. சிதம்பரநாத நாடார் : இந்தச் சபை யாருக்கும் தனிப்பட்ட சபை அல்ல. எனக்கு வாக்களித்த வாக்காளர்கள் எதற்காக என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்களோ, அந்தக் கடமையை நான் நிறைவேற்றியாக வேண்டும். நாட்டில் எந்த அநியாயம் நடக்கிறதோ அதை இந்தச் சபையில் சொல்லியாக வேண்டும். அப்படிச் செய்யாமல் இருந்தால் நான் என் கடமையிலிருந்தே தவறியவன் ஆவேன். 'நாம் நம்முடைய பிரதிநிதியாக சிதம்பரநாதனைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறோம். அவன் தன்னுடைய கடமையிலிருந்து தவறவில்லை' என்பதாக என்னைத் தேர்ந்தெடுத்த மக்கள் மகிழ்ச்சியடைய வேண்டும் என்பதாக இவற்றை சபைமுன் வைக்கிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் 19-3-1967-ல் வியாபாரிகளுக்கு ஒரு பேட்டியளித்தார்கள். விளைபொருள்களுக்கான கட்டுப்பாட்டை ரத்து செய்ய வேண்டும் என்று அவர்கள்

கோரி வருகிறபோது, நமது முதலமைச்சர் அவர்கள், 'நீங்கள் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி குடிமக்களுக்குத் தருவோம் என்பதாக நீங்கள் உறுதியளியுங்கள், நான் மூன்று வருடத்திற்கு உணவுக் கட்டுப்பாட்டை ரத்துச் செய்து விடுகிறேன்' என்று சொன்னார். நண்பர் ஆசைத்தம்பி அவர்கள் சிரிக்கிறார்கள். இது சிரிப்பதற்குரிய விஷயம் அல்ல. தேர்தலுக்கு முன்னதாக, திராவிட முன்னேற்றக் கழக கட்சி தங்கள் தேர்தல் அறிக்கையை மக்களுக்கு முன் சமர்ப்பிக்கும் முன்னதாக, வியாபாரிகளுக்கு முன் வைத்திருந்தால் நான் வரவேற்று இருப்பேன். மந்திரி சபை அமைக்கப் போகிறோம் என்பது அவர்களுக்கே தெரியாது. பொறுப்புள்ள மந்திரிசபை, பொறுப்புள்ள அமைச்சர்கள் இப்படியா பேசுவார்கள்? 'ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுக்கிறீர்களா? நான் கட்டுப்பாட்டை எடுத்துவிடுகிறேன்' என்று பேசுவது, குழந்தைகள் கிராமப்புறங்களில் கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடுவது
நண்பகல் 12-00 போலிருக்கிறது. உணவுக் கட்டுப்பாட்டைப்பற்றி இந்த மந்திரி சபைக்கு ஏக அபிப்பிராயம் உண்டா என்று கேட்கிறேன். ஸ்ரீமான் கருணாநிதி அழகாகச் சொல்கிறார். அவர் பேச்சைப் பற்றிச் சொல்வதற்கில்லை. "எங்களுக்கு வாய்ப்புக் கொடுங்கள், எங்களுக்குச் சந்தர்ப்பம் கொடுங்கள், எங்களுக்குச் சாவகாசம் கொடுங்கள், நாங்கள் ஐந்து வருஷத்திற்குள் ஒரு ரூபாய்க்கு மூன்று படி அரிசி கொடுப்போம்" என்று அழகாகச் சொல்கிறார். நமது முதலமைச்சர் அவர்களோ நான் முன் சொன்னமாதிரியே சொல்கிறார். உங்களோடு ஒன்றாக தேர்தலிலே ஓடோடி ஒட்டி நின்ற ம.பொ.சி. அவர்களோ நான் ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று சொல்லவில்லையென்று கையை விரிக்கிறார். இதுதான் உங்களுடைய அரிசிப் பிரச்சினையின் ஆதாரக் கொள்கையா? அதற்குப் பிறகு சாணக்கியர் ராஜகோபாலாச்சாரியிடம் பத்திரிகை நிருபர்கள். . .

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி:** கனம் உறுப்பினர் பேசும்போது திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்களை சாணக்கியர் என்று குறிப்பிட்டார். அதைத் திரும்பப் பெற வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர்:** ஏற்கனவே ஒரு தீர்ப்பளிக்கையில் சபையில் இல்லாதவர்களைப்பற்றிக் குறிப்பிடுவது முறையல்ல என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் திரு. ராஜாஜி அவர்களை சாணக்கியர் என்று குறிப்பிட்டதை வாபஸ் வாங்கிக்கொண்டு, 'திரு' என்று அடைமொழி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஏ. சிதம்பரநாத நாடார்:** எதைப் பின் வலிக்கச் சொல்கிறீர்களோ அதைப் பின்வலித்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அதுதான் சபை விதியா, முறையா?

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** சாணக்கியர் என்ற சொல்லுக்கு ராஜதந்திரி என்றுதான் அர்த்தம். அதை அவதூறாகக் கொள்ள வேண்டியதில்லை என்று கருதுகிறேன்.





**மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர்:** தமிழில் சில சொற்களினுடைய பொருள் உயர்ந்ததாக இருந்தாலும், அதை ஆளுகின்ற முறை, ஆளுகின்ற இடம், ஆளுவோர் ஆகிய தன்மையினால் அது இழிந்ததைக் கூடக் குறிக்கும். இந்த இடத்திலே சாணக்கியர் என்ற சொல்லை உபயோகிப்பது நல்ல மரபு அல்ல. ஆளுகின்ற இடம், அவர் ஆளுகின்ற தன்மை, ஆகியவை குறித்து இந்தச் சூழ்நிலையில் அந்தச் சொல்லை உபயோகிக்காது வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவருக்கு இன்னும் 4 நிமிஷங்களே பேசுவதற்கு இருக்கின்றன.

**திரு. ஏ. சிதம்பரநாத நாடார்:** அந்தச் சொல்லை வாபஸ் பெறுகிறேன். ஐயா, நான் ஆளும் கட்சியில் இருந்தவன், எதிர்க்கட்சியிலும் இருந்தவன். மந்திரியாகவும் இருந்தேன். சட்டம் தெரிந்தவன். "உனக்கு 4 நிமிஷமே இருக்கிறதென்று" சொன்னால் சங்கடத்திற்கு உள்ளாக நேரிடுகிறது. ஆகவே கொஞ்சம் காலத்தைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திரு. ராஜகோபாலாச்சாரியாரிடம் பத்திரிகை நிருபர்கள். "உங்கள் கூட்டு என்ன ஆயிற்று?" என்று கேட்டபோது, "எங்கள் தேனிலவு முடிந்துவிட்டது, இனி ஒன்றும் சொல்வதற்கு இல்லை" என்று சொன்னார் என்றால், வருங்காலத்தில் உங்களுடைய நிலை எப்படி இருக்கும் என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ள வேண்டும்.

நமது மதிப்பிற்குரிய மாமந்து மந்திரி அவர்களுக்கு ஒன்று சொல்லலாம் என்று இருக்கிறேன். திரு. கருணாநிதியைப் பற்றிக் குறைகூறவில்லை. எப்படி இருந்தாலும் நல்லவர்; திறமையுள்ளவர்; அழகாகப் பேசுவார். அவருடைய பேச்சில் விறுவிறுப்பு யாராவது உண்டானால் அது காங்கிரஸ்காரன்தான் என்பதை அவர் மறந்துவிடக்கூடாது. அவர் பஸ்களை தேசியமயமாக்கிவிடும் கொள்கையைப்பற்றிச் சொன்னார். ஒன்று சொல்வேன் திரு. கருணாநிதிக்கு. கரடிக் கதை அவருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். பஸ்களை தேசியமயமாக்கும் கொள்கை என்பது, தேன்கூட்டில் கரடி கை விட்ட கதைபோல் ஆகிவிடக் கூடாது.

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி:** பஸ்களை தேசியமயமாக்குவது தேன்கூட்டில் கையைவிடுகிற மாதிரி என்று உறுப்பினர் சொல்வது எங்களுக்குத் தெரியும். தேன்கூட்டில் எப்படி கையை விடுவது? தேனை எப்படி எடுத்துக் குடிப்பது என்பதிலே நாங்கள் திறமையுள்ளவர்கள். ஆகையால் தேனைக் கட்டாயம் எடுப்போம். குளவி கொட்டாமல் எடுப்போம். கொட்ட வந்தால் கொடுக்கை நறுக்கி எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. சிதம்பரநாத நாடார்:** தேனை எப்படி எடுப்பது என்பது தெற்கே உள்ள எங்களுக்கு நன்றாகத் தெரியும். அதுவும் தெற்கேயுள்ள நாடார்கள் தேன் எடுப்பதில் எப்படிப்பட்டவர்கள் என்பதை விசாரித்துப் பார்த்தால் தெரியும். குளவியைக் கண்டால் ஏழு மைல் ஓடுகிற அவர்கள், வீரம் பேச வேண்டாம்.

**திரு. பெ. சீனிவாசன்:** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், மதிப்பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர்

தெற்கேயுள்ள நாடார்கள் தேன் எடுப்பதில் வல்லவர்கள் என்று சாதி விவகாரத்தை இங்கே கிளப்புவதாகச் சொல்வது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஏ. சிதம்பரநாத நாடார் :** தொழில் கல்லூரிகளுக்கு இடம் கொடுப்பதுபற்றியும் ஒரு வார்த்தை. பழைய காலத்தில் ஜில்லா வாரியாக, பின்தங்கிய வகுப்புவாரியாக இருந்த முறை உங்கள் ஆட்சியிலும் மாறவே கூடாது. அட்வகேட் ஜெனரல் நியமனம் பற்றிய புகாருக்கும் முதலமைச்சர் அவர்கள் மிக அழகாகச் சொன்னார்கள். இந்த ஆட்சியில் ஒரு முதலியாரைத்தவிர வேறு ஆளே உங்களுக்குக் கிடைக்கவில்லையா?

**மதிப்பிற்குரிய துணைப் பேரவைத்தலைவர் :** இந்த மன்றத்தில் சாதி வேற்றுமையைக் கிளப்பக்கூடிய விதத்தில் எதுவும் பேச வேண்டாம் என்று குறிப்பிடுகிறேன்.

**திரு. ஏ. சிதம்பரநாத நாடார் :** மந்திரிமார்களின் சம்பளத்தைப் பற்றிப் பேசும்போது முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் நாங்கள் 500 ரூபாய்தானே வாங்குகிறோம். உங்களுடைய சம்பளத்தை 100 ரூபாயாகக் குறைத்துக்கொள்ளத் தயாரா? இது கொடுக்காத இடையன் சினை ஆட்டைக் காட்டின கதைமாதிரிதான் இருக்கிறது. இப்படிப் பேசுவதற்கு திறமையுள்ள, ஆள்வதற்கு வந்திருக்கிற உங்களிடத்தில் இதுபோன்ற சொல் வாயிலிருந்து இனி மேலாவது வராமலிருக்க ஆண்டவன் உங்களைக் காப்பாஞக. சினிமாத் தொழிலைப்பற்றி ஸ்ரீமான் கருணாநிதி அவர்கள், தேசிய மயமாக்குவோம் என்று பேசினார்கள். சினிமாத் தொழிலை தேசிய மயமாக்குவதை நான் வரவேற்கிறேன். உங்களுக்கு இந்த வயதில் எவ்வளவு சினிமா ஆசை இருக்கிறதோ, எனக்கும் அந்தக் காலத்தில் இருந்ததுதான். என் வயதில் நான் அன்றைக்கு ஆயிரம் சினிமாக்களுக்குமேல் பார்த்திருப்பேன். அவ்வளவு பிரியம் உண்டு. இன்றைக்கு நீங்கள் சினிமாத்தொழிலை தேசிய மயமாக்கினால், இந்த நாட்டிலுள்ள அனைவரும் திரு. கருணாநிதியைப் பாராட்டுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன். சினிமாத் தொழிலை தேசியமயமாக்குவதை காங்கிரஸ் கட்சி ஆதரிக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** அதை தேசிய மயமாக்க வேண்டும் என்பது என் ஆசை. கட்சிக்கும் அது ஆசையாக இருக்கலாம். திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் ஒரு வார்த்தை பேசினார்கள். இன்றையதினம் அமைச்சர்கள் சின்னக் காரில் போகிறார்கள். சின்னக் காரில் போனால்தான் மக்களோடு நெருங்கிப் பழக முடிகிறது என்று. நான் சொல்கிறேன், சின்னக் காரில் போனால்தான் மக்களிடத்தில் நெருங்கிப் பழக முடியுமா? சின்னக் காரில் போவதைவிட மோட்டார் சைக்கிளில் போகலாம், அதுவும் சைக்கிளில்கூடப் போகலாம். அதை விட்டுவிட்டு நடந்து கூடப் போகலாம். தனிப்பட்ட ஒரு மனிதன் பதவிக்கு வந்தால்



அதைப்பற்றிக் கொஞ்சமும் அக்கறையில்லை. அமைச்சர்கள் சின்னக் கார்களில்தான் போவேன் என்று கூறினால் போகட்டும் . . .

(மணியடிக்கப்பட்டது.)

**திரு. எம். சி. பாலன் :** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும்பொருட்டு நான் இங்கு நின்று கொண்டிருக்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய அருமை நண்பர் சிதம்பரநாதன் அவர்கள் நெல்லை-குமரி ரயில் பாதை இதுவரை வரவில்லை, உடனடியாக ஏற்படுத்துவதற்கு வழி செய்ய வேண்டுமென்று தெரிவித்தார்கள். அவர்கள் கிட்டத்தட்ட 19 ஆண்டு காலமாக எம்.எல்.ஏ.வாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர் அமைச்சராக இருந்தேன் என்றெல்லாம் கூடத் தெரிவித்தார்கள். 19 ஆண்டு காலமாக நெல்லை-குமரி ரயில் பாதையைக் கொண்டு வரப் பாடுபடாத அவர் இன்று நெல்லை-குமரி ரயில் பாதையை இந்த அரசு கொண்டு வரவேண்டும் என்று கூறுகிறார். தான் காங்கிரஸ் கட்சிக்காக 20 ஆண்டுக் காலமாகப் பாடுபட்டு வருவதாக அவர்கள் தெரிவித்தார்கள். நான் இந்த மன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன் அவர் காங்கிரஸ் கட்சியை மூன்று தடவை எதிர்த்து நின்று தோல்வியடையச் செய்திருக்கிறார். 1956-ல் எங்களுடைய பகுதி தாய்த் தமிழகத்தோடு சேர்ந்த பிறகுதான் அவர் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினரானார். அவர் 1956-ம் மாடல் காங்கிரஸ்காரராகத்தான் எங்கள் மாவட்டத்திலிருந்து வந்திருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் பேசும்போது 'தென் பகுதி நாடார்' என்று சொன்னார். அப்போது நண்பர் சீனிவாசன் கூட குறுக்கிட்டு அது பற்றிக் கூறினார். காமராஜ நாடாருக்கு ஓட்டுப் போடுங்கள் என்று கேட்டார்கள்; காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டுப் போடுங்கள் என்று சாதனைகளைச் சொல்லி யாரும் ஓட்டுக் கேட்கவில்லை; நாடாருக்கு ஓட்டுப் போடுங்கள் என்றுசொல்லி திரு. சிதம்பரநாதன் அவர்கள் ஊர் ஊருக்குப் போய் ஓட்டுக் கேட்டார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இங்கு பேசியபோது கூடத் தெரிவித்தார்காள். 'காமராஜ நாடாருக்கு' ஓட்டுப் போடுங்கள் என்ற வகையில் ஓட்டுக் கேட்டார்கள். நாங்கள் மூன்று படி அரிசி என்று சொல்லி ஓட்டுக் கேட்டோம். ஆனால் அவர்கள் . . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். திரு. பாலன் அவர்கள் நான் ஓட்டுக் கேட்ட முறையைப் பற்றி இங்கு குறிப்பிடுகிறார்கள். நானும் இந்த அவையின் முன் பிரத்தியட்சமாக இருக்கின்ற சந்தர்ப்பத்திலே, ஜாதியைச் சொல்லியோ, மதத்தைச் சொல்லியோ எந்த விதமாகவும் ஓட்டுக்களைக் கேட்கவில்லை.

**மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் :** இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

**திரு. எம். சி. பாலன் :** நெல்லை-குமரி ரயில் பாதை அமைக்க சர்வே செய்து நான்கு ஆண்டுகள் ஆகின்றன. கடந்த மூன்று தடவைகளிலும், தேர்தல் நேரத்தில் கன்னியாகுமரி-நெல்லை ரயில்

[திரு. எம். சி. பாலன்] [1967 மார்ச் 27

பாதையைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லித்தான் வாக்குகளைப் பெற்று வந்தார்கள். ஆனால் நடைமுறையில் வருவதற்கு எந்த விதமான முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. நெல்லை-குமரி ரயில் பாதை எங்களுக்கு நிச்சயமாக சீக்கிரத்தில் வர வேண்டும் என்று இந்த மாமன்றத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்தில் 12 மாவட்டங்கள் இருக்கின்றன என்று திரு. சிதம்பரநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் 14 மாவட்டங்கள் இருக்கின்றன. அதிலே தென் ஓரத்திலே இருக்கின்ற மாவட்டத்தில் ரயில் பாதை இல்லாத காரணத்தால் அந்தப் பகுதி மக்கள் இன்னும் கேரளப் பகுதியில் இருக்கும் உணர்ச்சியோடுதான் இருந்து கொண்டிருக்கிறார்கள். ரயில் பாதை இல்லாத காரணத்தால் பல தலைவர்கள் அங்கு வரமுடியவில்லை. அங்குள்ள மக்களில் ரயிலை நேரில் பார்த்தவர்கள் 10 சதமானந்தான் இருக்கும். மற்றவர்கள் சினிமாவிலேதான் ரயிலைப் பார்த்திருக்கிறார்களே தவிர, நேரில் பார்த்ததில்லை. பன்னெடுங்காலமாக வற்புறுத்தப்பட்டு வரும் இந்தப் பிரச்சினையில் இந்த மந்திரிசபையினர் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

எங்களது மாவட்டத்திலும், தஞ்சை போன்ற மற்ற மாவட்டங்களிலும் அரிசிக் கொள்முதல் கெடுபிடியாக இல்லை என்று அவர்கள் தெரிவித்தார்கள். எங்களது மாவட்டத்தைப் பொறுத்த வரை இப்போதுதான் 1,28,000 ஏக்கர் நிலங்களில் சாகுபடி ஆகிக் கொண்டிருக்கிறது. 'பத்தாண்டுச் சாதனைகள்' என்ற புத்தகத்தைத் தமிழக சர்க்கார் வெளியிட்டிருந்தார்கள். அதிலே கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரை, திருவாங்கூர் கொச்சியில் இருந்தபோது ஏற்பட்ட சாதனைகளைப் பற்றிப் போட்டிருந்தார்களே தவிர, தாய்த் தமிழகத்தோடு சேர்ந்த பிறகு ஏற்பட்ட சாதனைகள் ஒன்றும் இல்லை. 1905-ம் ஆண்டில் ஏற்பட்ட பேச்சிப்பாறை அணையைப் பற்றியும், 1952-ல் திரு-கொச்சியில் இருந்தபோது ஏற்பட்ட பெருஞ்சாணி அணையைப் பற்றியும் போட்டிருந்தார்களே தவிர, 1956-க்குப் பிறகு தாய்த் தமிழகத்தோடு சேர்ந்த பிறகு எங்கள் மாவட்டத்திற்கு என்ன சாதனைகளைப் புரிந்திருக்கிறார்கள் என்று ஒன்றும் இல்லை. ஏதோ குளங்களுக்குக் கரை கட்டப்பட்டன; ஆறுகளுக்குக் கரை கட்டப்பட்டன என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். உருப்படியான திட்டங்கள் எதுவும் கடந்த பத்தாண்டுகளில் ஏற்படவில்லை. திரு. சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பிரைமரி ஸ்கூல்கள் இன்று ஹைஸ்கூல்களாக ஆக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, புதிய ஹைஸ்கூல்கள் இல்லை. அந்தப் பள்ளிக் கட்டடங்கள் எல்லாம் இடிந்துபோன நிலையில் இருக்கின்றன.

எங்களது மாவட்டத்தில் 40,000 ஏக்கர் நிலங்களில் மரவள்ளிக் கிழங்கு பயிர் செய்யப்படுகிறது. அங்குள்ள மக்களுக்கு முக்கிய உணவாக அது இருந்து வந்தது. அது இப்போது மாவு மில்களில் அரைக்கப்பட்டு பம்பாயிக்குச் சென்று விடுகிறது. இதனால் அங்குள்ள மக்கள் தங்களுடைய முக்கிய உணவான மரவள்ளிக்



1967 மார்ச் 27] [திரு. எம். சி. பாலன்]

கிழங்கை உணவாகக் கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. மரவள்ளிக் கிழங்கை மில்லில் அரைக்கக்கூடாது என்று உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களது மாவட்டத்தில் 400, 500 குளங்கள் தூர்ந்த நிலையில் இருக்கின்றன. அவற்றைப் ஆழப்படுத்த வேண்டும். லிஃப்ட் இரிகேஷனுக்குப் பல திட்டங்கள் போடப்பட்டு, சர்வே எடுக்கப்பட்டு எந்த வேலையும் நடைபெறவில்லை. 'சாகோ' இன்டஸ்ட்ரி ஏற்படுத்தும் திட்டத்தையும் அமல் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு சேரும்போது ஆசிரியர்கள் என்ன சம்பளம் பெற்று வந்தார்களோ அதே சம்பளத்தைத்தான் இப்போது பெற்று வருகிறார்கள். இங்குள்ள ஆசிரியர்கள் சம்பள விகிதம் வேறாகவும் எங்கள் மாவட்டத்திலுள்ள ஆசிரியர்கள் சம்பள விகிதம் வேறாகவும் இருக்கிறது. இந்தப் பிரச்சினையையும் தீர்க்க வேண்டும். எங்கள் ஊரில் பல பள்ளிக்கூடங்களுக்குக் கட்டடங்கள் இல்லை. தெருவிலேதான் நடக்கின்றன. எங்களுடைய மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு சேர்ந்த நேரத்தில், இருக்கின்ற குறைகளை எங்களுடைய எம்.எல்.ஏ.-க்கள் சொன்ன நேரத்தில், அன்றைய நிதியமைச்சர் அவர்கள் 'உங்களை நான் அழைக்கவில்லையே; நீங்கள் ஏன் வந்தீர்கள்?' என்று கேட்டார்கள். இந்த மந்திரி சபை எங்களுடைய இந்தப் பிரச்சினைகளையெல்லாம் கவனித்துத் தீர்க்கும் என்று நம்புகிறேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார்; அங்கத்தினர்கள் பேசும்போது எந்த விதமான குறிப்பும் இல்லாமல், முன் அறிவிப்பும் இல்லாமல் குற்றச்சாட்டுகளைச் சொல்வது சரியல்ல. பாராளுமன்றத்தில் இந்த மாதிரி குற்றச்சாட்டுகளைச் சொல்லும்போது முன் அறிவிப்பு கொடுக்க வேண்டுமென்று விதிமுறைகள் இருப்பதாக அறிகிறேன். இந்த மாதிரி குற்றச்சாட்டுகளை நாம் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டால் இந்தச் சபை 'சந்தைக் கடை' ஆகிவிடும்.

**மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் :** கனம் உறுப்பினர் அவர்கள் 'சந்தைக் கடை' என்று சொன்னதை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டும்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். கனம் அங்கத்தினர்கள் மற்ற அங்கத்தினர்களைப் பற்றிச் சொன்ன தனிப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சபையின் நடவடிக்கைகளில் இருந்து நீக்கிவிடுமாறு யோசனை கூறுகிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களின் உரையை வரவேற்று ஒருசில வார்த்தைகள் பேசலாமென்று நினைக்கிறேன். பொதுவாக இரண்டு பக்கத்திலுமுள்ள கட்சிக்காரர்கள் பலவித நல்ல அபிப்பிராயங்களைக் கூறி இன்றுள்ள பிரச்னைகளை எவ்வாறு தீர்ப்பது என்பதுபற்றி கூறினார்கள். இப்போதுள்ள நிலையில் யார் எந்தத் திட்டம் கொண்டு வந்தாலும் சரி, அவை நீண்டகாலத் திட்டங்களாகவே இருக்

கின்றன. ஐந்தாண்டுகளுக்குள் நிறைவேற்றி நாம் அதன் பலனைக் காண முடியுமா என்பது சந்தேகமாகவே இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் அரசாங்கத்தில் இருக்கும் காலத்தில் மக்களிடையே நல்ல எண்ணத்தை உண்டாக்க வேண்டுமென்று சொன்னால் ஒரே ஒரு மருந்துதான் இருக்கிறது. நான் சொல்வதை அமைச்சர்கள் நல்ல விதத்தில் ஏற்று நிறைவேற்றினால், நல்லது. சென்னை நகரில் எல்லா அமைச்சர்களும் இருந்து கொண்டு வருகிற மனுக்களை எல்லாம் அல்லது நாட்டில் எங்கும் நடக்கும் குற்றங்களை உடனடியாகத் தீர்க்க முடியுமா என்றால் அது நடைமுறையில் முடியாத காரியம். மனு ஒன்று கொடுத்தால் அதை பார்வேர்டட் என்று சொல்லி கலெக்டர்களுக்கு அல்லது வேறு ஆபிசர்களுக்கு அனுப்பி வைக்கிறோம். அப்படி அனுப்பி சாதாரணமாக முடிவு எடுக்க குறைந்தபட்சம் எட்டு மாத காலமாகிறது. மேலும் அங்குள்ள அதிகாரிகள் தாங்கள் செய்தது தவறு என்று ஒருபோதும் எழுத மாட்டார்கள் என்பதும் நமக்குத் தெரியும். ஆகவே, எல்லாத் திட்டங்களையும் நல்லவிதமாக செயல்படுத்தவேண்டுமென்றால் மினிஸ்டர் வித்அவுட் போர்ட் போலியோ என்று ஒரு அமைச்சரை கண்டிப்பாக போடவேண்டும். அந்த மினிஸ்ட்டர் ஜில்லா வாரியாக அடிக்கடி சுற்றுப்பிரயாணம் செய்து ஸ்பாட் டிஸ்போஸல் கொடுத்தால் எல்லாம் நல்லவிதத்தில் நடக்கும். அப்போது அரசாங்கத்தின் செயல் முறைகள் எல்லாம் நன்கு நடக்கும் என்று தங்கள் மூலம் முதல் அமைச்சர் அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆக மினிஸ்டர் வித்அவுட் போர்ட் போலியோ என்று ஒருவரைப் போட்டு அவர்கள் வேலையே குறைகளைத் தீர்க்கும் முறையில் அமைக்கப்பட்டு எந்த இடத்தில் எந்தப் பிரச்னை வந்தாலும் அங்கே அவர் சென்று ஸ்பாட் டிஸ்போஸல் கொடுத்தால் அங்கத்தினர்கள் கூறும் குற்றங்குறைகள் உண்மையா இல்லையா; யார் மீது தப்பு இருக்கிறது; அதிகாரிகள் மீது தப்பா அல்லது மனுக் கொடுத்தவர் மீது தப்பா என்பது தெளிவாக அந்த இடத்திலேயே தெளிவாகும்.

அடுத்த படியாக, இன்று முக்கியமான பிரச்னை உணவுப் பிரச்னை. காங்கிரஸ் கட்சி நல்ல கட்சியாக இருந்தாலும் அது தோற்றதற்கு காரணம் என்ன? என் அபிப்பிராயம் என்னவென்றால் அது ஏழைகளின் கட்சியாக இருந்தபோது நன்றாகத் தான் இருந்தது. இன்றையதினம் வியாபாரத்தையும் அரசியலையும் சேர்த்து பெரும் பணக்காரர்கள் உள்ளே புகுந்தவுடன் மக்கள் கட்சி என்பது மறைந்து கொள்கை அளவில் நல்ல கருத்துக்கள் இருந்தாலும் அதை மாற்ற வேண்டிய நிலையில் உள்ளது என்பதை மறுக்கமுடியாது. அதேமாதிரி திராவிட முன்னேற்றக் கழகம் அரசாங்கத்திற்கு வந்தவுடன் குறை கூறுவதில் பிரயோஜனமில்லை. இந்த நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியை எடுத்துக் கொண்டது எனக்குக் கூட அவ்வளவாக பிடிக்கவில்லை. கஷ்டமான நிலையில் அரசாங்கத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சியில் பட்ட கஷ்டங்களை எல்லாம் விட நான்கு மடங்கு ஆளுகிற நேரத்தில் படுகிறார்கள் என்பதில் ஐயமில்லை. துரதிருஷ்ட சம்பவம் என்றிருந்தாலும், தெளிவாகச்





சிந்தித்து மினிஸ்ட்டர் வித்அவுட் போர்ட்போலியோ என்று போட்டு மக்களிடம் சென்று குறைகளை அப்போதைக்கப்போது தீர்க்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் நல்ல பெயர் கிடைக்கும். குஜராத், பஞ்சாப் போன்ற மாநிலங்களில் இப்படி ஸ்பாட் டிஸ்போசல்ஸ் கொடுத்திருக்கிறார்கள். ஒரு மனு கொடுத்தால் சில சமயங்களில் நான்கைந்து டிபார்ட்மென்ட்களுக்குப் போய் கன்கர் ஆக வேண்டியிருக்கிறது. இப்படி ஒரு டிபார்ட்மென்டிலிருந்து இன்னொரு டிபார்ட்மென்டுக்குப் போய் இப்படியே 10 ஆண்டுகள் கூட ஆகிவிடுகின்றன. ஆகவே ஒரு அமைச்சர் அந்தந்த இடத்திற்குச் சென்று எல்லா கன்சர்ன்ட் ஆபீசர்களையும் வைத்துக் கொண்டு ஸ்பீடி டிஸ்போஸல் கொடுத்தால் உடனடியாக எல்லாம் முடிந்துவிடும். இந்த ஒரு மருந்தைத் தவிர வேறு ஒரு மருந்தும் கிடையாது பிரச்னைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கு.

அடுத்தபடியாக, சில நண்பர்கள் இன்ப்ளேஷன் பற்றிச் சொன்னார்கள். இன்ப்ளேஷன் என்பது அண்டர் டெவலப்ட் கன்ட்ரீஸ் டெவலப் ஆகும்போது ஏற்படும் விஷயம் அது. விவசாயம் சம்பந்தமாக அதிகப் பணம் செலவு செய்யாமல் இன்டஸ்ட்ரீஸ்க்காக அதிகப் பணம் செலவு செய்தால் ஒரே ஊரில் விவசாயிகளும், தொழிலாளர்களும் இருக்கும் நிலையில் தொழிலாளர்கள் கையில் அதிகமாகவும்—நியாயமான ஊதியமாக இருந்தாலும் சரி—விவசாயிகள் கையில் குறைவாகவும் பணம் வருகிறது. ஒரு கடைக்கு ஒரு பொருள் வாங்கச் சென்றால் தொழிலாளர்கள் தாராளமாக பணம் கொடுத்து வாங்கும் சக்தி அவர்களுக்கு ஏற்படுகிறது. அப்படி விவசாயிகளால் வாங்க முடிவதில்லை. விவசாயிகளின் வருமானம் குறைவாக இருக்கிறது. விவசாயிகள் அதை பீல் செய்கிறார்கள். சேலம் உருக்காலை பற்றி பேசிக்கொண்டிருந்தாலும் அது ஒரு பக்கம் வந்தாலும் கூட. இரும்புத் தொழிற்சாலைகள் சம்பந்தமாக உள்ளவைகளை எல்லாம் சிறிது நிறுத்திவிட்டு அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் விவசாய சம்பந்தமான நல்ல தொழிற்சாலைகளை கட்டினால் நன்றாகயிருக்கும். விலைவாசிகள் பற்றி ஒரு சில வார்த்தைகள். நடைமுறையில் 10 சத விகிதம் நாமே ஏற்கும் நிலைமை ஏற்படுகிறது. ரெவின்யூ டிப்பார்ட்மென்டில், கலெக்டர் அலுவலகத்தில் அட்மினிஸ்ட்ரேடிவ் சார்ஜஸ் என்று போடுகிறார்கள். Pool Price என்று போடுகிறார்கள். நியாயமான முறையில் உதவி செய்ய வேண்டும் என்று பார்க்காமல் எல்லாச் செலவையும் மொத்தமாகப் போட்டு அட்மினிஸ்ட்ரேடிவ் சார்ஜஸ் ஏறுகிறது. அரிசியை கொண்டு ஒரு இடத்தில் வைக்கும்போது திடீரென்று இன்னொரு இடத்தில் இல்லாவிட்டால் 100 மைல்களுக்கு அப்பால் இங்கிருந்து அனுப்புகிறார்கள். ஆக திட்டம் போட்டு வேலை செய்யாமல் 300 மைல் அளவிற்கு, சுற்றிச் செல்லும் அளவிற்கு தற்காலிக நிவாரணம் அளிப்பதால் டிரான்ஸ்போர்ட் சார்ஜஸ் எக்கச்சக்கமாகி விடுகிறது. முன் கூட்டியே எந்தெந்த இடத்தில் எவ்வளவு எவ்வளவு வேண்டுமென்று கடந்த 2 ஆண்டுகளாக கிடைத்த அனுபவத்தை வைத்துக் கொண்டு ஆங்காங்குள்ள கலெக்டர்களிடம் கேட்டு எந்தெந்த இடத்தில் எவ்வளவு

எவ்வளவு வேண்டும் என்று கணக்கிட்டு அப்படி ஸ்டாக் செய்து விட்டால் டிரான்ஸ்போர்ட் சார்ஜை கூடுமனவரை குறைத்து குறைகளை நிவர்த்தி செய்தால் மிக நன்றாகயிருக்கும்.

அதற்கு அடுத்தபடி ரைஸ் மில்லர்ஸ் பற்றி சொல்ல வேண்டும். ரைஸ் மில்லர்ஸுக்கு லைசென்ஸ் கொடுப்பதில் நமது அரசாங்கம் மிகவும் கட்டுப்படுத்தி வைப்பதால் தான் செலவுகள் குறைய முடியாமல் இருக்கிறது. இன்றைக்கு இருக்கக் கூடிய நிலையில் யார் கேட்டாலும் லைசென்ஸ் கொடுக்கவேண்டும். ரைஸ் மில் லைசென்ஸை கொடுப்பதில் உடனே கொடுத்தால் போட்டா போட்டி ஏற்படும். அரைப்பதற்கு எனக்கு உனக்கு என்று அடிபிடி சண்டைபோட்டு வாங்கிச் செல்வார்கள். அப்போது நமக்கு க்வாலிடி நல்ல விதத்தில் கிடைக்கும். காம்படிஷன் வந்தால் நல்ல க்வாலிடி கிடைக்கும். இதை மனதில் வைத்துக் கொண்டு ரைஸ் மில்களுக்கு தாராளமாக லைசென்ஸ் கொடுக்கவேண்டும் என்பது எனது தாழ்மையான கருத்து.

பிற் பகல். 12-30 அதற்கு அடுத்தாற்போல், சில கிராமங்களில் குடும்பக் கார்டு கொடுத்து சில கிராமங்களில் இல்லாத நிலை இருக்கிறது. நமது முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், சென்னை நகரத்திலும் கோயம்புத்தூர் நகரத்திலும் ஸ்டாச்சுட்டரி ரேஷனிங் இருக்கிறது, மற்ற இடங்களில் இல்லை என்ற நிலை இருக்கிறது என்று சொன்னார்கள். இதிலே மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், உரிமையுள்ள மக்களுக்கு ஒரு இடத்தில் ரேஷன் முறை என்று வைத்தும், ஒரு இடத்தில் ஃபாமிலி கார்ட் என்று வைத்தும் பாரபட்சம் காட்டப் படுகிறது என்று நினைக்கிறார்கள். அதனால் அவர்கள் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட அதிருப்தியைப் போக்கிக் கொடுக்கவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக இந்த ஒரு விஷயத்தை மட்டும் வலியுறுத்த விரும்புகிறேன். நமது முதலமைச்சர் அவர்கள் இலாகா பொறுப்பு இல்லாத ஒரு அமைச்சரை நியமித்து, அவர் எப்போதுமே சுற்றுப் பிரயாணம் செய்கிற மாதிரி ஏற்பாடு செய்து, மனுக்களை அலுவலர்களைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு உடனுக்குடன் ஸ்பாட் டிஸ்போஸல் கொடுக்கும் முறையில் ஏற்படுத்திக் கொடுத்து ஜனங்களுக்கு நல்ல விதத்தில் நல்வாழ்வை அளிக்க வேண்டுமென்று கூறி, இந்த உணவுப் பிரச்னையையும் தீர்த்துக்கொடுக்கவேண்டுமென்று கூறி, நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எம். மேத்தா:** பெருமதிப்பிற்குரிய துணை அவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் முகத்தான் இன்று உங்கள் முன்னிலையில் பேச நிற்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் பெரிய தியாகங்களுக்கிடையே தான் இந்த மந்திரி சபையை இன்று அமைத்திருக்கிறது. உள்ளபடியே கவர்னர் பெருமானுடைய பேருரையிலிருந்து பல பகுதிகளைப் பற்றி நாம் பேசலாம் என்று இருந்தாலும்கூட, இதற்கு



முன் நடைபெற்ற விவாதத்தில்; காங்கிரஸ் நண்பர்கள் பேசிய நேரத்தில், கவர்னர் அவர்கள் எடுத்துக்காட்டியுள்ள முக்கியமான பிரச்னைகளைக் கூட விட்டுவிட்டு, சவால் விடக் கூடிய அளவுக்கு, தேன் எடுக்கும் கதையையும், இந்தப் பக்கத்து நாடார் என்றும் பேசினார்கள். உள்ளபடியே ஜாதிப் பிரச்னையைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டது வருந்தத்தக்கது என்று நான் கூறிக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் எதிர் நீச்சல் போட்டு வளர்ந்த இயக்கம் ஆகும். இதுவரையில் பலப்பல தியாகங்களைச் செய்து குறிப்பாக காங்கிரஸ்காரர்களால் தனிப்பட்ட ரீதியிலும் சரி, அரசியல் ரீதியிலும் சரி, செய்யப்பட்ட கொடுமைகளையெல்லாம் தாங்கி வளர்ந்தவர்கள் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எந்தப் பகுதியைச் சேர்ந்தவரானாலும், இந்தச் சலசலப்புகளுக்கெல்லாம் இந்த பனங்காட்டு நரிகள் அஞ்சாது. 1917-ல் ஆரம்பித்த தென் இந்திய நலவுரிமைச் சங்கமானாலும், 1926—27-ல் பெரியார் ராமசாமி அவர்களால் சுயமரியாதை இயக்கம் தோற்றுவிக்கப் பட்டபோதும் சரி, 1937-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமைத் தளபதியாக இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்ட போதும்சரி, 1947-ல் நாடு சுதந்திரம் அடைந்தபோது பெரியார் கருத்துக்கு மறுப்பு தெரிவித்தபோதும்சரி, 1957-ல் நேரடியாகத் தேர்தலில் ஈடுபட்டபோதும்சரி, எதிர்ப்புக்களை எந்த அளவில் தாங்கிக் கொண்டு வளர்ந்திருக்கிறது என்பதை எங்களது வரலாற்றைப் பார்த்தால், அவர்கள் எதற்காவது பயந்தார்களா என்பது புலப்படும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணித் தலைவர்களைத் தனிப்பட்ட முறையில், தனித்தனியாகக் கொலை செய்ய முயற்சித்தவர்கள் காங்கிரஸ்காரர்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். பாண்டிச்சேரியில் கலைஞர் கருணாநிதி அவர்களை இரவு நேரத்தில் அடித்துக் கொலை செய்ய முயற்சித்தார்கள். அண்ணாமலை நகரில் மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் மதியழகன் அவர்களை அந்த நாளில் தாக்கியிருக்கிறார்கள். அதே போல நாவலர் அவர்களும் தேனியில் தாக்குதலுக்கு ஆளாகியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் வாழவேண்டும், வளர வேண்டும், மக்களுக்கு தொண்டு செய்யவேண்டும் என்ற காரணத்தினால் பல துன்பங்களைத் தாங்கித் தாங்கி வளர்ந்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக மந்திரிசபை நல்ல முறையில் மக்களுக்காக உழைக்கவேண்டும் என்ற நினைவோடு, மூன்று படி அரிசி போடுவதாகக் கூறியதற்கு ஒரு படி அரிசியாவது போட வேண்டும் என்ற திட்டத்தில் இருக்கிறது. ரூபாய்க்கு ஒரு படி அரிசியை உடனடியாகப் போடவேண்டும் என்ற காரணத்தினால், நெல் கொள்முதலை கொஞ்சம் கெடுபிடியாகச் செய்யவேண்டியிருக்கிறது. மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பலர் பேசுகிற நேரத்தில் இங்கு அதிகாரிகள் கொள்முதலை கெடுபிடியாகச் செய்தார்கள், அங்கு கெடுபிடியாகச் செய்தார்கள் என்று சொன்னார்கள். ஒரு சில இடத்தில் அம்மாதிரி நடந்திருக்கலாம். குறிப்பாக கெடுபிடிகள் இருக்கவேண்டுமா என்றால், எல்லா விவசாயிகளும்,

எல்லா வியாபாரிகளும் நேர்மையாக அளந்து எடுத்து நெல்லைக் கொடுத்திருக்கிறார்களா? கொள்ளை லாபக்காரர்கள் ஒரு சிலர் தவறுகள் செய்திருக்கிறார்கள். இந்த நடவடிக்கைகளைக் குறித்து நமது முதலமைச்சர் அண்ணா அவர்கள் என்ன கூறினார்கள் என்றால், தவறாக நடந்தார்கள் என்று அதிகாரியைக் குறிப்பிட்டுக் காட்டினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள். அந்த முறையில் குறிப்பிட்டுக் காட்டினால் கொடுமைப் படுத்தப்பட்ட விவசாயிகளுக்குத் தக்க உதவிகளைச் செய்யத் தயங்காது, தவறாக நடந்துகொண்ட அதிகாரிகளை கண்டிக்கத் தயங்காது. கொள்முதலில் சிலபல தவறுகள் ஏற்படுகிறது என்றால், அது இயற்கைதான். சில அதிகாரிகள் தவறாக போவதும் இயற்கைதான். வயலுக்குச் சென்று களை எடுக்கலாம் என்றால், அறிந்தோ அறியாமலோ நெல் பயிரில் ஒன்றிரண்டை மிதித்து அது கெடத்தான் செய்யும். நெல் பயிர் கெடுகிறது என்று களை எடுக்காமல் இருக்கமுடியாது. பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தவறாக, நடந்துகொள்ளும் அதிகாரிகள் பேரில் நடவடிக்கை எடுக்க திராவிட முன்னேற்றக் கழகம் என்றும் தயங்காது.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதிபற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். என்னுடைய தொகுதி பெரியகுளம் தொகுதி. உள்ள தொகுதிகளிலேயே இரண்டுங் கெட்டான் தொகுதி அது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் பாதிப்பகுதி மலைப் பகுதியாகவும், பாதிப்பகுதி தரைப் பகுதியாகவும் இருக்கிறது. இப்படி மலைப் பகுதியாகவும், தரைப் பகுதியாகவும் இருக்கிற காரணத்தினால், ஒரு பகுதியில் ஒரு மாதிரியாகவும், இன்னொரு பகுதியில் இன்னொரு மாதிரியாகவும் நடவடிக்கை எடுக்கவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெரியகுளத்தில் சோத்துப்பாறை என்ற அணைக்கட்டை கட்டினால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களிலும், கூடலூர், கம்பம் போன்ற பகுதிகளில் எந்த அளவுக்கு நெல் விளைச்சல் நல்லவிதமாக இருக்கிறதோ அந்த முறையில் நெல் விளைச்சல் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் தலைமை.)

அந்த மலைப் பகுதியில் இருக்கும் பெரும் பகுதி கொடைக்கானல் முழுவதுமே, நெல் விளையும் பகுதி அல்ல. அந்தப் பகுதி காய்கறிகள் விளையும் பகுதி. அந்தப் பகுதி மக்கள் பெரிய சிரமத்திற்கு உட்பட்டிருக்கிறார்கள். வட்டம் விட்டு வட்டம் நெல் போகக் கூடாது என்று சொல்லப்படுவதால் அந்தப் பகுதி மக்கள் மிகவும் கஷ்டப்படும் நிலையில் இருக்கிறார்கள். மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் சட்ட பூர்வ ரேஷனை அந்தப் பகுதிக்குக் கொண்டு வந்தாலும் அந்தப் பகுதி பிழைத்துக்கொள்ளும் என்று கூறிக் கொள்ளுகிறேன். அந்த மலைப் பகுதி மக்கள் வாழை, காய்கறிகள்,



உருளைக்கிழங்கு போன்றவைகளைத் தவிர வேறு விளைவிப்பது கிடையாது. அந்தப் பகுதி மக்களுக்கு சட்ட பூர்வ ரேஷனையோ, குடும்பக் கார்டு முறையையோ கொண்டு வந்து கூட்டுறவு சங்கங்கள் மூலமாக உணவுப் பொருள்களைக் கொடுத்தால் வசதியாக இருக்கும்.

இரண்டாவதாக, கொடைக்கானல் பகுதியில் பெரும் பகுதியிலே கால் நடையாக நடந்து செல்லவேண்டுமே தவிர அங்கு ரோடு வசதி கிடையாது. ஒரு ஊர் விட்டு இன்னொரு ஊர் செல்ல வேண்டுமென்றால் 7, 8 மைல் கால்நடையாக நடந்துதான் அடுத்த ஊரைப் பிடிக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அப்பேற்பட்ட மலைப்பகுதிகளில் ரோடு வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கொடைக்கானல் பகுதியில் மருத்துவ மனைகள் கிடையாது. கொடைக்கானல், பண்ணைக்காடு போன்ற சில இடங்களில்தான் மருத்துவ மனைகள் இருக்கின்றனவே தவிர, மேல் மலை, கீழ்மலைப் போன்ற மலைப்பகுதிகளில் மருத்துவ மனைகள் கிடையாது. குறிப்பாக எல்லா ஊர்களிலும் உடனடியாக மருத்துவ மனைகள் அமைக்க முடியாவிட்டாலும்கூட, நான்கு கிராமங்களுக்கு ஒரு மருத்துவமனையாவது அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போலத்தான் மலைப்பகுதியில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள் வெள்ளையர் காலத்திலிருந்து அவர்களை நம்பித்தான் வாழவேண்டிய மக்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வாழ வேறு வழி கிடையாது. சீஸனில் வியாபாரம் பண்ணியும், பிற காலங்களில் விவசாயம் செய்து பிழைக்கக்கூடிய ஏழை பெருங்குடி மக்களாக அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அப்பேற்பட்ட மக்களுக்கு பட்டா வழங்கப்படவில்லை. உருளைக்கிழங்கு விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்காக அங்கிருந்த மதுரை கூட்டுறவு பாங்குக்கு டெல்லி சர்க்கார், விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்காக 16 லட்சம் ரூபாய் லோனைக் கொடுத்தது. ஆனால், ஏறத்தாழ ரூ. 3½ லட்சம் தான் கடனை வழங்கப்பட்டிருக்கிறது. 3½ லட்சம் ரூபாய்தான் கடனை வழங்கப்பட்டிருக்கிறது என்றால், டெபாஸிட் கட்டி, மற்றபடி போய்வருவதற்கே, ரூ. 500 லோன் வழங்கப்பட்டால், ரூ. 300 செலவாகி விடுகிறது. எஞ்சி இருக்கும் ரூபாய்தான் விவசாயம் செய்வதற்குப் பயன்படுகிறது. மத்திய சர்க்காரால் கொடுக்கப்பட்ட தொகை முழுவதும் ஏன் விவசாயிகளுக்குக் கடனை வழங்கப்படவில்லை என்றால், விவசாயிகளுக்கு பட்டா கொடுக்கப்படவில்லை. நிலம் உள்ளவர்களுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 500, ரூ. 1,000 லோன் வழங்க வேண்டும் என்ற விதி இருக்கிறது. ஆனால், 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் முடிந்த ரெவின்யூ டிபார்ட்மெண்டு கணக்கின்படி 7-ம் நெம்பர் நோட்டீஸ் அனுப்பப்பட்டு பட்டா வழங்கப்படாமல் இருப்பது ஏறத்தாழ 3,500 ஏக்கர்தான். 3,500 ஏக்கர் நிலங்களுக்கு பட்டா வழங்கப் படவில்லை என்பது ரெவின்யூ டிபார்ட்மெண்டு கணக்குப்படி.

என்னைப் போன்ற குட்டி விவசாயிகள், நான் ஒரு குட்டி விவசாயி என்ற முறையில் பேசுகிறேன், 6 ஏக்கர் விவசாயம் பண்ணினால், அதில் 2 ஏக்கர்தான் ரெவின்யூ டிபார்ட்மெண்டு கணக்கில்வரும். அப்படி கணக்குப் பார்த்தால் ஏறத்தாழ 7,000 ஏக்கர் நிலங்களுக்கு பட்டா வழங்கப்படாமல் இருக்கும் நிலை இருக்கிறது. இந்த நிலங்களுக்கெல்லாம் உடனடியாக ரெவின்யூ டிபார்ட்மெண்டார் பட்டாக்களை வழங்க வேண்டும். இப்படி 7,000 ஏக்கர் நிலங்களுக்கும் பட்டா வழங்கப்பட்டிருந்தால் மத்திய சர்க்கார் வழங்கிய ரூ. 16 லட்சமும் ஏழை விவசாயிகளுக்கு கடனாகக் கிடைத்திருக்கும். உருளைக் கிழங்கு விவசாயம் நல்ல முறையில் நடந்திருக்கும். உத்திரப் பிரதேசத்திலிருந்து உருளைக் கிழங்கு வரவழைத்து விநியோகித்ததில் நமது மாநில சர்க்காருக்கு ரூ. 6,56,000 நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தொகையை கொடைக்கானல் பகுதி மக்களுக்கு கடனாகக் கொடுத்திருந்தால் மட்டும், உருளைக்கிழங்கு நல்ல முறையில் விவசாயம் செய்யப்பட்டு, நல்ல முறையில் ஏழை எளியவர்கள் வாழ்வதற்கு வழி ஏற்பட்டிருக்கும்.

குறிப்பாக, மலைப்பகுதிகளில் ஃபாரஸ்டு டிபார்ட்மெண்டிற்கும், ரெவினின்யூ டிபார்ட்மெண்டிற்கும் எல்லைத் தகராறுகள் ஏற்பட்டு, கோர்ட்டு வரையிலும் விவகாரம் போகக்கூடிய நிலைமை இருக்கிறது. எல்லைத் தகராறுகள் உடனடியாக தீர்க்கப்பட்டு, ஏழை எளிய மக்களுக்கு, அங்கு விவசாயம் பண்ணக்கூடிய மக்களுக்கு, உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற முறையில் எங்கெங்கே யார் கிஸ்தி செலுத்திக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கு உடனடியாக பட்டா வழங்குவதற்கு ஏற்பாடு செய்தால், அவர்கள் சர்க்காருக்கு மிகவும் நன்றி உடையவர்களாக இருப்பார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. இந்தப் பட்டா வழங்குதல் தாமதப்படுவதால், இதன் மூலம் லஞ்சம் என்ற ஊழல் மலிந்து வருவதற்கு வழி ஏற்படுகிறது. வி.எம். அல்லது கர்ணத்திடம் யார் கிஸ்தி செலுத்துகிறார்களோ அவர்களுக்கு உடனடியாக தாமதம் இல்லாமல் பட்டா வழங்குவதற்கு ஏற்பாடு செய்து விட்டால், இந்த கீழ்த்தரமான லஞ்ச ஊழல் என்ற பேச்சுக்கு இடமிராது.

இன்னொன்றும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ் ஆட்சி காலத்தில் அரிஜனங்கள் வெகுவாக முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நல்ல வசதிகளெல்லாம் செய்துதரப் பட்டன என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். காங்கிரஸ்காரர்களுடைய பெருமையாட்சியினால்தான் இந்த சட்டமன்றத்தில் 40 எம்.எல்.ஏ.-க்கள் வந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதற்கு முன்பு 1946-ல் வெள்ளையர் காலத்தில் இந்தப் பகுதியிலே அரிஜனங்களுக்கு உரிமை வழங்கப்படவில்லையா? இந்தப் பகுதியிலுள்ள அரிஜனங்களுக்கு மட்டுமல்ல. வெள்ளையர் ஆட்சியிலே இஸ்லாமியர்களுக்கும், கிறிஸ்துவர்களுக்கும் உரிமைகள் வழங்கப்பட்டன. வெள்ளையர் ஆட்சி காலத்தில் 1946-ல் தேர்தல் நடந்தபோது





தமிழகத்திலிருந்து பிரிந்துபோன ஆந்திராவையும் சேர்த்து 29 முஸ்லீம் எம்.எல்.ஏ.-க்கள் இருந்தார்கள். அவர்கள் இந்த சட்டமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தார்கள். காங்கிரஸ் கட்சி எந்த அளவுக்கு அவர்களுக்கு உரிமைகளை வழங்கியிருக்கிறது என்று கேட்கிறேன். அதுபோலவே கடந்த காலத்தில் சுயேச்சையாக போட்டியிட்ட திரு. ஏ. ஒய். எஸ். பரிசுத்த நாடார், கிறிஸ்துவ சமூகத்தை சார்ந்தவர், தர்மராஜ் சந்தோஷம் என்பவரை தோற்கடித்து வெற்றிபெற்றார். ஏன் கிறிஸ்துவர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கவில்லை? பொதுவாக ஜாதிப் பிரச்னையைப் பற்றி பேசக்கூடாது என்று சொல்லப்பட்டாலும், அரிஜன் என்று காட்டி வோட்டு வாங்க வேண்டும் என்ற காரணத்தினால் நாற்பது எம்.எல்.ஏ.-க்களை காங்கிரஸ்காரர்கள் கொண்டுவந்தார்கள். யாரிடம் அறிவு, திறமை, எந்த அளவுக்கு இருக்கிறது என்று பார்த்து, ஜாதியின் அடிப்படையில் பாகுபாடு என்ற அளவுக்கு இல்லாமல் இன்று திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்திருக்கிறது. ஜாதியைக் காட்டி வோட்டு வாங்கவேண்டும் என்ற அளவில் திராவிட முன்னேற்றக் கழகம் இயங்கவில்லை. காங்கிரஸ்காரர்கள் பொதுவாக ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்குகிறார்களா என்றால் இல்லை. நான் தலைவர்கள் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. யார் அரிஜன், யார் உயர்ந்தவன், யார் தாழ்ந்தவன் என்ற முறையில், ஜாதி அடிப்படையில், திராவிட முன்னேற்றக் கழகம் செயல்படவில்லை. முதன் முதலில் திராவிட முன்னேற்றக் கழகம் சென்னை கார்ப்பரேஷன் ஆட்சியைக் கைப்பற்றியபொழுது, உதவி மேயராக ஒரு அரிஜனை தேர்ந்தெடுத்தது. அரிஜனைத்தான் தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற விதி கிடையாது. இருப்பினும் கூட, திறமை காரணமாக அரிஜன் உயர வேண்டும் என்ற கருத்தில் அவரைத் தேர்ந்தெடுத்தோம். அரிஜன் என்ற பெயரால் அவரைக் காட்டி வோட்டு வாங்கவேண்டும் என்ற கருத்து கிடையாது. எனவே, முன்னேற்றக் கழகம் ஜாதி பாகுபாடு இல்லாமல், அவர்களுடைய சக்தியைப் பொறுத்தோ, அவர்களுடைய திறமையைப் பொறுத்தோ, அவர்களுடைய உழைப்பைப் பொறுத்தோதான் உத்தியோகம் வழங்கியிருக்கிறதே தவிர வேறு ஒன்றுமில்லை. ஜாதியின் அடிப்படையில் பாகுபாடு என்பது கிடையவே கிடையாது. பாரதியார் அவர்கள் சொன்னது போல் ‘ஜாதிகள் இல்லையடி பாப்பா’ என்ற முறையில்தான் முன்னேற்றக் கழகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. ‘திராவிட’ என்ற வார்த்தையே அரிஜன் என்பதை குறிப்பிடுகிறது. என்னுடைய தொகுதியைப்பற்றி மீண்டும் குறிப்பிட விரும்புகிறேன், கொடைக்கானல் பகுதியில் உள்ள மக்களுக்கு நான் சொன்னபடி எல்லா வசதிகளையும் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஒரே ஒரு பிரச்னையை மட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கவர்னர் அவர்களுடைய உரையில் பஞ்சாயத்து போர்டு உதவியோடு உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. பத்து ஆண்டு காலமாக பண்ணைக்காடு

பகுதியில் பஞ்சாயத்து போர்டு அமைக்கப்படவில்லை. பஞ்சாயத்து அமைக்கப்படாததால், அந்தப் பகுதி மக்கள் மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள். பண்ணைக்காட்டில் பஞ்சாயத்து அமைத்து, பண்ணைக்காட்டு மக்களுக்கு ஜனநாயக முறைப்படி அவர்களுக்கு நல்ல வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த அளவுக்கு என்னை கவர்னர் அவர்களுடைய உரையின்மீது நடக்கும் விவாதத்தில் பேச அனுமதி அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு விடை பெற்றுக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எஸ். கணேசன்** : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய உரையை ஒட்டி, இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஒரு உறுப்பினர் என்ற முறையில் என்னுடைய பல கருத்துக்களை இந்த மன்றத்தின்முன் வைக்க விரும்புகிறேன். மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய உரையில் நாட்டினுடைய இன்றைய நிலைமையை தெளிவாக அறிந்து, தேவைகள் இடையூறு இல்லாத அளவுக்குக் கிடைப்பதற்கு வழி காண முற்பட்டிருக்கிற வகையிலே அவர்களுடைய உரை அமைந்திருப்பது உள்ளபடியே வரவேற்கக்கூடியது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். கவர்னர் உரையைப்பற்றி இங்கு பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர்களெல்லாம் பற்றாக்குறையைப் பற்றியும், பதுக்கலைப்பற்றியும் அதிகமாகப் பேசினார்கள். இயற்கையின் காரணமாக ஓரளவுக்கு விளைச்சல் குறைந்திருக்கிறது என்றும், அந்த அளவுக்குப் பஞ்ச நிலை இல்லை என்றும் இங்கே விவாதிக்கப்பட்டது. அது எப்படியாகிலும் நாட்டில் இன்றைய தினம் தட்டுப்பாடு மிக அதிகமான அளவுக்கு உருவாகியிருப்பதற்குக் காரணம் சமூக விரோத சக்திகள். தமிழக மாண்புமிகு முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் நாட்டிலுள்ள நிலைமையை விளக்கிச் சொல்லி, சமூக விரோத சக்திகளின் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்குச் சர்க்கார் தயங்காது என்ற கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும், இன்றைய தினம் பத்திரிகையில் பார்க்கும்போது, பதுக்கல் மிக அதிகமாக இருக்கிறது என்பது தெரிகிறது. இப்படிப்பட்ட நெருக்கடி நாட்டிலே ஏற்படுவதற்குச் சமூகத் துரோகிகளே காரணம். அப்படிப்பட்ட சக்திகளைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டியது அவசியம். நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். பதுக்கல்காரர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட கால அவகாசம் கொடுத்து, அந்தக் காலத்திற்குள் அவர்கள் தங்களுடைய நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டும், அந்தக் காலத்திற்கு மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெளிவாக ஒரு முடிவு எடுத்து அதை அறிவித்து விட்டால் நலமாக இருக்கும். சென்ற ஆண்டில் பஞ்சாப் மாநிலத்தில் பதுக்கல்காரர்கள், கலப்படம் செய்பவர்கள் இவர்களுக்கு ஒரு காலவரை ஏற்படுத்தி, அதற்குள் அவர்கள் தங்கள் நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டும், இல்லாவிடில், அவர்கள் கௌரவக் குறைவான முறையில், விலங்கிட்டு





வீதிகளில் அழைத்துச் செல்லப்படுவார்கள் என்றிருந்ததைப் போல செய்தால் நலமாக இருக்கும். என்னுடைய தொகுதியான செம்பனார்கோயில் சம்பந்தப்பட்டவரை, அங்கு அதிகமாக நிலங்கள் மடங்களுக்குச் சொந்தமாக இருக்கின்றன. தருமபுர ஆதீனத்திற்கும், திருவாடுதுறை ஆதீனத்திற்கும்தான் சொந்தமாக இருக்கின்றன. அங்கே விவசாயிகள் குத்தகைக்கு எடுத்து, அந்த வருவாயில் வாழ்க்கை நடத்த வேண்டிய நிலைதான் இருக்கிறது. சென்ற ஆண்டு ஏற்பட்ட பஞ்ச நிலைமை காரணமாக இயற்கைக் கோளாறுகள் காரணமாக விளைச்சல் மிகக் குறைவாகி விட்டது. அவர்கள் மடத்திற்கு அளக்க வேண்டிய நெல்லை அளக்க முடியாமல் இருந்தது. இந்த மன்றத்திலே சென்ற ஆண்டு என்று கருதுகிறேன், தாற்காலிகமாக குத்தகைக்காரர்கள் அளக்க வேண்டிய நெல்லை நிறுத்தி வைக்கலாம் என்று கூறப்பட்டதாக அறிகிறேன் அதற்கான சட்டம் போட்டார்கள் என்றும் நினைக்கிறேன். நெல்லைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்கிற நிலைமைதான் எஞ்சி நிற்கிறது. நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்ல விரும்புவது சென்ற ஆண்டிலும், அதற்கு முன்னாலும் உண்டாகியிருக்கும் நெல் பாக்கியை விவசாயிகளுக்கு நிரந்தரமாகத் தள்ளிக் கொடுக்க வேண்டும், அவர்கள் அளக்க வேண்டியதில்லை என்று செய்துவிட வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாயிகள் அதிகமாகக் கஷ்டப்படுகிறார்கள். நெருக்கடி காரணமாக, மடத்துக்காரர்கள், இன்னும் மற்ற நிலச்சொந்தக்காரர்கள் செய்யும் நெருக்கடி காரணமாக, விவசாயிகள் தங்களிடம் உள்ள விவசாய உபகரணங்களை, மாடு, வண்டி இவற்றை விற்று பாக்கியைக் கொடுக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையில் அவர்கள் நிலச் சொந்தக்காரர்களுக்குச் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இருக்கும் கொஞ்ச நஞ்ச வசதியும் கையைவிட்டுப் போய்விடக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். தங்களுடைய பொருள்களை இழந்துவிடும் நிலையில் இருக்கிறார்கள். அந்த நிலை மாறவேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன். பொதுவாகக் குத்தகைக்காரர்களுக்கும், மடத்து நிலங்கள் உழுது பயிரிடுபவர்களுக்கும், பம்பு செட்டுகள், மற்றும் விவசாயக் கடன்கள், உரக் கடன்கள் கிடைப்பதில்லை. அதற்கு நம்முடைய சர்க்கார் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னொன்று, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மின்சார இணைப்புக்கள் தனியார் துறையில் இருக்கின்றன. தனியார் துறைக்கும் சர்க்கார் துறைக்கும் ஏராளமான வித்தியாசம் இருக்கிறது. விவசாய பம்பு செட்டுக்கு மின்சார இணைப்புக் கொடுப்பதில், தனியார் துறையாக இருந்தால் கிட்டத்தட்ட ரூ. 300 என்று நினைக்கிறேன், அதே நேரத்தில் சர்க்கார் துறையாக இருந்தால் ரூ. 75 தான் என்று நினைக்கிறேன், சரியாக நினைவில்லை. ஆகவே சர்க்கார் துறையில் நடத்தப்படும் மின்சார இணைப்புக்கு தனியார் துறையைக் காட்டிலும் குறைவாகவே இருக்கிறது.

இந்த வேறுபாட்டின் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, தனியார் துறையை ஒழித்துவிட்டு, சர்க்காரிலேயே அதையும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் பகுதியில் விவசாயிகளுக்கு உரம் கொடுப்பதில் இன்னின்ன விவசாயி இன்னின்ன உரந்தான் வாங்கலாம் என்கிற வரம்பு வைத்திருக்கிறார்கள். அதனால் விவசாயிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட வரம்பை விட்டுவிட்டு, எந்தப் பயிராக இருந்தாலும், விவசாயி தனக்கு வேண்டும் என்கிற உரத்தைப் பெற்றுக்கொள்ள அனுமதி கொடுக்கப்படவேண்டும். இன்னின்ன பயிர்களுக்கு இன்ன உரத்தைத் தான் எடுக்கலாம் என்கிற முறை மாறி அவரவர்களுக்கு தேவைப்படும் அளவிற்கு, உரங்களைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சலுகைகள் என்று பேசும் போது, காங்கிரஸ் உறுப்பினர்கள் எல்லாம், திராவிட முன்னேற்றக் கழகம் இதைச் செய்வேன் அதைச் செய்வேன் என்றது, ஆனால் தான் சொன்னதைச் செய்யவில்லை என்று குறிப்பிட்டுப் பேசினார்கள். ஆனால், முன்பு காங்கிரஸ்காரர்கள் ஆட்சியில் இருந்தபோது கட்சிக் கண்ணோட்டத்துடனேயே, அரிசன நல இலாகா பணி புரிந்து வந்திருக்கிறது. அப்பொழுது நல்ல முறையில் அரிசனங்களுக்கு மனைக்கட்டுகள் வழங்கப்படவில்லை. குறிப்பாக என்னுடைய தொகுதியில் 4, 5 கிராமங்களில் குறிப்பிட்ட கட்சிக்காரர்கள் தான் இருக்கிறார்கள், தோழர்கள் மாற்றுக் கட்சிக்காக உழைக்கிறார்கள் என்கிற காரணத்தினால், சென்ற பல ஆண்டு, காலமாக, குறிப்பாக சென்ற ஐந்தாண்டு காலமாக, நானும் எவ்வளவோ முயற்சிகள் எடுத்தும், அங்கு மனைக்கட்டு கிடைக்கவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் கட்சிக் கண்ணோட்டத்துடன் நடந்து கொண்ட நிலையை மாற்றி, புதிதாக இன்றைக்கு வந்திருக்கும் நம்முடைய சர்க்கார் அக்கறை செலுத்த வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடலோரப் பகுதி மீனவ மக்களுக்குச் சாலை வசதி கிடையாது. குடி தண்ணீர் வசதி கிடையாது. மின் விளக்குகளும் முக்கியமாக தஞ்சை மாவட்ட கடலோரப் பகுதிகளில், அதிகமாக இல்லை. காங்கிரஸ் உறுப்பினர்களெல்லாம், கடந்த 19 ஆண்டுக் காலத்தில் பெரிய பெரிய சாதனைகளைச் செய்துவிட்டோம் என்று வெளிப்படையாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனால், தஞ்சை மாவட்டத்தின் கடலோரப் பகுதி மீனவ மக்களுக்கு வாழ்க்கை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. அவர்கள் நிராகரிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துச்சொல்லி, அப்படிப்பட்ட கடலோர மீனவ மக்களுக்கு நல்ல சாலை வசதியும், அவர்கள் வசிக்கும் தெருக்களுக்கு மின்சார விளக்கு வசதி, குடிதண்ணீர் வசதியும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தலைவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.





**திரு: அ. லெ. சுப்பிரமணியம்:** கனம் அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் உரையை வரவேற்று, பாராட்டி, என்னுடைய சில கருத்துக்களை இந்த அவைமுன் வைக்க முன் வருகிறேன். திருநெல்வேலித் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு புதிதாக இந்த அவைக்கு நான் அனுப்பப்பட்டிருக்கிறேன். திருநெல்வேலியில் முன்னாள் காங்கிரஸ் அமைச்சரவை நகராட்சியைக் கலைத்தது. திருநெல்வேலி ஒரு காலத்தில் காங்கிரஸ் கோட்டையாக இருந்தது. சென்ற தேர்தலின்போது அங்கே 17 இடங்களிலும் காங்கிரஸ் வெற்றி பெற்று அந்த மாவட்டம் பூராவிலுமே காங்கிரஸ் என்று இருந்தது. அப்படிப்பட்ட மாவட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் நகராட்சியை நடத்துவதா என்று முன்பு இருந்த காங்கிரஸ் அமைச்சரவை திருநெல்வேலி நகர சபையைக் கலைத்தார்கள். அதே போலத்தான் அருப்புக்கோட்டை நகராட்சியையும், காரணம் என்பதற்காக காரணம் காட்டி, முன்னால் இருந்த காங்கிரஸ் அமைச்சரவை கலைத்தார்கள், ஆனால் அவர்கள் கலைத்த அருப்புக் கோட்டை நகராட்சித் தலைவரான சௌடி சுந்தர பாரதியே இன்றைக்கு இந்த மன்றத்தில், அந்தத் தொகுதியின் பிரதிநிதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அமர்ந்திருக்கிறார்கள். யாரைத் தலைவராக இருக்க உரிமை இல்லை என்று அன்று இருந்த சர்க்கார் சொன்னார்களோ அவரே இன்றைக்கு மக்களால் தேர்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் மாபெரும் காங்கிரஸ் கட்சியின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். அதே மாதிரி, திருநெல்வேலி நகரத்திலிருந்து நான் மக்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறேன் என்பதையும் மிக மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த நோக்கிலே புதிதாகப் பதவியேற்றிருக்கும் அமைச்சரவைக்கு நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், இந்த நகராட்சிகளைக் கலைத்த போக்கு, ஜனநாயகம் காணாத மாபெரும் பாதகம், ஜனநாயக ஏட்டில் பொறிக்கப்பட்ட களங்கம் என்றும், 'political homicide is foreign to the principles of Democracy' ஜனநாயகத்திற்குப் புறம்பான அரசியல் படுகொலை என்றும் சொல்லமுடியும். இன்றைக்கு இருக்கும் அரசு அந்த நகராட்சிகளுக்கு உயிர் கொடுக்கும் முறையில், மதிப்பிற்குரிய சட்ட அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் ஒரு மசோதாவைக் கொண்டு வருகிறார்கள். அதற்காக அவர்களையும், இந்த அமைச்சரவையையும் திருநெல்வேலி மக்கள் சார்பிலும், அருப்புக்கோட்டை மக்கள் சார்பிலும் பாராட்டி அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

அடுத்து, கவர்னர் அவர்கள் உரையில் உணவுப் பிரச்சினைபற்றி பிற் பகல் 1-00
அதிகமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு அதிர்ஷ்டவசமாக நண்பர் கருத்திருமன் ஒரு விவசாயியாக இருக்கிறார்கள். நேற்றைக்கு அவர்கள் குறிப்பிடும்போது, ஆளும் கட்சியில் விவசாயிகளே ஒருவரும் இல்லையா என்று தன்னுடைய கருத்தைத் தெரிவித்தார்கள். அவர்களைப்போல் விவசாயப் பெருங்குடி மக்கள் ஆளும் கட்சியிலும் என்னைப் போன்றவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள் என்று நான் அவர்களுக்கு மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

உணவுப் பிரச்னையைப் பொறுத்தும், ஒருசில கருத்துக்களை நான் இங்கே கூறலாம் என்று கருதுகிறேன். சென்ற அமைச்சரவை செய்துவிட்டுப்போன அதே உணவுக் கொள்முதல் செய்கிற ஒரு முறையை, இந்த அமைச்சரவையும் தொடர்ந்து நடத்தும் என்று தங்களுடைய கொள்கையில் அமைச்சரவையினர் அறிவித்திருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சரவையினரை மிகப் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். நாட்டிலே இருக்கிற உணவுப் பொருள்களைக் கொள்முதல் செய்வதன் மூலமாகவும், அவற்றை மக்களுக்குப் பங்கிடுவதன் மூலமாகவும் உணவுப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்துவிட முடியாது என்று நான் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இப்படிக் கொள்முதல் செய்வதும், அதை மற்றவர்களுக்குப் பகிர்ந்து தருவதும் ஒரு தற்காலிகமான ஏற்பாடாக இருக்கலாமே தவிர, அதுவே உணவுப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்குரிய ஏற்பாடாக இருக்கக்கூடாது. உணவு உற்பத்தியைப் பெருக்குவதன் மூலமாகத்தான் உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சரியான, நிரந்தரமான பரிகாரம் இருக்கும்.

உணவு உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையிலே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையில், உணவுப் பொருள் உற்பத்திக்கு மிக மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதை நான் மனமார வரவேற்கின்றேன். கவர்னர் பெருமானுடைய உரையில் மூன்று அம்சத் திட்டத்தை (த்ரீ-ப்ராங்டு ப்ரொக்ராம்) தந்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின்படி நல்ல விளைச்சலைத் தரக்கூடிய விதைகளைத் தருவதும் அந்தத் திட்டத்திலே ஒன்றாகும். இன்றைக்கிருக்கும் விதைகளில், ஐ.ஆர். 25 என்று சொல்லப்படுகிற விதை பொன்னுருளி என்று சொல்லப்படுகிற காரைப்பயிருக்கு அதிக நல்ல பலன் தரத்தக்கதாகும். அதிக விளைச்சலைத் தரும் விதையுமாகும். கார் பயிருக்கு ஏடிடி 27 ரக விதை மிக அதிக விளைச்சலைத் தருவதாக இருக்கிறது. ஆகவே, இந்த இரு ரக விதைகளையும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நினைத்த நேரத்தில் எந்த விதத் தங்கு தடையும் இன்றித் தருவதற்கு இந்த அரசாங்கம் முயற்சிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஏடிடி 27, ஐஆர் 25 ஆகிய இந்த இரண்டு ரக நெல் விதைகளும் நல்ல மகசூலைத் தந்தாலும், இரண்டு வகை நெற் பயிருக்கும் அதிகப்படியான விவசாய உரங்கள், நவீன விவசாய உரங்கள் மிக மிக அதிகம் தேவையாகும். குறிப்பாக, நைட்ரஜன் உரங்களும், பாஸ்பேட் உரங்களும் மிக மிக அதிகமாகத் தேவைப்படுகின்றன. கவர்னர் உரையில், "நைட்ரஜன் உர வகைகளை 1.35 லட்சம் டன் வழங்கும்படிக் கேட்டதற்குச் சுமார் 86,000 டன் மட்டுமே கிட்டியுள்ளது; பாஸ்பர உர வகைகளில்கூட, நமது குறிக்கோள் அளவு 60,700 டன் ஆக நிற்க, மொத்தம் 27,000 டன் அளவிற்கே நமக்குக் கிடைத்துள்ளது" என்று குறிப்பிட்டிருக்கிறார். உணவுப் பொருள் உற்பத்தியை அதிக அளவிற்குப் பெருக்குவதற்கு இந்த இரண்டு ரக உரங்களும் மிகவும் அவசியமானவையாகும். அதனால், இந்த



அமைச்சரவையை நான் கேட்டுக் கொள்ளுவது என்னவென்றால், வருகிற வேளாண்மை நேரத்திற்குள்ளாக, மத்திய அரசாங்கத்தை மிக மிக மன்றாடிக் கேட்டு, இப்படிப்பட்ட நமக்குத் தேவைப்படும் உரங்களை வாங்கிக் கையிருப்பில் வைத்துக்கொள்ளுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட நவீன உரங்கள் கையிருப்பில் இருந்தால்தான் உணவு உற்பத்தி பெருமளவுக்கு அதிகரிக்க முடியும் என்பதை மிகப் பணிவோடு நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அடுத்து, நீர்ப்பாசனத் திட்டத்தைப்பற்றியும் கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேளாண்மைக்கு மிக மிக முக்கியமாகத் தேவைப்படுவது தண்ணீர் என்பதை நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். விவசாயத்தின் கடைசி நேரத்தில் தேவைப்படும் தண்ணீர் கிடைக்காததன் காரணமாக, சில நேரங்களில் மகசூல் குறைந்து விடுவதை நாம் பார்த்திருக்கிறோம். கடைசி நேரத்தில் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில், சிறிய பாசனத் திட்டங்களை இந்த அமைச்சரவை எடுத்துக்கொண்டு நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சென்ற முறை எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்த மாண்புமிகு அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் இப்பொழுது நீர்ப்பாசனத் துறை அமைச்சராகியிருப்பதை நான் மனதார வரவேற்கிறேன். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கிருக்கும் ராம நதித் திட்டம், கடானு நதித் திட்டம், களக்காட்டில் இருக்கும் பச்சையாறு திட்டம் ஆகியவை சர்வே நிலைமையில் இருந்துகொண்டிருக்கின்றன. சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை உடனடியாக நிறைவேற்ற ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இன்னொரு கருத்தையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இதற்கு முன்னால் இருந்த அமைச்சரவையானது நிலத்திற்கு மேலே வருகிற தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்துவதிலே அதிக அக்கறை காட்டியிருக்கிறதே தவிர, பூமிக்கு அடியில் இருக்கும் தண்ணீரை (சப்-சாயில் வாடர்ஸ்) வெளிக் கொணர்ந்து, விவசாயத்திற்குப் பயன்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இதைப் பொறுத்தவரையில், என்னுடைய ஒரு திட்டத்தைத் தரலாம் என்று நான் கருதுகிறேன். இன்றைக்கு உணவு உற்பத்தியைப் பெருக்கும் வகையில், இந்தத் திட்டத்தை நான் அரசாங்கத்தினுடைய மேலான கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். அரசாங்கத்திற்குச் சொந்தமாக ஏராளமான புறம்போக்கு நிலங்கள் தரிசாக கிடக்கின்றன. ஓரிடத்தில் 100, 150 எக்கர் அரசாங்கத்திற்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள் எங்காவது இருக்குமானால், அந்த நிலங்கள் பூராவையும் செம்மைப்படுத்தி, 10 எக்கருக்கு ஒரு கிணறு வீதம் அரசாங்கச் செலவிலேயே பெரிய ஆழமான கிணறு தோண்ட வேண்டும். அந்தக் கிணறுகள்

அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்கவேண்டும். ஆனால், அந்தக் கிணறுகளிலிருந்து நீர் இறைத்துக்கொள்ளுகின்ற உரிமை, அந்தக் கிணறுகளைச் சுற்றியுள்ள விவசாயிகளுக்கு இருக்கவேண்டும். இப்பொழுது ஒரு கிணறு இருக்கிறது என்றால், அதைச் சுற்றியிருக்கும் பத்து ஏக்கர் நிலத்தை, நிலமில்லாத ஐந்து ஏழை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளித்தால், அதன் மூலம் உணவு உற்பத்தி பெருகும். இதனால், மூன்று வித நன்மைகள் இருக்கின்றன. அரசாங்கத்திற்குச் செலவு அதிகமாக இருக்கலாம். ஆனால், நிலமில்லாத விவசாயிகள் அந்த இடத்திலே நிலத்தைப் பெறுகிறார்கள். உணவு உற்பத்தி பெருகுகிறது. பின்பு இருபது, இருபத்தைந்து வருஷத் தவணை மூலமாக, அரசாங்கம் செலவழித்த தொகையை அந்த விவசாயிகளிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். இதனால் அரசாங்கத்திற்கு நஷ்டம் இல்லை; உணவு உற்பத்தியும் பெருகும். அதே நேரத்தில் நிலமில்லாத ஏழை விவசாயிகளும் நிலம் பெறுவார்கள். இந்தத் திட்டத்திலே அமைச்சரவை அதிக கவனம் செலுத்தவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கடன் வசதியைப்பற்றிக் கனம் உறுப்பினர் திரு. சுப்பையா முதலியார் அவர்கள் அன்றையதினம் குறிப்பிட்டார்கள். இன்றைக்குக் கூட்டுறவுத் துறை ஊழலுக்கு உறைவிடமாக இருக்கும் நிலைமையைப் பார்க்கிறோம். இன்றைக்கு விவசாயி தனக்கு உரம் வேண்டும் என்று கேட்டு அலைந்தாலும், கடன் கேட்டு அலைந்தாலும், பல காலத்திற்குப் பின்னால்தான் உரத்தையோ, கடன் உதவியையோ பெற முடிகிறதே தவிர, கேட்டவுடனே அவற்றைப் பெற முடியவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். ஜப்பானைப் பொறுத்த வரையில், தாய்லாந்து நாட்டைப் பொறுத்தவரையில், அங்கே ஒரு விவசாயி தனக்குக் கடன் வேண்டுமென்று அரசாங்கத்திற்கு மனுச் செய்து, நான்கு மணி நேரத்தில் ரொக்கக் கடன் பெற முடியும் என்று அயல் நாடுகளுக்குச் சென்று வந்தவர்கள் சொல்லுகிறார்கள். நாம் அவ்வளவு வேகம் காட்ட முடியாமற்போனாலும், நான்கைந்து தினங்களுக்குள்ளாவது கடன் பெற வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் ஒரே ஒரு கருத்தைமட்டும் வலியுறுத்தி உரையை முடிக்கலாம் என்று நான் கருதுகிறேன். நில வரிப் பிரச்சினை சம்பந்தமாக என்னுடைய கருத்தை நான் இந்த மன்றத்தின் முன்னால் வைக்க விரும்புகிறேன். காங்கிரசு உறுப்பினர்கள் எல்லாரும், "நில வரியை இந்த அமைச்சரவை நீக்கும் என்று எதிர்பார்த்தோம். கவர்னர் உரையில் அதைப்பற்றி ஒன்றும் இல்லை" என்று ஏக்கத்தோடும் வருத்தத்தோடும் குறிப்பிட்டார்கள். அதற்குப் பதில் சொல்லும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். "சென்ற முறை காங்கிரஸ் அமைச்சரவை இருந்தது, இருக்கும் நில வரியே காணாது என்று சொல்லி 25 சத விதம் சர்சார்ஜ் ஏற்றினார்கள். இருக்கிற வரியே காணாது என்று 25 சத விகம் சர்சார்ஜ் ஏற்றிய





வர்கள் இன்று நில வரி ரத்து செய்யப்படவில்லை என்று கேட்பது விநோதமாக இருக்கிறது" என்று திரு. அரங்கண்ணல் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது விநோதம் மட்டுமல்ல, வேடிக்கையாகவும் இருக்கிறது என்று நான் சொல்லுவேன். ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. "சாத்தான் கோட்ஸ் பைபிள்" என்று சொல்லுவார்கள். அதாவது, "சாத்தான் வேதம் ஓதுகிறது" என்று சொல்லுவார்கள். அதைப் போல், 25 சத விதம் வரியை ஏற்றியவர்கள் இன்றைக்கு நில வரியிலிருந்து விலக்கு அளிக்கவேண்டும் என்று கேட்பது விந்தையாக இருக்கிறது என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நில வரியைப் பொறுத்த வரையில், ஒரு அடிப்படையான மாறுதல் தேவை என்பதை நான் இந்த மன்றத்தில் வலியுறுத்த விரும்புகிறேன். இன்றைக்கு நில வரி விதிப்பு நிலத்தினுடைய தரத்தைப் பொறுத்தும், நிலத்தினுடைய வளத்தைப் பொறுத்தும் விதிக்கப்படுகிறது. ஆனால், இந்த முறையை மாற்றியமைக்கவேண்டும் என்று நான் மிக மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் நிலத்திற்கு வரி விதிப்பதைவிட, நிலத்திலிருந்து வருகின்ற விளை பொருள்களுக்கு வரி விதிப்பது நியாயமான முறையில் விதிக்கப்படுகிற வரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளுவோம். ஓரிடத்தில் 15 ஏக்கர் நிலம் இருக்கிறது என்றால், ஒரே தரமான ஒரு ஏக்கர் நிலத்தில் ஒரு விவசாயி நெல் பயிரிடலாம்; இன்னொரு விவசாயி அதே ஒரு ஏக்கரில் வாழை பயிரிடலாம்; இன்னொரு விவசாயி கரும்பு பயிரிடலாம்; இன்னொருவர் பருத்தி விளைவிக்கலாம்; இன்னொருவர் மிளகாய் வைக்கலாம். நெல் பயிரிடுகிற விவசாயிக்கு மிகக் குறைந்த வருமானம் கிடைக்கிறது. நண்பர் திரு. கருத்திருமன் அவர்கள் குறிப்பிட்டதுபோல, நெல் பயிரிடும்போது, உற்பத்திச் செலவு மிக அதிகமாக இருக்கிறது. நெல் பயிரிட்டால் விவசாய உற்பத்திச் செலவு அதிகம் ஆகிறது. ஆனால், அவனுக்குக் கிடைக்கும் வருமானமோ மிக மிகக் குறைவாக இருக்கிறது. அது மட்டுமல்ல, வருமானம் குறைவு. அவன் இந்த அரசாங்கத்தினுடைய கொள்முதல் கெடுபிடிகளுக்கு ஆளாக வேண்டிய நிலைமையிலும் இருக்கிறான். ஆகவே, மிகுந்த கஷ்டங்களைப் பட்டுக்கொண்டு ஏழை விவசாயி நெல் பயிரிடுகிறான். வாழை பயிரிடுகிற விவசாயிக்குக் கொள்முதல் கெடுபிடி இல்லை, அதிக லாபம் கிடைக்கிறது. அதே போல், வியாபாரப் பொருள்கள் (கமர்ஷியல் க்ராப்ஸ்) என்று சொல்லப்படுகிற கரும்பு, புகையிலை, மிளகாய் போன்றவற்றைப் பயிரிடுகிறவர்களுக்குக் கொள்முதல் கெடுபிடி இல்லை, அதிகபடியான லாபமும் கிடைக்கிறது. இன்றைக்கு இன்னொன்றை இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நில உச்சவரம்புச் சட்டம் வந்தபோது அதில் இருந்து கரும்பு விளைகிற நிலங்களுக்கு ஒரு விலக்குக் கொடுத்தார்கள். அப்படிப் பார்க்கிறபோது தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற பணக்கார விவசாயிகள் கரும்பாலைகளை ஏற்படுத்தி அந்த ஆலையின் முதலீடாக பாக்டரி இன்வெஸ்ட்மெண்டாக 15 ஆயிரம், 20 ஆயிரம் என்று நிலத்தை ஒதுக்கி வைத்து விட்டார்கள். அதன் காரணமாக சட்டத்தின்

பிடியிலிருந்து தப்பிவிட்டார்கள். இப்படி உள்ளவர்களுக்கும், ஒரு வரி விகிதம், நெல் பயிரிட்டு அதனால் இரண்டு வகை நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகிற நிலக்காரர்களுக்கும் ஒரு வரிவிகிதம் என்பது நியாயமான வரிவிதிப்பு முறையாகாது. ஆகவே, நிலத்தின் தரத்தைப் பார்த்து வரி விதிப்பதை மாற்றி விளைபொருளுக்கு வரி விதிக்கக்கூடிய ஒரு முறையைக் கொண்டுவந்தாக வேண்டுமென இந்த அமைச்சரவையைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கைத்தறியாளர்களைப்பற்றி ஒரே ஒரு விஷயம். கைத்தறிக்காரர்கள் அதிகமாகக் கஷ்டப்படுவதாகக் காங்கிரஸ் மெம்பர்கள் சொன்னார்கள். அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். சுதந்திரா கட்சித் தலைவர் திரு. ராஜாஜி அவர்கள் கரை போட்ட வேஷ்டியை கைத்தறிக்கு ஒதுக்கிவிட்டால் கைத்தறியாளர்களுடைய பிரச்சினையை நல்ல முறையில் தீர்க்க முடியும் என்று முன்பு சொன்னார்கள். அதையே நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் திரு. அண்ணா அவர்களும் ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள். ஆகவே, கைத்தறியாளர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க கரைபோட்ட வேஷ்டியை கைத்தறிக்கே ஒதுக்க சட்டபூர்வமான முறையிலாவது வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தைத் தந்த தலைவருக்கு நன்றி செலுத்தி, நெல்லை நகரசபை, அருப்புக்கோட்டை நகரசபை ஆகிய இரண்டையும் மீண்டும் துவக்கி வைக்க வழிவகை செய்திருப்பதற்கு அமைச்சரவைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

* திரு. சௌந்திரராஜ மூப்பனார் : அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் உரையைப் பார்க்கும்போது, மக்களுக்கும், எதிர்க்கட்சியில் இருக்கிற எங்களுக்கும் ஏமாற்றம் ஏற்பட்டதிலே ஆச்சரியம் இல்லை. காரணம், கவர்னர் பெருமான் உரையானது, வருகின்ற ஆண்டுக்கான செயல்முறைத் திட்டத்தையும் செயல்படுத்துகின்ற முறையையும் விளக்குகின்ற உரையாக இருக்கின்றது. அந்த உரையில், ஆளும் கட்சியில் இருக்கின்றவர்கள் கூறிய விரிவான சோஷலிசத்தைப் பார்க்க முடியவில்லை. ஆகவே, அதைக் கண்டு ஏமாற்றம் அடையாமல் இருக்க முடியாது.

அடுத்தபடியாக, இந்தத் தேர்தல் நல்ல முறையிலே நடைபெற்றது என்று கவர்னர், தம் உரையிலே கூறியிருப்பதை ஆதரிக்கிறேன். அதே நேரத்தில், மற்றவர்கள் பேசுகின்ற நேரத்திலே அதிகாரிகள் எல்லாம் தேர்தலின்போது, அத்துமீறி நடந்துகொண்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதிகாரிகள் தங்களுடைய கடமையை ஆற்றினார்கள் என்று கூறுவதைத் தவறாக அத்துமீறி நடந்துகொண்டார்கள் என்று கூறுவது அவர்களுடைய மதிப்புக்கும் கண்ணியத்திற்கும் நேர்மைக்கும் இழுக்குத் தேடுவதாக இருக்கிறது. அடுத்தாற்போல, பேசும்போது காங்கிரஸ் ஆட்சியிலே குடியே மூழ்கிவிட்டதுபோலவும், இந்தக் குடி முழுக 200 ஆண்டுகள் தேவைப்பட்டது என்றும் இன்னும் 200 ஆண்டுகள் செப்பனிட்டால்தான் நல்ல முறையிலே அதற்கு நிவர்த்தி செய்ய





முடியும் என்பதுபோலவும் உறுப்பினர்கள் பேசினார்கள். ஆனால் மக்கள் எல்லாரும் இந்த ஐந்து ஆண்டுகளுக்குள்ளேயே காங்கிரஸ் ஆட்சியில் செய்த தவறுகளை நீக்கி, விஞ்ஞான சோஷலிசம் என்பதை ஏற்படுத்தி விடுவார்கள் என்று நம்பிக்கொண்டுதான் உங்களை இன்று ஆட்சிப் பொறுப்பிலே அமர்த்தியிருக்கிறார்கள். அந்த மாதிரியான விஞ்ஞான சோஷலிசம் என்ற நல்ல திட்டம் உருவாகும் நேரத்திலும், நாட்டு மக்களுக்கு நன்மை தரக்கூடிய எந்தத் திட்டத்திலும் காங்கிரஸ் கட்சியிலே இருக்கிற நாங்கள் எங்களுடைய முழு ஒத்துழைப்பைக் கொடுப்பதற்குத் தயங்கமாட்டோம் என்று கூறுகின்ற நேரத்திலே, நீங்கள் கூறுகின்ற அனைத்தையும் ஒத்துக்கொள்ளமாட்டோம் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில் விவசாயிகளுக்கு நல்ல முறையிலே இன்று கடன் வசதி திட்டத்தில் இருந்தாலும், அது நல்ல முறையிலே பயன்படுத்தப்படவில்லையென்று கூறினார்கள். கூட்டுறவு முறையோடு 'ஷெட்யூல்டு பாங்கி' மூலமாகவும், அவர்களுக்குக் கடன் வசதி செய்தால் மிக நலமாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல, 'மத்திய அரசை நன்றாகப் பலப்படுத்த வேண்டுமென்பதாக' ஆந்திர முதலமைச்சர் கூறியதாக நண்பர் ஒருவர் கூறினார். ஆந்திர முதலமைச்சர் கூறியதை நான் நன்றாக ஆதரித்து வரவேற்கிறேன். காரணம், மத்திய அரசாங்கம் பலம் வாய்ந்ததாக இருக்க வேண்டுமென்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அவர் மத்திய அரசாங்கம் காங்கிரஸ் அரசாங்கமாக இருக்க வேண்டுமென்று கூறியிருந்தால், அதை நாம் கண்டிக்க வேண்டும். மத்திய அரசு பலம் பொருந்தியதாக இருக்க வேண்டுமென்பதை நாம் எல்லோரும் ஒத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் கவர்னர் பெருமான் உரையிலும், அதை ஆதரித்துப் பேசுகின்றவர்களின் உரையிலும், 'மத்திய அரசு மாநில அரசாங்கத்தின் முன்னேற்றத்திற்கெல்லாம் தடையாக, முட்டுக்கட்டையாக இருக்கிறது, மாநில அரசாங்கத்தின் முன்னேற்றத்திலே தலையிடுகிறது. ஆகவே, கூடுதல் அதிகாரங்கள் மாநில அரசாங்கத்திற்கு வேண்டும் என்பதாகக் கூறப்பட்டது. மாநில அரசாங்கத்திற்கு என்னென்ன சலுகைகள், என்னென்ன முறையில் பெற வேண்டுமோ, அதை மத்திய அரசிடம் கேட்டுப் பெற நமக்கு உரிமை உண்டு. அதைக் கேட்பதில் தவறு இல்லை. ஆனால், நாம் நம் சக்திக்கு மீறிய திட்டங்களையெல்லாம் போட்டு அல்லது நாம் தேர்தல் நேரத்தில் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்ற ஓர் எண்ணத்தின் அடிப்படையில் திட்டங்களையெல்லாம் போட்டு—மத்திய அரசாங்கம் காங்கிரஸ் அரசாங்கமாக இருக்கிறது, அதனால் வேற்றுமை காட்டுகிறது—என்ற எண்ணத்தை மக்களிடத்தில் ஏற்படச் செய்தால், இன்று ஆளும் கட்சியைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் திராவிட நாட்டுப் பிரிவினையை விட்டுவிட்டோம்

என்று சொல்லிக்கொண்டு அரசியல் சட்டத்திற்குட்பட்டு, தேசிய ஒருமைபாட்டைக் காத்துப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டவர்கள் தங்கள் வாக்கை மறந்துவிட்டார்களோ என்று நாம் கருதக்கூடிய அளவில்தான் போய்விடும். தமிழகம் தனித்து இயங்கினால்தான் நல்ல முன்னேற்றம் அடைய முடியும் என்ற கருத்தை மக்களிடத்தில் வளர விடக் கூடாது என்று கேட்டுக்கொண்டு நான் விடைபெறுகிறேன். வணக்கம்.

*** புலவர் பொ. பொன்னம்பலம்** : மதிப்பிற்குரிய தமிழகச் சட்டமன்ற அவைத் தலைவர் அவர்களே, முதலாவதாக, ஆளுநர் அவர்கள் உரையின் மீது பேசுவதற்கு எனக்கு அனுமதி அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, ஒரு சிலவற்றை இங்கே கூறி அமைய விரும்புகிறேன். பொதுவாக இப்போது இருக்கக்கூடிய அமைச்சரவையின் சூழ்நிலையைப் பார்க்கிறபோது, இந்த அமைச்சரவை தமிழக ஆட்சி மன்றத்திற்குப் பொருத்தமான அமைச்சரவையாக அமைந்துள்ளது, அறநெறிகளையும் வாழ்க்கை முறைகளையும் அரசியல் வழிகளையும் இலக்கியமாகப் படைத்துப் போற்றித் தமிழகத்தில் இலக்கிய நெறியோடு அரசியல் நெறியை வளர்த்துத் தந்துள்ள அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் இந்த அமைச்சரவை அமைந்துள்ளது மிகப் பொருத்தமானதாகும். ஆனால், எதிர்க்கட்சியில் வீற்றிருக்கக் கூடிய மதிப்பிற்குரிய நண்பர்கள் அத்தனை பேரும் பேசுகின்ற காலத்தில் எல்லாம் என்ன சொல்கிறார்கள் என்றால், "நீங்கள் மக்களுக்கு இன்ன இன்ன வாக்குறுதிகளைத் தந்தீர்களே, எங்கே உங்கள் வாக்குறுதிகள்? நாங்கள் ஏமாந்துவிட்டோம்" என்றே பேசுகின்றார்கள். வெள்ளையர் கையில் இருந்து நாட்டைப் பிடுங்கி, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கையில் கொடுத்துவிட்டோமே என்பதுபோலக் கருதிக்கொண்டு பேசுகின்றார்கள். கிட்டத்தட்ட இருபது ஆண்டுகாலம் நாட்டை ஆண்ட காங்கிரஸ் கட்சிக்காரர்கள்—இருபது நாட்கள் கூட ஆட்சிக்கு வந்து ஒழுங்காக முடியவில்லை என்று சொல்லலாம்—இருபது நாட்கள்கூட ஆகாத இந்த நேரத்தில் "கொடுத்த உறுதிமொழிகள் எங்கே போயின? ரூபாய்க்கு 3 படி அரிசி தருவதாகச் சொன்னீர்களே, ரூபாய்க்கு 3 படி அரிசி எங்கே?" என்று கேட்கத் தலைப்படுகிறார்கள் என்றால் இதை நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர்களே சிந்தித்துப் பார்ப்பார்களானால் இந்தக் கேள்வி கேட்க வாய் இராது; அமைச்சரவை பொறுப்பேற்றுக்கொண்டு இருபது நாட்களுக்குள்ளே சமையல் கட்டிற்குள் நுழைந்து எங்கே இலை, எங்கே சாப்பாடு, நாங்கள் உண்பதற்குக் காத்துக்கொண்டிருக்கிறோம் என்று பேசுவதை விட்டு நல்ல திட்டங்களைச் சமர்ப்பித்திருப்பார்கள். கடந்த 20 ஆண்டுக் காலத்தில் எந்தெந்த அளவுக்கு சீரழிவை உண்டாக்க முடியுமோ அந்த அந்த அளவுக்கு உண்டாக்கியிருக்கிறார்கள். அவற்றை ஆட்சிக்கு வந்த மறுகணமே மாற்றிவிட முடியுமா? "எங்கே உங்கள் வாக்குறுதி, நாங்கள் ஏமாந்துவிட்டோம்" என்றால் உண்மையிலேயே மக்கள் ஏமாறவில்லை. சொன்ன வாக்குறுதிகளை நாங்கள் நிறைவேற்றியே தீருவோம் என்ற நம்பிக்கை மக்களுக்கு எங்களிடத்தில் இருக்கிறது. ஆனால் மக்களிடத்தில் ஏமாந்துபோய் இருக்கிற நீங்கள்



இன்றைக்கு எங்களிடம் மக்கள் ஏமாந்திருப்பதாகச் சொல்கிறீர்கள். இப்படிச் சொல்வதைவிட்டு உணவுப் பிரச்சினையைத் தீர்க்க உருப்படியான ஏதாவது யோசனையைச் சொன்னீர்களா? உணவுச் சிக்கலைத் தீர்க்க ஏதாவது யோசனை சொன்னீர்களா? இல்லை. பொதுவாக அவர்கள் சுட்ட சூடு இன்னும் மாறவில்லை, அடித்த அடித் தழும்பு மாறவில்லை, விளைத்த கொடுமைகளின் வேகம் மாறவில்லை. அதற்குத் தக்க அறிவுரை தருவதற்கு மாறாக இந்த அமைச்சரவையை ஏளனப்படுத்துகின்ற போக்கைப் பார்க்கிறோமே தவிர, நாட்டுச் சிக்கலை நீக்குவதற்கான பிரச்சினையில் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. நான் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன், நாட்டு மக்களின் வாழ்க்கைச் சிக்கலை எண்ணிப் பாருங்கள்; அந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு என்ன வழி என்று கூறுங்கள்.

மதிப்பிற்குரிய ஆளுநர் உரையில் வேளாண்மையைப் பற்றிச் சொல்லப்படுகிறது. விவசாயத்தை முன்னேற்ற வேண்டும், அப்போதுதான் உணவுச் சிக்கலைத் தீர்க்க முடியும் என்ற கருத்தினைக் காண்கிறோம்.

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்"

என்பதாக ஏருக்கு பின்னால் இந்த உலகம் இயங்குகிறது என்ற கருத்தினில் வேளாண்மைத் துறையை முன்னே வைத்து விவசாயத்துறையை முன்னேறச் செய்ய வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறது இவ்வரசு. இதை அறியாது காங்கிரஸ் கட்சியைப் போல கள்ளத் தன்மைக்குப் பின்னால் இந்த உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று எண்ணி அவர்களுக்குத் துணைபோகவில்லை. பதுக்கலுக்குப் பின்னால், கள்ளச் சந்தைக்குப் பின்னால் என்ன இருக்கிறது என்பதை ஆராய்ந்து பதுக்கலை ஒழிக்க, கள்ளச் சந்தையினை ஒழிக்க, திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை முற்படுகிற நேரத்தில் பற்பல குறைகளை காங்கிரஸ்காரர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவை குறைகளா? இன்ன இன்ன இடங்களில் பதுக்கல் இருக்கிறது, அந்தப் பதுக்கல் பொருள்களை அப்புறப்படுத்துங்கள் என்று சொன்னால் பாராட்டலாம், செயல்படலாம். அத்தகைய நல்ல காரியங்களை எடுத்துச் சொல்லவில்லை. இருபது ஆண்டுக்காலம் தொடர்ந்து தங்கிய இந்த வீட்டை எப்படி வைத்திருக்கிறார்கள்? வீடு பழையதுதான். ஆனால் ஒரு பக்கத்திலே பெருச்சாளி வளைகள், ஒரு பக்கத்திலே பாம்புப் புற்றுக்கள். அருகில் போவதற்குள் பாம்புகள் படம் எடுத்து ஆடுகின்றன. இந்த நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று இருக்கிறது. பழைய வீட்டில் உள்ள உறுதியான பொருள்களை எடுத்து வீட்டை புதிதாக எழுப்ப வேண்டிய நிலைமையில் அது இருக்கிறது. இந்த நிலையில் ஆண்டு நல்ல அனுபவம் பெற்றவர்கள் இன்றைக்கு எதிர்க்கட்சியில் இருக்கிறபோது நல்ல உருப்படியான யோசனைகளைக் கூற வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பொதுவாக சில துறைகளை வைத்துப் பார்க்கிறபோது வேளாண்மைத் துறையை ஒட்டி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய பகுதியில் ஆறுகள் இல்லை. தமிழகப் பகுதியை எடுத்துக்கொண்டால் கிட்டத்தட்ட 9 லட்சம் கிணறுகள் இருக்கின்றன. பெரும்பாலும் கிணறுகளையே நம்பி வாழக்கூடிய பகுதி அது. கிட்டத்தட்ட 9 லட்சம் கிணறுகளில் 7 லட்சம் கிணறுகள் நல்ல தண்ணீர் கொடுக்கக் கூடியவையாக இருக்கின்றன. அந்த 7 லட்சம் கிணறுகளுக்கும் நீர் இறைக்கும் கருவிகளைக் கையாளுகின்ற அளவில் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருவது நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். உணவு உற்பத்தியை அதிகப்படுத்த, அத்தனை கிணறுகளுக்கும் தேவைப்படுகிற நீர் இறைக்கும் கருவிகளைத் தயாரிக்கவும் இந்த அமைச்சரவை முன்வரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதைச் செய்து விட்டாலே நாம் விவசாயத்திற்கு அந்தப் பகுதியில் மிகவும் உதவியவர்களாவோம். அதோடு இன்றைக்கு நாம் கொடுக்கிற 500 ரூபாயையும் மானியமாகக் கொடுப்பதற்கும் இந்த அமைச்சரவை முற்படவேண்டும். ஆக, ஆண்டு ஒன்றுக்கு 50 ஆயிரம் நீர் இறைக்கும் கருவிகளை நாம் அமைத்துக்கொடுக்க ஆரம்பித்தாலேயே ஐந்து ஆண்டுகளில் நாம் இந்த நாட்டில் நல்ல விளைச்சலை உண்டாக்கி விட முடியும் என்று எண்ணுகிறேன். அதனை இந்த அமைச்சரவை கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மராமத்துத் துறையை எடுத்துக் கொண்டால் எங்கள் தொகுதியில் ஏம்பல்நாடு, இரும்பாநாடு, காரையூர் ஆகிய பகுதிகளுக்கு போய்வரவே சரியான பாதையில்லை. காடுமேடுகளாய் அமைந்திருக்கின்றன. சாலைகள் அமைப்பதாகச் சொல்லி, ஒரு சிலர் மட்டும் பயன் அடைந்திருக்கிறார்களே தவிர, மக்களுக்குப் பயன் ஏற்படத்தக்க வகையில் சாலைகள் அமையவில்லை. அந்தச் சாலையை நல்ல முறையில் மராமத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதையும் செய்துதரவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பிற் பகல் 1–30

அடுத்து, இன்றையதினம் கல்வித்துறையில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு இந்தச் சமுதாயத்தில், மன்பதையில் நல்ல மதிப்பு இல்லை. ஆசிரியர்களுடைய ஊதியத்தைப்பற்றிச் சொன்னார்கள். ஊதியம் கொடுப்பது மட்டும் பயன் இல்லை. அவர்களுக்குரிய மதிப்பைக் கொடுக்கவேண்டும். அவர்களுடைய நிலையை உயர்த்த வேண்டும். ஊதியத்தால் மட்டுமின்றி அவர்களுடைய மதிப்பையும் உயர்த்த இந்த அமைச்சரவை முன்வரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதுபோல தமிழாசிரியர்களைப் பற்றிய அரசாங்க ஆணைகள் (ஜி.ஓ.) என்ன என்பது தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவதில்லை. மேலே இருக்கக்கூடிய கல்வி அதிகாரிகளுக்கும் தெரிவதில்லை. நல்ல தமிழ் படித்திருக்கிறார்கள். நல்ல பட்டத்தைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் வேலைத் தேடிச் செல்கிறபோது இந்த அரசாங்க ஆணைகள்பற்றி ஒன்றுமே தெரியாத காரணத்தினால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. இன்னொன்றையும் சொல்லிக்





கொள்வேன். தனித் தமிழிலே நல்லமுறையில் நான்கு ஆண்டுகள் படித்து வித்துவான், புலவர் பட்டம் பெற்று வருகிறவர்கள் இருக்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி-க்கு மேல் தமிழ் எடுத்து பி.ஏ. படித்து வருகிறவர்கள் இருக்கிறார்கள். மன்பதை நிலையில் பார்த்தால் புலவர் பட்டம் பெற்றவர்கள், வித்துவான் பட்டம் பெற்றவர்கள் ஆசிரியர்களாகத்தான் போகவேண்டுமென்ற நிலை இருக்கிறது. கல்லூரிகளுக்குப் போகக்கூடிய சூழ்நிலை இல்லை . . .

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாளைக் காலை தொடர்ந்து அவருடைய உரையை நிகழ்த்தலாம். இத்துடன் இன்றையக் கூட்டம் முடிவடைகிறது. 28—3—1967 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இந்தப் பேரவை மறுபடியும் கூடும்.

பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது. பிற் பகல் 1–33

8. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. Statutory Rules and Orders.

* 113. *Notification issued with G.O. Ms. No. 3592, Revenue, dated the 31st December 1966, appointing the first day of February 1967, as the date on which certain provisions of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963) shall come into force in the inam estate of Nazarethpettai in Sriperumbudur taluk of Chingleput district. [Laid on the Table of the House under section 73 (5) of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963).]*

* 114. *Notification issued with G.O. Ms. No. 57, L.A., dated the 9th January 1967, appointing the Personal Assistant (Panchayat Development) to the Collector of Ramanathapuram and Collector of Tirunelveli as Special Officers for the disposal of taxation appeals in the Aruppukottai and Tirunelveli Municipal Councils respectively till the Municipal Councils are reconstituted. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]*

* 115. *Notification issued with G.O. Ms. No. 190, Rural Development and Local Administration, dated the 30th January 1967, directing the postponement of the general revision of assessment books in respect of the Municipalities specified in the schedule which is to take effect on the 1st April 1967 for one half-year so as to take effect from the half-year commencing on and from 1st October 1967. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]*

* Placed on the Table of the House on 25th March 1967.

* 116. *Notification issued with G.O. Ms. No. 40, Rural Development and Local Administration, dated the 6th January 1967, appointing Special Officers for the disposal of taxation appeals to the newly constituted Nellikuppam, Panruti, Kadayanallur and Manapparai Municipalities till the Municipal Councils concerned are constituted by election of Councillors thereto. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]*

* 117. *Notification issued with G.O.P. No. 3561. Revenue, dated the 29th December 1966, making the Madras Land Reforms (Compensation for Surplus Land) Rules, 1966. [Indian on the Table of the House under section 112(2) of the Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Madras Act 58 of 1961).]*

## B. Reports, Notifications and other papers.

† 19. *The Madras Appropriation (Vote on Account) Bill, 1967. (L.A. Bill No. 1 of 1967).]*

‡ 20. *The Madras District Municipalities (Amendment) Bill 1967 (L.A. Bill No. 2 of 1967) with Annexure.*

12398

* Placed on the Table of the House on 25th March 1967.

† Despatched to Members on 23rd March 1967.

‡ Despatched to Members on 24th March 1967.